பிறந்த ஊருக்கு அருகிலேதான் என்னுடைய சொந்த ஊரும் அமைந்திருக்கிறது. சுதந்திரப் போராட்ட தியாகிகள் பட்டியலிலே அவர் இடம்பெற்றிருக்கிறார். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சுதந்திர தின நிகழ்ச்சியிலே நினைவில் வாழும் மரியாதைக்குரிய திருமதி கே.பி. சுந்தராம்பாள் அவர்களைப் பற்றி அவருடைய உரையிலே குறிப்பிட்டிருந்தார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, எதிர்காலத்திலே அதுகுறித்து பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கணபதி அவர்கள்.

திரு. க. கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் பிறந்த இடமான துள்ளம் என்கிற துண்டலம் கிராமம் மதுராவாயல் சட்டமன்றத் தொகுதியில் இருக்கின்றது. நான் பேசிய முதல் பேச்சிலேயே இதுசம்பந்தமாக பேசியிருக்கிறேன். அவர் பிறந்த இடத்தில் 2006 ஆம் ஆண்டு, இனமானப் பேராசிரியர் அவர்களுடைய தலைமையில், அவருடைய திருவுருவச் சிலையை நான் ஊராட்சி மன்றத் தலைவராக இருந்தபோது திறந்து வைத்தோம். தற்போது, அங்கே ஒரு நூலகம் இயங்கி வருகிறது. திரு.வி.க. அவர்களுக்கு நினைவிடம் கட்ட வேண்டுமென்று, நான் முன்பே இந்த அவையில் கோரிக்கை வைத்திருந்தேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், முக்கியமாக, தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் பிறந்த இடமான துள்ளம் என்கின்ற துண்டலம் கிராமத்தில் அவர்களுக்கு நினைவிடம் அமைக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடக்கூடிய, மரியாதைக்குரிய, நினைவில் வாழும் அய்யா திரு.வி.க. அவர்களுடைய மார்பளவு சிலை இருப்பதை நாங்கள் அறிவோம். கடந்த பிறந்த நாளன்று அவருடைய சிலைக்கு மாலை

2022 ஏப்ரல் 11]

அணிவித்து, மரியாதை செலுத்தியிருக்கின்றோம். அதேநேரத்தில், மணிமண்டபமும், நினைவு அரங்கமும் அமைப்பது இல்லை என்பது அரசினுடைய கொள்கை முடிவு. எனவே, அரங்கம் என்ற பெயரிலேதான் அமைக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடக்கூடிய அந்த விவரத்தின் அடிப்படையிலே, எதிர்காலத்தில், நிதிநிலைமைக்கேற்ப மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, பரிசீலிப்பதற்கு துறைமூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ்–ஐ யாரும் மறக்க முடியாது. சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் பழமை வாய்ந்தது. அங்கிருந்து வளர்ந்த பல தலைவர்கள் இருக்கின்றார்கள். சினிமா துறையில் புகழ்வாய்ந்த பல தலைவர்கள், சேலம் மாடர்ன் தியேட்டர்ஸை ஆதாரமாகக் கொண்டு வளர்ந்தவர்களாக இருக்கின்றார்கள். ஆரம்பக் காலங்களில் எல்லோரையும் ஊக்கப்படுத்தி, சினிமாவிலே கொண்டுவந்தது சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் ஆகும். சேலம் மாடர்ன் தியேட்டர்ஸினுடைய நிறுவனர், திரு. T.R. சுந்தரம் முதலியார் அவர்கள் திருச்செங்கோடைச் சேர்ந்தவர். இன்றைக்கு, சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் apartment ஆகவும், குடியிருப்புகளாகவும் மாறிவிட்டது. சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் என்ற அந்தப் பெயரை யாரும் மறந்துவிடக் கூடாது. அதனுடைய நிறுவனரான T.R. சுந்தரம் முதலியார் அவர்களுக்கு திருச்செங்கோடில் மணிமண்டபம் அமைத்துத் தரப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மரியாதைக்குரிய சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் நிறுவனர் திரு. T.R. சுந்தரம் முதலியார் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கப்படுமா என கோரியுள்ளார். அதேநேரத்தில் மணிமண்டபமும், நினைவு

[2022 ஏப்ரல் 11

அரங்கமும் அமைப்பது இல்லை என்பது அரசினுடைய கொள்கை முடிவு. எனவே, அரங்கம் என்ற பெயரிலேதான் அமைக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடக்கூடிய அந்த விவரத்தின் அடிப்படையில், எதிர்காலத்தில் அரசின் நிதி நிலைமைக்கேற்ப மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, பரிசீலிப்பதற்கு துறைமூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 88, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.

88—

அங்கன்வாடி மையம்

***7564—திரு. தி. வேல்முருகன்**

மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம், எனதிரிமங்கலம் ஊராட்சி, ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம், ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் நிதிப் பங்களிப்பில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, அண்ணாகிராமம் வட்டாரம், எனதிரிமங்கலம் ஊராட்சி, ஆதி திராவிடர் குடியிருப்பில் உள்ள மக்கள் பயன்பெறும் வகையில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ், 2004 ஆம் ஆண்டு குழந்தைகள் மையம் ஒன்று தொடங்கப்பட்டு, தற்போதும் தொடர்ந்து செயல்பட்டு வருவதால், இப்பகுதியில் புதியதாக அங்கன்வாடி மையம் அமைக்க வேண்டிய தேவை எழவில்லை என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

2022 ஏப்ரல் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ருட்டி சட்டமன்றத் தொகுதி, அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்டு 42 பஞ்சாயத்துகள் இருக்கின்றன. 300–க்கும் மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன. இந்த 300–க்கும் மேற்பட்ட கிராமங்களில், 140 அங்கன்வாடி மையங்கள்தான் திறக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் சரிபாதி கிராமங்களில், குறிப்பாக, ஆதி திராவிட மக்கள் அடர்த்தியாக வாழுகின்ற கிராமங்களில் அங்கன்வாடி மையங்கள் இல்லை. எனவே, மீதமுள்ள கிராமங்களுக்கும், குறிப்பாக, ஆதி திராவிட மக்கள் அடர்த்தியாக வாழுகின்ற இடங்களில் அங்கன்வாடி மையங்களை புதியதாக அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல், பண்ருட்டி தொகுதியில் 140 குழந்தைகள் மையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஆதி திராவிட மக்கள் அதிகமாக வாழுகின்ற இடங்களில் கூடுதலாக, அங்கன்வாடி மையங்கள் தேவைப்படின், நிச்சயமாக, இந்த அரசு பரிசீலித்து, அங்கன்வாடி மையங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 140 அங்கன்வாடி மையங்களில், 120 அங்கன்வாடி மையங்கள் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மீதமுள்ள 20 அங்கன்வாடி மையங்கள் பல்வேறு இக்கட்டான இட சூழலில் இயங்குகின்றன. பச்சைக் குழந்தைகள், குறிப்பாக, மழலைச் செல்வங்கள் இந்த ஊட்டச்சத்து மையங்களிலே இருக்கின்றார்கள். அந்தக் கட்டடங்களை மழைக் காலங்களில் ஒழுகாமல்,*

[2022 ஏப்ரல் 11

பாதுகாக்கின்ற வகையில், துறைரீதியாக கட்டடங்கள் அமைத்துத் தருவதற்கு அரசு முன்வருமா?

அதேபோன்று, தமிழ்நாடு முழுவதும் எத்தனை அங்கன்வாடி மையங்கள் இருக்கின்றன? அவற்றில், எத்தனை அங்கன்வாடி மையங்கள் அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் இயங்கி வருகின்றன? மீதம் இருக்கின்ற அங்கன்வாடி மையங்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் சிறப்பு நிதியைப் பெற்று, சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? குறிப்பாக, குழந்தைச் செல்வங்களுக்கு பாதுகாப்பான இடம் வேண்டும். ஏனென்றால், அவர்கள் மழலைகள். மேலும், மாற்றுத் திறனாளி குழந்தைகள் செல்வதற்கு சில அங்கன்வாடி மையங்களில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. Smart class உடன் வகுப்பறைகள் புதிதாகக் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தமிழ்நாடு முழுவதும் இதுபோன்ற ஒரு திட்டத்தை உருவாக்கி, இந்தக் குழந்தைகளுக்கு முக்கியத்துவம் அளித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிய அங்கன்வாடிக் கட்டடங்களைக் கட்டித் தருவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மொத்தம் 54,439 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அதில் சில இடங்களில் குறைவாக, 2, 3 குழந்தைகள் இருக்கிற இடங்களில் குழந்தைகளின் எண்ணிக்கையை உயர்த்தி மாற்றியமைத்திடவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம். அதுமட்டுமல்லாமல், இதுவரை மொத்த குழந்தைகள் மையங்களான 54,439–ல், 7,441 மையங்கள் தனியார் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. அந்த மையங்களுக்கும் சொந்தக் கட்டடம் அமைத்திட, நம்முடைய ஊரக வளர்ச்சித் துறைமூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அரசுச் செயலாளர் அவர்களிடமும், மாண்புமிகு துறை அமைச்சர் அவர்களிடமும் வேண்டுகோள் வைத்திருக்கிறோம். நிச்சயமாக, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, ஒன்றிய நிதி, மகாத்மா காந்தி

2022 ஏப்ரல் 11]

தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களின்மூலம் விரைவாக அவற்றிற்குக் கட்டடங்கள் அமைத்திடவும், பராமரிப்பு செய்திடவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம். ஒட்டுமொத்தமாக, குழந்தைகளின் நலனுக்காக குறிப்பாக, குழந்தை நேய தமிழகமாக மாற்றிட வேண்டுமென்ற எண்ணத்தில் பணியாற்ற எங்களுக்கு உத்தரவிட்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு அவை எல்லாம் செய்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தான் விளக்கம் சொல்லிவிட்டார்களே!

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட புளியமங்கலம் ஆதி திராவிடர் காலனியில் வசிக்கும் சுமார் 35 குழந்தைகள் ஒரு கிலோ மீட்டர் தூரமுள்ள கிராம அங்கன்வாடி மையத்திற்குச் செல்ல வேண்டிய நிலையுள்ளது. தொலைதூரம் உள்ளதால், அந்தக் குழந்தைகளுக்கு உணவு கொண்டு வந்து காலனியில் கொடுக்கப்படுகிறது. தற்போது புளியமங்கலம் ஆதி திராவிடர் காலனியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதிமூலம் கட்டடம் கட்டப்பட்டு தயாராக இருக்கிறது. ஆகவே, 35 ஆதி திராவிடர் குழந்தைகளின் நலன் கருதி, அங்கன்வாடி மையம் ஒன்றைத் துவங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணம் தொகுதி, புளியமங்கலம் ஊராட்சியில் ஆதி திராவிடர் குடியிருப்பில் 35 குழந்தைகள் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார். நிச்சயமாக அங்கன்வாடி மையம் உறுதியாக அமைத்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 89, மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

[2022 ஏப்ரல் 11

89—

பல்லுயிர்ப் பூங்கா

***170—திரு. S.S. பாலாஜி:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதி, திருப்போரூர் ஒன்றியம், மாணம்மதி மற்றும் காட்டூர் பகுதியில் பல்லுயிர்ப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருப்போரூர் தொகுதிக்கு அருகிலுள்ள வண்டலூரில் 602 ஹெக்டேர் பரப்பளவில் தென்கிழக்கு ஆசியாவிலேயே மிகப் பெரிய பூங்காவாக அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா அமைந்துள்ளது. மேலும், சென்னைக்கு அருகிலுள்ள கொளப்பாக்கம் பகுதியில் ஒரு மரப் பூங்காவும் உள்ளது. எனவே, திருப்போரூர் மாணம்மதி மற்றும் காட்டூர் பகுதியில் தனியாக பல்லுயிர்ப் பூங்கா அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள்.

திரு. S.S. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக நாடுகளோடு போட்டியிட்டு 44–வது Chess Olympiad போட்டியை தமிழ்நாட்டிலே நடத்துவதற்கு வென்றெடுத்து வந்து, அதை திருப்போரூர் தொகுதி, மாமல்லபுரத்திலே நடத்துவதற்கு உத்தரவிட்டிருக்கக்கூடிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருப்போரூர் வனச் சரகத்தைப் பொறுத்தவரையில், இள்ளலூர், மடையத்தூர், தண்டரை, மாம்பாக்கம், அம்மணம்பாக்கம், காயார் மற்றும் தையூர் போன்ற வனப் பகுதிகள் காப்புக் காடுகளாக இருந்தாலும்கூட, இவை

2022 ஏப்ரல் 11]

அனைத்தும் 5,653.155 ஹெக்டேரில் அமைந்திருக்கின்றன. ஆனால், மிகப் பெரிய வனப் பகுதியாக, காட்டூர் வனப் பகுதி இருந்து வருகிறது. 1,353.355 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்திருக்கிறது. இந்தப் பகுதியிலே வன விலங்குகளான புள்ளிமான், புள்ளிவாய் மான், முள்ளம்பன்றி, உடும்பு, நரி போன்ற பல விலங்கினங்களும், பறவையினங்களான மயில்கள், மாங்குயில்கள், தேன்சிட்டு போன்ற கிட்டத்தட்ட 65 வகையான பறவைகளும் இருக்கின்றன. அரிய வகை செடிகளான காட்டுக்கிச்சிலி, பாசான், சூரை போன்ற செடிகளும் அங்கே இருக்கின்றன. இந்தப் பகுதியிலே ஒரு Biodiversity Park அமைத்தால் மிகச் சிறப்பாக இருக்கும். ஏனென்று சொன்னால், இவை தொடர்புடைய இடங்களாக, சுற்றுலாத் தலங்களாக கோவளம், முட்டுக்காடு, மாமல்லபுரம் போன்றவையும் இருக்கின்றன. திருத்தலங்களாக திருவிடந்தை, திருப்போரூர், திருக்கழுக்குன்றம், மேல்மருவத்தூர் போன்றவையும், வண்டலூரில் அமைந்திருக்கக்கூடிய. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்விக்கு வாருங்கள்.*

திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு அமைச்சர் இல்லையென்று சொல்கிறார். அதைப்பற்றிச் சொன்னால்தானே, அதனுடைய முக்கியத்துவம் தெரியும். வண்டலூரில் இருக்கக்கூடிய உயிரியல் பூங்காவிற்கும், வேடந்தாங்கலில் இருக்கக்கூடிய பறவைகள் சரணாலயத்திற்கும் நிலவியல் ரீதியாக மையத்தில் இந்தப் பகுதி அமைந்திருக்கிறது. இங்கே ஒரு Biodiversity Park அமைப்பது என்பது வெறும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது என்பதைவிட, அரசுக்கு வருவாயும் ஈட்டித் தரும்; உள்ளூர் மக்களுக்கான வேலைவாய்ப்பைப் பெற்றுத் தரும். ஒட்டுமொத்தமாக, மக்களுக்கான மனமகிழ்வைத் தரும் என்கின்ற வகையிலே அதை அமைத்துத்தர வேண்டுமென்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லுயிர்ப் பூங்கா என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன மாதிரி ஒரு பெரிய பகுதி,*

[2022 ஏப்ரல் 11

பெரிய வனப் பகுதி. அதில் பல்லுயிர்கள் வாழ்கின்றன. அந்தக் குறிப்பிட்ட புவியியல் பகுதி, தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் உள்ளடக்கிய இடமாகும். பல்லுயிர்ப் பூங்காக்கள் முக்கியமாக கல்வி, பொழுதுபோக்கு மற்றும் அழிவின் விளிம்பில் உள்ள உயிரினங்களைப் பாதுகாப்பதற்காக நிறுவப்படுகின்றன. அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, மிகப் பெரிய மற்றும் விளிம்பின் நிலையிலுள்ள உயிரினங்களின் பாதுகாப்பு மற்றும் பொழுதுபோக்கு மையங்களில் ஒன்றாகும். பூங்காவிற்கு ஆண்டுக்கு சுமார் 21 இலட்சம் மக்கள் பார்வையாளர்களாக வருகின்றனர். இது திருப்போரூர் பகுதியின் மிக அருகில் அமைந்துள்ளது. எனவே, திருப்போரூர் தொகுதி, மாணாம்மதி மற்றும் காட்டூர் பகுதியில் தனியாக பல்லுயிர்ப் பூங்கா அமைக்கும் அவசியம் எழவில்லை என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள். கேள்வியைச் சுருக்கமாக் கேளுங்கள்.

திரு. S.S. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு புதியதாக பிரித்து, அமைக்கப்பட்டிருக்கிற செங்கல்பட்டு மாவட்டத்திற்கு என வனக் கோட்டம் இல்லை. அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வனத் துறையிலே இருக்கக்கூடிய சாலைகள் தொடர்பான பிரச்சினை அனைத்துத் தொகுதி உறுப்பினர்களுக்கும் நெடுநாட்களாக இருக்கக்கூடிய பிரச்சினை, கிட்டத்தட்ட எல்லோருக்கும் இருக்கக்கூடிய பிரச்சினை. அதையும் கனிவோடு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் Biodiversity Park பற்றி உரிய ஆய்வு செய்து, அதற்கான நல்ல முடிவை அறிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கேட்ட பகுதியில் உள்ள சாலை பிரச்சினையை கவனித்து நிச்சயமாக இந்த வருடம் அதைத் தீர்ப்பதற்கு முயற்சி செய்யப்படும். அதேபோல வண்டலூர்

2022 ஏப்ரல் 11]

அருகாமையில் 20 ஏக்கர் வனப் பரப்பில் மரப் பூங்கா உருவாக்கப்பட்டு, 300 வகையான முக்கியத்துவம் வாய்ந்த மரவகை இனங்கள், ஒரே இடத்தில் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

பல்லுயிர் இனங்களைப் பாதுகாக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொலைநோக்குப் பார்வையில், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் நடப்பாண்டில் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி, செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள மறைமலை நகர் அருகே உள்ள கடம்பூர் கிராமத்தில் 146.88 ஏக்கர் பரப்பளவில் தாவரவியல் பூங்கா அமைக்கப்படவுள்ளது. திருப்போரூரைச் சுற்றி மேற்கூறிய பல்வேறு பூங்காக்கள் உள்ளன. ஆகையால் திருப்போரூர் சட்டமன்றத் தொகுதியில் மாணாம்மதி மற்றும் காட்டூர் பகுதியில் பல்லுயிர்ப் பூங்கா அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை. ஆயினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளைப் பரிசீலிக்க அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்து, பல்லுயிர்ப் பூங்கா அமைக்க, இடம், சூழல் ஆகியவை சரியாகயிருந்தால் நிதி ஆதாரத்தைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் உத்தரவு பெற்று அங்கே அமைக்க ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள்.

திரு. செ. ஸ்டாலின் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய துறையூர் தொகுதி, உப்பிலியாபுரம் ஒன்றியம், சோபானபுரம் முதல் டாப் செங்காட்டுபட்டி வரை பழங்குடியின மக்கள் வாழும் பகுதியில் வனத்துறைக்கு சொந்தமான தார்ச் சாலைகளும் அதேபோன்று துறையூர் ஒன்றியம், துறையூர் செங்காட்டுபட்டி check post முதல் செம்புளிச்சான்பட்டி பிரிவு வரையில் மக்கள் செல்லக்கூடிய வனத் துறைக்கு சொந்தமான தார்ச் சாலைகளும் மிகவும் மோசமான சூழலில் உள்ளன. எனவே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் இந்த இரு வனச் சாலைகளையும் நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்ற வேண்டும். பழங்குடி மக்களின் இந்த நீண்டநாள் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்து சென்று, நிறைவேற்றித் தரவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[2022 ஏப்ரல் 11

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட பகுதியில் உள்ள வனச் சாலைகளை, சீரமைக்க நிதி ஆதாரத்தின் அடிப்படையில் முயற்சி செய்வோம். அது கிடைக்காதபட்சத்தில், நீங்கள் அந்தப் பகுதி, எந்த கிராமத்தில் சேர்கிறதோ, எந்த நகராட்சியில் சேர்கிறதோ, user agencies மூலமாக online application கொடுத்து, அதற்கு no objection கேட்டால் அதைச் செய்து கொடுத்து விடுகிறோம். இதைத்தான் வனத் துறையில் நாங்கள் செய்துகொண்டிருக்கிறோம். அதனால், அப்படி ஒரு வாய்ப்பு இருந்தால், நகராட்சியிலோ, ஊராட்சியிலோ எந்தப் பகுதியில் உள்ளதோ அந்தப் பகுதியில் இருந்து எங்களுக்கு online மூலமாக application அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள்.

திருமதி வானதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கும், அவைக்கும் வணக்கம். கோவை தெற்கு தொகுதியில் மாநகரத்தினுடைய மையப் பகுதி, மத்திய சிறைச்சாலையை மாற்றி அங்கு ஒரு பூங்கா அமைக்கப்படும் என அரசு ஏற்கெனவே அறிவித்துள்ளது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், மூலக் கேள்விக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. வனத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் கேள்வி. . .

திருமதி வானதி சீனிவாசன்: வனத் துறை. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வனம் சம்பந்தப்பட்ட பூங்கா. அங்கே மையப் பகுதியில் பூங்கா இருக்கிறதா? (குறுக்கீடு)

திருமதி வானதி சீனிவாசன்: நீங்கள் வனப் பூங்காவாக அதை எடுத்து develop பண்ணலாம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பூங்கா மாநகராட்சிக்கு சொந்தமானதாக இருக்கிறது.

2022 ஏப்ரல் 11]

திருமதி வானதி சீனிவாசன்: அதை எடுத்து மிகப் பெரிய பூங்காவாக develop பண்ணலாம். (குறுக்கீடு)

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருக்கு உட்பட்டது. எனவே, அதனை தனிக் கேள்வியாகக் கேளுங்கள்.

திருமதி வானதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறை அதனை develop செய்ய வேண்டும். மாண்புமிகு நகராட்சி நிர்கவாகத் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் இந்த நேரத்தில் இதனை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்தத் துறைக்குட்பட்டதோ அவர்கள்தான் அந்தப் பணியை மேற்கொள்வார்கள். மாநகராட்சி பகுதிக்குட்பட்டது; நீங்கள் தனி கேள்வி கேளுங்கள், வேண்டிய ஏற்பாடுகள் செய்யலாம். (குறுக்கீடு)

திருமதி வானதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு அங்கே பூங்கா தேவை என்பதை இந்த நேரத்தில் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 90, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அரவிந்த் ரமேஷ், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

90—

மண்டல உதவி ஆணையாளர் அலுவலகம்

***3058—திரு. ச. அரவிந்த் ரமேஷ்:**

மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழிங்கநல்லூர் தொகுதி, சோழிங்கநல்லூரில் இயங்கி வரும் மண்டல உதவி ஆணையாளர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

[2022 ஏப்ரல் 11

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சென்னை தெற்கு, சோழிங்கநல்லூர் மண்டல உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட இடம் ஒதுக்கிடக் கோரி சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரிடம், சோழிங்கநல்லூர் மண்டல உதவி ஆணையாளர் அவர்களால் அனுமதி கோரப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி பெறப்பட்டவுடன், மண்டல அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட துறையால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அரவிந்த் ரமேஷ் அவர்கள்.

திரு. ச. அரவிந்த் ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையினுடைய உதவி ஆணையாளர் அலுவலகம் 1–3–2009 அன்று முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில், அன்றைய அமைச்சர் அண்ணன் திரு. எ.வ. வேலு, அன்றைய அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா ஆகியோருடைய பெரு முயற்சியால் தாம்பரம் தொகுதியிலிருந்து பிரிக்கப்பட்ட சோழிங்கநல்லூர் தொகுதிக்காக கொண்டு வரப்பட்டது. ஆனால், அந்த அலுவலகம் இதுவரை வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. அந்த அலுவலகம் பிரதான சாலையிலிருந்து வெகு தூரமாக இருப்பதால், பொது மக்கள் நடந்து செல்ல வேண்டிய நிலை உள்ளது. மேலும், இங்கே இருக்கின்ற அலுவலகத்திற்குப் போதிய இடவசதி இல்லாத ஒரு சூழல் உள்ளது. பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றார்கள். இந்த அலுவலகத்தின்கீழ் 1,93,505 குடும்ப அட்டைதாரர்கள் உள்ளனர். நாள் ஒன்றுக்கு சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் அவரவர்களுடைய பயன்பாட்டிற்கு வந்து செல்கின்றார்கள். ஆகவே, பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, வாடகைக் கட்டடத்தில் இயங்கி

2022 ஏப்ரல் 11]

வரும் மண்டல உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நியாயமானது. ஏற்கெனவே எங்களுடைய உதவி ஆணையாளர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகியபோது, வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்கு சுமார் 30 சென்ட் நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த இடத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், உதவி ஆணையாளர் அலுவலகம் கட்டுவதற்கு இடம் கொடுப்பதற்கு சம்மதித்துள்ளார். உடனடியாக துறையின் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அரவிந்த் ரமேஷ் அவர்கள்.

திரு. ச. அரவிந்த் ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் மூலமாக 130 பொது விநியோகக் கடைகள் இயங்கி வருகின்றன. அதில் 29 கடைகள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. அந்தக் கடைகள் அனைத்திற்கும் சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், 1,000 முதல் 2,000 வரையுள்ள குடும்ப அட்டைதாரர்கள் கொண்ட 84 கடைகள் உள்ளதாகவும், 2,000 முதல் 3,000 வரையுள்ள குடும்ப அட்டைதாரர்கள் கொண்ட 18 கடைகள் உள்ளதாகவும், 3,000 முதல் 4,000 வரையுள்ள குடும்ப அட்டைதாரர்கள் கொண்ட 3 கடைகள் உள்ளதாகவும் தெரிகிறது. ஆக, பொது மக்கள் இந்த நிலையில் இருக்கிறார்கள். மேலும் 199–வது வட்டத்திற்குட்பட்ட தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக அந்தப் பகுதியில்

[2022 ஏப்ரல் 11

இன்றைக்கு 1,942 அட்டைதாரர்கள் கொண்ட கடையை இரண்டாகப் பிரிப்பதற்கு சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புதிய கட்டடம் கட்டப்பட்டு இன்றுவரை அந்தக் கடையைப் பிரித்து வழங்காத ஒரு சூழல் இருக்கின்றது. அதனால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றார்கள். ஆகவே, உடனடியாக பொதுமக்களின் நலனைக் கருத்தில்கொண்டு அதிகமான குடும்ப அட்டைகள் உள்ள கடைகளையெல்லாம் பிரித்து வழங்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழிங்கநல்லூர் தொகுதியில் 53 நியாய விலைக் கடைகள் 1,000 முதல் 1,500 குடும்ப அட்டைகளுடனும், 28 நியாய விலைக் கடைகள் 1,500 முதல் 2,000 குடும்ப அட்டைகளுடனும் செயல்பட்டு வருகின்றன. 2,000 குடும்ப அட்டைகளுக்குமேல் 23 நியாய விலைக் கடைகள் செயல்பாட்டில் உள்ளன. சோழிங்கநல்லூர் மண்டலத்தில் ஆயிரம் குடும்ப அட்டைகளுக்குமேல் 104 நியாய விலைக் கடைகள் உள்ளன. அவற்றில் அட்டைதாரர்கள் கடைக்குச் சென்று பொருட்களைப் பெறுகின்ற வசதிக்கேற்ப அருகிலேயே நியாய விலைக் கடைகள் அமையும்வண்ணம் முழு நேரக் கடைகளாகவும், பகுதி நேரக் கடைகளாகவும் விரைவில் பிரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கடையைப் பிரிப்பதற்கு ஏற்கெனவே துறையின் மூலமாக கோரிக்கை வைத்திருக்கின்றார். அதனையும் விரைவில் பிரித்துத் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது சோழிங்கநல்லூர் மண்டல உதவி ஆணையாளர் கட்டுப்பாட்டில் 130 நியாய விலைக் கடைகள் செயல்பாட்டில் உள்ளன. அவற்றில், 101 நியாய விலைக் கடைகள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. 29 நியாய விலைக் கடைகள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. அவற்றில் கூட்டுறவுத் துறையால் நடத்தப்படும் 120 நியாய விலைக் கடைகளில், 94 நியாய விலைக் கடைகள் சொந்தக் கட்டடங்களிலும், 26 நியாய விலைக் கடைகள், வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன.

2022 ஏப்ரல் 11]

முற்பகல் 10—40

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்திவரும் 9 நியாய விலைக் கடைகளில், 7 கடைகள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. 2 கடைகள் மட்டும் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. சுய உதவிக் குழுக்கள் மூலமாக நடத்தப்படும் ஒரு நியாய விலைக் கடை வாடகைக் கட்டடத்தில் செயல்படுகிறது. இவ்வாறு வாடகைக் கட்டடங்களில் செயல்படும் நியாய விலைக் கடைகளுக்கு குடும்ப அட்டைதாரர்கள் வந்து செல்லும் வசதி, கடைகளுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் உரிய முறையில் நகர்வு செய்து நன்முறையில் சேமித்து வைக்கும் வசதி ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, அரசு நிலங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் நிலங்களைத் தேர்வு செய்து, நியாய விலைக் கடைகளுக்கான கட்டடங்கள் உரிய கட்டமைப்பு வசதிகளுடன் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஊரகப் பகுதிகளைப் பொறுத்தவரைக்கும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நிறைய பதில் சொல்லிவிட்டீர்களே!*

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி: *ஊரகப் பகுதிகளைப் பொறுத்தவரையில் இடங்கள் கிடைத்து விடுகின்றன. ஆனால், நகர்ப் பகுதிகளில், பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சிப் பகுதிகளில் இடம் கிடைப்பதிலே சிரமம் இருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியிலே எங்கெங்கெல்லாம் அரசு இடம் இருக்கிறதோ, அவற்றையெல்லாம் தேர்வு செய்து கொடுத்தால், நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும் நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதி, சோழிங்கநல்லூர் தொகுதி. தமிழ்நாட்டிலேயே தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அதிகமாக இருக்கின்ற தொகுதி, சோழிங்கநல்லூர் தொகுதிதான். சோழிங்கநல்லூர் தொகுதியில் CSR fund *நிறைய இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்*

[2022 ஏப்ரல் 11

அந்த நிறுவனங்களை அணுகி நிதியைப் பெற்றுத் தந்தால், வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 29 நியாய விலைக் கடைகளுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு உரிய நடவடிக்கைகளை துறை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள். கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாவரம் தொகுதி சுமார் 6 இலட்சம் மக்கள் தொகை உள்ள தொகுதி. 60–க்கும் மேற்பட்ட நியாய விலைக் கடைகள் இருக்கின்றன. ஒரு மண்டல உதவி ஆணையர் அலுவலகத்திற்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், ஒரு புறத்தில், தாம்பரத்திற்கு 5 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டும். மற்றொரு புறம் ஆலந்தூருக்கும் 5 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டும். ஏற்கெனவே கடந்த சட்டமன்ற கூட்டத்தில் நான் பேசுகின்றபொழுது, பலமுறை இதைப்பற்றி குறிப்பிட்டுப் பேசியிருக்கின்றேன். ஆகவே, பல்லாவரத்தில் மண்டல உதவி ஆணையாளர் அலுவலகம் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இந்தக் கோரிக்கையை என்னிடத்தில் பலமுறை வலியுறுத்தியிருக்கிறார்கள். துறையின் மூலமாக கண்டிப்பாக உரிய நடவடிக்கை எடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, உதவி ஆணையர் அலுவலகம் கட்டுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 91, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

2022 ஏப்ரல் 11]

91—

ஜவுளிப் பூங்கா

***26668—திரு. செ. சுந்தரராஜன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, சேலம் இரும்பாலை வளாகத்தில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு திருத்திய விடையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி தொகுதி, சேலம் இரும்பாலை வளாகத்தில் ஜவுளிப் பூங்கா அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன் அவர்கள்.*

திரு. செ. சுந்தரராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா, எங்களை வழிநடத்தும் எடப்பாடியார் ஐயா அவர்களுடைய ஆசியோடு எனது கேள்வியைத் தொடங்குகிறேன். சங்கரி தொகுதி, சுற்று வட்டாரப் பகுதிகள் விவசாயத்திற்கு அடுத்தபடியாக விசைத்தறியைச் சார்ந்து வாழக்கூடிய பகுதிகளாகும். சேலம் இரும்பாலை வளாகத்தில் ஜவுளிப் பூங்கா அமைத்துத் தந்தால் அந்தப் பகுதி மக்கள் பயன்பெறும்விதமாக இருக்கும். அந்த இடம் மத்திய அரசினுடைய இடமாக இருந்தாலும், தற்போது அங்கே ரங்கராஜன் குமாரமங்கலம் மருத்துவமனை அமைந்துள்ளது. கொரோனா பெருந்தொற்று காலத்தில், 500 படுக்கை வசதிகளுடன்கூடிய மருத்துவமனையும் அமைக்கப்பட்டது. அதற்கெல்லாம் அவர்கள் அனுமதி கொடுத்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குத் தேவையான ஏற்பாடுகளைச்*

[2022 ஏப்ரல் 11

செய்து அந்தப் பகுதியிலேயே ஒரு ஜவுளிப் பூங்கா அமைத்துக் கொடுத்தால், அந்த ஒரு தொகுதி மட்டுமல்ல, சேலம் சுற்று வட்டாரத்திலுள்ள ஜவுளித் தொழிலைச் சார்ந்த அனைத்து நபர்களுக்கும் நல்ல பயனாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், தற்போது, நூல் விலை கடுமையாக உயர்ந்திருக்கிறது. அதற்கு, இந்த அரசு ஏதாவது ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதே நிலைமை நீடித்தால். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. செ. சுந்தரராஜன்: நூல் விலையைப் பற்றித்தான் பேசுகிறேன். ஒரேயொரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். நூல் விலை ஏறியிருக்கிறது. இதனால் உற்பத்தியாளர்கள் அதிகம் சிரமப்படுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மத்திய அரசு இறக்குமதி வரி போட்டிருக்கிறது என்று அவர்கள் சொல்கிறார்கள். அதைப் பற்றி தனியாகப் பேசுங்கள். கேள்விக்கு வாருங்கள்.

திரு. செ. சுந்தரராஜன்: ஆகவே, நூல் விலையைக் குறைப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், சங்கரி தொகுதியிலுள்ள சேலம் இரும்பாலை வளாகம் ஒன்றிய அரசின்கீழ் செயல்படும் நிறுவனமாகும். அந்த நிறுவனம் அதிக உதவிகளைச் செய்திருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். அந்த நிலம் கொடுக்கப்பட்டால், தொழில் முனைவோர்கள் முன்வந்தால், நிச்சயமாக அங்கே ஜவுளிப் பூங்கா அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

முற்பகல் 10–45

அதேபோன்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நூல் விலையைப் பற்றி கூறினார், நான் விலாவாரியாக சொல்ல விரும்பவில்லை, முக்கியமானவற்றை மட்டும் சொல்கிறேன்.

2022 ஏப்ரல் 11]

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கிட்டத்தட்ட 4 கடிதங்கள் மூலமாக மட்டுமல்ல, எங்களை அழைத்து வீடியோ conference மூலம் பேசியிருக்கிறார். தற்போது புதுடில்லி சென்று மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் அவர்களை சந்தித்து, நூல் விலை குறித்துப் பேசியிருக்கிறார். அவரால் முடிந்ததை உடனடியாகச் செய்திருக்கிறார். Cess 1% குறைக்க வேண்டுமென்று அவர்கள் கேட்ட கோரிக்கையை 10 வருடங்களாக, 20 வருடங்களாக இருந்த கோரிக்கைகளை கேட்டவுடனேயே நிறைவேற்றிக் காட்டியிருக்கிறார்கள். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எப்படியென்றால், நீங்கள் கேட்டாலும், கேட்காவிட்டாலும், யாருக்கு பாதிப்பு ஏற்பட்டாலும், முதலில் உதவி செய்வதில் கலைஞர் எவ்வாறு இருந்தாரோ, அவருக்கு மேலாக உதவி செய்பவராக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன் அவர்கள்.

திரு. செ. சுந்தரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவுளித் தொழிலைச் சார்ந்த விசைத்தறிக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் 500 யூனிட் இலவச மின்சாரமும், எங்கள் திரு. எடப்பாடியார் அவர்கள், 750 யூனிட் இலவச மின்சாரமும் வழங்கினார்கள். தற்போது இந்த அரசு 1,000 யூனிட் மின்சாரத்தை இலவசமாக வழங்குமா என்பதைத் தங்கள் வாயிலாக தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்கு 200 முதல் 300 யூனிட் இலவச மின்சாரம் வழங்குவதாகக் கூறியிருக்கிறோம். அதற்குத் தனியாக proposal அனுப்பியிருக்கிறோம் மற்றும் 750–லிருந்து 1,000 யூனிட் கொடுப்பதாகக் கூறிய அந்த proposal பரிசீலனையில் இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது வாக்குறுதிகள் நிச்சயமாக நிறைவேற்றித் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்

[2022 ஏப்ரல் 11

அவர்களே, தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதிக்குப் பெருமை சேர்ப்பது, திருப்புவனம் பட்டு. திருப்புவனம் பட்டுப் புடவைகள், பட்டு வேட்டிகள், பட்டு சட்டைகள் மிகவும் புகழ் பெற்றவை. தமிழகத்தில் எந்தப் பட்டுக் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் போனாலும், திருப்புவனம் பட்டு, காஞ்சிபுரம் பட்டு, ஆரணிப் பட்டு போன்ற பல்வேறு ஊர்களில் உற்பத்தி செய்யப்படுகிற பட்டுப் புடவைகள், பட்டு வேட்டிகள் விற்பனைக்கு வருகின்றன. திருப்புவனத்தில் இருக்கக்கூடிய Thirubuvanam Thico Silks, சென்ற ஆண்டு விற்பனையைவிட கூடுதலாக விற்பனை செய்து பெருமை சேர்த்திருக்கிறது. நான் சார்ந்திருக்கின்ற திருவிடைமருதூர் தொகுதியில் Thirubuvanam Thico Silks–ல், பல ஊர்களிலிருந்து விற்பனை செய்யப்படுகிற பட்டுப் புடவைகள், பட்டுச் சட்டைகள், பட்டு வேட்டிகள் போன்றவற்றின் வியாபாரத்தை 10 ஜவுளி சந்தை போன்று பெரிய அளவில் விஸ்தரிப்பு செய்து, பட்டு உற்பத்தியாளர்களை இன்னும் ஊக்கப்படுத்த அரசு முன்வருமா? இந்தியாவில் 100 ஆளுமைத் திறனுடைய தலைவர்கள் மத்தியில் 23–வது ஆளுமைத் தலைமையுடைய தலைவராக விளங்குகிற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலோடு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனைச் செய்து தருவாரா என்பதை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு இந்த 10 மாதங்களில், இந்தத் துறையை நாங்கள் எந்த அளவிற்குக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதை கூறத் தேவையில்லை; தங்களுக்கே தெரியும். அதற்கு முன்பு இந்த பட்டுத் துறை எங்கிருந்ததென்றே தெரியாமல் இருந்தது. இன்னும் 2 வருடத்திற்குள் இந்தத் துறையை முன்னேற்றிக் காட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, 'பட்டு' என்று சொன்னாலே நம்முடைய கைத்தறிப் பட்டுதான். இதற்கு தற்போது ஒரு certificate–ஏ கொடுத்திருக்கிறேன். இதுதான் original என்று certificate கொடுக்கப்பட்டு, தற்போது நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே தெரியும், இரண்டு நாட்களுக்கு முன்பு, Egmore–ல், கைத்தறி exhibition நடைபெற்றது. கிட்டத்தட்ட 10 வருடங்களாக நடைபெறவில்லை.

2022 ஏப்ரல் 11]

நமது இளைஞரணி அமைப்பாளர், சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர்தான் அதனைத் திறந்து வைத்தார். கிட்டத்தட்ட 100 கூட்டுறவுச் சங்கங்கள் All India Level–ல் இருந்து வந்திருக்கிறார்கள். நெசவாளர்களின் கோரிக்கையை ஏற்கின்ற ஒரே அரசு, கலைஞர் அவர்களுக்குப் பிறகு, நிச்சயமாக மாண்புமிகு தளபதி அவர்களது அரசுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி சட்டமன்றத் தொகுதி, அதன் அருகாமையிலுள்ள செய்யாறு சட்டமன்றத் தொகுதி, போளூர் சட்டமன்றத் தொகுதி ஆகியன பட்டு கைத்தறி நெசவாளர் மற்றும் பட்டுச் சேலை உற்பத்தியாளர் அதிகம் வசிக்கக்கூடிய பகுதிகள். மேலும், ஆரணி தொகுதியைப் பொறுத்தவரை, அவர்களது பிரதான தொழில்கள் பட்டு கைத்தறி நெசவுத் தொழில் மற்றும் விவசாயத் தொழில்களாகும். ஆரணி சட்டமன்றத் தொகுதி, 87 ஊராட்சிகள், 200–க்கும் மேற்பட்ட குக்கிராமங்கள் அடங்கிய பகுதியாகும். மேற்கண்ட அனைத்துப் பகுதிகளிலும், ஒரு இலட்சம் குடும்பங்கள் வசிக்கின்றன. அந்த ஒரு இலட்சம் குடும்பங்களில் உள்ள 3 இலட்சத்திற்கும் அதிகமான நபர்கள், பட்டு, கைத்தறித் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். ஆரணியில், 10–க்கும் மேற்பட்ட பட்டு, கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தற்போது இயங்கி வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்விக்கு வாருங்கள்.

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: எனவே, ஆரணி தொகுதியில் ஆரணியைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒரு பட்டு ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா என தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர்

[2022 ஏப்ரல் 11

அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கோரிக்கை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஆலோசித்து நிச்சயமாக செய்து தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 92, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

92—

பள்ளியைச் சீரமைத்தல்

***1721—திரு. V.P. கந்தசாமி:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூலூர் தொகுதி, சியாமளாபுரம் பேரூராட்சி, அய்யம்பாளையம் அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யன் திருக்கோயிலுக்குச் சொந்தமான மேல்நிலைப் பள்ளியை சீரமைக்கும் பணியினை விரைந்து முடிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இந்தப் பள்ளியானது, 1970 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, 1984 ஆம் ஆண்டு தரம் உயர்த்தப்பட்டது. இந்தப் பள்ளியிலே தற்போது தரைத்தளம், கூரை மற்றும் கூடுதல் வகுப்பறைகள் போன்ற பழுது நீக்குகின்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மேற்கொண்டு ஏதாவது பணிகள் இருக்குமாயின் அவற்றை துறையின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், அந்தப் பணிகளும் விரைவாக மேற்கொள்ளப்பட்டு, மாணாக்கர்களுடைய அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2022 ஏப்ரல் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி அவர்கள்.

திரு. V.P. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். முன்னாள் முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், வாக்களித்தவர்களுக்கும், வாக்களிக்காதவர்களுக்கும் பல திட்டங்களைக் கொண்டுவந்து வெற்றி பெற்ற தலைவர் அவர்களையும், குழுத் தலைவர் அவர்களையும், எங்களது கொறடா அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூலூர் தொகுதிக்குட்பட்ட திருப்பூர் மாவட்டம், சியாமளாபுரம் பேரூராட்சியில் அய்யம்பாளையத்தில் எழுந்தருளியுள்ள வாழைத்தோட்டத்து அய்யன் திருக்கோயிலுக்குச் சொந்தமான சுமார் 50 வருடங்களுக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்ட மேல்நிலைப் பள்ளியில் சுமார் 475 மாணவர்கள், 409 மாணவிகள் என் 884 குழந்தைகள் ஆண்டவன் அருளோடு படிக்கின்றார்கள். நான் சென்றமுறை சட்டமன்ற உறுப்பினராக இருந்தபொழுது, இதே அவையில் பள்ளியைப் புனரமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தேன். அதனை உடனடியாக நிறைவேற்றிக் கொடுப்பதாக முன்னாள் முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களும், அப்போது இந்து சமய அறநிலையத் துறை அமைச்சராக இருந்த அண்ணன் திரு. சேவூர் S. இராமச்சந்திரன் அவர்களும் 3½ கோடி ரூபாயை புனரமைப்பு பணிக்கு ஒதுக்கி உத்தரவிட்டார்கள். அதன் அடிப்படையில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் துவக்கப்பட்ட அந்தப் பணி காலதாமதம் ஆகிக்கொண்டிருக்கிறது. அங்கிருக்கின்ற மாணவச் செல்வங்களெல்லாம் குறிப்பிட்ட நேரத்திற்கு படிக்கக்கூடிய அளவிற்கு வகுப்பறை இல்லாமல் இருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடி கவனம் செலுத்தி, உடனடியாக அந்தப் புனரமைப்புப் பணிகளை நிறைவு செய்ய வேண்டும். அங்கிருக்கின்ற முன்னாள் மாணவர்களும், பெற்றோர்களும், இப்போது பயில்கின்ற மாணவர்களும் 50 ஆண்டு முடிந்த அப்பள்ளிக்கு பொன்விழா கொண்டாட வேண்டுமென்று எண்ணியிருக்கிறார்கள். எனவே, பொன்விழா கொண்டாடுவதற்கு ஏற்ற வகையில் உரிய நேரத்தில் அந்தப் பணியை செய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நம்முடைய அறம் நிறைந்த மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[2022 ஏப்ரல் 11

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஒப்புதலுக்கேற்ப இந்து சமய மற்றும் அறநிலையத் துறை சார்பில் 27 ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. இந்தப் பள்ளிகளில் பயில்கின்ற மாணாக்கர்களுடைய எண்ணிக்கை 12,787. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யன் திருக்கோயிலுக்குச் சொந்தமான மேல்நிலைப் பள்ளிக்கு 24–2–2021 அன்றுதான் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டிருந்தது. புதிதாக பொறுப்பேற்ற அரசு, யார் அந்த ஒப்பந்ததாரர்கள், எந்த ஆட்சிக் காலத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது என்பதைக் கணக்கிடாமல், சுமார் 3 பணிகளுக்கு 3 கோடியே 27 இலட்சம் ரூபாய்க்கு 21–7–2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியவர்களுக்கு பணியாணை வழங்கி கிட்டத்தட்ட அந்த 3 பணிகளில், தற்போது 60 சதவிகிதத்திற்கும் அதிகமான பணிகள் நிறைவுற்றிருக்கின்றன. அதோடுமட்டுமல்லாமல், அந்தப் பள்ளியை நானும், துறையினுடைய ஆணையாளரும் நேரடியாக ஆய்வு செய்தபோது, மாணாக்கர்களுக்குத் தேவையான 4 வகுப்பறைகள் கொண்ட ஒரு கட்டடம், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் 7 ஆண்டுகளாக சிதிலமடைந்து, மாணவர்களின் பயன்பாட்டிற்கு இல்லாமல் இருந்தது. அதை திருச்சிராப்பள்ளி, தேசிய தொழில்நுட்பக் கல்லூரியின் ஆய்வறிக்கையில் நவீன தொழில்நுட்பத்தோடு சரிசெய்யலாம் என்றார்கள். எங்கள் துறை சார்ந்த கண்காணிப்புப் பொறியாளர் ஆய்வினை மேற்கொண்டு, மாணவ, மாணவிகளுக்கு போதிய பாதுகாப்பு இருக்காது என்று சொன்னவுடன், அதை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்தவுடன், சுமார் 2 கோடி ரூபாய் அளவிற்கு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் சார்பில் நிதியினை ஒதுக்கீடு செய்வதற்கு உத்தரவு பெற்று, அதற்கான ஒப்பந்தமும் கோரப்பட்டிருக்கிறது. அய்யன் அருள் எப்படியிருக்குமோ அதுபோல் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அருளும் முழுமையாக இந்தப்

2022 ஏப்ரல் 11]

பள்ளிக் கட்டடங்களுக்கு இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி அவர்கள்.

திரு. V.P. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். சூலூர் தொகுதிக்குட்பட்ட காங்கேயம்பாளையம் கிராமத்தில் புல எண் 79, புல எண் 157/2–ல் சுமார் 13.32 ஏக்கர் நிலம் திருவேங்கடசாமி பெருமாள் கோயிலுக்கு சொந்தமாகவுள்ளது. குத்தகை ஏதும் இல்லை. இதுவரை வழக்கு ஏதுமில்லாத நிலமாக இருக்கிறது. எங்கள் சூலூர் தொகுதியில் இருக்கின்ற மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கின்ற சார்பு நீதிமன்றம் ஆகியவை அங்கு வர இருக்கின்றன. எனவே, நீதிமன்றங்களை அமைப்பதற்கும், நீதிபதிகளின் குடியிருப்பு வளாகம் அமைப்பதற்கும் சூலூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில், போதிய இடமில்லையென்பதால், இந்து சமய அறநிலையத் துறையின் சார்பாக, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் இரண்டு ஏக்கர் நிலத்தினை நீதிமன்றம் மற்றும் நீதிபதிகளின் குடியிருப்புகளைக் கட்டுவதற்கு ஒதுக்கிக் கொடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் 75 பக்கங்கள் அடங்கிய ஒரு நீதிமன்ற உத்தரவு பெறப்பட்டிருக்கின்றது. அதில் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடங்களை வேறு பயன்பாட்டிற்கு அளிக்கக்கூடாது என்ற உத்தரவும் உள்ளது. அந்த உத்தரவிற்கு எதிராக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாக சீராய்வு மனுவை தாக்கல் செய்து, மேல்முறையீடு செய்து, அதற்கு நீதிமன்றம்மூலம் பெறப்பட்ட உத்தரவின்படி, தற்போது அரசின் சார்பில் எடுக்கப்படுகின்ற

[2022 ஏப்ரல் 11

பணிகளுக்கு கோயில் நிலங்களை ஒதுக்கலாம், ஆனால் நிலத்தின் பெயர் சம்பந்தப்பட்ட கோயிலின் பெயரில்தான் இருக்க வேண்டுமென்று நீதிமன்றமே ஓர் உத்தரவினை பிறப்பித்திருக்கிறது. அந்த உத்தரவின்படி சாத்தியக்கூறு இருக்குமானால், அடுத்தடுத்து வருகின்ற காலங்களில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. M.K. மோகன் அவர்கள்.

திரு. M.K. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். என்னுடைய தொகுதியான அண்ணா நகர் தொகுதியில் ஏகாம்பரேஸ்வரர் கோயில் இருக்கிறது. அந்தக் கோயிலினால் நடத்தப்படும் பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு எந்தவொரு வசதியும் இல்லையென்பதால், தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 60 ஆண்டுகளுக்கு மேலாக Seetha Kingston என்ற அமைப்பு மேற்படி Seetha Kingston Matriculation Higher Secondary School என்ற பள்ளியை நடத்தி வந்தது. அந்தப் பள்ளியின் இடம் காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான இடமாகும். அந்தப் பள்ளி வாடகையை சரிவர கட்ட முடியாத நிலையில் இருந்தபோது, இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் வாடகையைக் கட்ட சொல்லி அந்தப் பள்ளிக்கு notice அனுப்பப்பட்டது. உடன் அவர்கள், நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்தார்கள். நீதிமன்றமும், ஒன்று, நீங்கள் இந்து சமய அறநிலையத் துறைக்கு வாடகையைக் கட்டுங்கள், இல்லையென்றால், அந்தப் பள்ளியை இந்து சமய அறநிலையத் துறையிடம் ஒப்படையுங்கள், என்று உத்தரவிட்டது. உடன், அந்தப் பள்ளியை இந்து சமய அறநிலையத்

2022 ஏப்ரல் 11]

துறை சுவாதீனம் செய்தது. அந்தப் பள்ளியில் பயிலும் 854 குழந்தைகளின் வாழ்வாதாரம் மற்றும் அவர்களின் படிப்பு பாதிக்கப்படக்கூடாது என்பதற்காகவும், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற மக்களின் பிள்ளைகள் அந்தப் பள்ளியில் படித்து வருவதால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இதனைக் கொண்டு சென்றபோது, அந்தப் பள்ளியை இந்து சமய அறநிலையத் துறையே ஏற்று நடத்த வேண்டும் என்ற உத்தரவினைப் பிறப்பித்தார்கள். ஏற்கெனவே, அந்தப் பள்ளியில் பயிலும் மாணவர்களிடம் பள்ளிக் கட்டணமாக ரூ.10,000/– வசூலிக்கப்பட்டு வந்தது, அது பாதியாக, ரூ.5,000/– ஆக குறைக்கப்பட்டது. அந்தப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு சீருடையும், புத்தக பையும், புத்தகங்களும் இந்த சமய அறநிலையத் துறையின் சார்பில் இலவசமாக வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டார்கள். அந்த உத்தரவினையும் செயல்படுத்தியிருக்கின்றோம். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 1–11–2021 அன்று நேரடியாக காணொலிக் காட்சி மூலமாக அந்தப் பள்ளியைத் திறந்து வைத்தார். தற்போது அந்தப் பள்ளியின் மேம்பாட்டுப் பணிகள், கூடுதலான வகுப்பறைகள் கட்ட ரூ.1,30,00,000/– நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பள்ளியில் ஏற்கெனவே பணிபுரிகின்ற 42 ஆசிரியர்களுக்கும், 8 பிற பணியாளர்களுக்கும் தொடர்ந்து அந்தப் பள்ளியில் பணியாற்றுகின்ற உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கின்ற நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 'இல்லம் தேடிக் கல்வி' என்ற திட்டத்தை மக்களிடம் கொண்டு சென்று, மக்களின் மனங்களில், உள்ளங்களில் எப்படி நிரந்தரமாகக் குடிகொண்டிருக்கிறாரோ (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று இந்த 854 குடும்பங்களும் வாழ்நாள் உள்ளவரை, அவர்களின் சந்ததியர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் போற்றுவார்கள், புகழ்வார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, அவர் கோருகிற அனைத்துப் பணிகளும் நிறைவேற்றித் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 93, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. செந்தில் குமார், மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

[2022 ஏப்ரல் 11

93—

விளையாட்டு அரங்கம்

***11989—திரு. கோ. செந்தில் குமார்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி தொகுதியில், விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதியில் விளையாட்டு அரங்கம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. செந்தில் குமார் அவர்கள்.

திரு. கோ. செந்தில் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 11 மாதங்களில் என்னுடைய முதல் கேள்வியைக் கேட்க இருப்பதனால், ஒரு நிமிடம் அளிக்க வேண்டும். மாண்புமிகு புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் திரு. எம்.ஜி.ஆர். அவர்களையும், மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், முன்னாள் முதல்வர் அண்ணன் திரு. E.P.S. அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சி துணைத் தலைவர், முன்னாள் முதல்வர் அண்ணன் திரு. O.P.S. அவர்களையும், வாணியம்பாடி சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெறச் செய்த திருப்பத்தூர் மாவட்ட கழகச் செயலாளர், அண்ணன் திரு. கே.சி. வீரமணி அவர்களுக்கும். . .

2022 ஏப்ரல் 11]

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. கோ. செந்தில் குமார்: எனது கட்சியைச் சார்ந்த கழகத் தோழர்களுக்கும், எனது தந்தைக்கும், வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கும், எனது நன்றியை காணிக்கையாக்குகிறேன்.

வாணியம்பாடி தொகுதி, அதிகமாக இஸ்லாமியர்கள் வாழும் பகுதி மற்றும் இளைஞர்கள் நிறைந்த பகுதியாகும். வாணியம்பாடி நகரப் பகுதியில் இஸ்லாமியர் கலைக் கல்லூரி எதிரில் அரசுக்குச் சொந்தமான 6–1/2 ஏக்கர் நிலம் உள்ளது. அந்த இடத்தில் நவீன வசதிகளுடன்கூடிய உடற்பயிற்சிக் கூடம், நவீன நீச்சல் குளம் மற்றும் யோகா மையம் ஆகியவை கொண்ட சிறு விளையாட்டு அரங்கம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா என்பதை அன்போடு கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டமானது விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் நிறைந்த மாவட்டமாகப் பார்க்கப்படுகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், விளையாட்டுத் துறையில் இன்றைக்கு பல்வேறு திட்டங்களை முன்னெடுத்துச் செல்கின்றார்கள். அந்த வகையில், வேலூர் மாவட்டம், காட்பாடி தொகுதி, நமது மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் தொகுதியில் 36.68 ஏக்கர் பரப்பளவில் கிட்டத்தட்ட 19.24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 14–3–2022 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஒரு மாபெரும் விளையாட்டு அரங்கத்தினை திறந்து வைத்திருக்கிறார்கள். அந்த விளையாட்டு அரங்கத்தினை திருப்பத்தூர் மாவட்ட விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்ன வாணியம்பாடி தொகுதியினுடைய விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள், சமூக ஆர்வலர்கள் ஆகியோரின் கோரிக்கையினை

[2022 ஏப்ரல் 11

கருத்தில் எடுத்துக்கொண்டு, வாணியம்பாடி தொகுதியில் இருக்கக்கூடிய வாணியம்பாடி வட்டம், நிம்மியம்பட்டு கிராமத்தில் அரசுக்குச் சொந்தமான 6 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டுள்ளது. அந்த இடத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய பாராட்டைப் பெற்ற, இந்தியத் திருநாட்டினுடைய மேனாள் பிரதமர், பொருளாதார மேதை, மாண்புமிகு டாக்டர் மன்மோகன் சிங் அவர்களது பாராட்டினைப் பெற்றிருக்கின்ற, தமிழக நிதியமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்ற சட்டமன்றத் தொகுதியில் ஒரு Mini Indoor Stadium அமைக்கப்படும் என்கின்ற திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, நிதிநிலைமைக்கேற்ப வாணியம்பாடி தொகுதியில் விளையாட்டு அரங்கம் அமைத்துத்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. செந்தில் குமார் அவர்கள்.

திரு. கோ. செந்தில் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் சுமார் 12,500–க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. ஒவ்வொரு கிராமத்திலும் பல நூற்றுக்கணக்கான இளைஞர்கள் உள்ளனர். ஆனால், பெரும்பாலான கிராமங்களில் விளையாட்டு மைதானங்கள் இல்லை. பொதுவாக விளையாட்டு மைதானங்கள் அமையப்பெற்ற ஊர்களில் மருத்துவமனைக்கான அவசியமில்லை என்பது பொது மொழி. மேலும், இளைஞர்களின் உடல் நலமும், மன நலமும் பேணக்கூடிய இடமாகவும், அனைவரும் ஒன்றாக விளையாடி ஒற்றுமையை பேணும் இடமாகவும் விளையாட்டு மைதானங்கள் இருக்கின்றன. எனவே, தமிழகத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் சிறு விளையாட்டு மைதானங்கள் அமைத்துத்தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர்

2022 ஏப்ரல் 11]

ஐயா அவர்களின் 2006–2011 ஆம் ஆண்டு ஆட்சிக்காலத்தில் அன்றைக்கு தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சராகவும், துணை முதலமைச்சராகவும் இருந்த மாண்புமிகு இன்றைய தமிழக முதலமைச்சர் அவர்கள் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் 12,524 ஊராட்சிகளிலும் விளையாட்டு மைதானங்களை உருவாக்கித் தந்தார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளையாட்டுத் துறைக்காகவும், விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்துவதற்காகவும் இன்றைக்கு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். அந்த அடிப்படையில், தொடர்ந்து விளையாட்டு மைதானங்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 2019–2020 ஆம் ஆண்டுக்கான முதலமைச்சர் கோப்பைக்கான பல்வேறு போட்டிகள் கொரோனா பெருந்தொற்று காரணமாக நடத்த முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. நமது முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடனேயே, முதலமைச்சர் கோப்பைகளுக்கான போட்டிகள் எல்லாம் நடத்தப்பட்டு, வெற்றிபெற்ற 616 விளையாட்டு வீரர்களுக்கு 4 கோடியே 16 இலட்சம் ரூபாய் பரிசுத் தொகையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் விரைவில் வழங்கப்பட உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. அப்துல் சமது அவர்கள்.*

முற்பகல் 11–05

திரு. ப. அப்துல் சமது: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மணப்பாறை தொகுதியில் ஹாக்கி உள்ளிட்ட விளையாட்டுகளில் தேசிய அளவில் விளையாடி பரிசுகளைப் பெற்ற வீரர்கள் இருக்கிறார்கள். இன்னும் பல விளையாட்டுகளில் ஆர்வம் உள்ளவர்கள் இருக்கிறார்கள். ஆனால், தனியார் மைதானத்தைப் பயன்படுத்தக்கூடிய ஒரு சூழல் இருக்கிறது. புதிய விளையாட்டு வீரர்களை உருவாக்கவும், இளைஞர்களை ஊக்கப்படுத்தவும் நம்முடைய அரசின் சார்பில் அங்கே ஒரு விளையாட்டு அரங்கம் அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

[2022 ஏப்ரல் 11

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், மணப்பாறை தொகுதியில் Hockey stadium கேட்டிருக்கிறார்கள். அதற்கான கருத்துருக்கள் ஆராயப்பட்டு, வாய்ப்பு இருப்பின் அங்கே புதிய hockey மைதானம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு

போளூர், இரயில்வே மேம்பாலப் பணியைத் துரிதப்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "போளூரில் நடைபெற்றுவரும் இரயில்வே மேம்பாலப் பணிகளைத் துரிதப்படுத்துவது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கெண்டுவருகிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

2022 ஏப்ரல் 11]

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை, உறுப்பினர்களின் மேசையின்மேல் உள்ள சிறு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

கடலூர்–சித்தூர் சாலையில் இரயில்வே கடவு எண் 80–க்குப் பதிலாக போளூர்–ஆரணி இரயில் நிலையங்களுக்கிடையே சாலை மேம்பாலம் கட்டும் பணியில் இரயில்வே பகுதி மற்றும் அதனை அடுத்துள்ள இரு ஓடுதளங்கள் தவிர, மீதமுள்ள 10 ஓடுதளங்களும் முடிக்கப்பட்டு, 80 சதவிகித பணிகள் முடிவுற்றன. இரயில்வே பகுதி பணிகள் இரயில்வே துறையினரால் தொடங்கப்பட வேண்டும். இரயில்வே பகுதி பணிகள் முடிந்தபின், மீதமுள்ள இரண்டு ஓடுதளங்களும் விரைந்து முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் போதிய விவரங்கள் இல்லை. திருவண்ணாமலை மாவட்டத்தில் போளூர் நகரம் வளர்ந்து வருகின்ற நகரமாக பரிணாமம் பெற்று வருகின்றது. போளூர் நகரத்தில் ஏற்பட்ட போக்குவரத்து வாகன நெரிசல், மக்கள்தொகை அதிகரிப்பு, வியாபார வளர்ச்சி, விவசாயப் பெருங்குடி மக்கள் தாங்கள் உற்பத்தி செய்கின்ற விவசாய விளைபொருட்களை வேளாண் விற்பனைக் குழுவிற்குக் கொண்டு வருதல், மருத்துவ சிகிச்சை பெற வரும் நோயாளிகள், ஆன்மீகத் தலங்களை தரிசிக்க வரும் பக்தர்கள், வங்கிகளுக்கு வருகை தரும் வாடிக்கையாளர்கள், பள்ளிகளுக்கு வருகை தரும் மாணவ, மாணவிகள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள், தென் மாவட்டங்களிலிருந்து வட மாவட்டங்களுக்கு சாலை மார்க்கமாகவோ, இரயில் மார்க்கமாகவோ பயணம் செய்வதாக இருந்தாலும்கூட, போளூரில் உள்ள இரயில்வே கடவைக் கடந்துதான் செல்ல வேண்டும். போளூர் பகுதி மக்களின்

[திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி] [2022 ஏப்ரல் 11

கோரிக்கையின் அடிப்படையில் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களால் திட்டம் அறிவிக்கப்பட்டு, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களால் நிதி மற்றும் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டன.

நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக மேற்கொள்ளப்பட்ட பணிகளில் இதுவரை 80 சதவிகிதப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. வழக்கு போன்ற காரணங்களால் நிலம் கையகப்படுத்தும் பணிகள் முடிவடையாத காரணத்தினால் இரயில்வே கடவு பகுதியில் மட்டும் இரயில்வே துறையின்மூலம் பணிகள் இன்னும் தொடங்கப்படவில்லை. தற்போது வழக்கின் தீர்ப்பு அரசிற்கு சாதகமாக வந்துள்ள சூழ்நிலையில்,—போளூர் நகருக்கு வருவதற்கு 4 கி.மீ. சுற்றி வரவேண்டியுள்ளதால், மக்களின் சிரமத்தைக் குறைக்க உடனடியாக நிலம் கையகப்படுத்தும் பணியை நிலம் எடுப்புச் சட்டத்தின் மூலமாகவோ அல்லது தனிநபர் பேச்சுவார்த்தையின் மூலமாகவோ விரைந்து முடித்து, இம்மேம்பாலத்தை பொது மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டு வரவேண்டுமென்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர்–சித்தூர் சாலையில் இரயில்வே கடவு எண் 80–க்குப் பதிலாக, போளூர்–ஆரணி இரயில் நிலையங்களுக்கு இடையே சாலை மேம்பாலம் கட்டும் பணிக்கான அனுமதியை இரயில்வே துறை 2014–2015 ஆம் ஆண்டு வழங்கியது. இதற்கான மதிப்பீட்டிற்கு 27.89 கோடி ரூபாய்க்கு நெடுஞ்சாலைத் துறை ஒப்புதல் வழங்கியது. இப்பணிக்கான ஒப்பந்தம் 20–9–2018 அன்று செயல்படுத்தப்பட்டது. மொத்த மதிப்பீட்டில் 50 சதவிகிதம் மாநில அரசாங்கமும், 50 சதவிகிதம் ஒன்றிய அரசாங்கத்தின் இரயில்வே துறையும் ஏற்றுக்கொண்டன. ஆனால், இரயில்வே துறை பகுதிக்கான கட்டுமானத்தை மட்டும் இரயில்வே துறையே செய்கின்ற காரணத்தினால், அந்தப் பணிகள் கொஞ்சம் காலதாமதமாக இருந்தன. இந்த நிலையில், இப்பணியினை 27–3–2020–க்குள் முடித்திருக்க வேண்டும்.

இரயில்வே மேம்பாலத்தின் 80 சதவிகிதப் பணிகள், மாநில அரசாங்கத்தின்மூலம் கட்டப்பட வேண்டிய பணிகளெல்லாம்

2022 ஏப்ரல் 11] [திரு. எ.வ. வேலு]

நடைபெற்றுவிட்டன. இரயில்வே துறையின் மூலமாக மேற்கொள்ளப்பட வேண்டிய இரயில்வே பகுதிப் பணிகள் காலதாமதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், இதைத் துரிதப்படுத்த வேண்டுமென்பதற்காக, தமிழ்நாட்டில் இப்படித்தான் இரயில்வே மேம்பாலப் பணிகள் எல்லாம் காலதாமதமாகின்றன என்பதை உணர்ந்த காரணத்தினால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களை அழைத்து, இதைத் துரிதப்படுத்த வேண்டுமென்று ஒருமுறை ஆய்வுக் கூட்டத்தில் சொன்னார்கள். அந்த அடிப்படையில் துறையின் முதன்மைச் செயலாளர் அவர்கள், ஒன்றிய அரசாங்கத்தினுடைய இரயில்வே துறை சம்பந்தப்பட்ட பொறியாளர்கள், பொது மேலாளர்கள் ஆகியோரை 2 மாதங்களுக்கு ஒரு முறை அழைத்து, பணிகளையெல்லாம் சீக்கிரம் செய்து முடிக்க வேண்டுமென்று, ஆய்வுக் கூட்டத்தைத் தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலே, இந்தப் பணிகளை விரைந்து முடிப்பதற்கு இந்த அரசு முயற்சி செய்யும். அதோடுமட்டுமல்ல, நில எடுப்பைப் பொறுத்தவரையில் வெகு காலமாக அதுசம்பந்தமான வழக்கு நீதிமன்றத்தில் நடந்துகொண்டிருந்தது. அதில் இப்போதுதான் அரசுக்கு சாதகமாக ஒரு தீர்ப்பு கிடைத்திருக்கிறது. 0.35 ஹெக்டேர் நிலத்தைக் கையகப்படுத்த வேண்டிய பணி மட்டும்தான் இப்போது இருக்கிறது. சென்ற வாரம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து நான் பேசியிருக்கிறேன். அவர்கள்மூலம் அந்தப் பணிகளையெல்லாம் விரைந்து முடித்து, விரைவிலேயே போளூர் மேம்பாலத்தை திறப்பதற்கு இந்த அரசின் சார்பாக அக்கறை எடுத்துக்கொள்வோம். காரணம், கலசப்பாக்கம் பகுதியில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர் திரு. பெ.சு. தி. சரவணன் அவர்களும் அந்தப் பாதையின் மூலமாகத்தான் ஜமுனாமரத்தூருக்குச் செல்ல வேண்டும். அதனால், அவரும் இதுகுறித்து தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறார். எனவே, இந்த அரசு அந்த மேம்பாலம் கட்டுகின்ற பணியை விரைந்து நிறைவு செய்யும்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, நீங்கள் இருவருமே நிறைய விஷயங்களைச் சொல்லிவிட்டீர்கள். நன்றி சொல்லி, முடியுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

[2022 ஏப்ரல் 11

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வால் மதிப்பீட்டுத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளதா? அப்படியென்றால் எவ்வளவு தொகை கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது? எவ்வளவு காலவரையறைக்குள் இப்பணி முடிக்கப்படும்? இரயில்வே துறையின்மூலம் செய்ய வேண்டிய பணிகளைத் துரிதப்படுத்த இரயில்வே துறையை அரசு வலியுறுத்துமா எனக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்கு விவரமாக கருத்து சொல்லிவிட்டார்கள் என்று நீங்கள் முதலிலேயே சொல்லிவிட்டீர்கள். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல், பொதுவாகவே, தமிழ்நாட்டில் இரயில்வே மேம்பாலங்களை காலதாமதமாகக் கட்டுவது என்பது காலங்காலமாகவே இருந்து வருகிறது. இந்தப் பணியைத் துரிதப்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான், இத்துறையின் முதன்மைச் செயலாளர் அவர்கள், சம்பந்தப்பட்ட பொறியாளர்கள், ஒன்றிய அரசாங்கத்தைச் சார்ந்த இரயில்வே துறையின் பொது மேலாளர்கள் ஆகியோரையெல்லாம் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை அழைத்துப் பேசிக்கொண்டிருக்கிறோம். கையகப்படுத்த வேண்டிய நிலம் என்பது 0.35 ஹெக்டேர்தான். அதற்கு வேண்டிய பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்ற பதிலையும் நான் சொல்லிவிட்டேன். மாண்புமிகு உறுப்பினர், இரண்டாவது கேள்வி கேட்க வேண்டுமென்பதற்காகவென்றே இந்தக் கேள்விகளைக் கேட்டிருக்கின்றார். கட்டாயம் இந்த இரயில்வே பாலத்தைக் கொண்டு வருவதற்கு இந்த அரசு முயற்சி செய்யும்.

3. அரசினர் தனித் தீர்மானம்

மத்தியப் பல்கலைக்கழகங்களில் பல்வேறு படிப்புகளில் சேர்வதற்காக நடத்தவிருக்கும் பொது பல்கலைக்கழக நுழைவுத் தேர்வினை இரத்து செய்திட ஒன்றிய அரசினை வலியுறுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

2022 ஏப்ரல் 11]

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளங்கலைப் படிப்புகளுக்குப் பொது நுழைவுத் தேர்வு குறித்த தீர்மானத்தின் முன்னுரையாக நான் ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

மாநிலத்தின் கல்வி உரிமைமீது ஒன்றிய அரசின் தாக்குதல் தொடருகிறது. பல்கலைக்கழக மானியக் குழுவின் நிதியுதவியுடன் இயங்கும் அனைத்து மத்தியப் பல்கலைக்கழகங்களிலும், இளங்கலை உள்ளிட்ட பல்வேறு படிப்புகளுக்கான சேர்க்கைகளுக்கு "பொது நுழைவுத் தேர்வு" என்று அறிவித்து, வருகின்ற 2022–2023 ஆம் கல்வியாண்டு முதல் செயல்படுத்தத் திட்டமிட்டிருக்கிறது.

இந்த நுழைவுத் தேர்வு மதிப்பெண்களை மாநிலப் பல்கலைக்கழகங்கள், நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள், தனியார் பல்கலைக்கழகங்கள், உயர் கல்வி நிறுவனங்கள்கூட இளங்கலைப் படிப்புகளின் மாணவர் சேர்க்கைக்குப் பயன்படுத்திக்கொள்ளலாம் என "பீடிகை" போட்டு, ஓர் அறிவிப்பினை ஒன்றிய அரசின்கீழ் இயங்கக்கூடிய பல்கலைக்கழக மானியக் குழு வெளியிட்டுள்ளது. அதனை எதிர்த்து, இந்த மாமன்றத்தில் பின்வரும் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தீர்மானம்

"ஒன்றிய அரசின்கீழ் இயங்கும் பல்கலைக்கழக மானியக் குழு 2022–2023 ஆம் கல்வியாண்டு முதல், அம்மானியக் குழுவின் நிதியுதவியுடன் இயங்கும் அனைத்து மத்தியப் பல்கலைக்கழகங்களிலும், இளங்கலை உள்ளிட்ட பல்வேறு படிப்புகளுக்கான சேர்க்கைகள் தேசிய தேர்வு முகமை (National Testing Agency–NTA) நடத்தும் பொது பல்கலைக்கழக நுழைவுத் தேர்வு (Common University Entrance Test–CUET) மூலம் மட்டுமே நடைபெறும் என்று அறிவித்துள்ளது. +2 தேர்வில் மாணவர்கள் பெறும் மதிப்பெண்களைக் கணக்கில்கொள்ளாமல், பொது பல்கலைக்கழக நுழைவுத் தேர்வில் (CUET) மாணவர்கள் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில் மட்டுமே சேர்க்கை நடைபெறும் எனவும், மாநிலப் பல்கலைக்கழகங்கள், தனியார் மற்றும் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் விரும்பினால் மாணவர்கள் சேர்க்கையை நடத்திக்கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளது.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2022 ஏப்ரல் 11

முற்பகல் 11–15

தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழு (NCERT) பாடத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட எந்தவொரு நுழைவுத் தேர்வும், நாடு முழுவதும் உள்ள பல்வேறு மாநிலப் பாடத் திட்டங்களில் படித்த மாணவர்கள் அனைவருக்கும் சமமான வாய்ப்பினை வழங்கிடாது என்று இப்பேரவை கருதுகிறது.

பெரும்பாலான மாநிலங்களில், மொத்த மாணவர்களில் 80 விழுக்காட்டிற்கும் அதிகமான மாணவர்கள் மாநிலப் பாடத் திட்டங்களில் பயின்று வருபவர்கள். இவர்கள் பெரும்பாலும் விளிம்புநிலைப் பிரிவினரைச் சேர்ந்தவர்களாவர். எனவே, NCERT பாடத் திட்ட அடிப்படையிலான நுழைவுத் தேர்வு, மத்தியப் பல்கலைக்கழகங்களில் சேருவதற்குத் தகுதியான பெரும்பான்மையினருக்கு பாதகமான நிலையை ஏற்படுத்துவதோடு, இந்தச் சூழ்நிலை நம் நாட்டிலுள்ள பல்வேறு மத்தியப் பல்கலைக்கழகங்கள் மற்றும் அவற்றின் இணைப்புக் கல்லூரிகளில் தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்களின் சேர்க்கை எண்ணிக்கையை வெகுவாகக் குறைக்கும் என்றும் இப்பேரவை கருதுகிறது.

இந்நுழைவுத் தேர்வும், நீட் தேர்வைப் போன்றே நாடு முழுவதும் உள்ள பல்வேறு பள்ளிக் கல்வி முறைகளை ஓரங்கட்டி, பள்ளிகளில் நீண்ட காலக் கற்றல் முறைகளை வெகுவாகக் குறைத்து மதிப்பிட வழிவகுப்பதோடு, மாணவர்கள் தங்களது நுழைவுத் தேர்வு மதிப்பெண்களை அதிகரிக்க பயிற்சி மையங்களைச் சார்ந்திருக்கும் ஒரு சூழலை ஏற்படுத்திவிடும் என்பதில் ஐயமில்லை. மேலும், மாணவர்களுக்கான பயிற்சி மையங்கள் புற்றீசல் போன்று வளர மட்டுமே இது சாதகமாக அமையும் என்று தமிழக மக்களிடையே அச்சம் எழுந்துள்ளது. இவ்வாறு ஒரு நுழைவுத் தேர்வினை செயல்முறைக்குக் கொண்டு வருவதால், பள்ளிக் கல்வியோடு பயிற்சி மையங்களையும் நாடும் இளைய மாணவ சமுதாயத்தினர் பெரும் மனஉளைச்சலுக்கு உள்ளாக்கப்படுவார்கள்.

எனவே, மாநில அரசுகளின் உரிமையினை நிலை நாட்டும் பொருட்டு மத்தியப் பல்கலைக்கழகங்களில் பல்வேறு படிப்புகளில் சேர்வதற்காக நடத்தவிருக்கும் பொது பல்கலைக்கழக நுழைவுத் தேர்வினை இரத்து செய்திட ஒன்றிய அரசினை இப்பேரவை வலியுறுத்துகிறது"

2022 ஏப்ரல் 11] [திரு. மு.க. ஸ்டாலின்]

என்னும் தீர்மானத்தை நான் மொழிகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள். சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றிய அரசு தொடர்ந்து மாநில உரிமைகளை அடுத்தடுத்து பறித்து, எல்லா அதிகாரங்களையும் தன்னகத்துள் வைத்துக்கொள்வதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில், உயர் கல்வியிலும் இன்றைக்கு ஒன்றிய அரசின் நிதிபெறும் பல்கலைக்கழகங்கள் ஊடாக, மானியக் குழுவின் ஊடாக இன்றைக்கு நாடு முழுவதும் இருக்கின்ற பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் அனைத்திலும், உதாரணத்திற்கு, சட்டப் பல்கலைக்கழகம், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகம், விவசாயப் பல்கலைக்கழகம் எந்தப் பல்கலைக்கழகங்களிலும் இனி இந்த மண்ணில் வாழ்கின்ற ஏழையெளிய தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட சிறுபான்மை மாணவச் செல்வங்கள் கல்வி பயில வேண்டுமென்று சொன்னால், அவர்கள் 12 ஆண்டுகள் படித்த தமிழ்நாடு அரசின் கல்வி முறையில் பயின்ற படிப்புக்கு எந்தவித முக்கியத்துவமும் இல்லாமல் இன்றைக்கு ஒன்றிய அரசு கொண்டு வந்திருக்கின்ற இதுபோன்ற நுழைவுத் தேர்வுகளிலே தேர்ச்சி பெற்றவர்கள் மட்டும்தான் இதுபோன்ற உயர் கல்வியை அடைய முடியும் என்கிற ஒரு சூழலை உருவாக்கித் தந்திருக்கிறது. இது கல்வி உரிமையைப் பறிக்கின்ற ஒரு பாதகச் செயல். எப்படி NEET–ஐக் கொண்டுவந்து நம்முடைய மாணவச் செல்வங்கள் உயர் கல்வியான மருத்துவக் கல்வியைப் படிப்பதற்குத் தடை கொண்டு வந்தார்களோ, அதுபோன்றுதான் இந்த CUET; CUET, பேர் வேண்டுமானால் CUET ஆக இருக்கலாம்; ஆனால், இது cute ஆக இல்லை. நம்முடைய மாணவச் செல்வங்களை உயர் கல்வி படிக்கவிடாமல் தடுக்கின்ற ஒரு மோசமான தேர்வு முறை இது. இந்தத் தேர்வுமுறைக்கு எதிராக இந்தியாவிலேயே முதன்முறையாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே இதற்கு ஓர் அரசினர் தனித் தீர்மானத்தைக் கொண்டுவந்து எதிர்த்திருப்பதை தமிழக வாழ்வுரிமைக் கட்சி மனமார வரவேற்கிறது; பாராட்டுகிறது. அதோடு மட்டுமல்ல; ஒன்றிய அரசினுடைய மானியக் குழுவில் நிதி தருகிறோம் என்று அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அவர்கள்

தருகின்ற நிதி ஒன்றும் அவர்களுடைய நிதி இல்லை. இந்தியாவில் இருக்கின்ற ஏனைய மாநிலங்களில் இருந்து அவர்கள் எடுத்துச் செல்கின்ற நிதியைத்தான் நமக்குத் தருகிறார்கள். ஆதலால், இதனை நாம் அனுமதிக்கக் கூடாது. கிராமத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள்; "ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து" என்று. இப்போது மனிதனைக் கடித்ததோடு மட்டுமல்லாமல், மாநிலக் கல்வி உரிமையை முற்றிலுமாகப் பறிக்கின்ற இந்தச் செயலை தமிழக வாழ்வுரிமைக் கட்சி கடுமையாக எதிர்க்கிறது. ஆதலால், மாநில உரிமைகளை நிலைநாட்டுவதற்கு போராடுகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களின் கரத்தை வலுப்படுத்துவதற்கு மனதார தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பாக இந்த அரசினர் தனித் தீர்மானத்தை வரவேற்று அமைகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

முற்பகல் 11–20

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பண்பாட்டை ஒழிக்க வேண்டுமென்று சொன்னால், கல்வியின்மீது, அந்த முறையின்மீது முதலிலே தாக்குதலை நடத்த வேண்டும். அதைத்தான் இன்றைக்கு ஒன்றிய அரசு செய்துகொண்டிருக்கிறது. நுழைவுத் தேர்வு ஒவ்வொன்றாக வர வர, பள்ளியிலே படிக்கின்ற மாணவர்களுக்கு ஆசிரியர்கள்மீது இருக்கின்ற மரியாதை குறைகின்றது. பயிற்சி நிலையங்களின்மீதுதான் இன்றைக்கு மரியாதை அதிகமாகிறது. அப்படி இருக்கும்போது, ஆசிரியர்களுடைய கட்டுப்பாட்டிலே மாணவர்கள் வருவது கிடையாது. **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், தீர்மானத்தின்மீது பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் தீர்மானம் குறித்து பேசுங்கள். அதுகுறித்து பிறகு தனியாக பேசலாம்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாணவ, மாணவிகளுக்கு உளவியல் ரீதியாக ஆசிரியர்கள்மீது மதிப்பு குறைகிறது என்பதைத்தான் நான் சொல்ல வருகின்றேன். அதனால், இந்த நுழைவுத் தேர்வு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2022 ஏப்ரல் 11] [திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்]

என்பது எதிர்காலத்தில் நம்முடைய மாணவர்களை ஒரு கட்டுப்பாடில்லாத தலைமுறையாக வளர்க்கக்கூடிய நிலையிலே சென்றுகொண்டிருக்கிறது. அதனால், இந்தத் தாக்குதல் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த நுழைவுத் தேர்வு விஷயத்தில் கடுமையான எதிர்ப்பைக் காட்டிக்கொண்டிருக்கிறார். அந்த வழியிலே இன்றைக்கு இந்தத் தனித் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தீர்மானத்தை மனதார, நெஞ்சார வரவேற்கின்றோம்; வாழ்த்துகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலங்களின் உரிமைகள்மீது ஒன்றிய அரசு* surgical attack *என்று சொல்கிற, துல்லிய தாக்குதலை நடத்தி வருகிறது. அதில் மிக முக்கியமாக கல்வித் துறையில் அவர்கள் தாக்குதல்களை நடத்தி வருகிறார்கள். அதுவும் குறிப்பாக, தமிழ்நாட்டை மையமாக வைத்து அந்தத் தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. என்ன காரணம் என்றால், தமிழ்நாட்டிலே பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின மக்கள், கிராமப்புற மக்கள் கல்வியிலே முன்னேற்றம் அடைந்திருக்கின்றார்கள்.* NEET *கிடையாது; இப்போது இருக்கக்கூடிய* CUET *கிடையாது; எந்த நுழைவுத் தேர்வும் கிடையாது; இராமேஸ்வரம் தீவிலே ஒரு மீனவர் குடும்பத்தில் பிறந்த டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்கள் அங்குள்ள அரசுப் பள்ளியில், இராமநாதபுரத்திலுள்ள அரசு உதவிபெறும் பள்ளியில், திருச்சியில்* St. Joseph. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், சுருக்கமாகப் பேசுங்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *உரையை முடித்துவிடுகிறேன். திருச்சியில்* St. Joseph *கல்லூரியில் படித்து, இந்தியாவினுடைய* Missile Man *என்று பெயர் பெற்றிருக்கிறார்கள் என்றால், அவர் எந்த* NEET*–ஐயும் எழுதவில்லை; எந்த* CUET*–ஐயும் எழுதவில்லை. வாணியம்பாடிக்கு அருகில் இருக்கக்கூடிய செட்டியப்பனூர் என்ற கிராமத்தில் பிறந்த ஒரு சாதாரண கொத்தனாருடைய மகன்,*

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2022 ஏப்ரல் 11 அங்குள்ள இஸ்லாமிய உயர்நிலைப் பள்ளியிலும், இஸ்லாமிய கல்லூரியிலும் படித்து மிகச் சிறந்த கல்விமானாக உயர்ந்தவர், பேராசிரியர் முனைவர் மு. அனந்தகிருஷ்ணன் அவர்கள். அவர், எந்த NEET–ஐயும் எழுதவில்லை; எந்த CUET–ஐயும் எழுதவில்லை. எந்த நுழைவுத் தேர்வையும் எழுதவில்லை. இந்த நுழைவுத் தேர்வுகள் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மையின, பட்டியலின மக்களுக்கு எதிரானவை. தமிழ்நாட்டில் உயர் கல்வியில் Gross Enrolment Ratio அதிகமாக இருக்கிறது. அதை குலைக்கக்கூடிய நோக்கத்திலும் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. எனவே, CUET–ஐ எதிர்க்கின்றோம் என்று இன்றைக்கு தமிழ்நாட்டிலிருக்கக்கூடிய அனைத்து மக்களுக்கும் கல்வி சென்றடைய வேண்டுமென்பதற்கு ஆக்கபூர்வமான செயல்களைச் செய்துவரக்கூடிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்தத் தனித் தீர்மானத்தை முன்மொழிந்திருக்கின்றார். இதை மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்கின்றோம். NEET–ஐயும் ஒழிக்க வேண்டும்; CUET–ஐயும் ஒழிக்க வேண்டும். அதற்காக அனைத்து தமிழகக் கட்சிகளும் ஒன்றிணைந்து பாடுபட வேண்டுமென்று கேட்டு, விடைபெறுகின்றேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, பன்னிரெண்டாம் வகுப்பு வரை அல்லும், பகலும் அயராது படித்து தன் திறமையை காட்டுகின்ற மாணவர்களுக்கு, புதிதாக CUET என்ற ஒன்றை அறிமுகப்படுத்தியிருப்பது வன்மையாகக் கண்டிக்கக்கூடிய செயலாகும். ஏற்கெனவே NEET போன்ற நுழைவுத் தேர்வைக் கொண்டு வந்த ஒன்றிய அரசு, புதிதாக இந்த CUET–ஐ கொண்டு வந்திருப்பது நம் மாணவச் செல்வங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய ஒன்றாக அமையும். அதேபோல், இது, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தீர்மானத்தில் சொன்னதுபோல், தனியார் பயிற்சி நிறுவனங்களை ஊக்குவிப்பதுபோல் இருக்கின்றது. ஆகவே, இதை முளையிலேயே கிள்ளி எறிவதற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுக்கின்ற அனைத்து நடவடிக்கைகளுக்கும், அதுவும் கடைக்கோடி கிராமத்தில் வாழ்கின்ற ஏழை, எளிய மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவதற்காக சமூக நீதியைப் பாதுகாக்கும் விதமாக

2022 ஏப்ரல் 11] [டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்]

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டுவந்த இந்தத் தனித் தீர்மானத்தை மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் வரவேற்கிறது, வாழ்த்துகிறது. நன்றி, வணக்கம்.

முற்பகல் 11–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றிய அரசின் பல்கலைக்கழக நிதிக் குழுவின்கீழ் செயல்படும் அனைத்து மத்தியப் பல்கலைக்கழகங்களிலும், இளங்கலை உள்ளிட்ட அனைத்து பட்டப் படிப்புகளுக்கும் பல்கலைக்கழக பொது நுழைவுத் தேர்வை ஒன்றிய அரசு கட்டாயப்படுத்தியிருப்பது, வருங்காலத்தில் இந்திய நாட்டின் அனைத்து அரசு பல்கலைக்கழகங்கள் தனியார் மற்றும் அரசு உதவி பெறுகின்ற பல்கலைக்கழகங்களில் இந்தப் பொது நுழைவுத் தேர்வை நுழைப்பதற்கான முன்முயற்சிதான் CUET தேர்வு என்பது. நாடு முழுவதும் மாநில அரசின் பாடத் திட்டத்தில் +2 மதிப்பெண் அடிப்படையில் பல்கலைக்கழகங்களில் மாணவர் சேர்க்கை நடைபெற்று வந்த நிலையில், பொது நுழைவுத் தேர்வின் மூலமாக பல்கலைக்கழகத்தில் மாணவர் சேர்க்கை என்று சொல்வது, NEET தேர்வைக் கொண்டுவந்து எவ்வாறு கிராமப்புற மாணவர்களுடைய மருத்துவப் படிப்பு, மருத்துவக் கல்விக் கனவை ஒன்றிய அரசு சிதைத்ததோ, அதேபோல பல்கலைக்கழகங்களுக்கு பொது நுழைவுத் தேர்வு என்பது, கிராமப்புற ஏழை, எளிய, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பழங்குடி மாணவர்களுடைய இளங்கலை மற்றும் உயர் கல்வி படிக்கின்ற கனவை சிதைக்கின்ற செயல். இது சமூக நீதியை குழிதோண்டிப் புதைக்கின்ற செயல். இன்றைக்கு சமூக நீதிக்காக, மாநில உரிமைக்காக இந்தியாவில் எந்த மாநிலத்திலும் குரல் எழுப்பாத நிலையில், டில்லியை நோக்கி தமிழகத்திலிருந்து நம்முடைய மாநில முதலமைச்சருடைய குரல் என்பது சமூக நீதியையும், அதேபோல மாநில உரிமைகளையும் நிலைநாட்டும் வகையில் உள்ளது. ஒன்றிய அரசினால் கொண்டு வரப்பட்டுள்ள, அனைத்து மத்தியப் பல்கலைக்கழகங்களிலும் பொது நுழைவுத் தேர்வு என்பதை இரத்து செய்ய வேண்டுமென்று நமது அரசு கொண்டு வந்திருக்கிற தனித் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்று அமைகிறேன். நன்றி, வணக்கம்.

[2022 ஏப்ரல் 11

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை அவர்கள்.

***திரு. மா. சின்னதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2022–2023 ஆம் கல்வியாண்டில் அனைத்து மத்தியப் பல்கலைக்கழகங்களிலும் பொது நுழைவுத் தேர்வு நடைபெறும் என்று அறிவித்திருப்பது ஆபத்தானதாகும். மாநில பல்கலைக்கழகங்கள், நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் விரும்பினால் மாணவர் சேர்க்கையை நடத்திக்கொள்ளலாம் என்ற அறிவிப்பு கூட்டாட்சித் தத்துவத்திற்கு ஆபத்தானதாகும். அது விளிம்புநிலை, ஏழையெளிய மாணவர்களுக்கு மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். பல்கலைக்கழகங்களில் சேர்வதற்கான தகுதி என்பதை இழந்துவிடுவார்கள். இத்தகைய முயற்சிகளை, மோசமான தலையீடுகளை ஒன்றிய அரசு முயற்சிக்கிறபோதெல்லாம், இந்தியாவிற்கே முன்மாதிரியாக நம்முடைய சட்டப் பேரவையில் தீர்மானம் கொண்டுவருவது மிகச் சிறப்பாகும். இந்தத் தீர்மானத்தை முழுமனதோடு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நாங்கள் ஆதரிக்கிறோம். நேற்றைய முன்தினம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கேரளாவில் கண்ணூரிலே பேசியிருக்கக்கூடிய பேச்சு இந்தியாவின் மதச்சார்பின்மையின் அடையாளமாக, இந்தியாவையே விழித்தெழச் செய்திருக்கிறது என்கிற அடிப்படையில், அந்தப் பேச்சு இந்தியாவில் ஓர் அரசியல் மாற்றத்தை உருவாக்குவதற்கு அடித்தளம் வகுக்கும் என்கிற அடிப்படையில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழுவின் சார்பிலே வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் ஈஸ்வரன் அவர்கள் பேசியபோது ** பேசிய அந்த வார்த்தைகள் அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன, நான் பேசியது உட்பட. மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.

திரு. ம. சிந்தனை செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தனித் தீர்மானம் மாநிலங்களின் உரிமையைப் பாதுகாக்கிற

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2022 ஏப்ரல் 11] [திரு. ம. சிந்தனை செல்வன்]

கருத்தியல் அடிப்படையிலும், பல்கலைக்கழகங்களின் தனித் தன்மை மற்றும் பல்கலைக்கழகங்களின் இறையாண்மையைப் பாதுகாக்கிற கருத்தியல் அடிப்படையிலும், பள்ளிக் கல்வியின் பன்முகத் தன்மையைப் பாதுகாக்கிற வகையிலும் அமைந்திருக்கிறது. இந்தத் தீர்மானத்தை நிறைவாக அவர் முன்மொழிந்து நிறுத்தியபோது, மனதுக்குள் 'இதுதான் திராவிட மாடல்' என்று நானே சொல்லிக்கொள்கிற அளவுக்கு, இந்த அவையை மாத்திரமல்ல, தமிழ்நாட்டை மாத்திரமல்ல, இந்தியாவை வழிநடத்தக்கூடிய ஒரு கருத்தியல் ஆளுமையோடு மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்மொழிந்திருக்கிற இந்தத் தனித் தீர்மானத்தை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பாக 100 விழுக்காடு வரவேற்கிறோம்.

முற்பகல் 11–30

நீட் தேர்வு என்பது பல்வேறு உரிமைகளைப் பறிப்பது மாத்திரமல்ல, அதன் நடைமுறைகளில் வெறும் கணினிகளை அடிப்படையாகக் கொண்ட தேர்வாக, தேர்வு மையங்களை நோக்கி நகர வேண்டிய தேர்வாக அமைகின்றது என்பதை நாம் அறிவோம். ஆகவே, இந்தத் தேர்வும் இத்தகைய நெருக்கடியைத் தரும் என்பதில் மாறுபட்ட கருத்து இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நிறைவாக சொல்ல விரும்புவது என்னவெனில், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாநிலத்திற்கான ஒரு கல்விக் கொள்கையை உருவாக்க வேண்டும் என்கிற அடிப்படையிலே ஓர் உயர்மட்டக் குழுவை அமைத்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். நம்முடைய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், பல்கலைக்கழகங்களில் துணை வேந்தர் நியமனம் என்பது மாநில அரசின் ஆளுகைக்குள் கொண்டு வரப்பட வேண்டும் என்கிற கருத்தைப் பதிவு செய்திருக்கிறார். மத்தியப் பல்கலைக்கழகங்களில், புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் பல துறைகளில் வெறும் 10 விழுக்காடு மாணவர்கள்கூட இல்லை என்பதை இந்த அவையின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். ஆகவே, மத்தியப் பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட உயர் கல்வி நிறுவனங்களில் மாநிலத்திற்கான பங்கை கேட்டுப் பெறுகிற முயற்சியில் தமிழகம் இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தனித் தீர்மானத்தை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பிலே நெஞ்சார வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

[2022 ஏப்ரல் 11

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.

திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடு முழுவதும் மத்திய அரசின்கீழ் 49 பல்கலைக்கழகங்கள் இயங்கி வருகின்றன. அதில், ஒன்றே ஒன்று தமிழ்நாட்டில், நமது முதலமைச்சர் அவர்களின் ஊரான திருவாரூரில் இயங்கி வருகிறது. அதில் 27 துறைகள் உள்ளன. 2,515 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். ஏற்கெனவே, அங்கு entrance exam முடிந்துவிட்டது. கேரள மாநிலத்திலுள்ள காசர்கோடு பகுதியில் ஒரு மத்தியப் பல்கலைக்கழகம் இருக்கிறது. அந்தப் பல்கலைக்கழகத்தில், இதுவரையிலும் எந்தவிதமான எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை. அது கம்யூனிஸ்ட் கட்சி ஆளுகின்ற மாநிலம் ஆகும். ஆக, நான் அதற்குள் போக விரும்பவில்லை. இருந்தாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தின் கீழ் மாநில அரசு பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் மற்றும் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் விரும்பினால் சேர்ந்துகொள்ளலாம் என்று உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு முனைவர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. நீட் தேர்வைக் கொண்டு வந்தபோது அப்படித்தான் சொன்னார்கள். தமிழகம் விரும்பினால், கொண்டுவரலாம் என்று சொன்னார்கள். தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் இருந்தபோது, அந்த நீட் தேர்வை எதிர்த்து, அது தமிழகத்திற்கு வராமல் தடுத்துக்கொண்டிருந்தார். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படித்தான் ஆரம்பிப்பார்கள். 'விரும்பினால்' என்று ஆரம்பித்து, பிறகு புதிய கல்விக் கொள்கை என்றெல்லாம் கொண்டு வந்து, compulsory என்று செய்வார்கள். எனவேதான், தமிழக முதலமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக, இந்தத் தீர்மானத்தை வாசித்திருக்கிறார் என்றால், எல்லா மாநிலங்களும் இதைப் பின்பற்ற வேண்டும் என்ற உணர்வோடு, அவர் உருவாக்கியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) 54 மத்தியப் பல்கலைக்கழகங்களில் இந்தத் தேர்வு இந்த வருடம் நடத்தப்பெறுகிறது. முதலில், 9 பல்கலைக்கழகங்களில் நடந்து கொண்டிருந்தது. தற்போது, 54–க்கு விரிவுபடுத்தியிருக்கிறார்கள்.

2022 ஏப்ரல் 11] [முனைவர் க. பொன்முடி]

ஆகவே, நீங்கள் தெரிவிப்பது தவறான கருத்து. மறுபடியும் இதை extend செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற முன்னெச்சரிக்கையோடு மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் எங்கள் உயர் கல்வித் துறையின் மூலமாக முதலிலேயே கடிதத்தை எழுதியதோடு மட்டுமல்லாமல், இந்தத் தீர்மானத்தையும் கொண்டு வந்திருக்கிறார் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாட்டிற்குத் தேவையில்லை என்பது நமது, உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும்.

திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய பல்கலைக்கழகமான IIT சென்னையில் இருக்கிறது; IIM திருச்சியில் இருக்கிறது; NIT திருச்சியில் இருக்கிறது. அங்கு B.Tech., M.Tech., உள்ளிட்ட எந்தப் படிப்புகளில் சேர வேண்டுமென்றாலும், மாணவர்கள் joint entrance exam–ஐ All India level–ல், தேசிய அளவில் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் தேர்வு 30, 40 ஆண்டுகாலமாக நடைபெற்று வருகிறது. அந்தத் தேர்வின் நீட்டிப்பு என்பது, இதுவரையிலும் நமது மாநிலப் பல்கலைக்கழகங்களில் செய்யப்படவில்லை. ஆகவே, இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கோரி, இந்தத் தீர்மானத்தை எதிர்த்து, பாரதிய ஜனதா கட்சி வெளிநடப்பு செய்கிறது. (குறுக்கீடு)

(பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச்செய்தனர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி. அவர்கள்.

முற்பகல் 11–35

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், தமிழக அரசின் சார்பாகக் கொண்டு வரப்பட்டிருக்கிற அரசினர் தனித் தீர்மானத்தை ஒட்டுமொத்த தமிழ்நாட்டில் வாழக்கூடிய ஏழையெளிய, நடுத்தர மக்களின் கல்வியைக் காக்கிற ஒரு தீர்மானமாகவே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் பார்க்கிறோம், கருதுகிறோம். அதற்குக் காரணம், மத்தியப் பல்கலைக்கழகங்களில் இந்த நுழைவுத் தேர்வு

[திரு. ஜி.கே. மணி] [2022 ஏப்ரல் 11

CUET என்பது எதிர்காலத்தில் தமிழ்நாட்டில் இருக்கிற எல்லா அரசுப் பல்கலைக்கழகங்கள், நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள், சொல்லப்போனால், அரசு கல்லூரிகளுக்கும் வரும் என்ற அச்சத்தை உருவாக்குகிறது. இது நீட் தேர்வின் மறு வடிவம். நீட் தேர்வு என்பது, மருத்துவக் கல்வியில் ஏழைகளுக்கு எட்டாக்கனியாக இருந்து கொண்டிருக்கிற அதே சூழல்தான், 12 ஆம் வகுப்பு படித்த மாணவர்கள் இளங்கலையில் சேர்ந்து படிப்பதற்கு இது ஒரு தடை, முட்டுக்கட்டை.

ஒரு தனி மனிதனின் வளர்ச்சிக்கு, ஒரு குடும்பத்தின் உயர்வுக்கு, நாட்டின் உயர்வுக்கு அடித்தளம் கல்வி.

> 'கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
> மாடல்ல மற்றை யவை'

என்று திருவள்ளுவர் சொன்னதைப்போல, இது அடித்தட்டு மக்களுக்குத் தடையாக இருக்கிற, கல்வி உரிமையைப் பாதிக்கிற செயல். அதுமட்டுமல்ல, இதைத் தனியார் பயிற்சி நிலையங்களை ஊக்குவிக்கிற ஒரு செயலாகவும் பார்க்கிறோம். (மணியடிக்கப்பெற்றது) உரையை முடித்துவிடுகிறேன். இப்போது நீட் தேர்வின் காரணமாக, தனியார் பயிற்சி நிறுவனங்களால் ஏறக்குறைய ஒரு இலட்சம் கோடி ரூபாய்க்கும்மேல் வருவாய் ஈட்டப்படுகிறது; அது மேலும் ஊக்குவிக்கப்படும். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, திருவாரூரிலே மத்தியப் பல்கலைக்கழகத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தப் பல்கலைக்கழகத்தில், தஞ்சை, திருவாரூர், நாகை, மயிலாடுதுறை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களைச் சார்ந்த ஏழையெளிய விவசாயக் குடும்பத்தைச் சார்ந்த மாணவர்கள் படிக்கிறார்கள். இந்த CUET வந்துவிட்டால், அவர்கள் படிக்க வாய்ப்பு இருக்காது. அங்கே தமிழக அரசு நிலம் கொடுத்திருக்கிறது; எல்லா உரிமையும் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த CUET வந்துவிட்டால் இந்தியாவில் இருக்கிற எல்லா மாநிலங்களிலிருந்தும் மாணவர்கள் இங்கே வந்து சேருவார்கள். தமிழ்நாட்டு மாணவர்களுக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும். இதையெல்லாம் பார்க்க முடிகிறது. இந்தக் காரணத்தினால், இந்தத் தீர்மானம் என்பது மிக முக்கியத்துவம் வாய்ந்தது; இதோடு, எதிர்காலத்தில் மிகப் பெரிய அச்சத்தை உருவாக்கும். உயர் கல்வி எட்டாக்கனியாக ஏழைகளுக்கு அமைந்துவிடும் என்கிற காரணத்தினால்தான் எல்லோரும் இந்த 'NEET–CUET–OUT' செய்ய வேண்டும்.

2022 ஏப்ரல் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர், நல்ல வார்த்தைகளைப் பேசியிருக்கிறீர்கள். உரையை முடித்துவிடுங்கள்.

திரு. ஜி.கே. மணி: இந்த 'NEET–CUET–OUT' செய்யக்கூடிய பிரச்சினையை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் வலியுறுத்தி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனித் தீர்மானத்தை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் முழு மனதோடு வரவேற்று, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வபெருந்தகை அவர்கள், சுருக்கமாகப் பேசி முடியுங்கள். இன்றைக்கு முக்கியமான மானியக் கோரிக்கைகள் இருக்கின்றன.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்த அரசினர் தனித் தீர்மானத்தை காங்கிரஸ் பேரியக்கம் வழிமொழிகிறது. உளமார இதை வரவேற்கிறது, ஆதரிக்கிறது. குறிப்பாகச் சொல்லப்போனால், நம்முடைய மாணவர்கள் எதிர்காலத்திற்கு மிகப் பெரிய கேள்விக்குறியாக, ஒன்றிய அரசு தொடர்ந்து ஒவ்வொரு காலகட்டத்திலும் அவர்களுடைய சித்து விளையாட்டுகளை விளையாடிக் கொண்டிருக்கிறது; ஏற்கெனவே ஆரம்பித்துவிட்டது. இப்போது என்ன நடக்கிறது என்றால், நம்முடைய மாணவர்கள் கல்லூரி வாயிலில் கால் வைக்க முடியாத ஒரு நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இது எல்லா மாநிலங்களுக்கும் பொருந்தும். நம்முடைய பா.ஜ.க. சட்டமன்றக் கட்சியைச் சார்ந்த தலைவர் சொன்னார்; கேரள மாநிலம் ஏற்றுக்கொண்டதென்று சொன்னால், கேரள மாநிலத்திற்கும், தமிழக மாநிலத்திற்கும் இந்த Gross Enrolment Ratio–ல் நிறைய வித்தியாசம் இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த, இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தின் மூலமாக இன்றைக்கு நம்முடைய Gross Enrolment Ratio–ஐப் பார்த்தீர்களென்றால், 52 விழுக்காடாக உள்ளது; கேரளாவில் 27 விழுக்காடு. அவர் சொல்லிவிட்டுப் போய்விட்டார். இப்போது பார்த்தீர்களென்றால் இந்த ஆட்சி வருவதற்கு முன்னால் 48.5 விழுக்காடாக இருந்தது, இப்போது 52 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது. இப்போது 52 சதவிகிதமாக நம்முடைய Gross Enrolment Ratio இருக்கிறது. ஆகையால், தமிழகம் எல்லா மாநிலங்களுக்கும் வழிகாட்டும்போது, இதிலும் வழிகாட்டியாகத் திகழ்ந்துகொண்டிருக்கிறது.

[திரு. கு. செல்வபெருந்தகை] [2022 ஏப்ரல் 11

சிறப்புப் பள்ளிகளை ஒன்றிய அரசு நடத்துகிறது. குறிப்பாக, கேந்திர வித்யாலயா, சைனிக் பள்ளிக்கூடங்கள், நவோதயா பள்ளிக்கூடங்களை நடத்தி வருகிறது. தமிழகத்தில் நாம் நவோதயாவை அனுமதிக்கவில்லை. ஆனால், நாம் நடத்துகின்ற பள்ளிகள் சிறப்புப் பள்ளிகள் அல்ல, பொதுப் பள்ளிகள்; எல்லோருக்குமான பள்ளிகள். ஒன்றாம் வகுப்பிலே காலை எடுத்துவைத்தால், 12 ஆம் வகுப்பு முடிக்கும்வரை அவர்களுக்கு எல்லா உரிமைகளையும் மீட்டுக் கொடுக்கிற மாநிலம் தமிழகம். ஆகையால், இவர்கள் நடத்துகிற இந்த CUET தேர்வு என்பதும், இவர்கள் நடத்துகிற test–ம் தமிழகத்திற்கு ஒருபோதும் பொருந்தாது. அதேபோன்று, பெரியவர்களுக்கே 8 மணி நேரம் வேலை, 8 மணி நேரம் ஓய்வு, 8 மணி நேரம் உறக்கம் என்கிறோம். இந்தக் குழந்தைகள் காலையிலிருந்து மாலை வரையில் பள்ளிக்கூடம் போய்விட்டு வந்த பிறகு, இன்னும் சுமை ஏறுகிறது. இவர்கள் எங்கே போகிறார்கள்? இப்போது இந்த test–ஐக் கொண்டு வந்துவிட்டார்கள். இந்த test–க்காக எங்கே போகப் போகிறார்கள்? Biju's–க்கு போகப் போகிறார்கள், Allen–க்கு போகப் போகிறார்கள், Aakash–க்கு போகப் போகிறார்கள், Ladder–க்கு போகப் போகிறார்கள், Career Point–க்கு போகப் போகிறார்கள். இந்த நிறுவனங்கள் என்ன செய்கின்றன? இலட்சக்கணக்கான கோடிகளைக் குவிக்கிற நிறுவனங்கள். (மணியடிக்கப்பெற்றது) 18 விழுக்காடு G.S.T. கொடுக்கிறார்கள். இதிலும் வருமானம்தான். இது பொதுப் பார்வை கிடையாது.

முற்பகல் 11–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு செய்தியை மட்டும் சொல்லி, நான் உரையை முடித்துக்கொள்கிறேன். 'இல்லம் தேடிக் கல்வித் திட்டம்' என்பது எவ்வளவு தூரம் effective ஆக தமிழகத்தில் வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தத் தலைமுறை அடுத்த தலைமுறைக்கு வழிகாட்டுகிறது. ஓராண்டில் இந்த ratio increase–லேயே நாம் பார்க்கலாம்.

இன்றைக்குக் காலையில் இது என்ன, இந்த entrance test–ஐ எதற்காகக் கொண்டு வருகிறார்கள் என்று பார்த்தேன். ஒன்றே ஒன்றை மட்டும் நான் இந்த அவைக்குச் சொல்லிவிடுகிறேன். இவர்கள் வைக்கின்ற paper–ஐ பார்த்தீர்களென்றால், language என்று இரண்டு கொடுக்கிறார்கள். Section–IA language–ல். (மணியடிக்கப்பெற்றது) Language II. ஒன்றே

2022 ஏப்ரல் 11] [திரு. கு. செல்வபெருந்தகை]

ஒன்றைச் சொல்லிவிடுகிறேன். இது உங்கள் தொகுதிக்குத்தான் நான் சொல்கிறேன். ராதாபுரம் தொகுதியில், இந்தக் குழந்தைகள் எப்படிப் பாதிக்கப்படுகிறார்கள் என்று நான் சொல்கிறேன். இப்போது என்ன சொல்கிறார்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத் தனியாகச் சொல்லுங்கள். இப்போது இதை நிறைவேற்றி முடித்துவிடுங்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: எப்படிப்பட்ட மோசடித் திட்டங்கள் நடைபெறுகின்றன என்பதற்கு இந்த ஒரு paper உதாரணம். இது அவர்கள் கொடுத்ததுதான். Website–ல் இருக்கிறது, யார் வேண்டுமானாலும் பார்க்கலாம். அந்தக் குழந்தைகளை மூன்று paper எழுதச் சொல்கிறார்கள். ஒரு paper, language. Language–ல் என்ன சொல்கிறார்கள் என்றால், 16 language, section–IA. அதற்கடுத்தது 20 language, Section–IB. இதில் என்னென்ன சொல்கிறார்கள் என்றால், முதல் language–ல், Tamil, Telugu, Kannada, Malayalam, Marathi, Gujarati, Odiya, Bengali, Assamese, Punjabi, English, Hindi and Urdu. இங்குதான் கவனிக்க வேண்டும். இதில் நீங்கள் ஒரு paper–ஐ compulsory ஆக எழுத வேண்டும். English, இந்தி, தமிழ் வந்துவிட்டதா! நம்முடைய பிள்ளைகள் எதை எடுப்பார்கள்? ஒன்று, தமிழ் எடுப்பார்கள் அல்லது ஆங்கிலம் எடுப்பார்கள். அடுத்து, Section–IB–க்கு வருகிறார்கள். இதில் நீங்கள் ஏதாவது ஒன்று எழுத வேண்டும். எதை எழுதச் சொல்கிறார்கள், Sanskrit, Kashmiri, Sindhi, Arabic, Italian, Persian, Nepali, German, Spanish, French, அதற்குப் பிறகு Konkani, Bodo, Dogri, Maithili, Manipuri, Santhali, Tibetan, Japanese, Russian, Chinese. இதில் நம்முடைய பிள்ளைகள் ஏதாவது ஒரு paper—ஐ எழுத முடியுமா? ஆகையால் சொல்கிறேன், இது மிகப் பெரிய. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மொத்தமே வேண்டாம் என்பதுதான் தீர்மானம். (குறுக்கீடு) உரையை முடித்துவிடுங்கள். (குறுக்கீடு)

திரு. கு. செல்வபெருந்தகை: அவர்கள் பதில் சொல்லியிருப்பார்கள். இதில் என்ன கொண்டு வருகிறார்களென்றால், Sanskrit–ஐக் கொண்டு வருகிறார்கள். நீங்கள் compulsory ஆக படித்தாக வேண்டும். Mann Ki Baat–ல் பாரதப் பிரதமர் அவர்கள் என்ன பேசுகிறார்? (குறுக்கீடு) ஒரே ஒரு நிமிடம், பேசுவதற்கு

[திரு. கு. செல்வபெருந்தகை] [2022 ஏப்ரல் 11 அனுமதியுங்கள். 'உலகின் மிகவும் தொன்மையான தமிழ் மொழியை கற்றுக் கொள்ளாதது வருத்தமளிக்கிறது' என்று Mann Ki Baat–ல் பேசுகிறார். (குறுக்கீடு) ஒரே ஒரு நிமிடம். இன்னொரு ஒன்றிய அமைச்சர் திரு. அமித்ஷா அவர்கள் பேசும்போது, 'உலகத்திலேயே மிகத் தொன்மையான மொழி தமிழ் மொழி, என்னால் கற்றுக்கொள்ள முடியவில்லை, வேதனையடைகிறேன்' என்கிறார். இதற்கு நிதி எவ்வளவு ஒதுக்கியிருக்கிறார்கள் என்று தெரியுமா? Sanskrit–க்கு மொத்தம் ரூ.543 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். தமிழுக்கு எவ்வளவு ஒதுக்கியிருக்கிறார்கள் என்றால், ரூ.22.90 கோடி, இதுதான் இரகசியம். தமிழ்நாட்டை உளவியல் ரீதியாகத் தாக்க வேண்டும். தமிழ்நாட்டை உளவியல் ரீதியாகத் தாக்க வேண்டுமென்பதற்காகத்தான் இதையெல்லாம் கொண்டு வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்து முன்மொழிந்த இந்தச் சிறப்புமிக்க தீர்மானத்தை நாங்கள் வழிமொழிகிறோம், பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள்.

***திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவப் படிப்பு சேர்க்கைக்கான 'நீட்' தேர்வினை இரத்து செய்ய இயலாமல் போராடிக் கொண்டிருக்கின்ற நிலைமையில், 2022–2023 ஆம் கல்வியாண்டிலிருந்து மத்தியப் பல்கலைக்கழகங்களிலுள்ள படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கைக்கு நுழைவுத் தேர்வு நடத்தப்படும் என்று மத்தியக் கல்வி அமைச்சகம் அறிவித்துள்ளது, மாணவ, மாணவியர்கள், பெற்றோர்கள் மற்றும் கல்வியாளர்களிடையே பெருத்த அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இந்தியா முழுவதுமுள்ள 45 மத்தியப் பல்கலைக்கழகங்கள் மற்றும் இணைப்புக் கல்லூரிகளில் இருக்கின்ற பல்வேறு இளநிலை மற்றும் முதுநிலை படிப்புகளுக்கான 1 இலட்சத்து 80 ஆயிரம் இருக்கைகளை நிரப்ப ஏதுவாக, 2022–2023 ஆம் கல்வியாண்டிலிருந்து மத்தியப் பல்கலைக்கழகம் நுழைவுத் தேர்வு அதாவது, Central Universities Entrance Test நடத்தப்படும் என்றும், 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் இந்தத் தேர்வினை எழுதத் தகுதியுடையவர்கள் என்றும், 12 ஆம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்ணிற்கு எந்தவிதமான முக்கியத்துவமும் தரப்படாது என்றும் மத்தியக் கல்வி அமைச்சகம் தெரிவித்துள்ளது. நுழைவுத் தேர்வுக்கான விண்ணப்பப் பதிவு தொடங்கிவிட்டது, நுழைவுத்

2022 ஏப்ரல் 11] [திரு. கே.பி. அன்பழகன்]

தேர்வுக்கு இந்த மாதம் 30 ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என்றும் கூறப்பட்டுள்ளது. இந்தத் தேர்வு தமிழ் மொழி உட்பட 13 மொழிகளில் கணினி வழியில் நடத்தப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து மத்தியப் பல்கலைக்கழகங்கள் மற்றும் அதன் இணைப்புக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை நுழைவுத் தேர்வுமூலம்தான் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த நிலை தொடர்ந்தால், வருங்காலங்களில் அனைத்துப் பல்கலைக்கழகங்கள் மற்றும் அதன் இணைப்புக் கல்லூரிகளில் உள்ள இளநிலை மற்றும் முதுநிலை படிப்புகளுக்கான சேர்க்கைக்கும் நுழைவுத் தேர்வு கட்டாயம் என்ற நிலை உருவாகக்கூடும். 12 ஆம் வகுப்பில் பெறும் மதிப்பெண்ணிற்கு ஒரு மதிப்பும் இருக்காது. மேலும், 12 ஆம் வகுப்பு என்பது நுழைவுத் தேர்வுக்கான ஒரு தகுதித் தேர்வுபோல் ஆகிவிடும். இதன்மூலம் ஏழையெளிய, கிராமப்புற மாணவ, மாணவியர் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள். இதனை முளையிலேயே கிள்ளியெறிய வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு உண்டு. இதனைத் தடுக்கும் வகையிலே, காலம் தாழ்த்தாமல், நுழைவுத் தேர்வு அறிவிப்பினை திரும்பப் பெறத் தேவையான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டுமென்ற எதிர்பார்ப்பு, மாணவ, மாணவியர் மற்றும் கல்வியாளர்களிடம் உள்ளது. இதனை திரும்பப் பெறத் தேவையான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை, இந்த அரசு உடனடியாக எடுக்க வேண்டுமென்றும், நுழைவுத் தேர்வு அறிவிப்பினை உடனடியாகத் திரும்பப் பெற நடவடிக்கைகளை எடுக்குமாறும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஏற்கெனவே அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது என்பதையும் இந்த அவையில் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11–45

மேலும், அரசியல் சட்டம் உருவான காலத்திலிருந்தே தமிழ்நாட்டில் மாநில சுயாட்சி சிந்தனை தீவிரமாக இருந்து வருகிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் வழியில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், புரட்சித் தலைவி அம்மா அவர்களும், அண்ணன் எடப்பாடியார் அவர்களும் தொடர்ந்து செயல்பட்டு வந்துள்ளார்கள் என்பதனை இந்த மன்றம் நன்கு அறியும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள், எல்லோரும் அமைதியாக இருங்கள்.

[2022 ஏப்ரல் 11

திரு. கே.பி. அன்பழகன்: அதற்கு உறுதுணையாக அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களும் இருந்தார் என்பதையும் இந்த மன்றம் அறியும். மருத்துவம் மற்றும் பொறியியல் படிப்புகளுக்கு, அகில இந்திய அளவில் பொது நுழைவுத் தேர்வு என்று மத்திய அரசு அறிவித்தபோது, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிகப் பெரிய போராட்டத்தினை முன்னெடுத்து, அதனைத் தடுத்து நிறுத்த முன்வந்தார்கள். கடந்த 16–7–2016 அன்று புதுடில்லியில், பாரதப் பிரதமர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாநிலங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அன்றைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சராக இருந்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உரையை வாசித்தார். அந்த உரையின் நகல் அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கும் வழங்கப்பட்டது. அந்த உரையில், மாண்புமிகு அம்மா அவர்கள், 'கல்வி முன்பு இருந்ததைப்போல, மாநிலப் பட்டியலுக்கு திரும்ப வர வேண்டும்' என்று வலியுறுத்தியிருக்கிறார்கள் என்பதை இந்த அவையிலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கல்வி தொடர்பான விஷயங்களில், எந்தச் சூழ்நிலையிலும், மாநில அரசினுடைய உரிமைகளை விட்டுக்கொடுக்காமல் இருந்தார்கள் என்பதையும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடுமட்டுமல்லாமல், அம்மா அவர்களுக்குப் பிறகு, முதலமைச்சராக இருந்த அண்ணன் எடப்பாடியார் அவர்களும், நீட் என்ற நிலை வந்தவுடனே, சாதாரண. கிராமப்புற ஏழை, எளிய மாணவர்களெல்லாம் மருத்துவர்களாக ஆகின்ற வாய்ப்பு கிடைக்கவில்லையே என்பதைக் கருத்திற்கொண்டு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், நேரமில்லை.

திரு. கே.பி. அன்பழகன்: ஒரேயொரு நிமிடம். அன்றைக்கு, அவர்களுக்குப் பயிற்சி அளிக்கின்ற வகையிலே, 7.5 சதவிகித இட ஒதுக்கீடு தந்ததன் அடிப்படையிலே, (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த இரண்டாண்டு காலங்களில், 800 மாணாக்கர்கள் மருத்துவர்களாக ஆகக்கூடிய வாய்ப்பு கிடைக்கப்பெற்றுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

2022 ஏப்ரல் 11]

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7.5 சதவிகித இட ஒதுக்கீடு சம்பந்தமான கோப்பில் ஆளுநர் கையெழுத்து போடாமல் இருந்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, கவர்னர் அலுவலகத்திற்கு முன்பு நடத்திய போராட்டத்தின் காரணமாகத்தான் அந்த 7.5 சதவிகித இட ஒதுக்கீடு குறித்த கோப்பு கையெழுத்தாகி வந்தது என்பதை நீங்கள் மறந்துவிடாதீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் இயற்றப்பட்டு, மேதகு ஆளுநர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. காலதாமதம் ஆனவுடனே, நான் முதலமைச்சராக இருந்தபோது, நானே அதில் கையொப்பமிட்டேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கவர்னருடைய கையொப்பமில்லாமல், முதலமைச்சருடைய அதிகாரத்தின் அடிப்படையிலே அது கொண்டு வரப்பட்டது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, நல்லதுதான். நீங்கள் வரவேற்றுதான் சொல்கிறீர்கள். நீங்கள் வரவேற்றுவிட்டு அமருங்கள். (குறுக்கீடு) நேரம் இல்லை. (குறுக்கீடு) இன்று, இரண்டு மானியக் கோரிக்கைகள் மீதான விவாதங்கள் இருக்கின்றன.

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு திட்டத்தை, இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு திட்டத்தைக் கொண்டுவந்த முதலமைச்சராக எங்களுடைய இயக்கத்தைச் சார்ந்தவர்கள் இருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு, 800 மாணவர்கள் மருத்துவர்களாக ஆவதற்கான வாய்ப்பிருக்கின்றது. அதை நான் இந்த அவையில் பதிவு செய்கின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ** என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, ** நீங்கள் வரவேற்று சொல்லுங்கள். (குறுக்கீடு) ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2022 ஏப்ரல் 11

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நடவடிக்கை என்பது ஒரு தொடர் நடவடிக்கை. ஏற்கெனவே, பொறியியல் மாணவர்களுக்கும், மருத்துவ மாணவர்களுக்கும் நுழைவுத் தேர்வு இருந்தது. 2004–2005 ஆம் ஆண்டு, மாண்புமிகு அம்மா அவர்கள் அந்த நுழைவுத் தேர்வை இரத்து செய்ய வேண்டுமென்று. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது இன்னொரு debate–க்குச் சென்றுவிடும். (குறுக்கீடு) இல்லை, அதைத் தொட்டாலே நிறைய வந்துவிடும். (குறுக்கீடு) உரையை முடித்துவிடுங்கள்.

திரு. கே.பி. அன்பழகன்: 2005 ஆம் ஆண்டு அரசாணை வெளியிட்டு, அதனுடைய தொடர் நடவடிக்கையாக ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அம்மா அவர்களுடைய முன்மொழிவின் காரணமாக, 2007–2008 ஆம் ஆண்டு அந்த நுழைவுத் தேர்வு இரத்து செய்யப்பட்டது. அதை நாங்கள் மறுக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர்கள் கொண்டுவந்தது Court–மூலம் நிறுத்தி வைக்கப்பட்டுவிட்டது. பின்னர், தமிழகத்தினுடைய முதலமைச்சராக கலைஞர் அவர்கள் இருந்தபோது, திரு. அனந்தகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டது. அதற்குப் பிறகுதான், நுழைவுத் தேர்வு இரத்து செய்யப்பட்டது. அதை செய்தது கலைஞர், கலைஞர், கலைஞர் அவர்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி. (குறுக்கீடு) இல்லை, ஒரு நிமிடம். (குறுக்கீடு) ஒரு புள்ளிக்கு வந்துவிட்டோம் எல்லோரும். 'NEET–ம் வேண்டாம்'; 'CUET–ம் வேண்டாம்' என்றாகிவிட்டது. வரவேற்று அமருங்கள்.

முற்பகல் 11–50

திரு. கே.பி. அன்பழகன்: நான் 2007–2008–ல் அது முடிவிற்கு வந்தது என்றுதான் சொன்னேனே தவிர, மாற்றிச் சொல்லவில்லை.

2022 ஏப்ரல் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், முடித்துவிடுங்கள்.*

திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல்தான் இன்றைக்கு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எல்லோரும் தேவையான அளவிற்கு பேசியாகிவிட்டது. நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லிய பிறகு, வேறொன்றும் இல்லை. தீர்மானத்தை வரவேற்று அமருங்கள். (குறுக்கீடு) போதும்.*

திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள்.*

திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பல்லடம் தொகுதி, வீரபாண்டி மற்றும் முத்தனம்பாளையம் மேல்நிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறைகள் கட்ட இடம் ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,350,52,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.544,96,42,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1295, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1549, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார்.

2022 ஏப்ரல் 11]

திரு. கி. அசோக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி தொகுதி, கிருஷ்ணகிரி ஒன்றியம், பெல்லாரம்பள்ளி அரசு உயர்நிலைப் பள்ளியிலும் தமிழ்வழிக் கல்வி மாணவர்களுக்கு 6 வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,350,52,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.544,96,42,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1596, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி.

திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேப்பனஹள்ளி தொகுதி, கெலமங்கலம் ஒன்றியம், கொப்பகரை ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,350,52,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.544,96,42,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1691, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா.

திரு. JMH. அசன் மௌலானா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேளச்சேரி தொகுதி, டான்சி நகர், புனித அந்தோணியார் பள்ளிக்கு நவீன ஆய்வு மையம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

[திரு. JMH. அசன் மௌலானா] [2022 ஏப்ரல் 11

ரூ.36,350,52,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.544,96,42,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1732, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1789, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன்.

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், ஆதனூர் ஊராட்சியில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,350,52,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.544,96,42,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1806, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார்.

திரு. வே. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரூர் வட்டார தலைமை நூலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,350,52,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.544,96,42,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1820, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி.

2022 ஏப்ரல் 11]

திரு. ஆ. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சோலைக்கொட்டாய், கிருஷ்ணாபுரத்தில் பெண்களுக்கு தனியாக அரசு மேல்நிலைப் பள்ளி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,350,52,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.544,96,42,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1822, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி.

திரு. மு. சக்ரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதி, சேமங்கலம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தவும், தேற்குணம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,350,52,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.544,96,42,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1870, மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து.

திரு. K. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி தொகுதி, தொண்டியக்காடரி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,350,52,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

[திரு. K. மாரிமுத்து] [2022 ஏப்ரல் 11

ரூ.544,96,42,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1921, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பள்ளிக் கல்வித் துறையின் மூலமாக வழங்கப்பட்ட 14 வகையான கல்வி உபகரணங்களைத் தொடர்ந்து வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,350,52,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.544,96,42,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1969, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன்.

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசுப் பள்ளிகளில் மேலும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,350,52,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.544,96,42,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2237, மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி.

திரு. T.K. அமுல் கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை தொகுதி, பெத்தநாயக்கனூரில் உள்ள நடுநிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

2022 ஏப்ரல் 11] [திரு. T.K. அமுல் கந்தசாமி]

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,350,52,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.544,96,42,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2375, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார்.

திரு. க.நா. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் வடக்கு தொகுதியில் உள்ள புது ராமகிருஷ்ணாபுரத்தில் உள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு நபார்டு திட்டத்தின்கீழ் பள்ளிக் கட்டடம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,350,52,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.544,96,42,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2602, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. ராமச்சந்திரன்.

திரு. தி. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி வட்டம், பெருங்காடு அரசு உயர்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,350,52,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.544,96,42,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3438, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன்.

[2022 ஏப்ரல் 11

திரு. பி. அய்யப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எழுமலை பேரூராட்சி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மாணவிகளுக்கு சுகாதார வளாகம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,350,52,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.544,96,42,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3492, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி.

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கீழ்வேளூர் தொகுதி, கொளப்பாடு கிராமத்தில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளிக்கு நான்கு வகுப்பறைகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,350,52,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.544,96,42,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3598, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன், இருக்கையில் இல்லை,

வெட்டுத் தீர்மானம் எண் 3862, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரி. செந்தில்நாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4076, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்.

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் தொகுதியில் உள்ள அரசுப் பள்ளிகளுக்கு குடிநீர் வசதி செய்து தர வேண்டியதன்

2022 ஏப்ரல் 11] [திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்]

அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,350,52,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.544,96,42,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4156, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி, இருக்கையில் இல்லை,

வெட்டுத் தீர்மானம் எண் 4394, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4726, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர்.

திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொன்னேரி தொகுதி, பொன்னேரியில் உள்ள பழமையான பள்ளிக் கட்டடங்களை இடித்துவிட்டு புதிய கட்டடங்கள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,350,52,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.544,96,42,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5101, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "போளூர் தொகுதி, பெரணமல்லூர் ஒன்றியம், அன்மருதை ஊராட்சியில் அரசு தொடக்கப் பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டடம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி] [2022 ஏப்ரல் 11

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,350,52,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.544,96,42,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5202, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சேகர்.

திரு. S. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பரமத்தி-வேலூர் தொகுதி, பொத்தனூர் பேரூராட்சி, வெங்கமேடு பகுதியில் உள்ள தொடக்கப் பள்ளிக்குக் கூடுதலாக நான்கு வகுப்பறைகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,350,52,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.544,96,42,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5265, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, மோசூர் அரசு மேல்நிலைப் பள்ளி அருகில் கழிவுநீர் கால்வாய் மற்றும் விளையாட்டு மைதானத்தை சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,350,52,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.544,96,42,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5304, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. அர்ஜுனன்.

2022 ஏப்ரல் 11]

திரு. பொ. அர்ஜுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டிவனம் தொகுதி, மரக்காணம் தாலுகா, ஓமிபேர் ஊராட்சியில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,350,52,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.544,96,42,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5342, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார்.

திரு. மா. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி ஒன்றியம், புக்கிரவாரி ஊராட்சியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் போதிய வகுப்பறைகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,350,52,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.544,96,42,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5363, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் கல்வி மாவட்டத்தில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,350,52,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.544,96,42,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5366, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பரங்குன்றம் தொகுதி, வீரகனூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,350,52,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.544,96,42,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5494, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன்.

திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிணத்துக்கடவு தொகுதி, மலுமச்சம்பட்டி ஊராட்சி, ஜெ.ஜெ. நகரில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,350,52,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.544,96,42,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5550, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. செந்தில் குமார்.

திரு. கோ. செந்தில் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், பூங்குளம் ஊராட்சியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,350,52,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.544,96,42,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5660, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ.

திரு. கடம்பூர் ராஜூ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டி தொகுதி, கோவில்பட்டி நகரில் உள்ள நூலகத்திற்குக் கூடுதல் கட்டடமும், கயத்தாறு பேரூராட்சியில் புதிய நூலகக் கட்டடமும் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,350,52,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.544,96,42,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5669, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன்.

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாலக்கோடு தொகுதியில் உள்ள அரசுப் பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,350,52,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.544,96,42,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5835, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ்.

திரு. A.K. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம்

[திரு. A.K. செல்வராஜ்] [2022 ஏப்ரல் 11

தொகுதி, கூடலூர் நகராட்சி, கவுண்டம்பாளையத்திலுள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,350,52,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.544,96,42,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

நண்பகல் 12–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5985, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மகேந்திரன், இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேசைகளிலுள்ள சிறு கணினியிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

@ 269 முதல் 352 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

2022 ஏப்ரல் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேசைகளிலுள்ள சிறு கணினியிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பெற்றுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள்.

மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் ஓர் அன்பு வேண்டுகோள். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் பேசுவதற்கு எவ்வளவு நேரம் ஒதுக்கப்படுகிறது என்பதை முதலிலேயே நான் சொல்லிவிடுகிறேன். முதலில் பேசுகின்ற இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தலா 15 நிமிடங்களும், அதன்பின் பேச வருகின்ற மாமன்ற உறுப்பினர்களுக்கு தலா பத்து நிமிடங்களும் வழங்கப்படுகின்றன. 8–4–2022 (வெள்ளிக்கிழமை) அன்று நடந்து முடிந்த மானியக் கோரிக்கையிலும் அதுபோல்தான் எல்லோருக்கும்

@ 353 முதல் 435 வரையிலான பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2022 ஏப்ரல் 11

வழங்கப்பட்டது. அ.தி.மு.க.–வைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. ராஜூ அவர்கள் பேசும்போது, 1 மணி இரண்டு நிமிடங்கள் ஆனாலும், அவர்களுக்கு 15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டு, 24 நிமிடங்கள் பேச அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்பதை அவைக்கு தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல் நிறைவாகப் பேசிய மாண்புமிகு அ.தி.மு.க உறுப்பினர் திரு. A.P. ஜெயசங்கரன் அவர்களுக்கு 12 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. அதன் பின்புதான் அரசியல் காரணங்களுக்காக, அந்த நோக்கத்திற்காக வெளிநடப்பு போன்றவற்றைச் செய்வது என்பதில் எனக்கு எந்தவிதமான வருத்தமும் இல்லை. அதைப்பற்றி நான் வருத்தப்படுவதும் இல்லை. அது உங்களுடைய உரிமை என்பதால் அவ்வாறு செயல்படுகிறீர்கள் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. பேரவைத் தலைவர் என்கிற முறையில் எந்தப் பாகுபாடும், எந்த வேறுபாடும் இல்லாமல், எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி என்றில்லாமல் எல்லோருக்கும் அதிக வாய்ப்புதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. கூட்டிக் கழித்துப் பார்த்தால், ஆளும் கட்சியினருக்கு மிகக் குறைவான நேரமே ஒதுக்கப்படுகிறது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பேச முற்படுகின்ற மாண்புமிகு உறுப்பினர்களை பேச அனுமதியுங்கள் என்றுதான் மாண்புமிகு அமைச்சர்களின் கவனத்திற்கு சொல்லியிருக்கின்றார்கள்; அதேபோன்று மிகப் பெரிய குற்றச்சாட்டுகள் வரும்போது, எழுந்து நின்று பதில் சொல்லுங்கள் என்றுதான் சொல்லியிருக்கின்றார்கள். எல்லோரும் அதனை மனதில் வைத்துக்கொண்டு, இந்தச் சபை நாகரிகமாக, ஜனநாயக முறையில் நடக்க வேண்டும் என்பது நம் எல்லோருடைய ஆசை என்பதைவிட, மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிக அதிகமான அளவு அதில் சிரத்தை எடுத்து (மேசையைத் தட்டும் ஒலி) தேவையான அறிவுரைகளை, தேவையான இடங்களிலெல்லாம் சொல்லிக் கொண்டு இருக்கின்றார்கள் என்பதை மனதில் வைக்க வேண்டும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் பேச வரும்போது, 15 நிமிடங்கள் என்றால், 12–03–க்கு ஆரம்பித்தால் 12–18–க்கு முடித்துவிடும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் மானியக் கோரிக்கையில் பேச வேண்டும் என்று

அன்போடு கேட்டுக்கொள்கிறேன். எல்லோருக்கும் உரிய நேரம் வழங்கப்படும். ஒருபோதும் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற பாகுபாடு இருக்காது என்பதை உறுதியாகச் சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள்.

திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் திரு. கே. ராஜு அவர்கள் பேசும்போது, அன்றைக்கு மாண்புமிகு அமைச்சர்கள் எவ்வாறு பதில் சொன்னார்கள் என்பது அவையில் உள்ள அனைவருக்கும் தெரியும்; தங்களுக்கும் தெரியும். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்தபோதும் சரி, அண்ணன் எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும் சரி, திரு. ஓ.பி.எஸ். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும் சரி, தி.மு.க. எதிர்க்கட்சியாக இருந்தபோது, முதலில் பேசுபவர்கள் கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் தொடர்ந்து பேச அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. 10 ஆண்டுக் காலமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா, நீங்கள் உட்காருங்கள்; நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) ஒரே நிமிடம், நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) அதாவது, நடந்தது நடந்தவையாக இருக்கட்டும். நாம் அதற்குள் செல்ல வேண்டாம். தற்போது எப்படி நடக்க வேண்டும் என்பதைச் சொல்லியிருக்கிறேன். அதனை நீங்கள் ஒத்துக்கொண்டுள்ளீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன், பேசுங்கள்.

பிற்பகல் 12–05

***திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். திராவிட இயக்கத்தின் பிதாமகன், பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்கள், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்று தாரக மந்திரங்களுக்கு வித்திட்ட பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், ஏழைகளின் ஏந்தல், கொடுத்துக் கொடுத்து சிவந்த கரங்களுக்குச் சொந்தக்காரர், கடையேழு வள்ளல்களைத் தொடர்ந்து 8–வது வள்ளலாக வாழ்ந்து காட்டிய புரட்சித் தலைவர் இதய தெய்வம் எம்.ஜி.ஆர். அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி), அமைதி, வளம், வளர்ச்சி என்ற பாதையில் தமிழகத்தை இந்தியாவின் முதல் மாநிலமாக உருவாக்கிய பன்முகத் தன்மை கொண்ட இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அனைவரையும் வணங்குகிறேன்.

[திரு. கே.ஏ. செங்கோட்டையன்] [2022 ஏப்ரல் 11

(மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் வழியில் கழகத்தை வழிநடத்திச் செல்கின்ற எதிர்க்கட்சித் தலைவர், முன்னாள் முதலமைச்சர் E.P.S. அவர்களுக்கும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர், முன்னாள் முதலமைச்சர் O.P.S. அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் உள்ளிட்ட இம்மாமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மானியக் கோரிக்கை எண் 43–பள்ளிக் கல்வித் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு பற்றியும், மானியக் கோரிக்கை எண் 20–உயர் கல்வித் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு பற்றியும் கழகத்தின் சார்பாகக் கருத்துகளை எடுத்துரைக்க விரும்புகிறேன்.

பள்ளிக் கல்வித் துறையைப் பொறுத்தவரையில், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலம், பொற்காலமாக அமைந்திருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) 10 ஆண்டுக் காலத்தில் ஏறத்தாழ ரூ.2 இலட்சம் கோடிக்கும் மேலான நிதியை வழங்கி, பள்ளிக் கல்வித் துறையின் மூலமாக சாதனை படைத்த அரசாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு திகழ்ந்து கொண்டிருந்தது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, முன்னாள் முதலமைச்சர் திரு. E.P.S. அவர்கள் பொறுப்பிலே இருந்தபோது, இத்துறைக்காக 18.01 சதவிகித நிதியை ஒரே ஆண்டில் உயர்த்திய பெருமை தமிழ் மண்ணில் இன்றைக்கும் நிலைத்து நிற்கின்றது, அதாவது, ரூ.34,151.73 கோடி நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது தமிழகத்தின் வரலாற்றில் என்றுமில்லாத வகையில் நிகழ்த்தப்பட்ட சாதனை என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலத்தான், பள்ளிக் கல்வித் துறையைப் பொறுத்தவரையில், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 2011 முதல் 2021 வரை S.S.A., ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தின் மூலமாக ஏறத்தாழ ரூ.1,534.45 கோடி நிதியும், R.M.S.A. திட்டத்தின் மூலமாக ரூ.2,236.68 கோடி நிதியும், நபார்டு திட்டத்தின் மூலமாக ஏறத்தாழ ரூ.2,092.92 கோடி நிதியும் ஒதுக்கப்பட்டன. ஆளுங்கட்சி சார்பில் பேசுகின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே பேசுகிறபோது, '10 ஆண்டுக் காலம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே எந்தப் பணியும் நடைபெறவில்லை, பள்ளிகளிலே படிக்கின்ற

2022 ஏப்ரல் 11] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

மாணவர்கள் மரத்தடியிலே படித்தார்கள்' என்று குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, 10 ஆண்டுக் காலத்தில் 5,864.04 கோடி ரூபாய் அளவிலான திட்டங்களை நிறைவேற்றி வரலாறு படைத்தது என்பதனையும் நான் இந்த நேரத்தில் நினைவூட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, C.S.R. திட்டத்தின்கீழ் அனைவரும் நிதியை வழங்க வேண்டுமென்று கழக அரசு வேண்டுகோள் வைத்தபோது, அதற்காக ரூ.527 கோடி அளவிற்கு நிதிகளை அள்ளித் தந்தார்கள். அதன்மூலம் பள்ளிக் கட்டடங்கள், ஆய்வுக் கூடங்கள், சுற்றுச் சுவர் போன்ற பல்வேறு பணிகளைச் சீரோடும், சிறப்போடும் செய்து முடித்த பெருமை தமிழகத்தின் வரலாற்றில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் நடைபெற்றிருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் நினைவூட்ட விரும்புகிறேன்.

அதைப்போல, L.K.G., U.K.G. வகுப்புகள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைமையிலான அரசு இருந்தபோதுதான் இந்தத் திட்டம் முதன்முதலில் நிறைவேற்றப்பட்டது. கிராமங்களிலே இருக்கின்ற மாணவர்கள் தங்களுடைய பொருளாதார நெருக்கடியின் காரணமாக தனியார் பள்ளிகளிலே சென்று படிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டபோது, நடுநிலைப் பள்ளிகளாக இருக்கின்ற அனைத்துப் பள்ளிகளிலும், ஏறத்தாழ 2,361 அங்கன்வாடி மையங்களிலும், 2019–2020 ஆம் கல்வியாண்டில் மட்டும், 42,699 மாணவர்களை கூடுதலாகச் சேர்த்த பெருமை கழக அரசையே சாரும். அதற்குப் பிறகு ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் அதிலே இணைந்திருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, L.K.G., U.K.G. வகுப்புகளை நடத்திய ஆசிரியர்கள், இடமாறுதல் கலந்தாய்வுக்குப் பிறகு, வெவ்வேறு இடங்களுக்குச் சென்ற காரணத்தினால், தற்போது L.K.G., U.K.G. வகுப்பு மாணவர்களுக்கு கற்றுத் தருவதற்கு ஆசிரியர்கள் இல்லாத நிலை இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் நினைவூட்ட விரும்புகிறேன். ஆகவே, அரசு அதன்மீது தனிக் கவனம் செலுத்தி, உடனடியாக ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதையும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கே.ஏ. செங்கோட்டையன்] [2022 ஏப்ரல் 11

பிற்பகல் 12–10

அதுமட்டுமல்ல, இந்திய நாட்டின் வரலாற்றில், தமிழ்நாட்டின் வரலாற்றில் முதன்முதலில் புதிய பாடத் திட்டத்தை உருவாக்கிய பெருமை, மாண்புமிகு திரு. ஈ.பி.எஸ். அவர்கள் தலைமையில் இருந்த அரசுக்கு இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், QR code என்று சொல்லப்படுகின்ற புதிய திட்டத்தைத் தமிழகத்தில் கொண்டுவந்து, NEET தேர்வாக இருந்தாலும், JEE தேர்வாக இருந்தாலும், அனைத்துத் தேர்வுகளையும் மாணவர்கள் சிறப்புற எதிர்கொள்வதற்கு ஏதுவாக இந்தப் புதிய பாடத் திட்டங்கள் அமைந்திருக்கின்றன என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளைப் பொறுத்தவரையில், இந்திய நாட்டின் வரலாற்றில், தமிழகத்தின் வரலாற்றில், மத்திய அரசே பாராட்டுகின்ற அளவிற்கு 10 ஆண்டுக் காலத்தில் 2,165 பள்ளிகள் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் இந்த நேரத்தில் நினைவூட்ட விரும்புகிறேன். தொடக்கப் பள்ளிகள் 273, நடுநிலைப் பள்ளிகள் 127, உயர்நிலைப் பள்ளிகள் 1,116, மேல்நிலைப் பள்ளிகள் 649 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அரசு மனித வள மேம்பாட்டுத் துறை வெளியிட்டுள்ள செயல்திறன் குறிப்பீட்டு அறிக்கையில், பள்ளிக் கல்வியைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு முதலிடத்தில் இருக்கிறது என்ற பெருமையைப் பெற்றிருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் நினைவூட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, பணியாளர்களைப் பொறுத்தவரையிலும், அம்மா அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து கடந்த 10 ஆண்டுக் காலத்தில், 37,177 ஆசிரியர்களும், 10,903 ஆசிரியர்கள் அல்லாதவர்களும் பணியமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்தில் நினைவூட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, தமிழ்நாட்டில் இருக்கின்ற 120 மாவட்ட கல்வி அலுவலர்கள் உள்ள பகுதிகளில் மாதிரிப் பள்ளிகளை உருவாக்க வேண்டும் என்கின்ற நோக்கத்தோடு எங்கள் அரசு, மாதிரிப் பள்ளிகள் திட்டத்தை நிறைவேற்றியது. முதலில், 32 பள்ளிகளை அந்தத் திட்டத்தின்கீழ் தொடங்கி, அதற்குப் பிறகு மாவட்ட கல்வி

2022 ஏப்ரல் 11] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

அலுவலர் உள்ள 120 இடங்களிலும் அத்திட்டத்தைக் கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டு, அத்திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் நினைவூட்ட விரும்புகிறேன்.

கட்டணமில்லாத் தொலைபேசி எண் '14417' என்ற புதிய திட்டத்தைத் தமிழகத்தில் முதன்முறையாக உருவாக்கிய பெருமை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசிற்கு இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாணவர்கள் தங்களுக்குத் தேவையான செய்திகளைத் தெரிந்துகொள்வதற்கும், தங்களுக்கு இருக்கின்ற சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்வதற்கும் ஏதுவாகக் கொண்டுவரப்பட்ட இத்திட்டத்தின் மூலமாக ஏறத்தாழ 3 இலட்சம் மாணவர்கள் பயன்பெற்றிருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்தில் நினைவூட்ட விரும்புகிறேன்.

அதேபோலத்தான் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தும் திட்டத்திலும் அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டது. பள்ளிகளைப் பொறுத்தவரையில், ஏறத்தாழ, 1,646 மேல்நிலைப் பள்ளிகளிலும், 244 உயர்நிலைப் பள்ளிகளிலும் 21.68 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கண்காணிப்புக் கேமராக்கள் பொருத்தும் வசதி செய்யப்பட்டிருக்கின்றது என்பதையும் நான் இந்த நேரத்தில் நினைவூட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று Biometric வருகைப் பதிவேட்டைப் பொறுத்தவரையில், மாணவர்களின் நலன் காக்கின்றவகையில் ஆசிரியர்களுக்கு Biometric வருகைப் பதிவேடு ஒன்றை இந்திய நாட்டின் வரலாற்றில், தமிழகத்தில் உருவாக்கிய பெருமையும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசிற்கு இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, செயல் மேம்பாட்டுத் திறனை மேம்படுத்துவதற்காக 267 பள்ளிகளில் Atal Tinkering Lab-ஐக் கொண்டுவந்த பெருமையும் எங்கள் அரசுக்கு இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கள் அரசைப் பொறுத்தவரையில், இந்திய நாட்டின் வரலாற்றில், தமிழகத்தில் மத்திய மனித வள மேம்பாட்டுத் துறையின் மூலமாகக் கொண்டுவரப்பட்ட NISHTHA என்று

[திரு. கே.ஏ. செங்கோட்டையன்] [2022 ஏப்ரல் 11

சொல்லப்படுகிற ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கின்ற திட்டத்தில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழகம் திகழ்ந்து கொண்டிருக்கிறது; இதற்கான வெற்றியாளர் விருதினை தமிழ்நாடு பெற்றது என்பதையும் நான் இந்த நேரத்தில் நினைவூட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று, உயர் கல்வி பயிலும் மாணவர்களைப் பொறுத்தவரையிலும், இங்கே அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு காங்கிரஸ் சட்டமன்றக் குழுத் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, "இங்கே இல்லம் தேடிக் கல்வித் திட்டம் வந்ததன் அடிப்படையில்தான், 51.41% மாணவர்கள் இன்றைக்கு உயர் கல்வி பெற்றிருக்கிறார்கள்" என்று சொன்னார்கள். அப்படி இல்லை. அன்றைக்கு மத்திய அரசின் இலக்கீடு என்னவென்றால், 27.3 சதவிகிதம். 2019–2020 ஆம் ஆண்டில் மாண்புமிகு திரு. ஈ.பி. எஸ். அவர்கள் தலைமையில்தான் உயர் கல்வியில் 51.4 சதவிகிதம் இலக்கினை அடைந்து, நமது மாநிலம் இந்திய நாட்டின் வரலாற்றில் முதலிடத்தைப் பெற்றது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–15

அதேபோன்று, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டுக் கட்டடம் இன்றைக்கு D.P.I. வளாகத்தில் உருவாக்கப்பட்டிருக்கிறது. 39 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் இந்தக் கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. அங்கேதான் கல்விக் தொலைக்காட்சியை கொண்டுவருவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. குறிப்பாக, கல்வித் தொலைக்காட்சியைப் பொறுத்தவரையிலும், இந்திய நாட்டின் வரலாற்றில், தமிழகத்தில், எங்களது ஆட்சி பொறுப்பிலே இருக்கிறபோதுதான் திரு. எடப்பாடி பழனிசாமி அவர்களின் தலைமையிலே, புதிதாக இந்தியாவிலேயே முன்மாதிரியாக கல்வித் தொலைக்காட்சி கொண்டுவரப்பட்டது. அதை விரிவுபடுத்துவதற்காக, இந்த அரசு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டுக் கட்டடத்தில் கல்வித் தொலைக்காட்சியைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருவதை நான் வரவேற்கின்றேன்.

இரண்டாவது கல்வித் தொலைக்காட்சியை மீண்டும் கொண்டுவருவதன் மூலமாகத்தான் மாணவர்களுக்குத் தேவையான கல்வியைக் கற்றுத் தர முடியும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மாணவர்களுடைய எதிர்காலத்தை

2022 ஏப்ரல் 11] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

மனதில்கொண்டு, இந்த அரசால் செய்யப்படுகின்ற திட்டங்கள் அனைத்தும் மாணவர்களுக்குக் கிடைக்க வேண்டுமென்றால், பாடத் திட்டங்களை நடத்துவதற்கு, கல்வித் தொலைக்காட்சியைப் பயன்படுத்தலாம். இரண்டாவது கல்வித் தொலைக்காட்சியைக் கொண்டுவருகிறபோது, திறன் மேம்பாடு, கலை, கலாசாரம், பண்பாடுகள் போன்றவற்றையும், மற்ற திட்டங்களையும் ஒளிபரப்புவதற்கு ஏதுவாக அமையும். ஆகவே, இரண்டாவது கல்வித் தொலைக்காட்சி கொண்டுவருவதன்மூலம், மாணவர்கள் கற்கின்றபோது அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கும் ஏதுவாக இருக்கும். புரட்சித் தலைவர் அவர்கள் பெயரில் இருக்கின்ற அந்தக் கட்டடத்தில் அதைக் கொண்டுவர வேண்டுமென்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு 3 கோடி ரூபாய்தான் செலவாகும். ஆகவே, இதை அரசு மனதிலேகொண்டு அந்தப் பணியை ஆற்றிட வேண்டுமென்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்ல, இன்றைக்கு நவீன, அதிநவீன ஆய்வுக் கூடங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இந்தியாவிலேயே தமிழகம் முதல் மாநிலமாகத் திகழ்ந்துகொண்டிருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். 6,029 மேல்நிலை, உயர்நிலைப் பள்ளிகளுக்கு 502.13 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்ற வரலாறு என்பது இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழ்நாட்டில்தான் நடைபெற்றிருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டைப் போன்று, இந்தத் திட்டங்கள் எந்த மாநிலத்திலும் நடைபெறவில்லை. இதை மத்திய அரசே பாராட்டியிருக்கிறது. Hi–tech lab என்பது இன்றைக்கு மாணவர்களுக்குப் பெரிதும் உதவியாக இருந்துகொண்டிருக்கிறது. நாங்கள் மாண்புமிகு மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்தபோது அவர்கள் பாராட்டினார்கள்; இந்தத் திட்டத்தை நீங்கள் எப்படி நிறைவேற்றினீர்கள் என்று கேட்டார்கள். அவர்களிடத்தில் நாங்கள் ஒன்றைக் குறிப்பிட்டோம். "இந்தத் திட்டம் கொண்டுவருகிறபோது, இதற்கான tender கோரியபோது, அந்த tender–ல் கலந்துகொண்டவர்கள் 60 சதவிகிதம் நிதியைத் தந்தால் போதும் என்றோம்; அனைத்துப் பணிகளையும் முடித்து, அவர்கள் எங்களிடத்திலே ஒப்படைத்ததற்குப் பிறகு, நிதியை நாங்கள் வழங்கினோம். அதற்குப் பிறகு, 40 சதவிகிதம் நிதியை ஆண்டுதோறும் 10 சதவிகிதம் பராமரிப்போடு வழங்கலாம் என்ற

[திரு. கே.ஏ. செங்கோட்டையன்] [2022 ஏப்ரல் 11

முறையைக் கடைபிடித்தோம்" என்று குறிப்பிட்டோம். இந்த நடைமுறையை இந்தியாவிலேயே முதன்முதலாக உருவாக்கிக் காட்டிய வரலாறு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசிற்கு இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்ல, தேர்வு முடிவுகளைப் பொறுத்தவரையிலும், கல்வியாண்டு தொடக்கத்திலேயே தேர்வுகள் எப்போது நடைபெறும் என்ற கால அட்டவணையையும் தேர்வு முடிவுகள் எந்தத் தேதியிலே அறிவிக்கப் போகிறோம் என்பதையும் எங்கள் ஆட்சிக் காலத்தில் நாங்கள் அறிவித்தோம்; இது இந்திய நாட்டின் வரலாற்றில், எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு திட்டம் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, மாணவர்களுடைய தேர்வு முடிவுகளை SMS மூலமாக, உடனடியாக மாணவர்கள் தெரிந்துகொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மாணவர்களுடைய வருகைப் பதிவேட்டைப் பொறுத்தவரையிலும், மாணவர்கள் பள்ளிக்கு வருகிறார்களா, வரவில்லையா என்பதை SMS மூலமாக பெற்றோர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்செல்கின்ற அந்தப் பணியையும் எங்கள் அரசு ஆற்றியிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. மாணவர்களுடைய நிலைகளை மனதிலே கொண்டுதான், மாணவர்கள் 10 ஆம் வகுப்பு முடித்த பிறகு, 11 ஆம் வகுப்பில் எந்தப் பாடப் பிரிவில் சேர வேண்டும் என்றும், 12 ஆம் வகுப்பு முடித்த பிறகு எந்தக் கல்லூரியில் எந்தப் பாடத்தை எடுத்து படிக்கலாம் என்பது குறித்தும் அனைத்து மாணவர்களும் தெரிந்துகொள்கின்ற வகையில் வழிகாட்டு நெறிமுறைகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளில் அட்டவணையாக வெளியிடப்பட்டிருக்கிறது என்பதையும், நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–20

அதுமட்டுமல்ல, திறன் மேம்பாட்டைப் பொறுத்தவரையிலும், தமிழ்நாடுதான் முன்னணி மாநிலமாக இருந்து கொண்டிருக்கிறது. மத்திய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறை மூலமாக திறன் மேம்பாட்டிற்காக ஐந்து திட்டங்கள் உருவாக்கப்பட்டன. அதில் இன்றைக்கு முதல் மாநிலமாக பஞ்சாப் 927 மதிப்பெண்ணும்,

2022 ஏப்ரல் 11] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

சண்டிகர் 916 மதிப்பெண்ணும், தமிழ்நாடு 906 மதிப்பெண்ணும், கேரளா 901 மதிப்பெண்ணும் பெற்றிருக்கின்றன. அந்தமான் போன்ற தீவுகள் 901 மதிப்பெண் பெற்றுள்ளன என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதிகமான மக்கள்தொகை கொண்ட பெரிய மாநிலங்களுள் நம்முடைய மாநிலம் திறன் மேம்பாட்டில் முதலிடத்தைப் பெற்றிருக்கிறது என்ற வரலாறு தமிழ்நாட்டில் படைக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குள் மணியை அடித்துவிட்டீர்களே!

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, பேசுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, RTE Act என்று சொல்லப்படுகின்ற திட்டத்தின்படி பத்தாண்டுக் காலத்தில் 1,313.89 கோடி ரூபாய் வழங்கப்பட்டது ஒரு வரலாறு, ஏழையெளிய மாணவர்களுடைய எதிர்காலத்தை பிரகாசமாக மாற்றுவதற்கு, தனியார் பள்ளியில் படிப்பதற்கு ஏதுவாகவும் அது அமைந்திருக்கிறது.

நீட் தேர்விற்கு பயிற்சி அளிப்பதைப் பொறுத்தவரைக்கும், தமிழ்நாட்டின் வரலாற்றில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்ற காலத்தில்தான் நீட் தேர்விற்காக பயிற்சி அளிக்கப்பட்டது. நீட் தேர்விற்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய இலட்சிய கொள்கையாகும். இருந்தாலும், மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டுமென்ற முறையில் 412 மையங்கள் உருவாக்கப்பட்டன. அந்த 412 மையங்களில் பயிற்சி பெற வேண்டுமென்று, சுமார் ஒரு இலட்சம் மாணவர்கள் விண்ணப்பித்திருந்தார்கள். அதில், 14,000 மாணவர்கள் அந்த மையங்களில் பயிற்சி பெற அனுமதிக்கப்பட்டார்கள். அதில் தேர்வு செய்யப்பட்டவர்கள் 3,792 மாணவர்கள். முழுமையாகப் பயிற்சி பெற்ற பேராசிரியர்கள் மூலமாக 11 கல்லூரிகளில் 40 நாட்கள் மாணவர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டதன் விளைவாகத்தான், நீட் தேர்வைச் சந்திக்கின்ற திறமை அவர்களுக்கு ஏற்பட்டது என்பதையும், E–box என்ற நிறுவனம் அதனை செய்து முடித்தது என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டின் காரணமாகத்தான் 435 மருத்துவ இடங்களைப் பெற்று,

[திரு. கே.ஏ. செங்கோட்டையன்] [2022 ஏப்ரல் 11

இந்திய நாட்டின் வரலாற்றில், தமிழகத்தின் வரலாற்றில், பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நிலையை மாண்புமிகு EPS அவர்கள் உருவாக்கிக் காட்டினார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆட்சியும் அதைத்தான் செய்துகொண்டிருக்கிறது. ஐந்து துறைகளுக்கும் 7.5 சதவிகித இட ஒதுக்கீடு என்பது வரவேற்கத்தக்கது. ஆகவே, இதுபோன்ற திட்டங்கள் வருகிறபோதுதான் ஏழையெளிய மாணவர்கள் அரசுப் பள்ளிகளில் அதிகமாக படிக்கின்ற நிலை உருவாகும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பட்டயக் கணக்காளர் என்று சொல்லப்படுகின்ற CA படிப்பினை முடித்த பல பேர் பயிற்சி அளிக்கத் தயாராக இருக்கிறார்கள். மாணவர்கள் +2 முடித்து, மதிப்பெண் பெற்றவுடன், அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதன் மூலமாக எதிர்காலத்தில் இலட்சக்கணக்கானவர்கள் பட்டயக் கணக்காளர்களாக உருவாவதற்கு வாய்ப்புகள் உருவாகும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். தனியார் பள்ளியில் ஒழுங்குமுறை சட்டத்தைக் கொண்டு வந்தோம். அந்தச் சட்டத்தை உடனடியாக, முறைப்படி நிறைவேற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, தமிழக ** என்பதை பத்திரிகைகள் மூலமாக நாம் தெரிந்துகொண்டிருக்கிறோம். ஆகவே, அதனைத் தடுப்பதற்கு கடுமையான சட்டத்தை கொண்டு வர வேண்டும்.

அதேபோன்று, நாங்கள் கொண்டுவந்த 'தாலிக்குத் தங்கம்' என்ற திட்டத்தை நிறுத்திவிட்டு, 600 கோடி ரூபாயை எடுத்து, உயர் கல்வி படிக்கின்ற பெண்களுக்காக, அதுவும் தமிழ் வழியில் படிக்கின்ற பெண்களுக்காக அந்த நிதியை ஒதுக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒன்றைக் குறிப்பிட விரும்புகின்றேன். கடந்த வருடம் சமூக நலத் துறை மூலமாக தாலிக்குத் தங்கம், திருமண உதவித் திட்டத்தின் மூலமாக வழங்கப்பட்ட தொகை 760.22 கோடி ரூபாயாகும். ஆனால், இன்றைக்கு அரசுப் பள்ளிகளில் படிக்கின்ற மாணாக்கர்கள் எண்ணிக்கை 8,16,000. அதில் பெண்கள் 4,36,000. ஆனால், அரசுப் பள்ளியில் படிக்கின்ற மாணவர்கள் 1,98,000 ஆகும். ஆகவே, இதற்குத் தேவையான நிதியைப் பொறுத்தவரையிலும் 250 கோடி ரூபாய் இருந்தாலே

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

போதும். 760 கோடியே 66 இலட்சம் ரூபாய் நிதியிருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டத்தை கைவிடாமல் அரசு இதனை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தங்களின் ஆலோசனைக்கு நன்றி. (குறுக்கீடு) நீங்கள் பேச ஆரம்பித்து 20 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டம் சரியான திட்டம், வரவேற்கக்கூடிய திட்டமாகும். (குறுக்கீடு) தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டத்தை நீங்கள் நிறுத்திவிட வேண்டாம். மக்கள் அந்தத் திட்டத்தை மீண்டும் செயல்படுத்த வேண்டுமென்று கேட்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–25

'இல்லம் தேடிக் கல்வி' என்ற திட்டம், உங்கள் கனவாக இருந்து கொண்டு வருகிறது. இல்லம் தேடிக் கல்வி என்கிற திட்டத்தைப் பொறுத்தவரையில், சில இடங்களில் தேவை எழவில்லை. சில மாணவர்கள் பள்ளியில் படிக்கின்ற நிலை இருக்கின்றது. அந்த மாணவர்களுக்கு கற்றுத் தருகின்ற ஆசிரியர்களுக்கு ரூ.2,000/- மட்டும்தான் நிதி வழங்கப்படுகிறது. ஆகவே, இவற்றையெல்லாம் கவனத்தில் எடுத்துக்கொண்டு, இந்த அரசு சிறப்பான முறையில் தனது பணியினை ஆற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் எனக்கு முன்பு உரையாற்றிய அன்பிற்கினிய திரு. அன்பழகன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, திராவிட இயக்கத்தைப் பொறுத்தவரையிலும், இந்த மண்ணை திராவிட இயக்கம்தான் ஆளுமே தவிர, வேறு எவராலும் இங்கு ஆள முடியாது என்பதை மட்டும் தெரிவித்துக்கொண்டு, NEET தேர்வாக இருந்தாலும் சரி, புதிய கல்விக் கொள்கையாக இருந்தாலும் சரி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக தமிழ்நாட்டில் வாழ்கின்ற மாணவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக நிற்போம், நிற்போம் என்பதை மட்டும் சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு புள்ளியில் ரொம்ப correct ஆக இருக்கிறீர்கள், ஆளும் கட்சியும்; எதிர்க்கட்சியும்; நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. அண்ணாதுரை அவர்கள்.

[2022 ஏப்ரல் 11

***திரு. கா. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு எனது இதயபூர்வமான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்தில் உரையாற்றுகின்ற மகத்தான இந்த வாய்ப்பை எனக்கு வழங்கியிருக்கின்ற முதல்வருள் முதல்வர், தமிழக முதல்வர் அவர்களுக்கும், சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் இளைஞர்களின் ஈர்ப்பு, தம்பி உதயநிதி அவர்களுக்கும், பட்டுக்கோட்டை தொகுதி வாக்காளர்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். திராவிட இயக்க முன்னோடிகள், திராவிட மாடல், நமது அரசின் அடித்தளமாக விளங்குகின்ற டாக்டர் நடேசனார், சர்.பிட்டி. தியாகராயர், டி.எம். நாயர், அறிவு ஆசான் தந்தை பெரியார், தமிழகத்தின் தலைமகன் பேரறிஞர் அண்ணா, நம் ஊனோடும், உயிரோடும் இரண்டறக் கலந்திருக்கின்ற நம் நெஞ்சம் நிறைந்த தலைவர் கலைஞர் ஆகியோரை நன்றியுணர்வோடு நினைவுகூர கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு உயர் கல்வித் துறை மற்றும் பள்ளிக் கல்வித் துறை ஆகிய இரண்டு மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகின்ற அரிய வாய்ப்பை வழங்கியிருக்கின்ற தங்களுக்கும், அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும், எனது இதயபூர்வமான நன்றியை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னருந் தமிழ்நாட்டின் கண்
எல்லோரும் கல்வி கற்றுப்
பன்னருங் கலை ஞானத்தால்,
பராக்கிரமத்தால் அன்பால்,
உன்னத இமய மலைபோல்
ஓங்கிடும் கீர்த்தி எய்தி,
இன்புற்றார் என்று மற்றோர்
இயம்பக் கேட்டிடல் எந்நாளோ?

என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கனவை நிறைவேற்றுகின்ற பெரும் பொறுப்பை ஏற்றிருக்கின்ற, அரசுப் பள்ளிகள் வறுமையின் அடையாளங்கள் அல்ல, பெருமையின் அடையாளங்கள் என்ற கருத்தைப் பதிவு செய்ததோடு மட்டுமல்லாது, இளைஞராக இருந்தாலும் பாரம்பரியமாக, தனக்குக் கிடைத்திருக்கின்ற அனுபவத்தைக் கொண்டு திறம்படப் பணியாற்றி வருகின்ற

2022 ஏப்ரல் 11] [திரு. கா. அண்ணாதுரை]

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், அறிவியல் சார்ந்த மூடநம்பிக்கையற்ற கல்விதான் திராவிட மாடல் கல்வியின் அடிப்படை என்பதை ஓங்கி ஒலித்து வருகின்ற, சீரிய சிந்தனையாளர் மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது இதயமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

Education is the most powerful weapon which you can use to change the world என்றார் Nelson Mandela. ஆம், உலகத்தை மாற்றியமைக்கக்கூடிய வலிமையான ஆயுதம் கல்வி என்பதை யாரும் மறந்துவிட முடியாது. அதனால்தான் 2022–2023 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை பொதுவாகப் பாராட்டிய நமது ஒன்றிய அரசின் முன்னாள் நிதி அமைச்சர், பொருளாதார வல்லுநர், திரு. ப. சிதம்பரம் அவர்கள், 'இந்த நிதிநிலை அறிக்கையினை தந்தமைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களையும் பாராட்டுகிறேன்' என்று சொல்லிவிட்டு, 'இந்த நிதிநிலை அறிக்கையில் கல்வித் துறைக்காக மிக அதிகமாக, போதுமான நிதி ஒதுக்கியிருக்கின்ற அந்த ஓர் அறிவிப்பிற்காக முக்கியமாக எனது பாராட்டினை, வாழ்த்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்' என்று சொன்னார். பள்ளிக் கல்வித் துறைக்கு ரூ.36,895.89 கோடியும், உயர் கல்வித் துறைக்கு ரூ.5,668.89 கோடியும் நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நம்முடைய நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பிற்பகல் 12–30

கடந்த 2 ஆண்டுகள் பெருந்தொற்று காரணமாக பள்ளிகள் மூடப்பட்டிருந்ததால், மாணவர்களின் கற்றல் இழப்பை ஈடுசெய்யும் வகையில், 'இல்லம் தேடிக் கல்வி' என்ற திட்டத்தின்கீழ் 30 இலட்சம் மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர் என்கின்ற செய்தி மகிழ்ச்சியளிக்கக்கூடிய ஒன்றாகும். அரசுப் பள்ளிகள் புறக்கணிக்கப்பட்ட காலம்போய், இன்றைக்கு அரசுப் பள்ளிகளில் மாணவர்களின் சேர்க்கை என்பது மிக அதிகமாக இருப்பது, கண்கூடாக நாம் பார்க்கக்கூடிய ஒன்றாகும். அதுபோன்று அடுத்த 5 ஆண்டுகளில், அனைத்து அரசுப் பள்ளிகளையும் நவீனமயமாக்குவதற்கான 'பேராசிரியர் அன்பழகன் பள்ளி

[திரு. கா. அண்ணாதுரை] [2022 ஏப்ரல் 11

மேம்பாட்டுத் திட்டம்' என்கின்ற மாபெரும் திட்டத்தின்மூலம் அரசுப் பள்ளிக்குத் தேவையான கட்டமைப்பு வசதியுடன்கூடிய 18,000 புதிய வகுப்பறைகள் கட்டப்படும் என்றும், அதற்காக 7,000 கோடி ரூபாய் செலவு செய்யப்படும் என்றும், இந்த நிதியாண்டில் மட்டும் 1,300 கோடி ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மாநிலத்தில் இயங்கிவரும் பொது நூலகங்களின் செயல்பாட்டை ஆய்வு செய்து, மேம்படுத்தத் தேவையான ஆலோசனைகள் வழங்க ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்படும் என்ற அறிவிப்பும் வரவேற்புக்குரிய ஒன்றாகும்.

பட்டுக்கோட்டை நகரத்தைப் பொறுத்தவரையில், கிளை நூலகம் ஒன்று உள்ளது. அது 1984 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. அங்கு ஏறத்தாழ 72,000 நூல்கள் உள்ளன. உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 10,698. நாளொன்றுக்கு 200–க்கும் மேற்பட்ட வாசகர்கள் வந்து படித்துப் பயன்பெறுகிறார்கள். பட்டுக்கோட்டை மற்றும் சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள், இங்கு வந்து படித்துத்தான் போட்டித் தேர்வுகளுக்கு தயாராகிறார்கள். நம்முடைய இல்லம் தேடிக் கல்வியின் பொறுப்பு அதிகாரி திரு. இளம்பகவத், இ.ஆ.ப. அவர்கள்கூட இங்கு படித்துத்தான் தேர்ச்சி பெற்றார் என்கின்ற மகிழ்ச்சியான செய்தியையும் நான் இந்த அவையில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

பட்டுக்கோட்டை நூலகக் கட்டடம் கட்டி 35 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதால் கட்டடம் கொஞ்சம் பழுதடைந்துள்ளது. அதை பழுது நீக்கி, சரி செய்து தருவதோடு, பழுதடைந்த மின் சாதனங்கள் மற்றும் 5 கணினிகள் இருந்தும் சரியான இணையதள வசதி இல்லாததால் பயன்படுத்த முடியாத நிலை இருக்கிறது என்று தெரிவிக்கிறார்கள். அதை சரி செய்து தர மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், இருக்கின்ற கட்டடத்தின் மாடியிலே ஒரு கூடுதல் கட்டடம் தேவை என்கின்ற ஒரு கோரிக்கை இருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்கள் மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சராகவும் இருப்பதால் அருள்கூர்ந்து இந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன். மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பட்டுக்கோட்டைக்கு வருகின்றபோது, அந்த நூலகத்தைப் பார்வையிட வேண்டுமெனவும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, பட்டுக்கோட்டை தொகுதி, மதுக்கூர் பேரூராட்சியில் உள்ள நூலகம், வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. கட்டட உரிமையாளர், நூலகத்தை வேறு இடத்திற்கு மாற்றிக்கொள்ளுங்கள் என்று கூறிவருவதால், கட்டடம் பராமரிப்பின்றி இருக்கின்றது. மழைக் காலங்களில் மழைநீர் ஒழுகி நூல்கள் சேதமாகிவிட்டன. எனவே, அந்த நூலகத்திற்கு அரசின் சார்பில் ஒரு புதிய நூலகக் கட்டடம் கட்டித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

பட்டுக்கோட்டை தொகுதி, மதுக்கூர் ஒன்றியத்தில் உள்ள கருப்பூர் ஊராட்சியில் தற்போது உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தித் தரக் கேட்டுக்கொள்கிறேன். உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கான காப்புத் தொகை, தடையில்லா சான்றுகள் உள்ளிட்ட முன்மொழிவை துறைக்கு அனுப்பி வைத்துள்ளனர். அந்த நகலை கடந்த ஆண்டே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தந்துள்ளேன் என்பதையும், அந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், கூடுதலான ஒரு கோரிக்கை. ஒருங்கிணைந்த பட்டதாரி ஆசிரியர்கள் கூட்டமைப்பு என்கின்ற அமைப்பின் ஒரு கோரிக்கையை, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 2009, 2010, 2011, 2012 ஆகிய ஆண்டுகளில் பணிமூப்பு அடிப்படையில் சான்றிதழ்கள் சரிபார்த்து வேலை பெற்றவர்கள் தவிர, நிலுவையிலுள்ள 5,000 பட்டதாரி ஆசிரியர்கள், 1,258 பட்டதாரி தமிழ் ஆசிரியர்கள் இதுவரை பணியில் அமர்த்தப்படவில்லை என்கின்ற ஒரு நிலை இருப்பதாகவும், தங்களுடைய கோரிக்கையை நம்முடைய அரசு கனிவுடன் பரிசீலிக்க வேண்டுமென்றும் கேட்டுள்ளார்கள். அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பிற்பகல் 12–35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வித் துறையைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டிலுள்ள திறன் மிக்க மனித வளத்தை மேலும் மேம்படுத்தி, ஓர் அறிவுசார் பொருளாதாரத்தை உருவாக்குவது இந்த அரசின் தொலைநோக்குப் பார்வையாகும். உலகளாவிய பங்களிப்புடன் அறிவுசார் நகரம்

[திரு. கா. அண்ணாதுரை] [2022 ஏப்ரல் 11

ஒன்று உருவாக்கப்படும் என்றும், இந்த அறிவுசார் நகரம் உலகளவில் புகழ் பெற்ற பல்கலைக்கழகங்களின் கிளைகளைக் கொண்டிருக்கும் என்ற அறிவிப்பையும் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களின் கனவுத் திட்டம் 'நான் முதல்வன்' என்கிற திட்டமானது. ஆண்டுக்கு 5 இலட்சம் இளைஞர்களை படிப்பில், அறிவில், சிந்தனையில், ஆற்றலில், திறமையில் மேம்படுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கம் என்பதும், இத்திட்டத்தில் அரசு, அரசு உதவிபெறும் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் மாணவ, மாணவிகளின் தனித் திறன்கள் அடையாளம் காணப்பட்டு, அவை ஊக்குவிக்கப்படும் என்பதும், மாணவர்களின் வேலைபெறும் திறன் பெருகும் என்பதும் பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

இந்திய தொழில்நுட்பக் கழகங்கள், இந்திய அறிவியல் கழகம், அனைத்திந்திய மருத்துவ அறிவியல் கழகம் போன்ற புகழ் பெற்ற உயர் கல்வி நிறுவனங்களில் சேர, அரசுப் பள்ளி மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில், இந்நிறுவனங்களில் இளநிலை பட்டப்படிப்பு பயில்வதற்கான முழுச் செலவையும் மாநில அரசே ஏற்கும் என்ற அறிவிப்பும், அதையொட்டி சென்னை, I.I.T. நிறுவனத்தினுடைய இயக்குநர் அவர்கள் இந்த அறிவிப்பினைப் பாராட்டியிருப்பதோடு, மாநில அரசோடு இந்தத் திட்டம் வெற்றிபெற இணைந்து பணியாற்றத் தயாராக இருப்பதாகவும் அறிவித்துள்ளார்கள். எனவே, எதிர்காலத்தில் அரசுப் பள்ளி மாணவர்கள் இந்தக் கல்வி நிறுவனங்களில் அதிக எண்ணிக்கையில் சேரும் வாய்ப்பு உருவாகியிருக்கிறது என்பதைப் பெருமையோடு நான் சுட்டிக்காட்டுகிறேன்.

மேலும், தமிழகத்து மரபு, தற்போதைய நிலைமை, எதிர்காலக் குறிக்கோள்களுக்கேற்ப மாநிலத்திற்கான தனித்துவமான மாநிலக் கல்விக் கொள்கை ஒன்றினை வகுப்பதற்கு கல்வியாளர்கள் மற்றும் வல்லுநர்கள் கொண்ட குழு ஒன்றை இந்த அரசு அமைக்கும் என்று 2021–2022 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டபடி, நீதியரசர் முருகேசன் அவர்கள் தலைமையில், தேர்ந்த கல்வியாளர்கள், எழுத்தாளர்கள், இசைக் கலைஞர், விளையாட்டு வீரர், ஓர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர் என 13 பேர் கொண்ட குழுவை அமைத்து, நம்முடைய மாநிலத்திற்கான தனித்துவமான கல்விக் கொள்கையை வகுக்கவிருப்பது சிறப்பிற்குரிய ஒன்றாகும்.

எனவே, அந்த வகையிலே, நம்முடைய அரசு இன்றைக்கு சிறப்பாகத் தன்னுடைய திட்டங்களை நிறைவேற்றி வருகிற இந்தச் சூழ்நிலையில், பட்டுக்கோட்டை தொகுதியைப் பொறுத்தளவில், பட்டுக்கோட்டை தொகுதியில் அரசு சார்ந்த கலைக் கல்லூரி இல்லை. எனவே, இன்றைக்கு கேட்டதைக் கொடுக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் இயங்கக்கூடிய அரசில், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பட்டுக்கோட்டை தொகுதியில் ஓர் அரசு கலைக் கல்லூரியைத் தொடங்குவதற்கான அனுமதியைத் தர வேண்டும் என இந்த சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு அரசினர் தனித் தீர்மானம் ஒன்றை மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்மொழிந்திருக்கிறார்கள். மத்தியப் பல்கலைக்கழகங்களில் இளநிலைப் படிப்புகளுக்கான நுழைவுத் தீர்வானது, NEET தேர்வைப் போன்று, ஏழை, எளிய கிராமப்புற மாணவர்களைப் பாதிக்கும் என்ற கருத்தைத் தொடர்ந்து எடுத்துச்சொல்லி வருகிறோம். கல்வி என்பது இன்றைக்கு மாநிலப் பட்டியலிலிருந்து, ஒத்திசைவுப் பட்டியல் அல்லது பொதுப் பட்டியலின்கீழ் சேர்க்கப்பட்டிருக்கிறது. மீண்டும் அதை மாநிலப் பட்டியலுக்குக் கொண்டுவர வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறபோது, NEET தேர்வுக்கு அடுத்தபடியாக இப்போது மத்தியப் பல்கலைக்கழகங்களிலும் இப்படிப்பட்ட இந்தத் தாக்குதல் தொடர்கிறது என்பதை மிகத் தெளிவாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். கடந்த வாரம்கூட மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு இதுகுறித்து ஒரு கடிதத்தை எழுதியிருக்கிறார்கள்.

கடந்த வாரம் இதுகுறித்து 'தினமணி' பத்திரிகையில் வெளிவந்திருக்கின்ற ஒரு கட்டுரைச் செய்தியை மட்டும் இந்த அவையினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். அந்தக் கட்டுரையின் தலைப்பு, 'பல்கலைக்கழக பொது நுழைவுத் தேர்வு–தவறான அளவுகோல்'. இந்தக் கட்டுரையை எழுதியவர் மைசூரு J.S.S. அறிவியல் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் ஜவஹர் நேசன் அவர்கள். அவர் இரண்டு கருத்துகளைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறார். ஒன்று, தேசியக் கல்விக் கொள்கையின் அங்கமாக மத்தியப்

[திரு. கா. அண்ணாதுரை] [2022 ஏப்ரல் 11

பல்கலைக்கழகங்களில் கொண்டுவரப்படும் நுழைவுத் தேர்வு மதிப்பெண் மட்டுமே உயர் கல்வியின் நுழைவிற்கு ஒரே அளவுகோலாக அமையும்போது, அங்கு கற்றல் புறந்தள்ளப்பட்டு, பயிற்சி (coaching) மட்டுமே பிரதானமாக்கப்படும். அவ்வேளையில், கல்வியின்மூலம் பெற வேண்டிய மாணவர்களது ஒருங்கிணைந்த மன வளர்ச்சியும், அறிவு வளர்ச்சியும், ஆளுமை மேம்பாடும் அடைய முடியாமல் போய்விடும்.

பிற்பகல் 12–40

இரண்டாவதாக, பன்னெடுங்காலமாக இந்தியாவில் நிலவும் ஏற்றத்தாழ்வுகள், பாகுபாடுகள், ஒடுக்குமுறைகள், பிராந்திய வேறுபாடுகள் ஆகியவை மாணவர்களிடையே ஏற்றத்தாழ்வை ஏற்படுத்துவதால் தேசிய அளவிலான ஒற்றைப் போட்டி தேர்வுக்கு இந்தியா உகந்ததாக இல்லை என்பதே உண்மை. ஆதலால், நாட்டில் நிலவும் பல்வேறு வாரியத் தேர்வுகளின் மதிப்பெண்களைக் கொண்டே உயர் கல்வியில் மாணவர் சேர்க்கை நடத்தப்பட வேண்டும்; அதுவே நியாயமானதும்கூட என்கிற செய்தியை அவர் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார். எனவே, கல்வியாளர்கள் மத்தியிலேயும் இப்படிப்பட்ட கருத்து இருக்கின்ற காரணத்தாலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்மொழிந்து சொன்னதைப்போன்று, ஏறத்தாழ எட்டரை கோடி தமிழர்களுடைய உணர்வைப் பிரதிபலிக்கக்கூடிய இந்த அரசினர் தனித் தீர்மானத்தை ஒன்றிய அரசு ஏற்று, விரைந்து நடவடிக்கை எடுக்குமென்று நாம் இந்த நேரத்திலே நம்புகிறோம்.

என்னுடைய தொகுதியின் சார்பிலே ஒரு சில கோரிக்கைகளை மட்டும் நான் இந்த நேரத்திலே, இந்த மானியக் கோரிக்கைக்கு தொடர்பில்லையென்று சொன்னாலும், தொடர்ந்து எங்களுக்குப் பேசுவதற்கு கிடைக்கிற வாய்ப்பு குறைவு என்கிற காரணத்தாலே அதையும் இந்த நேரத்திலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

பட்டுக்கோட்டை தொகுதியில் நம்முடைய நெடுஞ்சாலைத் துறையின் சார்பிலே கண்ணனாறு ஆற்றின் குறுக்கே ஒரு மேல்மட்டப் பாலம் தேவை என்பது நீண்டநாள் கோரிக்கையாக இருக்கிறது. வெள்ளக் காலத்திலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தப் பகுதியை வந்து பார்வையிட்டார்கள். எனவே, அந்தக் கண்ணனாற்றின் குறுக்கே ஒரு மேல்மட்டப் பாலம் அமைத்துத் தர வேண்டுமென இந்தச் சந்தர்ப்பத்திலே

2022 ஏப்ரல் 11] [திரு. கா. அண்ணாதுரை]

நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்களிடம் இந்தக் கோரிக்கையை நான் முன்பே வைத்திருக்கிறேன்.

பட்டுக்கோட்டைக்கு மிக அதிகமாகத் தேவைப்படுகிற இன்றியமையாத ஒன்றாக இன்றைக்கு இருக்கிற புறவழிச் சாலைத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும். பட்டுக்கோட்டைக்கு பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றித் தருமாறு பணிவன்போடு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, பட்டுக்கோட்டை வருவாய் வட்டம் மிகப் பெரியது. ஏறத்தாழ 9 பிர்காக்களைக் கொண்டது. (மணியடிக்கப்பெற்றது) மிகப் பெரிய வட்டமாக இருக்கிற காரணத்தாலே அதிகாரிகள் நிர்வாகம் செய்வது சிக்கலாக இருக்கிறதென்கிற கருத்து தொடர்ந்து பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. எனவே, பட்டுக்கோட்டை வட்டத்தை இரண்டாகப் பிரித்து, மதுக்கூர் பேரூராட்சியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டத்தைத் துவக்குவதற்கு அரசு முன்வர வேண்டும். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு உதவிட வேண்டுமென இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரேயொரு செய்தியை மாத்திரம் நான் பதிவு செய்ய விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த மாத இறுதியிலும், இந்த மாதத்தினுடைய துவக்கத்திலும் இரண்டு பயணங்களை மேற்கொண்டார்கள். இரண்டு பயணங்களுமே மிகப் பெரிய வெற்றியைப் பெற்றிருக்கின்றன என்பது நமக்கு வருகிற செய்தி மாத்திரமல்ல; உலகளாவிய அளவிலே அந்தக் கருத்து இன்றைக்குப் பரவியிருக்கிறது. துபாயிலும், அபுதாபியிலும் அவர்களுக்குத் தந்த அந்த வரவேற்பு என்பது மிகப் பெரிய அளவில் இன்றைக்கு உலகத் தமிழர்களாலே பேசப்படுகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதேபோன்று,இந்தமாதத்துவக்கத்திலேதலைநகர்டெல்லிக்குச் சென்றபோது, அந்தப் பயணம் எந்தளவிற்கு சிறப்பு வாய்ந்ததாக இருந்தது என்பதை ஆசிரியர் திரு. திருமாவேலன் அவர்கள் ஒரு கட்டுரையிலே இன்றைக்குப் பதிவு செய்திருக்கிறார்கள். 'திசையை தீர்மானித்த திராவிடச் சூரியன்' என்கிற தலைப்பிலே

[திரு. கா. அண்ணாதுரை] [2022 ஏப்ரல் 11

அவர் சொல்கிறார்; 'இதில் டெல்லிக்கு வந்தார். பிரதமரைச் சந்தித்தார். புதிய அலுவலகத்தைத் திறந்து வைத்தார் என்பதோடு முடிந்துவிடவில்லை முதல்வர் அவர்களுடைய டெல்லி பயணம். டெல்லிக்கு வந்தார், இந்தியாவிற்கான புதிய அரசியலைத் தீர்மானிக்கும் திசையைக் காட்டிவிட்டுச் சென்றார்' என்று சொல்லிவிட்டு அடுத்துச் சொல்கிறார்; 'தமிழக எல்லையைத் தாண்டிய ஒரு தேவைக்கு அவர் தேவைப்படுகிறார் என்பதால்தான் பாராளுமன்றத்தின் மைய மண்டபத்தில் அனைத்து மாநில பாராளுமன்ற உறுப்பினர்களாலும் அவர் வரவேற்கப்பட்டார்' என்கிற செய்தியை மிக அழுத்தமாகச் சொல்லியிருக்கிறார். எனவே, அகில இந்திய அரசியலிலே உற்றுப் பார்க்கக்கூடிய ஒரு சக்தியாக இன்றைக்கு மாறியிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நம்முடைய பாராட்டையும், வாழ்த்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். அவருடைய தலைமையிலே நடைபெறக்கூடிய இந்த அரசு, இந்தத் துறை, இன்னும் பல சிறப்புகளைப் பெறும் என்கிற நல்ல மகிழ்ச்சியான செய்தியோடு, உணர்வோடு எனக்குத் தந்த வாய்ப்பிற்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

பட்டுக்கோட்டை ஒன்றியத்தில் முதல்சேரி, வடகாடு, நாட்டுச்சாலை, ஆத்திக்கோட்டை, ஒதியடிக்காடு, கிருஷ்ணாபுரம், அதிரைகரையூர் தெரு, செம்பாளூர் கிழக்கு, தாமரங்கோட்டை மேற்கு ஆகிய ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தர வேண்டும்.

பட்டுக்கோட்டை அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளிக்கு மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தர வேண்டும்.

பட்டுக்கோட்டை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு மாணவிகளின் எண்ணிக்கைக்கேற்ப கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தர வேண்டும்.

பட்டுக்கோட்டை, மயில்பாளையம் நடுநிலைப் பள்ளிக்கு மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தர வேண்டும்.

2022 ஏப்ரல் 11] [திரு. கா. அண்ணாதுரை]

பட்டுக்கோட்டை ஒன்றியம் தம்பிக்கோட்டை வடகாடு, துவரங்குறிச்சி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தர வேண்டும்.

அதிராம்பட்டினம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு மாணவிகளின் எண்ணிக்கைக்கேற்ப கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தர வேண்டும்.

பட்டுக்கோட்டை ஒன்றியத்தில் செண்டாங்காடு அரசு உயர்நிலைப் பள்ளிக்கு மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தர வேண்டும்.

மதுக்கூர் ஒன்றியத்தில் உள்ள ஆலத்தூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தர வேண்டும்.

மதுக்கூர் ஒன்றியத்தில் உள்ள மதுக்கூர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு மாணவிகளின் எண்ணிக்கைக்கேற்ப கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தர வேண்டும்.

மதுக்கூர் ஒன்றியத்தில் உள்ள கீழக்குறிச்சி, அத்திவெட்டி, வாட்டாக்குடி வடக்கு, கன்னியாக்குறிச்சி ஆகிய அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தர வேண்டும்.

மதுக்கூர் ஒன்றியத்தில் உள்ள ஆலத்தூர், மண்டலக்கோட்டை ஆகிய ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளுக்கு மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தர வேண்டும்.

பிற்பகல் 12–45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. இலட்சுமணன் அவர்கள்.

டாக்டர் இரா. இலட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் கல்விப் புரட்சிக்கு வித்திட்ட, மகத்தான சிந்தனையாளர், சமதர்ம சிற்பி, ஈடு இணையற்ற தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை வணங்கி எனது உரையைத் தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2022–2023 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கையில் பள்ளிக் கல்வி மற்றும் உயர் கல்வித் துறைகளுக்கான

[டாக்டர் இரா. இலட்சுமணன்] [2022 ஏப்ரல் 11

மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் உரையாற்ற கிடைத்த இந்த நல்வாய்ப்புக்காக மாண்புமிகு முதலமைச்சர், பெருமதிப்பிற்கும், மரியாதைக்கும், போற்றுதலுக்கும் உரிய எங்கள் தலைவர், தமிழ்நாட்டு மக்களின் பேரன்பையும், ஆதரவையும் பெற்றிருக்கும் தமிழினத் தலைவர் தளபதியார் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்
ததனை அவன்கண் விடல்"

என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப மாண்புமிகு அண்ணன் தளபதியார் அவர்களின் கரங்களில் தமிழ்நாடு ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது.

"You cannot fight an idea whose time has come" என்று புகழ்வாய்ந்த Ben–Hur திரைப்படத்தில் ஒரு வசனம் உண்டு. ஆம், எந்த சிந்தனைக்கான காலம் கனிந்து வந்துவிட்டதோ, அந்தச் சிந்தனையை, அது நிகழ்த்த இருக்கும் சமுதாய மாற்றத்தை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது.

சமத்துவம், சமூக நீதி, சமதர்மம், பெண் விடுதலை, தாய்மொழிப் பற்று என்பனவெல்லாம் கடந்த 100 ஆண்டு காலமாக திராவிட இயக்கத்தின் உழைப்பால், எழுச்சியால், அயராத முயற்சியால் நம்மிடையே விதைக்கப்பட்ட சிந்தனைகள்.

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், மாண்புமிகு அண்ணன் தளபதியார் என்ற வரிசையில் திராவிட இயக்க சிந்தனைகளை அடுத்த தலைமுறைக்கும் கொண்டு சென்று, தமிழ்ச் சமூகத்தின் உயர்வுக்கு ஓயாது உழைக்க வேண்டிய பெரும் பொறுப்புடனும், கடமையுடனும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், பெரும் மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய அண்ணன் திரு. உதயநிதி அவர்கள் பணியாற்றுகிறார் என்பதையும் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கு என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

"தமிழ்நாட்டு கல்வி வளர்ச்சியின் தந்தை டாக்டர் கலைஞர்" என்று வரலாறு கூறுகின்றது. தமிழ்நாட்டின் உயர் கல்வி நவீனம்

2022 ஏப்ரல் 11] [டாக்டர் இரா. இலட்சுமணன்]

அடையவும், அறிவியல், தொழில்நுட்பக் கல்வியில் தமிழ்நாடு பெரும் சாதனைகளைப் படைக்கவும், ஓலைக் குடிசையில் வசித்த கூலித் தொழிலாளியின் பிள்ளையும் உயர் கல்வி பெற்று முன்னேற்றம் அடையவும், அடித்தளம் அமைத்தவர், ஆயிரம் படிக்கட்டுகளை அமைத்துத் தந்தவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் என்று அறிஞர்களும், ஆராய்ச்சியாளர்களும் புள்ளிவிவரங்களுடன் விளக்குகின்றனர்.

'படிப்பு, படிப்பு, படிப்பு–படிப்பினால் உயர்வு, உயர்வு, உயர்வு' என்ற அற்புதமான செயல் திட்டத்தை முத்தமிழறிஞர் கலைஞர் செய்து முடித்திருக்கின்றார். இன்றைக்கு முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் தளபதியார் செய்து கொண்டிருக்கின்றார்.

2022–2023 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தில், உயர் கல்வித் துறைக்கான குறிப்பில் அறிவுசார் நகரம் (Knowledge City) உருவாக்கப்படும், அங்கே ஆராய்ச்சி பூங்காக்கள் நிறுவ ஊக்குவிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

கலைஞர் வழியில் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் தளபதியாரும், இந்த அறிவுசார் நகரம் (Knowledge City) உருவாக்கி, அதில் படித்து பட்டம் பெறும் மாணவச் செல்வங்களுக்கு கலைஞர் உருவாக்கிய TIDCO, SIPCOT, TANSIDCO ஆகியவற்றில் வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தரும் இந்த அற்புதமான முயற்சியினை மனதார வரவேற்று, பாராட்டுகிறேன்.

படிப்பதற்கு ஆட்கள் காத்திருக்கிறார்கள்; பாடம் நடத்த வேலைதேடி பலர் ஆவலாக இருக்கின்றார்கள். புதிதாகக் கட்டடம் கட்ட, ஆய்வகம், நூலகம் அமைக்க நிதியின்றி அரசு இருக்கின்றது. பிறகு ஏன் கல்லூரிகளை 10–00 மணிக்குத் திறந்து 5–00 மணிக்கு மூட வேண்டும்? எனவே, மேற்கத்திய, அமெரிக்க பல்கலைக்கழகங்கள் பாணியில் time–table–களை உருவாக்கலாம் என்ற என் கருத்தினை அரசின் மேலான பார்வைக்கு வைக்கிறேன். நம் கல்லூரிகளில் இன்னும் கூடுதலாக ஒரு shift நடத்துவதும் பயனுடையதாக இருக்கும்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பெயரில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் 1,000 கோடி ரூபாய் செலவில் புதிய வகுப்பறைகள், விடுதிகள், ஆய்வகங்கள், smart classrooms போன்றவை அமைக்கப்படுவதற்கு முதற்கட்டமாக இந்த ஆண்டு ரூ.250 கோடி வழங்கப்படுவது பெரிதும் போற்றுதலுக்குரியது.

[டாக்டர் இரா. இலட்சுமணன்] [2022 ஏப்ரல் 11

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும், அரசு பொறியியல் கல்லூரிகளிலும் பயிலும் மாணவர்களுக்கு வெளிநாடுகளில் வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரும் வகையில் அவர்களுக்கு soft skills, ஆங்கில மொழி சிறப்புப் பயிற்சி போன்றவற்றிற்கு ஏற்பாடு செய்யப்படுவது அவர்களுடைய எதிர்காலத்திற்குப் பெரிதும் உதவியாக இருக்கும். எந்தப் பாடத்தை எடுத்துப் படித்தாலும், அவர்களுக்கு அடிப்படையில் ஒருசில computer நடைமுறைகளில் கண்டிப்பாகப் பயிற்சி அளிக்க வேண்டும். They all must be made computer literate.

இன்றைக்கு இந்தியா என்பது உலகின் Factory, Laboratory; ஆண்டொன்றுக்கு சுமார் 80 பில்லியன் அமெரிக்க டாலர், அதாவது சுமார் 60 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு வெளிநாடுகளில் வேலை செய்யும் இந்தியர்களால் நம் நாட்டுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. அதில் சரிபாதி அளவு தொகை, மத்திய கிழக்கு நாடுகளில் பணியாற்றும் இளைஞர்கள்மூலம் வருகின்றது. அந்த இளைஞர்கள் எல்லாம் யார்? கணிசமானோர், திராவிட இயக்கத்தின் சீர்திருத்தங்களால், (மேசையைத் தட்டும் ஒலி) கல்வி கொள்கைகளால், முதல் தலைமுறையாகப் படித்து, பட்டம் பெற்று, தொழிற்கல்வி பெற்று வேலைகளுக்குச் சென்றிருக்கும் நம் தம்பிகள்தான். அத்தகைய தியாகச் சுடர்கள் அனுப்பி வைக்கும் அந்நிய செலாவணியால்தான் கடுமையான பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்ட காலகட்டத்திலும்கூட, தமிழ்நாடு, கேரளம் போன்ற மாநிலங்களில் மக்கள் இயல்பான வாழ்க்கை வாழ முடிந்தது. அந்த Job market வளர்ந்துகொண்டே இருக்கின்றது. அதில் நம் இளைய தலைமுறை முதலிடத்தைப் பெற, இந்த வரவு–செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டிருக்கும் "நான் முதல்வன்" போன்ற புது முயற்சிகள் பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை.

பிற்பகல் 12–50

மனித வளம்–Human resources எல்லையற்றது. புதிது, புதிதாக தோன்றக்கூடியது. நவீனமயமாக மாறிவரும் புறச்சூழலுக்கு ஏற்ப தன்னை மாற்றிக்கொள்ளும் ஆற்றல்கொண்டது. அத்தகைய சிறப்புக்குரிய மனித வளம் மேம்பட்டதாக அமைந்திட தமிழ்நாட்டு மாணாக்கர்களுக்கு, குறிப்பாக ஏழை, எளிய, கிராமப்புற மற்றும் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு இதுவரை எட்டாக் கனியாக இருந்த IIT, AIIMS, IIM போன்றவற்றில் சேர்ந்து பயில ஆகும் முழுச் செலவையும் அரசே ஏற்கும் என

2022 ஏப்ரல் 11] [டாக்டர் இரா. இலட்சுமணன்]

அறிவித்துள்ள இந்த வரவு–செலவுத் திட்டம், தமிழ்நாட்டின் எதிர்காலத்தை கல்வியின் கையில் ஒப்படைத்திருக்கிறது என்றால் அது மிகையல்ல.

'கல்வியில் சிறந்த தமிழ்நாடு' என்று முத்தமிழறிஞர் கலைஞரின் காலத்தில் பெயர் எடுத்ததைப்போல மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் தளபதியார் அவர்களின் ஆட்சிக் காலத்திலும் உலகப் புகழ் பெற வகை செய்யும் உயர் கல்வி அறிவிப்புகள் அனைத்தையும் மனமார பாராட்டி வரவேற்கின்றேன். இத்துறையின் மாண்புமிகு அமைச்சர் முனைவர் அண்ணன் பேராசிரியர் பொன்முடி அவர்களுக்கு எனது வணக்கமும், பாராட்டும் உரித்தாகுக. அவரது அயராத உழைப்பில் இத்துறை மேலும் பொலிவு பெற எனது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பள்ளிக் கல்வி. கல்வி என்பது ஒரு கருவி. வில், வேல், அம்பு, உளி, வாள் என்று எத்தனை வகை ஆயுதம் இருந்தாலும் அவற்றை வெல்கின்ற ஞானத்தையும், மன உறுதியையும், வெற்றியையும் தரக்கூடிய மிகச் சிறந்த ஆயுதம் கல்வியே ஆகும் என்பதை தமிழ் மொழி பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே எடுத்துரைத்தது.

"அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்"

என்றார் வள்ளுவர். அப்படிப்பட்ட கல்வி, ஒருசிலர் கைக்குள் சிக்கிக்கொண்டு, நம் மூதாதையருக்கு மறுக்கப்பட்ட காலத்தில், உண்மையான விடுதலை ஒருவருக்கு கல்வி வழியாகவே வரும் என்பதை உணர்ந்து, திராவிட இயக்கத்தின் முதல் ஆட்சியான, நீதிக் கட்சியின் ஆட்சியில் கல்வியின் கதவுகள் நமக்கு திறக்கப்பட்டு, சரியாக நூறாண்டுகள் நிறைவடைந்திருக்கின்றன. அடுத்த நூறு ஆண்டுகளுக்கு தமிழ்நாட்டின் முன்னேற்றம் எத்தனை உறுதியாக நிலைபெற வேண்டும் என்று திட்டமிட்டு, அதற்கேற்ப நம் முதலமைச்சர் அண்ணன் தளபதியார் அவர்கள் நடப்பு வரவு–செலவுத் திட்டத்தில் பள்ளிக் கல்விக்கு மிகுந்த முக்கியத்துவத்தை அளித்திருக்கின்றார்கள்.

200 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, "இல்லம் தேடிக் கல்வி" என்ற திட்டத்தை மாண்புமிகு அண்ணன் தளபதியாரின் அரசு செயல்படுத்தியிருப்பதை பார்க்கும்போது, திராவிட இயக்கத்தின் தந்தை என்ற போற்றுதலுக்குரிய சர் பிட்டி. தியாகராயர், சென்னை

[டாக்டர் இரா. இலட்சுமணன்] [2022 ஏப்ரல் 11 மாநகராட்சி மேயராக இருந்தபோது இலவச இரவுப் பள்ளிகள் நடத்த மாநகராட்சிப் பள்ளி ஆசிரியர்களுக்கு அனுமதியளித்தார் என்பதையும், அதன் காரணமாக பகல் பொழுதில் பள்ளியில் படிக்க இயலாதவர்கள் இரவு நேரங்களில் தங்கள் வீடுகளிலும், வெளியிலும் படிப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டது என்பதையும் நினைவுக்குக் கொண்டுவரும் சாலச்சிறந்த முயற்சிதான், இல்லம் தேடிக் கல்வி திட்டம்.

STEM–(Science, Technology, Engineering, Mathematics). அதாவது, அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கணிதம் ஆகியவற்றைப் பயின்ற, பயிலும் மாணாக்கர்களை ஈர்க்கவும், தக்கவைத்துக்கொள்ளவும் அவர்களுக்கு விரைவாக VISA வழங்கும் கொள்கை முடிவை அமெரிக்க அதிபர் Joe Biden அரசு எடுத்திருக்கின்றது. அமெரிக்கா போன்ற வல்லரசு நாட்டுக்கே STEM பட்டதாரிகள் தேவைப்படுகின்றார்கள்.

நம்முடைய முதலமைச்சர் மாண்புமிகு அண்ணன் தளபதியார் அரசு தாக்கல் செய்திருக்கும் வரவு–செலவுத் திட்டத்திலும் STEM இருக்கின்றது. ஆனால், நமது STEM–ல் ஒரு A–வும் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதாவது Arts சேர்க்கப்பட்டு, பொருளாதார வளர்ச்சிக்கு கலை படிப்புகளும் அவசியம் என்பது உணர்த்தப்பட்டிருக்கிறது.

கல்வியில் பின்தங்கியுள்ள 10 மாவட்டங்களில் உள்ளதைப்போல, மேலும் 15 மாவட்டங்களில் முன்மாதிரிப் பள்ளிகள்–Model Schools தொடங்கப்பட்டு அவர்கள் உயர் கல்வி நிலையங்களில் STEAM படிப்புகளில் சேர 125 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

'The Dravidian years' என்ற புத்தகத்தை எழுதிய முன்னாள் இந்திய ஆட்சிப் பணி அதிகாரி திரு. S. நாராயணன் அவர்கள், திராவிட இயக்கத்தின் கொள்கைகள் எப்படி சமூக சீர்திருத்த இயக்கமாக உருப்பெற்றன என்பதை தனது புத்தகத்தில் பெரிதும் வியந்தும், விவரித்தும் சொல்லுவார். 'Dravidian Model' என்றால் என்ன என்று புரிந்துகொள்ள இது பயன்படும் என்று அந்த முன்னாள் I.A.S. அதிகாரி கூறுகிறார். திராவிட கலாச்சாரம் என்பது சமூக சீர்திருத்த இயக்கத்திலிருந்து தொடங்குகிறது. சமூக சீர்திருத்தத்திற்காக தொடங்கப்பட்ட இயக்கம், சமூக நீதி

இயக்கமாகவும் தன்னை உருமாற்றிக்கொண்டு, தமிழ்ச் சமூகத்தின் பன்முகத் தன்மையை உணர்ந்து, முன்னேறிய சமூகங்களின் உறிஞ்சல்களிலிருந்து (Exploitation) மக்களை மீட்டது.

அரசியல், நிருவாகம், மக்கள் என்ற முத்தரப்பும் இணைந்து செயல்பட்டு, சிறப்பு வாய்ந்த சமூக சீர்திருத்தக் கொள்கையை நிலைநாட்டுவதென்பது 1967–க்குப் பிறகு தமிழ்நாட்டில் நிகழ்ந்தது. இத்தகைய புரட்சி தமிழ்நாட்டைத் தவிர இந்தியாவில் வேறு எங்கும் நிகழவில்லை என்று Oxford University Press வெளியிட்டுள்ள அந்தப் புத்தகத்தில் திராவிட மாடல் குறித்துப் பேசப்படுகிறது. பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும் தொடங்கி வைத்த அந்தப் புரட்சியை மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் தளபதியார் தொடர்கிறார் என்பதற்கு மற்றும் ஓர் எடுத்துக்காட்டுதான் 7,000 கோடி ரூபாய் செலவில் 18,000 வகுப்பறைகள் கட்டும் பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம். ஏழை, எளிய, கிராமப்புற அரசுப் பள்ளி மாணாக்கர்களுக்கு அற்புதமான கல்வி கிடைக்க இத்திட்டம் பயன்படப் போகிறது. இது மாபெரும் கல்விப் புரட்சிக்கு வித்திடும் என்றால் அது மிகையல்ல.

பிற்பகல் 12–55

பள்ளிக் கல்வித் துறைக்கு ரூ.36,895.89 கோடி ஒதுக்கப்பட்டுள்ள இந்த வரவு–செலவுத் திட்ட அறிக்கையை வரவேற்கிறேன். மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அருமை அண்ணன் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் நீண்ட திராவிட பாரம்பரியத்திலிருந்து வந்தவர். வரவு–செலவுத் திட்டத்தின் பெரும் தொகை அவருடைய துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றது. மிகச் சிறப்புடன் பணியாற்றி ஆட்சிக்கு பெருமை சேர்க்க அண்ணன் மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களுக்கு எனது வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசுப் பள்ளிகளில் பயின்று வரும் மாணாக்கர்களுக்கு மருத்துவக் படிப்புகளுக்கு மட்டுமல்லாமல், அனைத்துத் தொழிற்கல்விகளிலும் 7.5 விழுக்காடு இட ஒதுக்கீடும், உதவியும் வழங்கி, அதற்கு நீதிமன்றத்தின் ஒப்புதலையும் பெற்றிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் தளபதியார் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[டாக்டர் இரா. இலட்சுமணன்] [2022 ஏப்ரல் 11

கல்லூரிகளில் பயிலும் அரசுப் பள்ளி மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000/– வழங்குவது, அந்த மாணவிகளின் வாழ்வில் பெரும் மாற்றத்தைக் கொண்டு வரும் திட்டமாகும். இதனால், பயனடையப்போகும் இலட்சோபலட்சம் மாணவிகளின் சார்பில் என் நன்றியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒன்றிய அரசு கொண்டு வந்திருக்கிற CUET தேர்வை எதிர்த்து தனித் தீர்மானம் கொண்டு வந்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் தளபதியார் அவர்களுக்கு எனது நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இறுதியாக, விழுப்புரம் தொகுதியின் கல்வி தொடர்பான சில கோரிக்கைகளை முன்வைக்கின்றேன்.

அரசமங்கலம் கிராமத்திலுள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்திட வேண்டும்.

அதுபோலவே, திருப்பாச்சனூர் மற்றும் மேல்பாதி கிராமங்களில் செயல்படும் அரசு நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்திட வேண்டும்.

கோலியனூரில் இருபாலர் பயிலும் அரசு மேல்நிலைப் பள்ளி இயங்கி வருகிறது. அதனை, ஆண்கள் பள்ளி, பெண்கள் பள்ளி என்று இரண்டு பள்ளிகளாக்க வேண்டுகிறேன். இந்தக் கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள் அவர்கள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கம். இந்த மாபெரும் சபைக்கு என்னை அனுப்பி வைத்து, பேசுவதற்கு வாய்ப்பு அளித்திருக்கிற தமிழ்நாட்டினுடைய மூத்த தலைவர் தமிழினப் போராளி மருத்துவர் அய்யா அவர்களுக்கும், எங்களை வழிநடத்திக் கொண்டிருக்கிற அண்ணன் திரு. அன்புமணி ராமதாஸ் அவர்களுக்கும், பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர், தியாகச் செம்மல் அண்ணன் திரு. ஜி.கே. மணி

அவர்களுக்கும், தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் மாண்புமிகு அண்ணன் அவர்களுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் மாண்புமிகு அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களுக்கும், அவையிலே இருக்கிற எங்கள் மாவட்டத்தை வழிநடத்துகின்ற மூத்த அமைச்சர் அண்ணன் மாண்புமிகு திரு. கே.என். நேரு அவர்கள் உள்ளிட்ட அனைத்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த வணக்கத்தை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். என்னை பாலூட்டாமல் வளர்த்த பாட்டி அம்மணியம்மாள் அவர்களை இந்த நேரத்தில் நினைத்துப் பார்த்து, எனது நெஞ்சார்ந்த நன்றியை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று உயர் கல்வித் துறை மற்றும் பள்ளிக் கல்வித் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள்மீதான விவாதத்தில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் மருத்துவர் அய்யா அவர்கள், கல்வி முறையிலே கட்டாயக் கல்வி, கட்டணமில்லா கல்வி, தரமான கல்வி, சுகமான கல்வி, சுமையில்லா கல்வி, விளையாட்டுடன்கூடிய கல்வி வேண்டும் என்று 40 ஆண்டு காலமாகத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். அதேபோன்று, பள்ளி முறையிலே பொதுப் பள்ளி முறை–Common school system, அருகமைப் பள்ளி முறை–Neighbourhood school system வேண்டுமென்றும் 40 ஆண்டுகளாக வலியுறுத்தி வந்து கொண்டிருக்கிறார்கள் எங்களுடைய மருத்துவர் அய்யா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நேரத்திலே தமிழ்நாடு அரசை நெஞ்சார பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாடு அரசின் சார்பிலே மாநில கல்விக் கொள்கையை உருவாக்குவதற்காக டெல்லி உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதியரசர் மாண்பமை திரு. முருகேசன் அவர்களுடைய தலைமையில் குழு அமைத்திருப்பதை வரவேற்கிறோம். தமிழகத்தில் பள்ளிகளின் கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக, பேராசிரியர் அன்பழகன் அவர்களுடைய பெயராலே, பேராசிரியர் அன்பழகன் பள்ளி

[திரு. இரா. அருள்] [2022 ஏப்ரல் 11

மேம்பாட்டுத் திட்டத்தை ஆரம்பித்து, 7,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ததற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் டெல்லி சென்றிருந்தபோது, அங்கிருந்த பள்ளிகளையெல்லாம் பார்த்து, அதேபோன்ற மாதிரிப் பள்ளிகளை தமிழ்நாட்டில் நிறைய உருவாக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, முதல் மாதிரிப் பள்ளியை எங்கள் சேலம் மாவட்டத்தில், சேலம் (மேற்கு) தொகுதியில் உருவாக்க வேண்டும் என்ற வேண்டுகோளை இந்த அவையின் வாயிலாக, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் அன்போடு வைக்கின்றேன்.

பிற்பகல் 1–00

கடந்த சட்ட மன்றக் கூட்டத்தொடரில், இந்த அவையிலே சேலத்தில் வெள்ளித் தொழிற்பூங்கா அமைக்க வேண்டுமென்று எனது முதலாவது கன்னிப் பேச்சிலே கேட்டிருந்தேன். சேலத்திற்கு வருகைதந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தாயுள்ளத்தோடு சேலம் மேற்கு தொகுதிக்கு ரூ.25 கோடியில் வெள்ளி பன்மாடித் தொழிலகம் திட்டத்தைத் தந்திருக்கிறார். அவருக்கு சேலம் மாவட்ட பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலும், சேலம் மாவட்ட மக்களின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்திலுள்ள அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களால் உயர் கல்வி மற்றும் போட்டித் தேர்வுகளில் அதிக வெற்றி பெற்று மேல்படிப்புக்குச் செல்ல முடியவில்லை. அதற்கு அரசுப் பள்ளிகளிலுள்ள கல்வித் தரமே காரணம் என்று உயர் நீதிமன்றமும் சுட்டிக்காட்டியிருக்கிறது. தமிழ்நாட்டிலுள்ள அரசுப் பள்ளிகளின் தரத்தை மேம்படுத்தி, தனியார் பள்ளிகளுக்கு இணையாக மாற்றித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்திய அரசாங்கத்தால் நடத்தப்படுகிற கேந்திரிய வித்யாலயா பள்ளியைப் பொறுத்தவரையில், அங்கு ஒரு மாணவனுக்கு, ஒரு வருடத்திற்கு ரூ.30,800/– செலவாகிறது. ஆனால், தமிழ்நாடு அரசாங்கத்தால் நடத்தப்படுகிற பள்ளிகளில், ஒரு மாணவனுக்கு ஆகும் செலவு ரூ.34,100/– ஆனால், கேந்திரிய வித்யாலயா பள்ளிக்கு, ஒவ்வொரு வருடமும் 100 இடங்களுக்கு 500 பேர், 1,000 பேர் என

application போடுகிறார்கள். ஆனால், தமிழ்நாட்டில் இருக்கிற பள்ளிகளில் பல இடங்கள் காலியாக இருக்கின்றன. எனவே, தமிழ்நாடு அரசாங்கம் முறையாக ஆய்வு நடத்தி, கல்வியின் தரத்தை மேம்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிகளில் பயிலும் மாணவர்களும், மாணவிகளும் இன்றைக்கு நடக்கிற—அண்ணன் திரு. ஈஸ்வரன் அவர்கள்கூட ஒரு செய்தியைச் சொல்ல வந்தார். ** ஒரு குழந்தையினுடைய தந்தையாக, நான் அதை நினைத்துப் பார்க்கும்போது, என் கண்களில் கண்ணீர் முட்டிக்கொண்டு வருகிறது. இன்றைக்கு என்ன காரணத்தினாலோ தெரியவில்லை, மாணவர்களுடைய மனநிலை மாறிவிட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், மாணவிகள் குறித்துப் பேசிய பேச்சு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. இரா. அருள்: என்ன காரணம் என்று தெரியவில்லை. நுழைவுத் தேர்வு, நீட் தேர்வு, இப்போது புதிதாக வந்திருக்கும் தேர்வு, இவையெல்லாம் மாணவர்களுடைய மனதை மாற்றுகிறது. எங்கள் சேலம் மாவட்டம், மஞ்சினியில் **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், வேறு subject–க்குச் செல்லுங்கள். மாணவன் குறித்து உறுப்பினர் பேசிய பேச்சும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. இரா. அருள்: அதையும் நீக்கிவிடுங்கள். நான் இந்த மாமன்றத்திற்குப் புதியவன்தான். நீங்கள் எதை வேண்டுமானாலும் நீக்கிவிடுங்கள். இந்த அவைக்கு சம்பந்தமில்லாததை நீக்கிவிடுங்கள். ஏனென்றால், அவை விதிகள் குறித்து எனக்குத் தெரியாது அல்லவா!

மதுவின் தீமைகள் குறித்து நீதிபோதனை வகுப்புகள், யோகா வகுப்புகள் நடத்தி மாணவர்களை நல்வழிப்படுத்த வேண்டும். 'அடியாத பிள்ளை படியாது' என்று கிராமத்தில் சொல்வார்கள். இங்கு இருக்கிற நாம் எல்லோரும் பள்ளியில் படிக்கும்போது, வாத்தியாரிடம் திட்டு வாங்காத, அடி வாங்காத மாணவர் யாராவது இருக்க முடியுமா? ஆனால், இன்றைக்கு மாணவர்களைப்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. இரா. அருள்] [2022 ஏப்ரல் 11

பொறுத்தவரையில், 'வே' என்று சொன்னாலே, அதன்பிறகு நிலைமை சரியில்லாமல் போய்விடுகிறது. அதனால் மாணவர்கள் யாரையும் ஆசிரியர்கள் மிரட்டமாட்டேன் என்கிறார்கள். மாணவர்களும் சரியாக படிக்கமாட்டேன் என்கிறார்கள். எனவே, ஆசிரியர்களுடைய கைகளை கட்டவிழ்த்து விடுங்கள். அதற்கென்று, சர்வாதிகாரப் போக்குக்கு அதிகாரம் கொடுக்க வேண்டாம். குறைந்தபட்ச சுதந்திரத்தைக் கொடுத்து, அந்த மாணவர்களை ஒழுக்கமான முறையில் நல்வழிப்படுத்துவதற்கு. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு, மாணவர்களை ஆசிரியர்கள் அடிக்கக் கூடாது என்பதுதான் அரசாங்கத்தின் உத்தரவு. எனவே, அந்த subject–ஐ விட்டு வேறு subject–க்குச் செல்லுங்கள்.

திரு. இரா. அருள்: நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். கல்விச் சாலையில் இருக்கும் மாணவர்கள் சிறைச்சாலை செல்லக் கூடாது. அதுதான் என்னுடைய எண்ணம். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்கூட நேற்று முன்தினம் ஒரு திரைப்பட விழாவில், திரைப்படங்களிலே குட்கா, கஞ்சா போன்ற பொருட்களின் தீமைகள் குறித்த விழிப்புணர்வு விளம்பரங்களைச் செய்ய வேண்டுமென்று அழகாகச் சொல்லியிருக்கிறார்.

ஆசிரியர்களுக்கு ஆண்டுதோறும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்க வேண்டும். அரசுப் பள்ளிகளில் படிக்கிற மாணவர்கள் NEET, JEE போன்ற போட்டித் தேர்வுகளில் பங்கேற்பதற்காக 9, 10, 11–வது வகுப்புகளில் பயிலும்போதே, அவர்களுக்கு அந்தப் போட்டித் தேர்வுகளுக்கான பாடத் திட்டங்களை வகுத்திட வேண்டும்.

பெற்றோர்–ஆசிரியர் கழகம் என்ற ஒன்று இருக்கிறது. அந்தப் பெற்றோர்–ஆசிரியர் கழகத்திற்கு சம்பந்தமில்லாதவர்களையெல்லாம் அந்தக் கழகத்திற்குத் தலைவராகவும், உறுப்பினராகவும் போடுகிறார்கள். அந்தப் பள்ளிகளிலே படிக்கிற மாணவர்களுடைய அப்பா, அம்மாவை, உறுப்பினராகவோ தலைவராகவோ போட்டால் இன்னும் விழிப்போடு பார்ப்பார்கள். தமிழ்நாட்டில் இருக்கிற 54 பள்ளிகளில் தமிழ் இல்லை என்கிற செய்தி பேரதிர்ச்சியாக இருக்கிறது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய அன்பிற்குரிய மகன் அவர்களாலே நடத்தப்படுகிற,

தமிழுக்கு முக்கியத்துவம் கொடுக்கிற இந்த ஆட்சியிலே அனைத்து கல்வி நிறுவனங்களும் தமிழுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

தமிழகத்தின் வட மாவட்டங்களில் கல்வித்தரம் மிகவும் குறைவாக இருக்கிறது. 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு மதிப்பெண் பட்டியலில் பார்த்தால், கடைசி 10 இடங்களில், திருவண்ணாமலை, கடலூர், ராணிப்பேட்டை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், வேலூர், திருப்பத்தூர் மாவட்டங்கள் இருக்கின்றன. இதற்கு என்ன காரணமென்றால், ஆசிரியர்கள் மிகவும் பற்றாக்குறையாக இருப்பதுதான். இதற்கு ஓர் உதாரணம் சொல்ல வேண்டுமென்றால் எங்களுடைய தலைவர், அண்ணன் திரு. ஜி.கே. மணி அவர்களுடைய தொகுதியான பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் வட்டாரத்தில் மட்டும் 196 ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன.

பிற்பகல் 1–05

சேலம் மேற்குத் தொகுதி மற்றும் நிறைய இடங்களில் ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. ஆசிரியர் தகுதித் தேர்வுக்காக இப்போது online–ல் விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு மேலும் இரண்டு வாரங்கள் அவகாசம் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

அண்ணா பல்கலைக்கழகத்தில் 400 பேரை outsourcing முறையிலே இப்போது வேலைக்கு பணியமர்த்தியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும்போது outsourcing முறையில் பணியமர்த்தக் கூடாது என்று சொன்னார்கள். அதனடிப்படையிலே செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் ஒப்பந்த, தற்காலிக, பகுதிநேரப் பணியாளர்களுக்கு உரிய பணி நிரந்தரம் வழங்க வேண்டும். கல்லூரிகளில் படிக்கும்போது UPSC, TNPSC நடத்துகின்ற போட்டித் தேர்வுகளை எதிர்கொள்கின்ற அளவிற்கு மாணவர்களுக்கு கல்லூரிகளிலே பாடத் திட்டங்களை வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளி, கல்லூரிகளில் CM Trophy என்று சொல்லி ஆண்டாண்டு காலமாக விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. இரண்டு ஆண்டுகளாக கொரோனாவினால்

[திரு. இரா. அருள்] [2022 ஏப்ரல் 11

அந்த CM Trophy விளையாட்டுப் போட்டி நடத்தப்படுவதில்லை. அதை நடத்த வேண்டும். Sports quota–ல் காலியாக இருக்கின்ற பணியிடங்களுக்கு பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

அதேபோன்று, பள்ளி, கல்லூரிகளில், தனியார் துறைகள் எல்லாவற்றிலும் யோகா ஆசிரியர்களை நியமனம் செய்ய வேண்டும். ஏனென்றால், இன்றைக்கு எல்லா இடங்களிலும் stress. அதைப் போக்குவதற்காக யோகா ஆசிரியர்களை நியமனம் செய்ய வேண்டும். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய 2007 ஆம் ஆண்டைய ஆட்சியில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு ஆண், ஒரு பெண் பயிற்றுநர்களை நியமித்தார்கள். அதற்கு வெறும் ரூ.2,000/– சம்பளம் கொடுத்தார்கள். இன்னும் அந்த ரூ.2,000/– சம்பளத்திலேயே இருந்துகொண்டிருக்கிறார்கள். குறைந்தபட்சம் ரூ.10,000/–ஐத் தாண்டி சம்பளம் கொடுக்கின்ற அளவிற்கு அவர்களுக்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக சேலம் மேற்கு தொகுதியில் இருக்கின்ற தந்தை பெரியார் பல்கலைக்கழகம். அறிவுலகின் மாமேதை, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் பெயரிலே அவருடைய முதன்மை மாணவனாக இருந்த முன்னாள் முதலமைச்சர் அன்புக்குரிய அண்ணன் மாண்புமிகு கலைஞர் அவர்களால் அந்தப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. அந்தப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றுவரும் சம்பவங்களையெல்லாம் பார்த்தால் கண்ணீர் விட்டு அழ வேண்டும்போல் இருக்கும். பெரியார் பல்கலைக்கழகத்தில் 200 புள்ளிகள் இட ஒதுக்கீட்டிலே சமூக நீதி மீறப்பட்டு முறைகேடான பணி நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. பல்வேறு துறைகளில் கோடிக்கணக்கில் முறைகேடுகள் நடைபெற்றதாக நாளிதழ்களில் செய்தி வந்தது. அந்த அடிப்படையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பார்த்து சில பேர் மனுக்களைக் கொடுத்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், ஐ.ஏ.எஸ்., அதிகாரியின் தலைமையிலே ஒரு குழுவை அமைத்தார். அந்தக் குழு ஒரு நாள் வந்தது. அதன் விசாரணை முடிவு என்னவென்று இன்று வரை தெரியவில்லை. ஒரே நேரத்தில் ஒரு மனிதர், முழுநேர Ph.D. படிக்கிறார், அறநிலையத் துறையில் ஓதுவாராக இருக்கிறார், தனியார் கல்லூரியிலே முழுநேர பேராசிரியராக இருக்கிறார். இப்படி மூன்று போலிச் சான்றிதழ் தயாரித்து 2004 ஆம்

ஆண்டில் Reader ஆக சேர்கிறார். இன்றைக்கு அவர் தமிழ்த் துறையினுடைய தலைவராக இருக்கிறார். அங்கு சமூக நீதிக்கு எதிரான நிலைப்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அங்கு பதிவாளர் நியமனம் செய்யப்படவில்லை. பதிவாளர் நியமனம் செய்யப்படாமல் ஒருவர் நான்கு ஆண்டுகள் பொறுப்பு பதிவாளராக இருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர், சேலம் பல்கலைக்கழகத்தில் Senate Member ஆக இருக்கக்கூடியவர். நான்கு ஆண்டுகளாக அங்கே இருக்கின்ற Registrar தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இப்போது நிரந்தரமாக Registrar, Controller of Examinations போன்றவர்களையெல்லாம் நியமிப்பதற்காக கல்லூரிக் கல்வி இயக்குநர் தலைமையிலே Selection Committee ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. வெகு விரைவில் அவர்கள் நியமிக்கப்படுவார்கள். அதுவும் அங்கேயிருக்கின்ற குற்றச்சாட்டுகளையெல்லாம் நீங்கள் சொன்னீர்கள். அந்தக் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் நீதியரசர் திரு. நல்லதம்பி அவர்களால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, குறிப்பாக நான்கு பணியாளர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். ஆகவே, அதுபோன்ற சமூக நீதிக்கான எல்லா பண்பாடுகளும் பெரியாருடைய நினைவுக்கேற்ப நிச்சயமாக அந்தப் பல்கலைக்கழகத்திலே நடைபெறும் என்பதை நம்முடைய Senate உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். வேறு குறைகள் இருந்தால், நீங்கள் நேரடியாகச் சொன்னால் அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். நாங்கள் வந்து 9 மாதங்களில் இதையெல்லாம் செய்திருக்கிறோம். ஆகவே, மேலும் இவையெல்லாம் தொடரும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள் அவர்கள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் நடவடிக்கைகளுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத்

[திரு. இரா. அருள்] [2022 ஏப்ரல் 11

தெரிவித்துக்கொள்கிறேன். Senate Member என்று சொன்னார்கள். இப்போதுதான் ஞாபகம் வருகிறது. நானும், தளி சட்டமன்ற உறுப்பினர் திரு. இராமச்சந்திரன், இரண்டு பேரும் அதில் Senate உறுப்பினர்கள். 6 மாதத்திற்கு முன்பு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே பல்கலைக்கழகத்திற்கு பட்டமளிப்பு விழாவிற்கு வந்தார்கள். நானும், அண்ணன் திரு. இராமச்சந்திரன் அவர்களும், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. சதாசிவம் அவர்களும் அங்கு சென்றிருந்தோம். அப்படி சென்றிருந்தபோது தளி சட்டமன்ற உறுப்பினர் திரு. இராமச்சந்திரன் அவர்களின் **

பிற்பகல் 1–10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், குற்றச்சாட்டுகள் சொல்ல வேண்டாம். நீங்கள், பொதுவான கருத்துகளைப் பற்றி பேசுங்கள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Senate Member பதவி என்பது, மாண்பிற்குரிய சட்டமன்றப் பேரவையால் தேர்ந்தெடுக்கப்படுகிறது. நீங்கள்தான் தேர்ந்தெடுத்து அனுப்புகிறீர்கள். நாங்கள் ஒன்றும் தேர்தலில் போட்டியிடவில்லை. மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள், அந்தப் பதவிக்கான போட்டியை அவையில் அறிவிக்கின்றார்கள். அதில், நானும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அண்ணன் அவர்களும் nomination கொடுக்கின்றோம். நீங்கள்தான் எங்களைத் தேர்வு செய்தீர்கள். (குறுக்கீடு) அந்தச் செயல், இந்தச் சட்டமன்றத்தையே அவமதிப்பதாகத்தானே அர்த்தம்! அதை, நாங்கள் இங்குதான் சொல்லியாக வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு) இந்த ஒன்றை மட்டும் நான் சொல்லி முடித்துவிடுகிறேன். ஆட்சிக் குழு பொருள் நிரவல் சட்டத்திற்குப் புறம்பான செயலைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2022 ஏப்ரல் 11]

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த Convocation விழாவை யார் நடத்துகிறார்கள் என்பது உங்களுக்கே தெரியும். அப்போதே நீங்கள் என்னிடத்தில் சொன்னீர்கள். அவர்களை அழைத்து, உங்கள் எதிரிலேயே கண்டித்தோம். மேதகு ஆளுநர் அவர்கள்தான் பல்கலைக்கழகத்தினுடைய வேந்தர். அந்த அடிப்படையில்தான் Convocation விழா நடைபெறுகிறது. இன்றைக்கு, அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளெல்லாம் எப்படி நடைபெறுகின்றன என்பது உங்களுக்கும் தெரியும். அவர்களுடைய அறிவுறுத்தலின்படி, Convocation நிகழ்ச்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதற்காகத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நம் மாநிலத்திற்கு எல்லா உரிமைகளும் வேண்டும் என்கிறார். மாநில உரிமைகளில், ஆளுநர் அவர்கள் நிறைய தலையிடக் கூடாது என்பதையும் நாங்கள் சொல்லியிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள் அவர்கள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியாருடைய சீடர் கலைஞர் அவர்கள். கலைஞருடைய சீடர் மாண்புமிகு முனைவர் பொன்முடி அவர்கள்; கட்டாயம் எங்களுடைய சமூக நீதியைக் காப்பார்கள். மாண்புமிகு உறுப்பினர்களுடைய உரிமையைக் காப்பார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

அதேமாதிரி, ஓர் உதவிப் பேராசிரியர் அங்கு வந்து ஒரு மனு கொடுக்கின்றார். அந்த மனு கொடுக்கின்ற உதவிப் பேராசிரியரை suspend செய்கிறார்கள். Suspend செய்த உதவிப் பேராசிரியர், Court–ல் வழக்கு போட்டு, bail வாங்குகிறார். அவருடைய suspension–க்காக நீதி கேட்டுச் செல்கிறார். உடனே, அவர்மீது பாலியல் குற்றச்சாட்டு சுமத்தி, வழக்குப் பதிவு செய்கிறார்கள் என்பதை நான் இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேச ஆரம்பித்து 13 நிமிடங்கள் ஆகிவிட்டன. நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

[2022 ஏப்ரல் 11

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும், இரண்டு, மூன்று நிமிடங்களில் உரையை முடித்துவிடுகிறேன். பெரியார் பல்கலைக்கழகம் பற்றி மாண்புமிகு மருத்துவர் ஐயா அவர்களும், அண்ணன் திரு. அன்புமணி இராமதாஸ் அவர்களும் தொடர்ந்து சொல்லிக்கொண்டு வருகிறார்கள். மேற்கண்ட அனைத்து குற்றச்சாட்டுகளையும் உடனடியாக விசாரித்து, தமிழக அரசு விசாரணை ஆணையம் அமைக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

7.5 சதவிகித இட ஒதுக்கீடு. கடந்த ஆட்சியில் மருத்துவப் படிப்புகளுக்கு மட்டும் கொடுத்தார்கள். இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய ஆட்சியில் மருத்துவப் படிப்புகளுக்கு மட்டுமல்லாமல், பொறியியல் படிப்புகளுக்கும் கொடுத்ததனால், தனியார் பள்ளிகளிலிருந்து நிறைய மாணவர்கள் அரசாங்கப் பள்ளிகளுக்கு வருகின்றார்கள். இப்போது, பழுதடைந்த பழைய கட்டடங்களை எல்லாம் இடிக்க வேண்டுமென்று ஒரு முடிவெடுத்ததற்குப் பின்னர், நிறைய இடங்களில் கட்டடங்களை இடித்துவிட்டார்கள். இடித்துவிட்ட பின்னர், அந்த மாணவர்கள் மரத்தடியில் அமர்ந்து படிக்கக்கூடிய ஒரு நிலை இருக்கின்றது. என்ன காரணம் என்றால், இன்றைக்கு நிறைய மாணவர்கள், அரசுப் பள்ளிகளை நோக்கி வருகின்றார்கள். அங்கு கழிவறை வசதிகள் இல்லை, இரவுநேரக் காவலர் இல்லை. ஆகவே, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் அடிப்படை வசதிகளையெல்லாம் மாதந்தோறும் ஆய்வு செய்வதற்காக, அந்தந்த தொகுதியினுடைய எம்.எல்.ஏ. அவர்களின் தலைமையில் குழுக்கள் அமைத்து, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அறிக்கை பெற்றால், இங்கு இருக்கின்ற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் பணியாற்றுவதற்கு நன்றாக இருக்கும் என்பதை உங்களிடத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

என்னுடைய முத்துநாயக்கன்பட்டி ஊராட்சி, பாலகுட்டப்பட்டியில் உள்ள பள்ளியில் 650, 700 மாணவர்கள் படிக்கின்றார்கள். அங்கு மாணவர்கள் படிப்பதற்குப் போதுமான இட வசதிகள் இல்லை. ஊராட்சி மன்றத்தின் சார்பாக இடத்தை நாங்கள் தேர்வு செய்து கொடுத்திருக்கிறோம். அந்தப் பள்ளியை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முத்துநாயக்கன்பட்டி ஊராட்சி, புதூர்காடம்பட்டியில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த

வேண்டும். கருக்கல்வாடியில் இருக்கின்ற அரசு நடுநிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வேண்டும்.

மல்லமூப்பம்பட்டி ஊராட்சி, சித்தனூரில் இருக்கின்ற பள்ளி கட்டப்பட்டு 40 ஆண்டுக்காலம் ஆகிவிட்டது. அதை இடித்துவிட்டு, புதிய கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் ஐந்து ரோடு என்பது ஆயிரக்கணக்கான மக்கள் வந்து செல்கின்ற இடமாகும். அங்கு பொது கழிப்பறை வசதிகள் இல்லை. மாநகராட்சிக்கு சொந்தமான இடம் இருக்கின்றது. அந்த இடத்தில், பொது கழிப்பறை கட்டித் தர வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். சேலம், சிவதாபுரம் குடுமியான் தெருவில். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உங்கள் தொகுதி சம்பந்தமான கோரிக்கைகளைக் கொடுத்துவிடுங்கள். நீங்கள், அவையில் படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளப்படும். (குறுக்கீடு) நேரம் ஆகிவிட்டது. நீங்கள் பேச ஆரம்பித்து 15 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இஸ்மாயில்கான் ஏரியைத் தூர்வார வேண்டும். என்னுடைய தொகுதி சம்பந்தமான கோரிக்கைகளை தங்களிடம் கொடுத்துவிடுகிறேன். போடிநாயக்கன்பட்டி ஏரிப் பணியை, Smart City திட்டத்தின்கீழ் எடுத்து, பணியை விரைந்து முடிக்க வேண்டும். சேலம் ஜங்சன் இரயில் நிலையம் வரை சாலை அமைக்க வேண்டும். முத்துநாயக்கன்பட்டியில் பித்தளைப் பொருட்களுக்கு மிகப் பெரிய மார்க்கெட் இருக்கின்றது. அந்த பித்தளை சுவாமி சிலைகளுக்கு சிறப்பு அங்கீகாரம் பெற்றுத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–15

சேலம் மேற்கு தொகுதியில் நிறைய இடங்களுக்குப் பட்டா இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. நேரு அவர்கள் சேலம் வந்திருந்தபோது, அவரிடம் கேட்டோம். பட்டா கேட்டு பலமுறை மனு கொடுத்துவிட்டோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள். (குறுக்கீடு)

[2022 ஏப்ரல் 11

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். தொகுதியினுடைய பிரச்சினைகளை உங்களிடம் கொடுத்துவிடுகிறேன், அதை நீங்கள் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். Smart class room வேண்டும்; பல்கலைக்கழக துணைவேந்தரை நம்முடைய மாநில அரசாங்கமே நியமிக்கும் வகையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும்; அதேமாதிரி அனைத்து அரசுப் பள்ளிகளிலும் Biotechnology, Micro–biology போன்ற பாடத் திட்டங்களைக் கொண்டுவர வேண்டும். EMIS app பல பள்ளிகளில் ஒழுங்காக வேலை செய்வதில்லை. அது நல்ல பயனுள்ள app, அதனைச் செயல்படுத்த நடவடிக்கை வேண்டும்; தமிழகம் முழுவதும் இருக்கிற 12,000 பகுதிநேர ஆசிரியர்கள், ரூ.10,000/– தொகுப்பு ஊதியத்தில் இருக்கிறார்கள். அவர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும். தமிழ்நாடு முழுவதும் ரூ.20,000/–ல் பணியாற்றக்கூடிய கௌரவ விரிவுரையாளர்கள்–Guest Lecturers–ஐ UGC ஊதியத்தில் பணி நிரந்தரம் செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொகுதி குறித்த பல்வேறு கோரிக்கைகளை உங்களிடத்தில் நான் கொடுத்துவிடுகிறேன். ஒரு நிமிடம் கொடுத்தால், நான் உரையை முடித்துவிடுவேன். மன நலம் மற்றும் உடல் நலம் குன்றிய குழந்தைகளுக்காக மத்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட சிறப்பாசிரியர்கள் தமிழ்நாடு முழுவதும் 1,600 பேர் வேலை செய்து வருகிறார்கள். அவர்களுடைய பணிக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் உள்ளிட்ட தொகுதிக் கோரிக்கைகளை உங்களிடம் கொடுத்துவிடுகிறேன்.

நான் முதலிலே சொன்னேன், 'கேட்டதை கொடுப்பவரே, கிருஷ்ணா, கிருஷ்ணா' என்ற ஒரு பாட்டைப் பாடினோம். அதற்காக 25 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே வெள்ளிக்கான பன்மாடி தொழிலகம் கொடுத்தார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இருந்திருந்தால், எங்களுக்கு இன்னும் நிறைய கொடுத்திருப்பார். ஆகவே, என்னுடைய தொகுதி சார்ந்த கோரிக்கைகளையும் உங்களிடம் கொடுத்துவிடுகிறேன். மாண்புமிகு

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களும், எங்கள் மாவட்டத்தினுடைய பொறுப்பு அமைச்சர் மாண்புமிகு அண்ணன் திரு. கே.என். நேரு அவர்களும் சேலம் மேற்கு தொகுதியை தனியாக, கண் கொண்டு பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல பள்ளிக் கட்டடங்களை இடித்துவிட்டீர்கள்; Classrooms இல்லை; மிகவும் கஷ்டப்படுகிறோம். இவற்றையெல்லாம் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டு நன்றியோடு முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

ஜாகீர்அம்மாபாளையம், சின்ன அம்மாபாளையம், தென்அழகாபுரம், ரெட்டிப்பட்டி, மெய்யனூர்காட்டூர், சிவதாபுரம் பகுதிகளில் சாக்கடை, மழைநீர் வடிகால் வசதி செய்துதர வேண்டும். சேலம் மாநகராட்சியைச் சுற்றியுள்ள அனைத்து பகுதிகளுக்கும் மினி பஸ் வசதி ஏற்படுத்தித் தர வேண்டும். சாமிநாயக்கன்பட்டி, செல்லப்பிள்ளைக்குட்டை ஊராட்சிகளுக்கு சமுதாயக்கூடம் அமைத்துத் தர வேண்டும்.

சேலத்தில் ஜவுளிப் பூங்கா அமைக்கும் பணிகளை விரைவுபடுத்த வேண்டும். சேலம் புதிய பேருந்து நிலையத்தில் பயணியர் தங்கும் விடுதி அமைக்க வேண்டும். போக்குவரத்துக் கழக ஓட்டுநர், நடத்துநர்களுக்கு கழிப்பறை வசதியுடன் ஓய்வறை அமைத்துத் தர வேண்டும்.

சேலத்தாம்பட்டி ஏரி நீர் வெளியேற நிரந்தரத் தீர்வு காண வேண்டும். நீர்வழித்தடத்தில் நீண்ட நாட்களாகக் குடியிருந்துவரும் மக்களுக்கு மாற்று இடம் தர வேண்டும். மாங்குப்பை ஏரிக்கு 20 ஆண்டுகளாக தண்ணீர் வருவதில்லை. ஏரிக்கு நீர் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ரெட்டிப்பட்டி, அழகாபுரம் பெரியபுதூர், சிவதாபுரம் பகுதிகளில் தற்போது மூடப்பட்டிருக்கும் ஆரம்ப சுகாதார நிலையத்தை மீண்டும் செயல்படுத்தவும், கோட்ட கவுண்டம்பட்டி, முத்துநாயக்கன்பட்டி பகுதிகளில் கிராமப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கவும் வேண்டும்.

பள்ளப்பட்டி காவல் நிலையத்திற்கு தனி காவல் நிலைய கட்டடம் கட்டித் தர வேண்டும், பள்ளப்பட்டிக்கு தனியாக கிராம

[திரு. இரா. அருள்] [2022 ஏப்ரல் 11

நிர்வாக அலுவலர் அலுவலகம் கட்டிக் கொடுக்க வேண்டும். சேலம் மாநகராட்சி குப்பை கொட்டும் இடத்திலிருந்து வெளியாகும் நச்சுப் புகையால் செட்டிச்சாவடி மக்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்க நடவடிக்கை வேண்டும்.

சூரமங்கலம், சர்க்கார் கொல்லப்பட்டி பகுதிகளில் இ–சேவை மையங்கள் அமைக்க வேண்டும். அனைத்து MLA அலுவலகங்களில் இ–சேவை மையம் அமைத்துக் கொடுக்க வேண்டும். சேலம் 5 ரோட்டில் ரிலையன்ஸ் மால் நிறுவனம் அருகில் பொதுக் கழிப்பிடம் கட்டிக் கொடுக்க வேண்டும்.

குடுமியான் தெருவில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு வகுப்பறைக் கட்டடம், கழிப்பறை வசதி ஏற்படுத்தித் தர வேண்டும். பனமரத்துப்பட்டி ஏரியை தூர் வாரி, ஆழப்படுத்தி சேலம் மக்களுக்குக் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேட்டூர் அணையில் மழைக்காலங்களில் வீணாகும் உபரிநீரை சேலத்தில் உள்ள அனைத்து ஏரிகளிலும் நிரப்பிட நடவடிக்கை வேண்டும்.

கோட்டகவுண்டம்பட்டியில் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளுக்கு என்று தனியாக மயான வசதி ஏற்படுத்தித் தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.

***திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2022–2023 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீதான விவாதத்தில், உயர் கல்வித் துறை, பள்ளிக் கல்வித் துறை குறித்து பேசுவதற்கான வாய்ப்பைப் பெற்றமைக்காக மகிழ்ச்சியடைகிறேன். அதற்காக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுடைய தலைவர் எழுச்சித் தமிழர் திரு. தொல். திருமாவளவன் அவர்கள் ஒருமுறை சொன்னார், 'என்னைவிட கல்வியில் ஒருவன் உயர்ந்தவன் இருக்கலாம்; என்னைவிட ஆற்றலால் ஒருவன் உயர்ந்தவன் இருக்கலாம்; என்னைவிட பதவியில் ஒருவன் உயர்ந்தவன் இருக்கலாம்; ஆனால், என்னைவிட, பிறப்பால் ஒருவன் உயர்ந்தவன் இல்லை என்கிற தெளிவை நான் பெற்றிருக்கிறேன். அந்தத் துணிவைப் பெற்றிருக்கிறேன். அந்தத்

2022 ஏப்ரல் 11] [திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்]

தெளிவையும், அந்தத் துணிவையும் எனக்குத் தந்தது, நான் பெற்ற கல்வி' என்று எங்களுடைய தலைவர் சொன்னார். அப்படிப்பட்ட ஒரு சிறப்புக்குரிய கல்வித் துறையில் இன்றைக்கு நம்முடைய அரசு பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை செய்து கொண்டிருக்கிறது.

இந்த அவையில் கல்வி தொடர்பாக பல்வேறு கோரிக்கைகளை எங்களுடைய கட்சியின் சார்பில் நாங்கள் முன்வைத்திருக்கிறோம். எங்களுடைய சட்டமன்றக் குழுத் தலைவர் அண்ணன் திரு. சிந்தனைசெல்வன் அவர்கள் புதிய கல்விக் கொள்கை வகுக்கப்பட வேண்டும்; நம்முடைய மாநிலத்திற்கென்று ஒரு கல்விக் கொள்கை வகுக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை விடுத்தார். அந்தக் கோரிக்கை இன்றைக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதேபோல, நான் என்னுடைய அறிமுக உரையில் பேசும்போது, துணைவேந்தர் நியமனங்களில் நம்முடைய மாநில அரசினுடைய அதிகாரம் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென்று சொல்லியிருந்தேன். அதற்கு இந்த அரசு இந்தக் கூட்டத் தொடரிலேயே தீர்மானமான ஒரு முடிவை எடுக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் தளபதியார் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, முதலமைச்சர்போல் செயல்பட்டார்; முதலமைச்சராக ஆன பிறகு, பிரதமரைப்போல் செயல்படுகிறார் என்று சமூக வலைதளங்களில் இளைஞர்கள் எழுதுகிறார்கள் என்று நான் ஏற்கெனவே இந்த மன்றத்தில் குறிப்பிட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) அது கொஞ்சம்கூட மிகையான கூற்றல்ல; அது முழுக்க, முழுக்க உண்மை என்பதை இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய செயல்பாடுகள் நிரூபித்துக்கொண்டிருக்கின்றன. உக்ரைனில் தவித்த மாணவர்களை மீட்டதில், அவர் ஒரு பிரதமர்போல் செயல்பட்டார்; அதேபோல, துபாய்க்குச் சென்று முதலீடுகளை ஈர்த்ததில், அவர் ஒரு பிரதமராகவே வெளிப்பட்டார். அங்கே அவரைப் பார்த்த நம்முடைய மக்கள், கையைப் பிடித்து, அடுத்த முறை உங்களைப் பிரதமராகப் பார்க்க வேண்டுமென்று சொன்னபோது, அவர் பிரதமராகவே உயர்ந்துவிட்டார். அந்த அளவிற்கு இன்றைக்கு அவருடைய செயல்பாடுகள் முழுக்க முழுக்க சமூக நீதி சார்ந்ததாக, ஒட்டுமொத்த இந்தியாவும் தமிழ்நாட்டை திரும்பி பார்க்கச் செய்வதாக அமைந்திருக்கிறது. இதை நாங்கள் சொன்னால் ஏதோ கூட்டணியில் இருக்கிறோம்

[திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்] [2022 ஏப்ரல் 11

அப்படித்தான் பேசுவோம் என்று சுருக்கிப் பார்க்கக்கூடும். ஆனால், இன்றைக்கு அகில இந்திய அளவில் தலைவர்கள் அதை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கேரளாவிற்குச் சென்றபோது அங்கே மாண்புமிகு கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய திட்டங்களை நான் வழிமொழிகிறேன் என்று சொல்கிறார்.

பிற்பகல் 1–20

இங்கே சிலர் சொன்னார்கள். திராவிட மாடல் என்றால் அது கும்மிடிப்பூண்டியை தாண்டாத மாடல். பெரியார் மண் என்றால் அது பெரியார் திடலில் ஒரு இரண்டு கிரவுண்ட் இருக்கிறது என்று ஏளனம் பேசியவர்கள் உண்டு. ஆனால், இன்றைக்கு திராவிட மாடல் என்பதை, தமிழ்நாட்டு மாடல் என்பதை நாங்கள் பின்பற்றுவோம் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய அகில இந்திய தலைவர் சொல்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) ராகுல் காந்தி அவர்கள் சொல்கிறார், தேஜஸ்வி யாதவ் அவர்கள் சொல்கிறார், முலாயம்சிங் யாதவ் அவர்களுடைய மகன் அகிலேஷ் யாதவ் அவர்கள் சொல்கிறார்; அகில இந்திய தலைவர்கள் இன்றைக்கு இந்த மாடல் சரியானது என்று வழிமொழிந்து கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நம்முடைய இந்த அரசு மிகப் பெரிய சீர்திருத்தத் திட்டங்களைச் செய்து கொண்டிருக்கிறது.

குறிப்பாக ஒன்றைச் சொல்லவேண்டும், இந்த மதிய உணவுத் திட்டம். அது சர்.பிட்டி. தியாகராயர் அவர்கள் சென்னை மேயராக இருந்தபோது 1921–ல் கொண்டுவரப்பட்ட ஒரு திட்டம். அதற்குப் பிறகு, பெருந்தலைவர் காமராசர் அவர்கள் அதை மதிய உணவுத் திட்டம் என்கிற மிகப் பெரிய திட்டமாக விரிவுபடுத்தி பெரும் தாக்கத்தை ஏற்படுத்தினார். எம்.ஜி.ஆர். அவர்கள் அதை சத்துணவுத் திட்டமாகக் கொண்டு வந்தார். கலைஞர் அவர்கள் அதில் முட்டையைச் சேர்த்து இன்னும் அதை மேம்படுத்தினார். இப்படி தமிழ்நாட்டில் கல்விக்காக 'பிள்ளைகளை பள்ளிக்கூடத்திற்கு எப்படியாவது அழைத்து வந்து படிப்பை கொடுக்க வேண்டும் என்பதற்காக' பல புரட்சிகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதனுடைய தொடர்ச்சி, அந்த வரலாற்றினுடைய தொடர்ச்சியைப் பார்க்கிறோம். சென்னை மாநகராட்சி இப்பொழுது ஒரு அறிவிப்பை வெளியிட்டிருக்கிறது; காலை சிற்றுண்டி வழங்கப்படும்,

2022 ஏப்ரல் 11] [திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்]

அனைத்து பள்ளிகளிலும் காலை சிற்றுண்டி வழங்கப்படும் என்கிற அறிவிப்பை சென்னை மாநகராட்சி அறிவித்திருக்கிறது. இது மிக மிக வரவேற்கத்தக்க ஓர் அறிவிப்பு. இந்தத் திட்டத்தை தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்துவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதுபோல, கொரோனா காலத்திற்குப் பிறகு பள்ளிகளுக்கு குழந்தைகளை மீண்டும் அழைத்துவர உலக நாடுகள் திணறிய நிலையில், தமிழ்நாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திட்டங்கள் இந்த நிலையை மாற்றியதாக ஐ.நா.–வின் குழந்தைகளுக்கான UNICEF அமைப்பு கூறியிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய திட்டங்களால்தான், உலகத்தில் எல்லா நாடுகளும் திணறிக் கொண்டிருக்கும்போதும் தமிழ்நாட்டில் பள்ளிகளுக்குக் குழந்தைகள் மிக இயல்பாக வரக்கூடிய ஒரு சூழல் வந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.

அதுபோல, மதிய உணவுத் திட்டத்தை நாம் மிகச் சிறப்பாக நடைமுறைப்படுத்துவதனால், இந்தியாவினுடைய எழுத்தறிவுபெற்ற மாநிலங்களில் தமிழ்நாடு சிறப்பான இடத்தில் இருக்கிறது என்று ஐ.நா–விற்கான UNICEF அமைப்பினுடைய தலைவரே சொல்லியிருக்கிறார். இப்படிப்பட்ட கூற்றுக்களையெல்லாம் பார்க்கிறோம். இப்படிப்பட்ட இடத்தை நாம் எதனடிப்படையில் பெற்றிருக்கிறோம் என்றால் நாம் பின்பற்றுகிற சமூக நீதிக் கொள்கையின் அடிப்படையில்தான். இந்தக் கொள்கைதான் இதையெல்லாம் சாத்தியமாக்கியிருக்கிறது. எனவே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடத்தில் நான் பணிவோடு கேட்கிற வேண்டுகோள், எந்தத் துறைக்குச் செலவிட்டாலும் அதற்குக் கணக்குப் பாருங்கள். உயர் கல்வித் துறைக்கும், பள்ளிக் கல்வித் துறைக்கும் செலவிடுவதற்கு கணக்கே பார்க்காதீர்கள். அது மிக மிகத் தேவையான ஒன்று. அது நம்முடைய தலைமுறையை நம்முடைய கொள்கை அடிப்படையில் வார்த்தெடுக்கிற ஒன்று.

கூட்டுறவுத் துறைக்கு பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களே சொன்னார்கள், 'நானே எதிர்பார்க்கவில்லை. ஆனால் கொடுத்து விட்டார்கள்' என்று. அதுபோல இந்தத் துறைக்கு ஒரு சிறப்பு நிதியாக அதிக நிதி வழங்கப்பட வேண்டும். ஏனென்றால்

[திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்] [2022 ஏப்ரல் 11

நம்முடைய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்; அதிகமான நிதி இந்தத் துறையில் இருந்து எதற்கு செலவழிக்கப்படுகிறது என்றால், பணியாளர்களுக்கு ஊதியம் கொடுப்பதிலே போய்விடுகிறது. மீதம் இருக்கிற அந்த சொற்ப எண்ணிக்கையிலான தொகையைக் கொண்டுதான் நாம் கட்டமைப்பு வசதிகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. இதர பணிகளைச் செய்ய வேண்டியிருக்கிறது" என்று சொன்னார்கள். எனவே, அது முக்கியமாக கவனத்தில் கொள்ளப்படவேண்டிய ஒன்று. கட்டமைப்பு வலுப்படுத்தப்பட வேண்டும். கட்டமைப்பை எல்லா பள்ளிகளிலும் வலுப்படுத்த வேண்டும்.

பிற்பகல் 1–25

இப்போது இந்த நிதிநிலை அறிக்கையில்கூட, model school–மாதிரிப் பள்ளிகளைப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்றிருந்தபோது, டெல்லியில் இருக்கிற அந்த மாதிரிப் பள்ளிகளை பார்வையிட்டார்கள். ஆனால், தமிழ்நாட்டினுடைய மாடல் என்பது, திராவிட மாடல் என்பது ஒரு குறிப்பிட்ட சில பள்ளிகளை சிறப்பாக நடத்துவது அல்ல. எல்லா பள்ளிகளும் நமக்கு model school தான். தமிழ்நாட்டில் எல்லாப் பள்ளிகளும் மாதிரிப் பள்ளிகள். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அந்தக் கல்விமுறை, அதுதான் இன்றைக்கு உலகமே உற்றுநோக்கக்கூடிய கல்விமுறையாக இருக்கிறது. எனவே, அந்த அடிப்படையில் குறிப்பிட்ட சில பள்ளிகளை மட்டும்—அதாவது Navodaya பள்ளிகளையெல்லாம் அப்படித்தான் செய்கிறார்கள். குறிப்பிட்ட சில பள்ளிகளில் மட்டும் சிறப்பான கட்டமைப்பு வசதியோடு வைத்திருப்பார்கள். ஆகையால்தான் அதனை நாம் நிராகரிக்கிறோம். நாம் நிராகரிப்பதற்கு அதுவும் ஒரு காரணம்; இந்தி மட்டும் காரணமல்ல. குறிப்பிட்ட சில பள்ளிகள் மட்டும் சிறப்பான கட்டமைப்போடு இருப்பது என்பது சமூகத்தில் ஒரு பாரபட்சமான ஒரு பாகுபாடான போக்கை நாமே வளர்ப்பது போன்று ஆகிவிடும். எனவே, எல்லாப் பள்ளிகளும் சிறப்பான பள்ளிகள்தான்; எல்லாப் பள்ளிகளினுடைய கட்டமைப்புகளும் சிறப்பான கட்டமைப்புகள்தான் என்கிற நிலையை நாம் எட்ட வேண்டும். ஏற்கெனவே நாம் எட்டியிருக்கிறோம். அதிலிருக்கிற குறைபாடுகளைச் சரி செய்து, எல்லா பள்ளிகளினுடைய கட்டமைப்பையும் மாதிரி பள்ளிகளாகவே, சிறப்பான

பள்ளிகளாகவே நாம் வைக்க வேண்டும் என்கிற வேண்டுகோளை விடுக்கிறேன்.

அதேபோல், கல்வியைப் பொதுப் பட்டியலிலிருந்து மீண்டும் மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை நம்முடைய அரசு செய்ய வேண்டும். சேலம் பெரியார் பல்கலைக்கழகம் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள் அவர்கள் இங்கே விரிவாகப் பேசினார்கள். நம்முடைய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களும் அதற்கான விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார்கள். நான் ஏற்கெனவே என்னுடைய முதல் அறிமுக உரையிலேயே, சேலம் பெரியார் பல்கலைக்கழகம் உள்ளிட்ட பல பல்கலைக்கழகங்களில் நடைபெற்றுக்கொண்டிருக்கிற சமூக நீதிக்கெதிரான நடவடிக்கைகள் குறித்து குறிப்பிட்டிருந்தேன். அது தடுக்கப்பட வேண்டும். மாண்புமிகு ஆளுநர் அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் அவை இருப்பதினால் இந்தப் பிரச்சினை உள்ளது என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. என்றாலும்கூட, நம்முடைய வரிப் பணத்தில், நம்முடைய உயர் கல்வித் துறையின்கீழ் இயங்கக்கூடிய அந்தப் பல்கலைக்கழகங்களில் சமூக நீதிக்கெதிரான செயல்பாடுகள் குறிப்பாக, இட ஒதுக்கீட்டைப் பின்பற்றுவதிலேயே மிகப் பெரிய சிக்கல் இருக்கிறது. இட ஒதுக்கீட்டைப் பின்பற்ற மறுக்கிறார்கள். வேளாண் பல்கலைக்கழகத்தில்கூட அப்படிப்பட்ட பிரச்சினைகள் இருக்கின்றன. பல பல்கலைக்கழகங்களில், குறிப்பாக SC/ST இட ஒதுக்கீட்டைப் பின்பற்றுவதில் மிகப் பெரிய தொய்வு இருக்கின்றது என்கிற குற்றச்சாட்டுகள் வந்துகொண்டேயிருக்கின்றன. எனவே, அந்தப் பணியிடங்களில் இட ஒதுக்கீட்டைப் பின்பற்றக்கூடிய முறையை இந்தப் பல்கலைக்கழகங்களில் நாம் கொண்டுவர வேண்டும். அது மிக முக்கியமான ஒன்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், சமூக நீதியினை எல்லோரும் பின்பற்றுகிறார்களா என்பதைப் பார்ப்பதற்காகவே ஒரு குழுவை நியமித்திருக்கிறார். நிச்சயமாக, வருங்காலங்களில் எந்தப் பல்கலைக்கழகமாக இருந்தாலும், கல்லூரிகளாக இருந்தாலும், அவற்றில் ஒதுக்கப்பட்டிருக்கிற இட ஒதுக்கீட்டைப் பார்வையிட்டு, அந்தக் குழு நிச்சயமாக சரிசெய்யும் என்பதை நான் உங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

[2022 ஏப்ரல் 11

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. சமூக நீதி மண்ணான தமிழ்நாட்டின் தலைநகர் சென்னையில் இயங்கும் உயர் கல்வி நிறுவனமான I.I.T. மீது புகார் வராத, குற்றச்சாட்டு வராத நாளே கிடையாது. அது தன்னாட்சி பெற்ற ஓர் அமைப்பாக இருக்கலாம். ஆனால், அது இயங்கக்கூடிய இடம் நம்முடைய இடம். அது நம்முடைய வரிப் பணத்தில் இயங்குகிறது. ஆனால், சமூக நீதிக்கு முரணான அத்தனை செயல்களும் அங்கே அரங்கேறிக்கொண்டிருக்கின்றன. அங்கே கேரள மாணவி பாத்திமா லத்தீப் மரணம் அடைந்தார். அவருக்கு நீதி வழங்கப்படவில்லை. அதேபோல் பெரியார் அம்பேத்கர் பெயரிலே படிப்பு வட்டம் நடத்துவதற்கு அங்கே மிகப் பெரிய இடையூறு செய்தார்கள். சாதி பாகுபாடு அங்கிருக்கக்கூடிய மாணவர்கள்மீதும், பேராசிரியர்கள்மீதும்கூட நடக்கிறது என்று சொல்லி, தற்போது ஒரு பேராசிரியர் பணியை விட்டே சென்றுவிட்டார். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை நாம் பார்க்கிறோம். மிகப் பெரிய கணித மேதை, உலகப் புகழ்பெற்ற கணித மேதை டாக்டர் வசந்தா கந்தசாமி அவர்களுக்கு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது வீரதீர செயல் புரிந்ததற்காக கல்பனா சாவ்லா விருதைக் கொடுத்து கௌரவித்தார். அப்படிப்பட்ட ஒரு மிகப் பெரிய கணித மேதை, பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர் என்ற ஒரே காரணத்திற்காக கடைசி வரை அந்த I.I.T.–ல் அவர் உதவி பேராசிரியராகவே வைக்கப்பட்டிருந்தார். தமிழ்நாட்டில் அவருக்கு ஒரு பேராசிரியருக்கான அங்கீகாரம்கூட கிடைக்கவில்லை. நம்முடைய சமூக நீதி மண்ணில், பெரியார் மண்ணில், இப்படிப்பட்ட ஒரு நிலை. எனவே, அது ஒரு தன்னாட்சி பெற்ற அமைப்பு என்றாலும்கூட, அது நம்முடைய மண்ணில் இயங்குகின்றது எனும்போது, நம்முடைய சமூக நீதி கோட்பாட்டிற்கு உட்பட்டுத்தான் அது இயங்க வேண்டும். எனவே, அதன்மீது உரிய கவனத்தைச் செலுத்துவதற்கும் அங்கே சமூக நீதிக்கு முரணான செயல்பாடுகளைக் களைவதற்கும் தமிழ்நாடு அரசு உரிய முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

2022 ஏப்ரல் 11] [திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்]

அதுபோல அண்மையில் கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி அருகே அரசுப் பள்ளி ஒன்றில் ரமலான் நோன்பு இருந்த ஒரு மாணவரை உணவு உண்ணச் சொல்லி ஓர் ஆசிரியர் வலியுறுத்தியதாக மிகப் பெரிய பரபரப்பு செய்தி வந்தது. இரண்டு மாணவர்கள்மீது அப்படிப்பட்ட ஒரு கொடுமை நிகழ்ந்திருக்கிறது. தமிழ்நாட்டில் நாங்கள் எல்லாம் பள்ளிக்கூடத்தில் படிக்கின்றபோது சபரிமலைக்குச் செல்கிற என்னுடைய சக நண்பர்கள் மாலை போட்டு வருவார்கள். நாங்களெல்லாம் நோன்பு வைக்கும்போது அவர்கள் நமக்கு ஒத்திசைவாக இருப்பதும், நாங்கள் அவர்களுக்கு ஒத்திசைவாக இருப்பதும் நடைமுறையில் இருந்தது. இன்றைக்கும் நாம் அதனை தமிழ்நாட்டில் பார்க்கிறோம். அன்றாடம் சமூக நல்லிணக்கத்திற்கான காட்சிகளை ஒவ்வொரு இடத்திலும் பார்க்க முடிகிறது. அன்றைக்குக்கூட நடைப்பயணமாக கோயிலுக்குச் சென்றுகொண்டிருக்கக் கூடியவர்கள் வெயிலில் வாடக்கூடாது என்பதற்காக. . . . (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 1–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஷாநவாஸ், நான் மணியடித்தால், என்னவென்று என்னை நோக்கிப் பாருங்கள். நீங்கள் பேசத் தொடங்கி 12 நிமிடங்கள் முடிந்துவிட்டன. சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: தண்ணீரை ஊற்றி அவர்களுடைய காலை நனைத்துவிடுகிற ஒரு காட்சியைப் பார்த்தோம். இப்படிப்பட்ட ஒரு மண்ணில், அதுவும் இளம் தலைமுறை, பள்ளிக் குழந்தைகள் படிக்கக்கூடிய இடத்தில் வகுப்புவாத சிந்தனையோடு ஆசிரியர்கள் செயல்படுவது என்பது நம்முடைய தலைமுறையைப் பாழாக்கிவிடும். நம்முடைய மண்ணைப் பாழாக்கிவிடும். எனவே, அவர் இடைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். அது ஒரு நிர்வாக நடவடிக்கை. அதுபோன்ற வகுப்புவாத சிந்தனை உள்ளவர்கள் இந்தத் துறையிலிருந்து முழுமையாகக் களையெடுக்கப்பட வேண்டும் என்கிற வேண்டுகோளை வைக்கிறேன்.

அதுபோல, பள்ளி, கல்லூரி வளாகங்களில் யோகா பயிற்சி என்கிற பெயரில், Saga பயிற்சி பல இடங்களில் நடைபெறுகின்றன. கோயம்புத்தூரில் அதுபோன்று நடந்த ஒரு பயிற்சி குறித்து,

[திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்] [2022 ஏப்ரல் 11

விசாரிக்கச் சென்ற காவல் அதிகாரிகளை உள்ளேயே விடாமல், gate–க்கு வெளியே தடுத்து வைத்திருந்தார்கள். அதுபற்றி பெரிய அளவில் செய்திகள் வந்திருந்தன. இதுபோன்ற அத்துமீறல் நடவடிக்கைகள் களையப்பட வேண்டும். தமிழ்நாட்டுக்கு இது ஆபத்தானது.

அதுபோல, நம்முடைய பள்ளி வளாகங்களில் விபத்துகள் ஏற்படுவது என்பது மிகப் பெரிய வேதனையான ஒன்று. கும்பகோணம் தீ விபத்து ஏற்பட்டபோது, அதுகுறித்து மிகப் பெரிய அளவுக்கு வழிகாட்டு நெறிமுறைகள் உருவாக்கப்பட்டன. அதற்குப் பிறகு, அண்மையில் ஒரு பள்ளிக்கூடத்தில் சுவர் இடிந்து விழுந்தபோது, திரும்பவும் அதுகுறித்து செய்திகள் வந்தன. இப்போது ஒரு பள்ளி மாணவர் பேருந்து விபத்து ஏற்பட்டு மரணமடைந்தபோது, அதுகுறித்தும் நாம் விவாதித்துக் கொண்டிருக்கிறோம். இதனை எப்போதுமே சரியாகப் பின்பற்றக்கூடிய வகையில் கண்காணிப்பதற்கும், விபத்துகள் ஏற்படாமல் தடுப்பதற்குமான உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

அதுபோல, மாணவர்கள் footboard–ல் பயணம் செய்யக்கூடிய சூழல் தற்போது இருக்கிறது. மாணவர்களுக்கு வழிகாட்டும் வகையில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளக்கம் வேண்டாம். தலைப்புச் செய்திகளாகச் சொல்லுங்கள். விபத்து ஏற்படக் கூடாது, Footboard–ல் பயணம் செய்யக் கூடாது என்று தலைப்புச் செய்தியாகச் சொல்லுங்கள்.

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: இதற்கு பெரும்பாலும் நாம் மாணவர்களைக் குற்றம் சொல்கிறோம். மாணவர்கள் அப்படி செய்யக்கூடாது என்பது சரிதான். ஆனால், பள்ளி நேரங்களில் பேருந்துகள் சரியாகக் கிடைக்கவில்லை என்கிற ஒரு குறைபாடும் இருக்கிறது. அதனால், பள்ளி நேரங்களில் காலை, மாலை வேளைகளில் பேருந்துகளை அதிகமாக இயக்க வேண்டுமென்கிற ஒரு வேண்டுகோளை விடுக்கிறேன்.

முக்கியமாக 'கல்வியைக் காவிமயமாக்குவதில் என்ன தவறு?' என்று குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அவர்கள் உள்வாங்கிக் கொண்ட கொள்கையில் மிகத் தெளிவாக

இருக்கிறார்கள். அதுபோல அவர்களுக்கு வாக்களிக்கக்கூடிய மக்கள் யாரோ அவர்களுக்கு நன்மை செய்வதில் அவர்கள் எந்தச் சட்ட விதிமுறைகளையும் பார்ப்பதில்லை.

Economically Weaker Section இடஒதுக்கீடு, பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கான 10 விழுக்காட்டினை நடைமுறைப்படுத்துவதற்கு அவர்கள் எந்த வழிமுறையையும் கையாளவில்லை. நேரடியாக இடஒதுக்கீட்டைக் கொடுத்தார்கள். அந்த வகையில், அவர்களுடைய தரப்பினர் யாரோ அவர்களை பலப்படுத்துவதில், நலப்படுத்துவதில் அவர்கள் மிகத் தீவிரமாக இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது தமிழ்நாட்டில் நடைமுறையில் இருக்கிறதா?

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: இல்லை. நம்முடைய அரசை உருவாக்கக்கூடிய மக்கள், விளிம்புநிலை மக்கள்; ஏழையெளிய மக்கள், பிற்படுத்தப்பட்ட, பட்டியலின மக்கள், சிறுபான்மையின மக்கள் ஆகியோருக்கு நன்மை செய்வதில் நாமும் வெளிப்படையாக இருக்க வேண்டுமென்கிற வேண்டுகோளை வைக்கிறேன்.

இன்றைக்கு சிறுபான்மையினக் கல்லூரிகள், குறிப்பாக அரசு உதவி பெறும் கல்லூரிகள், கல்வி நிறுவனங்கள் 7.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த முடியாமல், அந்த வாய்ப்பில்லாமல் இருக்கின்றன. நம் அரசின் திட்டம் போய்ச் சேருவதற்கு முன்பாகவே, பழங்குடியின மக்களிடம், பட்டியலின மக்களிடம், சிறுபான்மை மக்களிடம், விளிம்புநிலை மக்களிடம் போய்ச் சேர்ந்து, அவர்களுக்குக் கல்வியைக் கொடுத்த அந்தப் பள்ளிக் கூடங்களுக்கு இந்த வாய்ப்பு இல்லை என்கிற நிலை இருக்கிறது.

எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நம்முடைய தளபதியார் அவர்கள் எளிய மக்களின் காவலனாக, நான்கு இருளர் வீடுகள் இருந்தாலும்கூட, அங்கே சென்று அவர்களுடைய பிரச்சினையைக் கேட்கக்கூடிய நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தப் பெருங்கொண்ட சமூகத்தினுடைய தரப்பில் நடத்தப்படக்கூடிய கல்விக் கூடங்கள், பள்ளிக்கூடங்களுக்கும் 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டை உட்படுத்தி, அவர்களுக்கும் வழங்க வேண்டும்.

அதுபோல, ஏற்கெனவே, கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் சிறுபான்மைப் பள்ளிகளுக்கு, அப்பள்ளிகளின் மேம்பாட்டுக்காக மானியம் வழங்கப்பட்டது. அந்த மானியம் மீண்டும் வழங்கப்பட வேண்டும். அதுபோல சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை, அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் பயன்படுத்த வேண்டும் என்கிற வாய்ப்பை மீண்டும் தர வேண்டும் என்கிற வேண்டுகோளை விடுத்து, தொகுதி சார்ந்த பல கோரிக்கைகள் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், போதும். நீங்கள் MLA fund–ல் செலவழிக்கலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், துணை முதலமைச்சராக இருந்தபோது, ஐந்து ஆண்டுகள் தந்திருந்தார்கள். கடந்த 10 ஆண்டுகளாகத்தான் அவ்வாறு இல்லை. உங்களுடைய உரையை நிறைவாக முடியுங்கள்.

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: நான் இன்னொன்றையும் கேட்கிறேன். மீண்டும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொகுதி சார்ந்த கோரிக்கைகள் பல இருக்கின்றன. அவற்றைத் தங்களிடம் கொடுத்துவிடுகிறேன். குறிப்பாக, இரண்டு கோரிக்கைகளை மட்டும் சொல்லிவிட்டு, உரையை முடிக்கிறேன்.

கடந்த முறை மானியக் கோரிக்கையின்போது, நம்முடைய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் 11 கல்லூரிகளுக்கான அறிவிப்பை வெளியிட்டார்கள். அவற்றில், சிறுபான்மையின மக்கள் அதிகமாக வாழக்கூடிய கூத்தாநல்லூருக்கு ஒரு பெண்கள் கல்லூரியைக் கொடுத்தார்கள். அதுபோல, நாகூருக்கு ஒரு மகளிர் கல்லூரியை வழங்க வேண்டுமென்ற வேண்டுகோளை விடுக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தொகுதி சார்ந்த கோரிக்கைகளையெல்லாம் என்னிடம் கொடுத்துவிடுங்கள். அவற்றை அவைக்குறிப்பில் பதிவு செய்துகொள்ளலாம்.

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: அந்த ஒரு கல்லூரியை வழங்க வேண்டும். ஒரு சட்டக் கல்லூரியைத் தர வேண்டும். அதுபோல, அங்கிருக்கக்கூடிய பள்ளிக்கூடங்களை மேம்படுத்த வேண்டும். பல பள்ளிக்கூடங்களின் கட்டடங்கள் இடிக்கப்பட்டுவிட்டன. எனவே, அந்தக் கட்டடங்களை மீண்டும் விரைவாகக் கட்டுவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டு, மீதமுள்ள தொகுதிக்

கோரிக்கைகளைத் தங்களிடம் கொடுத்துவிடுகிறேன். அவற்றை நான் இந்த அவையில் பேசியதாகக் கருதி, பதிவு செய்துகொள்ளுமாறு வேண்டி, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

பழமையான நகராட்சிகளை மேம்படுத்த அரசின் சார்பில் திட்டங்கள் வகுக்கப்பட்டு சிறப்பு நிதி ஒதுக்கப்படுகிறது. அந்த வகையில், 155 ஆண்டுகள் பழமையான நாகப்பட்டினம் நகராட்சிக்கும் சிறப்பு நிதி வழங்க வேண்டும்.

நாகப்பட்டினம் தொகுதிக்கு உட்பட்ட திருமருகல் ஒன்றியத்தை தனி வட்டமாக அறிவிக்க வேண்டும்.

நாகப்பட்டினம் அக்கரைப்பேட்டை இரயில்வே மேம்பாலப் பணிகள் முழுமையடையாமல் பாதியிலேயே நிற்கின்றன. நிலம் கையகப்படுத்துவது உள்ளிட்ட பணிகளை விரைந்து முடித்து மேம்பாலத்தை பயன்பாட்டுக்குக் கொண்டுவர வேண்டும்.

நாகப்பட்டினம் அரசு பொது மருத்துவமனை, நாகூர் ஆண்டவர் அரசு மருத்துவமனை, நாகூர் நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவற்றை சீரமைக்க வேண்டும். திட்டச்சேரி ஆரம்ப சுகாதார நிலையத்தின் பழுதடைந்த கட்டடத்தை இடித்துவிட்டு புதிய கட்டடத்தை விரைந்து கட்ட வேண்டும்.

நாகப்பட்டினம் தொகுதியில் உள்ள திருமருகல், திருக்கண்ணபுரம், தேமங்கலம், கணபதிபுரம், ஏனங்குடி, திருப்பயத்தங்குடி ஆகிய இடங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களின் உட்கட்டமைப்பை மேம்படுத்த வேண்டும்.

பல ஆண்டுகளுக்கும் மேலாக மூடிக்கிடக்கும் அம்பல் மற்றும் ஆழியூர் துணை சுகாதார நிலையங்களை புதுப்பித்து, ஆரம்ப சுகாதார நிலையங்களாக தரம் உயர்த்தி மீண்டும் செயல்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும். அருண்மொழித் தேவன் துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த வேண்டும்.

நாகப்பட்டினம், சாமந்தான்பேட்டை தூண்டில் வளைவு மற்றும் சிறு துறைமுகம் அமைப்பதற்கான ஆய்வுப் பணியை விரைந்து முடித்து திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.

[திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்] [2022 ஏப்ரல் 11

நாகப்பட்டினம், நாகூர், கீழப்பட்டினச்சேரி மீனவ கிராமத்தில் கடல் அரிப்பை தடுக்க பாறைக் கற்களை கொட்டி தடுப்புச் சுவர் அமைக்க வேண்டும்.

நாகப்பட்டினம் ஒருங்கிணைந்த மாவட்ட நீதிமன்ற வளாகத்தின் உட்கட்டமைப்புப் பணிகள் நிறைவடையாத நிலையில், நீதிமன்றம் திறக்கப்பட்டு இயங்கி வருகிறது. அங்கு முழுமையடையாமல் இருக்கும் சுற்றுச்சுவர், அணுகு சாலை போன்ற பணிகளை விரைந்து முடிக்க வேண்டும்.

ஆன்மிக சுற்றுலாப் பயணிகள் அதிகம் வந்து செல்லும் நாகூர் சில்லடி கடற்கரையை மேம்படுத்த வேண்டும்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் நாகூர் தர்கா, வேளாங்கண்ணி பேராலயம், சிக்கல் சிங்காரவேலர் கோயில் போன்ற உலகப்புகழ் பெற்ற திருத்தலங்கள் உள்ளன. மூன்று திருத்தலங்களையும் இணைக்கும் மையப் பகுதியாக நாகப்பட்டினம் நகரம் உள்ளது. ஆன்மிக சுற்றுலாப் பயணிகள் அதிகம் வந்து செல்லும் நாகப்பட்டினத்திற்கு கிழக்குக் கடற்கரைச் சாலையில் அனைத்து கட்டமைப்புகளுடன்கூடிய புதிய புறநகர் பேருந்து நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

சிறுபான்மையினர் அதிகம் வசிக்கும் பகுதிகளைத் தேர்வு செய்து, அங்கு கல்வி, பொருளாதாரம், சுகாதாரம், குடிநீர் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டும் என்பது நீதியரசர் சச்சார் ஆணையத்தின் பரிந்துரையாகும். அதன் அடிப்படையில் சிறுபான்மையினர் அதிகம் வசிக்கும் பகுதியாக அரசால் அடையாளம் காணப்பட்டுள்ள நாகப்பட்டினம் நகராட்சி, நாகூர் பகுதியில் அரசு மகளிர் கலைக் கல்லூரியைத் தொடங்க வேண்டும்.

நாகப்பட்டினம் தொகுதி, பாலையூர் ஊராட்சி, அழிஞ்சமங்கலம் கிராமத்தில் உள்ள அரசு ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்திட வேண்டும்.

மாவட்டத்திற்கு ஒரு சட்டக் கல்லூரி என்ற அரசின் திட்டத்தில், நாகப்பட்டினத்திற்கு முன்னுரிமை கொடுத்து விரைவாக அங்கு சட்டக் கல்லூரியை தொடங்க வேண்டும்.

2022 ஏப்ரல் 11] [திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்]

நாகப்பட்டினம் மாவட்ட மைய நூலகம் சிதிலமடைந்தும் போதிய இடவசதி இன்றியும் உள்ளது. அதை நவீனப்படுத்தி, சீரமைத்துத் தர வேண்டும். நாகூர், திட்டச்சேரி, திருமருகல் நூலகங்களுக்கு புதிய கட்டடம் கட்டித்தர வேண்டும்.

நாகப்பட்டினத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு மற்றும் தொண்டு நிறுவனங்களால் கட்டிக்கொடுக்கப்பட்ட சுனாமி வீடுகள் அனைத்தும் முற்றிலும் சேதமடைந்துள்ளன. ஆபத்தான நிலையில் உள்ள அந்த வீடுகளை இடித்துவிட்டு புதிய வீடுகளை கட்டிக்கொடுக்க அரசு முன்வர வேண்டும்.

பேரிடர்களால் பெரிதும் பாதிக்கப்படும் பகுதியாகவும் குடிசைகள் அதிகம் கொண்ட பகுதியாகவும் உள்ள நாகப்பட்டினத்தில் நிவாரண முகாம்களாக பயன்படும் சமுதாயக் கூடங்களை அதிகம் அமைக்க வேண்டும்.

அடிக்கடி புயல் மற்றும் வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்படும் பகுதியாக உள்ள நாகப்பட்டினத்தில் புதைவட கம்பி பதிக்கும் பணிகளை விரைந்து தொடங்க வேண்டும்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகம், கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலகம், மாவட்டக் கல்வி அலுவலகம் மற்றும் வட்டாரக் கல்வி அலுவலகம் ஆகிய அலுவலகங்களை புதிதாக கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

நாகப்பட்டினம் மாவட்டம், நாகூர் அருகில் புதிதாக துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஆதி திராவிடர் நல தனி வட்டாட்சியர் அலுவலகம் இல்லை. தற்போது சீர்காழி மற்றும் மயிலாடுதுறையில் இயங்கி வரும் தனி வட்டாட்சியர் அலுவலகங்கள் இரண்டும் நாகப்பட்டினம் மாவட்டத்திற்கே உரியவை ஆகும். நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு உரிய அவ்விரு அலுவலகங்களையும் நாகப்பட்டினத்தை தலைமையிடமாகக் கொண்டு ஓர் அலுவலகமும், வேதாரண்யத்தை தலைமையிடமாகக் கொண்டு ஓர் அலுவலகமும் அமைக்க வேண்டும்.

நாகப்பட்டினம் மாவட்டம், திருமருகல் ஒன்றியம், திட்டச்சேரி அரசு உயர்நிலைப் பள்ளியை மகளிர் உயர்நிலைப் பள்ளியாக மாற்றம் செய்ய வேண்டும்.

[2022 ஏப்ரல் 11

பிற்பகல் 1–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. இளங்கோ அவர்கள்.

***திரு. ரா. இளங்கோ:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். தமிழக மக்களுக்காகவும், தமிழ் மொழிக்காகவும், தன்னுடைய வாழ்நாளை அர்ப்பணித்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் உறங்கும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தலைநகர் டெல்லியில் அண்ணா கலைஞர் பெயரில் அண்ணா அறிவாலயத்தை எழுப்பி, வடக்கே சமூக நீதியை நிலைநாட்டி, திராவிட மாடலாக, மக்களுக்கான ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதி மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்து, நலத் திட்ட உதவிகளை வழங்கும் எங்கள் இளைய சூரியன், அண்ணன் இளைஞரணிச் செயலாளர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கரூர் மாவட்டத்திற்கு எண்ணற்ற திட்டங்களைப் பெற்றுத் தந்துகொண்டிருக்கின்ற கரூர் மாவட்ட கழகத்தின் பொறுப்பாளர், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் முக்கியப் பங்கு வகிப்பது கல்வி. அந்த துறை சார்ந்த மானியக் கோரிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பு கிடைத்ததற்கு நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இந்த வாய்ப்பை வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அரசுக் கொறடா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் முதற்கண் என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்பொழுதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வருகிறதோ, அப்போதெல்லாம் கல்விக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. இந்த ஆண்டுகூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பள்ளிக் கல்வித் துறைக்கு சுமார் 37,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளதை நான் மிகவும் வரவேற்கிறேன்; என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2022 ஏப்ரல் 11] [திரு. ரா. இளங்கோ]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிலருக்கு மட்டும் கல்வி கற்கும் நிலைமை இருந்தபோது, அனைவருக்கும் கல்வியை ஏற்படுத்தித் தந்தது நம்முடைய திராவிட இயக்கம்தான். அனைத்து மாணவர்களும் சமமாக கல்வியைக் கற்க வேண்டும் என்ற நோக்கில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சமச்சீர் கல்வியைக் கொண்டுவந்தார்கள். அதுவும் நம்முடைய கழக ஆட்சியில்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களின் கல்வியை மேம்படுத்த, ஊராட்சிதோறும் நூலகம் அமைத்தது கழக ஆட்சியில்தான். இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று, நூலகத்தை மேம்படுத்தித் தந்தார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏழை மாணவர்களின் எட்டாக் கனியாக இருந்த கணினி பயிற்சிக் கல்வியை, அரசுப் பள்ளியில் துவக்கி, ஏழை எளிய மாணவர்கள் பயன்பெற்றதும் நமது கழக ஆட்சியில்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வி மாணவர்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்காக, அதனை சிறப்பான முறையில் மேற்கொள்வதற்காக தனித் துறையை உருவாக்கியது கழக ஆட்சியில்தான். ஏழை மாணவர்கள் நடந்துசென்று கல்வி கற்றபோது, அவர்களுக்கு இலவச பேருந்துப் பயணத்தைத் தந்தது கழக ஆட்சி. நம்முடைய அரசு எப்போதெல்லாம் அமைகிறதோ, அப்போதெல்லாம் கல்வித் துறைக்கு சிறப்பான அறிவிப்புகள் வந்துகொண்டே இருக்கும். இதை மக்கள் நன்கு அறிவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிக அளவில் அரசுக் கல்லூரிகள் உருவாக்கப்பட்டது நம்முடைய கழக ஆட்சியில்தான். அதை மனதில் வைத்து, என்னுடைய அரவக்குறிச்சி தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான ஓர் அரசு கலைக் கல்லூரியை இந்த ஆண்டு வழங்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரோனா காலத்தில் இளம் சிறார்கள் வீட்டில் சிறைப் பறவைகளாக

[திரு. ரா. இளங்கோ] [2022 ஏப்ரல் 11

பள்ளிக்குச் செல்லாமல், கல்வியை மறந்தபோது, அவர்களது எதிர்கால நலன் கருதி, இல்லம் தேடிக் கல்வி திட்டத்தை அளித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதியாண்டில்கூட, மாணவிகளின் உயர் கல்விப் படிப்பை ஊக்கப்படுத்த, 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் படித்த மாணவிகள் மேற்படிப்பில் சேரும்போது, மாதம் ஆயிரம் ரூபாய் அவர்களது வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படும் என்று அறிவித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தினால், அரசுப் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை அதிகரிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 18,000 வகுப்பறைகளுக்கு ரூ.1,300 கோடி நிதியை முதற்கட்டமாக ஒதுக்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய அரவக்குறிச்சி தொகுதியில் 261 அரசுப் பள்ளிகள் உள்ளன. இதில் 20,000–க்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகிறார்கள். கடந்த ஆட்சியில் சரிவர பராமரிப்புப் பணிகள் செய்யாததால், அதிக அளவிலான பள்ளிக் கட்டடங்கள் பழுதடைந்துள்ளன. அவற்றைப் புதுப்பித்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். புதிதாக 140 வகுப்பறைகளும், 75 கழிவறைகளும் தேவைப்படுகின்றன.

பிற்பகல் 1–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, க.பரமத்தி ஒன்றியத்திற்குட்பட்ட கார்வழி பகுதியில் மாணவர்கள் மேல்நிலைப் பள்ளிக்குச் செல்ல வேண்டுமென்றால், 15 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியுள்ளது. அவர்கள் கொடுமுடியோ, தென்னிலைப் பகுதிக்கோ செல்ல வேண்டியுள்ளது. ஆகவே, இந்த அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். 1974 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டமாக இருந்தபொழுது, அப்போதைய விவசாயத் துறை அமைச்சராக இருந்த மறைந்த மாண்புமிகு அய்யா அன்பில்

தர்மலிங்கம் அவர்கள் இந்தப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தந்தார்கள் என்பதை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்செல்ல விரும்புகிறேன்.

அரசுப் பள்ளிகளில் பகுதி நேர ஆசிரியர்கள் 10 ஆண்டுக்காலமாக பணிபுரிந்து வருகிறார்கள். இவர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி சார்ந்த கோரிக்கைகளைக் கூறுகிறேன். புஞ்சை தோட்டக்குறிச்சி உயர்நிலைப் பள்ளி, கட்டடங்கள் இல்லாமல், சமுதாயக் கூடத்தில் நடைபெற்று வருகிறது. உடனே இதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல சின்னதாராபுரம், அரவக்குறிச்சி மற்றும் ஈசநத்தம் மேல்நிலைப் பள்ளிகளில் அதிக வகுப்பறைகள் தேவைப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் பழுதடைந்து பயன்பாட்டில் இல்லாத நிலையுள்ளது. 10 ஆண்டுகளாக வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. எனவே, புதிய சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை அமைத்துத் தருமாறு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரவக்குறிச்சி பகுதி மக்களினுடைய நீண்ட நாள் கோரிக்கையான புதிய பேருந்து நிலையத்தை அடுத்த ஆண்டு அமைத்துத் தருமாறு மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, க.பரமத்தி மேற்கு பகுதியிலிருந்து தாலுகா அலுவலகம் செல்ல வேண்டுமென்றால், சுமார் 50 கிலோ மீட்டர் தூரத்திற்குமேல் செல்ல வேண்டியுள்ளது. இங்கே பேருந்து வசதியில்லை. கரூர் சென்றுதான் புகளூருக்குச் செல்ல வேண்டும். ஆகவே, அப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான பரமத்தியை மையமாகக் கொண்டு, ஒரு தாலுகாவை உருவாக்கித் தர வேண்டுமென்று மாண்புமிகு

[திரு. ரா. இளங்கோ] [2022 ஏப்ரல் 11

பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னிலை பகுதி மக்கள் ஆரம்ப சுகாதார நிலையம் செல்ல வேண்டுமென்றால், சுமார் 20 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியுள்ளது. சின்னதாராபுரத்திற்கோ அல்லது பரமத்திக்கோ செல்ல வேண்டியுள்ளது. ஆகவே, அந்தப் பகுதிக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமத்தி ஒன்றியத்தைப் பொறுத்தமட்டிலும், 30 ஊராட்சிகள் கொண்ட மிகப் பெரிய ஒன்றியமாக இருக்கிறது. இங்கே அடிப்படை வசதிகள் குறைவாக இருக்கின்றன. 100 கிலோ மீட்டருக்குமேல் மண் சாலையாக இருக்கின்றது. ஆகவே, இந்த ஒன்றியத்தை 15 ஊராட்சிகளைக் கொண்டு இரண்டு ஊராட்சிகளாகப் பிரிக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கரூர்–கோவை நெடுஞ்சாலையில் அதிக traffic இருக்கிறது; விபத்துகள் ஏற்படுகின்றன. அதனால், அதை நான்குவழிச் சாலையாக மாற்றித் தர வேண்டுமென்று மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளப்பட்டி பேரூராட்சியை நகராட்சியாக சென்ற ஆண்டு அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பகுதி இஸ்லாமிய பெருமக்கள் அதிகம் வாழ்கின்ற பகுதி. இந்தப் பகுதியில் அடிப்படைத் தேவைகளான சாலை வசதி, சாக்கடை வசதி ஆகியவை சரியாக இல்லை. சாலைகள் குறுகலாக இருக்கின்றன. ஆகவே, இந்தப் பகுதிக்கு பாதாள சாக்கடைத் திட்டத்தை அடுத்த ஆண்டு அளிக்குமாறு மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரோனா காலத்தில் கிராமப் பகுதிகளில் பணியாற்றிய தூய்மைக் காவலர்களுக்கு சம்பளம் ரூ.3,600/– வழங்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று

2022 ஏப்ரல் 11] [திரு. ரா. இளங்கோ]

அவர்களின் சம்பளத்தை உயர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, ஊராட்சிகளில் குடிநீர் பற்றாக்குறையைப் போக்குவதற்காகவும், சீராக தண்ணீரை விநியோகம் செய்வதற்காகவும் 10 ஆண்டுகளாக பணி நியமனம் செய்யப்படாமல் உள்ள OHT operators பணியிடத்தை நிரப்பித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரவக்குறிச்சி பகுதியில் 2–வது கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதில் வேட்டமங்கலம், கோம்புபாளையம், திருக்காடுதுறை ஆகிய பகுதிகள் விடுபட்டுள்ளன. அந்தப் பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறையைப் போக்கவும், ஊராட்சிப் பகுதிகளில் இத்திட்டத்தினை செயல்படுத்தித் தரவும் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். NH–7 பெங்களூரு–சேலம் தேசிய நெடுஞ்சாலையில் வேலாயுதம்பாளையம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தொகுதி சார்ந்த கோரிக்கைகள் இருந்தால், என்னிடம் கொடுத்துவிட்டால், நீங்கள் பேசியதாகப் பதிவு செய்துவிடுகிறேன்.

திரு. ரா. இளங்கோ: தொகுதி சார்ந்த கோரிக்கைகளைத்தான் பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தொகுதி சார்ந்த கோரிக்கைகள் என்றால், பதிவு செய்து கொள்கிறேன் என்று சொல்கிறேன்.

திரு. ரா. இளங்கோ: ஒரே ஒரு நிமிடம். உரையை முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையை முடித்துவிடுங்கள்.

பிற்பகல் 1–45

திரு. ரா. இளங்கோ: பெங்களூரு–சேலம் நெடுஞ்சாலையில், வேலாயுதம்பாளையம் பகுதியில் மூலிமங்கலம் பகுதியில் சாலையைக் கடக்கும்போது அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்றன. ஆகவே, அங்கு ஓர் உயர்மட்டப் பாலத்தை அமைத்துத் தர

[திரு. ரா. இளங்கோ] [2022 ஏப்ரல் 11

வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

அரவக்குறிச்சி பகுதியில் விவசாயப் பெருங்குடி மக்கள் அதிகப்படியாக முருங்கையை சாகுபடி செய்து வருகிறார்கள். முருங்கை வெளிநாடுகளுக்கும், பக்கத்து மாநிலங்களுக்கும் செல்வதால், அந்த விவசாயிகளின் நலனைக் கருதி குளிர்பதனக் கிடங்கு ஒன்றை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று ஒரு முக்கியமான வேண்டுகோள். அரவக்குறிச்சி மிகப் பெரிய தொகுதி. இதுபோன்ற தொகுதி நமது தமிழகத்தில் அதிகளவில் இருக்கின்றன. அதிகளவில் கிராமங்கள் இருக்கின்றன. மக்கள் அதிகமாக சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியை எதிர்பார்க்கிறார்கள்; இந்த 3 கோடி ரூபாயை உயர்த்தித் தருமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை தாழ்ந்து, பணிவுடன் கேட்டுகொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரிய வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அரசுக் கொறடா அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் 11 நிமிடங்கள் பேசினார். கடைசியில் கை தட்டு என்பது அவர் கேட்ட தொகுதி மேம்பாட்டு நிதிக்குத்தான். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2022–2023 ஆம் ஆண்டிற்கான பள்ளிக் கல்வி மற்றும் உயர் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கைகள்மீது என்னுடைய கருத்துகளைப் பதிவு செய்வதற்கான வாய்ப்பினை தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2021–2022 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் தமிழகத்திற்கு என்று தனியாக கல்விக் கொள்கையை

உருவாக்குவோம், அதற்காக உயர்நிலைக் குழு அமைக்கப்படும் என்று உறுதி அளித்தீர்கள். அது தற்போது செயல்வடிவம் பெற்றுள்ளது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வெகுவாக இதை நாங்கள் பாராட்டுகிறோம். இந்தியாவிலேயே, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர்தான் முதன்முதலில் 1969 ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி திரு. ராஜமன்னார் தலைமையில் ஒன்றிய–மாநில உறவுகள் குறித்து ஆராய்ந்து அறிக்கை அளிக்க ஒரு குழு அமைத்தார். அக்காலகட்டத்தில்தான் கலைஞர் எழுப்பிய, 'மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி' என்ற முழக்கம் இந்திய நாடு முழுவதும் எதிரொலித்தது. அதே வழியில் நின்று இந்தியாவில் முதன்முதலாக நமது தமிழக முதலமைச்சர், தமிழகத்திற்கு என்று தனியாக கல்விக் கொள்கையை வடிவமைக்க ஒரு குழுவை உருவாக்கியிருக்கிறார் என்பதை இந்த அவையின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

புதிய தேசிய கல்விக் கொள்கை என்ற பெயரில் ஒட்டுமொத்த கல்வித் துறையையும் ஒன்றிய அரசு தன்மயமாக்கும் முயற்சியை மேற்கொண்டுள்ளது. ஒரு காலத்தில் மாநிலப் பட்டியலிலிருந்த கல்வி ஒத்திசைவுப் பட்டியலுக்கு மாற்றப்பட்டு, இன்று தொடக்கக் கல்வி முதல் உயர்நிலைக் கல்வி வரை ஒன்றிய அரசு தன் வசம் எடுத்துக்கொண்டிருக்கிறது. இது கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரானது மட்டுமல்ல, கல்வியில் பிற்போக்குத்தனமான கருத்தியலைத் திணிப்பதற்கு மேற்கொள்ளும் ஒரு முயற்சியாகும்.

உலகத்தில் ஒரு நாட்டுக்கென்று ஒரே கல்விக் கொள்கை எந்த நாட்டிலும் இல்லை. வளர்ந்த நாடு என்று சொல்லப்படும் அமெரிக்க நாட்டில்கூட இல்லை. கல்விக் கொள்கை அப்படி இருக்கவும் இயலாது. கல்வி தொடர்பான பாடத் திட்டம் என்பது அந்தப் பகுதி மக்களின் மண் சார்ந்ததாக இருக்க வேண்டும். அவர்களின் பண்பாடு சார்ந்ததாக இருக்க வேண்டும்; அவர்களின் வாழ்வியல் சார்ந்ததாக இருக்க வேண்டும்; இதுதான் கல்வி முறை.

பிற்பகல் 1–50

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் வழியில் நின்று மாநில உரிமைகளுக்கான குரலை, மாண்புமிகு நமது முதலமைச்சர் அவர்கள் டெல்லி நோக்கி வலுவாக எழுப்பி வருகிறார்.

சமீபத்தில் கேரள மாநிலம் கண்ணூர் நகரில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய மாநாட்டை ஒட்டி

[திரு. வி.பி. நாகைமாலி] [2022 ஏப்ரல் 11

நடைபெற்ற மாநில உரிமைகள் பாதுகாப்புக் கருத்தரங்கில் கேரள மாநில மாண்புமிகு முதலமைச்சர் தோழர் பினராய் விஜயன் அவர்களோடு நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கலந்துகொண்டு ஒரே மேடையில் உரையாற்றினார். அந்தக் கருத்தரங்கில் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழில் பேசினார், ஆங்கிலத்தில் பேசினார், எல்லோரையும் வியக்கவைக்கும் வகையில் மலையாளத்திலும் பேசினார். நமது மாண்புமிகு முதலமைச்சரின் உரையை அரங்கில் அமர்ந்திருந்த ஆயிரக்கணக்கான எங்கள் கட்சி ஊழியர்கள் கேட்டு, நீண்ட கரவொலி எழுப்பி வாழ்த்து தெரிவித்தனர். நான்கூட காலையில் நமது முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து ஒரு புத்தகத்தை அளித்து, பாராட்டி வந்திருக்கிறேன் என்பதையும் இந்த அவையிலே பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். நமது முதலமைச்சரின் பேச்சு மாநில உரிமையைப் பறிக்கும் ஒற்றை வாத அரசியலுக்கு எதிரான போர் முழக்கம் என நாங்கள் பார்க்கிறோம்.

தமிழகத்திற்கென தனிக் கல்விக் கொள்கையை உருவாக்க தாங்கள் அமைத்திருக்கக்கூடிய வடிவமைப்புக் குழுவில் கல்வித் துறையில் ஆழ்ந்த அறிவு, அனுபவம் மற்றும் செறிவுமிக்கவர்களையும், துறை சார்ந்த வல்லுநர்களையும், மக்கள் கல்வி, அறிவியல் மற்றும் அறிவொளி இயக்கங்களில் பணியாற்றிய ஆளுமைகளையும், நீங்கள் இனம் கண்டு நியமித்திருப்பது கல்வித் துறையை ஜனநாயகப்படுத்தும்; தமிழகத்தின் மதச் சார்பற்ற பாரம்பரியத்தின் வழி நின்று அறிவியல்பூர்வமான கல்விக் கொள்கையை உருவாக்கும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை எங்களுக்குண்டு. பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், கல்வியாளர்கள், அரசியல் கட்சியினர் ஆகியோரிடம் கருத்துகளைக் கேட்டு, இந்தக் குழு தேவையான பரிந்துரைகளை அளிக்க வேண்டுமென இந்த அவையில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் கலை, அறிவியல், Engineering, Polytechnic, சட்டம், மருத்துவம், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் என ஒட்டுமொத்தமாக 2,608 கல்லூரிகள் உள்ளன. இதில் 357 கல்லூரிகள் அரசுக் கல்லூரிகள். 251 கல்லூரிகள் அரசு உதவிபெறும் தனியார் கல்லூரிகள். மீதியுள்ள 2,000 தனியார் கல்லூரிகள் சுயநிதிக் கல்லூரிகள் ஆகும். உயர் கல்வியில் தனியார் கல்வி நிறுவனங்கள்தான் மிக அதிகம் என்பதை சுட்டிக்காட்டவே இந்த விவரத்தை நான்

2022 ஏப்ரல் 11] [திரு. வி.பி. நாகைமாலி]

உங்களின் மேலான கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். தமிழகத்தில் மேற்குறிப்பிட்ட 2,000 தனியார் சுயநிதிக் கல்லூரிகள் மற்றும் 251 அரசு உதவிபெறும் தனியார் கல்லூரிகளில் சுயநிதிப் பிரிவிலுமாக இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான பேராசிரியர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் எந்தவித பணிப் பாதுகாப்பும் இல்லாமல் பணியாற்றி வருகின்றார்கள். இவர்களுக்கு விடுப்பு போன்றவையும் மறுக்கப்படுகின்றன. பலருக்கும் சமூகப் பாதுகாப்பு பலன்களான EPF போன்றவைகூட மறுக்கப்படுகின்றன. உயர் கல்வி நிறுவனங்களில் பணிபுரிவதற்கான அனைத்துத் தகுதிகளும் இவர்களுக்கு இருந்தும் ரூ.10,000/–க்கும் குறைவாகவே சம்பளம் பெற்று பலரும் பணியாற்றுகின்றனர். பல்கலைக்கழக மானியக் குழு போன்ற உயர் கல்வியை நெறிமுறைப்படுத்தும் நிறுவனங்கள் பணியாளர்களின் சான்றிதழ்களைச் சரிபார்த்துவிட்டு, பணியாளர்களிடமே திருப்பி அளிக்க வேண்டும் என்று பல முறை வலியுறுத்திய பிறகும், தமிழ்நாட்டில் பெரும்பாலான தனியார் கல்வி நிறுவனங்கள் தொடர்ந்து தங்களது பணியாளர்களின் சான்றிதழ்களை தங்களிடமே வைத்துள்ளன. இதனைத் தொடர்ந்து நமது கல்லூரிக் கல்வி இயக்குநரகம், சான்றிதழ்களை பேராசிரியர்களிடம் திரும்ப அளிக்குமாறு கல்லூரிகளுக்குக் கடிதம் எழுதியும், பல கல்லூரி நிருவாகங்கள் சான்றிதழ்களைத் தர மறுக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

எந்தவிதப் பணிப் பாதுகாப்பும் இல்லாமல் பணிபுரியும் இப்பணியாளர்களின் பணிப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் 1976 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தமிழ்நாடு தனியார் கல்லூரி ஒழுங்காற்றுச் சட்டத்தில் தனியார் சுயநிதிக் கல்லூரிகளுக்கும், உதவிபெறும் கல்லூரிகளில் பணிபுரியும் சுயநிதிப் பிரிவு ஆசிரியர்கள், பணியாளர்களுக்கும் இந்தச் சட்டம் பொருந்தும் என்கிற வகையில் சில மாற்றங்களைத் தற்போது கொண்டுவர வேண்டும் என்று நான் விரும்புகிறேன். தனியார் சுயநிதிக் கல்லூரிகள் மற்றும் உதவிபெறும் கல்லூரிகளில் சுயநிதிப் பிரிவில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள், கல்லூரிக் கல்வி இயக்குநரகம் போன்ற அலுவலகங்களை அணுகுவதில் கல்லூரி நிருவாகங்கள்மூலம் சில தடைகள் ஏற்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனைக் கவனத்தில்கொள்ள வேண்டும் என்று அன்போடு நான் வேண்டுகிறேன்.

[திரு. வி.பி. நாகைமாலி] [2022 ஏப்ரல் 11

பிற்பகல் 1–55

தனியார் சுயநிதிக் கல்லூரிகள் மற்றும் உதவிபெறும் கல்லூரிகளில், சுயநிதிப் பிரிவில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களுக்கு "குறைந்தபட்ச சம்பளம்" என்ற ஒன்றினை அரசு நிர்ணயிக்க வேண்டும் என நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். விடுப்பு, சமூகப் பாதுகாப்பு போன்ற அனைத்து சலுகைகளையும் அரசு ஊழியர்களுக்கு இணையாக இவர்களுக்கும் வழங்க வேண்டுமென நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கல்லூரிகளில் பணி புரிந்ததற்கான பணி அனுபவச் சான்றிதழ் கேட்கிறபோது, பெரும்பான்மையான கல்வி நிறுவனங்கள் மறுப்பதும், இதற்காக பல மாத ஊதியத்தைக் கேட்பதும் என்ற நிலை தொடர்கிறது என்பதையும் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

கொரோனா பொது முடக்கத்தைக் காரணம் காட்டி பெரும்பாலான தனியார் கல்வி நிறுவனங்கள் இவர்களுக்கு முழுமையாக சம்பளம் வழங்கவில்லை. முன்னறிவிப்பின்றி பலரும் பணிநீக்கம் செய்யப்படுகின்றனர். இவர்களை மீண்டும் பணியமர்த்திட தாங்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று நான் உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 12 முதல் 20 ஆண்டுகளுக்கும் மேலாக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 10 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. வி.பி. நாகைமாலி: இன்னும் 2 கோரிக்கைகள்தான். பேச அனுமதியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, இன்னும் 2 நிமிடங்கள் எடுத்து முடித்துவிடுங்கள். 12 நிமிடங்கள் பேசுங்கள்.

திரு. வி.பி. நாகைமாலி: அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 12 முதல் 20 ஆண்டுகளுக்கும் மேலாக இளநிலைப் பொறியாளர், இளநிலை தொழில்நுட்ப அலுவலர் நிலை II, தொழில்நுட்ப உதவியாளர், Foreman நிலை I போன்ற பல்வேறு பணிப் பெயர்களில் பணியாற்றி வந்தனர். இவர்களது கல்வித் தகுதி Diploma, Engineering முதல் M.E. வரையாகும். அரசாணை நாள்

5–3–2020, கடிதம் நாள் 14–6–2021 மற்றும் 30–7–2021 நாளிட்ட அரசாணையின்படி 178 பேர் அரசினர் பொறியியல் கல்லூரிகளில் பணி நிரவல் அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். ஆனால், இவர்களின் கல்வித் தகுதி, பணிக்கால அனுபவம், பணிப் பெயர் போன்றவற்றைக் கருத்தில்கொள்ளாமல் I.T.I. தகுதியில் உள்ள துவக்க நிலை தொழில்நுட்பப் பணிகளில், அதாவது Entry level technical post என்ற அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இத்தகைய பணி நிரவல் இவர்களுக்கு மிகுந்த மன உளைச்சல் தருவதாக வேதனைப்படுகின்றனர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து பணி நிரவலில் சென்றுள்ள சுமார் 4,500 பேருக்கு இத்தகைய நிலை இல்லை. எனவே, அரசுக்கு எந்தவித நிதிச் சுமையும் ஏற்படுத்தாத இவர்களது நியாயமான கோரிக்கையை மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன். இதுகுறித்து பல்கலைக்கழக பதிவாளர் மற்றும் முன்னாள் முதல்வர் ஆகியோரிடம் பலமுறை கோரிக்கை வைத்தும் பலனளிக்கவில்லை எனக் கூறுகின்றனர். எனவே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இவர்களது நிதிச் சுமை இல்லாத கோரிக்கையை பரிவோடு நிறைவேற்றித் தர மீண்டும் வேண்டுகிறேன்.

நீண்டநாள் கோரிக்கையான மதுரை காமராஜர் பல்கலைக்கழக கல்லூரியை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியாக மாற்ற வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சென்றிருந்தபோதுகூட அவர்கள் அந்தக் கோரிக்கையை வைத்தார்கள். கடந்த காலங்களில் அது தனியார் பல்கலைக்கழகமாக இருந்தபோது, பல பேர் நியமிக்கப்பட்டுவிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிதிச்சுமை இல்லை என்ற நிலையைச் சொல்ல வேண்டாம். அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் இப்போது மிகுந்த நிதிச்சுமை இருக்கிறது. அந்த நிதியை அரசே அவர்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கின்ற காரணத்தினால், அது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வருங்காலங்களில் படிப்படியாக இது சீரமைக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்

[முனைவர் க. பொன்முடி] [2022 ஏப்ரல் 11

அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நாகைமாலி அவர்கள். நீங்கள் சொல்கின்ற கருத்துகள் எல்லாம் நல்ல கருத்துகளாகத்தான் சொல்கிறீர்கள்.

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு மிகவும் நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நிமிடம். நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் நிறைய நல்ல கருத்துகளை எப்போதும் சொல்வீர்கள். இதற்கு மட்டும் ஒரு நிமிடத்தில் நன்றி சொல்லி அமருங்கள். அதற்கு அடுத்ததாக, இன்னும் 2 அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும்.

திரு. வி.பி. நாகைமாலி: சென்னை அண்ணா பல்கலைக்கழகம் தமிழகத்தில் பாரம்பரியமான தொழில்நுட்ப நிறுவனமாகும். இதன் வளர்ச்சி உலகப் புகழ்பெற்ற உயர் கல்வி நிறுவனங்களுடன் கூட்டாக பயிற்சி வகுப்புகளை நடத்தும் அளவிற்கு உயர்ந்துள்ளது. இந்நிலையில் நிதிப் பற்றாக்குறை என்ற பெயரில் பல்கலைக்கழகத்தில் தினக் கூலி அடிப்படையில் பணிபுரியும் ஆசிரியரல்லாத தொழில்நுட்ப ஊழியர்களை outsourcing முறையில் தனியாரிடம் ஒப்படைக்க பல்கலைக்கழகம் முடிவு செய்துள்ளது. 10 முதல் 17 ஆண்டுகள் வரை பணிபுரிந்துவரும் சுமார் 500 ஊழியர்கள் இப்பல்கலைக்கழகத்தின் மேற்படி முடிவு காரணமாக வேலையிழக்கும் நிலை உள்ளது. இவர்களில் பெரும்பான்மையோர் B.E. போன்ற பட்டம் பெற்றவர்கள். இனி இவர்கள் வெளியில் வேலை தேடும் வாய்ப்பில்லாதவர்களாக உள்ளனர். எனவே, பல்கலைக்கழகம் மேற்படி ஊழியர்களை பணி நிரந்தரம் செய்திட வேண்டுகிறேன்.

பிற்பகல் 2–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. உறுப்பினர், நன்றி சொல்லி அமருங்கள். நீங்கள் 15 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள். நீங்கள், அந்த கால அளவிற்குத்தான் பேச வாய்ப்புக் கேட்டீர்கள். 10 நிமிடங்களுக்குப் பதில் 15 நிமிடங்கள் கொடுத்தாகிவிட்டது. போதும், நன்றி சொல்லுங்கள்.

2022 ஏப்ரல் 11]

திரு. வி.பி. நாகைமாலி: கடந்த பல ஆண்டுகளாக ஆட்சியில் இருந்தவர்கள் ஆசிரியர்களின் நீண்ட நாள் கோரிக்கைகளை நிறைவேற்றாமலேயே சென்றுள்ளனர். அவர்களின் ஏராளமான பிரச்சினைகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஏற்கெனவே அந்தப் பிரச்சினைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குச் சொல்லிவிட்டீர்கள். அடுத்தது பற்றிப் பேசுங்கள்.

திரு. வி.பி. நாகைமாலி: அந்தப் பிரச்சினைகள் நமது ஆட்சியில் தீர்க்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். பகுதிநேர ஆசிரியர்கள் 12,000 பேர் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக பகுதிநேர ஆசிரியர்களாகவே இருக்கிறார்கள். இதுகுறித்து நமது அரசு பரிசீலிக்க வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர் தகுதித் தேர்வு எழுதாமல் ஆசிரியர்களாகப் பணியாற்றுகின்றவர்களுக்கு, இவர்கள் ஆசிரியர் தகுதித் தேர்வில் வெற்றி பெற்றால்தான் சம்பள உயர்வு தர முடியும் என நமது கல்வித் துறை அறிவித்துவிட்டதால், சம்பள உயர்வு இல்லாமல் உள்ளனர். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீதிமன்றம்தான் அவ்வாறு சொல்லியிருக்கிறது. நீங்கள் நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. வி.பி. நாகைமாலி: உரையை முடித்துவிடுகிறேன். இவர்களுக்கு இந்தத் தகுதித் தேர்விலிருந்து விலக்கு அளிக்கப்பட வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தலைப்புச் செய்தியாக ஒவ்வொன்றையும் ஒரே வரியில் சொல்லிவிடுங்கள்.

திரு. வி.பி. நாகைமாலி: உடற்கல்வி ஆசிரியர்கள், கணினி ஆசிரியர்கள் மற்றும் தற்காலிக ஆசிரியர்கள் போன்றோரின் நீண்டகாலப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஒட்டுமொத்தமான ஆசிரியர்கள் பிரச்சினைகளை ஆய்வு செய்து, அவற்றைத் தீர்த்து வைப்பதற்காக, தனியாக, மாண்புமிகு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளைக் கொண்ட ஒரு குழுவை இதற்காக நியமிக்கலாம் என்ற ஆலோசனையையும் நான் உங்கள்முன் வைக்கின்றேன். அரசுப் பள்ளிகளில் படிக்கும். . .

[2022 ஏப்ரல் 11

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள். (குறுக்கீடு) போதும், நன்றி சொல்லுங்கள். (குறுக்கீடு) அவற்றை என்னிடம் தாருங்கள். அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்கிறோம்.

திரு. வி.பி. நாகைமாலி: அரசுப் பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கான சலுகைகளை, அரசு உதவிபெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கும் வழங்குவதற்கு நமது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் நடக்கும் மாணவிகளின்மீதான பாலியல் தொல்லைகளுக்கு இந்த அரசு முடிவு கட்ட வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். தனியார் பள்ளிகளில் நன்கொடை, அதீத கட்டண உயர்வு போன்றவற்றைத் தடுப்பதற்கு உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி, போதும். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள். (குறுக்கீடு) போதும். நிறைய பேசியாகிவிட்டது. (குறுக்கீடு) அவற்றை வாசிக்க நீண்ட நேரமாகும். (குறுக்கீடு) சரி, இரண்டு வரிகளில் முடியுங்கள்.

திரு. வி.பி. நாகைமாலி: உதவித் தொடக்கக் கல்வி அலுவலகங்கள் இல்லாத இடங்களை ஆய்வு செய்து அவற்றை கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். எனது கீழ்வேளூர் தொகுதியில்கூட அலுவலகங்கள் இல்லை என்பதைத் தங்களின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். சென்ற சட்டமன்றக் கூட்டத்தொடரில், நம்முடைய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், 'அரசுப் பள்ளிகள் இனி வறுமையில் இருக்காது; அவை பெருமைப்படக்கூடிய வகையில் இருக்கும்' என்று கூறியதை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி, நன்றி. மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுகிறீர்களா அல்லது அடுத்த உறுப்பினரைப் பேச அழைக்கட்டுமா? (குறுக்கீடு) உரையாற்றியது போதும். (குறுக்கீடு)

மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வி மற்றும் உயர் கல்வி தொடர்பான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் உரையாற்றக்கூடிய வாய்ப்பைத் தந்தமைக்காக முதற்கண் தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய உரையை 10 நிமிடங்களில் முடித்துவிட்டால் நானும் உங்களுக்கு நன்றி சொல்வேன்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: கற்றோரும், கற்காதோரும் சமமாக மாட்டார்கள் என்று திருக்குர்ஆன் சொல்கிறது. அந்த அடிப்படையில், தமிழ்நாட்டில் கற்காதோரைக் கற்றவர்களாக மாற்றுவதற்காக மிகச் சிறப்பான ஓர் ஆட்சியை நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தந்துகொண்டிருக்கின்றார்கள். இரண்டு மானியக் கோரிக்கைகளுக்கான கொள்கை விளக்கக் குறிப்புகளைப் படித்துப் பார்த்தேன். அரசுப் பள்ளிகளில் படிக்கக்கூடிய விளிம்புநிலை மக்களை உயர்த்துவதற்காக மிகப் பெரிய முனைப்புடன் இந்த அரசு செயல்பட்டுவருவதை இந்த கொள்கை விளக்கக் குறிப்பிலே பார்க்க முடிகின்றது. சுருக்கமாக இரண்டு விஷயங்களை நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன்.

பிற்பகல் 2–05

சமீபத்தில், அரசுப் பள்ளிக்கூடங்களில் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. அந்தக் கூட்டங்களில் 23 இலட்சம் பெற்றோர்கள் பங்கு கொண்டு, அந்த அரசுப் பள்ளிகளுடைய வளர்ச்சி குறித்த திட்டங்களைத் தீட்டித் தந்திருப்பது, இந்த அரசு பெற்றோர்களுடைய கருத்துகளையும் எடுத்துக்கொண்டு சிறந்த கல்வியை மாணவர்களுக்கு அளிக்க வேண்டும் என்பதில் எந்த அளவிற்கு நாட்டம் கொண்டிருக்கின்றது என்பதற்கான எடுத்துக்காட்டாக அமைந்திருக்கின்றது. அதைவிட இன்னும் ஒரு மிக முக்கியமான செய்தியையும் நான் இங்கே பகிர விரும்புகின்றேன். நம்முடைய பள்ளிக் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பில் பள்ளி செல்லாத குழந்தைகளைக் கண்டறிவதற்காக இந்த ஆட்சியிலே, திராவிட முன்னேற்றக்

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2022 ஏப்ரல் 11 கழகத்தின் ஆட்சி வந்ததற்குப் பிறகு, அதற்காக ஒரு திட்டம் தீட்டப்பட்டு, அதற்காக வேண்டி ஒரு கல்வி மேலாண்மை தகவல் முறைமை (EMIS Portal) தயாரிக்கப்பட்டு, ஒரு புதிய கைப்பேசி செயலி–App–ம் தயாரிக்கப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் ஆய்வு செய்து, பள்ளி செல்லாத ஒரு இலட்சத்து 88 ஆயிரத்து 487 குழந்தைகளை பள்ளியில் சேர்த்த அரசு, இந்த அரசு என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வியைப் பொறுத்தவரை தமிழக முதலமைச்சர் அவர்கள் "நான் முதல்வன்" என்ற திட்டத்தைத் தற்போது அமல்படுத்தி, அதை 1.3.2022 அன்று தொடங்கி வைத்தார்கள். இதன் மூலமாக ஏராளமான கல்லூரிகளிலே படித்த மாணவர்களுக்கு மிகச் சிறப்பான வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்ததையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அதேபோன்று, அரசுப் பள்ளியிலே படித்த மாணவர்களுக்கு வேளாண்மை, பொறியியல் இன்னும் பிற professional தொழிற்கல்விக் கூடங்களிலும் இட ஒதுக்கீடு அளித்த அரசு இந்த அரசு. அதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே இந்தப் பேரவையில் குறிப்பிட்டதுபோல, இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு ஒரு Hat Trick வெற்றியை, சமூக நீதியினுடைய மூன்றாம் வெற்றியைப் பெற்றிருப்பதையும் நான் இங்கே பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று நாம் அனைவரும் இன்று நிறைவேற்றிய தீர்மானம் NEET–ம் வேண்டாம்; CUET–ம் வேண்டாம்; ஏனென்றால், NEET–ம், CUET–ம் தீட்டு என்று நம்மை ஒதுக்கி வைக்கின்றது. எனவே, அதற்கெதிராக ஒரு சிறப்பு மிகுந்த தீர்மானத்தை இந்த அவையிலே கொண்டு வந்ததற்காக நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

கலைஞர் அவர்கள் ஆட்சியிலே இருந்தபோது, அவர்களுடைய மேற்பார்வையிலேயே, பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரிலே அண்ணா நூற்றாண்டு நூலகத்தை உலகத்தரம் வாய்ந்த ஒரு நூலகமாகக் கட்டியமைத்தார்கள். இப்போது கலைஞர் அவர்கள் இல்லை. ஆனால், சமீபத்தில் தமிழக சட்டமன்றப் பேரவை பொதுக் கணக்குக் குழுவின் சார்பாக நாங்கள் மதுரைக்குச்

2022 ஏப்ரல் 11] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

சென்று கலைஞர் நூலகம் கட்டப்படக்கூடிய அந்த வளாகத்தை நேரிலே பார்த்தோம். கட்டடமும் தரமாக இருக்கின்றது. ஒரு மிகப் பெரிய, தலைசிறந்த ஒரு முன்னோடியான நூலகமாக. தென் மாவட்ட மாணவர்கள், மக்கள் பயன்பெறக்கூடிய வகையிலே, சிறப்பான முறையிலே அந்தக் கட்டடம் கட்டமைக்கப்பட்டு வருகிறதென்பதைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தோம். இது தென் தமிழ்நாட்டு மக்களுக்கு ஒரு மிகச் சிறந்த வாய்ப்பு என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

தமிழ்நாட்டில் பேராசிரியர் என்றால் ஒருவருக்குத்தான் அந்தப் பெயர் பொருந்தும். அது பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்கள். அவர்களுடைய பெயரிலே பள்ளிக் கல்வித் துறையிலே 18,000 புதிய வகுப்பறைக் கட்டடங்கள், திறன்மிகு வகுப்புகள், கணினி ஆய்வகங்கள் எல்லாம் கட்டப்படும் என்று சொல்லப்பட்டிருப்பது அரசுப் பள்ளிக்கூடங்களை மேம்படுத்துவதற்கு எந்தளவிற்கு இந்த அரசு தொலைநோக்குப் பார்வையோடு செயல்படுகின்றது என்பதற்கு எடுத்துக்காட்டாக இருக்கின்றது.

அதேபோன்று, சாமானியர்களும் பசிக்காமல் பள்ளிக்கூடம் வர வேண்டுமென்று கல்விக் கண்ணைத் திறந்த பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பெயரிலே நம்முடைய காங்கிரஸ் சட்டமன்றக் குழுத் தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பெயரில் அரசுக் கல்லூரிகளில் புதிய வகுப்பறைகள், கட்டடங்கள், விடுதிகள், ஆய்வகங்கள், திறன்மிகு வகுப்புகளெல்லாம் கட்டப்படுமென்ற அறிவிப்பையும் நான் இங்கே பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 2–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் புதிய கல்விக் கொள்கை ஒன்றை ஒன்றிய அரசு அறிமுகப்படுத்தியிருக்கின்றது. அந்தப் புதிய கல்விக் கொள்கையை தமிழகம் எதிர்க்கின்றது. எதிர்ப்பதோடு மட்டுமல்லாமல், கூட்டாட்சித் தத்துவத்தில் நம்பிக்கை கொண்ட தமிழகம், தனக்கென ஒரு புதிய கல்விக் கொள்கையை வகுத்துக் கொள்வதற்காக நீதியரசர் முருகேசன் அவர்கள் தலைமையில் ஒரு குழுவை அமைத்திருப்பதை நான் மனமார வரவேற்கின்றேன்.

அதே நேரத்தில், இந்தப் புதிய கல்விக் கொள்கையோடு சேர்ந்து ஒன்றிய அரசு National Higher Education Qualification

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2022 ஏப்ரல் 11

Framework (NHEQF) என்ற ஒரு திட்டத்தை முன்வைத்துள்ளது. அதுகுறித்து மாநிலங்களுடைய முதலமைச்சர்களுடனும் கலந்து பேசவில்லை; மாநிலங்களுடைய உயர் கல்வி அமைச்சர்களுடனும் கலந்து பேசாமல் இந்த NHEQF என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். இன்றைக்கு காலையிலே நாம் CUET–ஐப் பற்றிய தனித் தீர்மானத்தை நிறைவேற்றியபோது, சிலர் எழுந்தார்கள். இதுவொரு exemption–தானே! விரும்பினால் நடைமுறைப்படுத்திக்கொள்ளலாம் என்கின்ற அளவிற்குத்தானே இருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால், இது மிகப் பெரிய ஆபத்து. தமிழ்நாட்டிலுள்ள, அரசு நடத்தக்கூடிய கல்லூரிகளும், நம்முடைய சட்டமன்றம் தீர்மானம் நிறைவேற்றி உருவாக்கியிருக்கக்கூடிய பல்கலைக்கழகங்களும், இந்த National Higher Education Qualification Framework–ல் இருக்கின்றன. வெறுமனே ஓர் ஏவல் ஆட்களாக ஒன்றிய அரசு அனைத்தையும் வகுக்கும். பல்கலைக்கழகத்திற்கான பாடத் திட்டம், pedagogy போன்றவற்றையெல்லாம், ஒன்றிய அரசு நடைமுறைப்படுத்தும்; ஒன்றிய அரசு வகுக்கும். நிதியும் தரமாட்டார்கள். அதை வெறும் implementing agency ஆக, அதைச் செயல்படுத்துவது மட்டும்தான் மாநில அரசு என்ற அளவிற்கு இந்த policy framework உருவாக்கப்பட்டு, அதை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சியைச் செய்திருக்கின்றார்கள்.

இந்த நேரத்தில் அறிவாசான் அம்பேத்கர் அவர்கள் அரசியல் நிர்ணய சபையில் பேசிய உரையிலிருந்து ஒன்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். 'This Constitution will not reduce the States to Municipalities' என்று அம்பேத்கர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார். அதாவது, நாம் இயற்றியிருக்கின்ற இந்த அரசமைப்புச் சட்டம் மாநிலங்களை municipality அளவிற்கு, நகர சபை அளவிற்குக் குறைக்காது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அதே அரசமைப்புச் சட்டத்தை வைத்திருக்கிறார்கள்; கும்பிடுவார்கள். ஆனால், அந்த அரசமைப்புச் சட்டம் தந்திருக்கக்கூடிய உரிமைகளை ஒவ்வொன்றாக பறித்துக் கொண்டிருக்கின்றார்கள். அதிலும் குறிப்பாக, உயர் கல்வியிலே, அரசுக் கல்லூரிகளே இருக்காது; பல்கலைக்கழகங்கள் பெயரளவிலே இருக்கும்; அதற்கு நிதிகூட தரமாட்டார்கள் என்ற மிக ஆபத்தான ஒரு கொள்கையை வகுத்திருக்கின்றார்கள். இதற்கு எதிராக தமிழக அரசு சிறப்பான முறையில் எதிர்வினையாற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

2022 ஏப்ரல் 11] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பத்து ஆண்டுகளாக பள்ளிக் கல்வியிலும் சரி, அதேபோல உயர் கல்வியிலும் சரி, பல்வேறு வகையான குழப்பங்கள், சீர்கேடுகள், நீதிமன்றங்களில் வழக்குகள் என்பன போன்று பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், தாங்கள் உரையாற்ற ஆரம்பித்து பத்து நிமிடங்கள் ஆகிவிட்டன.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உயர் கல்வித் துறையின் சார்பில், அரசின் சார்பில் ஒரு வல்லுநர் குழுவை அமைத்து, இந்த பத்து ஆண்டுகளில் கல்வித் துறையில் ஏற்பட்டிருக்கக்கூடிய சீர்கேடுகளை நிவர்த்தி செய்வதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பட்ஜெட் கூட்டத்தொடர் விவாதத்தின்போது, நான் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டத்தை கல்வி மேம்பாட்டுத் திட்டமாக உருவாக்கி, உயர் கல்விக்குச் செல்லக்கூடிய மாணவ, மாணவிகளுக்கு மாதம் 1,000 ரூபாய் என்ற திட்டம் அடுத்த தலைமுறையைக் கருத்தில்கொண்டு வகுக்கப்பட்ட திட்டம் என்று குறிப்பிட்டேன். அது அரசுப் பள்ளிகள் என்ற அளவிலே நிற்கிறது. அரசு உதவி பெறக்கூடிய பள்ளிகளில் படிக்கக்கூடிய மாணவிகளும் விளிம்பு நிலையிலேதான் இருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை அவர்களுக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 2–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையிலே நாம் செய்தித்தாள்களிலே, தலைநகர் டில்லியில் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் நேற்று இரவு என்ன நடைபெற்றது என்ற செய்தியை படித்துப் பார்த்திருக்கின்றோம். சாப்பிடுவதற்காக Non–vegetarian food சமைத்த மாணவர்கள் தாக்குதலுக்கு இலக்கான செய்திகளையெல்லாம் பார்த்திருக்கின்றோம். ஆனால், தமிழ்நாட்டிலே சமூக நல்லிணக்கத்தை கல்வி நிலையங்களில் வலுப்படுத்த வேண்டுமென்பதற்காக 'தலைநிமிரும் தமிழகம்' திட்டத்தில் தமிழ்நாடு சிறுபான்மை ஆணையத்தின் சார்பாக ஒவ்வொரு மாவட்டத்திலும் மாணவர்களுக்கு பேச்சுப்போட்டி நடத்தப்பட்டு, அந்தப் பேச்சுப் போட்டியின் வாயிலாக கல்வி வளாகங்களிலே சமூக நீதியையும், சமூக நல்லிணக்கத்தையும்

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2022 ஏப்ரல் 11

மேம்படுத்தி வரக்கூடிய இந்த அரசுக்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாட்டில் மத நல்லிணக்கம் மற்றும் எல்லா நல்லிணக்கமும் இருக்கிறது என்று மாண்புமிகு Governor அவர்களே சொல்லியிருக்கின்றார்களே!

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: நல்லவேளை, மாண்புமிகு கவர்னரை நினைவுபடுத்தினீர்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சற்று முன்புகூட அந்த விவாதம் நடைபெற்றது. இன்றைக்கு பல்கலைக்கழகத்தின் வேந்தராக Governor–தான் இருக்கின்றார். Governor பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவுக்குச் செல்கின்றார். அப்படிச் செல்லும்போது, தமிழக அரசு, தமிழக மக்கள் வரிப்பணம் இதனால் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் தொன்றுதொட்டு இங்கே இருக்கக்கூடிய அரசுகள் எடுத்துவரக்கூடிய ** ஒரு நிலையைப் பார்க்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் வேண்டாம்.

முனைவர்எம்.எச்.ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, நான் சொல்லவரக்கூடிய செய்தி என்னவென்றால், மாநிலத்தில் இருக்கக்கூடிய பல்கலைக்கழகங்களின் வேந்தர்களாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில முதலமைச்சர்தான் இருக்க வேண்டும். ஆளுநர்கள், வேந்தர்கள் என்ற நிலையை மாற்றுவதற்கு நிச்சயமாக நாம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி சொல்லி உரையை முடியுங்கள். நீங்கள் பேச ஆரம்பித்து 15 நிமிடங்கள் ஆகப்போகிறது.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: உரையை முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மை மொழி, உருதுமொழி. அந்த உருதுவழி பள்ளிக்கூடங்கள் பற்றி சில தகவல்களை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். உருது சரக, வட்டாரக் கல்வி அலுவலர்கள் நியமிக்கப்பட வேண்டும். சுமார் 450 உருது தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் 20 மாவட்டங்களில் இருக்கின்றன. அவற்றில் பல மூடப்பட்டுள்ளன.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2022 ஏப்ரல் 11] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

அவற்றைத் திறந்து, உருது வட்டாரக் கல்வி அலுவலர்கள் நியமனம் செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், போதும். நீங்கள் பேச ஆரம்பித்து 15 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) போதும் நன்றி சொல்லுங்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: ஒரேயொரு நிமிடம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. சபை இன்னும் 10, 15 நாட்களுக்குமேல் நடக்கும்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: உரையை முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையில்தானே இதைப் பேசமுடியும். முதலமைச்சராக கலைஞர் அவர்கள் இருந்தபோது உருது படிக்கக்கூடிய மாணவர்கள் 10–வது வகுப்பு தேர்வு எழுதும்போது அவர்கள் தமிழுடன் உருதுவையும் இரண்டாவது பாடமாக எடுக்கலாம் என்று ஓர் அரசாணையைப் பிறப்பித்தார்கள். அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். உருது உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிக்கூடங்களில் உருதுவழி தலைமையாசிரியர்கள் நியமனம் செய்யப்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறுதியாக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி சொல்லி உரையை முடியுங்கள். இறுதியாகச் சொல்லுங்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: பல்கலைக்கழகக் கல்லூரிகளிலே Guest Lecturers ஆக 10 ஆண்டுகளுக்குமேல் பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடியவர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடைசியாக, வேளாண் மண்டலம். தஞ்சைத் தரணி, டெல்டா மாவட்டம். டெல்டா மாவட்டத்தில்தான் என்னுடைய பாபநாசம் தொகுதி இருக்கின்றது. அங்கு வேளாண் தொடர்பான ஒரு கல்லூரியை மறைந்த அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் பெயரில் அமைக்க வேண்டும் என்றும், வேளாண் அல்லது தோட்டக்கலைக்கான ஒரு specialised கல்லூரியை பாபநாசம் தொகுதியில் அமைக்க வேண்டுமென்றும் கேட்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2022 ஏப்ரல் 11

தொகுதிக் கோரிக்கைகள்:

பாபநாசம் கடைவீதியில் அரசு மருத்துவமனை அருகில் உள்ள அரசு இடத்தில் வட்டாரக் கல்வி அலுவலகம் கட்டித் தரப்பட வேண்டும்.

பாபநாசத்தில் அரசு நூலகம் தற்போது அரசினர் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் தற்காலிகமாக செயல்பட்டு வருகின்றது. பாபநாசத்தில் அரசு நூலகம் தனி கட்டடத்தில் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாபநாசம் தொகுதி, அம்மாபேட்டையில் கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்படாத நூலகக் கட்டடத்தைத் திறந்து, நவீன வசதிகளுடன் செயல்பட விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பாபநாசம் தொகுதி, ராஜகிரியில் 56 ஆண்டுகளாக பழமையான கட்டடத்தில் நூலகம் செயல்பட்டு வருகின்றது. இந்த நூலகத்தினை அரசு சொந்தக் கட்டடத்தில் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா அவர்கள்.

பிற்பகல் 2–20

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருமொழிக் கொள்கையை தமிழகத்தில் வித்திட்ட, தமிழ்நாடு என்று பெயர்சூட்டி மகிழ்ந்திட்ட, நீடுதுயில் நீக்கப் பாடி வந்த நிலா, காடு கமழ வந்த கற்பூரச் சொற்கோ பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு என்னுடைய வணக்கம். சத்துணவுத் திட்டம் தந்த கொடை வள்ளல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு என் வணக்கம். சமூகத்தில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி, குறிப்பாக சமூக நலன் காத்து, பல்வேறு திட்டங்களை மகளிருக்கென கொடுத்திட்ட எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) 7.5 விழுக்காட்டிற்குச் சொந்தக்காரர், டெல்டா பகுதியை வேளாண் பாதுகாப்பு மண்டலமாக அறிவித்த போற்றுதலுக்குரிய எதிர்க்கட்சித் தலைவர், முன்னாள் முதலமைச்சர், அருமை அண்ணன் திரு. E.P.S. அவர்களுக்கும், ஜல்லிக்கட்டு உரிமையை நிலைநாட்டி, இந்தச் சட்டமன்றத்தில் 11 முறை வரியில்லா பட்ஜெட்டை சமர்ப்பித்திட்ட அருமை அண்ணன் திரு. O.P.S.

அவர்களுக்கும், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும், போற்றுதலுக்குரிய எதிர்க்கட்சிக் கொறடா அவர்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பண்பாடு, கலாச்சாரம், மொழி உணர்வு, அறிவியல் என அத்துணையையும் தமிழக மக்களுக்கு பறைசாற்றிக் கொண்டிருக்கிற பள்ளிக் கல்வி மற்றும் உயர் கல்வி ஆகிய துறைகள் பற்றிய மானியக் கோரிக்கைகள்மீதான விவாதத்தில் பேசுவதற்கு நல்ல வாய்ப்பு கிடைத்தமைக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இத்துறைகளின்மீதான விவாதத்தில் பேசுவதற்கு முன்பாக என்னுடைய தொகுதி சார்ந்த கோரிக்கையினை மட்டும் வைக்கிறேன்.

குறிப்பாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, அறுபடை வீடுகளுள் முதற்படையாக விளங்கும் திருப்பரங்குன்றத்திலே, கல்வி நிலையங்கள் நிறைந்திருக்கின்ற திருப்பரங்குன்றத்திலே, பஞ்சு குடோன்கள் நிறைந்திருக்கின்ற திருப்பரங்குன்றத்திலே ஒரு தீயணைப்பு நிலையத்தை உங்கள் துறையின் மூலமாக அமைத்துக் கொடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை விடுக்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள், திருமங்கலம் பிரதான கால்வாயிலிருந்து வடபழஞ்சி நீட்டிப்புக் கால்வாயை, 7 கண்மாய்களுக்கு, கிராமங்களிலே சொல்வதைப் போன்று, வானம் பார்த்த கண்மாய்களாக இருக்கின்ற 7 கண்மாய்களுக்கு நீர்வழிச் சாலைகளை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பரங்குன்றம் பேருந்து நிலையம் அருகே இருக்கின்ற, கோயிலுக்கு அருகே இருக்கின்ற உயர்மட்டப் பாலம் கட்டப்பட்டு 11 ஆண்டு காலம் ஆகிவிட்ட நிலையில், அந்தப் பாலம் சர்வீஸ் ரோடு இல்லாமல் மிகப் பெரிய நெருக்கடியை சந்தித்துக் கொண்டிருக்கிறது. திருக்கோயிலுக்கும், சுபமுகூர்த்தத்திற்கு வருபவர்களும், அங்கு சர்வீஸ் ரோடு இல்லாத காரணத்தால் மிகப் பெரிய நெருக்கடியை சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி, திருப்பரங்குன்றத்திலுள்ள அந்த உயர்மட்டப் பாலத்திற்கு சர்வீஸ் ரோடு அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. வி.வி. ராஜன் செல்லப்பா] [2022 ஏப்ரல் 11

திருப்பரங்குன்றத்தில் விரிவாக்கப்பட்ட பகுதியிலே மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு அறிவிப்பு கொடுத்தார்கள். 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாண்புமிகு முதல்வர் அவர்களும்கூட அறிவிப்புக் கொடுத்தார்கள். ஆனால், அது அறிவிப்போடு நிற்கிறது. சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் சொல்லியும்கூட, இன்னும் அதற்கான அரசாணையை தாங்கள் வெளியிடவில்லை. அது அரசின் அறிவிப்பில் இருக்கிறது என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள், அன்புகூர்ந்து மக்களின் அத்தியாவசியத்தைக் கருதி, பாதாள சாக்கடைத் திட்டத்தை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் அவர்கள், 10 ஆயிரம் நெசவாளர் குடும்பங்கள் இருக்கின்ற நிலையூரில் அரசு கைத்தறிக் கூடத்தை உருவாக்கித் தர வேண்டும். அதனைப்போன்று, பூக்கள் அதிகம் விளையும் வளையங்குளம் பகுதியில் வாசனை திரவியத் தொழிற்சாலை ஒன்றை அரசின் சார்பாக நிறுவ வேண்டும் என்ற வேண்டுகோளையும் வைக்கிறேன்.

மிக முக்கியமாக, இன்றைக்கு மதுரையிலேயே ஓர் அசாதாரண சூழ்நிலை நிலவிக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பல்வேறு கருத்துகளைச் சொன்னார்கள். மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் மிகப் பெரிய நிதி நெருக்கடியில் இருக்கிறது என்பது உண்மை. பல்வேறு காப்புத் தொகைகளையெல்லாம் எடுத்து செலவழித்து, சம்பளமாக 11 கோடி ரூபாயை அளிக்கிறார்கள். நேற்று முன்தினம், மீனாட்சியம்மன் கோயிலிலே கொடி ஏற்றுகிறபோது, அங்கு தொகுப்பூதியத்தில் பணிபுரிந்த 135 பணியாளர்களை பணியிலிருந்து, வேந்தர், துணைவேந்தர் ஆகியோர் விலக்கியிருக்கிறார்கள். அவர்கள் 13 ஆண்டுக் காலம் பணியாற்றியவர்கள். ஒன்றல்ல, இரண்டல்ல, வெறும் 10,000 ரூபாய்க்கு 13 ஆண்டுகளாகப் பணியாற்றிய 135 பணியாளர்களை, தொழில்நுட்பப் பணியாளர்களை, பகுதிநேரப் பணியாளர்களை விலக்கியிருக்கிறார்கள். அந்த 135 பேருக்கும் மொத்த சம்பளமே 11 இலட்சம் ரூபாய்தான். ஏனையவர்களுக்கு 10½ கோடி சம்பளத்தை வழங்குகிற அந்த காமராஜர் பல்கலைக்கழகத்தால் ரூபாய் 11 இலட்சத்தை வழங்க முடியவில்லை என்பது ஆச்சரியமாக இருக்கிறது. மாதந்தோறும்

10½ கோடி ரூபாய் சம்பளம் கொடுக்கிறார்கள். இந்த 135 பேருக்கும் 11 இலட்சம் ரூபாய்தான் சம்பளத் தொகை. ஆகவே, அன்புகூர்ந்து மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களும் சரி, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் சரி, அந்த 135 பேருக்கான அந்த விடுவிப்பு ஆணையை உடனடியாக இரத்து செய்து, அவர்களைப் பணியில் சேர்க்க வேண்டும் என்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 2–25

அதோடுமட்டுமல்ல, இன்னும் ஒரு முக்கியமான வேண்டுகோளாக நீங்கள் பரிந்துரைக்க வேண்டிய வேலை உள்ளது. நம்முடைய மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் நேற்று, 'எய்ம்ஸ் மருத்துவமனை கட்டடம் கட்டும் பணி விரைவில் தொடங்கப்படும்' என்றார். அதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், 3 நாட்களுக்கு முன்னதாக மதுரை AIIMS மருத்துவக் கல்லூரியின் முதலாம் ஆண்டு மாணவர்கள் 50 பேர் ராமநாதபுரம் மருத்துவக் கல்லூரியில் படிக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதோடுமட்டுமல்ல, JIPMER மருத்துவமனைதான் mentor institute ஆக இருக்கிறது. திருப்பரங்குன்றம் தொகுதியில் உள்ள அந்த AIIMS மருத்துவக் கல்லூரியிலிருந்து விருதுநகர் மருத்துவக் கல்லூரி 25 கிலோ மீட்டர் தூரம் மட்டும்தான் உள்ளது. மதுரை மருத்துவக் கல்லூரி 7 கிலோ மீட்டர் தூரம்தான் உள்ளது. அதனால், தயவுசெய்து நீங்கள் மத்திய அரசிடம் பரிந்துரைத்து, 125 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ராமநாதபுரத்திற்குப் போய் படிப்பதைவிட, 25 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிற விருதுநகரிலே படிக்கலாம். அதேபோல், mentor institute, JIPMER மருத்துவமனையில் இருக்கிறது. தயவுசெய்து மத்திய அரசுக்குப் பரிந்துரைத்து, மதுரை மருத்துவக் கல்லூரிக்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இதற்குப் பதில் சொல்ல வேண்டுமென்கிறார். சுருக்கமாகச் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, AIIMS மருத்துவக் கல்லூரியில் 50 மாணவர்கள் சேர்க்கை என்பது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய தொடர் அழுத்தங்களால் கிடைக்கப்பெற்றிருக்கிற ஒன்று. அதற்கு அவர்கள் முதலில், மதுரையில் இருக்கிற ஒரு தனியார் மருத்துவக்

[திரு. மா. சுப்பிரமணியன்] [2022 ஏப்ரல் 11

கல்லூரியில் சேர்க்கலாம் என்று சொன்னார்கள். அதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தனியார் மருத்துவக் கல்லூரியில் AIIMS மாணவர்களை சேர்ப்பது இயலாது என்று சொல்லிவிட்டார்கள். பிறகு தனியார் கலைக் கல்லூரியில் சேர்க்கலாம் என்றார்கள். அதற்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒப்புதல் தரவில்லை. இந்த நிலையில் JIPMER மருத்துவக் கல்லூரியில் சேர்க்கலாமா என்று கேட்டார்கள். அதற்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், AIIMS கல்லூரி மாணவர்களை JIPMER–ல் சேர்ப்பது சரியாக இருக்காது என்றும் கருத்து தெரிவித்தார்கள். அதற்குப் பிறகுதான் அவர்களை தமிழகத்திலே இருக்கிற ஏதாவது ஒரு மருத்துவக் கல்லூரியிலே சேர்க்கலாம் என்றார்கள். மரியாதைக்குரிய பேரவை உறுப்பினர் சொன்னதுமாதிரி, விருதுநகரில் 150 மாணவர்களுக்கான சேர்க்கை முடிந்துவிட்டது. மதுரையில் 250 மாணவர்களுக்கான காலியிடங்கள் இருந்தன. அதுவும் முடிந்துவிட்டது. ராமநாதபுரத்தில் 150 இடங்களுக்கு நாம் கட்டிய கட்டடம் காலியாக இருக்கிறது. ஆனால், மாணவர் சேர்க்கைக்கு ஒன்றிய அரசு அனுமதித்தது 100 பேர். அங்கே 50 மாணவர்களைச் சேர்க்கலாம். அந்தவகையில்தான் AIIMS மாணவர்கள் ராமநாதபுரத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள் என்ற தகவலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினருக்கு நல்ல பதில் கிடைத்திருக்கிறது. அடுத்த subject குறித்துப் பேசுங்கள்.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: அமைச்சரின் பதிலை வரவேற்கிறேன். வாய்ப்பிருந்தால், நீங்கள் மத்திய அரசுக்குப் பரிந்துரைத்து, விருதுநகருக்கும் மதுரைக்கும் அந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்ல, இன்றைக்கு பள்ளி மாணவர்கள், குறிப்பாக அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவிகள் உயர் கல்விக்குப் போகிறபோது, மாதம் ரூ.1,000/– வழங்குதல் என்ற ஒரு புதிய திட்டத்தினை இந்த அரசு அறிவித்திருக்கிறது. இதனை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால், அதேநேரத்தில் நீங்கள் அறிவித்த புள்ளிவிவரப்படி 6 இலட்சம் மாணவியர்களுக்கு அந்த நிதியுதவியை வழங்குவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், தாங்கள் கொடுத்த தகவலின்படி, பல்வேறு தரவுகளின்படி 2 இலட்சம் மாணவிகள்தான் அரசுப் பள்ளிகளிலிருந்து உயர் கல்வி படிக்கச் செல்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. அதிலேகூட

2022 ஏப்ரல் 11] [திரு. வி.வி. ராஜன் செல்லப்பா]

70 விழுக்காடு குறையலாம். அதனால்தான் எங்களுடைய வேண்டுகோள் என்னவென்றால், இந்தத் திட்டத்தை எப்போது செயல்படுத்துவதாக இருந்தாலும், ஒரு இக்கட்டான சூழ்நிலை உருவாகும். அதற்கு முன்னதாக, நீங்கள் திட்டமிட்டபடி உயர் கல்வி படிக்கிற அந்த மாணவியருக்கு மட்டுமல்ல, ஆதி திராவிட மாணவிகளுக்கும், பட்டியலின மாணவியர்களுக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் கொடுக்கிற திட்டத்தோடு மதுரை, திண்டுக்கல் மாவட்டங்களில் படிக்கிற பிறமலைக் கள்ளர் பள்ளிகளில் படிக்கிற மாணவிகளுக்கும் அந்த ஆயிரம் ரூபாய் திட்டத்தை கூடுதலாக விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 12 ஆம் வகுப்பு வரை படித்து முடிக்கின்ற மாணவிகள் அனைவருக்கும், 6 இலட்சம் பேருக்கும், உயர் கல்வியில் சேரும் அனைவருக்கும் 1,000 ரூபாய் வழங்கப்படும். 2 இலட்சம், 1½ இலட்சம் என்று முன்னாள் கல்வித் துறை அமைச்சர் பேசும்போதுகூட பேசினார். 6 இலட்சம் பேர் படிக்கிறார்கள். 1½ இலட்சம் பேருக்குத்தான் அது கிடைக்கும் என்பதுமாதிரி அவர் சொன்னார். அப்படியில்லை, 6 இலட்சம் மாணவிகளுக்கும் கிடைக்கும். அதுமட்டுமல்ல, 10 ஆம் வகுப்புவரை அரசுப் பள்ளிகளில் படித்தவர்கள் polytechnic கல்லூரிகளில் சேர்ந்து படிப்பவர்களுக்கும் 1,000 ரூபாய் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்களுக்கும் இதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன், பிறகு பேசலாமே! (குறுக்கீடு) நன்றி சொல்லப் போகிறீர்களா? (குறுக்கீடு) சரி, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்த எண்ணிக்கையில் மகளிருக்காக இடம் ஒதுக்கப்படுகிறது. அரசுப் பள்ளிகளில் தமிழ் வழியில் 10 ஆம் வகுப்பும், 12 ஆம் வகுப்பும் படிக்கிற மாணவிகள், எண்ணிக்கை

[திரு. கே.ஏ. செங்கோட்டையன்] [2022 ஏப்ரல் 11

எப்படியிருந்தாலும் குறைந்தது 2 இலட்சம் இருக்கும். 6 இலட்சம் வருவதற்கு வாய்ப்பே இருக்காது. (குறுக்கீடு) இல்லை, இருப்பதற்கு வாய்ப்பே இல்லை.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: தமிழ்வழிக் கல்வியில் படிக்கிறவர்கள் மட்டுமல்ல. அரசுப் பள்ளிகளில் படிக்கிற மாணவிகள் அனைவருக்கும்; அதுதான் 6 இலட்சம் பேர். நீங்கள் சொன்னது தமிழ்வழிக் கல்வி என்று சொன்னீர்கள். நீங்கள் தயவுசெய்து சரியாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, திரு. ராஜன் செல்லப்பா அவர்கள் பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடு) திரு. செங்கோட்டையன், அமைச்சர் உங்களுக்குத் தெளிவுபடுத்திவிட்டாரல்லவா! (குறுக்கீடு) சரி, திரு. செங்கோட்டையன் அவர்கள், ஒரு வார்த்தையில் சொல்லிவிடுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: அரசுப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்கள் அனைவருமே தமிழ்வழிக் கல்வியில்தான் படிக்கிறார்கள். எங்களுக்கு அது தெரியும். அது தெளிவாக இருக்கிறது. அதில் மாற்றுக் கருத்துகளே இல்லை. ஆனால், எண்ணிக்கையைப் பொறுத்தவரையில் நீங்கள் சொல்வதைப்போல் 6 இலட்சம் வருவதற்கு வாய்ப்பு இல்லை.

பிற்பகல் 2–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசுப் பள்ளிகளிலும் ஆங்கிலவழிக் கல்வி இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜன் செல்லப்பா அவர்கள்.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: உயர் கல்வித் துறை இன்றைக்கு சிறப்பாகச் செயல்படுவதற்கு முழுமுதற் காரணமான மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசில், உயர் கல்வித் துறை ஒரு பொற்காலமாகத் திகழ்ந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு காலகட்டங்களில் மத்திய அரசு நிர்ணயித்த அந்தக் குழுக்களின் தரவுப்படி 27 விழுக்காடு போதும், நம்முடைய குறிக்கோள் 50 விழுக்காடு உயர் கல்வியிலே வர வேண்டுமென்று சொன்னதையெல்லாம் மீறி, 2019–2020 ஆம் ஆண்டு இந்தியத் தணிக்கை அறிக்கையின்படி அன்றைக்கு 51.4 விழுக்காடு உயர் கல்வியிலே அண்ணா திராவிட முன்னேற்றக்

கழக அரசு, மாண்புமிகு அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசு ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்றபோது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், உயர் கல்வி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சீக்கிரம் பேசி உரையை முடியுங்கள்.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: இப்போதுதான் subject–க்கு வந்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 10 நிமிடங்கள் முடிந்துவிட்டன.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: ஆக, அம்மா அவர்களுடைய அரசால் அன்றைக்கு 11 மருத்துவக் கல்லூரிகள், பல்வேறு சுய உதவிக் கல்லூரிகள் உருவாக்கப்பட்டு, உறுப்புக் கல்லூரிகள் அரசு கல்லூரிகளாக்கப்பட்டு, கால்நடைக் கல்லூரிகள், சட்டக் கல்லூரிகள் என்று பல்வேறு திட்டங்களை மிகச் சிறப்பாக செயல்படுத்தியது அந்த அரசு. தொடர்ந்து இந்த அரசும் பல்வேறு திட்டங்களைக் கொண்டு வர வேண்டுமென்ற விருப்பத்தோடுதான் நாங்கள் இந்த நல்ல திட்டங்களையெல்லாம் சொல்ல வேண்டுமென்று ஆசைப்படுகிறோம்.

பொதுவாக, இன்றைக்கு நம் முன்பு, புதிய கல்விக் கொள்கையிலே இருக்கின்ற மாற்றங்கள், இரு மொழி கல்வித் திட்டங்கள் போன்ற பல்வேறு திட்டங்களைச் செயலாற்ற வேண்டிய அவசியம் இருக்கிறது. குறிப்பாகச் சொல்வார்கள், ஒரு வகுப்பறையிலிருந்துதான் தேசியத் தலைவர்கள் உருவாகிறார்கள் என்பதல்ல; தேசியக் கொள்கையின் அடிப்படையில் தேசியத்தின் தலைவிதி நிர்ணயிக்கப்படும் என்பார்கள். இன்றைக்கு பள்ளிக் கல்வித் துறையிலும் சரி, உயர் கல்வித் துறையிலும் சரி குறிப்பாக உட்கட்டமைப்பு வசதிகள் மிகச் சிறப்பாக இருக்க வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். இன்றைக்கு வருகின்ற பத்திரிகைச் செய்திகள், பல்வேறு செய்திகளைப் பார்க்கின்றபோது உட்கட்டமைப்புக்கு மிகச் சிறப்பாக பள்ளிக் கல்வித் துறை அதிகமான நிதியை ஒதுக்கியிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்கூட எங்கள் தொகுதியிலே பல்வேறு கட்டடங்களைச் சுற்றிப் பார்த்தார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், இன்றைக்கு பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதைவிட, அனைத்து பள்ளிக் கழிப்பறைகள் பற்றிய விமர்சனங்கள் ஒவ்வொரு

[திரு. வி.வி. ராஜன் செல்லப்பா] [2022 ஏப்ரல் 11

ஊடகங்களிலும் வந்துகொண்டிருக்கின்றன. நீங்கள் 34 கோடி ரூபாய் நிதியொதுக்கியிருக்கிறீர்கள். அந்த 34 கோடி ரூபாய் போதுமானதல்ல. தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து பள்ளிக் கழிப்பறைகளையும் கட்டுவதோடு மட்டுமல்ல, அதைப் பராமரிக்கின்ற பணி மாணவர்களிடமோ, ஆசிரியர்களிடமோ இருக்கக் கூடாது. ஒப்பந்தப் பணியாளர்கள் அல்லது துப்புரவுப் பணியாளர்கள் போன்றவர்களை உடனடியாக அதற்காக நியமனம் செய்து, அதற்கென்று தனிக் குழு அமையுங்கள். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால் அதற்கென்று மேலாண்மைக் குழு இருக்கின்றது. அந்த மேலாண்மைக் குழுவிலே பெற்றோர், ஆசிரியர்கள், காவலர் என பொதுப் பணியாற்றுபவர்கள் அத்தனை பேரும் இடம் பெற வேண்டும். பள்ளிக் கல்வித் துறையிலே மேலாண்மைக் குழு மிகச் சிறப்பாக, நீண்ட நாட்களாக இருக்கிறது. ஆனால், சிறப்பாகப் பணியாற்ற வேண்டிய கட்டாயம் குறித்து இப்போது ஊடகச் செய்திகளிலே, பத்திரிகைச் செய்திகளிலே நம்மால் பார்க்க முடிகிறது. ஆக, பல்வேறு நிகழ்வுகள் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. **—பல்வேறு மாணவர்கள் ஆசிரியர்களை, சில மாணவர்கள்—எல்லோரும் அல்ல. பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, எல்லா மாணவர்களும் அல்ல, சில மாணவர்களை—ஏனென்றால் நாம் எல்லோருமே மாணவர்களாக இருந்தவர்கள். ** இன்றைக்கு நிலைமை என்ன? ** இதற்குக் காரணம், இன்றைக்கு இருக்கின்ற நடைமுறை மட்டுமல்ல, குறிப்பாக மாணவர்களின் மத்தியிலே இந்த கொரோனாவிற்குப் பிறகு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்பதை நீக்கிவிடுவோம். நீங்கள், இருக்கின்ற நிலவரங்களை, பிரச்சினைகளைச் சொல்லுங்கள்.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: நம்முடைய காவல் துறை தலைவர் அவர்களே இன்றைக்கு பள்ளி அருகிலே போதைப் பொருட்கள் விற்பவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, மாணவர்களுக்கு மிக ஒழுக்கத்தோடு கல்வியைக் கற்றுக் கொடுக்க வேண்டிய காலகட்டம் இருக்கிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2022 ஏப்ரல் 11] [திரு. வி.வி. ராஜன் செல்லப்பா]

இன்றைக்கு பள்ளிக் கல்வித் துறை, உயர் கல்வித் துறையிலே இருக்கின்ற முக்கியமான திட்டங்களை, நிகழ்வுகளை தலைப்புச் செய்தியாகவே நான் சொல்லிவிடுகிறேன். கல்விக் கட்டண உயர்வு, தேர்வுக் கட்டண உயர்வு, வினாத்தாள் கசிதல், சுற்றுச் சுவர் இடிதல், பேருந்து விபத்துகள், கழிப்பறை இல்லாமை, மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கழிப்பறை சுத்தம் செய்ய வேண்டிய அவல நிலைமை, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் இல்லாத நிலைமை, சில மாணவர்கள் ஆசிரியர்களை மிரட்டுகின்ற நிலைமை, சில ஆசிரியர்கள் வகுப்பறையிலே தூங்குகின்ற நிலைமை, மாணவர்கள் மாடி bus–ல் பயணம், மாணவியர்களுக்கு எதிரான பல்வேறு வன்முறைக் குற்றங்கள், இதுபோன்ற பல்வேறு நிகழ்வுகளை மாற்றிடுவதற்கு நம்முடைய பள்ளிக் கல்வித் துறையும், உயர் கல்வித் துறையும் மிகச் சிறப்பாக செயலாற்ற வேண்டுமென்கின்ற வேண்டுகோளை விடுத்து, குறிப்பாக பெற்றோர்–ஆசிரியர் கழகம் மட்டுமல்லாமல், மேலாண்மைக் குழுக்கள் மிகச் சிறப்பாக அமைய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–35

இன்றைக்கு, பல்வேறு தகவல்களை நான் சொல்ல விரும்பினாலும்கூட, காலம் கருதி, ஒரு தேசத்தின் தலைவிதி அந்த வகுப்பறையில் நிர்ணயிக்கப்படுகிறது என்று நான் குறிப்பிட்டேன். இந்த விதியை நிர்ணயிப்பதில் அரசுதான் தனது ஆதிக்கத்தை செலுத்துகிறது. இன்றைய நவீன காலத்தில், மிகத் தெளிவாக, எத்தனை மாணவர்கள் வந்தார்கள்? எத்தனை மாணவர்கள் பள்ளியிலேயே உணவு உண்டார்கள்? எத்தனை பேரிடமிருந்து பல்வேறு வகையான தகவல்கள் உங்களுக்குக் கிடைக்கின்றது என்பதை உங்கள் மத்தியிலே கேட்கிறேன். அதேபோன்று, ஆசிரியர்களின் தகுதித் திறன், மாணவர்களின் கற்கும் திறமை இவற்றையெல்லாம் நீங்கள் ஆய்வு செய்து, நல்ல குழுக்களை நியமித்து, இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையை மாற்றியாக வேண்டும். இதுகுறித்து பேசுகின்ற நிலைமை இன்றைக்கு இருப்பதனால், அந்த நிலைமை மாற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி சொல்லி உரையை முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். நீங்கள் பேச ஆரம்பித்து 15 நிமிடங்கள் ஆகிவிட்டன. நன்றாக, தாராளமாக தண்ணீரைக் குடித்துவிட்டு, நிறைவாக நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

[2022 ஏப்ரல் 11

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: மாண்புமிகு சபாநாயகர் அவர்களுக்கு என்றென்றும் நான் நன்றிக் கடன்பட்டிருக்கிறேன். ஏனென்றால், அவர்கள் எங்களிடம் அன்போடு, உரிமையோடு பேசக்கூடியவர். இன்றைக்கு அல்ல, என்றைக்கும் உரிமையோடு பேசக்கூடியவர். அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான், conclusion–க்கு வந்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: இன்றைக்கு இருக்கின்ற நம்முடைய சூழ்நிலைகளான நீட் தேர்வு; மேகதாது அணையில் இருக்கின்ற கர்நாடக மாநிலத்தின் ஆதிக்கம்; 7 பேர் விடுதலை; மாதந்தோறும் குடும்பத் தலைவிக்கு ரூ.1,000/– வழங்கும் திட்டம்; முல்லைப் பெரியாறு பேபி அணையில் இருக்கக்கூடிய 15 மரங்கள்; தேசிய கல்விக் கொள்கை என்கின்ற இப்படிப்பட்ட ** நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** மத்திய அரசில் அப்படிப்பட்ட பிரச்சினை இருக்கின்றது என்று சொல்லுங்கள்.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: இது மக்களுடைய பிரச்சினை. உங்களுடைய பிரச்சினையாக நாங்கள் கருதவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது. நீங்கள், தெளிவாகச் சொல்லுங்கள்.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: ** இருக்கக்கூடிய இந்தப் பல்வேறு கொள்கைகளை... (குறுக்கீடு) ஆனால், இதை நாங்கள் மக்கள் பிரச்சினையாகத்தான் கருதுகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது இருக்கின்ற பிரச்சினையை நீங்கள் சொல்லிவிட்டால், அதை அரசு பார்த்துக்கொள்ளும். நீங்களும் அரசுக்கு ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்கள் சொன்னதுமாதிரி, இரு திராவிட கட்சிகளும் இணைந்துதான் அந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். நீங்கள், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2022 ஏப்ரல் 11]

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: குறிப்பாக, இதை ஏன் நான் அப்படிச் சொன்னேன் என்றால், தேர்தல் அறிக்கையில் தீர்வு காணுவதாக வாக்குறுதிகளையெல்லாம் நீங்கள் அளித்திருக்கிறீர்கள். எனவே, அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றி, இந்த ** வேண்டுமென்றும், மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்றும் மக்களின் சார்பாக, கழகத்தின் சார்பாக, அனைவருக்கும் நன்றியோடு வணக்கம் சொல்லி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

‘மானம் கெடுப்பாரை,
அறிவைத் தடுப்பாரை,
மண்ணோடு பெயர்த்த கடப்பாரை,
வானம் உள்ளவரை,
வையம் உள்ளவரை,
யார் இங்கு மறப்பார் பெரியாரை,
யார் இங்கு மறப்பார் பெரியாரை’

என்கின்ற வைர வரிகளோடு தந்தை பெரியார் அவர்களை வணங்குகின்றேன்.

‘கடமை, கண்ணியம், கட்டுப்பாடு’ என்கின்ற தாரக மந்திரத்தை ஓர் இயக்கத்திற்காக மட்டுமல்ல, ஓர் இனத்திற்கே விட்டுச் சென்றிருக்கின்ற பேரறிஞர் அண்ணா அவர்களை வணங்குகின்றேன்.

‘தேடிச் சோறுநிதந் தின்று
பல சின்னஞ் சிறுகதைகள் பேசி
மனம் வாடித் துன்பமிக உழன்று
பிறர் வாடப் பலசெயல்கள் செய்து
நரை கூடிக் கிழப்பருவ மெய்தி
கொடுங் கூற்றுக் கிரையெனப்பின் மாயும்
பல வேடிக்கை மனிதரைப் போலே
நான் வீழ்வே னென்று நினைத் தாயோ?’

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி] [2022 ஏப்ரல் 11 என்ற பாரதியின் வரிகளாக வாழ்ந்து மறைந்தாலும், (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு, நம்முடைய மக்களின் முதல்வர், அவர்கள் தீட்டுகின்ற ஒவ்வொரு திட்டத்திலும், வாழ்ந்தும், நம்மை வாழ்த்தியும் கொண்டிருக்கின்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை வணங்குகின்றேன். இவர்கள் மூவரின் எண்ணங்களின் செயல்வடிவமாக, 'சமத்துவம், சமூக நீதி, சுயமரியாதை' என்கின்ற கோட்பாட்டில் இன்றைக்கு நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற, இரண்டு நாட்களாக சமூக வலைதளத்திலே வைரலாக வந்து கொண்டிருக்கின்ற, "S for Social Justice, (மேசையைத் தட்டும் ஒலி) T for Tamil Pride, (மேசையைத் தட்டும் ஒலி) A for Approachable, (மேசையைத் தட்டும் ஒலி) L for Leader, (மேசையைத் தட்டும் ஒலி) I for Invincible, (மேசையைத் தட்டும் ஒலி) N for Noble" என்று இன்றைக்கு அனைவராலும் பாராட்டப்படுகின்ற, none other than our Hon'ble Chief Minister, எங்கள் இயக்கத்தினுடைய தலைவர், எனது அரசியல் ஆசான் அவர்களுக்கு எனது வணக்கங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையினுடைய முன்னவர், மூத்தவர் மாண்புமிகு அண்ணன் அவர்களுக்கும், அதேபோன்று ஒரு மனிதன் பிறப்பதிலிருந்து இறுதியாக கண் மூடுவதற்கு முன்புவரை, அவனுடைய வாழ்க்கையை பாதுகாப்பான முறையிலே உறுதி செய்கின்ற, துறையைக் கையாளுகின்ற, அவன் மறைந்த பிறகு அவனுக்கான அந்தத் தகன மேடையையும் அமைத்துத் தர இருக்கின்ற, அந்தத் துறையைக் கையாண்டு கொண்டிருக்கின்ற எங்களுடைய மாவட்டத்தினுடைய அமைச்சர், நகராட்சி நிர்வாகத்தினுடைய அமைச்சர், பாசத்திற்குரிய அண்ணன் மாண்புமிகு திரு. கே.என். நேரு அவர்களுக்கும், எங்களுடைய பெருமதிப்பிற்குரிய அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும், எதிர்க்கட்சித் தலைவர், துணைத் தலைவர் ஆகியோருக்கும், சட்டமன்றத்தில் இருக்கின்ற அனைத்துக் கட்சிகளினுடைய தலைவர்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த நேரத்திலே என்னுடைய வணக்கங்களைத் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 2–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றம் என்பது வெறும் மரப் பலகைகளால் அலங்கரிக்கப்பட்ட மன்றமாக இருக்கக் கூடாது. இது மரபுகள் நிறைந்த மன்றமாக,

2022 ஏப்ரல் 11] [திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி]

மரபுவழியில் நடைபெறுகின்ற மன்றமாக இருக்க வேண்டுமென்று சொல்லி, இந்த மன்றத்தை மிகச் சிறப்பான முறையிலே வழிநடத்திக் கொண்டிருக்கின்ற, எனக்குப் பேசுகின்ற வாய்ப்பினை வழங்கியிருக்கின்ற தங்களுக்கும் இந்த நேரத்திலே என்னுடைய நன்றியைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்குக் காரணமாக இருந்தது, இரண்டு கல். ஒன்று, எங்கள் இயக்கத்தினுடைய தலைவர் அவர்களுடைய திருக்கரங்களால் பெறப்பட்ட, மக்கள் நம்பிக்கையோடு அளித்த மனுக்கள்; மற்றொன்று, எங்களுடைய இளைஞரணிச் செயலாளர் அவர்கள் உயர்த்திப் பிடித்த செங்கல். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, அவருக்கும் இந்த நேரத்திலே என்னுடைய வணக்கங்களை சொல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன். எங்களது திருச்சி மாவட்டத்தைச் சார்ந்திருக்கின்ற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், கூடுதல் பொறுப்பாக நான் பார்த்து வருகின்ற தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்திருக்கின்ற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், மக்கள் பிரதிநிதிகளுக்கும், எங்கள் இயக்கத்தினுடைய தோழர்களுக்கும் இந்த நேரத்திலே என்னுடைய வணக்கங்களை சொல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல நேரங்களில் எனக்கு பல அறிவுரைகளை இந்தத் துறையின் மூலமாக வழங்கிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், அதேபோன்று இந்தத் துறையை முன்னர் கையாண்ட, இன்றைக்கு இருக்கின்ற மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கு இன்று பிறந்த நாள். அவருக்கும் இந்த நேரத்திலே என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த முறை நான் உரையாற்றியபொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னை அழைத்துச் சொன்னார், 'அனுபவம் வாய்ந்த கல்வி அமைச்சர்கள் அனைவரின் பெயர்களையும் சொன்னாயே, நாவலரின் பெயரை விட்டுவிட்டாயே!' என்று. ஐயா, நாவலர் அவர்களையும் இந்த நேரத்தில் நான் வணங்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

[திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி] [2022 ஏப்ரல் 11

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் நிதிநிலை அறிக்கை. தஞ்சை மாவட்டத்தினுடைய கூடுதல் பொறுப்பு அமைச்சர் என்ற முறையிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலின்படி, அந்தத் துறையினுடைய அமைச்சர் அண்ணன் அவர்கள் எங்கள் தஞ்சை மாவட்டத்திற்கு வருகை தந்து, அங்கேயிருக்கின்ற விவசாயிகள் மற்றும் விவசாயச் சங்கங்களினுடைய கருத்துகளை எல்லாம் உள்வாங்கி, அதற்குத் தீர்வு காணும்விதமாக, நிதிநிலை அறிக்கையிலே அதை மிக நேர்த்தியாகசேர்த்து,படைப்பதுமட்டுமல்ல;பயிரிடுவதும்கடவுளின் தொழில்தான் என்று எண்ணுகின்ற எங்களுடைய விவசாயப் பெருங்குடி மக்களின் சார்பாக அண்ணனுக்கும், எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நிதிநிலை அறிக்கை. ஒட்டுமொத்தமாக, இன்றைக்கு பத்திரிகைகளாக இருந்தாலும் சரி, பொருளாதார நிபுணர்களாக இருந்தாலும் சரி, கல்வியாளர்களாக இருந்தாலும் சரி, அனைவரும் பாராட்டுகின்ற அளவில் மிகச் சிறப்பாக உருவாக்கப்பட்டிருக்கிறது. மக்களின் வாழ்வாதாரத்தைக் காக்கின்ற அளவிற்கு மிகப் பெரிய, ஒரு நேர்த்தியான நிதிநிலை அறிக்கையை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலின்படி தாக்கல் செய்திருக்கின்ற பாசத்திற்குரிய நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், குறிப்பாக, எங்களுடைய துறைக்கு ஏறத்தாழ 36,895.89 கோடி ரூபாய் நிதி ஒதுக்கித் தந்திருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே என்னுடைய நன்றியைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தத் துறை, எப்படிப்பட்ட துறை? ஒரு பத்திரிகையிலே வந்த செய்தி குறித்து இன்றைக்கு நம்முடைய அன்புச் சகோதரர் திரு. முகம்மது ஷாநவாஸ் அவர்கள் பேசினார். 'சென்னையில் இருக்கின்ற பள்ளியில் மதிய உணவு தருகின்றேன், படி' என்று சொன்னது நீதிக் கட்சி. 'சென்னை மட்டுமல்ல, மாநிலத்தில் இருக்கின்ற அனைத்துப் பள்ளிகளிலும் மதிய உணவு தருகின்றேன், படி' என்று சொன்னார் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள். ஐயா, எம்.ஜி.ஆர். அவர்கள், 'சத்துணவு தருகின்றேன், படி' என்று சொன்னார். 'சத்துணவோடு சேர்த்து முட்டையும் தருகின்றேன், படி' என்று சொன்னார் எங்கள் முத்தமிழறிஞர் கலைஞர்

2022 ஏப்ரல் 11] [திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி]

அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 'பள்ளிப் படிப்பைப் படியுங்கள், உங்களுக்குத் திருமண உதவித் தொகை தருகின்றேன்' என்று முத்தமிழறிஞர் கலைஞர் சொன்னார். 'கல்லூரிப் படிப்பையும் முடியுங்கள், நான் அதிகமான திருமண உதவித் தொகை தருகின்றேன்' என்று கலைஞர் அவர்கள் சொன்னார். 'Bus pass இலவசமாகத் தருகின்றேன், படி' என்று சொன்னார், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். 'முட்டை சாப்பிட மாட்டாயா! வாழைப்பழம் தருகின்றேன், படி' என்று சொன்னார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அதேபோன்று, 'கலவை சாதம் தருகின்றேன், படி' என்று சொன்னார், முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள். 'சைக்கிள் தருகின்றேன், மடிக்கணினி தருகின்றேன், படி' என்று சொன்னார், அம்மையார் அவர்கள். இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக, இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நம்முடைய அரசுப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்கள் இட ஒதுக்கீட்டின் அடிப்படையிலே, 'Professional course ஆக இருந்தாலும், premium institution–ல் சேர்வதாக இருந்தாலும், உங்களுடைய counselling செலவாக இருந்தாலும், hostel செலவாக இருந்தாலும், Educational செலவாக இருந்தாலும் அதனை நானே ஏற்றுக்கொள்கின்றேன், படி' என்று சொல்கின்ற அளவிற்கு அவருடைய திட்டங்கள் இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

இதைப் பார்க்கும்பொழுது விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாநாட்டில் நான் பேசிய பேச்சு என்னுடைய நினைவிற்கு வருகிறது. இதைப் பார்க்கும்பொழுது எப்படியிருக்கிறது என்று சொன்னால், 'அனைவருக்கும் தேநீர் வழங்குங்கள்' என்று Karl Marx சொன்னார். 'அனைவருக்கும் ஒரே அளவில் வழங்குங்கள்' என்று தந்தை பெரியார் சொன்னார். 'அனைவருக்கும் ஒரேமாதிரியான குவளையில் வழங்குங்கள்' என்று அண்ணல் அம்பேத்கர் சொன்னார். இதில் 'பசித்தவன் எவனோ, அவனுக்கு முதலில் வழங்குங்கள்' என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சொன்னார். 'அந்தத் தேநீரையும், அந்தக் கோப்பையையும் இலவசமாக வழங்குங்கள்' என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு சொல்லிக் கொண்டிருக்கிறார் என்று சொல்லும்பொழுது, இதுதான் சமூக நீதி என்று எங்களால் நெஞ்சு நிமிர்ந்து சொல்ல முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, அப்படிப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கையில், குறிப்பாக,

[திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி] [2022 ஏப்ரல் 11 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கின்ற மாணவிகள் பட்டப் படிப்போ அல்லது பட்டயப் படிப்போ படிக்கும்பொழுது, அவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000/– வழங்குகின்ற புரட்சிகரமான திட்டம். இதுகுறித்து பல விவாதங்கள் இருந்தாலும்; எங்களைப் பொறுத்தவரைக்கும் மீன் தருவதைக்காட்டிலும் மீன்பிடிக்க கற்றுத்தருவதுதான் Dravidian model என்று நிரூபித்திருக்கிறார் எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பொறுப்பை ஏற்ற மூன்றரை மாதகாலத்தில் முதல் நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்தோம். அதன் பிறகு அதிலிருந்து எட்டரை மாதகாலம், மொத்தம் 11 மாதகாலத்தில் எங்களுக்குக் கிடைத்திருக்கின்ற அந்த அனுபவம், எங்கள் துறையிலிருந்து எங்களுக்குக் கிடைத்த அனுபவம்மூலம் வண்டியைச் சீராக இழுக்கின்ற குதிரைக்கும் சாட்டையடி உண்டு என்பதை நாங்கள் நன்கு உணர்ந்திருக்கிறோம். பல திட்டங்களை, பல முன்னெடுப்புகளை மாணவர்களுடைய நலன்கருதி நாங்கள் எடுக்கும்பொழுது பல பாராட்டுக்கள் வருகின்றன, சில விமர்சனங்கள் வருகின்றன, சில கருத்துக்கள் வருகின்றன. அனைத்தையும் நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம்.

எங்களைப் பொறுத்தவரைக்கும் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இந்தத் துறையை நான் கையாளுகின்றேன் என்று சொல்லும்பொழுது, அந்தத் துறையை இழுக்கின்ற முயற்சியில்தான் இந்தக் குதிரை இன்னமும் முற்பட்டுக் கொண்டிருக்கிறது. அப்படி இழுக்கின்ற முயற்சியில் உங்களுடைய பாராட்டுகள் அனைத்தையும் நான் சாட்டையடியாக பார்க்கின்றேன். நீங்கள் சொல்கின்ற விமர்சனங்களாக இருந்தாலும், கருத்துகளாக இருந்தாலும் அதைத் தீர்த்து வைப்பதற்கு எங்களுடைய துறையின் சார்பாக எங்களுக்கு நாங்களே நிர்ணயித்துக்கொள்கின்ற இலக்காகத்தான் அதை நான் பார்க்கிறேன். கண்டிப்பாக இதை நாங்கள் அடுத்தகட்டத்திற்கு எடுத்துச்செல்ல முடியும் என்கின்ற நம்பிக்கையை எங்கள் மீது வைத்திருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

2022 ஏப்ரல் 11] [திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறைக்கு இன்றைக்கு 36,895.89 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லும்போது, இங்கே நம்முடைய முன்னாள் அமைச்சர் அண்ணன் செங்கோட்டையன் அவர்கள்கூட 'நாங்கள் 34 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கினோம்' என்று சொன்னார்கள். இதுவரைக்கும் சட்டமன்ற வரலாற்றிலே அதிகப்படியாக 36,895 கோடி ரூபாயை ஒதுக்கியது நமது கழக அரசுதான் என்பதை இந்த நேரத்தில் நான் பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்களுடைய Department–ஐ பொறுத்தவரைக்கும், இன்றைக்கு நீங்கள் அதிகப்படியாக 239 வெட்டுத் தீர்மானங்கள் வழங்கியிருக்கிறீர்கள். அதை வகைப்படுத்திப் பார்த்தோம் என்று சொன்னால், 56 வகையான வெட்டுத் தீர்மானங்கள் வந்திருக்கின்றன. கடந்த முறை கூட்டத்தொடரில் பேசும்போது என்னுடைய அறிவிப்பையும் சேர்த்து கிட்டத்தட்ட 50 அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. அந்த 50 அறிவிப்புகளில், 47 அறிவிப்புகள் ஏற்கெனவே நடைமுறைக்கு வந்துவிட்டன. இன்னும் 3–மட்டும் காத்துக்கொண்டிருக்கின்றன. அவற்றையும் மிக விரைவில் தொடங்கிவிடுவோம். என்னுடைய துறையின் சார்பாக கிட்டத்தட்ட 679 கோப்புகள் வந்தன. அவற்றில், 673 கோப்புகளில் கையெழுத்திட்டு, நான் clear செய்திருக்கிறேன்.

38 மாவட்டங்களில், கிட்டத்தட்ட 25 மாவட்டங்களுக்கு நேரடியாகச் சென்று, அங்கே இருக்கின்ற பள்ளிகளை ஆய்வு செய்வதாக இருந்தாலும் மற்ற நிகழ்ச்சியில் கலந்துகொள்வதாக இருந்தாலும் அது பள்ளி சார்ந்ததாக இருக்க வேண்டும் என்கின்ற எண்ணத்தில் இன்றைக்கு தொடர்ந்து அந்த பணிகளிலும் நாங்கள் எங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறோம். ஆக, இதுபோல தொடர்ந்து இந்தத் துறை அடுத்த கட்டத்திற்கு நகர்வதற்கு எங்களுடைய Department–ஐ சார்ந்திருக்கிற அதிகாரிகளாக இருந்தாலும் சரி, அவ்வப்போது எங்களுக்கு ஊக்கம் அளித்துக் கொண்டிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களாக இருந்தாலும் சரி, தொடர்ந்து நம்முடைய மாணவச் செல்வங்களின் எதிர்காலத்தை மனதில் வைத்துத்தான் இதை நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம்.

இன்றைக்கு நிறைய பள்ளிகளைத் தரம் உயர்த்துதல் பற்றியும் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறீர்கள்; கருத்துகள் பேசப்பட்டிருக்கின்றன. Building maintenance பற்றி

[திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி] [2022 ஏப்ரல் 11

நாம் சொல்கிறோம். இன்றைக்கு ஒரு பள்ளிக்கூடத்திற்குச் செல்லும்போது, maintenance செய்வதற்காகவும், அங்கே இருக்கின்ற water facilities–ஐ அதிகப்படுத்த வேண்டுமென்பதற்காகவும் இன்றைக்கு Rural Development and Panchayat Raj Department மூலமாக School Infrastructure Development Scheme (SIDS)–க்கு கிட்டத்தட்ட 112 கோடி ரூபாய் நிதியை நாங்கள் ஒதுக்கியிருக்கின்றோம். அதேபோல நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா அவர்கள் சொன்னதுபோல, கழிவறை maintenance–ஐ மட்டும் பார்த்தால், அதை சீர்செய்வதற்கு கிட்டத்தட்ட 2,969 தூய்மைப் பணியாளர்களை நியமித்து, Rural Development and Panchayat Raj Department–க்கு நம்முடைய State Finance Commission மூலமாக 36 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இனி வருங்காலத்தில் இதை இன்னும் அதிகப்படுத்தி தமிழ்நாடு முழுவதும், rural மட்டுமல்ல, நகர்ப்புறமாக இருந்தாலும்சரி, மற்ற இடங்களுக்கும் இதைக் கொண்டு செல்கின்ற அந்தப் பணியில் நாங்கள் எங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்வோம்.

அதேமாதிரி dilapidated buildings. அதாவது, சிதிலமடைந்த buildings–ஐப் பொறுத்தவரையில், நிறையபேர் 'இதை இடித்துவிட்டீர்களே, என்ன செய்வீர்கள்? என்று கேட்கிறீர்கள். ஆமாம், இன்றைக்கு பல நிகழ்வுகள் நடக்கும்போது, அதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களிடத்தில் சொன்ன உத்தரவு அதுதான். எத்தனை buildings இதுமாதிரி சிதிலமடைந்திருக்கின்றன, எதையெல்லாம் உடனடியாக நாம் அப்புறப்படுத்த வேண்டும், எதையெல்லாம் உடனடியாக demolish செய்ய வேண்டும், எதிலெல்லாம் மாணவச் செல்வங்கள் உள்ளே அமரக் கூடாது என்கின்ற அளவிற்கு எங்களுக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள்.

அதன் அடிப்படையில், தொடக்கப் பள்ளியிலிருந்து Middle School வரைக்கும் பார்த்தால் கிட்டத்தட்ட 7,222 பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அந்த ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் இரண்டு class rooms, மூன்று class rooms மட்டுமல்ல, மற்ற usage இல்லாத buildings–ஐக் கணக்கெடுத்தால், அதை identify செய்து பார்த்தால், கிட்டத்தட்ட 10,288 buildings வருகிறது. அதில் நாம் demolish செய்திருப்பது ஏறக்குறைய மூன்றாயிரம் buildings–தான். மாணவர்களின் நலனைக் காக்கின்றவிதமாக மிச்சம் இருக்கிற 7,000 buildings–ஐயும் மிக விரைவில் demolish செய்துவிடுவோம்.

அதேபோன்று High School to Higher Secondary School இருக்கின்ற buildings மட்டும் கணக்குப் பார்த்தால், 2,545 schools இருக்கின்றன. பள்ளியின் உள்ளே இருக்கின்ற classrooms–ஐ எல்லாம் கணக்கிடும்போது, ஏறக்குறைய 5300 buildings இருக்கின்றன. அவற்றில், நாம் ஏற்கெனவே 2,800 buildings–ஐ demolish செய்திருக்கிறோம். மிச்சம் இருக்கிற 2500 buildings–ஐயும் மிகவிரைவில் demolish செய்துவிடுவோம்.

பிற்பகல் 2–50

இந்த நேரத்தில் நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இது விஷயமாக என்றைக்காவது நான் பேட்டி அளித்திருந்தால், அவரிடம் நான் கேட்க வேண்டியதில்லை. அவர் என்னை நேராகப் பார்த்தால் கேட்பார்; இல்லையென்றால் தொலைபேசியில் என்னைத் தொடர்பு கொண்டு, 'இதுபோல் நீங்கள் பேட்டி கொடுத்திருக்கிறீர்களே! எத்தனை இடங்களில் செய்யலாம்; என்னுடைய contribution என்ன? கட்டடத்தை இடித்துவிட்டோம் என்றால் மாணவர்களுக்கு immediate ஆக புதிய கட்டடத்தை நாம் கட்டித் தர வேண்டும்' என்று சொன்ன அண்ணன் அவர்களுக்கும் இந்த நேரத்தில் நான் நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இப்படி பள்ளி மாணவர்களுக்கு என்னென்ன தேவை என்பதை உணர்ந்துதான் இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மிகப் பெரிய உன்னதமான திட்டமான நம்முடைய பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம் என்கிற முறையிலே (மேசையைத் தட்டும் ஒலி) தொடர்ந்து இன்றிலிருந்து இந்த ஐந்து வருட காலத்தில் 7,000 கோடி ரூபாய் ஒதுக்கி கிட்டத்தட்ட 18,000 வகுப்பறைகளைச் சீர் செய்கின்ற பணிகள், அதாவது, புதிதாகக் கட்டினாலும் சரி, இடிந்ததை சீரமைப்பதானாலும் சரி, அதற்காக தனியாக நிதி ஒதுக்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முதற்கட்டமாக இந்த ஆண்டு 1,300 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. அதைத்தான் நம்முடைய மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது, வெறும் வகுப்பறைகளோடு நிற்க வேண்டாம்; கழிவறைகள் எங்கிருந்தாலும், அதனையும் நாம் கணக்கில் எடுத்துக்கொண்டு இந்த நிதியை வைத்துச் சீர் செய்யலாம் என்று சொல்லியிருக்கின்றார்கள்.

[திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி] [2022 ஏப்ரல் 11 அதுமட்டுமல்ல, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கிட்டத்தட்ட ரூ.90 இலட்சம் ஒதுக்கி, அதனையும் சட்டமன்ற உறுப்பினர்கள் வழங்க வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்கள். 'எங்கெல்லாம் இடிந்து விழுந்திருக்கிறது என்று சொல்கிறார்களோ, அந்தந்தத் தொகுதியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் எந்தக் கட்டடத்தைச் சொல்கிறார்களோ, முதலில் அதற்கு முன்னுரிமை கொடுத்து, அதனை சரி செய்கின்ற வேலைகளில் நீங்கள் உங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும்' என்று ஏற்கெனவே CEOs meeting–ல் நாங்கள் சொல்லியிருக்கின்றோம்.

அதேபோன்று Hi–tech laboratory facility. ஒன்பதாம் வகுப்பிலிருந்து பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயில்கின்ற மாணவர்களுக்கு Hi–tech laboratory facility–ஐ இன்றைக்கு நிறைய மேம்படுத்தி வருகிறோம். தொடர்ந்து அவர்களுக்கு quiz programme, நிறைய competitive exams நடத்தி வருகிறோம். ஏனென்றால், அந்தக் குழந்தைகள் பின்தங்கிவிடக் கூடாது என்பதற்காக நிறைய quiz programmes வைக்கிறோம். அந்த Quiz programme மூலமாக ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒரு வகுப்பிற்கு 10 மாணவர்கள் என்று தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்குத் தனியாக certificates, awards என கொடுத்து, கிட்டத்தட்ட 1.18 கோடி ரூபாய் நிதியொதுக்கி மாணவர்களுடைய கல்வித் தரத்தை மேம்படுத்த வேண்டும் என்ற வகையிலே இன்றைக்கு நாங்கள் அதனைச் செய்து கொண்டிருக்கிறோம்.

அதேபோன்று Model Schools பற்றியெல்லாம் சொன்னீர்கள். ஏற்கெனவே 10 model schools அமைக்கப்பட்டிருக்கின்றன. Model schools–ஏன் இந்த concept வந்தது? Model schools என்றால் என்ன? திரு ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள், 'இது ஏதோ ஓரிரு இடங்களில் மட்டும் வந்தால் போதாது; ஒட்டுமொத்தமாக தமிழ்நாடு முழுவதும் இந்த model schools வர வேண்டும்' என்று குறிப்பிட்டார்கள். உண்மைதான். இந்த model schools–ஐ ஒரு pilot project ஆக 10 மாவட்டங்களில் 23 கோடி ரூபாய் செலவில் செய்து கொண்டிருக்கிறோம். என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்றால், குழந்தைகள் பள்ளிப் படிப்பை முடித்தவுடன் ஏதாவது ஒரு கல்லூரியில் சென்று சேருகிறார்கள். அவர்கள் I.I.M. போன்ற Premier institutions–ல் சென்று சேர வேண்டும் என்பது எங்களுடைய ஆசை. எங்கள் திருச்சி மாவட்டத்தில்,

2022 ஏப்ரல் 11] [திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி]

மணப்பாறை என்ற ஒரு தொகுதியில், செவல்பட்டி என்ற ஒரு கிராமத்தில் அத்தி பூத்தாற்போல் அருண் குமார் என்ற ஒரே ஒரு மாணவனுக்குத்தான் அந்த வாய்ப்பு கிடைத்திருக்கிறது. ஆக, இதுமாதிரி தமிழ்நாடு முழுவதும் பல அருண் குமார்கள் இருக்கின்றார்கள். அவர்களையும் கொண்டு வர வேண்டும் என்ற ஆசையில்தான் இதனை pilot project ஆக நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அடுத்தபடியாக இன்னும் 15 மாவட்டங்களில் அதனைக் கொண்டு செல்லுங்கள் என்று சொல்லியிருக்கின்றார்கள். மிக விரைவில் தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்துவதற்கு வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பள்ளி என்று வருகின்ற போது students–ஐ மனதில் வைத்துக்கொண்டு பணிகளைச் செய்து வருகிறோம். உதாரணத்திற்கு, students–க்குத் தேவையான facilities எது என்று பார்த்தீர்களென்றால், one of the main resource நமது teachers–தான். இந்த 11 மாத காலத்தில், கிட்டத்தட்ட 20 DEOs recruit செய்திருக்கிறோம். BEOs, 95 பேரை நியமித்திருக்கிறோம்; 95 BEOs recruit செய்திருப்பது இதுதான் முதன்முறை. பொதுவாக, 30 பேர், 40 பேர் பணியமர்த்தப்படுவார்கள். 95 BEOs–ஐ recruit செய்து, அவர்களுக்குத் தேவையான training–ஐயும் நாங்கள் வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

குறிப்பாக, teachers' transfers பற்றி இங்கே உறுப்பினர்கள் பேசியிருக்கின்றார்கள். Teachers' transfers–ல் transparent ஆக எவ்வளவு வெளிப்படைத் தன்மையுடன், எவ்வாறு நாங்கள் செய்திருக்கிறோம் என்று சொன்னால், கிட்டத்தட்ட 67,000 teachers விண்ணப்பித்து, கிட்டத்தட்ட 18,773 teachers தாங்கள் விரும்பிய இடத்திற்கு, அவர்களே select செய்து சென்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, 3,488 பேருக்கு நாங்கள் promotion வழங்கியிருக்கிறோம். கல்வியை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்ல வேண்டும்; தரமான கல்வி வழங்க வேண்டும் என்கின்ற வகையில்தான் இதனையும் நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம்.

அதேபோன்று Compassionate ground appointment–2013 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் கணக்குப்படி பார்த்தீர்களென்றால்,

[திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி] [2022 ஏப்ரல் 11 பள்ளிக் கல்வித் துறையில் நிலுவையிலிருந்த கிட்டத்தட்ட 250 பேருக்கு Compassionate ground–ல் வேலை வழங்கியிருக்கிறோம். Library–ல் மட்டும் 11 பேருக்கு இந்த அடிப்படையில் நாங்கள் வேலைவாய்ப்பை கொடுத்திருக்கிறோம்.

Recent ஆக நடக்கின்ற incidents குறித்து நிறைய பேர் பேசினார்கள். மாணவர்கள், ஆசிரியர்களை மதிக்காமல் இருப்பது போன்ற சமீபத்தில் நடந்த பல நிகழ்வுகள் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே தெரிவித்தீர்கள். மாணவர்கள் மனதளவில் பாதிக்கப்பட்டிருப்பதை உணர்ந்துதான், கடந்த கூட்டத் தொடரில் இதனை foresee செய்துதான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த மன அழுத்தத்திற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். அதைத்தான் நாங்கள் தஞ்சாவூர், திருநெல்வேலி, விழுப்புரம், சேலம், மதுரை ஆகிய 5 மண்டலங்களில் ஆய்வு செய்தோம். சேலத்தில்தான் அதற்கான கையேட்டை நாங்கள் வெளியிட்டோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்கூட அப்போது அங்கிருந்தார்கள். அந்தக் கையேடு எதற்காக என்றால், மன நலம், அதேபோன்று வாழ்வியல் திறன் மேம்படுவதற்கான அந்தப் பயிற்சிக்கான கையேடு. முதலில் எங்கு ஆரம்பித்தோம் என்றால், Educationally Backward blocks என்று கிட்டத்தட்ட 44 blocks இருக்கின்றன. அந்த 44 blocks–ல் 9 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை படிக்கின்ற குழந்தைகள் கிட்டத்தட்ட 2,25,000 பேர் இருக்கின்றார்கள். அதற்காக அவர்களுக்கு நாம் training கொடுக்க வேண்டும். அந்த மாதிரி நேரங்களில் அவர்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதற்காக கிட்டத்தட்ட 1,100 ஆசிரியர்களுக்கு நாங்கள் training கொடுத்திருக்கிறோம். அவர்களுக்கு யார் training கொடுத்தார்கள் என்று பார்த்தால், UNICEF organisation–ஐச் சார்ந்திருக்கின்ற, Nalanda organisation–ஐச் சார்ந்திருக்கின்ற வல்லுநர்களின் உதவியுடன் training கொடுத்து அந்தக் குழந்தைகளை நல்வழிப்படுத்த வேண்டுமென்கிற எண்ணத்தில் செய்திருக்கிறோம்.

பிற்பகல் 2–55

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. ராஜன் செல்லப்பா அவர்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக நிகழ்வுகள் நடைபெற்றிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள்; உண்மையைத்தான் சொல்லியிருக்கிறார்கள். நிறைய வந்திருக்க

2022 ஏப்ரல் 11] [திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி]

வேண்டியது; நாங்கள் அவற்றைத் தடுத்திருக்கிறோம் என்பதுதான் உண்மை. இனி அதுவும் நிகழாத வகையில் எங்களுடைய செயல்பாடுகள் கண்டிப்பாக இருக்கும் என்பதை நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தொடர்ந்து child abusement பற்றி பேசுகிறோம். ஆமாம், உண்மைதான்; இருந்தது. அதை எப்படிக் குறைத்திருக்கிறோம் என்று சொன்னால், நவம்பர் 15 முதல் நவம்பர் 22 வரையில் Child Abuse Prevention Week ஆகக் கடைப்பிடிக்கப்படுகிறது. குறிப்பாக, நவம்பர் 19 Prevention of Child Abuse Day என்று கடைப்பிடிக்கப்படுகின்ற ஒரு நாள் ஆகும். அன்றைக்கு 'துளிர்' என்கிற ஓர் அமைப்பின் மூலமாக ஆசிரியர் பெருமக்களுக்கு நாங்கள் நிறைய training கொடுத்திருக்கிறோம். ஓர் ஆசிரியர் எப்படி நடந்துகொள்ள வேண்டும்? ஒரு மாணவர் எப்படி நடந்துகொள்ள வேண்டும்? ஒரு non–teaching staff பள்ளிக்கூடத்தில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்கிற வகையில் அந்த training–ஐ கொடுத்திருக்கிறோம். 'துளிர்' அமைப்பின் மூலமாகக் கிட்டத்தட்ட பல ஆயிரம் ஆசிரியர்கள் அந்த training–ஐ முடித்திருக்கிறார்கள். Good touch என்றால் என்ன, bad touch என்றால் என்ன என்பது முதற்கொண்டு அனைத்திலும் training கொடுத்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

ஒவ்வொரு class room–லும், அதற்கென விழிப்புணர்வு board வைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். 'மாணவர் மனசு' என்கிற ஒரு பெட்டியை வைத்து, once in every 15 days அந்தப் பெட்டியைத் திறந்து மாணவர்கள் அப்பெட்டியில் ஏதாவது எழுதிப் போட்டிருக்கிறார்களா என்பதை அறிந்து, அதனை உடனடியாக எங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்கிற அந்தக் கருத்தையும் சொல்லி, அந்தப் பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அதேபோன்று, teachers related ஆக பள்ளிகளுக்கு என்னென்ன தேவை என்பதையறிந்து நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். Teachers–க்கு நிறைய training கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அது உண்மைதான். அந்த training–ஐ கட்டாயம் கொடுக்க வேண்டும். Learning outcomes, கற்றலுடைய அளவை எப்படி அளவிட வேண்டும்? கற்றல் அளவு

[திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி] [2022 ஏப்ரல் 11 என்றால் என்ன என்றே தெரியாமல் நிறைய teachers இருந்தபோது, அவர்களுக்குத் தனியாக training கொடுக்க வேண்டுமென்று கருதி, almost 83,000 teachers–க்கு first phase–ல் training கொடுத்திருக்கிறோம். அதோடுமட்டுமல்லாமல், Distrtict Institute of Education and Training (DIET)–ல், almost 42 P.G. lecturers இருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான skill development training கொடுத்திருக்கிறோம். நம்முடைய District Educational Officers 38 பேர் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான skill development training–ஐ நாங்கள் கொடுத்திருக்கின்றோம்.

அதேபோன்று, ICT – Information Communications Technology–ஐ பயன்படுத்தி, digital contents–ஐ எப்படி இந்தக் காலத்திலிருக்கின்ற ஆசிரியப் பெருமக்கள் பயன்படுத்த வேண்டும்? இப்பொழுது இருக்கின்ற trend என்ன? அந்த data base–ஐ எப்படிப் பயன்படுத்த வேண்டும்? அந்த software–ஐ எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்கிற வகையில் கிட்டத்தட்ட 1,90,000–க்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு அதுதொடர்பான training–ஐ வழங்கியிருக்கின்றோம். மாணவர்கள்மீது எந்தளவுக்கு கவனம் செலுத்துகிறோமோ அதேபோன்று teachers–க்கும் training கொடுத்து, இருக்கின்ற trend–க்கு அவர்களையும் கொண்டு வரவேண்டுமென்று கருதி, அதனையும் செய்து கொண்டிருக்கிறோம்.

மாணவர்களுடைய நலன் என்று வரும்பொழுது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி செயல்பட்டு வருகிறோம். குழந்தைகள் கடந்த இரண்டு ஆண்டுகள் கழித்து பள்ளிக்கூடங்களுக்கு வரும்பொழுது அவர்களிடத்தில் Learning gap இருந்தது. இதனை எப்படிச் சரிசெய்ய வேண்டுமென்று பார்க்கும்போதுதான், basic information–ஐ நிறைய குழந்தைகள் மறந்திருந்தார்கள். உதாரணத்திற்கு, கிராமப் பகுதிகளிலிருக்கும் நிறைய ஏழை மாணவர்களுக்கு nose என்றால் எது, tongue என்றால் எது என்பதே மறந்திருக்கிற நிலையில் இருந்தார்கள். இதனைச் சரி செய்ய வேண்டுமென்பதற்காக ஒரு bridge course material–ஐ கொடுத்து, 'இரண்டு ஆண்டுகள் கழித்து குழந்தைகள் பள்ளிக்கூடங்களுக்கு வரும் முதல் நாளிலேயே பாடங்களை நடத்தாதீர்கள். இந்த bridge course மூலமாக 30, 40 நாட்களுக்கு அந்தக் குழந்தைகளின் minds–ஐ refresh செய்யுங்கள்' என்று அதற்கான bridge course materials–ஐ நாம் கொடுத்திருக்கிறோம்.

2022 ஏப்ரல் 11] [திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி]

அதுமட்டுமல்லாமல், 1 ஆம் வகுப்பிலிருந்து 8 ஆம் வகுப்பு வரை பயில்கின்ற மாணவச் செல்வங்களுக்கான ஒவ்வொரு subject note–லும் QR code கொடுத்து, அந்த QR code மூலமாக அந்த மாணவர்கள் படித்துக்கொள்கின்ற அளவுக்கு அதையும் நாங்கள் செய்திருக்கிறோம். அதனால்தான் students ratio–வைப் பார்த்தால், நம்முடைய அரசுப் பள்ளிகளில் மட்டும் 47 இலட்சம் மாணவர்கள் என்றிருந்த நிலையில் 53 இலட்சம் ஆக உயர்ந்து, 6 இலட்சம் மாணவர்கள் நம்மைத் தேடி வருகின்ற அளவிற்கு அரசுப் பள்ளிகளின் தரம் உயர்ந்திருக்கிறது என்று சொன்னால், இது அரசுக்கு மிகப் பெரிய பெருமை. (மேசையைத் தட்டும் ஒலி)

குழந்தைகள் வருவார்களே, அவர்களுக்கு vaccination எப்படிப் போடப் போகிறோம் என்று பார்க்கும்போது, கிட்டத்தட்ட 12 வயதிலிருந்து 14 வயது வரையில் இருக்கின்ற 21,21,000 மாணவர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டிருக்கின்றது. 15 வயதிலிருந்து 18 வயது வரையிலிருக்கின்ற 33,46,000 students–க்கு தடுப்பூசி போட்டிருக்கிறோம். இதற்கெல்லாம் ஒத்துழைப்பைத் தந்த நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. மா. சுப்பிரமணியன் அவர்களுக்கு இந்த நேரத்தில் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதனால்தான், எங்களால் துணிந்து செயல்பட்டு, அடுத்து நடக்கவிருக்கும் public examination வரைக்கும் மாணவச் செல்வங்களுக்கு பள்ளியை ஆரம்பிக்கலாம் என்ற நம்பிக்கை எங்களுக்கு வந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலின்படி நாங்கள் செயல்பட்டதன் காரணமாகத்தான் இதுபோன்ற செயல்களை எங்களால் செய்ய முடிந்தது. அதேபோன்று, நம்முடைய குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்திடும் விதத்தில் தொடர்ந்து நாங்கள் நடைபோட்டுக் கொண்டிருக்கின்றோம்.

அதுபோல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல நேரங்களில் எங்களிடத்தில் பேசும்போது, 'பள்ளிக்கூடங்களை எப்பொழுது திறக்கலாம்' என்று மட்டும்தான் நாங்கள் அவர்களிடத்தில் கேள்வியைக் கேட்போம். ஆனால், அதற்கு செய்ய வேண்டியவற்றை நாங்கள் யோசிக்கவேயில்லை. அப்பொழுதுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'பள்ளிக்கூடங்களைத் திறப்பது ஒன்றும் பெரிய காரியம் இல்லை; அவற்றை நாம் திறந்துவிடலாம்; ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்தக் குழந்தைகளின் கற்றல் இடைவெளியை நீங்கள் எப்படிப் போக்கப் போகிறீர்கள்?' என்று கேட்டார்கள்.

[திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி] [2022 ஏப்ரல் 11

அப்படி அவருடைய இதயத்திலிருந்து உதித்த திட்டம்தான், 'இல்லம் தேடிக் கல்வி' என்ற மிகப் பெரியதொரு உன்னதமான திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3–00

இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தில் 1,76,000 centres தான் எங்களுடைய target ஆக இருந்தது. அரசுப் பள்ளியைச் சார்ந்திருக்கின்ற, அரசு உதவி பெறுகின்ற பள்ளிகளைச் சார்ந்திருக்கின்ற 34 இலட்சம் குழந்தைகள் பயன்பெற வேண்டுமென்பதுதான் எங்களுடைய இலக்காகவே இருந்தது. ஆனால், இந்தத் திட்டத்திற்கான வரவேற்பைப் பார்க்கும்பொழுது, எங்களுக்கு மிகப் பெரிய ஆச்சரியம் என்னவென்றால், அரசுப் பள்ளிகளைச் சார்ந்திருக்கின்ற 25,45,000 students இந்தத் திட்டத்தில் பயன்பெற்றிருக்கிறார்கள். Aided schools–ஐ சார்ந்த 3,96,000 மாணவர்கள் இத்திட்டத்தில் பயன்பெற்றிருக்கிறார்கள்; CBSE பள்ளிகளைச் சார்ந்த 255 மாணவர்களும்கூட இத்திட்டத்தில் பயன்பெற்றிருக்கிறார்கள்; Private schools–ல் இருக்கின்ற 60,000 மாணவர்கள் இத்திட்டத்தில் பயன்பெற்றிருக்கிறார்கள்; கிட்டத்தட்ட 30 இலட்சம் மாணவர்கள் இவர்கள் மட்டுமே இருக்கும்போது, இத்திட்டம் ஒரு மிகப் பெரிய வரவேற்புத் திட்டமாக பார்க்கப்படுகின்றது.

அதுமட்டுமல்ல, "இல்லம் தேடிக் கல்வி"–க்கான volunteers. எங்களுக்குத் தேவையான எண்ணிக்கை மொத்தமே, 1,76,000 volunteers தான். ஆனால், இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அழைப்பை ஏற்று, அத்திட்டத்தில் 6.6 இலட்சம் volunteers பதிவு செய்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, resource–ஐப் பொறுத்தவரைக்கும் நமக்கு எந்தவிதத்திலும் குறைவே இல்லை, நமக்கு உதவுவதற்கு, இந்தச் சமுதாயப் புரட்சியை ஏற்படுத்துவதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓர் அழைப்பு கொடுத்தால் போதும், அதற்காக காத்துக்கொண்டிருக்கும் இளைஞர்கள் இன்றைக்கு அதிக அளவில் உள்ளனர். இந்த இல்லம் தேடிக் கல்வி திட்டத்தில் 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கின்ற மாணவர்களுக்கு 12 ஆம் வகுப்பு வரை படித்திருப்பவர்கள் வகுப்புகள் எடுக்கலாம். அதேபோன்று 6, 7, 8 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு பாடம் கற்பிக்க வேண்டுமென்றால், ஏதாவது ஒரு துறையில் பட்டப் படிப்பு படித்திருக்க வேண்டும் என்கின்ற

2022 ஏப்ரல் 11] [திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி]

அளவிற்குத்தான் அதை நாம் design–னே செய்திருக்கிறோம். அதற்காகத்தான் கடந்த ஆண்டில் இதற்கு 200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. இத்திட்டம் அந்த அளவு வரவேற்பைப் பெற்றிருக்கிறது. அதுதான் பள்ளிகள் திறக்கப்பட்டுவிட்டதே, பிறகு எதற்காக இல்லம் தேடிக் கல்வி திட்டம் என்று ஒருசிலர் கேட்டார்கள். அது அவ்வாறு கிடையாது. மேலும் நமது கற்றல் அளவு என்று பார்த்தால், இல்லம் தேடிக் கல்வி volunteers மூலமாக மட்டும் பார்த்தோமானால், இதற்கு இன்னும் அதிக கவனம் தேவைப்பட்டுக்கொண்டுதான் இருக்கிறது. நம்மால் தற்போதும்கூட constant ஆக பள்ளிகளை நடத்த இயலவில்லை. நவம்பர் மாதத்தில் அனைத்து பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டாலும், டிசம்பர் மாதம் பள்ளிக்கூடங்களுக்கு விடுமுறை அளிக்கப்பட்டது, அதன் பிறகு பொங்கல் பண்டிகைக்கான விடுமுறை வந்தது. அதன் பின்னர் கொரோனா கட்டுப்பாடு வந்தது. இவற்றையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு இன்னும் 6 மாத காலம் இத்திட்டத்தினை extend செய்ய வேண்டும் என்கிற அளவிற்குத்தான் தேவைப்படுகின்றது. இன்னும் பெருமையாக சொல்ல வேண்டுமென்று சொன்னால், பொருளாதார நிபுணர்கள் சொல்கிறார்கள்; மாண்புமிகு நிதியமைச்சர் குழுவில் இருக்கின்ற நிபுணர் Jean Dreze அவர்கள், 'Jharkhand and Rajasthan ஆகிய மாநிலங்களைச் சார்ந்திருக்கின்ற முதலமைச்சர்களுக்கும் இத்திட்டத்தினை recommend செய்கிற அளவிற்கு. ஒட்டுமொத்த இந்தியாவிற்கே ஒரு முன்னோடித் திட்டமாக இந்த "இல்லம் தேடிக் கல்வி" திட்டம் விளங்குகிறது' என்று சொல்வது, நமக்கெல்லாம் கிடைத்திருக்கின்ற பெருமை தருகின்ற திட்டமாகத்தான் இதனை நாங்கள் பார்க்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று எங்களுடைய துறை சார்பாக நடத்தப்படுகிற தேர்வுகளைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே நமக்குத் தெரியும், public exams மே மாதம் 5 ஆம் தேதியிலிருந்து 31 ஆம் தேதி வரையில் நடைபெறவிருக்கின்றன. 5 ஆம் தேதி முதல் 28 ஆம் தேதி வரை ஒரு கட்டமாகவும், 6 ஆம் தேதி முதல் 31 ஆம் தேதி வரை மற்றும் 10 ஆம் தேதி முதல் 31 ஆம் தேதி வரை என்று 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கான தேர்வுகள் நடைபெறவிருக்கின்றன. பொதுவாக இதுபோன்ற தேர்வுகளில், physically challenged children–க்கு சில exemptions கொடுக்கப்படுகின்றன. கடந்த காலங்களிலெல்லாம் பள்ளிக்கூடங்களிலேயே அவர்கள் சொல்வதை தேர்வில் எழுதுவதற்கு அவர்களது attender இருப்பார்கள். இந்த முறையில் அரசு 6 வகையான physically challenged children–ஐ

[திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி] [2022 ஏப்ரல் 11

identify செய்து, அவர்கள் தேர்வு எழுதுவதற்கு தாங்களே தங்கள் attender–ஐ அழைத்து வரலாம், அவர்கள் சொல்லச் சொல்ல இவர்கள் தேர்வு எழுதுவார்கள். இதற்காக ஒரு மணி நேரம் அவர்களுக்குக் கூடுதலாக அளிக்கப்படும். மொழிப் பாடங்களில் இவர்களுக்கு விலக்கு அளிக்கப்படும். இவ்வாறு physically challenged children–ஐயும் நாங்கள் மனதில் வைத்திருக்கின்றோம்.

அதேபோன்று பழங்குடியைச் சார்ந்த மாணவர்கள். நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம் திருக்குறளுடன்தான் ஆரம்பிக்கின்றது,

"எண்ணென்ப ஏனை யெழுத்தென்ப இவ்விரண்டுங்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

முத்தமிழறிஞர் கலைஞரே சொல்கிறார், 'எழுதவும் படிக்கவும் தெரியாவிட்டால் உயிர்வாழ்வதில் பொருள் இல்லை' என்று சொல்கிறார். இதை மனதில் கொண்டும், பழங்குடியைச் சார்ந்த 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை படிக்கின்ற மாணவர்களுக்கென்று தனியாக ஒரு care centre அமைத்து, கிட்டத்தட்ட 93.47 இலட்ச ரூபாய் அதற்காக தனியாக நிதி ஒதுக்கீடு செய்து, கிட்டத்தட்ட 28,000 பழங்குடியின மாணவர்கள் பயன்பெறுகின்றவகையில் அதையும் நாங்கள் கருத்தில்கொண்டு நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஷாநவாஸ் அவர்கள் சொன்னதுபோல், கல்வி என்று வரும்போது, விளிம்பு நிலையில் இருக்கின்றவர்களை அரசு எந்த நேர்விலும் விட்டுக்கொடுப்பதில்லை, விடவும் போவதில்லை. அதனையும் இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிக அழகாக, மிக நேர்த்தியாக ஒவ்வொரு sector ஆக பார்த்து பார்த்து செய்துகொண்டிருக்கின்றார்.

அதைத் தொடர்ந்து எங்களுடைய TRB–ஐப் பொறுத்தவரையில், கிட்டத்தட்ட 1,060 polytechnic lecturers–ஐ பணியமர்த்தும்பொருட்டு அவர்களுக்கான தேர்வு முடிவடைந்து, தற்போது certificate verification பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. PG teachers–ஐ பொறுத்தவரையில், 2,207 PG teachers–க்கு தேர்வுகள் முடிவடைந்து அவர்களுக்கான key note வெளியிடப் போகிறோம். அந்த key note–ஐப் பார்த்துதான் அவர்களைத் தேர்வு செய்ய வேண்டும். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், திரு. அருள் அவர்கள் பேசும்போது, மக்கள் அதிக அளவில்

2022 ஏப்ரல் 11] [திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி]

உறுப்பினர்களைத் தேடி வருகிறார்கள், எனவே, ஆசிரியர் பற்றாக்குறையை அரசு சரி செய்ய வேண்டும் என்று கூறினார். அது உண்மைதான். Teachers' transfers முடிந்த பிறகு surplus teachers–ஐ பணியமர்த்தும் பணி முடிந்த பிறகு, எவ்வளவு ஆசிரியர்கள் தேவைப்படும் என்ற விவரம் அரசிற்குத் தெரியும். இன்றைக்கு 15,000 பணியிடங்களுக்கு ஆசிரியர்கள் தேவை என்றால், இந்த TRB annual planner மூலமாக இந்த ஓர் ஆண்டிற்கு மட்டும், 9,494 பணியிடங்களை நிரப்ப இருக்கின்றோம். அதற்கான planner–calender போடப்பட்டுவிட்டது. அனைத்து இடங்களிலும், மாணவச் செல்வங்கள் நலன் காக்கப்படும். "நீங்கள் பாட்டுக்கு building–ஐ இடித்துவிட்டுப் போய்விட்டீர்கள், மாணவர்கள் மரத்தடியில் படிக்கிறார்கள்" என்று சொல்கிறீர்கள். இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டுதான், இந்தப் பணியினை வேகமாக மேற்கொள்ள வேண்டும் என்கிற அடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். பத்திரிகைச் செய்திகள் உட்பட நீங்கள் ஒரு செய்தி சொல்வதற்கு முன்னாலேயே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் whatsapp–ல் அதிவிரைவாக அதற்கான செய்தியை அனுப்பிவிடுகிறார். ஆக, இன்றைக்கு பயந்து, பயந்து அவருடைய வேகத்திற்கு ஏற்ப நாங்கள் விரைவாகப் பணிகளை மேற்கொள்வதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றோம்.

அதேபோன்று, எங்கள் துறையின் Tamil Nadu Text Book and Educational Services Corporation–ஐப் பொறுத்தவரையில், எங்கள் தலைவராக அண்ணன் லியோனி இருக்கின்றார். மிக அழகாக பணியை மேற்கொள்கிறார், திசைதோறும் திராவிடம் என்ற தமிழ் இலக்கிய நூலை இன்றைக்கு ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிறோம். மற்ற திராவிட மொழி நூல்களை மொழி பெயர்த்திருக்கிறோம். அதேபோன்று "பொருநை நாகரிகம்" என்கின்ற இந்தப் புத்தகத்தை, தமிழில் 10,000 பிரதிகளும், ஆங்கிலத்தில் 5,000 பிரதிகளும் நாங்கள் அச்சடித்துக் கொடுத்திருக்கிறோம்.

பிற்பகல் 3-05

அதேபோன்று, மிகவும் பெருமையான விஷயம் என்பது, வ.உ.சி. அவர்களின் 150–வது பிறந்தநாளை முன்னிட்டு, அவருடைய நூல் திரட்டு என்கின்ற தனி நூலையும், அதேபோன்று, அவர் திருக்குறளுக்கு எழுதிய விளக்க உரையையும் தனி புத்தகமாகவே நாங்கள் போட்டிருக்கின்றோம். Library என்று

[திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி] [2022 ஏப்ரல் 11 எடுத்துக்கொள்ளும்போது, நமக்கு ஒரு பெருமையான விஷயம் அது. ஏனென்றால், நம்முடைய கலைஞர் அவர்களுடைய பெயரில் மதுரை மாவட்டத்தில் கிட்டத்தட்ட 2.79 ஏக்கர் நிலத்தில், 0.81 ஏக்கரில் கிட்டத்தட்ட 2¼ இலட்சம் சதுர அடியில் கட்டுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) 4 இலட்சத்து 35 ஆயிரம் புத்தகங்கள் அதில் வைக்கப்படவிருக்கின்றன. One of a kind; ACL–Anna Centenary Library–க்கு எப்படி ஒரு மிகப் பெரிய பெயர் இருக்கின்றதோ, அதேபோன்று மதுரை மாவட்டத்தில் பல்வேறு சிறப்புகள் இருந்தாலும், இனி, அந்தக் கட்டடம் கட்டி முடித்த பிறகு, இதுவும் ஒரு மிகப் பெரிய அளவில் சிறப்பாக நம்முடைய கலைஞர் பெயரில் இருக்கக்கூடிய Library ஆக இருக்கும் என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் வேகமாக அப்பணியைச் செய்துகொண்டிருக்கிறார்கள். எங்களுக்கே அது பிரமிப்பாகத்தான் இருக்கிறது. கடந்த மாதம் நானும், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் நேரடியாகச் சென்று அந்தப் பணிகளைப் பார்வையிட்டோம். சில கருத்துகளை அமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். அதையும் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களிடம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இதையெல்லாம் incorporate செய்கிற விதத்தில், மிக அழகாக நம்முடைய கலைஞர் அவர்களுடைய பெயரில் Library கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது.

அதேபோல, ACL–Anna Centenary Library–ஐ பொறுத்தவரைக்கும் கடந்த கூட்டத்தொடரில் பேசியதுபோல, பராமரிப்பிற்கென்று கிட்டத்தட்ட 37.82 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பராமரிப்புப் பணிகளும் வேகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. 10 மாவட்டங்களில் கிளை நூலகங்கள் கட்டி முடிக்கப்பட்டு ready ஆக இருக்கின்றன. இந்தக் கூட்டத்தொடர் முடிவடைந்தவுடன் அவை திறந்து வைக்கப்படும். Union catalogue–ரோஜா முத்தையா Library–ஐ எவ்வளவு அழகாக சீரமைக்கிறார்கள் என்பதை நேராகச் சென்று பார்க்கும்போதுதான் தெரிந்தது. அரிய வகை நூல்கள் எல்லாவற்றையும் ஒரே கட்டுப்பாட்டில் கொண்டுவந்து, கிட்டத்தட்ட 70 இலட்சம் புத்தகங்கள் ACL–Anna Centenary Library–ல் இருப்பதாக இருந்தாலும் சரி, கன்னிமாரா நூலகத்தில் இருப்பதாக இருந்தாலும் சரி, 32 மாவட்டங்களுக்கான மைய நூலகங்களில் இருக்கின்ற அந்த

2022 ஏப்ரல் 11] [திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி]

நூலகங்களையெல்லாம் ஒரு குடையின்கீழ் கொண்டுவருகின்ற பணிகளை மிக அழகாகச் செய்துகொண்டிருக்கிறார்கள். அதேமாதிரி tamilnadu public libraries.org என்ற இணையதளத்தில் மற்ற பல்கலைக்கழகங்கள், மற்ற colleges–ல் இருக்கின்ற அரிய பல நூல்களை கிட்டத்தட்ட 21,403 நூல்கள், 30 இலட்சம் பக்கத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. ஒரே click–ல் எதை வேண்டுமானாலும் படித்துக்கொள்ளலாம் என்ற அளவிற்கு அதையும் நாங்கள் செய்துகொண்டிருக்கின்றோம்.

அதைத் தொடர்ந்து எங்களுடைய department related ஆக பல முன்னெடுப்புகளை நாங்கள் செய்துகொண்டிருக்கின்றோம்; எங்களுக்கு இது பெருமையாக இருக்கிறது. இதற்கு முக்கியமாக, முழு காரணமாக இருப்பது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தருகின்ற ஊக்கம்தான். பல நேரங்களில் எங்களுக்கு வருகின்ற விமர்சனங்களையெல்லாம் பார்த்து நாங்கள் சோர்வடைகின்றபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களிடம் சொல்வது என்னவென்றால், 'விமர்சனம் என்பது கடலில் எறிகின்ற கல்லைப் போன்றது; கல்தான் காணாமல் போகும். அதனால் விமர்சனங்கள் கல்லாக இருக்கட்டும், நாம் கடலாக இருந்துவிட்டுப் போவோம்' என்று சொல்வார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதெல்லாம் எங்களுக்கு மிகப் பெரிய உத்வேகத்தைக் கொடுக்கும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம், '36,895 கோடி ரூபாய் இந்தத் துறைக்காக ஒதுக்கியிருக்கிறீர்கள், எனக்குப் பெருமையாக இருக்கிறது. அதேநேரம் கொஞ்சம் அச்ச உணர்வாக இருக்கிறது; எப்படி கையாளப் போகிறேன்?' என்று நான் சொன்னபொழுது, அதற்கு அவர்கள் 'உன்னுடைய அச்சம்தான் உன்னை பொறுப்புள்ளவனாக மாற்றும். அதனால் நீ துணிந்து செய், மாணவர்களுடைய எதிர்காலத்தை மட்டும் மனதில் வைத்து சிந்தி' என்று சொன்னார்கள். அந்த அளவிற்குத்தான் நாங்கள் சென்று கொண்டிருக்கின்றோம். கண்டிப்பாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கரத்தை வலுப்படுத்தும்விதமாக, அவருக்குப் பெருமை சேர்க்கும்விதமாக இன்னும் அதிகப்படியான பல முன்னெடுப்புகளை எடுப்பதற்கு நாங்கள் இருக்கின்றோம்.

இன்னும் பல அறிவிப்புகளும் வரவிருக்கின்றன. என்னைப் பொறுத்தவரைக்கும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் தந்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களாக இருந்தாலும் சரி, நீங்கள் சொல்லியிருக்கின்ற ஒவ்வொரு கோரிக்கையையும்

[திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி] [2022 ஏப்ரல் 11 நான் குறிப்பெடுத்து வைத்திருக்கின்றேன். வருங்காலத்தில் கண்டிப்பாக ஒவ்வொன்றிற்கும் தீர்வு காணும் விதமாக, எங்களுடைய செயல்பாட்டின்மூலம் அதை நான் நிரூபித்துக் காட்டுவேன் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு அறிவிப்புகளை அறிவிக்கிறேன். அறிவித்ததற்குப் பிறகு, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு, இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அறிவிப்புகள்

பள்ளிக் கல்வித் துறை

1. திறன் வகுப்பறைகள்

2022–23 ஆம் கல்வியாண்டு தொடங்கி நான்கு ஆண்டுகளில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளிலும் திறன் வகுப்பறைகள் (Smart Class Room) ஏற்படுத்தும் முயற்சியின் முதற்கட்டமாக, நடப்பாண்டில் இலட்சக்கணக்கான மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ.150 கோடி மதிப்பீட்டில் 7,500 திறன் வகுப்பறைகள் உருவாக்கப்படும்.

2. உயர் தொழில்நுட்ப கணினி ஆய்வகங்கள் அமைத்தல்

2713 நடுநிலைப் பள்ளிகளில் உயர் தொழில்நுட்ப கணினி ஆய்வகங்கள் ரூ.210 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும். இதனால் 10 இலட்சத்திற்கும் அதிகமான மாணவர்களும், ஆசிரியர்களும் பயன்பெறுவர்.

3. பள்ளிப் பராமரிப்புக்கென தனி நிதி

பள்ளி வளாகங்கள், வகுப்பறைகள், கழிவறைகளைத் தூய்மை செய்தல், இரவுக் காவல் பணியினை மேற்கொள்ளல் போன்ற சேவைகள் வெளிப்பணியமர்த்துதல் (Outsourcing) வாயிலாக செயல்படுத்தப்படும். அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 15 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில், முதற்கட்டமாக இத்திட்டம் 2022–23 ஆம் கல்வியாண்டு முதல் ரூ.100 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

2022 ஏப்ரல் 11] [திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி]

4. ஆங்கில மொழி ஆய்வகங்கள்

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் ஆங்கிலத்தில் சரளமாக பேச, படிக்க, எழுத மற்றும் புரிந்துகொள்ளும் திறனை மேம்படுத்த 6,029 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கில மொழி ஆய்வகங்கள் ரூ.30 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

5. விரிவான பள்ளிக் கட்டமைப்புத் திட்டம்

1,000 மாணவர்களுக்குமேல் உள்ள அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளின் அனைத்துத் தேவைகளையும், வசதிகளையும் உள்ளடக்கிய முழுமையான கட்டமைப்பு ஏற்படுத்தப்படும். முதல் கட்டமாக நடப்பாண்டில் ரூ.90 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

6. செம்மைப் பள்ளி (School of Excellence)

அரசுப் பள்ளி மாணவர்களிலிருந்து அடுத்த தலைமுறை தலைவர்களை உருவாக்குவதை இலக்காகக் கொண்டு கல்வி, கவின்கலை, அறிவியல், இலக்கியம், விளையாட்டு என கல்வி மற்றும் இணைச் செயல்பாடுகளுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கும் வகையில் உலகத் தரத்திலான பள்ளி சென்னையில் அமைக்கப்படும். சுமார் ரூ.7 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

7. பாரம்பரிய பள்ளிக் கட்டடங்கள் புதுப்பித்தல்

பல்துறை சாதனையாளர்கள் படித்த பள்ளிகளும், 100 ஆண்டுகளுக்கு முந்தைய பள்ளிகளும் ரூ.25 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டு, நூற்றாண்டு விழா கொண்டாடப்படும்.

தமிழ் அறிஞர்கள், தலைவர்கள், விளையாட்டு வீரர்கள், பல்துறை சாதனையாளர்கள், அறிவியல் அறிஞர்கள் படித்த பள்ளிகளும், 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ள பாரம்பரிய பள்ளிக் கட்டடங்களும் அவற்றின் தனிச்சிறப்பு மாறாமல் புதுப்பிக்கப்படும். நூற்றாண்டு காணும் பள்ளிகளைச் சிறப்பிக்கும் வகையில் நூற்றாண்டு விழாக்கள் கொண்டாடப்படும். இப்பள்ளி நூலகங்களிலுள்ள அரிய நூல்கள் மற்றும் முக்கிய தலைவர்கள் குறித்த ஆவணங்கள் மின்னுருவாக்கம் செய்யப்பட்டு பாதுகாக்கப்படும். இத்திட்டம் ரூ.25 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

[திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி] [2022 ஏப்ரல் 11 பிற்பகல் 3–10

8. பள்ளிக் கல்வி அலுவலர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல்

பள்ளிக் கல்வித் துறையில் பணிபுரியும் இணை இயக்குநர்கள், முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன விரிவுரையாளர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள், வட்டாரக் கல்வி அலுவலர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்கள் என சுமார் 12,000 பேருக்கு நாட்டின் தலைசிறந்த கல்வியாளர்கள் மற்றும் வல்லுநர்கள் உதவியுடன் பணித்திறன் மேம்பாடு, தலைமைத்துவம், மேலாண்மை ஆகிய பொருண்மைகளில் ஆண்டுதோறும் உள்ளுறை பயிற்சி (Residential Training) அளிக்கப்படும்.

9. சிறந்த பள்ளித் தலைமை ஆசிரியருக்கான அறிஞர் அண்ணா தலைமைத்துவ விருது

கல்வி, விளையாட்டு, மாணவர் மேம்பாடு, பள்ளிக் கட்டமைப்பு, பள்ளி மேலாண்மைக் குழுவின் செயல்பாடு, இல்லம் தேடிக் கல்வி என அரசின் திட்டங்கள் அனைத்தையும் சிறப்பாகச் செயல்படுத்தும் தலைமை ஆசிரியர்களுக்கு அறிஞர் அண்ணா தலைமைத்துவ விருது வழங்கப்படும். ஆண்டுதோறும் 100 தலைமை ஆசிரியர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழும், கேடயமும், பள்ளிக்கு ரூ.10 இலட்சம் ஊக்க நிதியும் வழங்கப்படும்.

10. ஆசிரியர்களுக்கு தொல்லியல் பயிற்சி

தமிழர் நாகரிகம், பண்பாடு, கலாச்சாரம், தொண்மையின் சிறப்பு, குடியேற்றப் பகுதிகளின் காலக்கண்ணாடியென கீழடி, சிவகளை உள்ளிட்ட தமிழகமெங்கும் விரவியிருக்கும் தொல்லியல் தலங்கள் குறித்த தகவல்களை அடுத்த தலைமுறைக்கு சிறப்பாகக் கொண்டு சேர்க்கும் வண்ணம், தொல்லியல் துறை வாயிலாக ஆர்வமுடைய 1,000 அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு ரூ.3 கோடி மதிப்பீட்டில் பயிற்சி அளிக்கப்படும்.

11. நடமாடும் அறிவியல் ஆய்வகங்கள்

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் அறிவியல் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் நடமாடும் அறிவியல் ஆய்வகங்கள்மூலம் மாதந்தோறும் அறிவியல்

பரிசோதனைகள் உரிய வழிகாட்டுதலுடன் மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுவதுடன், மாணவர்களே உருவாக்கிய அறிவியல் கருவிகளும் காட்சிப்படுத்தப்படும். 25 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் ரூ.25 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

12. மாணவர்களுக்கு கல்விச் சுற்றுலா

பள்ளி அளவில் கல்வி மற்றும் இணைச் செயல்பாடுகளான மன்றச் செயல்பாடுகள், நூல் வாசிப்பு, நுண்கலைகள், விளையாட்டு மற்றும் அறிவியல் ஆகியவற்றில் சிறந்து விளங்கும் மாணவர்கள் உலக அளவிலும், தேசிய/மாநில அளவிலும் புகழ்பெற்ற இடங்களுக்குக் கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவர். இத்திட்டம் ரூ.3 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

13. கோடைக் கொண்டாட்டம்–சிறப்புப் பயிற்சி முகாம்

மாணவர்களின் தனித்திறன்களை மெருகேற்றும் வகையிலும், கோடை விடுமுறையைப் பயனுள்ள வகையில் செலவழித்திடவும், கோடைக் கொண்டாட்ட சிறப்புப் பயிற்சி முகாம்கள் மலை சுற்றுலாத் தலங்களில் நடத்தப்படும். பள்ளிப் பாடங்களைத் தவிர்த்து சூழலியல், தலைமைத்துவம், மனித உரிமை, சமூக நீதி, பெண்ணுரிமை மற்றும் எதிர்காலவியல் போன்ற பொருண்மைகளில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் பயிற்சிகள் அளிக்கப்படும்.

14. சாரண சாரணியர் முகாம்களுக்கு (Jamboree) நிதி ஒதுக்கீடு

தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடம் தலைமைப் பண்பு, நல்லொழுக்கம் மற்றும் தன்னம்பிக்கை சார்ந்த விழுமியங்களை வளர்க்க மண்டல அளவிலும், மாநில அளவிலும் சாரண சாரணியர் முகாம்கள் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் நடத்தப்படும்.

15. மாணவர் மன்றங்களைப் புதுப்பித்தல்

பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே கல்வி இணைச் செயல்பாடுகளை ஊக்குவிக்க வெவ்வேறு காலகட்டங்களில் இலக்கியம், கவின்கலை, சூழலியல் உள்ளிட்ட மாணவர் மன்றங்கள் தொடங்கப்பட்டு நடைமுறையில் இருந்தன. கொரோனா பெருந்தொற்றால் கடந்த சில ஆண்டுகளாக இம்மன்றங்கள் செயல்படாத நிலையில் அவற்றைப் புதுப்பித்து சிறப்பாகச் செயல்பட வழிவகை செய்யப்படும்.

[திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி] [2022 ஏப்ரல் 11

16. கலைத் திருவிழா

மாணவர்களின் கலைத் திறன்களை வெளிக்கொணரும்விதமாக அரசுப் பள்ளிகளில் பயிலும் இலட்சக்கணக்கான மாணவர்கள் பயன்பெறும் வகையில், பள்ளி, வட்டாரம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் கலைத் திருவிழா நடத்தப்படும்.

17. கணினி நிரல், எந்திரனியல் மன்றங்கள் மற்றும் ஹேக்கத்தான்

மாறிவரும் தொழில்நுட்ப மாற்றங்களுக்கு ஏற்ப அரசுப் பள்ளி மாணவர்களுக்குத் தொழில்நுட்ப அறிவு மற்றும் கணினி மொழி மீதான ஆர்வத்தை ஏற்படுத்த கணினி நிரல் மன்றங்கள் (Computer coding Club) மற்றும் எதிர்காலத் தொழில்நுட்பமான எந்திரனியலைக் (Robotics) கற்றுக்கொள்ள எந்திரனியல் மன்றங்கள் (Robotics Club) பள்ளிகளில் ஏற்படுத்தப்படும். மேலும், இணையப் பாதுகாப்பு மற்றும் Ethical Hacking தொடர்பான பயிற்சி அளிக்கப்பட்டு ஆண்டுதோறும் மாநில அளவிலான ஹேக்கத்தான் போட்டிகள் நடத்தப்படும்.

18. பள்ளிகளில் விழிப்புணர்வு வாரம்

2022–2023 ஆம் கல்வியாண்டின் முதல் வாரத்தில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு மனநலம், குழந்தைகள்மீதான வன்முறையைத் தடுத்தல், தன்னம்பிக்கையை வளர்த்தல், போதைப் பொருட்களுக்கு அடிமையாதலைத் தடுத்தல், தன்சுத்தம் பேணுதல் போன்ற பொருண்மைகளில் பள்ளி அளவில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படும்.

19. மாணவர்களின் உடல் நலன் காக்க சிறப்புப் பயிற்சிகள்

மாணவர்களின் கற்கும் திறன் உடல் நலனோடு நெருங்கிய தொடர்புடையது. எனவே, கற்றல் திறனை மேம்படுத்தும் வகையில் உடலியக்க நிபுணர்கள்மூலம் (Physio Therapist) 2022–2023 ஆம் கல்வியாண்டில் முன்னோட்ட அடிப்படையில் பள்ளி அளவில் சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்படும்.

20. பள்ளிகளில் காய்கறித் தோட்டம்

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு செயல்வழிக் கற்றலை ஊக்குவிக்கும்வகையில், அனைத்து அரசுப் பள்ளிகளிலும்

காய்கறித் தோட்டம் மாணவர்களால் ஏற்படுத்தப்படும். அவற்றில், விளையும் காய்கறிகள், பழங்கள், கீரைகள் அப்பள்ளிகளின் சத்துணவில் பயன்படுத்தப்படும். இத்திட்டம் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

21. பள்ளி சதுரங்க ஒலிம்பியாட்

ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் சென்னையில் நடைபெறும் சர்வதேச சதுரங்க ஒலிம்பியாட் போட்டிகளைத் தொடர்ந்து அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே சதுரங்கம் குறித்து ஆர்வத்தை ஏற்படுத்தும் வண்ணம், பள்ளி, வட்டாரம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் சதுரங்கப் போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றிபெறும் மாணவர்கள் சர்வதேச விளையாட்டு வீரர்களுடன் கலந்துரையாட ஏற்பாடு செய்யப்படும். இத்திட்டம் ரூ.1 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

22. சிறார் பருவ இதழ் மற்றும் ஆசிரியர் மாத இதழ்

மாணவர்களின் வாசிப்புத் திறனை ஊக்குவிக்கவும், அவர்களின் உள்ளார்ந்த படைப்புத் திறன்களை வெளிப்படுத்தும் வகையிலும் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தொடக்க வகுப்பு மாணவர்களுக்கு ஊஞ்சல் இதழும், உயர்வகுப்பு மாணவர்களுக்கு தேன்சிட்டு இதழும் மாதமிருமுறை வெளியிடப்படும். மேலும், ஆசிரியர்களுக்கான படைப்புத் தளத்தை உருவாக்கவும், சிறந்த கற்றல் கற்பித்தல் முறைகளைப் பரிமாறிக் கொள்ளவும், கனவு ஆசிரியர் என்ற மாத இதழ் வெளியிடப்படும். சுமார் ரூ.7 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

23. மேல்நிலை கணினிப் பிரிவு மாணவர்களுக்குக் கட்டண விலக்கு

அரசு மேல்நிலை வகுப்புகளில் கணினி அறிவியல் பாடத்தை விருப்பப் பாடமாக பயிலும் மாணவர்களிடம் 2022–2023 ஆம் கல்வி ஆண்டிலிருந்து, ரூ.200 தனிக் கட்டணமாக வசூலிக்கப்படுவது முழுமையாக இரத்து செய்யப்படும். இதனால் ஆண்டுதோறும் 3 இலட்சம் மாணவர்கள் பயனடைவர். இதற்கென ஆகும் செலவினம் ரூ.6 கோடியை அரசே ஏற்கும்.

[திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி] [2022 ஏப்ரல் 11

24. மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு இருப்பிடத்திலேயே கல்வி

பல்வகைக் குறைபாடுகள் காரணமாக (Children with multiple disabilities) பள்ளிக்கு வர இயலாத 10,146 மாற்றுத் திறனாளி மாணவர்களுக்குக் கல்வி மற்றும் இயன்முறை மருத்துவம் உள்ளிட்ட சிகிச்சைகளை அவர்களின் வீடுகளுக்கே சென்று வழங்கி அவர்களின் கற்றல் சூழலை மேம்படுத்த ரூ.8.11 கோடி மதிப்பீட்டில் திட்டம் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

25. அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் மாதாந்திர பெற்றோர் கூட்டம்

அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் பெற்றோர்களை ஒவ்வொரு மாதமும் பள்ளிக்கு அழைத்து மாணவர்களின் உடல் நலம், கற்றல் அடைவு, இணைச் செயல்பாடுகளான விளையாட்டு, வாசிப்புத் திறன், மன்றச் செயல்பாடுகளில் பங்கேற்பு உள்ளிட்ட பள்ளியின் அனைத்து நிகழ்வுகள் குறித்தும் எடுத்துக் கூறப்படும். இதன்வாயிலாக அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களும் அவர்தம் பெற்றோரும் பயன்பெறுவர்.

26. கணினித் தேர்வு மையங்கள் அமைத்தல்

ஆசிரியர் தேர்வு வாரிய போட்டித் தேர்வுகளைத் திட்டமிட்ட கால அட்டவணைப்படி விரைந்து நடத்திடவும், போட்டித் தேர்வு நடைபெறாத காலங்களில் அரசுப் பள்ளி மாணவர்கள் பயன்படுத்தும் வகையிலும் அரசுப் பள்ளிகளில் கணினி ஆய்வகங்கள் ரூ.30 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

27. நூலக நண்பர்கள் திட்டம்

தமிழகத்தில் உள்ள கிராமங்கள் மற்றும் நகரப் பகுதிகளில் நூலக சேவை கிடைக்கப் பெறாத இடங்களில் நூலக நண்பர்கள் என்ற புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு தன்னார்வலர்கள் வாயிலாக நூலக சேவை வழங்கப்படும். இத்திட்டம் 15 இலட்சம் வாசகர்கள் பயன்பெறும் வகையில் ரூ.56.25 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

2022 ஏப்ரல் 11] [திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி]

28. மெய்நிகர் நூலகம் (Virtual Reality Library)

நூலகங்களைப் பயன்படுத்தும் குழந்தைகள் மற்றும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் நவீன தொழில்நுட்பத்தை உள்ளடக்கிய மெய்நிகர் தொழில்நுட்ப நூலகம் (Virtual Reality Library) 76 நூலகங்களில் ஏற்படுத்தப்படும். இத்திட்டம் ஆண்டுக்கு ஒரு இலட்சம் மாணவர்கள் பயன்பெறும்வகையில் ரூ.57.20 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

29. நூலகங்களில் wi–fi வசதி

தமிழ்நாடு அரசு பொது நூலகங்களை நாடி வரும் வாசகர்கள் மற்றும் போட்டித் தேர்வு மாணவர்கள் பயன்பெறும்வகையில் 352 நூலகங்களில் இலவச wi–fi இணைய வசதி ஏற்படுத்தப்படும். இத்திட்டம் 75,000 வாசகர்கள் பயன்பெறும் வகையில் ரூ.23.40 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

30. TN talk

அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் ஒருங்கிணைப்பில் சர்வதேச அளவில் பல்துறை நிபுணர்கள், அறிவியல் ஆய்வாளர்கள் மற்றும் புகழ்பெற்ற அறிஞர்களின் உரைகள் மிகச் சிறந்த தொழில்நுட்பம் மற்றும் அரங்க அமைப்புடன் TN talk என்ற பெயரில் நிகழ்த்தப்படும். இணையம் வாயிலாக உலகெங்கும் உள்ள தமிழர்களைச் சென்றடையும் வகையில் இத்திட்டம் ரூ.37.50 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

31. நாளைய தலைமுறைக்கு நாட்டுடைமை நூல்கள்

பள்ளி, கல்லூரி மாணவர்கள், கல்வியாளர்கள், இதழாளர்கள் மற்றும் பொது வாசகர்களிடையே தமிழ், கலை மற்றும் பண்பாட்டு ஆர்வத்தை வளர்க்கும் வகையில், தமிழ்நாடு அரசால் நாட்டுடைமையாக்கப்பட்ட பல்வேறு அறிஞர்களின் படைப்புகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 20 நூல்கள் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் வெளியிடப்படும்.

32. கலைக்களஞ்சியங்கள் ஆவணப் பதிப்பு

வரலாறு மற்றும் பண்பாட்டு ஆர்வலர்கள், மாணவர்கள் ஆய்வாளர்கள் மற்றும் அறிவியல் தமிழ் ஆர்வலர்கள் பயன்பெறும்

[திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி] [2022 ஏப்ரல் 11 வகையில், அறிஞர் பெரியசாமி தூரன் அவர்கள் தொகுத்த கலைக்களஞ்சியங்கள் 10 தொகுதிகளும், சிறார் களஞ்சியங்கள் 10 தொகுதிகளும் ஆவணப் பதிப்பாக ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் வெளியிடப்படும்.

33. நூற்றாண்டு காணும் படைப்பாளிகளின் நூல் வெளியீடு

நூற்றாண்டு காணும் படைப்பாளிகளின் பிறந்தநாள் மற்றும் நினைவு நாளைப் போற்றும்வகையில், அவர்தம் எழுத்துத் திறன் மற்றும் சமூகப் பங்களிப்பு போன்றவற்றை இளைய தலைமுறையினர் உணர்ந்துகொள்ளும் வகையில் அவர்களது தலைசிறந்த படைப்புகள் தெரிவு செய்யப்பட்டு ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் வெளியிடப்படும். இத்திட்டத்தின் வாயிலாக குழந்தைகள், இலக்கிய மற்றும் நாடக ஆர்வலர்கள் பயன்பெறுவர்.

34. வயது வந்தோருக்கான புதிய எழுத்தறிவுத் திட்டம்

தமிழ்நாட்டில் 15 வயதுக்கு மேற்பட்ட முற்றிலும் எழுதப் படிக்கத் தெரியாத 4.80 இலட்சம் நபர்களுக்கு அடிப்படை எழுத்தறிவுக் கல்வி வழங்கிடும்வகையில் ரூ.9.83 கோடி மதிப்பீட்டில் புதிய எழுத்தறிவுத் திட்டம் செயல்படுத்தப்படும் (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அளித்துள்ள வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக் கொண்டு, மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டு, வாழ்க தலைவர், வெல்க தமிழர், வளர்க திராவிட மாடல் ஆட்சி என்று சொல்லி எனது பதிலுரையை நிறைவு செய்கிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மட்டுமின்றி உலகத்திலே வாழ்கின்ற தமிழர்களுக்கு மட்டுமின்றி, அனைத்துத் தரப்பு அரசியல்வாதிகளுக்கும் இன்று தலைவராகக் திகழ்ந்துகொண்டு, முதல்வர்களுள் சிறந்த முதல்வர் என்று சொல்லப்பட்டது

மட்டுமல்ல, தமிழகத்தின் வளர்ச்சிக்காக துபாய், அபுதாபி போன்ற வெளிநாடுகளுக்குச் சென்றது மட்டுமல்ல, டெல்லிக்குச் சென்று அங்கே இருக்கின்றவர்களைச் சந்தித்து தமிழ்நாட்டிற்காகக் குரல் கொடுத்தது மட்டுமல்ல, நேற்றைக்கு முதல் நாள் கேரளாவிற்கும் சென்று அங்கே CPM நடத்திய மாநாட்டிலே கலந்துகொண்டு சமூக நீதிக்காகவும், மாநில சுயாட்சிக்காகவும், குரல் கொடுக்கின்ற ஒரு தலைவர், நம்முடைய தலைவர் முதலமைச்சர் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய மக்களும், உலக மக்களும் போற்றிக்கொண்டிருக்கின்றனர். அந்த முதலமைச்சருக்கு என்னுடைய உளமார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு முன்பாக, எனக்கு இந்த சட்டமன்றத்திலே நுழைய வாய்ப்பளித்து, அமைச்சராக்கி அழகுபார்த்த எங்களுடைய மறைந்த தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் துயில் கொண்டிருக்கின்ற திசை நோக்கி என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, குறிப்பாக, தலைவர் அவர்களைப் பொறுத்தவரையில், விழுப்புரம் என்றாலே தளபதி மாவட்டம் என்றுதான் அந்த காலத்திலிருந்தே சொல்வோம். அதுமட்டுமல்ல, 2003–லேதான் நம்முடைய தலைவர் அவர்கள் முதன்முதலாக கழகத்தின் மாநாட்டிற்கு அங்கே தலைமை தாங்கினார். அந்தத் தலைவர் என்னை இன்று அமைச்சராக நியமித்து, இந்தத் துறையை ஒப்படைத்து, பல்வேறு ஆலோசனைகளை வழங்கிக் கொண்டிருக்கின்ற அந்தத் தலைவர் அவர்களை மீண்டும் நான் வணங்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோல் நம்முடைய பொதுச் செயலாளர் அவர்களுக்கும், இங்கு அவர் வராவிட்டாலும், அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோல், இன்று இளைஞர்களையெல்லாம் ஈட்டி முனைகளாகத் தீட்டி, தமிழகத்தினுடைய திராவிட இயக்கக் கொள்கைகளை அவர்களுடைய உள்ளத்திலே பரப்பிக்கொண்டிருக்கின்ற எனது அன்பிற்குரிய இளைஞரணிச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் தம்பி உதயநிதி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைவிட நம்முடைய சபாநாயகர், வாத்தியாராக இருந்து இங்கு சபாநாயகராக இருப்பவர், என்னைப்போல் அவரும் வாத்தியாராக இருந்து வந்தவர்தான். அதனால் இந்தக் கல்வித் துறையில் பேசுவதற்கு அவருக்கு மிகுந்த தகுதி இருக்கின்றது. அந்தச் சபாநாயகருக்கும்

[முனைவர் க. பொன்முடி] [2022 ஏப்ரல் 11

என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். விழுப்புரம் மாவட்டத்திலிருந்து இன்னொரு அமைச்சராக இருக்கின்ற மஸ்தான் அவர்களுக்கும், அங்கு இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் புகழேந்தி, இலட்சுமணன் ஆகியோருக்கும் என்னுடைய வணக்கத்தை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையினைப் பொறுத்தவரையில், இங்கு பேசியவர்கள் எல்லாம் சிலவற்றை எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக, அ.தி.மு.க. சார்பில் பேசிய திரு. செங்கோட்டையன் அவர்களும், திரு. ராஜன் செல்லப்பா அவர்களும் ஒரு கருத்தைச் சொன்னார்கள். 6 இலட்சம் பேர் என்று நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது. அது எப்படி என்று கேட்டார்கள். 2 இலட்சம் பேர் தானே வருவார்கள் என்று சொன்னார்கள். நீங்கள் தயவுசெய்து நிதிநிலை அறிக்கையில் படித்துப் பார்த்தீர்கள் என்று சொன்னால், அதில் சொல்லப்பட்டிருக்கிறது; 'இதன்மூலம் அரசுப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை முடித்து மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும், பட்டப் படிப்பு, பட்டயப் படிப்பு, தொழிற் படிப்பு ஆகியவற்றில் இடைநிற்றல் இன்றி முடிக்கும் வரை First year, Second year, Third year முடிக்கும் வரை மாதம் ரூ.1,000/– அவர்களது வங்கிக் கணக்கிற்கு நேரடியாகச் செலுத்தப்படும்' என்று. அதற்குத்தான் ரூ.698 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். நீங்கள் கேட்பீர்கள். இந்த வருடம் 2 இலட்சம் தானே என்று! அதில் அவர்கள் தெளிவாகப் போட்டுவிட்டார்கள். First year சேருகின்ற மாணவிகளுக்கும், Second year படித்துக்கொண்டிருக்கின்ற மாணவிகளுக்கும், மூன்றாம் வருடத்தில் படித்துக்கொண்டிருக்கின்ற மாணவிகளுக்கும் ஆக மொத்தம் 6 இலட்சம் பேருக்கு 698 கோடி ரூபாய் ஒதுக்கி அறிவித்திருக்கிறார்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எனது விளக்கமாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு) இதில் என்ன சந்தேகம்? இதில் ஒன்றும் இல்லை. இதுதான் உண்மையானது. அதைத்தான் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 3–20

அதுபோல் இங்கு நம்முடைய நண்பர்கள் அண்ணாமலைப் பல்லைக்கழகத்தைப் பற்றிச் சொன்னார்கள். இவையெல்லாம் அந்தக் காலத்தில் நடந்தவை. நிறைய பேரை நியமனம் செய்து விட்டார்கள். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மற்றும் பிற பல்கலைக்கழகங்களில் நிறைய நியமனம் செய்திருக்கிறார்கள்.

அவர்களுக்கெல்லாம் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்ற அவர்களுடைய கோரிக்கைகளையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொல்லிவிடுகிறோம்; கூடுமானவரை அவர்களையெல்லாம் பராமரித்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

அண்ணாமலைப் பல்கலைக்கழத்தில் இருந்தவர்களையெல்லாம், மற்ற இடங்களுக்கு, அரசுக் கல்லூரிகள்/பிற துறைகளுக்கு அவர்களது தகுதிக்கு ஏற்ப அனுப்பி வைத்து, பல்கலைக்கழகத்தில் பணியிடம் காலியாகும்போது, மீண்டும் அவர்கள் இங்கே அழைத்துக்கொள்ளப்படுவார்கள் என்ற உறுதியையும் நாங்கள் கொடுத்திருக்கிறோம். ஆக, அந்த அடிப்படையில் பல்கலைக்கழகங்களைப் பொறுத்தவரையில், அது அண்ணாமலைப் பல்கலைக்கழகமாக இருந்தாலும் சரி, பெரியார் பல்கலைக்கழகமாக இருந்தாலும் சரி, எந்த அளவுக்கு நம்மால் முடியுமோ அதைக் கண்டிப்பாகச் செய்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கான ஆணைகளையெல்லாம் இட்டிருக்கிறார். அவர்களுக்கு உரிய உதவிகளை நாங்கள் கண்டிப்பாகச் செய்து கொண்டிருக்கிறோம் என்பதை உங்களுக்கு நான் முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுபோல இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களெல்லாம் பேசுகிறபோது, அறிவுசார் நகர் பற்றி மிகப் பெருமையாகப் பேசினார்கள். அதுவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தியில் உதித்த ஒன்றுதான். அதற்காக இங்கே பேசிய அனைத்து உறுப்பினர்கள், குறிப்பாக இங்கே கருத்துகளை எடுத்துச்சொன்ன திரு. செங்கோட்டையன் அவர்களுக்கும், திரு. அண்ணாதுரை அவர்களுக்கும், டாக்டர் இரா. இலட்சுமணன் அவர்களுக்கும், திரு. அருள் அவர்களுக்கும், திரு. முகம்மது ஷாநவாஸ் அவர்களுக்கும், திரு. இளங்கோ அவர்களுக்கும், திரு. வி.பி. நாகைமாலி அவர்களுக்கும், முனைவர் ஜவாஹிருல்லா அவர்களுக்கும், திரு. வி.வி. ராஜன் செல்லப்பா அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தை மீண்டும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இங்கே, உயர் கல்வியைப் பொறுத்தவரையில், 2 கருத்துகளை நான் முதலில் சொல்ல வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய 2 கண்கள் கல்வி மற்றும் சுகாதாரம் என்று பலமுறை சொல்லியிருக்கிறார். அந்த அடிப்படையில்தான் அது பள்ளிக் கல்வியாக இருந்தாலும், உயர் கல்வித் துறையாக இருந்தாலும், கோரிக்கைகளையெல்லாம் ஏற்று நிதி ஒதுக்கீடு

[முனைவர் க. பொன்முடி] [2022 ஏப்ரல் 11

செய்திருக்கிறார். இந்த அடிப்படையில் உயர் கல்வித் துறையைப் பொறுத்தவரையில், அவருடைய நோக்கங்கள் இரண்டுதான்.

ஒன்று, எண்ணிக்கையை உயர்த்துதல். இன்றைக்குக்கூட, 51.4% அப்போது இருந்தது என்று எல்லோரும் சொன்னார்கள். உயர் கல்வித் துறை என்று சொன்னாலே, ஆரம்பக் கல்வியை எப்படி காமராஜர் அவர்கள் வளர்த்தாரோ, அதுபோல் உயர் கல்வித் துறை வளர்வதற்குக் காரணமாக இருந்தவர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் என்பதை மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், அரசுக் கல்லூரிகளில் shift system—சுழற்சி முறையைக் கொண்டு வந்து மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்தியவர் தலைவர் கலைஞர்தான்; நுழைவுத் தேர்வை அகற்றியவர் தலைவர் கலைஞர்தான். ஆக, உயர் கல்வி வளர்ச்சி என்று சொன்னாலே, கலைஞர் காலத்தில் வந்தது; நீங்களும் செய்தீர்கள், நான் இல்லையென்று சொல்லவில்லை. அதனுடைய விளைவாகத்தான் 51.4 சதவிகிதம் வந்திருக்கிறது.

இன்று தளபதி அவர்கள் எடுத்திருக்கின்ற முயற்சியின் காரணமாக—எழுதி வைத்துக்கொள்ளுங்கள். இது 2 வருடங்களுக்கு முன்பு எடுத்த கணக்கு. இப்போது அந்தக் கணக்கு எடுக்கப்படுமானால்—நிச்சயமாக 55 சதவிகிதம் உயர் கல்வி பெற்றவர்கள் தமிழகத்தில் இருப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அது தலைவருக்குக் கிடைக்கிற பெருமை. அது நிச்சயமாக நடக்கும் என்பதையும் உங்களுக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆகவே, முதலில் எண்ணிக்கையை வளர்க்க வேண்டும். எண்ணிக்கையை வளர்ப்பது மட்டுமல்ல; அதேநேரத்தில் படிக்கின்ற மாணவர்களின் திறமையையும் வளர்க்க வேண்டும். எண்ணிக்கை, திறன். அந்தத் திறன் என்பது வேலைக்குச் செல்லக்கூடிய பயிற்சியையும் அளிப்பதாக அமைந்திருக்க வேண்டும். இந்த இரண்டையும் கருத்தில்கொண்டுதான் இந்த 9 மாதங்களில் தலைவர் முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலோடு, இந்த துறை பயணித்துக்கொண்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

அந்த அடிப்படையில்தான் சென்ற ஆண்டுகூட அரசு கலைக் கல்லூரிகளில் 25 சதவிகிதமாக மாணவர் சேர்க்கை எண்ணிக்கையை உயர்த்தினோம். அதனால், பல்வேறு மாணவர்கள் கல்லூரிகளில்

சேருவதற்கான வாய்ப்புகள் கிடைத்தன. அதைவிட முக்கியமாக கல்லூரியில் அரசுப் பள்ளியில் படித்த மாணவர் சேர்க்கை எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கின்ற முயற்சியில் ஒன்றுதான், 7.5 சதவிகித இட ஒதுக்கீடு.

ஆக, இது அரசுப் பள்ளியில் படிக்கின்ற மாணவர்கள், கிராமப்புறத்தில் இருக்கின்ற மாணவர்களுக்கானது. நேற்று கூட இந்த 7.5 சதவிகித இட ஒதுக்கீடு சமூக நீதிக்குக் கிடைத்திருக்கிற 3–வது வெற்றி என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டின் காரணமாக இன்று அரசுப் பள்ளி மாணவர்கள், பொறியியல் கல்லூரிகளில் மட்டுமல்ல, எல்லா கல்லூரிகளிலும் சேருகின்ற ஒரு வாய்ப்பையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். சேர்த்ததோடு மட்டுமல்ல, அவர்களுக்கு என்ன செய்திருக்கிறார் தெரியுமா? கல்விக் கட்டணமும் கிடையாது; விடுதிக் கட்டணமும் கிடையாது. அந்தக் காலத்தில் நாங்கள் படிக்கும்போது hostel fees–ஐ கட்ட எவ்வளவு கஷ்டப்பட்டோம் என்பது நிறையப் பேருக்குத் தெரியும். அந்தமாதிரி hostel fees–ம் கிடையாது; Transport fees–ம் கிடையாது என்று இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்திலேயே அறிவித்திருக்கிற ஒரு முதல் முதலமைச்சர், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 சதவிகித இட ஒதுக்கீடு; அவர்கள்தான் கொண்டுவந்தார்கள் என்று காலையில்கூட பேசியவர்கள் சொன்னார்கள். கொண்டு வந்தார்களே தவிர, அதைத் தேர்தல் நேரத்தில் கொண்டு வந்தார்கள். தவறாக நினைத்துக்கொள்ளக்கூடாது. எப்படியோ கொண்டு வந்தார்கள். கொண்டு வந்ததன் அடிப்படையில், கையெழுத்து போடாமலே மாண்புமிகு கவர்னர் அவர்கள் வைத்திருந்தார். அதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் போய் கவர்னர் ஆபீசுக்கு முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தி அதைச் செயல்படுத்தியவர், செயல்படுத்துவதற்குக் காரணமாக இருந்தவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆக, 7.5 சதவிகித இட ஒதுக்கீடு என்பது . . . (குறுக்கீடு) அ.தி.மு.க. ஆட்சியில் கொண்டு வந்தீர்கள். அதற்கு மிக்க நன்றி. அதை நான் இல்லையென்று சொல்லவில்லை. அதை

[முனைவர் க. பொன்முடி] [2022 ஏப்ரல் 11

அமல்படுத்துவதற்குக் காரணமாக இருந்தவர் தளபதி அவர்கள். அதை விரிவாக்கம் செய்து, இன்று மருத்துவக் கல்லூரிகள் மட்டுமல்ல, பொறியியல் கல்லூரிகள், சட்டக் கல்லூரிகள், வேளாண்மைக் கல்லூரிகள் என்று அனைத்துக் கல்லூரிகளிலும் 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டைக் கொண்டு வந்திருக்கின்ற முதலமைச்சர், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3–25

அந்த அளவிற்கு எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமென்பதற்குத்தான் மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000/– வழங்கும் திட்டம். மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000/– கொடுக்கிறீர்களே, 2 இலட்சம் மாணவிகள்தானே படிக்கிறார்கள் என்று எதிர்க்கட்சி உறுப்பினர் பேசும்போதுகூடச் சொன்னார்கள். அதற்காகத்தான் நான் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்ததைப் படித்துக் காண்பித்தேன். 6 இலட்சம் பேருக்கு, அதாவது, first year, second year, third year என்று தொடர்ந்து மூன்று வருடங்கள் படிக்கின்ற மாணவிகளுக்கு ரூ.1,000/– கொடுப்பதனால், எந்தப் பெண்களாவது இனிமேல் கல்லூரிக்குச் சென்று படிக்காமல் இருப்பார்களா? அதைச் செய்திருக்கின்ற ஒரே முதலமைச்சர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்பதை மனசாட்சி உள்ள யாரும் மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) அவர் பெண்களுக்கென்று உரிமை கொடுத்துக் கொண்டிருக்கிறார். பெண்களின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கக்கூடிய தலைவர், நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள். தந்தை பெரியார் வழியில், அண்ணாவின் வழியில், கலைஞரின் வழியில் சமூக நீதிக்காக, மகளிருக்காக இன்று செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற தலைவர்தான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்த உணர்வோடுதான், நான் இங்கே இந்த எண்ணத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்துவது மட்டுமல்ல; எண்ணிக்கையை உயர்த்துவதோடு தரத்தையும் உயர்த்த வேண்டும் என்றுதான் நான் முதலிலேயே சொல்லியிருந்தேன். அதுதான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் நோக்கமாக இருக்கிறது. அந்த

அடிப்படையில்தான், இங்கே பேசிய நண்பர்களெல்லாம் குறிப்பிட்டதைப்போன்று அறிவுசார் நகரம் ஆரம்பிக்கப்படுகிறது. அந்த அறிவுசார் நகரத்தில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள், திறன் பயிற்சி மையங்கள், அறிவுசார்ந்த தொழில் நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்தும் உருவாக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அறிவுசார் நகரம் என்பது, கல்வித் திறனை வளர்ப்பதற்காக தலைவர் அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கின்ற திட்டம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

அதுமட்டுமல்ல, 28–10–2021–ல் கோயம்புத்தூர் மற்றும் திருச்சியில் அறிவியல் தொழில்நுட்ப மையங்களில் புத்தாக்க மையங்களைத் திறந்து வைத்தவரும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான்; ஆகவே, எண்ணிக்கை உயர்ந்தால் மட்டும் போதாது; அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் அவர்களுடைய திறமையை வளர்க்க வேண்டுமென்பதற்காக செயல்பட்டுக் கொண்டிருப்பவர். கற்பவர்கள், தேர்வில் தேர்ச்சி பெற்று வேலைக்குச் செல்ல வேண்டுமென்றால், தமிழில் ஒரு தேர்வு எழுத வேண்டுமென்று சொன்னவரும் நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தளபதி அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) என்னதான் சொன்னாலும், தமிழை வளர்க்க வேண்டும், மாநிலங்களுக்கு மாநிலம் சுயாட்சி வேண்டும் என்ற உணர்வோடு செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற முதல்வர் என்ற காரணத்தினால்தான், இதைச் செய்திருக்கிறார்.

அதுமட்டுமல்ல, பெரும்பாலான பல்கலைக்கழகங்களில் U.G. courses–ஐ அதிகமாக உருவாக்கியிருப்பவரும் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்தான். நான் ஒன்று சொன்னால் யாரும் தவறாக நினைத்துக்கொள்ளக் கூடாது. கலைஞர் அவர்களின் பெயரை வைக்கிறார்கள்—எங்கள் ஆட்சியில் வைத்த பெயரை எடுத்துவிட்டார்கள், பழிவாங்கிவிட்டார்கள் என்றெல்லாம் அதிகமானோர் பேசினீர்கள். கலைஞர் பெயரில் கல்லூரி இருந்ததால், அதன் பெயரை மாற்றியதே அ.தி.மு.க. ஆட்சியில்தான். குளித்தலையில், புதுக்கோட்டையில் இருந்த கல்லூரிகளில் கலைஞர் என்ற பெயர் இருந்ததையெல்லாம் மாற்றியது அ.தி.மு.க. ஆட்சியில்தான். ஆனால், மீண்டும் அந்தக் கல்லூரிகளெல்லாம் கலைஞர் அவர்களுடைய பெயரிலேயே இயங்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்கான அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது.

[முனைவர் க. பொன்முடி] [2022 ஏப்ரல் 11

குறிப்பாக, எண்ணிக்கையை உயர்த்துவதற்கும், அறிவுசார் திறமையை வளர்ப்பதற்கும் உயர் கல்வித் துறை எந்த அளவிற்குச் செயல்பட வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டு, அதைச் செயல்படுத்திக்கொண்டிருக்கிறோம் என்பதை உங்களுக்கு நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். வேண்டுமானால், அவற்றையெல்லாம் புத்தகத்திலிருந்து விளக்கமாகப் படித்துக்கொள்ளுங்கள்.

நான் அறிவிப்புகளுக்கு வந்துவிடுகிறேன். அறிவிப்புகளைப் பொறுத்தவரையில், நான் அதிகம் சொல்ல வேண்டிய அவசியமில்லை. 4 தலைப்புகளில் நான் உங்களுக்குச் சொல்லிவிடுகிறேன்.

முதலில், விடுதிக் கட்டடங்கள். அதிகம் பேர் கல்லூரிக் கட்டடம் வேண்டும், விடுதிக் கட்டடங்கள் வேண்டும், புதிய கல்லூரிகள் வேண்டும் என்று கேட்டிருக்கிறீர்கள். அவர்களுடைய கோரிக்கைகளையெல்லாம் ஏற்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடன் சேர்ந்து அறிவித்திருக்கின்ற திட்டம்தான், விடுதிக் கட்டடங்கள். காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் ஒரு விடுதி, கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்தில் இரண்டு மாணவியர் விடுதிகள், அண்ணா பல்கலைக்கழக கிண்டி வளாகத்தில் ஒரு மாணவியர் விடுதி, சென்னை பல்கலைக்கழக மெரினா வளாகத்தில் ஒரு விடுதி, திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழக காஜாமலை வளாகத்தில் ஒரு மாணவியர் விடுதி. ஆக மொத்தம் 6 விடுதிகள் ரூ.131.04 கோடி செலவில் கட்டுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்த அறிவிப்புகளெல்லாம் detail ஆக வந்திருக்கிறது. நான் சுருக்கமாக இந்த 6 அறிவிப்புகளுக்கும் சேர்த்துச் சொல்கிறேன்.

பிற்பகல் 3–30

புதிய கல்லூரிக் கட்டடங்கள். கடந்த ஆட்சியிலே அறிவிப்புகளை announce செய்துவிட்டுப் போய்விட்டார்களே தவிர, கட்டடம் கட்டுவதற்கு நிதிகூட ஒதுக்கவில்லை. கல்லூரிக் கட்டடங்களைக் கட்டுவதற்கு, கிட்டத்தட்ட 6 கல்லூரிகளுக்குக் கட்டடம் கட்டுவது சம்பந்தமாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அதற்கு நிதியொதுக்க வேண்டுமென்று சொன்னதன் அடிப்படையில் அந்த 6

கல்லூரிகளுக்கும், அதேபோன்று, சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்ட 10 கல்லூரிகள் என 16 கல்லூரிகளுக்கும் 199.36 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

ஆக, முதலில் விடுதிகள், இரண்டாவது கல்லூரிக் கட்டடங்கள் மூன்றாவதாக உட்கட்டமைப்பு வசதிகள்; எல்லா உறுப்பினர்களும் உட்கட்டமைப்பு வசதிகள் பள்ளிக்கூடங்களிலே இல்லை; கல்லூரிகளிலே இல்லையென்று சொன்னார்கள். அந்த உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்காக, பெருந்தலைவர் காமராசர் பெயரில் அரசுக் கல்லூரிகளில் முதற்கட்டமாக இந்த ஆண்டு 26 பாலிடெக்னிக் கல்லூரிகள், 55 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும். இந்த 26 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 55 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் பட்டியலை இணைப்பாகக் கொடுத்திருக்கிறோம். அதேபோன்று, பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் ஆய்வகங்கள் மற்றும் நூலகங்களை நவீனப்படுத்த வேண்டும். 10 பொறியியல் கல்லூரிகளில் உள் விளையாட்டு அரங்கத்துடன்கூடிய விளையாட்டு வசதிகள் மேம்படுத்தப்படும். அழகப்பா பல்கலைக்கழகம், தொண்டி வளாகத்தில் கடல்சார் விளையாட்டு மையம் அமைக்கப்படும். புதுக்கோட்டை மாமன்னர் கல்லூரியில் புதிய நூலகக் கட்டடம் கட்டப்படும். ஆக, இவற்றிற்காக 386.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும். கல்லூரிக் கட்டடம், உட்கட்டமைப்பு இவையெல்லாம் குறித்து நான் சொல்லிவிட்டேன்.

நான் முதலிலேயே கல்வித்திறன் மேம்பாடு வேண்டுமென்று சொன்னேன். அந்தத் திறன் மேம்பாட்டிற்காக தலைவர் அவர்கள் என்ன செய்திருக்கிறார்கள்? திறன் மேம்பாட்டிற்காக அண்ணா பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி முயற்சிகளை மேம்படுத்த TIDCO, SIPCOT போன்ற நிறுவனங்களுடன் இணைந்து 11 மையங்கள் உருவாக்கப்படும். அதுமட்டுமல்ல, தொழில்திறன்களை மேம்படுத்த IBM நிறுவனத்துடன் இணைந்து புதிய பாடப் பிரிவுகள் உருவாக்கப்படும்.

முன்னாள் மாணாக்கர்கள் மற்றும் தொழிற்சாலைகளுடன் இணைந்து ஆராய்ச்சிப் பூங்கா உருவாக்கப்படும். அரசுப் பொறியியல் கல்லூரிகளில் அயல்நாட்டு மொழிகள் கற்பிக்கின்ற மையங்கள் உருவாக்கப்படும். அரசுப் பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளை ஒருங்கிணைத்து நிர்வகிக்க திட்டக்

கண்காணிப்பு மையம் உருவாக்கப்படும். இவையெல்லாம் இந்தத் திறமைகளை வளர்ப்பதற்காக உருவாக்கப்பட்டிருக்கிற திட்டங்கள்.

புத்தாக்கப் புதிய தொழில்நுட்பத் திறன்களை வழங்க மதுரை அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் புரோடோசெம் (ProtoSem) என்ற 18 வார புத்தாக்க பாடப் பிரிவு உருவாக்கப்படும். உலகத்திறன் அகாடெமி மற்றும் நவீன தொழில்நுட்ப உற்பத்தி மையம் இவை எல்லாவற்றையும் சேர்த்து 89.14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இவையெல்லாம் உருவாக்கப்படும். உங்களிடம் கொடுத்திருக்கிற குறிப்பில் ஒவ்வொன்றிற்கும் எவ்வளவு நிதி என்று தனித்தனியாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் காலத்தின் அருமைகருதி, மொத்தமாக, இங்கே சுருக்கமாக சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

அதேபோன்று, பாலிடெக்னிக் கல்வி முடித்து தொழிற்சாலைகளில் பணிபுரிந்துகொண்டே பொறியியல் மற்றும் தொழில்நுட்பப் பட்டம் பெறுவதற்கான திட்டம் அறிமுகப்படுத்தப்படும். படிக்கும்போதே அவர்களுக்கு தொழிற்சாலைகளில் பயிற்சி பெறுவதற்கான திட்டமும் அறிமுகப்படுத்தப்படும். சென்னை அண்ணா பல்கலைக்கழகத்திலுள்ள கல்லூரிகளில் பாலிடெக்னிக் கல்வி முடித்த மாணாக்கர்கள் நேரடியாக இரண்டாம் ஆண்டு, பொறியியல் படிப்பில் சேரலாம். அதுவும் அண்ணா பல்கலைக்கழகத்தில் இந்த ஆண்டு சேருவதற்காகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்.

அதேபோன்று சிறைக் கைதிகள், திருநங்கைகள் மற்றும் ஆதரவற்ற விதவைகள் கட்டணமின்றி பயின்று பட்டம் பெறும் திட்டம் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில் அறிமுகப்படுத்தப்படும். UGC–யில், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் திறந்தநிலைப் பல்கலைக்கழகம் வேண்டாம் என்றுதான் சொல்கிறார்கள். நாங்கள் அவர்களிடம் முயற்சி செய்து பார்க்கிறோம். தொலைதூரக் கல்வி என்பது தேவையான ஒன்றுதான். அதற்கு UGC–யிலிருந்து எதிர்ப்பும் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு முயற்சி செய்து அதைத் தொடர்வதற்கான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல; முதுநிலை பயிலும் மாணாக்கர்கள் ஆராய்ச்சி படிப்பினைத் தொடர இந்த ஆண்டு மேலும் 10 அரசுக் கல்லூரிகளில், Ph.D. உருவாக்குவதற்கும் அனுமதி அளிக்கப்படும்.

2022 ஏப்ரல் 11] [முனைவர் க. பொன்முடி]

செவித்திறன் குறைபாடு உள்ள மாற்றுத் திறனாளி மாணவர்களின் உயர் கல்வியைக் கருத்தில்கொண்டு, சென்னை மாநிலக் கல்லூரியில் முதுகலை வணிகவியல் M.Com. பாடப் பிரிவு இந்த ஆண்டு தொடங்கப்படும். ஆக, மாற்றுத் திறனாளி மாணவர்களின் நலனுக்காக, அவர்களுக்கென்று தனியாக M.Com., பாடப் பிரிவே தொடங்குகிறோம்.

அதைப்போல, பரமக்குடியிலுள்ள அரசுக் கல்லூரியாக மாற்றப்பட்ட பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி, அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியாக மாற்றப்படும்.

பிற்பகல் 3–35

தொழில் நிறுவனங்களின் தேவைக்கேற்ப மாணாக்கர்களின் திறனை மேம்படுத்தும் வகையில், அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் ஆடை வடிவமைப்பு, வேளாண்மைப் பொறியியல், இயந்திர மின்னணுவியல், தளவாட தொழில்நுட்பம் மற்றும் ஆட்டோமொபைல் பொறியியல் courses–ஐ புதிதாக polytechnic–ல் உருவாக்குகிறோம். ஏனென்றால், அப்போதுதான் வேலை கிடைப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. Polytechnic–களில் ஒரே மாதிரியான subject–களையே சொல்லிக் கொடுத்து வருகிறார்கள். அதை மாற்றியமைத்து, இதுபோன்ற 5 புதிய பாடப் பிரிவுகளை, அனைத்து பாலிடெக்னிக் கல்லூரிகளிலும் உருவாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 25–1–2022 அன்று தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகத்தைத் தொடங்கி வைத்தார். ரூ.10 கோடி மதிப்பிலான ஆளில்லா விமானங்களை, அண்ணா பல்கலைக்கழகம்தான் உருவாக்கியது. நாங்கள் பார்த்துவிட்டு வந்தோம். நானும் அப்போதுதான் முதன்முதலாக அதைப் பார்த்தேன். அந்த ஆளில்லாத விமானங்கள் உரமிடுவதிலிருந்து, விதை விதைப்பதிலிருந்து விவசாயிகளுக்கு உதவக்கூடிய அனைத்தும் செய்கின்றன, ஒன்று. அந்த ஆளில்லா விமானங்களை சொத்து மூலதனமாக வைத்து தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகத்தை உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி, தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகம் தொடங்கப்பட்டது. இக்கழகத்தின்

[முனைவர் க. பொன்முடி] [2022 ஏப்ரல் 11

அன்றாட செயல்பாடுகள் மற்றும் அதனை விரிவுபடுத்துவதற்காக ரூ.5 கோடி அரசால் வழங்கப்படும்;

நான் சொன்னதுபோன்று, முதலில் விடுதிகள், புதிய கட்டடங்கள், உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரித்தல், அடுத்து திறனை வளர்ப்பதற்கான திட்டங்கள் போன்றவற்றையெல்லாம் குறித்து நான் சொல்லிவிட்டேன். ஐந்தாவதுதான், மிக முக்கியமாக நீங்கள் அனைவரும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பது, புதிய கல்லூரிகள். சென்ற ஆண்டைப் போலவே, இந்த ஆண்டும் பத்து புதிய கல்லூரிகள் அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு (மேசையைத் தட்டும் ஒலி) கீழ்க்கண்ட இடங்களில் அந்தப் புதிய கல்லூரிகள் உருவாக்கப்படும்:

(1) திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை (மேசையைத் தட்டும் ஒலி); (2) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி; (3) கிருஷ்ணகிரி மாவட்டம், தளி; (4) புதுக்கோட்டை மாவட்டம், திருமயம்; (5) ஈரோடு மாவட்டம், அந்தியூர் (மேசையைத் தட்டும் ஒலி); (6) கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி (மேசையைத் தட்டும் ஒலி); (7) தஞ்சாவூர் மாவட்டம், திருக்காட்டுப்பள்ளி; (8) திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம்; (9) கடலூர் மாவட்டம், வடலூர்; (10) காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் ஆகிய இந்த பத்து கல்லூரிகளும் வருகின்ற ஆண்டிலே புதிதாக உருவாக்கப்படும் என்பதை உங்களுக்கு நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) அந்த மாதிரி நிறைய பேர் இருக்கிறார்கள். (குறுக்கீடு) பண்ருட்டி சட்டமன்ற உறுப்பினரைப் போன்று நிறையபேர் இருக்கின்றனர். (குறுக்கீடு) வரும், வரும், அடுத்தாண்டு இருக்கிறது; இன்னும் 4 வருடங்கள் இருக்கின்றன; அதுவும் அந்த 4 வருடங்களுக்குமேலே தொடர்ந்து நாம்தான் இருக்கப் போகிறோம். வேறு யாரும் வரப் போவதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதனால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், நிச்சயமாகச் செய்வார்கள். இன்னும் உங்களுடைய கோரிக்கைகளையெல்லாம் ஏற்று, வருகின்ற ஆண்டுகளில் புதிய கல்லூரிகளைத் துவக்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்படும் என்பதை உங்களுக்கு நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அறிவிப்புகள்

1. அழகப்பா பல்கலைக்கழக வளாகத்தில் மாணாக்கர்கள்/ ஆராய்ச்சியாளர்களுக்கு விடுதி கட்டப்படும்

(Construction of New Hostel for Students/Research Scholars in Alagappa University Campus)

அழகப்பா பல்கலைக்கழக வளாகத்தில் 4,800 மாணாக்கர்களும், 500 முனைவர் பட்ட ஆராய்ச்சியாளர்களும் பயின்று வருகின்றனர். ஏற்கெனவே உள்ள விடுதிகளில் இடப்பற்றாக்குறை இருப்பதால், மாணாக்கர்களின் சிரமத்தைத் தவிர்க்கும்பொருட்டு ரூ.19.50 கோடி மதிப்பீட்டில் புதிய விடுதி கட்டப்படும்.

2. பாரதியார் பல்கலைக்கழகத்தில் பயிலும் பெண் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் முதுகலை மாணவிகளுக்கு இரண்டு விடுதிகள் கட்டப்படும்

(Construction of two hostels for Women Research Scholars and PG students in Bharathiar University Campus)

பாரதியார் பல்கலைக்கழகத்தில் ஒவ்வொரு வருடமும் மாணவியர்களின் சேர்க்கை அதிகரித்து வருவதால், கூடுதல் விடுதி வசதி தேவைப்படுகிறது. எனவே, பெண் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் முதுகலை பயிலும் மாணவியர்களுக்காக இரண்டு விடுதிகள் ரூ.22.22 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

3. அண்ணா பல்கலைக்கழக கிண்டி வளாகத்தில் மாணவியர்களுக்கான விடுதி கட்டப்படும்

(Construction of Hostel for women students in Anna University, Guindy Campus)

அண்ணா பல்கலைக்கழகத்தில் ஆண்டுதோறும் மாணவியர்களின் சேர்க்கை அதிகரித்து வருகிறது. எனவே, கிண்டி பொறியியல் கல்லூரி வளாகத்தில் மாணவியர்களின் நலன் கருதி 13,075 ச.மீ. பரப்பில் தரைத்தளம் மற்றும் மூன்று அடுக்குகளுடன்கூடிய நவீன விடுதி ரூ.49.32 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

[முனைவர் க. பொன்முடி] [2022 ஏப்ரல் 11

4. சென்னை பல்கலைக்கழகத்தின் மெரினா வளாகத்தில் புதிய விடுதி கட்டப்படும்

(Construction of New Hostel at Marina Campus, University of Madras)

சென்னை பல்கலைக்கழகம் தமிழகத்தில் பழமை வாய்ந்த மற்றும் முதன்மையான பல்கலைக்கழகமாகத் திகழ்வதால், மாணாக்கர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் சேர்க்கை அதிகரித்து வருகிறது. அவர்களின் தங்கும் வசதியை மேம்படுத்துவதற்காக, நவீன வசதிகளுடன்கூடிய புதிய விடுதி ரூ.30.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

5. பாரதிதாசன் பல்கலைக்கழக காஜாமலை வளாகத்தில் மகளிர் விடுதி கட்டப்படும்

(Construction of Women's Hostel at Khajamalai Campus of Bharathidasan University)

பாரதிதாசன் பல்கலைக்கழக காஜாமலை வளாகத்தில் பயிலும் பெரும்பாலான மாணவியர் பிற மாவட்டங்களிலுள்ள கிராமங்களிலிருந்து வருவதால், அவர்களின் வசதிக்கென ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் மகளிர் விடுதி கட்டப்படும்.

6. அழகப்பா பல்கலைக்கழகத்தின் தொண்டி வளாகத்தில் கடல்சார் விளையாட்டு மையம் அமைக்கப்படும்

(Establishment of Marine Sports and Tourism Centre at Thondi Campus of Alagappa University)

அழகப்பா பல்கலைக்கழகத்தின் தொண்டி வளாகம் கடற்கரை அருகில் அமைந்துள்ளதால், மாணாக்கர்களிடையே கடல்சார் விளையாட்டுகளை ஊக்குவிக்கவும், அகில இந்திய அளவில், மாநில அளவில் கடல்சார் விளையாட்டுகளை நடத்தவும், கடல்சார் சுற்றுலாவை வளர்க்க உதவிடும் வகையிலும் அழகப்பா பல்கலைக்கழகத்தின் தொண்டி வளாகத்தில் கடல்சார் விளையாட்டு மையம் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

7. அண்ணா பல்கலைக்கழகத்தில் 11 மையங்கள் நிறுவப்படும்

(Establishment of 11 centres in Anna University)

அண்ணா பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி முயற்சிகளை அதிகரிப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் TIDCO, SIPCOT போன்ற

நிறுவனங்களுடன் இணைந்து 11 மையங்கள் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

- Centre for Artificial Intelligence, Data Science Research & Applications (CAInDRA)
- Centre for Robotics and Automation (CRA)
- Centre for Internet of Things (CIoT)
- Centre for Cyber Security (CCS)
- Centre for Wireless system Design (C–WiSD)
- Centre for Excellence in Automobile Technology (CEAT)
- Centre for E–Vehicle Technologies (CEVT)
- Bose–Einstein Science & Technology (BEST) Centre for Fundamental Research
- Centre for Liberal Arts for Science, Engineering & Technology–(CLASET)
- Centre for Multi–Disciplinary System Research (CMDSR)
- Centre for Energy Storage Technologies (CEST)

8. அண்ணா பல்கலைக்கழக மாணாக்கர்களின் தொழிற்திறன்களை மேம்படுத்த புதிய பாடப்பிரிவு அறிமுகப்படுத்தப்படும்

(Introduction of Industry Skill based course to the students of Anna University)

மாணாக்கர்களின் தொழிற்திறன்களை மேம்படுத்துவதற்காக பி.இ./பி.டெக்./எம்.சி.ஏ. படிக்கும் மாணாக்கர்களுக்கு IBM நிறுவனத்துடன் இணைந்து புதிய பாடப்பிரிவு, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் ரூ.6.00 கோடி நிதியுதவியுடன் அண்ணா பல்கலைக்கழகத்தில் தொடங்கப்படும்.

9. தொழிற்சாலைகளில் பணிபுரியும் பட்டயப்படிப்பு (Diploma) படித்தவர்களுக்கு பணிபுரிந்துகொண்டே பொறியியல் பட்டம் பயிலுவதற்கான திட்டம்

[முனைவர் க. பொன்முடி] [2022 ஏப்ரல் 11

(Degree Programme in Engineering under Work Integrated Learning (WIL) mode for Industrial Personnel)

தொழிற்சாலைகளில் வேலை உடன் இணைந்த கற்றல் முறைப்படி, பட்டயப்படிப்பு (Diploma) படித்த பணியாளர்களுக்கு பணி செய்துகொண்டே பொறியியல் மற்றும் தொழில்நுட்பப் பட்டம் பெறுவதற்கான திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இத்திட்டம் பணியாளர்கள் தங்களுடைய கல்வித் தகுதிகளை உயர்த்துவதற்கு வழிவகுக்கும்.

10. அண்ணா பல்கலைக்கழக துறை கல்லூரிகளில் நேரடி இரண்டாம் ஆண்டு மாணாக்கர் சேர்க்கை

(Lateral Entry admission in Anna University Department Colleges)

பட்டயப்படிப்பு (Diploma) முடித்த மாணாக்கர்கள் நேரடியாக பொறியியல் பட்டப்படிப்பில் இரண்டாம் ஆண்டில் சேர்க்கை பெறுகிறார்கள். இந்த கல்வியாண்டு முதல், அண்ணா பல்கலைக்கழக CEG, Guindy, MIT., Chromepet மற்றும் ACTech., Guindy கல்லூரிகளிலும் பொறியியல் நேரடி இரண்டாமாண்டு மாணாக்கர் சேர்க்கை அறிமுகப்படுத்தப்படும்.

11. அண்ணா பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிப் பூங்கா நிறுவப்படும்

(Establishment of Research Park at Anna University)

முன்னாள் மாணாக்கர்கள் மற்றும் தொழிற்சாலைகளுடன் இணைந்து அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில், ஆராய்ச்சிப் பூங்கா ரூ.50.00 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

தொழில் நிறுவனங்கள் சார்ந்த ஆராய்ச்சி நடவடிக்கைகள், அடைகாப்பு மையங்கள் (Incubation Centres) இங்கு அமைக்கப்படும். இதன்மூலம், சுமார் 20,000 இளநிலை, முதுநிலை மற்றும் ஆராய்ச்சிப் படிப்பு மாணாக்கர்கள் பயன்பெறுவர்.

12. தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தில் பயிலும் சிறைக் கைதிகள், திருநங்கைகள் மற்றும் ஆதரவற்ற விதவைகளுக்குக் கட்டண விலக்களிக்கப்படும்

(Exemption of fees for the Jail Inmates, Transgenders and Destitute Widows)

சிறைக் கைதிகள், திருநங்கைகள் மற்றும் ஆதரவற்ற விதவைகளின் சேர்க்கை விகிதத்தை உயர்த்துவதற்காக, தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தில் கட்டணமின்றி பயின்று பட்டம் பெறும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

13. பத்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முனைவர் பட்ட ஆராய்ச்சிப் படிப்புகள் தொடங்கப்படும்

(Starting Ph.D. Research Programmes in 10 Government Arts and Science Colleges)

அரசுக் கல்லூரிகளில் முதுநிலை பயிலும் மாணாக்கர்கள் ஆராய்ச்சிப் படிப்பினைத் தொடர ஏதுவாக 10 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முனைவர் பட்ட ஆராய்ச்சிப் படிப்புகள் தொடங்கப்படும்.

14. 16 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு கட்டடங்கள் கட்டப்படும்

(Construction of Buildings for 16 Government Arts and Science Colleges)

2016–2017 முதல் 2020–2021 வரை தொடங்கப்பட்ட பின்வரும் 6 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு கட்டடங்கள் கட்டப்படும்:–

1. குடவாசல், திருவாரூர் (2017–2018)
2. காட்டுமன்னார்கோவில், கடலூர் மாவட்டம் (2017–2018)
3. இராமேஸ்வரம், இராமநாதபுரம் மாவட்டம் (2019–2020)
4. ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர் மாவட்டம் (2020–2021)
5. ஜெயங்கொண்டம், அரியலூர் மாவட்டம் (2020–2021)
6. தரங்கம்பட்டி, கரூர் மாவட்டம் (2020–2021)

[முனைவர் க. பொன்முடி] [2022 ஏப்ரல் 11

2021–2022 ஆம் ஆண்டில் தொடங்க அறிவிக்கப்பட்டுள்ள பின்வரும் 10 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு கட்டடங்கள் கட்டப்படும்:–

1. திருச்சுழி, விருதுநகர் மாவட்டம்.
2. திருக்கோவிலூர், கள்ளக்குறிச்சி மாவட்டம்.
3. தாளவாடி, ஈரோடு மாவட்டம்.
4. ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.
5. மானூர், திருநெல்வேலி மாவட்டம்.
6. தாராபுரம், திருப்பூர் மாவட்டம்.
7. ஏரியூர், தருமபுரி மாவட்டம்.
8. ஆலங்குடி, புதுக்கோட்டை மாவட்டம்.
9. கூத்தாநல்லூர், திருவாரூர் மாவட்டம்.
10. சேர்க்காடு, வேலூர் மாவட்டம்.

மேற்காண் 16 கல்லூரிகளுக்கு ரூ.199.36 கோடி மதிப்பீட்டில் கட்டடங்கள் கட்டப்படும்.

15. செவித்திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளி மாணாக்கர்களுக்காக முதுகலை வணிகவியல் பாடப்பிரிவு சென்னை, மாநிலக் கல்லூரியில் தொடங்கப்படும்

(Starting M.Com., course for differently abled students with hearing impairment in Presidency College, Chennai)

சென்னை, மாநிலக் கல்லூரியில் இளங்கலை வணிகவியல் பாடப்பிரிவு, செவித்திறன் குறைபாடுள்ள மாணவர்களுக்கு 2007 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது. இப்பாடப் பிரிவில் பயிலும் மாணாக்கர்கள் முதுகலை படிப்பதற்கும், வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்கும் முதுகலை வணிகவியல் பாடப்பிரிவு 2022–2023 ஆம் கல்வியாண்டு முதல் தொடங்கப்படும்.

16. புதுக்கோட்டை, மாமன்னர் கல்லூரியில் புதிய நூலகக் கட்டடம் கட்டப்படும்

(Construction of new building for library at H.H. The Rajah's College, Pudukottai with enhanced facilities)

புதுக்கோட்டை மாமன்னர் கல்லூரியின் பாரம்பரியக் கட்டடத்தின் ஒரு பகுதியில் அதன் நூலகம் செயல்பட்டு வருகிறது. தற்போதைய நூலகம் மிகவும் பாழடைந்த நிலையில் உள்ளதால், நவீன வசதிகளுடன்கூடிய புதிய நூலகக் கட்டடம் ரூ.6 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

17. பத்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படும் (Opening of 10 Government Arts and Science Colleges)

கிராமப்புற மாணாக்கர்களுக்கு அரசுக் கல்லூரிகள் சிறந்த வாய்ப்பினை ஏற்படுத்தித் தருகின்றன. அரசுக் பள்ளிகளில் பயிலும் மாணவிகள் உயர் கல்வி பெறுவதை ஊக்குவிக்கும் வகையில் மாதந்தோறும் ரூ.1,000/– வழங்கும் திட்டத்தை அரசு அறிவித்துள்ளது. எனவே, அரசுக் கல்லூரிகளின் தேவை அதிகரித்துள்ளதால், கீழ்க்காணும் இடங்களில் ரூ.166.50 கோடி மதிப்பீட்டில் 10 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவங்கப்படும்:–

1. மணப்பாறை, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
2. செஞ்சி, விழுப்புரம் மாவட்டம்.
3. தளி, கிருஷ்ணகிரி மாவட்டம்.
4. திருமயம், புதுக்கோட்டை மாவட்டம்.
5. அந்தியூர், ஈரோடு மாவட்டம்.
6. அரவக்குறிச்சி, கரூர் மாவட்டம்.
7. திருக்காட்டுப்பள்ளி, தஞ்சாவூர் மாவட்டம்.
8. ரெட்டியார்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.
9. வடலூர், கடலூர் மாவட்டம்.
10. ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம் மாவட்டம்.

[முனைவர் க. பொன்முடி] [2022 ஏப்ரல் 11

18. பரமக்குடி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி பெண்கள் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியாக மாற்றப்படும்

(Conversion of Government Arts and Science College, Paramakudi into Government Arts and Science College for Women)

பரமக்குடியில் இரண்டு இருபாலர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் உள்ளன. கிராமப்புற மாணவிகளின் சேர்க்கை விகிதத்தை அதிகரிக்கும் வகையில் 2019–2020 ஆம் ஆண்டில் அரசுக் கல்லூரியாக மாற்றப்பட்ட பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி, அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியாக மாற்றப்படும்.

19. அரசுக் கல்லூரிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படும்

(Creating Infrastructural Facilities in Government Colleges)

2022–2023 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அரசுக் கல்லூரிகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்த ரூ.1,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, ரூ.200 கோடி செலவினத்தில், 26 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 55 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் வகுப்பறைகள், ஆய்வகங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்படும்.

உட்கட்டமைப்பு மேம்படுத்தப்படவுள்ள அரசுக் கல்லூரிகள்

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்
(Government Arts & Science Colleges)

1) அருள்மிகு சுப்பிரமணியசுவாமி அரசு கலைக் கல்லூரி, திருத்தணி, திருவள்ளூர் மாவட்டம்.

2) புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, உத்திரமேரூர், காஞ்சிபுரம் மாவட்டம்.

3) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெம்மேலி, செங்கல்பட்டு மாவட்டம்.

4) அறிஞர் அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரி, வாலாஜாபேட்டை, இராணிப்பேட்டை மாவட்டம்.

5) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

6) அரசு திருமகள் ஆலைக் கல்லூரி, குடியாத்தம், வேலூர் மாவட்டம்.

7) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்.

8) அரசு ஆடவர் கலைக் கல்லூரி, கிருஷ்ணகிரி, கிருஷ்ணகிரி மாவட்டம்.

9) அரசு மகளிர் கலைக் கல்லூரி, கிருஷ்ணகிரி, கிருஷ்ணகிரி மாவட்டம்.

10) அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பர்கூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

11) பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பாலக்கோடு, தருமபுரி மாவட்டம்.

12) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி மாவட்டம்.

13) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தென்னாங்கூர், திருவண்ணாமலை மாவட்டம்.

14) அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.

15) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவெண்ணெய்நல்லூர், விழுப்புரம் மாவட்டம்.

16) திரு. ஆ. கோவிந்தசாமி அரசு கலைக் கல்லூரி, திண்டிவனம், விழுப்புரம் மாவட்டம்.

17) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம்.

18) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.

19) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திட்டமலை, ஈரோடு மாவட்டம்.

20) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, காங்கேயம், திருப்பூர் மாவட்டம்.

21) அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, ஆத்தூர், சேலம் மாவட்டம்.

22) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, லால்குடி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

23) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

24) அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வேப்பூர், பெரம்பலூர் மாவட்டம்.

25) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வேப்பந்தட்டை, பெரம்பலூர் மாவட்டம்.

26) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அறந்தாங்கி, புதுக்கோட்டை மாவட்டம்.

27) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கறம்பக்குடி, புதுக்கோட்டை மாவட்டம்.

28) மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரி, புதுக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம்.

29) அரசு கலைக் கல்லூரி, கரூர், கரூர் மாவட்டம்.

30) அரசு கலைக் கல்லூரி, குளித்தலை, கரூர் மாவட்டம்.

31) திருவள்ளுவர் அரசு கலைக் கல்லூரி, இராசிபுரம், நாமக்கல் மாவட்டம்.

32) அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, நாமக்கல், நாமக்கல் மாவட்டம்.

33) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேந்தமங்கலம், நாமக்கல் மாவட்டம்.

34) அரசு கலைக் கல்லூரி, சிதம்பரம், கடலூர் மாவட்டம்.

35) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திட்டக்குடி, கடலூர் மாவட்டம்.

36) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருத்துறைப்பூண்டி, திருவாரூர் மாவட்டம்.

37) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வேதாரண்யம், நாகப்பட்டினம் மாவட்டம்.

38) பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சீர்காழி, மயிலாடுதுறை மாவட்டம்.

39) அழகப்பா அரசு கலைக் கல்லூரி, காரைக்குடி, சிவகங்கை மாவட்டம்.

40) எம்.வி.எம். முத்தையா அரசு மகளிர் கலைக் கல்லூரி, திண்டுக்கல், திண்டுக்கல் மாவட்டம்.

41) அரசு மகளிர் கலைக் கல்லூரி, சிவகங்கை, சிவகங்கை மாவட்டம்.

42) அரசு மகளிர் கலைக் கல்லூரி, நிலக்கோட்டை, திண்டுக்கல் மாவட்டம்.

43) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சிவகாசி, விருதுநகர் மாவட்டம்.

44) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஆண்டிப்பட்டி, தேனி மாவட்டம்.

45) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம்.

46) அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கொடைக்கானல், திண்டுக்கல் மாவட்டம்.

47) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கடையநல்லூர், தென்காசி மாவட்டம்.

48) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம்.

49) அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சாத்தான்குளம், தூத்துக்குடி மாவட்டம்.

50) அரசு கலைக் கல்லூரி, பரமக்குடி, இராமநாதபுரம் மாவட்டம்.

51) சேதுபதி அரசு கலைக் கல்லூரி, இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம்.

52) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, முதுகுளத்தூர், இராமநாதபுரம் மாவட்டம்.

53) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவாடனை, இராமநாதபுரம் மாவட்டம்.

54) அரசினர் ஆடவர் கலைக் கல்லூரி, நந்தனம், சென்னை மாவட்டம்.

55) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஆர்.கே. நகர், சென்னை மாவட்டம்.

அரசு பல்வகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள்

(Polytechnic Colleges)

1) அச்சு தொழில்நுட்பப் பயிலகம், தரமணி, சென்னை மாவட்டம்.

2) வேதியியல் தொழில்நுட்பப் பயிலகம், தரமணி, சென்னை மாவட்டம்.

3) தோல் தொழில்நுட்பப் பயிலகம், தரமணி, சென்னை மாவட்டம்.

4) நெசவுத் தொழில்நுட்பப் பயிலகம், தரமணி, சென்னை மாவட்டம்.

5) மாநில வணிகக் கல்வி பயிலகம், தரமணி, சென்னை மாவட்டம்.

6) அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி, செவ்வாய்ப்பேட்டை, திருவள்ளூர் மாவட்டம்.

7) அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி, ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி மாவட்டம்.

8) அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி, நாகப்பாடி, திருவண்ணாமலை மாவட்டம்.

9) அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி, பைசுஹள்ளி, தருமபுரி மாவட்டம்.

10) அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி, சங்கரன்பாளையம், வேலூர் மாவட்டம்.

11) அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி, எஸ். கொல்லூர், விழுப்புரம் மாவட்டம்.

12) அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி, செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.

13) அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி, பெருந்துறை, ஈரோடு மாவட்டம்.

14) அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி, வனவாசி, சேலம் மாவட்டம்.

15) அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி, சேதுராப்பட்டி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

16) அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி, கீழகணவாய், பெரம்பலூர் மாவட்டம்.

17) அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி, மோகனூர், நாமக்கல் மாவட்டம்.

18) அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி, கொருக்கை, திருவாரூர் மாவட்டம்.

19) அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி, வலங்கைமான், திருவாரூர் மாவட்டம்.

20) அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி, அம்பலக்காரன்பட்டி, மேலூர், மதுரை மாவட்டம்.

21) அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி, கோட்டூர், தேனி மாவட்டம்.

22) அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி, தேக்கம்பட்டி, தேனி மாவட்டம்.

23) பாரதியார் நூற்றாண்டு நினைவு அரசு மகளிர் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி, எட்டையபுரம், தூத்துக்குடி மாவட்டம்.

24) அரசு மகளிர் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர், கோயம்புத்தூர் மாவட்டம்.

25) ஸ்ரீநிவாசா சுப்பராயா அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி, புத்தூர், மயிலாடுதுறை மாவட்டம்.

26) அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

20. அரசுக் கல்லூரிகளில் ஆய்வகங்கள் மற்றும் நூலகங்கள் நவீனப்படுத்தப்படும்

(Modernization of Laboratories and Libraries in Government Colleges)

அரசு பொறியியல் கல்லூரிகள், அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் ஆய்வகங்களை நவீனப்படுத்துவதற்காக பல்வேறு இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்யப்படும். மேலும், மாணாக்கர்களின் கற்றல் திறனை மேம்படுத்துவதற்காக அரசு கல்லூரிகளில் நூலக வசதி மேம்படுத்தப்படும். இதற்கான மொத்த செலவினம் ரூ.100.00 கோடி ஆகும்.

21. அரசு பொறியியல் கல்லூரிகளில் விளையாட்டு வசதிகள் மேம்படுத்தப்படும்

(Enhancement of sports facilities in Government Engineering Colleges)

மாணாக்கர்களின் விளையாட்டுத் திறன் மற்றும் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், அவர்கள் மாநில மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கவும், 10 அரசு

பொறியியல் கல்லூரிகளில் உள்விளையாட்டு அரங்கத்துடன்கூடிய விளையாட்டு வசதிகள் சுமார் ரூ.80.00 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

22. அரசு பொறியியல் கல்லூரிகளில் அயல்நாட்டு மொழிகள் மையம் நிறுவப்படும்

(Establishment of Centre for Foreign Languages in Government Engineering Colleges)

அரசு பொறியியல் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்கள் அயல்நாட்டு மொழிகளை கற்பதற்கும், உயர்படிப்பிற்கான வாய்ப்பு மற்றும் வெளிநாட்டில் வேலைவாய்ப்பு ஆகியவற்றைப் பெறுவதற்கும் தன்னிறைவு மையமாக 11 அரசு பொறியியல் கல்லூரிகளில் அயல்நாட்டு மொழிகள் கற்பித்தல் மையம் ரூ.11.00 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

23. அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் புதிய பாடப் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்படும்

(Introducing New Courses in Government Polytechnic Colleges)

தொழில் நிறுவனங்களின் தேவைகளுக்கேற்ப மாணாக்கர்களின் திறனை மேம்படுத்திட அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் ஆடை வடிவமைப்பு, வேளாண்மை பொறியியல், இயந்திர மின்னணுவியல், தளவாட தொழில்நுட்பம் மற்றும் ஆட்டோமொபைல் பொறியியல் (சான்ட்விச்) போன்ற புதிய பாடப் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்படும்.

24. தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் திட்ட கண்காணிப்பு மையம் ஏற்படுத்தப்படும்

(Establishment of Project Monitoring Unit at Directorate of Technical Education)

அரசு பொறியியல் மற்றும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளை ஒருங்கிணைந்து நிர்வகிக்கும்பொருட்டு, திட்ட கண்காணிப்பு மையம் ரூ.14.20 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும். இம்மையம், முதல் தலைமுறை பட்டதாரி கல்விக் கட்டணச் சலுகை, 7.5 சதவீதம் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு

முன்னுரிமை அடிப்படையிலான உள் ஒதுக்கீடு, post matric கல்விக் கட்டணச் சலுகை ஆகிய திட்டங்களை கண்காணிப்பதற்கும், மேற்பார்வையிடுவதற்கும் உதவிபுரியும்.

25. மதுரை அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியில் புரோடோசெம் புத்தாக்க பாடப்பிரிவு தொடங்கப்படும்

(Introduction of ProtoSem course in Government Polytechnic College, Madurai)

புத்தாக்க மற்றும் புதிய தொழில்நுட்பத் திறன்களை மாணாக்கர்களுக்கு வழங்குவதற்காக, ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் புரோடோசெம் (ProtoSem) என்ற 18 வார புத்தாக்க பாடப்பிரிவு, மதுரை, அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியில், முதற்கட்டமாக அறிமுகப்படுத்தப்படும். இப்பாடப் பிரிவானது, தொழில் நிறுவனத்தினரால் நடத்தப்படுவதால், மாணாக்கர்கள் சிறந்த வேலைவாய்ப்பை பெறக்கூடியவர்களாகவும் தொழில் முனைவோர்களாகவும் உருவாக்கப்படுவார்கள்.

26. உலகத்திறன் அகாடெமி மற்றும் நவீன தொழில்நுட்ப உற்பத்தி மையம் அமைக்கப்படும்

(Establishment of World Skill Academy and Smart Manufacturing Technology Centres)

தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், தொழில் நிறுவன பங்குதாரருடன் இணைந்து, உலகத்திறன் அகாடெமி மற்றும் நவீன தொழில்நுட்ப உற்பத்தி மையங்கள் (Smart Manufacturing Technology Centres) ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் 6 அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் அமைக்கப்படும். இம்மையங்கள், World Skills in Electrical Installation, Industrial Controls and Drives, Supervisory Control and Data Acquisition–SCADA and Digital Manufacturing–Industrial 4.0 போன்ற பயிற்சிகளை வழங்கும்.

27. தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகம் மேம்படுத்தப்படும்

(Development of Tamil Nadu unmanned Aerial Vehicles Corporation)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 25–1–2022 அன்று தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகத்தைத் தொடங்கி

வைத்தார். ரூ.10.00 கோடி மதிப்பிலான ஆளில்லா விமானங்களை சொத்து மூலதனமாக (Share Capital) வைத்து, இக்கழகம் தொடங்கப்பட்டது. இக்கழகத்தின் அன்றாட செயல்பாடுகள் மற்றும் அதனை விரிவுபடுத்துவதற்கு ரூ.5.00 கோடி அரசால் வழங்கப்படும்.

இக்கழகம், வடிவமைப்பு, உற்பத்தி மற்றும் வர்த்தகம் தவிர, விவசாய பூச்சிக்கொல்லி தெளித்தல், கண்காணிப்பு, தேடல் மற்றும் மீட்பு, நில அளவீட்டு பகுப்பாய்வு கனிம வளங்களைக் கண்டறிதல் போன்ற ட்ரோன் அடிப்படையிலான ஏராளமான சேவைகளை வழங்கும்.

இந்த மானியக் கோரிக்கை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துரைகளை ஆற்றியிருக்கின்ற உங்கள் அனைவருக்கும் என்னுடைய உளமார்ந்த நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். இந்தத் துறையின் வளர்ச்சிக்குக் காரணமாக இருந்திருக்கின்ற துறையின் அரசு முதன்மைச் செயலாளர் திரு. D. கார்த்திகேயன் அவர்களுக்கும், Director of Collegiate Education அவர்களுக்கும், அனைத்துத் துறைச் செயலாளர்கள் மற்றும் கல்வித் துறையைச் சார்ந்த அதிகாரிகளுக்கும் என்னுடைய உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், அரசு என்னதான் திட்டம் போட்டாலும், அதை முழுவதுமாக execute செய்வது அவர்கள்தான். இதை அவர்கள் சிறப்பாகச் செயல்படுத்துவார்கள் என்ற நம்பிக்கையோடு, அவர்களுக்கும் என்னுடைய உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே தங்கள் கருத்துகளைத் தெரிவித்திருக்கின்ற உங்களுக்கும் என்னுடைய உளமார்ந்த நன்றியைத் தெரிவித்து, வருகின்ற காலங்களில் நான் முதலிலே சொன்னதைப்போல, நிச்சயமாக எண்ணிக்கையையும் உயர்த்துவோம், எண்ணிக்கையை உயர்த்துவது மட்டுமல்ல, கல்லூரியில் படிக்கின்ற மாணவர்களின் திறனையும் உயர்த்துவோம்; திறனை உயர்த்தி வேலைவாய்ப்புகளை உருவாக்குவோம். அதற்குத்தான் வெளிநாட்டிற்கெல்லாம் சென்றுவிட்டு வந்திருக்கிறார்; தொழில் நிறுவனங்களோடு ஒப்பந்தம் செய்திருக்கிறார்; அந்த வேலைவாய்ப்புகளையும் இளைஞர்களுக்கு உயர்த்த வேண்டுமென்ற நோக்கத்தோடு, இந்த உயர் கல்வித் துறை செயல்படும். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆணையோடு, ஆசியோடு நாங்கள் இதை நிறைவேற்றுவோம் என்ற உறுதியை உங்களுக்குத் தெரிவித்து, வெட்டுத் தீர்மானங்கள்

[முனைவர் க. பொன்முடி] [2022 ஏப்ரல் 11

கொடுத்திருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். இங்கே இருக்கின்ற மாண்புமிகு சபாநாயகர் அவர்களுக்குக்கூட ஒரு வருத்தம். அவருடைய ஊரில் ஒரு மகளிர் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டிருந்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: அதுமட்டுமல்ல, உறுப்புக் கல்லூரிகள், 41 கல்லூரிகள் இருக்கின்றன. அவையும் மிக விரைவிலே அரசுக் கல்லூரிகளாக மாற்றப்படும் என்பதையும் நான் உங்களுக்கு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, இங்கே கலந்துகொண்டிருக்கின்ற உங்கள் அனைவருக்கும் என்னுடைய உள்மார்ந்த நன்றியைத் தெரிவித்து, இதிலே கலந்துகொண்டு கருத்துகளை வழங்கிய உங்கள் அனைவருக்கும் மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு உங்களைப் பணிவோடு கேட்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 20–உயர் கல்வித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 20–உயர் கல்வித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

“உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.5,285,29,54,000/–,

மூலதனக் கணக்கில் ரூ.383,58,92,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.3,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(ஆ) கோரிக்கை எண் 43-பள்ளிக் கல்வித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 43–பள்ளிக் கல்வித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.36,350,52,79,000/–, மூலதனக் கணக்கில் ரூ.544,96,42,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.40,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

[பேரவைத் தலைவர்] [2022 ஏப்ரல் 11

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (12–4–2022), செவ்வாய்க்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–41 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

52. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிமென்ட்ஸ் நிறுவனத்தின் நாற்பத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

53. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் நாற்பத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்—ஆங்கிலம்)

54. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் ஐம்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

55. 2019–2020 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சரிகை லிமிடெட் நிறுவனத்தின் நாற்பத்து எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.](தமிழ்–ஆங்கிலம்)

56. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சரிகை லிமிடெட் நிறுவனத்தின் நாற்பத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

2022 ஏப்ரல் 11]

57. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையத்தின் தணிக்கை அறிக்கை, [*1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 80(9) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.*] (தமிழ்–ஆங்கிலம்)

58. 2020–2021 ஆம் ஆண்டிற்கான சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் பதினான்காவது ஆண்டறிக்கை. [*1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.*] (தமிழ்–ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

73. மானியக் கோரிக்கை எண் 20–உயர் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2022–2023. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

74. மானியக் கோரிக்கை எண் 43–பள்ளிக் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2022–2023. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

75. கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2022–2023. (தமிழ்)

76. உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2022–2023. (தமிழ்)

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-I

(114 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 20—உயர் கல்வித் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2022-2023

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு".

(திருக்குறள் 396)

1. முன்னுரை

சமத்துவ நோக்குடைய தமிழக அரசானது, உயர் கல்வித் துறையினை மக்கள் நலனுக்கான ஒரு அமைப்பாகக் கருதி செறிவுமிக்க செயல்திட்டங்களால் சமூகத்தின் பல்வேறு படிநிலைகளிலும் உயர் கல்வியின் விழுமியங்கள் அனைத்து பரிமாணங்களிலும் சென்றடைவதை உறுதி செய்கிறது. மாணாக்கர் சேர்க்கை, கற்றல்-கற்பித்தல், திறன் மேம்பாடு, அறிவியல்பூர்வமான ஆராய்ச்சிகள், பயிற்சிகள் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிகள் ஆகியவைகளை விரிவாக்கத்துடன் மேம்படுத்தத் தேவையான நிதி மற்றும் வளங்களைத் தொடர்ந்து அளித்து வருகிறது. இத்திட்டங்களின் செயல்பாட்டுத் திறனையும், எதிர்பார்க்கப்படும் வளர்ச்சிகளையும் மேம்பட்ட செயல்வடிவ வழிமுறைகள்மூலம் உறுதி செய்கிறது.

1.1. கல்வி விரிவாக்கல் மற்றும் சிறப்புறுதல்

அதிக எண்ணிக்கையிலான உயர் கல்வி நிறுவனங்கள் ஒரு உந்து சக்தியாகத் திகழ்ந்து தமிழகத்தை ஒரு உயர்ந்த இடத்தில் நிலை நிறுத்தியுள்ளது. அதன்வாயிலாக ஆராய்ச்சி, புதுமைப்படைத்தல், மேம்பாடு, மென்திறன் பயிற்சிகள் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவைகளுக்கான வழிமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அனைவருக்கும் சம வாய்ப்பு, எளிய அணுகுமுறை மற்றும் அனைவருக்கும் எட்டக்கூடிய செயல்திட்டங்கள் மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவைகளைப் பல வழிகளிலும் உறுதிசெய்ய அர்ப்பணிப்புடன் உயர் கல்வித் துறை செயல்பட்டு வருகிறது.

[2022 ஏப்ரல் 11

1.1.1. உயர் கல்வி நிறுவனங்களை புதுமையான, சிறப்பு மற்றும் வளர்ச்சிக்கான மையங்களாக மாற்ற அரசு விரும்புகிறது. உலக அளவில் புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களுக்கு இணையான தரமான கல்வியை தமிழகத்தின் கிராமப்புற பின்னணியில் இருந்தும், ஒதுக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் வழங்க அரசு முயற்சிக்கிறது. உயர் கல்வியின் நோக்கம் இளைஞர்களின் திறமைகளை கண்டறிந்து, அடையாளம் கண்டு மேம்படுத்தி, வளர்ந்துவரும் சவால்களை எதிர்கொள்ள அவர்களுக்கு உதவுவதாகும்.

1.1.2. அரசின் திட்டங்கள், சமூக பொருளாதார தடைகளை நீக்கி இளைஞர்களின் தேடல்களை நிறைவேற்றுவது மற்றும் உலகளாவிய அளவுகோல்களின்படி பராமரிப்பதில் கவனம் செலுத்துகிறது. தேசிய மற்றும் உலக நாடுகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அரசு உயர் தகுதிவாய்ந்த திறமையான தொழிலாளர்களை உருவாக்குகிறது. இளைஞர்கள் தொழில்முனைவோராக மாறுவதற்கான வாய்ப்புகளையும் உருவாக்குகிறது.

1.1.3. தமிழக அரசின் இலக்கு நோக்கிய அணுகுமுறை தமிழகத்தை தேசிய அரங்கில் பெருமைக்குரிய இடத்தில் நிலை நிறுத்தியுள்ளது. உயர் கல்வி பெற்ற மாணாக்கர்களின் சேர்க்கை எண்ணிக்கையில் தமிழகம் 51.4 என்ற விகிதம் பெற்று, தேசிய சேர்க்கை விகிதமான 27.1-ஐவிட உயர்வான இடத்தில் நிலை பெற்றுள்ளது. பட்டியலின ஆண்கள் மற்றும் பெண்களின் உயர் கல்வி சேர்க்கை நிலை 38.8 மற்றும் 40.4 ஆகவும், பழங்குடியின ஆண்கள் மற்றும் பெண்களின் உயர் கல்வி நிலை 43.8 மற்றும் 37.7 ஆகவும் வளர்ச்சி பெற்றிருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கது. இந்த வளர்ச்சி தேசிய சேர்க்கை வளர்ச்சியினைவிட இருமடங்கு அதிகமாகும்.

1.1.4. அனைத்திந்திய உயர் கல்வி கணக்கெடுப்பு 2021-ன் அறிக்கையில் தமிழகத்தின் பல்வேறு சிறப்புமிக்க அளவீடு காரணிகளை உயர் கல்வி சேர்க்கை எண்ணிக்கையின் (GER 51.4) அடிப்படையில் குறிப்பிட்டுள்ளது. பாலின சமத்துவ குறியீட்டுப் புள்ளி (1.0), பாலினவகை சார்ந்த சேர்க்கை, பெண்கள் மற்றும் ஆண்களின் சேர்க்கை, உயர் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை, ஆசிரியர்-மாணவர் விகிதாச்சாரம், ஆராய்ச்சித் துறைகளில் சேர்க்கை மற்றும் பிற முக்கியமான காரணிகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

2022 ஏப்ரல் 11]

1.1.5. தமிழ்நாடு, தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பில் (NIRF) தொடர்ந்து சிறப்பாகச் செயல்பட்டு உள்ளது. ஒட்டுமொத்தப் பிரிவில் 19 நிறுவனங்கள், பல்கலைக்கழகப் பிரிவில் 19 நிறுவனங்களில், தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகமாகிய அண்ணா பல்கலைக்கழகம் முதலிடத்தில் உள்ளது. கலை மற்றும் அறிவியல் பிரிவில் 33 நிறுவனங்கள், முதல் 100 தரவரிசைகளுக்குள் உள்ளன. 36 தொழில்நுட்ப நிறுவனங்கள், முதல் 200 தரவரிசைகளுக்குள் உள்ளன.

1.2. நலத் திட்டங்கள்

சமூக அதிகாரம் மற்றும் சமூக நீதியினை நிலைநாட்டுவதில் தமிழகம் முன்னோடியாக உள்ளது. உயர் கல்வித் துறையில் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள் சமூகத்தில் ஒதுக்கப்பட்ட பிரிவு மாணவர்களின் முழுமையான வளர்ச்சிக்குச் சான்றாக உள்ளன. பல்வேறு நலன்சார் திட்டங்களுள், இலவச பாடப் புத்தகங்கள், மடிக்கணினிகள், பேருந்து பயண அட்டை மற்றும் இளநிலை மற்றும் முதுநிலை பட்ட வகுப்புகளுக்குக் கல்விக் கட்டண விலக்கு, முதல் தலைமுறை பொறியியல் பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை, பொறியியல் மாணவர்களுக்கு முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.50,000/-, அரசு பள்ளி மாணவர்களுக்கு பொறியியல் கல்லூரிகளில் முன்னுரிமை அடிப்படையில் 7.5% உள் ஒதுக்கீடு வழங்குவதுடன் கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம் மற்றும் போக்குவரத்துக் கட்டணங்களுக்கும் தள்ளுபடி ஆகியவை அடங்கும்.

மேலும், ஐ.ஐ.டி., ஐ.ஐ.எஸ்.சி. மற்றும் ஐ.ஐ.எம். போன்ற தலைசிறந்த கல்வி நிறுவனங்களில் இளநிலை பட்டத்தில் சேரும் மாணாக்கர்களின் மொத்த செலவினங்களையும் அரசே ஏற்குமென 2022-2023 நிதிநிலை அறிக்கையில் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

1.3. பாலின சமத்துவம்

திராவிடக் கொள்கைகளைப் பின்பற்றுவதைத் தமிழகம் ஒரு மரபாகக் கொண்டிருப்பதால், பெண் குழந்தைகளின் நலனை அக்கறையுடன் பேணுவதிலும், சமூகத்தில் உள்ள பாலின பாகுபாட்டைக் களைவதிலும், சிறப்பான வளர்ச்சிமிகு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தமிழக

[2022 ஏப்ரல் 11

அரசு மூவலூர் இராமாமிர்தம் அம்மையாரின் பெயரில் மகத்துவமான, திருப்புமுனை கொண்ட ஒரு திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்மூலம் அரசு பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயின்று உயர் கல்வியில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும் அவர்கள் பட்டப் படிப்பு, பட்டயப் படிப்பு அல்லது தொழிற்பயிற்சி படிப்பினை முடிக்கும் வரையில் தடையின்றி தொடர மாதந்தோறும் ரூ.1,000/- அவர்களின் வங்கி கணக்குகளில் நேரடியாக செலுத்த ஆவன செய்துள்ளது. மற்ற கல்வி உதவித்தொகை மற்றும் நலன் சார்ந்த திட்டங்களில் பயன்பெறும் மாணவிகள் கூடுதலாக மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திட்டத்திலும் பயன்பெறலாம்.

1.4. பாடத் திட்டங்கள் மறுசீரமைப்பு

பல்கலைக்கழகங்கள், பெரு நிறுவனங்கள் மற்றும் தொழிற் நிறுவனங்களின் ஆலோசனைகளைப் பெற்று பொறியியல், தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் கலை-அறிவியல் பாடத் திட்டங்களை மறுசீரமைப்பு செய்து அதன்மூலம் தொழில் வளர்ச்சியில் ஏற்படும் முன்னெடுப்புகள், தொழில் துறைகளுக்குத் தேவைப்படும் திறனாளர்களை உருவாக்க செயலாற்றல் மிக்க பல்வேறு முயற்சிகளை உயர் கல்வித் துறை மேற்கொண்டு வருகிறது. மாணாக்கர்களின் மென்திறன்களை வளர்த்தெடுக்கவும், தொழில் துறைத் திறனாளர்களை உருவாக்கவும், தேவைப்படும் பாடங்களை இணைக்கவும் மற்றும் வேலைவாய்ப்புகளைப் பெற நிலவும் போட்டிகளை எதிர்கொள்ளவும் தேவைப்படும் சிறப்புப் பாடங்களை பாடத் திட்டத்தில் இணைத்து மறுசீரமைப்பு செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உலக அரங்கில் நிலை நிறுத்தப்பட்டுள்ள கல்வித் தர நிலைத் தரவுகளுக்கு இணையாக தமிழகத்தின் உயர் கல்வித் தரவுகளை உயர்த்திட உயர் கல்வித் துறை பாடுபட்டு வருகிறது.

தொழில் நிறுவனங்களின் வல்லுநர்களின் கருத்துகளையும், ஆலோசனைகளையும் பெற்று தொழிற்துறையுடன் ஒருங்கிணைந்த பாடத் திட்டங்களை உருவாக்க "அறிவுசார் கலந்தாய்வு கூட்டம்" 17.3.2022 அன்று அண்ணா பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் 100-க்கும் மேற்பட்ட பெரு நிறுவனங்கள் மற்றும் சிறுதொழில் நிறுவனங்களிலிருந்து பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். இவர்களுடன் தலைசிறந்த கல்வியாளர்கள்,

2022 ஏப்ரல் 11]

முன்னாள் மாணாக்கர்கள் மற்றும் மாணவ பிரதிநிதிகளும் பங்குபெற்று விவாதித்தனர். பல்வேறுபட்ட பொறியியல் மற்றும் தொழில்நுட்ப பாடப் பிரிவுகளிலிருந்து மேலும் பல புதிய பாடப் பிரிவுகளை தோற்றுவிப்பதற்கான கருத்துருக்கள் இவ்விவாதத்தில் முன்மொழியப்பட்டன.

மேலும், 2022-2023 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில், மாநிலத்தில் உள்ள பல்கலைக்கழகங்கள், தங்களது வளாகத்தில் பொதுத் துறை நிறுவனங்களான தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (TIDCO), தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT) மற்றும் TANSIDCO போன்ற அரசு பொதுத் துறை நிறுவனங்களுடன் இணைந்து ஆராய்ச்சி மையங்களை தொடங்க பல்கலைக்கழகங்கள் ஊக்கப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

1.5. அறிவுசார் நகரம்

கல்வித் தரத்தை உயர்த்தவும், உலகத் தரத்திலுள்ள திறனாளர்களை ஈர்க்கவும் தமிழக அரசு முனைப்புடன் "அறிவுசார் நகரத்தினை" உருவாக்க அறிவித்துள்ளது. உலகத்தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வேலைவாய்ப்புகளுக்கு ஏற்ற பாடங்கள் ஆகிய கூறுகளை உள்ளடக்கிய அறிவுசார் பொருளாதாரத்தை மேம்படுத்துவதே இதன் முதன்மை கவனமாகும்.

1.6. நிலையான மேம்பாட்டிற்கான இலக்கு நோக்கிய முயற்சிகள்

தமிழகத்தின் மாநில பல்கலைக்கழகங்கள் வழங்கும் பட்டப் படிப்புகளில் நிலையான மேம்பாட்டினை அடைய இலக்கு நோக்கிய முயற்சியால் பாடத் திட்டங்களிலும், ஆராய்ச்சிகளிலும், புதுமையாக்கலிலும், இணை மற்றும் புற பயன்பாட்டு செயல் நடைமுறைகளிலும் சீரமைப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். வழிகாட்டுதல், பயிற்சிகளை வழங்குதல், ஆசிரிய திறன் மேம்பாட்டு வகுப்புகள் மற்றும் கொள்கை வரைவாக்கம் ஆகிய செயல்பாடுகளை தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம் மேற்கொள்கிறது. அறிவார்ந்த சமூகத்தினை உருவாக்கவும், தமிழகத்தினை அறிவுசார்ந்த தளங்களில் விரிவாக்கம் செய்யவும் தமிழக அரசு செறிவு பொதிந்த கட்டமைப்பை மறுசீரமைக்கும் முயற்சிகளைத் திட்டமிட்டுள்ளது.

[2022 ஏப்ரல் 11

நிதி ஒதுக்கீடு 2022-2023

மானியக் கோரிக்கை எண் 20, உயர் கல்வித் துறை என்ற தலைப்பின்கீழ் மொத்த செலவினத் தொகை ரூ.5,668.88 கோடி ஆகும்

வரிசை எண்	துறை தலைமையின் பெயர்	வரவு-செலவு ஒதுக்கீடு ரூபாய் (கோடியில்)
1.	உயர் கல்வித் துறை, தலைமைச் செயலகம்	7.20
2.	கல்லூரிக் கல்வி இயக்ககம்	3,259.43
3.	தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்	1,552.44
4.	பல்கலைக்கழகங்கள்	698.18
5.	தமிழ்நாடு ஆவணக் காப்பகம்	15.65
6.	தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம்	3.89
7.	தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்	5.79
8.	அறிவியல் நகரம்	1.69
9.	தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம்	124.24
10.	தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றம்	0.37
	மொத்தம்	**5,668.88**

2022 ஏப்ரல் 11]

2. தொழில்நுட்பக் கல்வி

2.1. முன்னுரை

தொழில்நுட்பக் கல்வியானது மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிப்பதுடன், அன்றாட உலகளாவிய தேவைகளுக்கு ஏற்ப வளர்ச்சி அடைந்து வருகிறது. கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் மற்றும் சமூகத்திற்கு இடையேயான தொடர்பு, திறன் வாய்ந்த மனிதவளம் மற்றும் திறமையான தொழில்நுட்ப வல்லுநர்களை உள்ளடக்கிய மாநிலத்தை உறுதி செய்கிறது. பொறியியல், தொழில்நுட்பம், மேலாண்மை, கட்டடக் கலை, நகர திட்டமிடல், உணவக மேலாண்மை மற்றும் உணவு வழங்கல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளைச் சார்ந்த பட்டய மற்றும் பட்டப் படிப்பு ஆகியவை உயர் கல்வித் துறையின்கீழ் வழங்கப்படுகின்றன. தொழில்மயமாக்கல் மற்றும் நவீனமயமாக்கலில் உள்ள சவால்களை எதிர்கொள்வதற்கு தொழில்நுட்பத்துடன்கூடிய தொழில்முனைவோர்க்கான திறன்களை மாணாக்கர்கள் தொழில்நுட்பக் கல்வி மூலமாக பெற முடிகிறது. புதுமையான திட்டங்கள் அரசால் வடிவமைக்கப்பட்டு வருவதன்மூலம் மாநிலத்தின் இளைஞர்களை தற்சார்புடையவர்களாகவும், புதுமையான செயல்முறைகளை மேற்கொள்வதன்மூலம் சமூகத்தில் நிலவும் வாழ்க்கை நிகழ்வுகளை எதிர்கொள்வதற்கும் வழிவகுக்கிறது.

இம்மாநிலத்தில் தொழில்நுட்பக் கல்வியின் வளர்ச்சியை முதன்மை நோக்கமாகக் கொண்டு, தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், 1957 ஆம் ஆண்டு அக்டோபர், 14 ஆம் தேதி நிறுவப்பட்டது. இவ்வியக்ககம், அனைத்து கல்வி மற்றும் அது தொடர்பான செயல்பாடுகளை கண்காணித்து, ஒருங்கிணைத்து, கல்வித் தரத்தை சீர்படுத்துவதோடு புதிய பாடத் திட்டங்களை அறிமுகப்படுத்துதல், பாடத் திட்டத்தின் வடிவமைப்பு, பாடத் திட்டங்கள் மற்றும் பாடத்தின் உள்ளடக்கத்தின் திருத்தம், தர நிலைகளை ஒழுங்குபடுத்துதல், உடற்பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புக்கான வழிகாட்டுதல், ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேம்படுத்துதல், வேலைவாய்ப்பு திறன்கள் மற்றும் பயிற்சிகளை வழங்குதல், கல்வி நிலையங்கள், தொழில் நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனங்களுக்கு இடையேயான

[2022 ஏப்ரல் 11

தொடர்பை வலுப்படுத்துவதற்கான பயிற்சி வழங்குதல் போன்ற செயல்களை மேற்கொண்டு வருகிறது.

இவ்வியக்ககம் தட்டச்சு, சுருக்கெழுத்து, கணக்கியல் மற்றும் அலுவலகத்தில் கணினி பயன்பாடு குறித்த சான்றிதழ் படிப்பு ஆகியவற்றிற்கான தேர்வுகளை நடத்தி வருகிறது.

அதிக அளவிலான பட்டம் மற்றும் பட்டயப் படிப்பு தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களை இம்மாநிலம் தன்னகத்தே கொண்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

தமிழ்நாட்டில் உள்ள தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை 2021-2022 (தற்போதைய நிலை)				
வகைப்பாடு	பட்டப் படிப்பு கல்லூரிகள்	பட்டயப் படிப்பு கல்லூரிகள்		மொத்தம்
	பொறியியல் மற்றும் கட்டடக் கலை கல்லூரிகள்	பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள்	உணவக மேலாண்மை மற்றும் சமையல் தொழில்நுட்ப நிறுவனம்	
அரசுக் கல்லூரிகள்	11	51	-	62
அரசு உதவிபெறும் கல்லூரிகள்	3	34	-	37
சுயநிதி கல்லூரிகள்	539	406	14	959
இணைவு கல்லூரிகள்	-	4	-	4
அண்ணா பல்கலைக்கழக கல்லூரிகள்	20	-	-	20
மொத்தம்	**573**	**509**		**1,082**

2022 ஏப்ரல் 11]

2.2. அரசுக் கல்வி நிறுவனங்கள் மற்றும் பாடப் பிரிவுகள்

2.2.1. தொழிற்கல்வி நிறுவனங்கள்

சர்வதேச தரத்திற்கு இணையாக தொழில்நுட்பத்தில் தரமான உயர் கல்வியை வழங்கும் நோக்கத்துடன் நிறுவப்பட்ட பொறியியல் கல்லூரிகள், இன்றைய தொழில்நுட்ப சமூக வளர்ச்சிக்கு ஏற்றாற்போல் பட்டதாரிகள் மற்றும் அறிஞர்களை உருவாக்குகின்றன. பொறியியல் கல்லூரிகள் சீரிய திறனுடைய ஆசிரியர்களுடன், நன்கு அமைக்கப்பட்ட உள்கட்டமைப்பு, செய்முறை பயிற்சிக்கான வழிவகைகள் மற்றும் அறிவாற்றலுக்கான சாதகமான சூழ்நிலையை வழங்குவதுடன் சுய சிந்தனையுடன்கூடிய மாணவ சமுதாயத்தை உருவாக்குகிறது. மாணவ சமுதாயத்தின் நலனுக்காக, ஈரோட்டில் உள்ள சாலை மற்றும் போக்குவரத்து தொழில்நுட்பக் கல்லூரியானது, அரசு பொறியியல் கல்லூரியாக 2021-2022 ஆம் கல்வியாண்டு முதல் மாற்றம் செய்யப்பட்டது. தமிழகத்தில் உள்ள 11 அரசு பொறியியல் கல்லூரிகளில் 15,892 மாணாக்கர்கள் இளநிலை பொறியியல் பட்டப்படிப்பிலும், ஏழு அரசு பொறியியல் கல்லூரிகளில் 701 மாணாக்கர்கள் முதுநிலை பட்ட மேற்படிப்பிலும் பயின்று வருகின்றனர். மேலும், அரசு கல்வி நிலையங்களில் 509 ஆராய்ச்சி அறிஞர்கள் முனைவர் பட்டம் பயின்று வருகின்றனர்.

தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின்கீழ் 51 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. அவற்றில் தற்போது 42,479 மாணாக்கர்கள் பயின்று வருகின்றனர். தற்போது தொழில் நிறுவனங்கள், வரைபடங்களைப் படித்து விளக்குவது, மதிப்பீடு செய்தல், செலவு மற்றும் ரசீது தயார் செய்தல், மேற்பார்வை, அளவீடு, சோதனை, பழுதுபார்ப்பு, பராமரிப்பு போன்றவற்றில் சிறப்புத் திறன்களைப் பெற்ற பட்டயப் படிப்பு படித்தவர்களை, வேலைக்கு அமர்த்த விரும்புகின்றன. பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், அமைப்பியல், மின்னியல், இயந்திரவியல், மின்னணுவியல், கணினி அறிவியல், மருத்துவ ஆய்வக தொழில்நுட்பம், கருவியியல் மற்றும் கட்டுப்பாடு, கட்டடக் கலைக்கான உதவி, தோல் தொழில்நுட்பம், நெசவு தொழில்நுட்பம் போன்ற துறைகளில் மூன்றாண்டு பட்டயப் படிப்புகளை வழங்கி வருகின்றன. மகளிர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மகளிருக்கான பட்டயப் படிப்புகளை வழங்கி வருகின்றன. தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு

[2022 ஏப்ரல் 11

இடையே ஒரு இடைநிலை இணைப்பாக தொழிற்சாலைகள்/ நிறுவனங்களின் தள மற்றும் கள செயல்பாடுகளை மேற்கொள்ள, திறன் அடிப்படையிலான மனிதவளத்தை உருவாக்குவதே பலவகை தொழில்நுட்பக் கல்வியின் நோக்கமாகும்.

2.2.2. தொழிற்படிப்புகள்

தொழில்நுட்பக் கல்வி பாடத் திட்டங்கள் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் வடிவமைக்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்டு வருவதால், மாணாக்கர்களுக்கு அடிப்படை பொறியியல் கல்வியில் வலுவான அடித்தளம் அமைய வழிவகுக்கிறது.தொழிற்பயிற்சியானது மாணாக்கர்களுக்கு நம்பிக்கையை புகுத்துதலுக்கும், தெளிவான புரிதலுடன் கற்றுக்கொள்ளும் விருப்பத்தை ஏற்படுத்தவும், சரியான தொழிலை தேர்ந்தெடுக்கவும், தொழிற்துறையில் உள்ள சவாலை எதிர்கொண்டு, வெற்றி பெறுவதற்கும் அளிக்கப்படுகிறது. பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் 102 பட்டயப் படிப்புகளும், 11 அரசு பொறியியல் கல்லூரிகளில் 11 இளநிலை பொறியியல் பட்டப் படிப்புகளும் மற்றும் ஏழு அரசு பொறியியல் கல்லூரிகளில் 17 முதுநிலை பொறியியல் பட்ட மேற்படிப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

2.3. நலத் திட்டங்கள் மற்றும் புதிய முயற்சிகள்

2.3.1. அரசுப் பள்ளி மாணாக்கர்களுக்கு பொறியியல் கல்லூரிகளில் முன்னுரிமை அடிப்படையில் 7.5% இடங்கள் அளித்தல்

அரசுப் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களிடையே சமத்துவத்தை ஏற்படுத்த உறுதியான நடவடிக்கை எடுப்பதற்காக, இளநிலை தொழிற்கல்வி படிப்புகளில் முன்னுரிமை அடிப்படையில் அரசுப் பள்ளி மாணாக்கர்கள் சேர்க்கை பெறுவதற்காக "தமிழ்நாடு அரசுப் பள்ளிகளின் மாணவர்களுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் இளநிலை தொழிற்கல்வி படிப்புகளுக்கான சேர்க்கை சட்டம்-2021" இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்படும் மாணாக்கர்களுக்கான கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம், போக்குவரத்துக் கட்டணம் உள்ளிட்ட முழுக் கட்டணத்தையும் அரசே ஏற்கும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிப்பு வெளியிடப்பட்டது. இந்த அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில் 2021-2022 ஆம் கல்வியாண்டில்

2022 ஏப்ரல் 11]

பொறியியல் கல்லூரிகளில் சேர்க்கைப்பெற்ற அரசு பள்ளி மாணாக்கர்களுக்கு மேற்காண் கட்டணங்களை வழங்கும் பொருட்டு, ரூ.74.28 கோடி நிதியினை அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது. இந்த ஒதுக்கீட்டின்கீழ் 7,876 அரசு பள்ளி மாணாக்கர்கள் பொறியியல் கல்லூரிகளில் சேர்க்கை பெற்றுள்ளனர். இவர்களில் 161 அரசு பள்ளி மாணாக்கர்கள் அண்ணா பல்கலைக்கழக துறைகளில் 7.5 விழுக்காடு உள் ஒதுக்கீட்டின்கீழ் சேர்க்கை பெற்றுள்ளனர்.

2.3.2. போட்டித் தேர்வுகளுக்கு தயார்படுத்திக்கொள்ள தீவிர பயிற்சி அளித்தல்

2021-2022 ஆம் ஆண்டிலிருந்து 10 அரசு பொறியியற்கல்லூரிகளில் பயிலும் 500 மாணாக்கர்களுக்கு போட்டித் தேர்வுகளான, CAT/GMAT/GRE/IELTS *மற்றும்* TOEFL *தேர்வுகளுக்கு தீவிர பயிற்சி அளிக்க ரூ.42.12 இலட்சம் தொடர் செலவினமாக நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இத்தீவிர பயிற்சியானது மாணவர்களை போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறச் செய்வதோடு மட்டுமல்லாமல், அம்மாணாக்கர்கள் தேசிய மற்றும் சர்வதேச அளவிலான நற்பெயர் மிக்க நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெறுவதை அதிகப்படுத்துகிறது.*

2.3.3. இறுதியாண்டு படிக்கும் பொறியியற் கல்லூரி மாணவர்களுக்கு வெளிநாட்டு மொழி கற்றுக் கொடுத்தல்

அரசு பொறியியல் கல்லூரிகளில் இறுதியாண்டு படிக்கும் மாணாக்கர்களுக்கு வேலைவாய்ப்பு திறன்கள் மற்றும் வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புகள் ஆகியவற்றை அதிகரிக்கும் நோக்கத்தோடு தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்துடன் இணைந்து வெளிநாட்டு மொழிகளான ஜெர்மனி, ஜப்பானியம், பிரெஞ்ச் மற்றும் சீன மொழிகள் கற்றுத் தருதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

2.3.4. பட்டயப் படிப்புகளை தமிழ்வழியில் அறிமுகப்படுத்துதல்

சென்னை, மைய பாலிடெக்னிக் கல்லூரி, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் உள்ள அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில், அமைப்பியல் மற்றும் இயந்திரவியல் துறைகளில் தமிழ்வழியில் பட்டயப் படிப்புகள் 2022-2023 ஆம் கல்வியாண்டு முதல் அரசால் தொடங்கப்படவுள்ளன.

[2022 ஏப்ரல் 11

இதன்மூலம் மாணாக்கர்கள் பாடங்களின் கருத்துகள் மற்றும் பயன்பாடுகளை தமிழில் தெளிவாக புரிந்து கொள்ளமுடியும். மேலும், இது மாணாக்கர்களுக்கு மாநில அரசு வேலைகளை தமிழ்வழியில் கல்வி பயின்றோருக்கான உள் ஒதுக்கீட்டு பிரிவில் பெற உதவும்.

2.3.5. மகளிருக்கான பட்டயப் படிப்புகள் அறிமுகப்படுத்துதல்

மாணவியர்களின் மொத்த சேர்க்கையினை அதிகரிப்பதற்கும், சிறந்த வேலைவாய்ப்புகளை பெறுவதற்காக உயர் கல்வியில் மாணவியர்கள் அதிக அளவில் சேர்வதை ஊக்குவிப்பதற்கும், மகளிருக்காக (1) சென்னை, மைய பாலிடெக்னிக் கல்லூரியில் இயந்திரவியல் (கணினி கொண்டு வடிவமைத்தல்) பாடப் பிரிவு (2) சென்னை, மாநில வணிகப் பயிலகத்தில் அலுவலக மேலாண்மை மற்றும் கணினி பயன்பாடுகள் பாடப் பிரிவு (3) கோயம்புத்தூர், அரசினர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் இதயத் துடிப்பு பதிவி தொழில்நுட்பப் பாடப் பிரிவு (4) மதுரை, தமிழ்நாடு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் இணையவலை வடிவமைப்பு தொழில்நுட்பப் பாடப் பிரிவு (5) நாகர்கோவில், அரசினர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் உயிர் மருத்துவ மின்னணுவியல் பாடப் பிரிவு (6) சென்னை, டாக்டர் தர்மாம்பாள் அரசு மகளிர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் அகவனப்பியல் பாடப் பிரிவுகளும் 2022-2023 ஆம் கல்வியாண்டு முதல் துவங்கப்படவுள்ளன.

2.3.6. அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் திறன்மிகு வகுப்பறைகள்

தரமிக்க கல்வியை மாணாக்கர்களுக்கு வழங்குவதற்கு, தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, மேம்படுத்தப்பட்ட உள்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய திறன்மிகு வகுப்பறைகள் கூடுதலாக தேவைப்படுவதால், தமிழகத்தில் உள்ள 50 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் ரூ.10.00 கோடி செலவில் திறன்மிகு வகுப்பறைகள் 2021-2022 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய திறன்மிகு வகுப்பறைகள், புத்தகம்மூலம் பெற்ற அறிவும், கோட்பாடு உள்ளடக்கமும், மாணாக்கர்களின் வாழ்க்கை பயன்பாட்டிற்கும் கற்றலுக்கும் உதவக்கூடும். மேலும், மென்பொருள் மற்றும் தூண்டுதலை ஏற்படுத்தும் உள்ளடக்கங்கள்மூலம் இணைய பாதுகாப்பு (Cyber

2022 ஏப்ரல் 11]

Security) பயிற்சி, எரிவாயு வெட்டும் செயல்முறை (Gas Cutting Process), ஃபோர்க் லிப்ட் (Forklift) பயிற்சி, லீன் மேனுபாக்சரிங் (Lean Manufacturing), கட்டடப் பாதுகாப்பு, கியர்பாக்ஸ் (Gear Box), பவர் ஜெனரேடர் (Power Generator) போன்றவை திறன்மிகு வகுப்பறைகள்மூலம் வழங்கப்படுகின்றன.

2.3.7. பலவகை தொழில்நுட்பக் கல்லூரி மாணாக்கர்களுக்கு கூடுதல் பாடத் திட்டங்கள்

அரசானது, தொழிற்சாலைகளின் தேவைகளை பூர்த்திசெய்யும் விதமாகவும், சிறந்த வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் மாணவர்களின் செயல்திறனை உயர்த்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துள்ளது. மாணாக்கர்களின் வேலைவாய்ப்பு பெறுவதற்கான திறனை அதிகரிக்கவும் மற்றும் பணிபுரிவதற்கான அறிவாற்றலை ஏற்படுத்தும் நோக்கத்துடன், ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்துடன் இணைந்து பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் இறுதியாண்டு மாணாக்கர்களுக்கு 2021-2022 ஆம் ஆண்டு முதல் தொழிற்சாலைகளின் தேவைகளின் அடிப்படையில், கூடுதல் பாடங்கள் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன.

பாடப் பிரிவுகளின் விவரம் பின்வருமாறு:

கூடுதல் பாடங்கள்	மாணாக்கர்களின் எண்ணிக்கை
இயந்திரவியல் CNC Operator Machining Technician Level 3—320 Hours	1,200
மின்னியல் மற்றும் மின்னணுவியல் Electrical Assembly Operator–Control Panel 200 Hours	900
மின்னியல் மற்றும் தொடர்பியல் PLC Assembly Operator-200 Hours	900

[2022 ஏப்ரல் 11

2.3.8. பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கான தொழில்முனைவோர் மேம்பாட்டு மையங்களை நிறுவுதல்

2021-2022 ஆம் ஆண்டில், தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க பயிற்சி நிறுவனத்துடன் இணைந்து சென்னை, வேலூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய ஐந்து மண்டலங்களில், 457 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளை உள்ளடக்கி தொழில்முனைவு மேம்பாட்டு மையங்களை (Hubs) நிறுவியுள்ளது. இதன்மூலம் அனைத்து முதல்வர்களுக்கான மேலாண்மை பயிற்சி, ஆசிரியர்களுக்கான மேம்பாட்டு பயிற்சி மற்றும் மாணாக்கர்களுக்கான மூன்று நாட்கள் மின்தலைமை பட்டறை பயிற்சி ஆகியவை அளிக்கப்பட்டன. இதுகாறும், சிந்தனை செயல்பாட்டுக்கான 950 புதிய கண்டுபிடிப்புகளுக்கான எண்ணங்கள் மாணவர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் தேர்ந்தெடுக்கப்படும் மாணாக்கர்கள் சிந்தனை முகாமிற்கு அனுப்பப்படுவார்கள். இளம் மாணாக்கர்களிடம் தொழில் முனைவு மற்றும் தொழில் துவங்கும் பண்பாடு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவது இதன் நோக்கமாகும்.

2.3.9. பி.காம். பட்டப் படிப்பில் நேரடி இரண்டாமாண்டு சேர்க்கை

பட்டயப் படிப்புகளில் மொத்த சேர்க்கை விகிதத்தினை அதிகரிப்பதற்கும் மற்றும் பட்டயப் படிப்பு முடித்த மாணாக்கர்களை உயர் கல்வியில் சேர்வதற்கு ஊக்குவிப்பதற்கும், வணிகப் பயிற்சியில் பட்டயப் படிப்பு/நவீன அலுவலக நடைமுறை பட்டயப் படிப்பில் தேர்ச்சி பெற்ற மாணாக்கர்களுக்கு, பி.காம். பட்டப் படிப்பில் இரண்டாமாண்டு நேரடி சேர்க்கையினை 2021-2022 ஆம் ஆண்டில் அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இம்மாணாக்கர்கள் தமிழகத்தில் உள்ள அனைத்து மாநில பல்கலைக்கழகங்கள் வழங்கும் அனைத்து இளநிலை வணிகப் பாடப் பிரிவுகளில் நிறுவன செயலாண்மை பாடப் பிரிவு (Corporate Secretaryship) உட்பட 2022-2023 ஆம் கல்வியாண்டு முதல் இரண்டாம் ஆண்டு நேரடிச் சேர்க்கையில் சேர்வதற்கு தகுதியுடையவர்களாவர்.

2.3.10. முதல் தலைமுறைப் பட்டதாரி மாணாக்கர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை

முதல் தலைமுறை பட்டதாரி மாணாக்கர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை வழங்கும் திட்டமானது பட்டதாரிகளற்ற

2022 ஏப்ரல் 11]

குடும்பத்தில் உயர் கல்வியை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் துவங்கப்பட்டது. அவ்வாறு தொழிற்முறைப் படிப்புகளில் ஒற்றைச் சாளர முறையில் சேரும் முதல் தலைமுறை பட்டதாரி மாணாக்கர்களுக்கான கல்விக் கட்டணம் முழுவதையும் மாநில அரசே ஏற்கிறது. சாதி மற்றும் வருமானத்தை பொருட்படுத்தாமல் இந்த உதவித் தொகையானது மாணாக்கர்களுக்கு வழங்கப்படுகிறது. 2021-2022 ஆம் கல்வியாண்டில் 28.2.2022 அன்று வரை 1,11,038 மாணாக்கர்களுக்கு ரூ.266.60 கோடி அளவில் கல்விக் கட்டணச் சலுகை வழங்கப்பட்டுள்ளது.

2.3.11. இலங்கைத் தமிழ் அகதி மாணாக்கர்களுக்கு அளிக்கப்படுகின்ற சலுகைகள்

தமிழ்நாட்டில் உள்ள இலங்கைத் தமிழ் அகதி மாணாக்கர்களும் முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு நேரடி சேர்க்கைமூலம் பி.இ./பி.டெக். பட்டப் படிப்புகள் மற்றும் எம்.பி.ஏ./எம்.சி.ஏ./ எம்.இ./எம்.டெக். போன்ற முதுநிலை பட்டப் படிப்புகளில் சேர்ந்து பயில்வதற்கு ஏதுவாக கலந்தாய்வில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும், ஒற்றைச் சாளர முறை கலந்தாய்வின்மூலம் பொறியியல் கல்லூரிகளில் பயிலும் தகுதியுள்ள இலங்கைத் தமிழ் அகதி மாணாக்கர்களுக்கும், முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் கல்விக் கட்டண சலுகை நீட்டிக்கப்பட்டுள்ளது. 2021-2022 ஆம் கல்வியாண்டில் 33 மாணாக்கர்கள் சேர்க்கை பெற்றுள்ளனர்.

2.3.12. பட்டயப் படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு கல்வி கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்தல்

பட்டயப் படிப்பு பயிலும் மாணாக்கர்களில் பெரும்பாலானோர் சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவினை சேர்ந்தவர்களாவர். இப்பிரிவினைச் சேர்ந்த மாணாக்கர்களை ஊக்குவிக்கும்பொருட்டு 2008-2009 ஆம் கல்வியாண்டிலிருந்து அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பட்டயப் படிப்பு பயிலும் மாணவர்களுக்கு கல்வி கட்டணம் செலுத்துவதிலிருந்து அரசு விலக்களித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ், 2021-2022 ஆம் கல்வியாண்டில் 42,479 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

2.3.13. இலவச பாடப் புத்தகங்கள் வழங்குதல்

பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் மாணாக்கர்கள் சேர்க்கையை அதிகரிக்கவும், அவர்கள் கல்வியில் சிறந்து

[2022 ஏப்ரல் 11

விளங்குவதற்கும் 2007-2008 ஆம் கல்வி ஆண்டிலிருந்து அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் முதலாமாண்டு பட்டயப் படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு விலையில்லா பாடப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ், ஆங்கிலம், பொறியியல், இயற்பியல், பொறியியல் வேதியியல் மற்றும் பொறியியல் கணிதம் ஆகிய பாடங்களுக்கான புத்தகங்கள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. 2021-2022 ஆம் கல்வியாண்டில் 11,839 மாணாக்கர்கள் ரூ.37.97 இலட்சம் செலவினத்தில் பயனடைந்துள்ளனர்.

2.3.14. அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் சுழற்சி முறை

கிராமப்புறங்களிலிருந்து வரும் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினைச் சேர்ந்த மாணாக்கர்கள் பட்டயக் கல்வி பயில்வதை ஊக்குவிக்கும்பொருட்டு 2009-2010 ஆம் கல்வியாண்டு முதல் 14 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் சுழற்சி முறையினை 3,360 கூடுதல் மாணாக்கர்கள் சேர்க்கை இடங்களுடன் அறிமுகம் செய்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இத்திட்டத்தின்மூலம் 2021-2022 ஆம் கல்வியாண்டில் 2,081 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

2.3.15. இலவசப் பேருந்து பயணச் சலுகை

மாணாக்கர்கள் எவ்வித நிதிச் சுமையுமின்றி தங்களது பயிலகங்களுக்கு சென்றடைய, 2007-2008 ஆம் கல்வியாண்டிலிருந்து அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பட்டயப் படிப்பு பயிலும் அனைத்து மாணாக்கர்களுக்கும் இலவசப் பேருந்து பயண அட்டை வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 2021-2022 ஆம் கல்வியாண்டில் 41,978 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

2.3.16. புனையமைப்பு ஆய்வகம் நிறுவுதல்

மாணாக்கர்கள் மற்றும் ஆசிரியர்கள் தங்களின் தனித்திறமைகள், கற்றல் உத்திகள், படைப்பாற்றல், ஆக்கபூர்வமான சிந்தனைகள் ஆகியவற்றை செயல்முறை அறிவுத்திறனுடன் செயல்படுத்த காரைக்குடி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம் ஆகிய நான்கு பொறியியல் மற்றும் மதுரையில் உள்ள தமிழ்நாடு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் தொழிற்சாலைகளுடன் இணைந்து புனையமைப்பு ஆய்வகம் (Fab Makerspace Lab) நிறுவப்படவுள்ளது.

2022 ஏப்ரல் 11]

2.3.17. முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி

நன்கு பயிலும் திறமையான மற்றும் பொருளாதாரத்தில் நலிவுற்ற மாணாக்கர்கள் பி.இ./பி.டெக். பொறியியல் படிப்புகளை பயில்வதற்கு அரசு ரூ.50,000/- நிதியுதவி வழங்குகிறது. முதல் தலைமுறை பட்டதாரி மாணாக்கர்களுக்கான கல்விக் கட்டணச் சலுகை பெறும் மாணாக்கர்களும் இந்த நிதியுதவி பெற தகுதி உடையவர்களாவர்.

2.3.18. பட்ட மேற்படிப்பிற்கான நிதியுதவி திட்டம்

2021-2022 ஆம் ஆண்டு முதல் பொறியியல் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு நிதியுதவி பெறும் திட்டத்தின்கீழ் பயன்பெறும் மாணாக்கர்களின் எண்ணிக்கை 600-லிருந்து 1,200 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மாதந்தோறும் ரூ.6,000/- நிதியுதவி பெறுவதற்காக அரசு பொறியியல் கல்லூரிகள், அரசு உதவிபெறும் பொறியியல் கல்லூரிகள், அண்ணா பல்கலைக்கழக துறைகள் மற்றும் அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளில் சேரும் மாணாக்கர்களின் பொது நுழைவுத் தேர்வு மதிப்பெண் அடிப்படையில், முதல் 300 மாணாக்கர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். பின்பு, அரசு பொறியியல் கல்லூரிகளில் சேர்க்கை பெறும் மாணாக்கர்களில் இருந்து மட்டும் பொது நுழைவுத் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் அடுத்த 300 மாணாக்கர்கள் இத்திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்படுவார்கள். இத்திட்டத்திற்காக அரசு ரூ.8.64 கோடி நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

2.3.19. ஆதி திராவிடர் மாணாக்கர்களுக்கான கல்வி உதவித் தொகை திட்டம்

ஏழை மற்றும் தாழ்த்தப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த ஆதி திராவிட மாணாக்கர்களை மையமாகக் கொண்டு உயர் கல்வியில் அவர்களின் மொத்த சேர்க்கை விகிதத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன் ஆதி திராவிட மாணாக்கர்களுக்கான கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. சுயநிதி கல்வி மற்றும் சிறுபான்மை கல்வி நிறுவனங்கள் உள்ளடங்கலான கல்வி நிறுவனங்களில் அரசு மற்றும் நிர்வாக ஒதுக்கீட்டின்கீழ் சேர்க்கை பெற்ற பொறியியல் மற்றும் பட்டயப் படிப்பு படிக்கும் மாணாக்கர்களுக்கு, கட்டண நிர்ணயக் குழுவால் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டாய மற்றும் திருப்பி அளிக்க

[2022 ஏப்ரல் 11

இயலாத கட்டணங்கள் அனைத்தும் வழங்கப்பட்டு வருகின்றன. இம்மாணாக்கர்களுக்கு கல்வி உதவிப் படியும் வழங்கப்படுகிறது. கடந்த கல்வியாண்டில் 73,012 பொறியியல் கல்லூரி மாணாக்கர்களுக்கு கல்வி உதவித்தொகையாக ரூ.490.29 கோடியும், 49,117 பலவகை தொழில்நுட்பக் கல்லூரி மாணாக்கர்களுக்கு கல்வி உதவித்தொகையாக ரூ.178.70 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.

2.3.20. விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டம்

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்கள் சிறந்த கணினித் திறனைப் பெறுவதற்கும், மின் வளங்களைப் பயன்படுத்துவதற்கும், விலையில்லா மடிக்கணினிகளை வழங்கும் திட்டம் தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்கள் பயன்பெறுகின்றனர்.

2.4. மின் ஆளுமை

2.4.1. தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை, 2021

2019-2020 ஆம் கல்வியாண்டு முதல் தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை, தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தால் நடத்தப்பட்டு வருகிறது. கொரோனா பெருந்தொற்று காரணமாக 2020-2021 ஆம் கல்வியாண்டு முதல் மாணவர் சேர்க்கை தொடர்பான விண்ணப்பப்பதிவு, சான்றிதழ் பதிவேற்றம், சான்றிதழ் சரிபார்ப்பு, பதிவு செய்த மாணவர்களுக்கு ரேண்டம் எண் (Random Number) வழங்குதல், தரவரிசைப் பட்டியல் வெளியீடு, சிறப்பு பிரிவினர்களுக்கான கலந்தாய்வு, பொது கலந்தாய்வு, தொழில்முறை கலந்தாய்வு, துணை கலந்தாய்வு, SCA காலியிடத்திற்கான SC வகுப்பு கலந்தாய்வு, தற்காலிக ஒதுக்கீடு பட்டியல் வெளியிடுதல் போன்ற அனைத்தும் இணையவழி மூலமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. இதேபோன்று, 2021 ஆம் கல்வியாண்டிற்கான தமிழ்நாடு பொறியியல் சேர்க்கையும் இணையவழி மூலமாகவே முழுமையாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. 78,490 மாணாக்கர்கள் அரசு ஒதுக்கீட்டின்கீழ் சேர்க்கை பெற்றுள்ளனர்.

மேலும் 2021-2022 ஆம் கல்வியாண்டில் B.Arch. பட்டப் படிப்பிற்கான முதலாம் ஆண்டு சேர்க்கை, B.E./B.Tech. படிப்பிற்கான இரண்டாமாண்டு நேரடி சேர்க்கை மற்றும்

2022 ஏப்ரல் 11]

பகுதிநேர சேர்க்கை, MBA/MCA பட்டப் படிப்புகளுக்கான முதலாம் ஆண்டு சேர்க்கை, அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் முதலாமாண்டு/இரண்டாமாண்டு நேரடி சேர்க்கை/பகுதி நேர பட்டயப் படிப்பு சேர்க்கை ஆகிய அனைத்தும் இணையவழி மூலமாக நடைபெற்றுள்ளன.

2.4.2. நிறுவன வள திட்டமிடல் மென் பொருளுடன் (LMS & ERP) ஒருங்கிணைந்த கற்றல் மேலாண்மை அமைப்பை நிறுவுதல்

தமிழகத்தில் உயர் கல்வித் துறையில் அரசின் இலக்குகளை அடைவதற்காக, சமூகத்தின் தேவைக்கு ஏற்ப கொள்கைகள், சட்டங்கள், ஒழுங்குமுறைகளை வகுத்து, பல்வேறு திட்டங்களை வகுப்பதற்கு ஏதுவாக,நிறுவன வள திட்டமிடுதல்,மென்பொருளுடன் (LMS & ERP) ஒருங்கிணைக்கப்பட்ட கற்றல் மேலாண்மை அமைப்பானது அனைத்து உயர் கல்வி நிறுவனங்களிலும் நிறுவப்படவுள்ளது. இது தொடர்பான திட்டத்தினை செயல்படுத்துவதற்கான திட்ட மேலாண்மை ஆலோசகரை நியமித்து வடிவமைப்பு மற்றும் திட்டச் செயல்பாட்டிற்கான வளச் செலவுக்காகவும், தமிழகத்தில் உள்ள நிறுவன வள திட்டமிடல் தீர்வுடன் ஒருங்கிணைக்கப்பட்ட கற்றல் மேலாண்மை அமைப்பின் தேர்வு மற்றும் அறிமுகம் போன்றவற்றிற்காகவும், 2021-2022 ஆம் ஆண்டில் அரசு ரூ.4.09 கோடி நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

2.4.3. காணொலி காட்சி மையம்

தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் உள்ள காணொலி காட்சி மையம் வளர்ந்துவரும் மின்மய கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. இந்த காணொலி காட்சி மையம்மூலம், மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில், பல்வேறு பொறியியல் துறைகளில் தலைசிறந்த நிபுணர்களால் விரிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் அதன் கட்டுப்பாட்டில் இருக்கும் கல்லூரிகளை கண்காணிக்கவும் இவ்வசதியை பயன்படுத்துகிறது.

2.4.4. பட்டயப் படிப்பு மாணாக்கர்களுக்கு மென்பொருள் பயிற்சி அளித்தல்

2021-2022 ஆம் ஆண்டில், தொழில்நுட்ப கல்வி இயக்ககம் மும்பையில் உள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனத்துடன்

[2022 ஏப்ரல் 11

2021 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் வரை ஒரு வருடத்திற்கு அனைத்து 51 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி மாணாக்கர்களுக்கும் தொழில்நுட்ப திறன்களை மேம்படுத்துவதற்கும், அதன் மூலம் அவர்களின் வேலைவாய்ப்புகளை அதிகரிப்பதற்கும் மென்பொருள் பயிற்சி அளிப்பதற்கு ஒப்பந்தம் செய்துள்ளது. இப்பயிற்சியில், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் 21,343 மாணாக்கர்கள் சேர்ந்து, Python 3.4.3, Arduino, Q CAD, Scilab Libre Office Suite போன்ற மென்பொருள் பயிற்சிகளை முடித்துள்ளார்கள்.

2.5. உள்கட்டமைப்பு

2.5.1. அரசு பொறியியற்கல்லூரிகளில் கூடுதலாக விடுதி கட்டடங்களைக் கட்டுதல்

மாணாக்கர்கள் விடுதிகளில் தங்கிப் பயிலும் தேவை அதிகரித்திருப்பதை கருத்திற் கொண்டு அவர்களுக்கு தகுந்த சூழலுடன் போதுமான தங்குமிடம் வழங்கவும், 2021-2022 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர், சேலம், காரைக்குடி மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் உள்ள நான்கு அரசு பொறியியல் கல்லூரிகளில் கூடுதல் விடுதி கட்டடங்கள் கட்டுவதற்கு அரசு ரூ.34.10 கோடி நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2022 ஏப்ரல் 11]

3. கல்லூரிக் கல்வி

3.1. 1965 ஆம் ஆண்டு கல்லூரிக் கல்வி இயக்ககம், கல்லூரிக் கல்வியை தனித்துவமாக நிர்வகிக்கும் நோக்கத்துடன், முந்தைய பொதுக் கல்வி இயக்ககத்தை பள்ளிக் கல்வி இயக்ககம் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்ககம் என்று இரண்டாகப் பிரித்து உருவாக்கப்பட்டது. மானுடவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் போன்ற பல்வேறு துறைகளில் புதுமையான திட்டங்களை அறிமுகப்படுத்தி, உயர் கல்வித் துறையில் மிகவும் முன்னேறிய மாநிலமாகவும் அதிகம் விரும்பப்படும் மாநிலமாகவும் தமிழகத்தை முன்னோக்கி கொண்டு வர அரசு பயனுள்ள நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தற்போது 907 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 11 உடற்கல்வி கல்லூரிகள், நான்கு கீழ்த்திசை கல்லூரிகள், இரண்டு சமூகப் பணி பள்ளிகள் மற்றும் 649 கல்வியியல் கல்லூரிகள் என மொத்தம் 1,573 கல்லூரிகள், கல்லூரிக் கல்வி இயக்ககத்தின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

3.2. மொத்த மாணாக்கர்கள் சேர்க்கை விகிதம் (GER)

உயர் கல்வியில் அகில இந்திய அளவில் மொத்த மாணாக்கர்கள் சேர்க்கை விகிதம் 27.1 என்று இருக்கும் நிலையில், தமிழக அரசின் முன் முயற்சி மற்றும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளின் காரணமாக, தமிழகம் 51.4 என்ற விகித அளவில் சிறப்பான இடத்தில் உள்ளது. அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2006-2007 ஆம் கல்வியாண்டில் தொடங்கப்பட்ட சுழற்சி முறைத் திட்டமே, அதனை தொடர்ந்து வந்த ஆண்டுகளில் மொத்த சேர்க்கை விகிதத்தில், தமிழகம் உயர் கல்வியில் சிறப்பான இடத்தையும், அதிக விகிதமும் பெற முக்கிய காரணமாக அமைந்தது. வேகமாக மாறிவரும் மாற்றங்களுக்கு ஈடுகொடுத்து, மொத்த மாணாக்கர் சேர்க்கை விகிதத்தைத் தொடர்ந்து உயர்த்தும்பொருட்டு, தமிழக அரசு, இன்றைய கால கட்டத்திற்குத் தேவையானதும், தொழிற்சாலைகளின் தேவைக்கேற்பவும் கூடுதலாக புதிய கல்லூரிகளையும் புதிய பாடத் திட்டங்களையும் தொடங்கியுள்ளது.

3.3. முழுமையான கல்வி

தரமான உயர் கல்வி வழங்குவதை முன்னுரிமையாகக் கொண்ட தமிழக அரசு, சமூக, பொருளாதார மாற்றங்களுக்கு ஈடு கொடுத்து,

[2022 ஏப்ரல் 11

சமுதாயத்தின் அனைத்து தரப்பினரின் வாழ்வியல் தரத்தை உயர்த்தும் வகையில், முழுமையான கல்வியைத் தர விழைகின்றது. அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்கள்மூலம், முழுமையான வகையில் தரமான உயர் கல்வியை பயில்வதன்மூலம் சமூக பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினரின் நலன்கள் அரசின் தொடர் முயற்சிகளால் சாத்தியமாகிறது.

3.4. செவித்திறன் குறைந்த மாணாக்கர்களுக்கான பி.காம். மற்றும் பி.சி.ஏ. சிறப்புப் பாடப் பிரிவுகள்

மாநிலக் கல்லூரியானது, 181 ஆண்டுகளை கடந்த பழமையான தனித்துவம் நிறைந்த கல்லூரியாகும். 2007 ஆம் ஆண்டு அப்போதைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் மாநிலக் கல்லூரியில் பி.காம் (செவித்திறன் குறைவு) மற்றும் பி.சி.ஏ. (செவித்திறன் குறைவு) பாடப் பிரிவுகள் துவங்கப்படும் என்று அறிவித்தார். அதன்படி, இவ்விரண்டு சிறப்பு பாடப் பிரிவுகளும் தொடங்கப்பட்டன. இந்நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை பயன்படுத்தி, தற்போது 175 மாணவர்கள் உயர் கல்வி பயின்று வருகின்றனர்.

செவித்திறன் குறைபாடுடைய மாணவர்களுக்கான சேவைகளை அங்கீகரித்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2021 ஆகஸ்ட் 15 அன்று நடைபெற்ற சுதந்திர தின விழாவில் "சிறந்த நடைமுறைகள்" விருதினை இக்கல்லூரிக்கு வழங்கினார்கள்.

3.5. பாரதி இளம் கவிஞர் விருது

இந்த மண்ணின் மகத்தான மாமனிதர்களை போற்றுவதில் தமிழக அரசு உறுதியாக உள்ளது. எனவே, மகாகவி பாரதியின் நூற்றாண்டு விழாவை நினைவுகூறும் வகையில், கல்லூரி மாணவர்களுக்கான மாநில அளவிலான கவிதைப் போட்டியை நடத்தி ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு "பாரதி இளம் கவிஞர்" என்ற விருதுடன் தலா ரூபாய் ஒரு இலட்சம் பரிசுத் தொகையினையும் வழங்க உள்ளது. கவிதைப் போட்டிகள் நடத்துவதற்கான முதற்கட்டப் பணிகள் நடந்து வருகின்றன.

மாவட்ட அளவிலான கவிதைப் போட்டிகள் ஆகஸ்ட் 2022-க்கு முன்பாக நடத்தப்படவுள்ளன. அதனைத் தொடர்ந்து, மாநில அளவிலான போட்டிகள் ஆகஸ்ட் 2022 இல் நடத்தப்படும்.

2022 ஏப்ரல் 11]

செப்டம்பர் 2022-ல் பாரதி இளம் கவிஞர் விருது வழங்கப்படும். இந்த ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் இவ்விருது வழங்கப்படும்.

3.6. உயர் கல்வி வழியே மகளிருக்கு அதிகாரமளித்தல்

தமிழக அரசின், பெண்களுக்கான உயர் கல்வியை ஊக்கப்படுத்தும் நடவடிக்கைகள் மற்றும் பயனுள்ள பல திட்டங்களை அறிமுகப்படுத்துதல்மூலம் அதிக பெண்கள் உயர் கல்வி பயில ஊக்குவிக்கப்படுகின்றனர். இந்நடவடிக்கைகள் சமூகத்தில் மகளிர் உயர் நிலையை அடையவும், பொருளாதார சுதந்திரத்தை அடையவும், வழிகோலுகிறது. மகளிருக்கான கல்லூரிகள் புதிதாகத் துவக்கப்பட்டுள்ளதன்மூலம் பெண்களின் இடைநிற்றல் தவிர்க்கப்பட்டுள்ளதுடன், பெண்கள் அதிகாரம் பெறவும் உதவுகிறது.

அரசின் நிர்வாகப் பணிகளில் மகளிர் பங்கு பெறுவதை ஊக்குவிக்கும் நோக்கில், சென்னை, ராணி மேரி கல்லூரி மற்றும் மதுரை, அருள்மிகு மீனாட்சி அரசு மகளிர் கலைக் கல்லூரி ஆகியவற்றில் அனைத்திந்திய குடிமைப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் மற்றும் ஒன்றிய பணித் தேர்வுகளில் வெற்றிபெற, இலவசமாக, பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

3.7. கட்டணமில்லா பேருந்து பயண அட்டை வழங்குதல்

அரசுக் கல்லூரிகளில் பயிலும் அனைத்து மாணாக்கர்களுக்கும் கட்டணமில்லா பேருந்து அட்டை 2007-2008 ஆம் கல்வியாண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. கல்லூரியில் பெறப்படும் விண்ணப்பங்களின் அடிப்படையில் மாணவர்களுக்கு சம்பந்தப்பட்ட கல்லூரிகள்மூலம் கட்டணமில்லாப் பேருந்து பயண அட்டை வழங்கப்படுகிறது. 2021-2022 ஆம் கல்வியாண்டில் கட்டணமில்லா பயண சலுகை திட்டத்தின்மூலம் 1,39,446 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

3.8. கட்டணமில்லாக் கல்வி

2007-2008 ஆம் கல்வி ஆண்டு முதல், அரசு, அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளங்கலை பட்டப் படிப்புகள் பயிலும் அனைத்து மாணாக்கர்களுக்கும் கல்விக் கட்டணத்தை அரசு தள்ளுபடி செய்துள்ளது. மேலும் 2010-2011 ஆம் கல்வி ஆண்டு முதல் அரசுக் கல்லூரிகளில் முதுநிலை

[2022 ஏப்ரல் 11

பாடப் பிரிவினை பயிலும் அனைத்து மாணாக்கர்களுக்கும் கல்விக் கட்டணம் தள்ளுபடி செய்யப்பட்டது. இதன்மூலம் பொருளாதாரத்தில் ஏழ்மையான பெற்றோரின் நிதிச் சுமை பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளது.

3.9. தமிழ்வழியில் பயிலும் மாணாக்கர்களுக்கு ஊக்கத்தொகை

தமிழ்வழியில் பயிலும் மாணாக்கர்களை ஊக்குவிக்கும்பொருட்டு ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் 1971-72 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டு, ஒவ்வொரு வருடமும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. தற்போது அரசு மற்றும் அரசு உதவிபெறும் கலை அறிவியல் கல்லூரிகளில் தமிழ்வழியில் பயிலும் ஒவ்வொரு மாணவருக்கும் ஊக்கத் தொகையாக ஓராண்டிற்கு ரூ.900/- என்ற வீதத்தில் வழங்கப்பட்டு வருகிறது. 2021-2022 ஆம் ஆண்டில் 47,072 மாணாக்கர்கள் பயனடையும் வகையில் ரூ.4.24 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.10. ஆதி திராவிடர்/பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணாக்கர்களுக்கு சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்துதல்

அரசுக் கல்லூரிகளில், குறிப்பாக கிராமப்புறங்களைச் சார்ந்த ஆதி திராவிடர்/பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஆங்கிலம், கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களில் பல்கலைக்கழகத் தேர்வுகளைப் எதிர்கொள்வது கடினமாக உள்ளது. இந்தப் பாடங்களை அவர்கள் முழுமையாக புரிந்துகொண்டு பயிலும் வகையில், வகுப்பு நேரங்களுக்கு அப்பாற்பட்டும், வார இறுதி நாட்களிலும் சிறப்பு வகுப்புகள்மூலம், மாணாக்கர்களுக்கு கூடுதலாக சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அவர்கள் பிற மாணவர்களுடன் போட்டியிடவும், பல்கலைக்கழக தேர்வுகளில், உயர் மதிப்பெண்கள் பெறவும், இப்பயிற்சி வகுப்புகள் உதவிபுரியும்.

3.11. பாடப் புத்தகங்களை தமிழில் மொழிப்பெயர்த்தல்

தமிழ்வழியில் படிக்கும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்துடன் இணைந்து, 100 பாடப் புத்தகங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்படும் என அரசு அறிவித்துள்ளது. தற்போது,

2022 ஏப்ரல் 11]

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் மொழிபெயர்ப்பாளர்களைக் கண்டறிந்து, பாடவாரியாக மொழிபெயர்ப்பு பணிகளையும் ஒதுக்கீடு செய்துள்ளது. பாடப் புத்தகங்களின் மொழியாக்கம் செயல்பாட்டில் உள்ளது. மேலும், ஜூன் 2022-க்கு முன் 50 பாடப் புத்தகங்களின் மொழிபெயர்ப்பை முடிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3.12. வேலைவாய்ப்பு முகாம்

கல்லூரிக் கல்வி இயக்ககத்தின்கீழ் இயங்கும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கான வேலைவாய்ப்பு முகாம்கள் ஒவ்வோர் ஆண்டும் நடத்தப்பட்டு வருகின்றன. அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்கள் தங்கள் படிப்பு நிறைவுற்றதும் வேலைவாய்ப்பு பெற சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாணாக்கர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளை வழங்குவதற்காக கல்லூரிகளிலுள்ள வேலைவாய்ப்பு மையங்கள் புத்துயிரூட்டப்பட்டு ஆர்வமுள்ள கல்லூரி ஆசிரியர்கள் வேலைவாய்ப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

3.13. ஆராய்ச்சிப் படிப்பு மாணவர்களுக்கு உதவித்தொகை (முனைவர் பட்ட ஆராய்ச்சி)

உதவித்தொகை வழங்கும் திட்டம்மூலம் அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பயிலும் ஆராய்ச்சி மாணவர்களின் ஆராய்ச்சி செயல்பாடுகள் ஊக்குவிக்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ், ஒரு முனைவர் பட்ட ஆராய்ச்சி மாணவருக்கு, ஓராண்டிற்கு ரூ.60,000/- படிப்புதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. 2021-2022 ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்திற்காக ரூ.1.65 கோடி அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, 275 முனைவர் பட்ட ஆராய்ச்சி மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

3.14. 10 அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முனைவர் படிப்பு (Ph.D) தொடங்குதல்

ஆராய்ச்சியில் தமிழகத்தை முன்னோடி மாநிலமாக உயர்த்தவும், ஆராய்ச்சிப் படிப்பை ஊக்குவிக்கவும், மாணவர்களின் ஆராய்ச்சித் திறனை வெளிக்கொணரவும், 10 அரசுக் கலை மற்றும்

[2022 ஏப்ரல் 11

அறிவியல் கல்லூரிகளில் தமிழ், வணிகவியல், தாவரவியல், தகவல் தொழில்நுட்பம், விலங்கியல், உயிர்வேதியியல், ஆங்கிலம், இயற்பியல் மற்றும் சர்வதேச வணிகவியல் ஆகிய துறைகளில் முனைவர் படிப்புகளை (Ph.D) துவங்குவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது. 2021-2022 ஆம் கல்வியாண்டு முதல் மாணவர் சேர்க்கை பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

3.15. அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் புதிய இளநிலைப் பாடப் பிரிவுகள் தொடங்குதல்

மொத்த மாணாக்கர் சேர்க்கை விகிதத்தை அதிகரிக்கவும், சமூக பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு உயர் கல்வி வாய்ப்பினை உருவாக்கும் விதத்திலும் விழுப்புரம், அறிஞர் அண்ணா அரசுக் கலைக் கல்லூரியில் 4 புதிய இளநிலைப் பாடப் பிரிவுகளும், சென்னை, நந்தனம், அரசுக் கலைக் கல்லூரியில் 3 புதிய இளநிலைப் பாடப் பிரிவுகளும் 2021-2022 ஆம் கல்வியாண்டில் தொடங்கப்பட்டுள்ளன.

3.16. மாணாக்கர் சேர்க்கையில் இணையவழி விண்ணப்பப் பதிவு

அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேர்க்கைப் பெற விழையும் மாணாக்கர்களுக்கு இயங்கலை (Online) வழியாக விண்ணப்பம் பதிவு செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பெருந்தொற்று காலத்தில் தடங்கலற்ற இந்த இயங்கலை விண்ணப்பப் பதிவு தளம் மாணாக்கர்களின் சிரமத்தைக் குறைத்து, எளிதாகவும், விரைவாகவும், அவர்களின் திறன் கைப்பேசி வாயிலாகவும் பதிவு செய்ய வழிவகுத்தது. 2021-2022 ஆம் கல்வியாண்டில் இணையவழியாக 5,70,601 விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

3.17. மின் ஆளுமை

விரைவான மற்றும் பயனுள்ள நிர்வாகம், நிர்வாக செயல்பாடுகளை துரிதப்படுத்துதல், வெளிப்படை தன்மையுடன் தரவுகளை விரைந்து பெறுதல் உள்ளிட்டவைகளுக்காக, மின் ஆளுமை திட்டத்தின் முதல் கட்டமாக ரூ.99.80 இலட்சம் மற்றும் இரண்டாம் கட்டமாக ரூ.1.32 கோடி அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. அலுவலக நிர்வாகம் மற்றும் மண்டல இணை இயக்குநர் அலுவலகங்களை கல்லூரிக் கல்வி இயக்குநரகத்துடன்

2022 ஏப்ரல் 11]

ஒருங்கிணைப்பதற்கான மென்பொருளை தமிழ்நாடு மின் ஆளுமை முகமை வடிவமைத்து வருகிறது.

3.18. புதிய அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்

உள்ளார்ந்த, சீரான உயர் கல்வி வழங்குவதற்காகவும், மாணவர் சேர்க்கை விகிதத்தினை உயர்த்துவதற்காகவும் 10 புதிய அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை 2022-2023 ஆம் கல்வியாண்டில் தொடங்க அரசு அனுமதி அளித்துள்ளது.

இந்தப் புதிய கல்லூரிகளில், திருவாரூர் மாவட்டம்-கூத்தாநல்லூரில் ஒரு புதிய அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும் மற்றும் விருதுநகர் மாவட்டம்-திருச்சுழி, கள்ளக்குறிச்சி மாவட்டம்-திருக்கோவிலூர், ஈரோடு மாவட்டம்-தாளவாடி, திண்டுக்கல் மாவட்டம்-ஒட்டன்சத்திரம், திருநெல்வேலி மாவட்டம்-மானூர், திருப்பூர் மாவட்டம்-தாராபுரம், தருமபுரி மாவட்டம்-ஏரியூர், புதுக்கோட்டை மாவட்டம்-ஆலங்குடி மற்றும் வேலூர் மாவட்டம்-சேர்க்காடு ஆகிய ஒன்பது இடங்களில் அமையவுள்ள அரசு இருபாலர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் அடங்கும். ஒவ்வொரு கல்லூரிக்கும் முதலாமாண்டிற்கு 17 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் மற்றும் 17 ஆசிரியரல்லா பணியிடங்கள் வீதம், 10 கல்லூரிகளுக்கு மொத்தம் 170 உதவி பேராசிரியர்கள் மற்றும் 170 ஆசிரியரல்லாப் பணியிடங்களை தோற்றுவித்தும், 2022-2023 ஆம் ஆண்டிற்கு தொடர் செலவினமாக ரூ.21.23 கோடி மற்றும் தொடரா செலவினமாக ரூ.3.60 கோடிக்கு நிர்வாக அனுமதி அளித்தும் அரசு ஆணையிட்டுள்ளது.

3.19. புதியதாக தொடங்கப்பட்ட அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு கட்டடம் கட்டுதல்

2020-2021 ஆம் கல்வியாண்டில் 10 அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அரசால் தொடங்கப்பட்டன. அவற்றுள், அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளான, தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில், இராணிப்பேட்டை மாவட்டம், ஜம்புகுளம் (சோளிங்கர்) மற்றும் தென்காசி மாவட்டம், ஆலங்குளம் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆகிய கல்லூரிகளுக்கு கட்டடம் கட்டுவதற்கு நிலம் தேர்வுசெய்யப்பட்டு 2021-2022 ஆம் நிதியாண்டில் ரூ.33.99 கோடி அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

[2022 ஏப்ரல் 11

3.20. அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

3.20.1. 48 அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களின் கல்விச் சூழலை மேம்படுத்தும்பொருட்டு, 7,500 இருக்கைகள் மற்றும் மேசைகளை தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து (TANSI) வாங்குவதற்கு 2021-2022 ஆம் நிதியாண்டில் ரூ.8.54 கோடி அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. அதே நிதியாண்டில், 68 அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு மாணாக்கர்களுக்கான 12,930 இருக்கைகள் மற்றும் மேசைகள், ஆசிரியர்களுக்கான 862 மேசைகள் மற்றும் 862 செராமிக் கரும்பலகைகளை தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து (TANSI) வாங்குவதற்கு அரசால் ரூ.16.21 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

3.20.2. தகவல் பரிமாற்றத்தில் தகவல்களை எளிமையாக பெறவும், சேமிக்கவும், தகவல்களை மீட்டெடுக்கவும், மின்னணு நூலகங்கள் உதவிபுரிகின்றன. இது மாணவர்களிடையே நூலகங்களைப் பயன்படுத்தும் ஆர்வத்தினைத் தூண்டுகிறது. இதனை கருத்தில் கொண்டு நூல்கள் பயிலும் ஆர்வத்தைத் தூண்டவும், அறிவுசார் மாணாக்கர் சமுதாயத்தை உருவாக்குவதற்கும், 10 அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் புதியதாக மின்னணு நூலகங்கள் துவங்கிட அரசு ஆணையிட்டுள்ளது. இதற்கென ரூ.93 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

3.20.3. 10 ஆண்டுகளுக்கு முன்னர் 17 அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மின்னணு நூலகங்கள் தொடங்கப்பட்டன. இம்மின்னணு நூலகங்கள் தொழில்நுட்ப அளவில் பின்தங்கி விட்டதால், தற்போதைய தொழில்நுட்ப வளர்ச்சி வேகத்திற்கேற்ப மாணவர்களால் விரும்பிய அளவில் அவற்றைப் பயன்படுத்த முடியவில்லை. எனவே, அம்மின்னணு நூலகங்களை மேம்படுத்தவும் மற்றும் உரிமங்களை புதுப்பிக்கவும் அரசால் ரூ.85 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

3.21. பேரிடர் மேலாண்மை மற்றும் தொற்றுநோய் கட்டுப்பாடு

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை வாயிலாக கடலோர பேரிடர் ஆபத்து குறைப்புத் திட்டத்தின்கீழ், பேரிடர் ஆபத்து குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்திட தேசிய

2022 ஏப்ரல் 11]

மாணவர் படை அலுவலர்கள் மற்றும் தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு பயிற்சி வழங்கிட ரூ.1.23 கோடி ஒப்பளிக்கப்பட்டது. இத்திட்டத்தினை செயல்படுத்த ஐந்து தேசிய மாணவர் படை அலுவலர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட்டது. 24 மாவட்டங்களில் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு வழங்குவதற்காக நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

கோவிட்-19 தொற்று தடுப்பு நடவடிக்கைகளுக்காக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, கல்லூரிக் கல்வித் துறைக்கு ரூ.60 இலட்சம் ஒப்பளித்துள்ளது. அரசுக் கல்லூரிகளில் முகக்கவசம் மற்றும் சுத்திகரிப்பான் வாங்குவதற்கு இத்தொகை முழுவதும் பயன்படுத்தப்பட்டது.

3.22. நாட்டு நலப் பணித் திட்டம்

அனைத்து உயர் கல்வி நிறுவனங்களிலும், மாணவர்களின் ஆளுமையினை மேம்படுத்துவதை முதன்மையாக கொண்டும், அவர்களை நல்வழிப்படுத்தவும், பல்வேறு நடவடிக்கைகள்மூலம் அவர்களின் மனிதநேயமிக்க பண்புகளை வளர்க்கவும், தேசிய ஒருமைப்பாடு, தேசபக்தி, சகோதரத்துவ மனப்பான்மை, தலைமைப் பண்பு, தன்னம்பிக்கை, சகிப்புத்தன்மை உள்ளிட்டவற்றை கொண்டவர்களாக வளர்த்தெடுக்கவும், அனைவரையும் சமூகப் பொறுப்புள்ள சிறந்த குடிமக்களாக உருவாக்கும் விதமாக சமத்துவ மற்றும் ஒருங்கமைந்த சமூக நலனுக்காகவும் நாட்டு நலப் பணித் திட்டம் சிறப்பாக இயங்கி வருகிறது.

TRUTH ALONE TRIUMPHS

[2022 ஏப்ரல் 11

4. பல்கலைக்கழகங்கள்

உயர் கல்வித் துறை ஆளுகையின்கீழ் பின்வரும் பல்கலைக்கழகங்கள் செயல்படுகின்றன:

1. சென்னை பல்கலைக்கழகம்
2. மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
3. அண்ணா பல்கலைக்கழகம்
4. பாரதியார் பல்கலைக்கழகம்
5. பாரதிதாசன் பல்கலைக்கழகம்
6. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்
7. அழகப்பா பல்கலைக்கழகம்
8. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
9. பெரியார் பல்கலைக்கழகம்
10. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்
11. திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
12. தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
13. அண்ணாமலை பல்கலைக்கழகம்

4.1. சென்னை பல்கலைக்கழகம்

4.1.1. சென்னை பல்கலைக்கழகம் 1857-ல் நிறுவப்பட்டது. இப்பல்கலைக்கழகம் அனைத்து தென்னிந்திய பல்கலைக்கழகங்களின் தாயாக விளங்குகிறது. இதன் இணைப்பு அதிகாரம் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் ஆகிய நான்கு மாவட்டங்களை வரம்பெல்லையாக கொண்டுள்ளது. 1900 ஆம் ஆண்டு முதல் சென்னை பல்கலைக்கழகமானது ஆராய்ச்சி மற்றும் முதுகலைப் பட்டப் படிப்புகளைக் கற்பிப்பதில் முழுமையாக ஈடுபட்டுள்ளது. இப்பல்கலைக்கழகத்தில், கற்பித்தல்

2022 ஏப்ரல் 11]

மற்றும் ஆராய்ச்சியை உள்ளடக்கிய 72 துறைகளும், 22 ஆராய்ச்சி மையங்களும் மற்றும் 131 இணைப்புக் கல்லூரிகளும் உள்ளன.

4.1.2. இப்பல்கலைக்கழகம் உயர் அங்கீகாரங்களைப் பராமரிப்பதன் தனித்துவத்தைக் கொண்டுள்ளது. 2014 ஆம் ஆண்டு தேசிய தர மதிப்பீட்டுக் குழு (National Assessment and Accreditation Council-NAAC) 'ஏ' தரத்தை வழங்கியுள்ளது. இப்பல்கலைக்கழகம் தர மதிப்பீட்டில் 4.00-க்கு 3.32 புள்ளிகளைப் பெற்றுள்ளது. தரப்படுத்தப்பட்ட தன்னாட்சியின்கீழ் பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவால் (UGC) 'சிறந்து விளங்கும் திறன் கொண்ட பல்கலைக்கழகம்' (University with Potential for Excellence) என்று அங்கீகரிக்கப்பட்டு இரண்டாம் நிலை தன்னாட்சித் தகுதியினை இப்பல்கலைக்கழகம் பெற்றுள்ளது.

4.1.3. தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பு 2021 (National Institutional Ranking Framework (NIRF) 2021)-ல் நாட்டின் சிறந்த பல்கலைக்கழகங்களில் சென்னை பல்கலைக்கழகம் 28 ஆவது இடத்தில் உள்ளது.

4.1.4. உயர் கல்வியை அனைவருக்கும் வழங்க 1981-ல் தொலைதூரக் கல்வி மையம் உருவாக்கப்பட்டது. இது, தற்போது 16 இளங்கலைப் படிப்புகள், 20 முதுகலைப் படிப்புகள், 10 பட்டயம்/ முதுகலைப் பட்டயப் படிப்புகள் மற்றும் இரண்டு சான்றிதழ் படிப்புகளை வழங்குகிறது.

4.1.5. பல்கலைக்கழக மானியக் குழுவின் இன்ஃப்லிப்நெட்டின் (INFLIBNET) மின்னணு தகவல் வைப்பகமான ஷோத்கங்காவில் (Shodhganga) முனைவர் பட்ட ஆய்வேடுகளைப் பதிவேற்றுவதில் 531 பல்கலைக்கழகங்களில் சென்னை பல்கலைக்கழகம் முதல் இடத்தில் உள்ளது.

4.1.6. ஸ்கோபஸால் பட்டியலிடப்பட்ட (SCOPUS INDEX) முன் மதிப்பாய்வு செய்யப்பட்ட இதழ்களில் சென்னைப் பல்கலைக்கழகம் 2,046 (2020 ஜூலை முதல் ஜூன் 2021 வரை) வெளியீடுகளை 157 எச்-இன்டெக்ஸ்களுடன் வெளியிட்டுள்ளது. சென்னை பல்கலைக்கழகம், தேசியக் கல்வி வைப்பகத்தில் (National Academic Depository-NAD) பட்டச் சான்றிதழ்கள் மற்றும் கல்வி சார் ஆவணங்களைப் பதிவேற்றும் பணியின்கீழ் இதுவரை 30,257 ஆவணங்களைப் பதிவேற்றியுள்ளது. மேலும், அனைத்து பட்டச் சான்றுகளையும் பதிவேற்றும் பணி நடைபெற்று வருகிறது.

[2022 ஏப்ரல் 11

4.1.7. ஒன்றிய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தால் ரூ.50 கோடி நிதியுதவியுடன் ரூசா 2.0 (RUSA 2.0) திட்டத்தின்கீழ் சென்னைப் பல்கலைக்கழகம் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆராய்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

4.1.8. சென்னை பல்கலைக்கழகத்தில் பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. அவை, i) ராமானுஜன் கணிதவியல் உயர் கல்வி நிறுவனம் மற்றும் மும்பை, ஹோமிபாபா தேசிய நிறுவனம் ஆகியவை இணைந்து கூட்டு ஆராய்ச்சியை மேம்படுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம், ii) அரிய புத்தகங்கள் மற்றும் ஆவணங்களை மின்னணுமயமாக்குவதற்கு சென்னை பல்கலைக்கழக நூலகம் மற்றும் சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகம் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தம், iii) புள்ளியியல் துறை மற்றும் இத்தாலி, நேபிள் பல்கலைக்கழகம், எல் ஓரியண்டேல் இணைந்து சிறப்புக் குறுகிய காலக் கல்வித் திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், iv) கணினி அறிவியல் துறை மற்றும் பெருங்குடி ICT அகாடமி இணைந்து புதிய பாடத் திட்டங்களை உருவாக்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், v) கிராமப்புற நிர்வாகத்தில் தொழில்முறை கல்வியை மேம்படுத்துவதற்காக, வணிகவியல் துறை மற்றும் ஹைதராபாத், ஒன்றிய அரசின், உயர் கல்வித் துறையின் மகாத்மா காந்தி தேசிய கிராமக் கல்விக் கழகத்துடன் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தம்.

4.1.9. பல்கலைக்கழக மாணவர் எண்ணிக்கை

சென்னை பல்கலைக்கழகத்தின், பல்கலைக்கழக துறைகளில் உள்ள முதுநிலை பட்டப் படிப்புகளில் உள்ள மாணவர் சேர்க்கை இடங்கள் 4,592 ஆகும். அவற்றில், இக்கல்வியாண்டில் 3,378 மாணாக்கர்கள் சேர்க்கை பெற்றுள்ளனர். இவற்றுள் 670 ஆதி திராவிடர், பழங்குடியினர்/பட்டியலின மாணவர்களும் அடங்குவர். பல்கலைக்கழகத் துறையில் உள்ள ஆய்வியல் நிறைஞர் பட்டம் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 103 ஆகும். பல்கலைக்கழக துறைகள், இணைவு பெற்ற கல்லூரிகள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களில் ஆராய்ச்சி படிப்புக்கென பதிவு செய்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை 3,267 ஆகும்.

2022 ஏப்ரல் 11]

4.2. மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

4.2.1. மதுரை காமராசர் பல்கலைக்கழகம், சென்னை பல்கலைக்கழகத்தின் முதுகலை விரிவாக்க மையமாகத் தொடங்கப்பட்டு 1965 ஆம் ஆண்டு மதுரை பல்கலைக்கழகம் மாநிலப் பல்கலைக்கழகமாக உயர்த்தப்பட்டது. 1979 ஆம் ஆண்டு மதுரை காமராசர் பல்கலைக்கழகம் எனப் பெயர் மாற்றப்பட்டு, பல ஆண்டுகளாக சீரிய வளர்ச்சியைப் பெற்று வருகிறது.

4.2.2. மதுரை காமராசர் பல்கலைக்கழகம் தேசியத் தர மதிப்பீட்டுக் குழு அங்கீகாரத்தின் 4 ஆவது சுழற்சியில் "A++" (சிஜிபிஏ மதிப்பீடு 3.54) அங்கீகாரம் பெற்றது. தற்பொழுது, இந்தியப் பல்கலைக்கழகங்களில் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் வகை-I என்னும் தகுதி நிலையினைப் பெற்றுள்ளது. 2021 இல் மதுரை காமராசர் பல்கலைக்கழகம், இந்தியாவில் உள்ள 1657 பல்கலைக்கழகங்களில் 63 ஆவது இடத்தையும் , 2021 தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பின் 83 ஆவது இடத்தையும் பெற்றுள்ளது.

4.2.3. மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 54 முதுகலை, 41 ஆய்வு நிறைஞர், 51 முனைவர் பட்டப் படிப்புகளையும் மற்றும் 18 பட்டய/முதுகலை பட்டயப் படிப்பு/சான்றிதழ் படிப்புகளையும் வழங்கி வருகிறது. தற்போது 3,155 இளங்கலை, முதுகலை மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள் பயின்று வருகின்றனர். 2020-2021 ஆம் ஆண்டில் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் 175 மாணவர்கள் வேலை வாய்ப்பினை பெற்றுள்ளனர்.

4.2.4. இப்பல்கலைக்கழகத்தில் ஐம்பத்தேழு ஆசிரியர்கள் பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச நிதியுதவி நிறுவனங்களால் ரூ.23 கோடி மதிப்பிலான, ஆராய்ச்சிக்கான நிதியினைப் பெற்றுள்ளனர். ஏழு ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் இப்போது மதிப்புமிக்க மூத்த ஆய்வு உதவித் திட்டங்களான INSA, UGC-BSR, DAE-கீழ் ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.

4.2.5. புதுதில்லியிலுள்ள ரூரல் எலக்ட்ரிஃபிகேஷன் கார்ப்பரேஷன் லிமிடெட் (RECL), ரூ.7.25 கோடியில் இப்பல்கலைக்கழக வளாகத்திற்குள் 1 மெகாவாட் சூரிய மின் நிலையத்தை நிறுவியுள்ளது.

[2022 ஏப்ரல் 11

4.2.6. தமிழக அரசின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் 8.10.2021 அன்று ரூ.59.52 இலட்சம் மதிப்பில் மாநிலப் பேரிடர் நிவாரண நிதியின் (SDRF) திறன் மேம்பாட்டுக் கூறுகளின்கீழ், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், தேசிய மனநலம் மற்றும் நரம்பியல் அறிவியல் நிறுவனம், பெங்களூரு, மதுரையிலுள்ள எம்.எஸ். செல்லமுத்து ஆராய்ச்சி அறக்கட்டளை ஆகியவை இணைந்து "கோவிட்-19-ன்போது உளவியல் பராமரிப்பு" தொடர்பான கூட்டுத் திட்டத்தை நடத்தியது.

4.2.7. பல்கலைக்கழக மானியக் குழு, 15.11.2021 அன்று மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திலுள்ள "உயிரியல் அறிவியல் இணையதளத் தரவக மையத்திற்கு" இரண்டாம் கட்டமாக ஐந்தாண்டுகளுக்கு ரூ.10 கோடியை அனுமதித்து உள்ளது. ரூ.3 கோடியில், இந்தத் திட்டத்தின்கீழ், உயிர் அறிவியல் புலத்தில் மதுரை காமராசர் பல்கலைக்கழக பகுதியிலுள்ள ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் ஆராய்ச்சிப் பணிகளைத் திறம்படச் செய்ய (Networking Resourcing Centre in Biological Sciences) ஊக்குவிக்கிறது.

4.2.8. ரூசா 2.0 திட்டத்தின்கீழ் ரூ.15 கோடியில் 'தொழில் முனைவோர், கண்டுபிடிப்பு மற்றும் தொழில் மையத்தை' மாணவர்களின் பயன்பாட்டிற்காக 300 கணினிகளுடன்கூடிய உலகத்தரம் வாய்ந்த கணினி மற்றும் வெளிநாட்டு மொழி ஆய்வகம் நிறுவப்பட்டுள்ளது.

4.2.9. ரூசா 2.0 நிதியுதவியுடன், ரூ.3.30 கோடி மதிப்பில் ரூசா திட்டத்தின்கீழ் உதவித்தொகை பெறப்பட்டு அதிநவீன டிஎன்ஏ ஆய்வகத்தை நிறுவியுள்ளது.

4.2.10. DST-PURSE (Phase II) திட்டத்தின்கீழ், Biosafety Level (BSL)-III வசதி எச்.ஐ.வி., மைக்கோபாக்டீரியம் மற்றும் கோவிட்-19 உள்ளிட்ட அபாயகரமான நோய்க்கிருமி மருத்துவ மாதிரிகள்மூலம் மேம்பட்ட ஆராய்ச்சி செய்ய ரூ.90 இலட்சம் மதிப்பீட்டில் ஆய்வகத்தை நிறுவியுள்ளது.

4.2.11. மதுரை காமராசர் பல்கலைக்கழக தொலைதூரக் கல்வி இயக்ககம் (DDE) வழங்கும் அனைத்து படிப்புகளுக்கும் நிறுவன வள திட்டமிடுதல் அடிப்படையிலான இணையவழி சேர்க்கை தளத்தை உருவாக்கி அறிமுகப்படுத்தியுள்ளது.

2022 ஏப்ரல் 11]

4.2.12. நாட்டிலுள்ள 16 பல்கலைக்கழகங்களில் ஒன்றாக மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தை பல்கலைக்கழக மானியக் குழு தேர்வு செய்து 'Scheme for Trans-disciplinary Research for India's Developing Economy' திட்டத்தின்கீழ் செயல்பட மானியமாக ரூ.1 கோடி அனுமதித்துள்ளது.

4.2.13. மதுரை காமராசர் பல்கலைக்கழக டாக்டர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் நூலகம், தமிழ்நாடு பொது நூலக இயக்குநரகத்தின் ஆதரவுடன் 60 ஆண்டுகளுக்கு முன் வெளியிடப்பட்ட தமிழ் மற்றும் ஆங்கில இலக்கியங்களில் 1,243 அரிய நூல்களை மின்னணுமயமாக்கியுள்ளது.

4.2.14. மதுரை காமராசர் பல்கலைக்கழக வேதியியல் புலத்திலுள்ள இயற்கைப் பொருட்களின் வேதியியல் துறையானது, தொழில் துறை உலோக முடிப்பு (Industrial Metal Finishing) என்னும் தனித்துவமான முதுகலை பட்டயப் படிப்பினை வழங்குகிறது. இப்படிப்பினை முடித்த மாணவர்கள் அனைவரும் தானியங்கி வாகனத் துறையில் சேர்ந்து சிறந்து விளங்குகின்றனர்.

4.3. அண்ணா பல்கலைக்கழகம்

4.3.1. இந்தியாவின் தொழில்நுட்ப பல்கலைக்கழகங்களில் மிகப் பெரிய முன்னோடி பல்கலைக்கழகமாக தொடர்ந்து திகழ்ந்து வருகிறது. 1794 ஆம் ஆண்டு மே 17 ஆம் தேதி, செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு அருகிலுள்ள கட்டடத்தில் எட்டு சிறுவர்களுடன் ஒரு நிலஅளவீடு பள்ளி தொடங்கப்பட்டது. இந்த நில அளவீடு பள்ளி பொறியியல் கல்லூரியாக மேம்படுத்தப்பட்டது, பின்னர் அது அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரி, சென்னை தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் கட்டடக் கலை மற்றும் திட்டமிடுதல் பள்ளி ஆகிய கல்வி நிறுவனங்களுடன் இணைந்து 1978 இல் அண்ணா பல்கலைக்கழகமாக உருவானது.

4.3.2. இப்போது, இது இணைவு பல்கலைக்கழகமாக இருப்பதால், மாநி லத்தில் உள்ள அனைத்து பொறியியல் கல்லூரிகளையும் தன து குடையின்கீழ் கொண்டுள்ளது. இப்பல்க லைக்கழ கத்தின்கீழ் 13 உறுப்புக் கல்லூரிகள், திருநெல்வேலி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் மூன்று மண்டல வளாகங்கள் மற்றும் 553 அரசு, அரசு உதவிபெறும் ம ற்றும் சுயநிதிக் கல்லூரிகள் இணைவுபெற்று செயல்படுகிறது.

[2022 ஏப்ரல் 11

அண்ணா பல்கலைக்கழக துறைகளில் வழங்கப்பெறும் 28 இளநிலை மற்றும் 78 முதுநிலை படிப்புகளில், 10,975 மாணாக்கர்களும் இணைப்புக் கல்லூரிகளில் நடத்தப்பெறும் 47 இளநிலை மற்றும் 63 முதுநிலை படிப்புகளில் 2,92,470 மாணாக்கர்களும் தொலைநிலை கல்வியில் 3,004 முதுநிலை மாணவர்கள் பயின்று வருகின்றனர். மேலும் அண்ணா பல்கலைக்கழகத் துறைகளில், 2,267 ஆராய்ச்சி மாணவர்களும் மற்றும் இணைவுபெற்ற கல்லூரிகளில் 10,992 ஆராய்ச்சி மாணவர்களும் பயின்று வருகின்றனர்.

4.3.3. அண்ணா பல்கலைக்கழகம் தேசிய நிறுவனங்களின் தரவரிசை கட்டமைப்பு 2021 (NIRF–2021) தர வரிசையில், பல்கலைக்கழகங்களுக்கிடையே 16-வது இடத்திலும், கட்டடக் கலை கல்வி நிறுவனங்களில் 22-வது இடத்திலும், பொறியியல் கல்வி நிறுவனங்களில் 18-வது இடத்திலும், ஒட்டுமொத்தப் பிரிவில் 25-வது இடத்திலும், மேலாண்மைப் பிரிவில் 57-வது இடத்திலும் உள்ளது. உலகின் மிகப் பெரிய சக மதிப்பாய்வு செய்யப்பட்ட இலக்கியத் தொகுப்பின் அடிப்படையில், குவாக்கரேலி சைமண்ட்ஸ் குறியீடு (QS Index) தரவரிசை 2021 பட்டியலில் அண்ணா பல்கலைக்கழகம் உலகளவில் 801-1000-க்கு இடையிலும், ஆசிய அளவில் 196-வது இடத்தையும் பிடித்துள்ளது.

4.3.4. அண்ணா பல்கலைக்கழகம், 1,67,433 மேற்கோள்களை கொண்ட 29,048 வெளியீடுகளுடன் ஸ்கோபஸ் தரவுத்தளத்தின்படி "h" குறியீட்டில் 111 குறியீடுகளை நாளது தேதி வரை பெற்றுள்ளது. வெளியீடு மற்றும் மேற்கோள்கள் அடிப்படையில், மாநில நிதியுதவி பெறும் பல்கலைக்கழகங்களில் நாட்டிலேயே முதல் இடத்தைப் பிடித்தது.

4.3.5. அண்ணா பல்கலைக்கழக எம்.ஐ.டி. வளாகத்தில் உள்ள விண்வெளி மையம், மெஹர் பாபா போட்டியில் பங்கேற்று, 25 அக்டோபர், 2021 அன்று சிறந்த ட்ரோன் கட்டடக் கலைக்கான விருதைப் பெற்றது. போட்டியின் முக்கிய நோக்கம் ஸ்வார்ம் ட்ரோன் தொழில்நுட்பத்தை, இந்திய எல்லைப் பாதுகாப்புப் படைக்கு பயன்படுத்துவதாகும். அத்தகைய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஆளில்லா வான்வழி வாகனங்களை (UAV) இந்திய விமானப் படைக்கு வடிவமைப்பது தொடர்பாக இந்திய விமானப் படையுடன் கலந்தாலோசித்து வருகிறது.

2022 ஏப்ரல் 11]

4.3.6. அண்ணா பல்கலைக்கழகத்தின் மெட்ராஸ் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜியில் அமைந்துள்ள வான்வழி ஆராய்ச்சி மையத்தில் (CASR), ரிமோட் பைலட் விமான பயிற்சியை (RPTO) நடத்துவதற்கு 2021 ஆம் ஆண்டு மே 27 ஆம் தேதி அன்று சிவில் ஏவியேஷன் டைரக்டர் ஜெனரலால் (DGCA) அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான பயிற்சி நாட்டிலேயே முதன்முறையாக இப்பல்கலைக்கழகத்தில் தொடங்கப்பட்டுள்ளது. முதல் தொகுதியில் ரிமோட் பைலட் விமான பயிற்சிக்கு 16 மாணவர்கள் சேர்க்கப்பட்டு, தங்களது பயிற்சியை வெற்றிகரமாக முடித்துள்ளனர்.

4.3.7. மெட்ராஸ் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி வளாகம் மற்றும் கிண்டி பொறியியல் கல்லூரி வளாகத்தில் உள்ள தொழில்முனைவோர் மேம்பாட்டு மையத்தில் மேக்கர்ஸ் கூடம் நிறுவப்பட்டுள்ளது.

4.3.8. எம்பாசிஸ் லிமிடெட், அமெரிக்கன் மெகாடிரன்ட்ஸ் சர்வதேச இந்தியா பிரைவேட் லிமிடெட் மற்றும் இட்டாச்சி வந்த்ரா ஆகிய நிறுவனங்கள், பிரத்யேகமாக 16 பல்கலைக்கழக பொறியியல் கல்லூரிகளின் மாணவர்களை வேலைவாய்ப்பிற்கு தெரிவு செய்ய ஒப்புதல் வழங்கியுள்ளது. 2021-2022 ஆம் ஆண்டில் பல்வேறு பல்கலைக்கழக பொறியியல் கல்லூரிகளிலிருந்து 98 மாணவர்களை எம்பாசிஸ் நிறுவனம் தேர்வு செய்துள்ளது. மற்ற இரண்டு நிறுவனங்களும் மாணவர்களை தேர்வு செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளன.

4.3.9. ஆராய்ச்சி முடிவுகளின் அடிப்படையில் அண்ணா பல்கலைக்கழகம் 18 காப்புரிமைகளை பெற்றுள்ளது மற்றும் 5 காப்புரிமைகளை பெறுவதற்கு கடந்த கல்வியாண்டில் விண்ணப்பித்துள்ளது.

4.3.10. ஒன்றிய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மேம்பாடு நிதிகள் (FIST) திட்டத்தின்கீழ் அண்ணா பல்கலைக்கழகத்தின் எட்டு துறைகளுக்கு ரூ.8.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, செயல்பாட்டில் இருந்து வருகிறது.

4.3.11. ஒன்றிய அரசின், உயிர் தொழில்நுட்பத் துறையின்மூலம், சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தின் உயிர் தொழில்நுட்ப

[2022 ஏப்ரல் 11

மையத்தின், "கட்டமைப்பு தகவல் மற்றும் வேதியியல் உயிரியல்-BIC" என்ற திட்டத்திற்காக, ஐந்து ஆண்டுகளுக்கு ரூ.1.99 கோடி நிதி 31.12.2021 அன்று வழங்கப்பட்டுள்ளது.

4.3.12. அண்ணா பல்கலைக்கழகத்தின் நானோ அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையமானது, இந்திய-ஜப்பான் கூட்டுத் திட்டத்தின்கீழ் "அதிக வெப்பநிலை தெர்மோஸ் மின்சார பயன்பாடுகளுக்கான குறைக்கடத்தி பொருட்களின் வளர்ச்சி செயல்முறை மற்றும் குறைபாடுகள் பற்றிய ஆய்வுகள்" என்ற திட்டத்தினை இரண்டு ஆண்டுகளுக்கு 2021 முதல் 2023 வரை இந்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையிடமிருந்து பெற்றுள்ளது.

4.3.13. அண்ணா பல்கலைக்கழகத்தின் நெசவு தொழில்நுட்பத் துறை, பாலியஸ்டர் துணியை அடிப்படையாகக் கொண்டு, 3.0 மைக்ரான் மற்றும் அதற்கு மேற்பட்ட அளவிலான துகள்களை வடிகட்டுவதற்காக மறுபயன்பாட்டு முகக்கவசத்தை உருவாக்கியுள்ளது.

4.3.14. அண்ணா பல்கலைக்கழகத்தால் தானியங்கி வெளிப்புற டெபிபிரிரேலட்டரின் (AED) வடிவமைப்பு மற்றும் வலை அமைப்பிலான ஆடியோ மீட்டர் உருவாக்கப்பட்டது. இதற்கு இந்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை நிதியளித்துள்ளது.

4.3.15. இந்திய அறிவியல் கழகம் (IISc), பெங்களூரு மற்றும் சிஎம்சி (CMC), வேலூர் ஆகியவற்றுடன் இணைந்து குழந்தைகளின் பாத குறைபாட்டினை சீர்படுத்தும் சிகிச்சைக்கான கருவியை பல்கலைக்கழகம் உருவாக்கியுள்ளது. இதற்கு இந்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை நிதியளித்துள்ளது.

4.3.16. இளம் மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களிடையே பயன்பாட்டு ஆராய்ச்சி மற்றும் தேவை சார்ந்த (சமூகம் அல்லது தொழில் துறை) தொழில்முனைவோர் கண்டுபிடிப்புகளின் கலாச்சாரத்தை மேம்படுத்தும் நோக்கில் E-YUVA திட்டம் செயல்படுகிறது. இத்திட்டத்திற்காக, மூன்றாண்டுகளுக்கு ரூ.2.36 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் முதல் ஆண்டுக்கு ரூ.38.38 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

4.3.17. பல்கலைக்கழக மானியக் குழு-ஜெர்மனியின் கல்வி பரிமாற்றக் (DAAD) குழுவுடன் இணைந்து, தேர்ந்தெடுக்கப்பட்ட

2022 ஏப்ரல் 11]

நகர்ப்புரங்களில் நிலத்தடி நீர் நிலைத்தன்மையின்மீது மண்டல காலநிலை மாற்றத்தின் தாக்கம் என்ற தலைப்பிலான இந்தோ-ஜெர்மன் கூட்டாண்மை திட்டத்திற்காக, அண்ணா பல்கலைக்கழகத்திற்கு, ஜெர்மனியின் பெர்லினிலுள்ள ஃப்ரீ பல்கலைக்கழகத்துடன் இணைந்து நான்கு வருட காலத்திற்கு ரூ.2.05 கோடி நிதியுதவி அளித்துள்ளது.

4.4. பாரதியார் பல்கலைக்கழகம்

4.4.1. பாரதியார் பல்கலைக்கழகம் 1982 ஆம் ஆண்டு ஒன்பது துறைகளுடன் தொடங்கப்பட்டது. தற்போது பல்கலைக்கழகம் 38 துறைகளை உள்ளடக்கி 14 புலங்களைக் கொண்டிருக்கிறது. இத்துறைகள் மூலமாக 54 முதுநிலை மற்றும் மூன்று இளநிலைப் பட்டப் படிப்புகளும், முனைவர் மற்றும் ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆராய்ச்சிப் படிப்புகளும் நடத்தப்படுகின்றன. நடப்புக் கல்வியாண்டில் (2021-2022) 2,649 முதுநிலை மாணவர்கள், 324 இளநிலைப் பட்ட மாணவர்கள், 48 ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வாளர்கள் மற்றும் 734 முனைவர் பட்ட ஆய்வாளர்கள் பயின்று வருகின்றனர்.

4.4.2. பாரதியார் பல்கலைக்கழகம் தேசியத் தர மதிப்பீட்டுக் குழுவின் மதிப்பீட்டில் (NAAC) தொடர்ச்சியாக மூன்றாம் சுற்றில் 'A' தகுதி பெற்றுள்ளது.

4.4.3. 2021 ஆம் ஆண்டில் பாரதியார் பல்கலைக்கழகம், இந்திய அரசின் கல்வியமைச்சகத்தின் இந்தியப் பல்கலைக்கழக அளவிலான தரவரிசையில் 14-வது இடத்தையும், தேசிய நிறுவனங்களின் தரவரிசை கட்டமைப்பில் (NIRF) 22-வது இடத்தையும், ஒட்டுமொத்த ஆராய்ச்சி வரிசையில் 23-வது இடத்தையும் பெற்றுள்ளது. உலகப் பல்கலைக்கழகங்களின் தரவரிசையில் பாரதியார் பல்கலைக்கழகம் 801 முதல் 1000-க்கு இடைப்பட்ட இடத்தையும், இந்திய அளவில் 18-வது இடத்தையும் உலக இளம் பல்கலைக்கழக வரிசையில் இங்கிலாந்தின் டைம்ஸ் (TIMES) உயர் கல்வி மதிப்பீடு அடிப்படையில் 231–300 வரிசையிலும் 2022 ஆம் ஆண்டில் நிலைப்படுத்தப்பட்டுள்ளது.

4.4.4. பல்கலைக்கழகத் துறைகளில் கல்விசார் மேம்பாட்டிற்காகச் சிறப்பு நிதியுதவித் திட்டம் (SAP), பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு வழங்கும் குறிப்பிட்ட துறையிலான திறன் மேம்பாட்டு மைய

[2022 ஏப்ரல் 11

(CPEPA) நிதி மற்றும் ஒன்றிய அரசின் அறிவியல் தொழில்நுட்பத் துறையின் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி நிதி (DST-FIST) ஆகியவை பாரதியார் பல்கலைக்கழகத்தால் பெறப்பட்டுள்ளன.

4.4.5. பாரதியார் பல்கலைக்கழகம் மூன்று காப்புரிமைகள் பெற்றுள்ளது. மேலும், 15 காப்புரிமைகளுக்குப் பதிவு செய்துள்ளது.

4.4.6. பாரதியார் பல்கலைக்கழகம் RUSA நிதியுதவி மூலமாக பாரதியார் தொழில்முனைவோர், புத்தாக்க வேலைவாய்ப்பு மையம், பாரதியார் புற்றுநோய் ஆராய்ச்சி மையம் ஆகியவற்றை தொடங்கியுள்ளது.

4.4.7. இந்திய தேசியக் கவியான மகாகவி பாரதியாரின் பெயரிலுள்ள இப்பல்கலைக்கழகம் அவருக்கு மரியாதை செய்யும் வகையில் மகாகவி பாரதியார் உயராய்வு மையம் ஒன்றினை உருவாக்கி பாரதியின் வாழ்வியல் மற்றும் படைப்பியல் சாதனைகளை வெளிப்படுத்தி வருகிறது.

4.4.8. பாரதியார் நினைவு நூற்றாண்டு விழா மற்றும் 75-வது இந்தியச் சுதந்திரப் பெருவிழாவின் அங்கமாக 'பாரதி கவிக்குரல் மணிக்கூண்டு' உருவாக்கப்பட்டு வருகிறது. மேலும், இவ்விழாவின் ஓர் அங்கமாக மகாகவி பாரதியார் அருங்காட்சியகம் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

4.4.9. நமது பழமையான பாரம்பரிய மூலிகை மருத்துவத்தைப் பாதுகாக்கும் நோக்கோடு பல்கலைக்கழகம் மூலிகைத் தோட்டம் ஒன்றினை உருவாக்கியுள்ளது.

4.5. பாரதிதாசன் பல்கலைக்கழகம்

4.5.1. புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் பெயரில் 1982 ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது. பாவேந்தர் பாரதிதாசனின் கவிதையில் இருக்கும் "புதியதோர் உலகம் செய்வோம்" என்னும் அடியினை இலச்சினை மொழியாகக் கொண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகம் செயல்படுகிறது.

4.5.2. இப்பல்கலைக்கழகத்தில் நான்கு புலங்கள், 16 பள்ளிகள், 37 துறைகள், அண்மையில் தொடங்கப்பட்ட "பாரதியார் இருக்கை"

2022 ஏப்ரல் 11]

உட்பட 30 சிறப்பு ஆய்வு மையங்கள், உள் தர மதிப்பீட்டு மையம், அறிவுசார் சொத்துரிமைகள் மையம், பாலியல் வன்கொடுமைத் தடுப்பு மையம் உள்ளிட்ட 12 மையங்கள், பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் நிதியுதவியுடனான மனிதவள மேம்பாட்டு மையம் உட்பட அனைத்து வளங்களுடன் இயங்கும் 10 மையங்கள் உள்ளன.

4.5.3. 2021 ஆம் கல்வியாண்டில் தேசிய நிறுவன தரவரிசைக் கட்டமைப்பு (NIRF) தரவரிசையில் பாரதிதாசன் பல்கலைக்கழகம் இந்தியப் பல்கலைக்கழக அளவில் 57-வது இடத்தையும் தமிழகப் பல்கலைக்கழக அளவில் 5-வது இடத்தையும் பெற்றுள்ளது. இப்பல்கலைக்கழகம், தேசியத் தர மதிப்பீட்டுக் குழுவின் திருத்தியமைக்கப்பட்ட நெறிமுறைகளின் அடிப்படையில் "A+" தரத்தினைப் பெற்ற முதல் மாநிலப் பல்கலைக்கழகமாகும். இப்பல்கலைக்கழகத்தில் நேரற்ற இயக்கவியலைத் தம் சிறப்புக் களமாகக் கொண்டு செயல்படும் சிறப்புநிலைப் பேராசிரியர் முனைவர் எம். இலட்சுமணன் என்பவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் விருதினை பெற்றுள்ளார்.

4.5.4. இப்பல்கலைக்கழகத்தின் தொழில்முனைவு மற்றும் தொழில் மையம் ரூசா (RUSA) 2.0 திட்டத்தின்கீழ் 2021-2022 ஆம் கல்வியாண்டில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான நிகழ்வுகளை நடத்தியுள்ளது. அவற்றுள் 42 இணையவழி நிகழ்வுகள், ஏழு தொழில் நிறுவனச் சந்திப்புகள் ஆகியன அடங்கும். இவற்றின் வாயிலாக 4,000 மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர்.

4.5.5. இணைவு பெற்ற நிறுவனங்களும் இணைவு பெற்ற கல்லூரிகளும் இணைந்து இப்பல்கலைக்கழகத்தின் தொழில்முனைவோர் சுய வேலை மேம்பாட்டு நிறுவனத்தில் திறன் மேம்பாட்டுப் படிப்புகளை நடத்தியுள்ளன. இதில் 29,670 மாணவர்கள் சேர்ந்து பயன்பெற்றுள்ளனர்.

4.5.6. மிகச் சிறந்த தமிழ்க் கவிஞரான மகாகவி பாரதியாருக்கு மதிப்பளிக்கும் வகையில் 2021, டிசம்பர் 11 அன்று பாரதியார் பிறந்தநாள் விழா கொண்டாட்டத்தின்போது பாரதியார் இருக்கை தொடங்கப்பட்டது.

[2022 ஏப்ரல் 11

4.6. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்

4.6.1. அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற புனித அன்னை தெரசா அவர்களின் பெயரால் இயங்கும் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், பெண் கல்வியை மேம்படுத்தும் ஒரு சிறந்த கல்வி நிலையமாக விளங்குகிறது. 1984 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இப்பல்கலைக்கழகம், மாநிலத்திலேயே ஒரே ஒரு மகளிர் பல்கலைக்கழகம் என்ற பெருமையையும், இந்திய அளவில் மூன்றாவதாகவும் மகளிருக்காக மகளிரால் நிர்வகிக்கப்படுகிற பல்கலைக்கழகம் என்ற தனித்தன்மையுடன் செயல்பட்டு வருகிறது. பெண்களுக்காக கொடைக்கானலில் அமைந்துள்ள இப்பல்கலைக்கழகம் பெண் ஆர்வலர்களுக்கு கல்வி மற்றும் ஆராய்ச்சி முயற்சிகளுக்கு உகந்த சூழலை வழங்கி வருகிறது.

4.6.2. "சரி நிகர் சமானத்தை நோக்கி" என்பது இப்பல்கலைக்கழகத்தின் குறிக்கோள் ஆகும். 'கல்வியின்மூலம் பெண்கள் மேம்பாடு' என்ற உயரிய நோக்குடன் இணைந்து, சமத்துவ சமுதாயத்தை உருவாக்கும் இலக்குடன் செயல்பட்டு வருகிறது.

4.6.3. இப்பல்கலைக்கழகத்தில் 16 துறைகளும், சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் முதுகலை மற்றும் ஆய்வு விரிவாக்க மையங்களும், திண்டுக்கல் மாவட்டம், பள்ளப்பட்டியில் உள்ள சிப்காட் வளாகத்தில் மகளிர் மேம்பாட்டு மையமும் உருவாக்கப்பட்டுள்ளன. இப்பல்கலைக்கழகத்தில் 13 இணைவு பெற்ற கல்லூரிகள் உள்ளன. அவற்றில், மூன்று அரசுக் கல்லூரிகள், இரண்டு அரசு உதவிபெறும் கல்லூரிகள், ஓர் உறுப்புக் கல்லூரி மற்றும் ஏழு சுய நிதிக் கல்லூரிகள் அடங்கும்.

4.6.4. தேசியத் தர மதிப்பீட்டுக் குழுவின் மூன்றாம் சுழற்சியில் 'A' கிரேடு அங்கீகாரம் பெற்றுள்ளது. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் EDII-ன்கீழ் செயல்படும் மையமாக தேர்ந்தெடுக்கப்பட்டது. மேலும், நபார்டு நிதியுதவியுடன்கூடிய ஊரக வளர்ச்சித் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

4.6.5. பல்கலைக்கழகத்திலுள்ள துறைகளால் உயர் கல்வியின் தரத்தை உயர்த்தவும் தற்போதைய சூழலுக்கு ஏற்பவும் ஐந்து சர்வதேச, இரண்டு ஒன்றிய, ஆறு மாநில அளவிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டது.

2022 ஏப்ரல் 11]

4.6.6. NSS/YRC/Rotaract/Swachh Pakhwada/பெண்கள் ஆய்வு மையம்/காந்திய ஆய்வுகளுக்கான மையம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து சமூக அதிகாரம் மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கான நலன் மற்றும் விழிப்புணர்வுத் திட்டங்களைத் தொடர பல பழங்குடியின கிராமங்கள் தத்தெடுக்கப்பட்டுள்ளன.

4.6.7. இப்பல்கலைக்கழகம் புதுமையான ஆராய்ச்சி மற்றும் தொடக்க அமைப்புகளுக்கான மையத்தை உருவாக்கியுள்ளது. மேலும், குழந்தைகளுக்கான நூலகம், புதுமை நூலகம் ஆகியவற்றை உருவாக்கியுள்ளது.

4.6.8. SCOPUS/Web of Science/UGC/Pub-Med ஆகியவற்றில் பல்கலைக்கழக ஆசிரியர்களால் 83 ஆய்வுக் கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன. தேசிய/சர்வதேச அளவில் கருத்தரங்கு/மாநாடு/இணையவழி கருத்தரங்கில் 112 கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

4.6.9. ஆராய்ச்சி முறை, அறிவுசார் சொத்துரிமைகள் (IPR), தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றில் 17 பயிற்சி பட்டறைகள்/கருத்தரங்கங்கள் நடத்தப்பட்டன.

4.7. அழகப்பா பல்கலைக்கழகம்

4.7.1. அழகப்பா பல்கலைக்கழகம் சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் 1985 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் 4 புலங்கள், 44 துறைகள், 10 இயக்குநரகங்கள் மற்றும் மையங்கள், மூன்று பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. மேலும், சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் ஆகிய இரண்டு மாவட்டங்களை வரம்பெல்லையாகக் கொண்டுள்ளது. அனைத்து வழிமுறைகளிலும் தரமான கல்வியை வழங்குவதே இப்பல்கலைக்கழகத்தின் முக்கிய நோக்கமாகும்.

4.7.2. பல்கலைக்கழகத் துறைகள் வாயிலாக 203 பட்டப் படிப்புகளையும், இணைவுக் கல்லூரிகள்மூலம் 117 பட்டப் படிப்புகளையும் தொலைநிலைக் கல்வி வாயிலாக 75 பட்டப் படிப்புகளையும், இணைந்த கல்வி முறையின்கீழ் 146 பட்டப் படிப்புகளையும் வழங்கி வருகிறது. ஏறத்தாழ 1.20 இலட்சம்

[2022 ஏப்ரல் 11

மாணவர்கள் மேற்குறிப்பிட்ட கல்வி முறையின் வாயிலாக உயர் கல்வி பயின்று வருகிறார்கள்.

4.7.3. அழகப்பா பல்கலைக்கழகம், 2017 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத் தர மதிப்பீட்டில் 'A+' தகுதியைப் பெற்றுள்ளது. ஒன்றிய கல்வித் துறையால் வழங்கப்பட்ட தேசிய நிறுவன தரக் கட்டமைப்பின் (NIRF)-2021 தரப் பட்டியலில் 33 ஆம் இடத்தைப் பெற்றுள்ளது.

4.7.4. QS (Quacquarelli Symonds) உலகப் பல்கலைக்கழக தரவரிசைப்படுத்தும் நிறுவனத்தின் 2022 மதிப்பீட்டில், 107 இந்திய பல்கலைக்கழகங்கள் தரவரிசைப்படுத்தலில், அழகப்பா பல்கலைக்கழகம் 23-வது இடத்தில் இருப்பதும், தமிழக பல்கலைக்கழகங்களில் முதலிடத்தில் இருப்பதும் சிறப்பானதாகும்.

4.7.5. ஒன்றிய அரசின், கல்வித் துறையின்கீழ், 2021 ஆம் ஆண்டு ARIIA (Atal Ranking of Institutions on Innovation Achievement) தர வரிசையில் அழகப்பா பல்கலைக்கழகம் 'தொழில்நுட்பம் அல்லாத பொதுப் பிரிவின்கீழ் செயலாக்க' (Performer) அங்கீகாரம் பெற்றுள்ளது. மேலும், ஒன்றிய அரசின் கல்வித் துறையின் "புத்தாக்க மையம்" (Innovation Cell), 2020-2021 ஆம் ஆண்டில் மாணவர்களுக்கு புத்தாக்கம், கண்டுபிடிப்பு மற்றும் தொழில்முனைவோர் பயிற்சி அளித்தல் ஆகிய செயல்பாடுகளின் அடிப்படையில் அழகப்பா பல்கலைக்கழகத்தின் 'தொழில் புத்தாக்கம் மற்றும் உருவாக்க மையத்திற்கு' (Innovation and Invention Cell) 5-க்கு 3.5 நட்சத்திர மதிப்புடன் அங்கீகாரம் அளித்துள்ளது.

4.7.6. அழகப்பா பல்கலைக்கழகத்தில் உயிரித் தகவலியல் துறையில் 'உயிரித் தகவலியல் மையத்தினை' தொடங்கி, அதன்மூலம், வரும் ஐந்து ஆண்டுகளில் உயர் ஆய்வு மேற்கொள்வதற்காக ரூ.1.83 கோடி வழங்கியுள்ளது.

4.7.7. கென்யா, ஸ்ரீலங்கா, தென்னாப்பிரிக்கா மற்றும் வங்காள தேசம் போன்ற வெளி நாடுகளிலிருந்து 10 மாணவர்கள், ஒன்றிய அரசின் கலாச்சார உறவு மேம்பாட்டு மையத்தின் நிதியுதவியுடன், (ICCR–Indian Council for Cultural Relations) அழகப்பா பல்கலைக்கழகத்தில் 2021-2022 ஆம் கல்வியாண்டில் உயர் கல்வி பெறுவதற்காக சேர்ந்துள்ளனர். மேலும், வரும் கல்வி

2022 ஏப்ரல் 11]

ஆண்டில் கூடுதல் எண்ணிக்கையிலான அயல்நாட்டு மாணவர்கள் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளது.

4.7.8. அழகப்பா பல்கலைக்கழகத்தில் ரூசா நிலை *2.0* திட்டத்தின்கீழ், சமூக அறிவியல் வளாகம், கல்வியியல் அறிவியல் வளாகம், பல்கலைக்கழக அறிவியல் ஆய்வு உபகரணங்கள் மைய வளாகம், தகவல் தொழில்நுட்ப வளாகம், மகளிர் விடுதி மற்றும் உள்விளையாட்டு அரங்கம் ஆகிய ஐந்து புதிய கல்விக் கட்டடங்கள் ரூ.*14.50* கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பெற்று, முழுப் பயன்பாட்டில் உள்ளன. மேலும், ரூ.*7.75* கோடி மதிப்பில் NMR மற்றும் DNA Sequencer ஆகிய இரண்டு உயர்தர ஆய்வு உபகரணங்கள் உயர் ஆய்வு மேற்கொள்வதற்காக வாங்கப்பட்டுள்ளன.

4.7.9. அழகப்பா பல்கலைக்கழகத்தின் 'தொழில் புத்தாக்கம் மற்றும் உருவாக்க மையம்'மூலம் புத்தாக்கம் மற்றும் மேம்பாட்டுக் கொள்கை (Innovation and Start-up Policy) வகுக்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் 'தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம்' (EDII-TN), அழகப்பா பல்கலைக்கழகத்தின் திறன் மேம்பாட்டு மையத்தினை அங்கீகரித்து, அதன்மூலம் புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சிகள் நடத்துவதற்கு நிதியுதவி அளித்து வருகிறது. பல்கலைக்கழகத்தின் *44* உறுப்புக் கல்லூரிகள் 'One million Ideas' மற்றும் 'Tamil Nadu Students Innovators' ஆகிய இரண்டு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அனுமதி அளித்து, இத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

4.7.10. ஒன்றிய அரசின் தொலைதொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையின் அனுமதியுடன் அழகப்பா பல்கலைக்கழகத்தில் *90.8* MHz அலைவரிசையில் 'சமுதாய வானொலி' நிறுவப்பட்டுள்ளது. இதன்மூலம் கிராமப்புற மாணவர்களுக்கு பல்கலைக்கழகத் தகவல்கள், பொது அறிவு மற்றும் சமுதாயத் தகவல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

4.7.11. அழகப்பா பல்கலைக்கழகத்தின் தேர்வுப் பிரிவு, 'மின்னணு மதிப்பீட்டுத் திட்டத்தினை' (Digital Evaluation System) செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இந்த மின்னணு மதிப்பீட்டு முறை முதலில் பல்கலைக்கழக வளாக மாணவர்களுக்கும் இணைப்புக் கல்லூரிகளிலும் செயல்படுத்தப்பட உள்ளது.

[2022 ஏப்ரல் 11

4.7.12. அழகப்பா பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறை, சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் வட்டத்தில் அமைந்துள்ள இலந்தக்கரை பகுதியில் தொல்பொருள் ஆய்வு மேற்கொள்ள புதுடெல்லியிலுள்ள தொல்பொருள் கணக்காய்வுக் கழகத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

4.7.13. அழகப்பா பல்கலைக்கழகத்தின் 'தொழில் உருவாக்கம் மற்றும் புத்தாக்க மையம்' புதியதாக தொழில் தொடங்குபவர்களுக்கு (Startups) ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு செயல்பாடுகள், தயாரிப்பு மேம்பாடு, மறு பொறியியல் மற்றும் அளவுத்திருத்தம் மற்றும் பரிசோதனை வசதிகள், தர நிர்ணயம் மற்றும் உறுதி மற்றும் சந்தை ஆய்வு போன்ற தொழில்நுட்ப சேவைகளை வழங்க திட்டமிட்டுள்ளது.

4.7.14. அழகப்பா பல்கலைக்கழகம், அனைத்துப் பல்கலைக்கழகங்களும் பயன்பெறும் வகையில் 'உலகத் தரத்திலான மாநில அளவிலான ஆராய்ச்சிக் கூட்டமைப்பு' ஒன்றை ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளது. இக்கூட்டமைப்பு, நடப்பு வாழ்க்கைச் சூழலில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வகையில் உடல்நலம், ஆற்றல், பேரிடர் மேலாண்மை, பல்லுயிர்ப் பெருக்கம், விவசாயம், தகவல் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, இயந்திரக் கற்றல், திறன் மேம்பாடு மற்றும் சமுதாயப் பொருளாதார வளர்ச்சி ஆகிய பல்துறைகளில் நமது மாநிலத்தைக் கவனத்தில் கொண்டு துறையிடை அணுகுமுறையில் செயல்பட உள்ளது.

4.8. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

4.8.1. 1990 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் தமிழ்க்கவிஞர், இலக்கியவாதி, வரலாற்று ஆசிரியர் மற்றும் தத்துவ அறிஞரான பேராசிரியர் பெ. மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை அவர்களின் நினைவாக பெயரிடப்பட்டுள்ளது. திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய நான்கு தமிழகத் தென் மாவட்டங்களை வரம்பெல்லையாகக் கொண்டு, 890 ஏக்கர் பரப்பிலான வளாகத்தில் செயல்பட்டு வருகிறது.

4.8.2. தேசியத் தர மதிப்பீடு குழுமத்தால் (NAAC) 3.13 தரப் புள்ளிகளுடன் 'A' நிலை மறு-அங்கீகாரம் பெற்றுள்ள இப்பல்கலைக்கழகம், தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பு 2021 (NIRF) இன் தரவரிசையில் 70 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

2022 ஏப்ரல் 11]

4.8.3. இப்பல்கலைக்கழகம், நான்கு புலங்கள், 24 துறைகள், நான்கு சிறப்பு மையங்கள், ஒரு மத்திய பல்துறை அறிவியல் ஆய்வு வசதிகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. மேலும், 100-க்கும் மேற்பட்ட ஒருங்கிணைந்த பட்ட மேற்படிப்புகள், ஆய்வியல் நிறைஞர் பட்டங்கள் மற்றும் முனைவர் ஆய்வுப் பட்டங்கள் (Int.PG/PG, M.Phil, Ph.D) உள்ளிட்ட உயர் கல்விப் பட்ட வகுப்புகளை வழங்குகின்றது. தற்போது பல்கலைக்கழகத் துறைகளில் 3,257 மாணவர்கள் உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சியைத் தொடர்கின்றனர்.

4.8.4. இப்பல்கலைக்கழகத்துடன் 105 கல்லூரிகள் இணைவு பெற்றுள்ளன. இணைவு பெற்ற கல்லூரிகளில் 1,07,573 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.

4.8.5. இப்பல்கலைக்கழகம், 2021-2022-ல், 12 காப்புரிமைகள் பெற்று, தேசிய அளவிலான கல்வி மற்றும் தொழில் நிறுவனங்களுடன் ஆறு புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது. இப்பல்கலைக்கழக ஆசிரியர்கள், ஸ்கோபஸ் பட்டியலிடப்பட்ட, தர மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆய்விதழ்களில் வெளியிட்ட 6,651 ஆய்வுக் கட்டுரை வெளியீடுகள், 76,564-க்கும் மேற்பட்ட பல்வேறு ஆய்வர்களால் ஈர்க்கப்பட்டு மேற்கோள்களுடன் பட்டியலிடப்பட்ட பெருமைகளைப் பெற்றுள்ளது. பல்கலைக்கழகம் இதுவரை ஈட்டியுள்ள h-index 93 மற்றும் i-10 index 1,706 ஆகும்.

4.8.6. பல்கலைக்கழக நூலகம் முழுவதுமாக கணினிமயமாக்கப்பட்டு, இணைப்புக் கல்லூரிகள் மற்றும் அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் உதவியுடன் 671 அரிய நூல்கள் மின்னணுமயமாக்கப்பட்டுள்ளது.

4.8.7. புது தில்லி தேசிய திறன் தகுதிக் கட்டமைப்பின்கீழ் (NSQF), பல்கலைக்கழக நிதிநல்கை குழு (UGC), திறன் மேம்பாட்டிற்காக ரூ.1.60 கோடி வழங்கியுள்ளது.

4.8.8. இப்பல்கலைக்கழகத்தில், 'வ.உ. சிதம்பரனார் ஆராய்ச்சி இருக்கை' ஒன்று பல்கலைக்கழக நிதியில் வழங்கிய ரூ.20.00 இலட்சம் தொகுப்பு நிதியுடன் அமைக்கப்பட்டுள்ளது.

4.8.9. பல்கலைக்கழகத்தில் "தமிழ் பாரம்பரிய அறிவு அமைப்பு ஆய்வு மையம்", தொல்லியல், பண்பாட்டு நடவடிக்கைகள், உயிரியல் பன்முகத்தன்மை, இயற்கை கட்டமைப்புகள், பாரம்பரிய

மருந்துகள், விவசாய நடைமுறைகள் மற்றும் கையெழுத்துப் பிரதிகள் போன்றவற்றின் விரிவான அறிவுத்தளம் மற்றும் மின்னணு ஆவணக் காப்பகம் உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கென முதற்கட்டமாக ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.8.10. இப்பல்கலைக்கழகத்தில் 'தொல்லியல் ஆய்வு மையம்' ஒன்று, பல்கலைக்கழக நிதியிலிருந்து ஆண்டுக்கு ரூ.3.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டுடன் 2021-2022 ஆம் கல்வியாண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இந்த மையத்தின் உயரிய நோக்கம், பண்டைய நினைவுச் சின்னங்களை அடையாளம் காண்பதும் மற்றும் இன்றுவரை இந்த தளங்களிலிருந்து மீட்கப்பட்ட கலைப் பொருட்களை, ஊடுருவல் அல்லாத அறிவியல் நுட்பங்கள்மூலம், பல்கலைக்கழகப் பேராசிரியர்களின் திறனறிவு பங்களிப்புடன் முறையாகக் கண்டறிதலும் ஆகும்.

4.8.11. புதிய "நகர வளாகக் கட்டடம்" ஒன்று, சீவலப்பேரி கீழநத்தம் கிராமத்திலுள்ள பல்கலைக்கழக இடத்தில், திறன் மேம்பாடு/தொழில்முனைவோர் மேம்பாடு பயிற்சிகளுக்காக கட்டப்பட்டு வருகிறது.

4.8.12. ரூ.34.00 இலட்சம் செலவில் "கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்" ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இது நாளொன்றுக்கு உருவாக்கும் ஒரு இலட்சம் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர், பல்கலைக்கழகத் தோட்டத்திற்கு பயன்படுத்தப்படுகிறது.

4.8.13. இந்தப் பல்கலைக்கழகம், ஒன்றிய அரசின் மகாத்மா காந்தி தேசிய ஊரகக் கல்விக் குழும விருதினைப் பெற்றது.

4.8.14. நாட்டு நலப் பணித் திட்டத்தின்கீழ் இப்பல்கலைக்கழக துறைகள் மற்றும் பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகள்மூலம் 233 கிராமங்களைத் தத்தெடுத்துள்ளது.

4.8.15. ஃபிட் இந்தியா இயக்கத்தின் (ஃபிட் இந்தியா ஓட்டம், சர்வதேச யோகா தினம் மற்றும் தேசிய விளையாட்டு தினம்) கீழ் சுகாதாரம் தொடர்பான பிரச்சாரத்தில் பங்கேற்று மாணவர்கள் உடல்நலன் மேம்பாட்டினை உணர்த்தினர்.

2022 ஏப்ரல் 11]

4.9. பெரியார் பல்கலைக்கழகம்

4.9.1. பெரியார் பல்கலைக்கழகம் *1997* ஆம் ஆண்டு செப்டம்பர் *17* ஆம் நாள் சேலத்தில் தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்டது.

4.9.2. இப்பல்கலைக்கழகத்தில் தற்போது *27* துறைகளை உள்ளடக்கிய ஐந்து அறிவியல் புலங்கள் மற்றும் மூன்று கலைப்புலங்களும் உள்ளன. அவற்றில் *32* முதுநிலை படிப்புகள், மூன்று இளநிலை தொழிற்படிப்புகள் மற்றும் *27* ஆராய்ச்சி படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. பெரியார் பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவாக்க மையம் தருமபுரியில் அமைந்துள்ளது.

4.9.3. இப்பல்கலைக்கழகத்தின் இலச்சினையில் பொறிக்கப் பட்டுள்ள "அறிவால் விளையும் உலகு" என்ற பொதுவான உண்மையை உணர்த்தும் வண்ணம் அதனை முழுமையாகச் செயலாக்க பல்வேறு துறைகளில் அறிவை மேம்படுத்தும் குறிக்கோளுடன் பல்கலைக்கழகமும், அதன் துறைகளும் செயல்படுகின்றன.

4.9.4. மிகை நிகர்/மெய்நிகர் (AR/VR) துணி நூல் மற்றும் ஆடை வடிவமைப்பு, உணவு அறிவியல் மற்றும் ஊட்டச்சத்து, மின்னணு வணிகம் மற்றும் பட்டயப் படிப்பான கணக்கியல் மற்றும் வரிவிதிப்பியல் ஆகிய திறன் சார்ந்த படிப்புகள் இப்பல்கலைக்கழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. பாஸ்டன் பல்கலைக்கழகத்துடன் இணைந்து முதுநிலை தரவு அறிவியல் (M.Sc. Data Science) படிப்பை இப்பல்கலைக்கழகம் அறிமுகப்படுத்தியுள்ளது.

4.9.5. கோவிட்-*19* பெருந்தொற்று பாதிப்பால் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கும், HIV தொற்றால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கும் *2021-2022* ஆம் கல்வியாண்டு முதல் *100%* கட்டண விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

4.9.6. தேசிய தர நிர்ணயக் குழுவால் (NAAC) இப்பல்கலைக்கழகத்திற்கு *2021* ஆம் ஆண்டில் மிகச் சிறப்பு வாய்ந்த 'A++' தர அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பின் (NIRF) தரவரிசையில் *2021* ஆம் ஆண்டில் இந்திய பல்கலைக்கழகங்களில் *73*-ம் இடமும், ARIIA *2021* தரவரிசையில் *10*-வது இடமும் இப்பல்கலைக்கழகம் பெற்றுள்ளது.

[2022 ஏப்ரல் 11

4.9.7. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வியல் திட்டத்தின்கீழ் (TNSRCM) 350 ஊரக இளைஞர்களுக்கு பணியமர்த்தலுடன்கூடிய திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டத்தினை வழங்கும்பொருட்டு பல்கலைக்கழகத்தின் கணினி அறிவியல் துறைக்கு ரூ.266 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது செயற்கை நுண்ணறிவு, வர்த்தக நுண்ணறிவு, தரவு அறிவியல் மற்றும் UI/UX போன்ற புத்துலகத் திறன்களை மேம்படுத்த உருவாக்கப்பட்டுள்ள தொழிற்சாலை–4.0 (INDUSTRY 4.0)-ன் முன்னெடுப்பாகும்.

4.9.8. தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தால் (EDII-TN) அளிக்கப்பட்ட ரூபாய் ஒரு கோடியில் பெரியார் பல்கலைக்கழக வணிக அடைகாப்புக் கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

4.9.9. இப்பல்கலைக்கழகத்தில் RUSA திட்டத்தின்கீழ் Single Crystal XRD, SEM, Solar Simulator, GCMS போன்ற நவீன உபகரணங்களைக் கொண்ட மைய உபகரண வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

4.9.10. தேசிய மற்றும் பன்னாட்டு நிறுவனங்களான பிரான்சில் சவுத் பிரிட்னி பல்கலைக்கழகத்துடன் ஆசிரியர் பரிமாற்றம், மலேசிய கர்ட்டின் பல்கலைக்கழகத்துடன் மாணவர்களின் உள்ளுறை பயிற்சி திட்டங்கள், டெக்னாலஜி பெட்ரோனஸ் பல்கலைக்கழகத்துடன் உள்ளுறை பயிற்சி மற்றும் ஆசிரியர் பரிமாற்றம் ஆகிய பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இப்பல்கலைக்கழகத்தால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

4.9.11. பல்கலைக்கழக மானியக் குழுவின் ஒப்புதலுடன் தேசிய திறன் மேம்பாட்டுக் கழகத்தின் பாடங்களுடன் ஒருங்கிணைந்த B.Voc. பட்டப் படிப்பு இப்பல்கலைக்கழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

2022 ஏப்ரல் 11]

4.10. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்

4.10.1. மாநிலத்தில் உயர் கல்வியை நாடுவோருக்கு திறந்தநிலை மற்றும் தொலைநிலைக் கற்றல் முறையை அறிமுகப்படுத்துவதற்காகவும், மேலும் அதனை மேம்படுத்துவதற்கும், அறிவுத்திறனை மேம்படுத்துதல் புத்தாக்கச் சூழலில் பயிற்சி மற்றும் திறன், மனிதவளச் செயற்பாட்டுத் துறைகளில் ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகள் ஆகியவற்றை தொடர்ந்து வழங்குவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தவும் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் 2002 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

4.10.2. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டதிலிருந்தே, இதுவரை கல்வி சென்றடையாத பின்தங்கிய பிரிவினர், தொலைதூர மற்றும் கிராமப்புற பகுதியிலுள்ள உழைக்கும் மக்கள், இல்லத்தரசிகள், மாற்றுத் திறனாளிகள், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு செலவு குறைந்த, சமூகம் சம்பந்தப்பட்ட திறந்தநிலை மற்றும் தொலைதூர கற்றல் திட்டத்தின்மூலம் கல்வி சேவை வழங்கி வருகிறது.

4.10.3. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் பட்டப் படிப்புகள், திறன் மேம்பாட்டு படிப்புகள், சான்றிதழ் படிப்புகளில் தொடங்கி பட்டயப் படிப்புகள், தொழிற்கல்வி பட்டய படிப்புகள், முதுகலை பட்டய படிப்புகள், முதுகலை பட்டப் படிப்புகள் மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளான ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்டப் படிப்பு ஆகிய படிப்புகளையும் வழங்கி வருகிறது.

4.10.4. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், 2021-2022 ஆம் ஆண்டில் ஒரு நூலகத்திற்கு இரண்டு வீதம் 64 புத்தக அலமாரிகளை 32 மாவட்ட நூலகங்களுக்கு தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்மூலம் வழங்கியுள்ளதுடன், 750 தானே கற்றல் பாட நூல்களையும் மத்திய அரசுப் பணியாளர்கள் தேர்வாணையம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆசிரியர் தேர்வு வாரியம் ஆகியவை நடத்தும் தேர்வுகளை எழுதும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் அனுப்பியுள்ளது.

4.10.5. மயிலாடுதுறை, சிவகங்கை, திருவண்ணாமலை மற்றும் சேலம் ஆகிய இடங்களில் தமிழ்நாடு திறந்தநிலைப்

[2022 ஏப்ரல் 11

பல்கலைக்கழகத்தின் நான்கு புதிய மண்டல மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

4.10.6. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், 2021-2022 ஆம் ஆண்டில் சமூக ஊடகக் கொள்கை 2021, மாற்றுத் திறனாளிகளுக்கான சம வாய்ப்புக் கொள்கை ஆகிய கொள்கை ஆவணங்கள் மற்றும் நெறிமுறைகளை முதன்முறையாக வடிவமைத்து வெளியிட்டுள்ளது.

4.10.7. தற்போதைய கோவிட் தொற்று நோய் காலத்தில் சேர்க்கை முகாமினை தீவிரமாக மேற்கொண்டு மொத்தம் 17,273 மாணவர்களை பல்வேறு படிப்புகளில் 2021-2022 கல்வியாண்டில் சேர்த்துள்ளது.

4.10.8. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் திறந்தநிலை மற்றும் தொலைநிலை கற்றலில் தானே கற்றல் முறை பாடநூல் கொள்கை ஆவணத்தை உருவாக்கியுள்ளது. இதுவரை புதுப்பிக்கப்பட்ட பாடத் திட்டத்தின் அடிப்படையில் 316 தானே கற்றல் முறை பாட நூல்களை உருவாக்கியுள்ளது.

4.10.9. காந்தி கிராமம் ஊரக நிறுவனத்துடன் (நிகர்நிலை பல்கலைக்கழக) தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் கல்வி தொடர்பை மேம்படுத்தும்பொருட்டு, ஐந்து ஆண்டுகளுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை 5.1.2022 அன்று மேற்கொண்டுள்ளது.

4.10.10. 2021 ஆம் ஆண்டில் பதினெட்டு கல்வி நிறுவனங்கள்/ அமைப்புகளுடன் படிப்புகளை வழங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை பல்கலைக்கழகம் மேற்கொண்டுள்ளது.

4.10.11. புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பொற்பனைகோட்டையில் பல்கலைக்கழகம் அதன் ஆசிரியர்கள்மூலம் அகழ்வாராய்ச்சி பணியில் ஈடுபட்டுள்ளது.

4.10.12. இப்பல்கலைக்கழகம் 15.1.2022 அன்று திருவள்ளுவர் இருக்கையை நிறுவியுள்ளது.

2022 ஏப்ரல் 11]

4.11. திருவள்ளுவர் பல்கலைக்கழகம்

4.11.1. திருவள்ளுவர் பல்கலைக்கழகம் *2002* ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அதன் வளாகத்தில் *10* துறைகளை கொண்டுள்ளது. திருவள்ளுவர் பல்கலைக்கழக வரம்பெல்லைக்குட்பட்ட வேலூர், திருவண்ணாமலை, ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் *73* இணைவு பெற்ற கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளையும், ஆறு ஆராய்ச்சி நிறுவனங்களையும் பெற்றுள்ளது.

4.11.2. பல்கலைக்கழக துறைகளின் ஆராய்ச்சிகளில் *694* ஆய்வுக் கட்டுரைகள் அறிவியல் மேற்கோள் கொண்ட அறிவியல் இதழ்களில் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், ஆசிரியர்களின் *923* ஆய்வுக் கட்டுரைகளும் ஸ்கோபஸ் அட்டவணையிடப்பட்ட இதழ்களில் (Scopus Indexed) வெளியிடப்பட்டுள்ளன. கட்டுரைக்கான அதிக சராசரி மேற்கோள் குறியீட்டைக் கொண்ட பல்கலைக்கழகங்களின் பட்டியலில் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் *(18.72)* முதல் இடத்தில் உள்ளது.

4.11.3. "சிக்கலான வலையமைப்பு பற்றிய ஆய்வுகள்" என்ற திட்டத்திற்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, FIST திட்டத்தின்மூலம் ரூ.*52.00* இலட்சம் வழங்கியுள்ளது.

4.11.4. மார்பகப் புற்றுநோய் சிகிச்சை தொடர்பான ஆய்வு திட்டத்திற்கு தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம் ரூ.*14.15* இலட்சம் வழங்கியுள்ளது.

4.11.5. "Studies on Stochastic Complex Valued Systems" என்ற திட்டத்திற்கு ரூ.*13.20* இலட்சமும், "பல்நோக்கு முகவர் அமைப்புகளின் ஆய்வுகள்" என்ற திட்டத்திற்கு ரூ.*6.00* இலட்சமும் அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி வாரியம் (SERB) வழங்கியுள்ளது.

4.11.6. 1,039 முனைவர் பட்ட ஆய்வறிக்கைகள் மற்றும் *5,883* ஆய்வியல் நிறைஞர்கள் சமர்ப்பித்த கட்டுரைகள் மட்டுமல்லாமல், அனைத்து துறைகள் சார்ந்த *11,677* நூல்கள் பல்கலைக்கழக மைய நூலகத்தில் உள்ளன. நூலகத்தில் மின்வளங்களை பார்வையிடுவதற்காக இணையதள வசதிகள் உள்ளன.

[2022 ஏப்ரல் 11

4.11.7. திருவள்ளுவர் பல்கலைக்கழக வளாகத்தில் புதிய கட்டடங்களான துணைவேந்தர் குடியிருப்பு, மாணவர் விடுதி, மாணவியர் விடுதி மற்றும் வகுப்பறைகளுக்கான கட்டடங்கள் ஆகியவை முடியும் நிலையில் உள்ளன.

4.12. தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்

4.12.1. தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் 2008 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இது, ஆசிரியர் கல்வியின் தரத்தினை மேம்படுத்துவதற்காக தோற்றுவிக்கப்பட்ட நமது தேசத்தின் ஒரே பல்கலைக்கழகம் ஆகும்.

4.12.2. தொழில்நுட்ப நிலைக்கேற்ப மாணவர்களுக்கு கற்பிப்பது மற்றும் பயிற்றுவிப்பது குறித்த திறன்களை வளர்ப்பது ஆசிரியர் கல்வியின் பொறுப்பு ஆகும். தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் கல்வியினை மேம்படுத்துவதற்கு மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் கல்வி ரீதியாக கண்காணிப்பது இதன் முக்கிய நோக்கமாகும்.

4.12.3. இப்பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டு 1.7.2008 முதல் செயல்பட தொடங்கியபோது, இதர பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றிருந்த தமிழகத்திலுள்ள 491 கல்வியியல் கல்லூரிகள், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் இணைப்புக்குள் கொண்டுவரப்பட்டது. தற்போது ஏழு அரசு, 14 அரசு உதவிபெறும் மற்றும் 628 சுய நிதிக் கல்வியியல் கல்லூரிகள் உட்பட மொத்தம் 649 கல்வியியல் கல்லூரிகள் இப்பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றுள்ளன.

4.12.4. அனைத்து வகையிலும் வளர்ச்சி, இலக்குகளை நிர்ணயிக்கவும், கல்வி மற்றும் நிர்வாக பணிகளுக்கான செயல்திட்டத்தில் புதிய உத்திகளைப் புகுத்தவும் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் பல்வேறு மையங்களை தொடங்கி செயல்படுத்தி வருகிறது.

4.12.5. 2021-2022 ஆம் ஆண்டில் உலகளவில் பிரசித்திபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளான "மிகநீண்ட இணையவழி தமிழ் பட்டிமன்றம்" (27 மணி நேரம்) என்ற நிகழ்வில் பங்கேற்பு. "உச்சபட்ச சாதனைகளை படைக்க ஆசிரியர்களின் பங்களிப்பு" என்ற தலைப்பில் மிகநீண்ட இணையவழி கருத்தரங்கத்தினை (30 மணி நேரம் 30 நிமிடங்கள்) ஏற்பாடு செய்தது. மேலும்

2022 ஏப்ரல் 11]

தொலைநோக்குப் பார்வை 2030 என்ற நோக்கத்தில், "உயர்தரத்தை அடைய வாழ்வியல் திறன்களை மேம்படுத்துவதின் அவசியம்" என்ற தலைப்பில் மிகநீண்ட இணையவழி நிகழ்ச்சியை (59 மணி நேரம்) நடத்தியது போன்ற பல்வேறு செயல்பாடுகளால் உலகளாவிய அங்கீகாரத்தினையும், பாராட்டு சான்றிதழ்களையும் இப்பல்கலைக்கழகம் பெற்றுள்ளது.

4.12.6. உன்னத் பாரத் அபியான் திட்டத்தின் (கல்வி அமைச்சகம்-ஒன்றிய அரசுகீழ்) திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள விஷ்ணுவாக்கம், இலுப்பூர், பனப்பாக்கம், அயத்தூர் மற்றும் கோவிந்தமேடு ஆகிய ஐந்து கிராமங்களை இப்பல்கலைக்கழகம் தத்தெடுத்துக் கொண்டுள்ளது.

4.12.7. இப்பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்ற ஒவ்வொரு கல்வியியல் கல்லூரியும் அருகிலுள்ள ஓர் அரசுப் பள்ளியினை தத்தெடுத்து ஆசிரியர் கல்வியின் தரத்தினை மேம்படுத்த உத்தேசித்துள்ளது.

4.13. அண்ணாமலை பல்கலைக்கழகம்

4.13.1. அண்ணாமலை பல்கலைக்கழகம், முதலில் அண்ணாமலை பல்கலைக்கழகச் சட்டம், 1928 (1929 ஆம் ஆண்டின் தமிழ்நாடு சட்டம் 1)-ன்படி நிறுவப்பட்டது, அண்ணாமலை பல்கலைக்கழக சட்டம், 2013-ன்கீழ் அப்பல்கலைக்கழகம் 25.9.2013 அன்று முதல் தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டது.

4.13.2. அண்ணாமலை பல்கலைக்கழகம், கல்வியை எட்ட இயலாத மக்களும் எளிதில் பயில அளப்பரிய சேவை செய்து வருகிறது. இப்பல்கலைக்கழகம் பல ஆண்டுகளாக பல புதுமையான கற்பித்தல் திட்டங்களைத் தொடங்கியுள்ளதுடன், தொலைதூரக் கல்வியில் முன்னோடியாக இருந்து வருகிறது.

4.13.3. இப்பல்கலைக்கழகத்தில் எட்டு புலங்கள் மற்றும் 52 துறைகள்மூலம் பொறியியல், அடிப்படை மற்றும் பயன்பாட்டு அறிவியல் மேலாண்மை மற்றும் கலை படிப்புகள், சமூக அறிவியல், வேளாண்மை, கடல் அறிவியல், இந்திய மொழிகள், கல்வி மற்றும் கவின் கலைகள் ஆகிய பல்வேறு துறைகளில் இளங்கலை, முதுகலை, முனைவர் பட்டப் படிப்புகள் மற்றும் முனைவர் பட்டத்திற்கு பிந்தைய படிப்புகளை வழங்குகிறது. இப்பல்கலைக்கழகம் இணைவு வகை பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டு கடலூர்,

[2022 ஏப்ரல் 11

விழுப்புரம், கள்ளக்குறிச்சி மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களை வரம்பெல்லையாகக் கொண்டுள்ளது. 74 இணைப்புக் கல்லூரிகள் மற்றும் ஒரு முதுகலை விரிவாக்க மையம் இப்பல்கலைக்கழகத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளன.

4.13.4. மாணவர்கள் மேம்படுத்தப்பட்ட அனுபவத்தினை பெறுவதற்காக பாடத் திட்டம், கற்பித்தல், மதிப்பீடு மற்றும் மாணவர் ஆதரவு ஆகியவற்றை மறுசீரமைப்பதற்கு இப்பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. சமீபத்தில் இப்பல்கலைக்கழகம் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டில் ஆசிரிய தன்னாட்சிக் கொள்கையை நடைமுறைப்படுத்தியுள்ளது.

4.13.5. கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கு தகவல் தொடர்பு, கருத்து பரிமாற்றம், விவாதம், ஆராய்ச்சி மற்றும் பல்துறை சிந்தனை கற்பித்தல் முறைகளில் கவனம் செலுத்தப்படுகிறது.

4.13.6. இப்பல்கலைக்கழகத்தில் முழுமையான கல்வியின் ஒரு பகுதியாக, நடைமுறைத் திறன் மற்றும் வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்துவதற்காக வேலைவாய்ப்பு திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன.

4.13.7. இப்பல்கலைக்கழகம் மாணவர் சேர்க்கை, நிர்வாகம், நிதிசார் கணக்குகள், தேர்வுகள் மற்றும் மாணவர் உதவி ஆகியவற்றின் திறமையான மேலாண்மைக்காக மின் ஆளுமையை படிப்படியாக செயல்படுத்தி வருகிறது.

4.13.8. இப்பல்கலைக்கழகம் வழங்கும் அனைத்து மாணவர் சேர்க்கையும் இணையவழிமூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

4.13.9. டிஜிட்டல் வருகைப் பதிவு முறையைத் தழுவி வருகையை திறம்பட நிர்வகிப்பதற்கான பயோமெட்ரிக் வருகை மேலாண்மை முறையை பல்கலைக்கழகம் நடைமுறைப்படுத்தி வருகிறது.

4.13.10. உயர் ஒளிபரப்பு திறன் கொண்ட கண்ணாடி இழை கேபிள் மூலமும் LAN மூலமும் வளாகம் முழுவதும் இணைய வசதி வழங்கப்படுகிறது. மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இன்ட்ராநெட் மற்றும் வைஃபைமூலம் ஆன்லைன் ஆதாரங்களை அணுகலாம். நாள்தோறும் 2,500-க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இன்ட்ராநெட் மற்றும் வைஃபைமூலம் இணையவழி வசதிகளைப் பெறுகின்றனர்.

2022 ஏப்ரல் 11]

5. தமிழ்நாடு ஆவணக் காப்பகம்

5.1. ஒரு மாநிலத்தின் நிர்வாக வரலாற்றில் தமிழ்நாடு ஆவணக் காப்பகம் முக்கிய பங்கு வகிக்கிறது. ஆவணங்கள் அதிக மதிப்பும், பொக்கிஷமும் கொண்டவை என்பதால், நமது தமிழ் மன்னர்கள் இந்த ஆவணங்களை 'ஆவண களரி' என்ற பெயரில் பாதுகாத்து வந்தார்கள், பொறுப்பாளர் 'ஓலைநாயகம்' என்று அழைக்கப்பட்டனர். தற்போது இம்மரபு தொடர்ந்து வருவதுடன், தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தின் முறையான தோற்றம் 1805 ஆம் ஆண்டில் செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் உருவாக்கப்பட்ட மத்திய ஆவணக் காப்பறையைக் கொள்ளலாம். ஆவணங்கள் எண்ணிக்கையில் பெருகியதால், அவை 1909 ஆம் ஆண்டில் நன்கு வடிவமைக்கப்பட்ட தற்போதைய வளாகத்திற்கு மாற்றப்பட்டு, "மெட்ராஸ் ரெக்கார்ட் ஆபீஸ்" என்ற பெயரில் செயல்பட்டு வந்தது. பின்னர், 1973 இல் தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

5.2. ஆவணக் காப்பகம் 1670 ஆம் ஆண்டு முதலான ஆவணங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. மேலும், இந்த ஆவணங்கள் வெறும் தகவலுக்காக மட்டுமல்ல, அறிவின் கலைக் களஞ்சியமாகவும் உள்ளன. மேலும், டச்சு, டேனிஷ் மற்றும் பாரசீக மொழிகளில் உள்ள மாவட்ட நீதிமன்றங்களின் ஆவணங்களும் இக்காப்பகத்தால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இம்மாநிலத்தின் வரலாற்றைப் பல்வேறு பரிமாணங்களில் ஆய்வு செய்ய ஆவணக் காப்பகங்கள் உதவுகின்றன என்பதில் சந்தேகமில்லை.

5.3. இத்துறையின் முக்கிய செயல்பாடுகளானது, நிரந்தர ஆவணங்களை ஒன்றுபடுத்தியும், நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, அறிவியல் முறையில் ஆவணங்களை பாதுகாப்பதாகும். பல்வேறு அரசுத் துறைகளுக்கும், நம்பத் தகுந்த ஆராய்ச்சியாளர்களுக்கும் அலுவலக குறிப்புகளை எடுக்க இவ்வாவணக் காப்பகம் மிகவும் உதவியாக இருக்கிறது. அரசாங்க ஆணைகள் அரசிதழ்களின் நகல்கள், வாக்காளர் பட்டியல்களின் நகல்களின் சான்றளிக்கப்பட்ட நகல்களை தனிப்பட்ட நபர்களின் கோரிக்கையின் பேரில் பெறுவதற்கும் இந்த காப்பகங்கள் உதவியாக இருக்கின்றது.

5.4. அடுத்த தலைமுறைக்கான ஆவணங்களின் முக்கியத்துவம் மற்றும் பயன்பாடு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, அனைத்து

[2022 ஏப்ரல் 11

பதிவுகளும் பாரம்பரியம் மற்றும் அறிவியல் முறைகளைப் பயன்படுத்தி நுண்படமாக்குதல் (மைக்ரோ ஃபிலிம்) மற்றும் கணினிமூலம் அட்டவணைப்படுத்தும் பணி நடைபெற்று வருகின்றன.

5.5. தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் உள்ள நூலகத்தில் 1633 ஆம் ஆண்டு முதல் வெளியிடப்பட்ட 2.31 இலட்சம் புத்தகங்களின் தொகுப்பு உள்ளது. இந்தப் புத்தகங்கள் ஆராய்ச்சியாளர்களின் குறிப்பெடுக்கும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுகின்றன.

5.6. 1981 ஆம் ஆண்டில் "ஆவண மேலாண்மை மற்றும் பாதுகாத்தல்" குறித்த சிறப்புப் பயிற்சி தொடங்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் நடைபெற்ற பயிற்சியில் தமிழக அரசு அலுவலகங்களில் ஆவண அறைகளின் பொறுப்பில் இருந்த 63 பணியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

5.7. பல்வேறு அரசுத் துறை ஆவணங்களின் முக்கியத்துவம், மாநிலம் முழுவதும் நிர்வாகம் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆவணங்களைப் பாதுகாத்தல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு கோயம்புத்தூர், கடலூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர் ஆகிய ஆறு மாவட்டங்களில் ஆவணக் காப்பகங்கள் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

5.8. தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005-ன்கீழ் இக்காப்பகத்திலுள்ள மூல ஆவணங்களிலிருந்து நகல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 2021 ஆம் ஆண்டில், 9,000-க்கும் மேற்பட்ட விண்ணப்பதாரர்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் தேவையான தகவல்களைப் பெற்று பயனடைந்துள்ளனர்.

2022 ஏப்ரல் 11]

6. தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம்

6.1. பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம் 1992-ல் தமிழக அரசால் நிறுவப்பட்டது. தமிழ்நாட்டில் உயர் கல்வியை மேம்படுத்துவதற்கு உரிய வழிகாட்டுதல் மற்றும் கண்காணிப்புமூலம் கல்வித் திட்டங்களை இம்மன்றம் செயல்படுத்தி வருகிறது.

6.2. மன்றத்தின் செயல்பாடுகள்

6.2.1. தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம் 24 அரசுக் கல்லூரிகளில் "மெதுவாக கற்கும் கல்லூரி மாணாக்கர்களின் இடைநிற்றலை தவிர்க்கும்பொருட்டு சிறப்புக் கவனம்" அளிக்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்திற்கென ஒவ்வோர் ஆண்டும் ரூ.30.00 இலட்சம் செலவிடப்பட்டு வருகிறது.

6.2.2. 62 அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் "மென்திறன் பயிற்சி மையங்கள்" உருவாக்கப்பட்டுள்ளன. இந்த "மென்திறன் பயிற்சி மையங்கள்" வாயிலாக ஒரு கல்லூரிக்கு 500 மாணாக்கர்கள் வீதம் பயிற்சி அளிக்க ஒவ்வோர் ஆண்டும் ரூ.1.55 கோடி தொகை செலவிடப்பட்டு வருகிறது.

6.2.3. அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆசிரியர்களிடையே ஆராய்ச்சித் திறனை ஊக்குவிக்கும் வகையில், 'சிறு ஆராய்ச்சி ஆய்வு' திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் 25 ஆய்வுத் திட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆசிரியர் ஒருவருக்கு தலா ரூபாய் ஒரு இலட்சம் வீதம் 117 திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

6.2.4. அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுகலை பட்டப் படிப்பு பயிலும் மாணாக்கர்களில் "சிறு ஆய்வு திட்டத்தின்கீழ்" தேர்வு செய்யப்பட்ட ஒவ்வொரு மாணாக்கருக்கும் அவர்களின் ஆராய்ச்சியினை ஊக்குவிக்கும்பொருட்டு ஒவ்வோர் ஆராய்ச்சி திட்டத்திற்கும் ரூ.15,000/- வழங்கப்படுகிறது. இதுவரை 230 ஆய்வுத் திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

6.2.5 தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் ஆய்வரங்கம்/பட்டறைகள்/தேசிய மற்றும் சர்வதேச

[2022 ஏப்ரல் 11

கருத்தரங்கு நடத்துவது தொடர்பாக 194 கருத்துருக்களுக்கு பகுதி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

6.2.6 இம்மன்றம் பல்வேறு பட்டப் படிப்புகளுக்கு இடையே இணைத்தன்மை முடிவை வழங்குவதற்கு பல்வேறு பாடத் திட்டக் குழுக் கூட்டங்களை நடத்தி வருகிறது.

6.2.7. "மானுடவியல், சமூக அறிவியல்" மற்றும் "நவீன அறிவியல்" ஆகிய தலைப்புகளில் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆய்வு கட்டுரைகளை வருடத்திற்கு இரண்டு முறை வெளியிடுவதன்மூலம் மாணாக்கர்களும், ஆராய்ச்சியாளர்களும் தற்போதைய ஆராய்ச்சிகளைப் பற்றி அறிந்துகொள்ளவும், தங்களது புலமை மற்றும் சிறப்பறிவுத் திறனை இக்கட்டுரைகள் மூலமாக வெளிப்படுத்தவும் உதவுகிறது.

6.2.8. தொழில் நிறுவனங்களின் பங்கேற்பை வளர்ப்பதற்கும், வேலைவாய்ப்பினை உயர்த்துவதற்கும், ஆறு பல்கலைக்கழகங்களில் தோற்றுவிக்கப்பட்டுள்ள "பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களின் கூட்டிணைவு மையங்களின்" இணைப்பு மையமாக தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம் செயல்படுகிறது.

6.3. 2022-2023 ஆம் ஆண்டிற்கான செயல்பாடுகள்

6.3.1. மாணாக்கர்களின் வேலைவாய்ப்பினை அதிகரிக்க தொழில் துறை பங்கேற்பாளர்களுடன் கலந்தாலோசித்து மாநிலப் பல்கலைக்கழகங்கள்/கல்லூரிகளில் வழங்கப்படும் படிப்புகளை மறுசீரமைத்தல்.

6.3.2. அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி குழுமத்தின் 28.4.2017 நாளிட்ட அறிவிக்கையின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களால் வழங்கப்பட்ட பட்டப் படிப்புகளை விரிவாக தொகுத்து வழங்குவதன்மூலம் பாடங்களுக்கான இணைத்தன்மை செயல்முறையினை எளிதாக்கி பொதுப் பணிகளில் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கும், உயர் கல்வியினைத் தொடரவும் வழிவகை செய்தல்.

6.3.3. நாட்டின் 75-வது சுதந்திர தின கொண்டாட்டத்தை முன்னிட்டு தமிழ்நாட்டின் சுதந்திர போராட்ட வரலாற்றின் 75 முக்கிய கட்டங்களை ஒருங்கிணைக்கும் சிறப்பு ஆவணத்தைத் தயாரித்தல்.

2022 ஏப்ரல் 11]

6.3.4. உயர் கல்வியின் வளர்ச்சியில் 75 முக்கிய கட்டங்களைக் குறிக்கும் சிறப்பு ஆவணத்தைத் தயாரித்தல் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் பங்களிப்புகளின் அடிப்படையில் 75 மிக முக்கியமான உயர் கல்வி நிறுவனங்களின் அட்டவணைப் பட்டியலைத் தயாரிக்க ஆதாரங்கள், தரவுகளைச் சேகரித்தல்.

6.3.5. இம்மன்றம் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்துடன் ஒருங்கிணைந்து தேர்வு சீர்திருத்த பட்டறைகளை அனைத்து பல்கலைக்கழகங்கள் மற்றும் தன்னாட்சி கல்லூரிகளின் தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர்களுக்கு நடத்த திட்டமிட்டுள்ளது.

6.3.6. தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம் தேசிய நிறுவனங்களின் தரவரிசை கட்டமைப்பினைப்போல மாநில அளவிலான தரநிர்ணய விதிமுறையினை வகுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முக்கிய கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் உள்தர நிர்ணய பிரிவு மற்றும் தேசிய நிறுவனங்களின் தரவரிசைக் கட்டமைப்பு/தேசியத் தர மதிப்பீட்டுக் குழு (IQAC மற்றும் NIRF/NAAC) மைய அதிகாரிகளுடன் ஒன்பது ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

6.3.7. சீர்மைப் பயிற்சியினை (Bridge Course) அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதலாமாண்டு பயிலும் மாணாக்கர்களுக்கு மீண்டும் செயல்படுத்துதல்.

6.3.8. பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிகள், மின் ஆளுகை மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேம்படுத்தி உயர் கல்வியின் தரத்தை சர்வதேச அளவிற்கு மேம்படுத்துவதன்மூலம் மாணவர்களுக்கான வேலைவாய்ப்பை உருவாக்கும்பொருட்டு தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் பயின்று உலகின் பல்வேறு இடங்களில் வகிக்கும் முன்னாள் மாணாக்கர்களை ஒருங்கிணைக்க புதிய திட்டம் ஒன்று 2022-2023 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

[2022 ஏப்ரல் 11

7. தேசிய உயர் கல்வித் திட்டம் (ரூசா)

7.1. தேசிய உயர் கல்வித் திட்டம் (ரூசா) என்பது 40% மாநில அரசின் பங்குடன் மாநிலம் முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஒன்றிய நிதியுதவித் திட்டமாகும், உயர் கல்வியில் தொலைநோக்குப் பார்வையுடன்கூடிய அதிகமான செயல்திறன், சமத்துவம் மற்றும் சிறப்பினை அடைய திட்டமிட்டுள்ளது. தமிழ்நாட்டில் 172 நிறுவனங்கள் நேரடியாகவும் மற்றும் பல உயர் கல்வி நிறுவனங்களுக்கும் (HEIs) பல்வேறு கூறுகளின்கீழ் நிதியளிக்கப்பட்டு உயர் கல்வித் துறையில் பல குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் நிகழ்ந்துள்ள காரணத்தால், ரூசா 3.0 திட்டம் விரைவில் அமலாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

7.1.1. ரூசா 1.0

மேம்படுத்தப்பட்ட உட்கட்டமைப்புடனான வகுப்பறைகள், ஆய்வகங்கள், விளையாட்டு வசதிகள், திறன் வகுப்பறைகள் மற்றும் தொழில்நுட்பம் நிறைந்த கற்றல் ஆகியவை ரூசா 1.0 திட்டம் சிறப்பாக அமல்படுத்தப்பட்டதற்கு சான்றாகத் திகழ்கிறது.

7.2. ரூசா 2.0

ரூசா 1.0 வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு, திட்டத்தின் திருப்திகரமான விளைவுகள் காரணமாக, ரூசா திட்டம் 2.0, ஒன்றிய கல்வி அமைச்சகம்மூலம் (Ministry of Education) 2018 ஆம் ஆண்டில் ரூ.615.78 கோடி அனுமதிக்கப்பட்டது. உள்கட்டமைப்பு கூறுகளின்கீழ், முதல் கட்டத்தில் நிதி பெறாத நிறுவனங்கள் விதிமுறைகளுக்கு இணங்க ரூசா 2.0 திட்டத்தின்கீழ் நிதி பெறுவதற்கு தகுதியுடைய நிறுவனங்களாக கருதப்பட்டு நிதியுதவி அளிக்கப்பட்டது. தேசியத் தர நிர்ணயக் குழுவின் அங்கீகாரம், ரூசா 2.0-ன்கீழ் நிதியளிப்பதற்கான கட்டாய தகுதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ரூசா 2.0-ன்கீழ் மாநில பல்கலைக்கழகங்கள் மற்றும் தன்னாட்சி கல்லூரிகளில் தரம் மற்றும் சிறப்பை மேம்படுத்துவதற்கான இரண்டு புதிய கூறுகளை அறிமுகப்படுத்தியுள்ளதன்மூலம் மொத்தம் 14 கூறுகள் ரூசா 2.0-ன்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. தமிழகத்திற்கு ரூ.492.00 கோடி (ஒன்றிய அரசின் பங்கு ரூ.295.00 கோடி மற்றும் மாநில அரசின் பங்கு ரூ.197.00 கோடி) ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

2022 ஏப்ரல் 11]

7.2.1. தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில பல்கலைக்கழகங்களில் தரம் மற்றும் சிறப்பை மேம்படுத்துதல்

இந்த அங்கத்தின்கீழ் ரூ.100.00 கோடி அங்கீகரிக்கப்பட்டு இதில், ஒரு தொழில்முனைவோர் மையத்தை உருவாக்க ரூ.15.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது மற்றும் ரூ.85.00 கோடி, ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு, தர மேம்பாடு மற்றும் சிறப்பான செயல்பாடு ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மிச்சிகன் பல்கலைக்கழகம், சிகாகோ பல்கலைக்கழகம் மற்றும் கார்னெல் பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் இணைந்து ஆய்வு அடிப்படையிலான ஆராய்ச்சி திட்டங்களை மேற்கொள்கிறது. மேம்பட்ட ஆராய்ச்சிக்காக அமெரிக்காவின் கார்னெல் பல்கலைக்கழகத்துடன் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தால் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடப்பட்டுள்ளது. திறன் மேம்பாட்டுத் திட்டங்களின்கீழ் சுமார் 7,700 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

7.2.2. மூன்று பல்கலைக்கழகங்கள் மற்றும் 10 கல்லூரிகளுக்கு, உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களுக்கென ரூ.80.00 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதன்மூலம், உள்கட்டமைப்பை மேம்படுத்துதல், கல்வி நிறுவனங்களின் வளர்ச்சிக்குத் தேவையான உபகரணங்களை வாங்குவதற்கான பணிகள் ஆகியவை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

7.2.3. சமத்துவ செயல்பாடுகள் அடிப்படையில் திருநெல்வேலி மற்றும் மதுரையில் உள்ள இரண்டு கல்லூரிகளுக்கு தலா ரூ.2.50 கோடி வீதம் ஒப்புதல் அளிக்கப்பட்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகளுக்கு தங்கும் விடுதி கட்ட அனுமதிக்கப்பட்டுள்ளது.

7.2.4. மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளியில் உள்ள இரண்டு பல்கலைக்கழகங்களுக்கு ஆசிரியர் மேம்பாட்டிற்காக மனிதவள மேம்பாட்டு மையங்களை (HRDC) அமைக்க தலா ரூ.3.5 கோடி வழங்கப்பட்டுள்ளது.

7.3. ரூசாவின் செயல்பாடுகள்

7.3.1. ஆராய்ச்சி திட்டத் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு 4 தொழில்நுட்ப தொடர் வகுப்புகளுடன்கூடிய தேசிய மாநாடு 2019-ல் நடத்தப்பட்டது. இதில் 20 தலைசிறந்த பேச்சாளர்களும், 300 பங்கேற்பாளர்களும் கலந்து கொண்டனர்.

[2022 ஏப்ரல் 11

7.3.2. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்மூலம் (TNSDC) 19 அரசுக் கலை மற்றும் அறிவியல் (தன்னாட்சி) கல்லூரிகளில் 13,159 மாணாக்கர்களுக்கு தொழிற்பயிற்சி திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. தற்போது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்மூலம் (TNSDC) மாநிலத்தில் உள்ள 48 அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு ரூ.3.32 கோடியில் தொழிற்கல்வித் திட்டங்களை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

7.3.3. அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரிமூலம் தொழிற்க ல்வி கூறுகளின்கீழ் வாழ்க்கைத் திறன்கள் மற்றும் மேம்படுத்தும் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. தலைமைத்துவம், தனிப்பட்ட திறன்கள், வளர்ந்துவரும் தொழில்நுட்பம் போன்றவற்றில் சுமார் 2,800 மாணாக்கர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

7.3.4. வாராந்திர இயங்கலை பயிலரங்கம்மூலம் (WoW), கல்வி மற்றும் வேலைவாய்ப்பு சார்ந்த கருப்பொருள்களை உள்ளடக்கிய நவீன புதுப்பிப்புகளுடன் மாநிலத்திலுள்ள அனைத்து அரசு உயர் கல்வி நிறுவனங்களுக்கும், ஒரு நிகழ்நிலை தொடர் வகுப்பு நடத்தப்படுகிறது. ஏறக்குறைய 500 மாணவர்கள் நேரலை (LIVE) திட்டத்தில் பங்கேற்கின்றனர். மேலும், மாணவர்கள் பயன்பெறும் வகையில் வகுப்புகள் “TNRUSA Youtube” என்ற வலையொளி அலைவரிசையிலும் ஒளிபரப்பாகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2022 ஏப்ரல் 11]

8. அறிவியல் நகரம்

8.1. 1998 ஆம் ஆண்டில் மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களை தலைவராகக் கொண்டு, விரிவுரைகள், கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள் மற்றும் அறிவியல் கண்காட்சிமூலம் பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்களுக்கிடையே அறிவியலை பிரபலப்படுத்துவதன்மூலம் அறிவியல் தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்வதை முதன்மையான நோக்கமாகக் கொண்டு அறிவியல் நகரம் உருவாக்கப்பட்டது. அறிவியலை பிரபலப்படுத்தும் நோக்கத்தில் பெரியார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையத்திற்கு நடமாடும் கோளரங்கம் அமைப்பதற்கு ரூ.9.00 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

8.2. விருதுகள் வழங்கும் திட்டம்

8.2.1. தமிழ்நாடு வாழ்நாள் அறிவியல் சாதனையாளர் விருது

முனைவர் பட்டம் பெற்று ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள 60 வயது மேற்பட்டவர்களுக்கு அவர்களது ஆராய்ச்சியினை அங்கீகரிக்கும் மற்றும் கௌரவிக்கும் விதமாக இவ்விருது கடந்த 2000 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருதிற்கான பரிசுத் தொகை ரூ.25,000/-க்கான காசோலை மற்றும் சான்றிதழ் ஆகும்.

8.2.2. தமிழ்நாடு முதுநிலை அறிவியலாளர் விருதுகள்

முனைவர் பட்டம் பெற்று ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள 45 வயது முதல் 60 வயதிற்குட்பட்டவர்களுக்கு அவர்களது ஆராய்ச்சியினை அங்கீகரிக்கும் மற்றும் ஊக்குவிக்கும் விதமாக இவ்விருது கடந்த 2016 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருதிற்கான பரிசுத்தொகை ரூ.20,000/-க்கான காசோலை மற்றும் சான்றிதழ் ஆகும்.

8.2.3. தமிழ்நாடு இளம் அறிவியலாளர் விருது

இவ்விருது, முனைவர் பட்டம் பெற்று ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள 45 மற்றும் 45 வயதிற்கு உட்பட்ட அறிவியலாளர்கள்/ கல்வியாளர்களுக்கு அவர்களது ஆராய்ச்சியை ஊக்குவிக்கும் விதமாக 2000 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருதிற்கான பரிசுத் தொகை ரூ.20,000/-க்கான காசோலை மற்றும் சான்றிதழ் ஆகும்.

[2022 ஏப்ரல் 11

8.2.4. சிறந்த அறிவியல் ஆசிரியர் விருது

இளம் மாணாக்கர்களை எந்தவொரு கல்வி முறையின் தூண்களாக வடிவமைப்பதில் ஆசிரியர்கள் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றனர். ஆகவே, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் சமுதாயத்தை அங்கீகரிக்கும் மற்றும் கௌரவிக்கும் விதமாக இவ்விருதினை அறிவியல் நகரம் வழங்கி வருகிறது. இவ்விருதிற்கான பரிசுத் தொகை ரூ.25,000/-க்கான காசோலை மற்றும் சான்றிதழ் ஆகும்.

8.2.5. ஊரக கண்டுபிடிப்பாளர் விருது

கிராமப்புற மக்களால் சமூகத்தின் நலனுக்காக குறைந்த பொருட்செலவில் பல கண்டுபிடிப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. எனவே, அறிவியல் நகரம் மேற்படி கண்டுபிடிப்பாளர்களை கௌரவிக்கும் விதமாக இவ்விருதினை வழங்கி வருகிறது. இவ்விருதிற்கான பரிசுத் தொகை ரூ.1,00,000/- காசோலை மற்றும் சான்றிதழ் ஆகும்.

8.3. வருங்காலங்களில் செயல்படுத்தப்படும் செயற்பாடுகள்/ திட்டங்கள்

8.3.1. சென்னை அறிவியல் விழா

மாநில அளவில் சென்னை அறிவியல் விழா நடத்தப்படும். இதன் அங்கமாக அறிவியல் கண்காட்சி, குழு விவாதங்கள், பிரபல விரிவுரைகள், அறிவியல் செயல்முறை சோதனைகள் மற்றும் அறிவியலில் பொழுதுபோக்கு அம்சமாக பொம்மலாட்டம், பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்களுக்காக வினாடி-வினா, கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, ஓவியப் போட்டி ஆகியவையும் நடத்தப்படவுள்ளன.

8.3.2. கோடைக்கால பயிற்சி முகாம்

முதுநிலை அறிவியல் பயிலும் மாணாக்கர்களுக்கிடையே ஆய்வு மனப்பான்மையை உருவாக்கி ஊக்குவிக்கும் விதமாக தமிழக அளவில் கணிதவியல், வேதியியல் மற்றும் உயிரியல் துறைகளில் கோடைக்கால பயிற்சி முகாம்கள் நடத்தப்படவுள்ளன. மாணாக்கர்கள் 75% ஊரகப் பகுதிகளிலிருந்தும், மீதமுள்ள

2022 ஏப்ரல் 11]

25% நகர்ப்புரங்களிலிருந்தும் தேர்வு செய்யப்பட்டு 21 நாட்கள் இம்முகாம்கள் நடைபெறும்.

9. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்

9.1. அறிவியல் மைய செயல்பாடுகள்மூலம் பொதுமக்களிடையே அறிவியல் தொழில்நுட்பம் குறித்த புரிதல்களையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்தவும், நமது மாநிலத்தில் அறிவியல் மையங்களை நிறுவும் நோக்கிலும், 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையமானது நிறுவப்பட்டது. இயக்கிப் பார்க்கக்கூடிய ஆக்கபூர்வமான காட்சிப்பொருட்களுடன் சென்னையில் பி.எம். பிர்லா கோளரங்கத்துடன் பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தையும், திருச்சிராப்பள்ளியில் அண்ணா அறிவியல் மையம் கோளரங்கத்தையும், வேலூரில் மாவட்ட அறிவியல் மையத்தையும், கோயம்புத்தூரில் மண்டல அறிவியல் மையத்தையும் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் நிறுவியுள்ளது. வருகையாளர்களின் அறிவியல் புரிதல்களை மேம்படுத்துவது, அறிவியலின் மேன்மை செயல்முறை மற்றும் கொள்கைகளைப் பற்றி விளக்குதல் போன்ற சிறந்த குறிக்கோள்களுடன் இம்மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

வானவியல் கல்வி மற்றும் விண்வெளி குறித்த அறிவாற்றலை மாணவர்களுக்கு வழங்க சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளி மையங்களில் கோளரங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன.

9.1.1. அறிவியல் மையங்களை நிறுவுதல், அறிவியல் காட்சிக்கூடங்கள், கோளரங்கங்கள் அமைத்தல், செயல்முறை அறிவியல் காட்சிப் பொருட்களின் மேம்பாடு பற்றிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளுதல் மற்றும் மாநிலம் தழுவிய அறிவியல் தொடர்பிலான நிகழ்ச்சிகள் நடத்துதல் ஆகியன தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையத்தின் முக்கிய செயல்பாடுகளாகும்.

9.2. திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் அறிவியல் மையங்களில் புத்தாக்க மையங்கள்

கோயம்புத்தூர் மண்டல அறிவியல் மையம், மற்றும் திருச்சிராப்பள்ளி அண்ணா அறிவியல் மையத்திலும் நிறுவப்பட்டுள்ள புத்தாக்க மையங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 28.10.2021 அன்று திறந்து வைத்தார்.

[2022 ஏப்ரல் 11

9.3. மேற்கொள்ளப்பட்டுவரும் செயல்பாடுகள்

9.3.1. திருச்சிராப்பள்ளி, அண்ணா அறிவியல் மைய கோளரங்கத்தை நவீனமயமாக்குதல்

நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்றவாறு அற்புதமான படக் காட்சிகளைத் தரவல்ல எண்ணிலக்க ஒளிப்படக் கருவிகளுடன் கோளரங்கம் ரூ.3.00 கோடி நிதியில் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. எண்ணிலக்கக் கோளரங்கக் கருவிகளை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த வசதி 2022-2023 ஆம் ஆண்டில் திறந்து வைக்கப்படும்.

9.3.2. நடமாடும் அறிவியல் கண்காட்சி பேருந்து

அறிவியல் கருத்துகளைக் கிராமப்புறங்கள் மற்றும் தொலைதூர பகுதிகளில் பரவலாக்குவதற்காக சிறிய கோளரங்கம் மற்றும் பலவகை இயக்கியறியும் வகையிலான காட்சிப் பொருட்களுடன் நடமாடும் அறிவியல் கண்காட்சிப் பேருந்து 1990 ஜனவரி முதல் தொடர்ந்து இயக்கப்பட்டு வருகிறது. கிராமப்புற மாணாக்கர்களின் பயன்பாட்டிற்காக நடமாடும் அறிவியல் கண்காட்சிப் பேருந்தில் எண்ணிலக்கக் கோளரங்கக் கருவிகளுடன் 5 மீட்டர் விட்டம் கொண்ட நடமாடும் கோளரங்க அரைக்கோள அமைப்பு ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் (சென்னை, அறிவியல் நகரத்தின் நிதியுதவி) வாங்கப்படவுள்ளது.

9.3.3. புத்தாக்க அறிவியல் ஆய்வு விருதுத் திட்டம்

புத்தாக்க அறிவியல் ஆய்வு விருதுத் திட்டம் 6 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் 10 முதல் 15 வயதிற்குட்பட்ட மாணவர்களை எதிர்காலத்தில் அறிவியல் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ஏற்ற வகையில் ஊக்குவிக்கும் ஒரு திட்டமாகும். 2021-2022 ஆம் ஆண்டுக்கு 1,596 மாணாக்கர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு புத்தாக்க விருதுகளும், தலா ரூ.10,000/- பணப் பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன.

9.3.4. 45 ஆவது சென்னை புத்தகக் கண்காட்சியில் பங்கெடுத்தல்

தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கம் நடத்திய 45-வது சென்னை புத்தகக் கண்காட்சி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது, இதில் தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம், 16 பிப்ரவரி, 2022 முதல் மார்ச் 6 ஆம் தேதி

2022 ஏப்ரல் 11]

வரை நடமாடும் அறிவியல் பேருந்துமூலம் அறிவியல் காட்சிப் பொருட்களும் காட்சிப்படுத்தப்பட்டது.

9.3.5. பாதுகாப்பு துறையின் தற்காப்பு தொழில்நுட்பத்தில் சுயசார்பு கண்காட்சி

சென்னை, ஆவடியிலுள்ள போர் ஊர்தி ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனத்துடன் இணைந்து பெரியார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தில் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பாதுகாப்புத் தொழில்நுட்பத்தில் சுயசார்பு என்ற பெருமைமிகு வாரக் கொண்டாட்ட நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

10. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம்

10.1. தமிழக அரசால் ஒரு தன்னாட்சி பெற்ற தலைமை நிறுவனமாக தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம், 1984-ம் ஆண்டு உருவாக்கப்பட்டு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் இயங்கி வருகிறது. இம்மன்றம் நமது மாநிலத்தின் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியை மேம்படுத்த ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மற்றும் களப் பணிகள் சார்ந்த பல அறிவியல் தொழில்நுட்ப திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

10.1.1. 2021-2022 ஆம் ஆண்டில் ஆய்வாளர்கள், அறிவியலாளர்கள், மாணவர்கள், விவசாயிகள், மீனவர்கள், சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் என அனைவரும் பயன்பெறும்வண்ணம் பல்வேறு வகையான 15 அறிவியல் தொழில்நுட்ப திட்டங்கள் ரூ.345.79 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

10.1.2. கூடுதலாக, ஒன்றிய அரசின் அறிவியல் தொழில்நுட்பத் துறைமூலம் ரூ.90.93 இலட்சம் மன்றத்தின் நிர்வாக செலவினங்கள் மற்றும் குறிப்பிட்ட அறிவியல் தொழில்நுட்ப திட்டங்களுக்காகவும் பெறப்பட்டுள்ளது.

10.2. மன்றத்தின் செயல்பாடுகள்

10.2.1. மாணவர் ஆராய்ச்சித் திட்டம்

2021-2022 ஆம் ஆண்டு ரூ.80.32 இலட்சம் செலவில், பல்வேறு துறைகளை சேர்ந்த 2,618 இறுதியாண்டு மாணாக்கர்கள்

[2022 ஏப்ரல் 11

பயன்பெறும் வகையில், 1,071 மாணவர் ஆராய்ச்சித் திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

10.2.2. பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களுக்கான அமைப்பு

இம்மன்றத்தில் பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களுக்கான அமைப்பை ஏற்படுத்துவதற்கு ஒன்றிய அரசின் அறிவியல் தொழில்நுட்பத் துறையால் ரூ.2.16 கோடி நிதி 2021-2022 ஆம் ஆண்டு முதல் மூன்றாண்டுகளுக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தை, அறிவியல் தொழில்நுட்ப புதுமைகளை பரப்புவதன்மூலம் உயர்த்துவதும், அறிவியல் மனப்பாங்கினை வளர்த்தலும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

10.2.3. அறிவியல் தொழில்நுட்ப ஆய்வுத் திட்டங்கள்

பல்வேறு பிரிவுகளில் ஆய்வுகள் மேற்கொள்ள அறிவியலறிஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்கப்படுகிறது. 2021-2022 ஆம் ஆண்டு ரூ.41.50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 15 ஆய்வுத் திட்டங்களைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

10.2.4. இளம் மாணவ அறிவியலறிஞர்கள் செயல் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் மாவட்டந்தோறும் 9 ஆம் வகுப்பு பயிலும் 40 மாணவர்களுக்கு பல்வேறு ஆராய்ச்சி மற்றும் அறிவியல் தொழில்நுட்பங்கள் குறித்து சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 16 மாவட்டங்களிலிருந்து 640 மாணவர்கள் பயனடைவர்.

10.2.5. இளம் அறிவியலறிஞர்களுக்கு ஆதரவு ஊதியம் அளித்தல்

இத்திட்டத்தின்மூலம் நமது மாநிலத்தின் 40 வயதுள்ள ஆய்வாளர்கள் புதிய ஆய்வு மற்றும் தொழில்நுட்பங்களை இரண்டு முதல் ஆறு மாதங்களுக்கு கற்றுக்கொள்ள வாய்ப்பளிக்கப்படுவதுடன், மாதமொன்றுக்கு உதவித்தொகையாக ரூ.10,000/- வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் ரூ.3.50 இலட்சம் செலவில் 12 ஆராய்ச்சியாளர்கள் பயன்பெறுகின்றனர்.

2022 ஏப்ரல் 11]

10.2.6. கருத்தரங்கு, அறிவியல் மாநாடு மற்றும் பயிற்சி பட்டறை நடத்துவதற்கு பகுதி நிதியுதவி அளித்தல்

நமது மாநிலத்திலுள்ள கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு அறிவியல் ஆய்வு குறித்து பரிமாற்றங்கள் செய்யவும், கலந்துரையாடவும், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகள் நடத்தவும் பகுதி நிதியுதவி வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் ரூ.25 இலட்சம் செலவில் 9,500 மாணாக்கர்கள் பயனடையும் வகையில், 125 நிகழ்வுகளுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது.

10.2.7. அறிவியல் தொழில்நுட்பத்தை பரப்புதல்

அறிவியல் தொழில்நுட்பத்தை பரப்பும் நோக்கில், அறிவியல் கண்காட்சிகள், பயிற்சி முகாம்கள், விரிவுரைகள் போன்ற நிகழ்ச்சிகள் நடத்த பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், அரசு சாரா தன்னார்வ அமைப்புகளுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் ரூ.10.00 இலட்சம் செலவில் சுமார் 50 நிகழ்வுகள்மூலம் 4,000 பேர் பயனடைகின்றனர்.

10.2.8. இளம் அறிவியலறிஞர்களுக்கு பயண நிதியுதவி அளித்தல்

இளம் அறிவியலறிஞர்கள் தமது ஆராய்ச்சிகளின் முடிவுகளை பன்னாட்டு மற்றும் உள்நாட்டு கருத்தரங்குகளில் பகிர்ந்துகொள்ள இத்திட்டம் வாய்ப்பளிக்கிறது. ஆண்டுதோறும் ரூ.2.50 இலட்சம் செலவில் 10 அறிவியலறிஞர்கள் பயன்பெறுவர்.

10.2.9. அறிவியல் தொழில்நுட்ப வெளியீடுகளுக்கு நிதியுதவி அளித்தல்

இத்திட்டம் அறிவியல் தொழில்நுட்ப வெளியீடுகளை தமிழில் வெளிக்கொணர ஊக்கமளிக்கிறது. ஆண்டுதோறும் ரூ.3.00 இலட்சம் செலவில் 15 அறிவியல் வெளியீடுகளுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது.

10.2.10. தமிழக அறிவியலறிஞர்கள் விருது (TANSA)

பத்து துறைகளில் அறிவியலாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு ரூ.50,000/- ரொக்கமும், சான்றிதழும் வழங்கி தமிழக அறிவியலறிஞர் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

[2022 ஏப்ரல் 11

ஆண்டுதோறும் ரூ.7.00 இலட்சம் செலவில் 10 அறிவியலாளர்கள் கௌரவிக்கப்படுகிறார்கள்.

10.2.11. புத்தாக்கம் மற்றும் பொருள் உருவாக்கம்

அடையாளம் காணப்பட்ட புதுமையாக்க கண்டுபிடிப்புக்கு நிதி உதவியாக ரூ.50,000/- முதல் ரூ.1,00,000/- வரை வழங்கும் வகையில் ரூ.10.00 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

10.2.12. கிராமப்புற பள்ளிகளில் அறிவியல் கல்வியின் தரத்தை உயர்த்துதல்

ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பாடங்களை நடத்தும் அரசுப் பள்ளி அறிவியல் ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் ரூ.9.00 இலட்சம் செலவில் 500 அறிவியல் ஆசிரியர்கள் பயனடைவர்.

10.2.13. புதுமைத் தொழில்நுட்பமும் பரவலாக்கமும்

பொதுமக்களின் வாழ்வாதார திறன்களை மேம்படுத்துவதற்கு இத்திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் 18 பயிற்சிகள் ரூ.9.00 இலட்சம் செலவில் 480 பயனாளிகள் பயன்பெறும் வகையில் நடத்தப்படுகிறது.

10.2.14. தொழில் துறைக்கான அறிவியல் மற்றும் தொழில்நுட்ப திறன் வளர்த்தல்

ஆண்டுதோறும் ரூ.22.50 இலட்சம் செலவில் இறுதியாண்டு பட்டயம் மற்றும் பொறியியல் பயிலும் மாணாக்கர்களின் திறமைகளை தொழில் துறைக்கேற்றவாறு மேம்படுத்துவதும், அவர்கள் சுய தொழில் தொடங்குவதற்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

10.2.15. ஆய்வு கட்டமைப்பை மேம்படுத்துதல்

நமது மாநிலத்திலுள்ள அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் அறிவியல் ஆய்வுக் கட்டமைப்புகளான ஆய்வுக்கூட வசதி மற்றும் ஆய்வு உபகரண வசதி ஆகியவை மேம்படுத்தப்பட இத்திட்டத்தின் வாயிலாக நிதியுதவி வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் ரூ.15.00 இலட்சம் செலவில் 3 அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ஆய்வுக் கட்டமைப்புகள் மேம்படுத்தப்படுகிறது.

2022 ஏப்ரல் 11]

10.2.16. காப்புரிமை தகவல் மையம்

மன்றத்திலுள்ள காப்புரிமை தகவல் மையம்மூலம் 22 அறிவுசார் சொத்துரிமை பிரிவுகள் தமிழகத்திலுள்ள பல்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் அறிவுசார் சொத்துரிமை பதிவுகளை ஊக்குவிக்க ஏற்படுத்தப்பட்டுள்ளது.

உடன்குடி பனங்கருப்பட்டிக்கு புவிசார் குறியீடு பெற திருநெல்வேலி மாவட்ட பனைப் பொருள் கூட்டுறவு சம்மேளன நிறுவனம் மற்றும் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் உதவியுடன் இம்மையத்தின்மூலம் பதிவு செய்வதற்காக அறிவுசார் சொத்துரிமை அலுவலகத்தில் விண்ணப்பிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

10.2.17. பள்ளி மாணவர்களுக்கான கணிதம், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் செயல்பாடுகள்

இத்திட்டத்தின்கீழ், 6 முதல் 8 ஆம் வகுப்பு பயிலும் தேர்ந்தெடுக்கப்படும் பள்ளி மாணவர்களுக்கு அறிவியல், தொழில்நுட்பம் பொறியியல் மற்றும் கணிதம் செயல்பாடுகளை அறிந்துகொள்ள ரூ.19.00 இலட்சம் செலவில் பயிற்சிகள் அளிக்கப்படும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2022 ஏப்ரல் 11

11. தமிழ்நாடு மாநில உருது கழகம்

11.1. மாநிலத்தில் உருது மொழியை வளர்ப்பதற்கு தமிழ்நாடு மாநில உருது கழகம் தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டது. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இக்கழகத்தின் தலைவர் ஆவார். தற்போது, மாநிலத்தில் உள்ள கல்லூரிகளில் உருது மொழிப் பாடம் நடத்தப்படுகிறது.

11.2. இக்கழகத்தின் பணிகள், தேசிய வணிகர் கூட்டமைப்புடன் இணைந்து கருத்தரங்கம் (Mushairas) நடத்துதல் மற்றும் உருது மொழியில் சிறந்து விளங்கும் கவிஞர்களுக்கும் மற்றும் மாநில அளவில் இடம் பிடித்தவர்களுக்கும் விருது மற்றும் பணப் பரிசு வழங்குதல் ஆகியவை ஆகும்.

12. தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றம்

12.1. தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றச் சட்டம், 2010, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 16.7.2010 அன்று நிறைவேற்றப்பட்டு அதே நாளில் மன்றமும் உருவாக்கப்பட்டது.

12.2. முக்கிய செயல்பாடுகள்

- இம்மன்றத்தால், ஆங்கில மொழியில் (இணைப்புப்பால பயிற்சி) எனும் சிறப்புப் பயிற்சி அண்ணா பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டது.
- ஆங்கில மொழி போதனையில் பிற மொழிச் சொல் பயன்பாடு முறைமைகளில் இன்றைய வளர்ச்சி குறித்து கேம்ப்ரிட்ஜ் பேராசிரியர்களைக் கொண்டு பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்பட்டது.
- "ஒருங்கிணைந்த உற்பத்தி வளர்ச்சியில் அடிப்படைத் திறன்" எனும் "பயிற்றுநர்களுக்கான பயிற்சி" 180 பொறியியல் கல்லூரி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு, பாட ஏடுகளும் பகிர்ந்தளிக்கப்பட்டன.
- கற்பிக்கும் தரத்தை மேம்படுத்தவும், கல்வியின் தரத்தை உறுதிப்படுத்தவும், தேவைப்படும் கூடுதல் உள்கட்டமைப்பு, வலைதள வசதி, மனித வளம் மற்றும் துணைப் பணிகள் போன்றவற்றை கூர்ந்தாய்வு செய்ய ஏதுவாக மென்பொருள் ஸோஹோமூலம் தயாரிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டது.

2022 ஏப்ரல் 11]

- *அரசு மற்றும் அரசு உதவிபெறும் பொறியியல் கல்லூரிகள் மற்றும் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளின் ஆசிரியர்களுக்கு ஏ.டி.எல். எனப்படும் "கற்றலுக்கான தகவமைப்பு வடிவமைப்பு" எனும் தொழில் முறை பயிற்சி வல்லுநர்களைக் கொண்டு கருத்தரங்கம் வலைதள காணொளிமூலம் நடத்தப்பட்டது.*

12.3. மேற்கொள்ள இருக்கும் நடவடிக்கைகள்

- *பொறியியல் தொழில்நுட்பத்தில் முனைப்பான களங்களில் தேசிய மற்றும் பன்னாட்டு பட்டறைகள்/மாநாடுகள்/ கருத்தரங்குகள் நடத்துவதற்கு பகுதி நிதியுதவி அளித்தல்.*

- *அரசு தொழில்நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர் வாயிலாக பொறியியல் மற்றும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளின் முதல்வர்கள் மற்றும் பணியமர்த்து அலுவலர்களுக்கு தொழிற்சாலை பிரதிநிதிகளுடன் சேர்ந்து பயிற்சி அளித்தல்.*

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2022 ஏப்ரல் 11

13. தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகம்

13.1. தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளின் ட்ரோன் அடிப்படையிலான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அண்ணா பல்கலைக்கழகத்தின் மெட்ராஸ் தொழில்நுட்பக் கல்லூரியுடன் (M.I.T.) இணைந்து "தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகம்" நிறுவப்பட்டுள்ளது. இந்தக் கழகம் சட்ட அமலாக்கம், சுரங்கம், வருவாய் மற்றும் நகராட்சி நிர்வாகம், நகர்ப்புற மேம்பாடு, நீர் மேலாண்மை, விவசாயம் மற்றும் அவை சார்ந்த பிரிவு, பேரிடர் மேலாண்மை, சுகாதாரம், வனவியல், தொல்லியல், GIS மற்றும் சுற்றுச்சூழல் ஆய்வுகள் போன்றவற்றில் ட்ரோன் அடிப்படையிலான தீர்வுகள் மற்றும் சேவைகளை வழங்கும்.

13.2. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 25.1.2022 அன்று தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகத்தைத் தொடங்கி வைத்தார். இந்தக் கழகம் நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் 100% அரசுக்குச் சொந்தமான வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அனைத்து வகையான ட்ரோன்களை வடிவமைத்தல், உற்பத்தி மற்றும் விற்பனை செய்தல் தவிர விவசாய பூச்சிக்கொல்லி தெளித்தல், கண்காணிப்பு, தேடல் மற்றும் மீட்பு, அளவீட்டு பகுப்பாய்வு போன்ற ட்ரோன் அடிப்படையிலான ஏராளமான சேவைகளையும் இந்த கழகம் வழங்கும். பல்வேறு முகமைகளுக்கு இக்கழகத்தின்மூலம் வழங்கப்படும் தீர்வுகள்/சேவை மற்றும் தயாரிப்புகள் இம்மாநிலத்தில் வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.

13.3. தற்போது, சென்னையின் முக்கிய நீர்நிலைகளில் கொசுப்புழு நாசினி (Larvicide) தெளிக்க, சென்னை பெருநகர மாநகராட்சிக்கு தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகத்தின் ட்ரோன்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கிரிஷி வித்யான் கேந்திராவிற்கு வேளாண் பணிகளுக்கான ட்ரோன் தெளிப்பான் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளுக்கு 50 கண்காணிப்பு ட்ரோன்களை வழங்குவதற்கும், தமிழ்நாடு காவல் துறையின் கடலோரப் பாதுகாப்புக் குழுவிற்கு ட்ரோன் வழங்குவதற்கும், சென்னை பெருநகர மாநகராட்சிக்கு கொசுப்புழு நாசினி தெளிப்பு ட்ரோன் வழங்குவதற்கும் வழங்கல் ஆணைகள் பெறப்பட்டுள்ளன.

2022 ஏப்ரல் 11]

அமைப்பு முறை வரைபடம்



தொழில்நுட்பக் கல்வி

2021-22 ஆம் ஆண்டில் பொறியியல் கல்லூரிகளில் முதலாம் ஆண்டு பி.ஈ. / பி.டெக். / பி.ஆர்க். மாணாக்கர்கள் சேர்க்கை விவரம்

கல்லூரிகளின் வகைகள்	கல்லூரிகளின் எண்ணிக்கை	ஒப்பளிக்கப்பட்ட இடங்கள்	பொது		பிற்பட்ட வகுப்பினர் (மற்றவர்)		பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லிம்)		மிகவும் பிற்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர்		ஆதிதிராவிடர்		ஆதிதிராவிடர் (அருந்ததியர்)		பழங்குடியினர்		மொத்தம்		மொத்த சேர்க்கை
			ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	
அரசு கல்லூரிகள்	11	4320	600	540	613	415	76	44	494	279	285	233	66	34	20	3	2154	1553	3707
அரசு நிதியுதவி பெறும் கல்லூரிகள்	3	2960	439	331	695	426	66	31	290	185	155	108	36	17	15	2	1696	1100	2796
அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள்	20	8790	1189	921	914	619	138	45	729	414	468	298	88	43	15	12	3541	2352	5893
சுயநிதி கல்லூரிகள்	539	184278	24687	13697	25767	12421	2861	740	13747	5748	8913	5174	1045	616	384	218	77404	38614	116018
மொத்தம்	573	200348	26915	15489	27989	13881	3141	860	15260	6626	9821	5818	1235	710	434	235	84795	43619	128414

தொழில்நுட்பக் கல்வி

2021–22 ஆம் ஆண்டில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் முதலாம் ஆண்டு பட்டய வகுப்பு மாணாக்கர்கள் சேர்க்கை விவரம்

கல்லூரிகளின் வகைகள்	கல்லூரிகளின் எண்ணிக்கை	ஒப்பளிக்கப்பட்ட இடங்கள்	பொது		பிற்பட்ட வகுப்பினர் (மற்றவர்)		பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லிம்)		மிகவும் பிற்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர்		ஆதிதிராவிடர்		ஆதிதிராவிடர் (அருந்ததியர்)		பழங்குடியினர்		மொத்தம்		மொத்த சேர்க்கை
			ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	
அரசு கல்லூரிகள்	51	17935	135	40	3890	367	534	35	3990	328	1940	262	212	47	54	5	10755	1084	11839
அரசு நிதியுதவி பெறும் கல்லூரிகள்	34	14135	239	17	3049	235	465	12	1922	114	768	77	128	12	20	3	6591	470	7061
இணைப்புப் பயிலகங்கள்	4	253	11	1	53	1	5	0	29	0	38	0	0	0	1	0	137	2	139
சுயநிதி கல்லூரிகள்	406	135263	1790	224	9547	643	1479	61	7257	448	12360	1921	1217	265	421	115	34071	3677	37748
உணவு மேலாண்மை மற்றும் உணவு வழங்கல் பயிலகங்கள்	14	30	0	0	6	0	0	0	2	0	6	0	0	0	0	0	14	0	14
மொத்தம்	509	167616	2175	282	16545	1246	2483	108	13200	890	15112	2260	1557	324	496	123	51568	5233	56801
ஆக மொத்தம்			2457		17791		2591		14090		17372		1881		619		56801		

கல்லூரிக் கல்வி

2021–22 ஆம் ஆண்டில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் மாணாக்கர்கள் சேர்க்கை விவரம்

கல்லூரிகளின் வகைகள்	சேர்க்கை விவரம்												ஆக மொத்தம்
	இளநிலை		முதுநிலை		ஆராய்ச்சி படிப்பு		கல்வியியல்		ஆராய்ச்சி மேற்படிப்பு		மொத்தம்		
	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	
அரசு கல்லூரிகள்	47976	61188	7544	15610	705	543	364	589	150	323	56739	78253	134992
அரசு உதவிபெறும் கல்லூரிகள்	30305	36754	5032	9587	143	212	145	1604	178	379	35803	48536	84339
சுயநிதி கல்லூரிகள்	68782	74648	9758	15789	331	530	20647	27791	170	430	99688	119188	218876
மொத்தம்	**147063**	**172590**	**22334**	**40986**	**1179**	**1285**	**21156**	**29984**	**498**	**1132**	**192230**	**245977**	**438207**

2022 ஏப்ரல் 11]

இந்தியா, தமிழ்நாடு மற்றும் முக்கிய மாநிலங்களின் அண்மைக் காலக் கணக்கெடுப்பின் படி மொத்த மாணாக்கர்கள் சேர்க்கை விகிதம் (GER)



[2022 ஏப்ரல் 11

அண்மைக் கால கணக்கெடுப்பின்படி மாநில வாரியான

நாட்டை முறை பல்கலைக்கழகங்கள்



2022 ஏப்ரல் 11]

அண்ணாமலை கால கணக்கெடுப்பின்படி முனையர் பட்டத்திற்கான மாணாக்கர்கள் சேர்க்கை விவரம்



அண்ணைக் கால கணக்கெடுப்பின்படி ஆய்வியல் நிறைஞர் பட்டத்திற்கான மாணாக்கர்கள் சேர்க்கை விவரம்



இணைப்பு-II

(115 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 43-பள்ளிக் கல்வித் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2022-2023

1. முன்னுரை

எண்என்ப ஏனை எழுத்துஎன்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு.

-குறள் 392

எண்ணும் எழுத்தும் எனப்படும் அறிவுக் கண்களைப் பெற்றவர்களே, உயிர் வாழ்வோர் எனக் கருதப்படுவார்கள்.

- கலைஞர் உரை

அனைத்துக் குழந்தைகளுக்கும் தரமான எளிதில் கிடைக்கவல்ல உள்ளடக்கிய கல்வியை அனைத்துப் பள்ளிகளிலும் தரமான உட்கட்டமைப்பு வசதியுடன் வழங்கி முழுமையான வளர்ச்சியை அடையச் செய்வதே தமிழக அரசின் முதன்மை இலக்காகும். பள்ளிக் கல்வியைப் பொறுத்தமட்டில் பள்ளி செல்லும் வயதுள்ள குழந்தைகள் அனைவரையும் பள்ளியில் சேர்த்தல், அவ்வாறு சேர்க்கப்பட்ட குழந்தைகளை இடைநிற்றல் ஏதுமின்றி இடைநிலைக் கல்வி வரை முழுமையாகத் தொடரச் செய்தல், குழந்தைகளின் வயதுக்கேற்ற கற்றல் அடைவுகளை மேம்படுத்துதல், ஆசிரியர்களுக்குச் சிறந்த பயனுள்ள பயிற்சிகளை அளித்து அவர்களின் திறன்களை வளர்த்தல் ஆகியவற்றை நோக்கங்களாகக் கொண்டு தமிழ்நாடு அரசு 2022-2023 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பள்ளிக் கல்வித் துறைக்கு ரூ.36,895.89 கோடியை ஒதுக்கியுள்ளது.

கோவிட் பெருந்தொற்று போன்ற அசாதாரண சூழ்நிலைகளில் பள்ளிகள் திறக்கப்படாத காலத்தில் மாணவர்களின் கற்றல் இழப்புகளை ஈடுசெய்வதற்கு அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. கற்றல் இழப்புகளை ஈடுசெய்யும் வகையில் தன்னார்வலர்களைக் கொண்டு பள்ளி வேலை நேரத்திற்குப் பிறகு மாணவர்களின் குடியிருப்புகளுக்கு அருகிலேயே கற்றல்

[2022 ஏப்ரல் 11

மையங்களை ஏற்படுத்தி புதிய திட்டமாக இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. கடந்த மூன்று மாதங்களில் தமிழக அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இல்லம் தேடிக் கல்வித் திட்டம் முன்னோடித் திட்டமாக உள்ளதுடன் மற்ற மாநிலங்களுக்கும் முன் உதாரணமாக உள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக பெற்றோர்கள் கல்விக்காக மேற்கொள்ளும் தேவையற்ற செலவுகள் கணிசமாகக் குறைந்துள்ளது.

புதிய தொழில்நுட்பங்கள் புகுத்தப்பட்டதன் வாயிலாக ஆசிரியர்களின் நிர்வாகப் பணிச்சுமைக் குறைக்கப்பட்டு, கற்றல், கற்பித்தல் பணித்திறன் மேம்படுத்தப்பட்டுள்ளது. நூற்றுக்கு மேற்பட்ட பதிவேடுகளைக் கணினிமயமாக்குதல் வாயிலாக ஆசிரியர்களின் கல்வி சாராப் பணிகள் குறைக்கப்பட்டு எளிமையாக்கப்பட்டு உள்ளது. புதிய பள்ளி தொடங்குவதற்கான அனுமதி, தடையின்மைச் சான்று வழங்குதல், பள்ளி தரம் உயர்த்துதல் போன்ற நடைமுறைகள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. மேலும் கல்வி இணைச் சான்று, புலப்பெயர்வுச் சான்று போன்றவற்றை மாணவர்கள் பள்ளிக் கல்வித் துறையில் பல்வேறு அலுவலகங்களுக்குச் சென்றுபெறும் நிலையினை மாற்றி, தற்பொழுது இ-சேவை மையங்களிலேயே பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டு உள்ளது. எதிர்வரும் காலங்களில் இதைப்போன்று பள்ளிக் கல்வித் துறையின் அனைத்து சேவைகளையும் இணைய வழியாகவே பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இளைஞர்கள் தங்களுடைய எதிர்காலத் திட்டமிடல் சார்ந்து பல்வேறு இன்னல்களைச் சந்தித்து வருகின்றனர். இதனை நன்கு உணர்ந்த அரசு, 9-லிருந்து 12 ஆம் வகுப்பு மாணவர்கள் பயன்பெறும் வகையில் உயர்கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சிகளை நடத்த நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. 2022 மார்ச் 1 ஆம் நாள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தொடங்கப்பட்ட "நான் முதல்வன்" என்னும் திட்டத்தின் வாயிலாக சிறப்பு வழிகாட்டி நூல் மற்றும் இணையதளம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஆசிரியர்களுக்குப் போதுமான பயிற்சிகள் பள்ளியளவில் வழங்கப்பட்டதுடன், அரசுப் பள்ளி முன்னாள் மாணவர்களைக் கொண்டு வழிகாட்டும் நிகழ்ச்சியும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

2022 ஏப்ரல் 11]

பள்ளிகளும் சமூகமும் இணைந்து செயல்படுவதில் அரசு நம்பிக்கை கொண்டுள்ளது. இதனை உறுதிப்படுத்தும் விதமாகப் பள்ளி மேலாண்மைக் குழு அனைத்து அரசுப் பள்ளிகளிலும் தொடங்கி பள்ளிக்கான திட்டங்களை தீட்டும் விதமாக பெற்றோர்–ஆசிரியர் கூட்டங்கள் சமீபத்தில் நடத்தப்பட்டன. இக்கூட்டத்தில் மாநிலம் முழுவதும் சுமார் 23 இலட்சம் பெற்றோர்கள் பங்கேற்று பள்ளி மேலாண்மைக் குழு, பள்ளி வளர்ச்சி சார்ந்து விவாதித்தனர். இதன் வாயிலாக அரசுப் பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக் குழு புத்துணர்வு பெற்றுள்ளது.

பள்ளிக் கல்வித் துறையின்கீழ் அமைந்துள்ள பல்வேறு இயக்ககங்கள்மூலம் மேலே குறிப்பிட்ட பல்வேறு நோக்கங்களை நிறைவேற்றும் பணிகளை அரசு மேற்கொண்டு வருகின்றது. தொடக்கக் கல்வி இயக்ககம், பள்ளிக் கல்வி ஆணையரகம், பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம் ஆகியவை பள்ளிக் கல்வித் துறையின்கீழ் அமைந்துள்ள இயக்ககங்கள் ஆகும். மேலும், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி (சமக்ர சிக்ஷா), மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), அரசு தேர்வுகள் இயக்ககம், பொது நூலக இயக்ககம், ஆசிரியர் தேர்வு வாரியம் மற்றும் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் ஆகியவையும் இத்துறையின்கீழ் செயல்பட்டு வரும் இயக்ககங்கள் ஆகும்.

2. தொடக்கக் கல்வி, உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்வி

2.1. முன்னுரை

தனிமனிதனின் ஒவ்வொரு சாதனைக்கும் பள்ளிக் கல்வியே அடித்தளமாக விளங்குவதால், மாணாக்கரின் உயர் கல்வி மற்றும் வேலைவாய்ப்பை மேம்படுத்துவதில் இது முக்கிய பங்காற்றுகிறது. 21 ஆம் நூற்றாண்டில் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் மாணவர்களை சூழலுக்கேற்ற வகையில் சிந்திக்கும் ஆற்றல் பெற்றவர்களாக உருவாக்குவது பள்ளிகளின் கடமை ஆகும். மாணவர்களுக்குப் பாட அறிவோடு வாழ்வியல் திறன்களையும் அளித்து அன்றாட வாழ்வில் சவால்களை எதிர்கொள்ளும் தகுதி உள்ளவர்களாக உருவாக்குவதில் நமது கல்வி அமைப்பு கவனம் செலுத்துகிறது.

[2022 ஏப்ரல் 11

2.2. நோக்கங்கள்

- அனைத்து பள்ளி வயதுக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்தல் மற்றும் தக்க வைத்தல்
- 100 சதவீதம் பள்ளி வசதி ஏற்படுத்துதல்
- உள்ளடக்கிய கல்விச் சூழலை உருவாக்குதல்
- அனைத்து குழந்தைகளின் பாதுகாப்பு, உடல்நலம் மற்றும் மனநலத்தினை உறுதி செய்தல்
- தரமான கல்வியை வழங்குதல் மற்றும் கற்றல் விளைவுகளை மேம்படுத்துதல்
- கல்வி மற்றும் கல்வி இணைச் செயல்பாடுகளில் மாணவர்கள் பங்கேற்பதற்கான வாய்ப்புகளை உருவாக்குதல்
- அரசுப் பள்ளி மாணவர்கள் நாட்டின் தலைசிறந்த கல்வி நிலையங்கள்/நிறுவனங்களில் சேர்ந்து பயில வாய்ப்புகளை உருவாக்குதல்
- அனைத்துப் பள்ளிகளிலும் தரமான உட்கட்டமைப்பு வசதி, தூய்மையான வளாகம் மற்றும் பராமரிப்பினை உறுதி செய்தல்
- குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009-ஐ நடைமுறைப்படுத்துதல்

2.3. பள்ளி வசதி

அனைத்துக் குழந்தைகளுக்கும் பள்ளி வசதிகளை எளிதில் கிடைக்கச் செய்வதே கல்வியின் அடிப்படை நோக்கமாகும். புதிதாகத் தொடக்கப் பள்ளிகள் தொடங்குதல், பள்ளிகளைத் தரம் உயர்த்துதல், புதிய பள்ளிகள் தொடங்க இயலாத இடங்களில் போக்குவரத்து மற்றும் பாதுகாவலர் வசதிகளை ஏற்படுத்துதல், மக்கள் நெருக்கம் குறைவாக உள்ள பகுதிகளில் உண்டு உறைவிடப் பள்ளிகள் மற்றும் விடுதிகள் தொடங்குதல்மூலம் 100 விழுக்காடு பள்ளி வசதி வழங்கப்பட்டு வருகிறது. நிலைத்த மேம்பாட்டை அடைவதற்கான இலக்குகளில் இதுவும் ஒன்று.

மேற்காண் குறிக்கோள்களை அடைவதற்கு, தமிழ்நாட்டின் அனைத்துப் பள்ளிகளும் புவியியல் தகவல் முறைமை

2022 ஏப்ரல் 11]

தொகுப்பின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. இத்தகவல் முறைமையைப் பயன்படுத்தி, கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட விதிகளின்படி புதிய பள்ளிகள் ஏற்படுத்தப்படும். போக்குவரத்து வசதி, சாலை வசதி, பள்ளி வசதி இல்லாத குடியிருப்புப் பகுதிகளைச் சார்ந்த குழந்தைகள் பள்ளிக்கு எளிதாகச் சென்று வர போக்குவரத்து மற்றும் பாதுகாவலர் வசதி வழங்கப்படுகிறது. இவ்வசதி 2021-2022 ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதும் 25,346 மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. தொலைதூர, மலை/ வனப் பகுதிகளில் பள்ளி வசதி இல்லாத குடியிருப்புப் பகுதியில் வசிக்கும் குழந்தைகளுக்கு 9 மாவட்டங்களில் 14 உண்டு உறைவிடப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டு இப்பள்ளிகளில் 1,200 மாணாக்கர்கள் பயின்று வருகின்றனர். மேலும், 14 மாவட்டங்களில் கல்வியில் பின்தங்கிய 44 ஒன்றியங்களில் பெண் குழந்தைகளுக்கான 61 கஸ்தூரிபாய் காந்தி பள்ளிகள் மற்றும் 44 மாணவியர் விடுதிகள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன. இப்பள்ளிகளில் 9,560 மாணவிகள் பயின்று வருகின்றனர். இச்செயல்பாட்டிற்காக 2021-2022 ஆம் ஆண்டில் ரூ.2283.382 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2.3.1. பள்ளி செல்லாக் குழந்தைகளுக்கான செயல்பாடுகள்

கோவிட்-19 பெருந்தொற்று மற்றும் பிற காரணங்களுக்காக 6-19 வயதுக்குட்பட்ட (ஒன்றிலிருந்து பன்னிரெண்டாம் வகுப்பு வரை) பள்ளியிலிருந்து வெளியேறிய மற்றும் பிற இடங்களுக்கு இடம்பெயர்ந்த குழந்தைகளைக் கண்டறிந்து அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய, பள்ளிக் கல்வித் துறையின் கல்வி மேலாண்மைத் தகவல் முறைமை இணையதளத்துடன் (EMIS PORTAL) ஒருங்கிணைக்கப்பட்ட புதிய கைபேசி செயலிமூலம் 10.8.2021 முதல் 15.10.2021 வரை அனைத்துக் குடியிருப்புகளிலும் வீடு வாரியான ஆய்வு நடத்தப்பட்டது. இதுவரை 1,88,487 குழந்தைகள் அடையாளம் காணப்பட்டு, அவர்களின் வயது/தகுதிக்கு ஏற்ற வகுப்புகளில் (1 முதல் 12-ம் வரை) சேர்க்கப்பட்டு உள்ளனர்.

கணக்கெடுப்பின்போது 100% பெண் குழந்தைகள்/ சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகள்/மூன்றாம் பாலினத்தவர்/ கோவிட்-19 காரணமாக பெற்றோரை இழந்தவர்கள்/இடம் பெயர்ந்த குழந்தைகள் அனைவரும் அடையாளம் காணப்பட்ட உடனேயே அருகிலுள்ள பள்ளிகளில் முறையாக, வயதுக்கு ஏற்ற வகுப்புகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும் இக்குழந்தைகளுக்கு, நலத்திட்டப் பொருள்களான பாடப் புத்தகங்கள், சீருடைகள்,

[2022 ஏப்ரல் 11

புத்தகப்பை, காலணிகள், நோட்டுப் புத்தகங்கள் போன்றவை வழங்கப்பட்டு முறையாக பள்ளிகளில் அனுமதிக்கப்படுகின்றனர். இந்தக் குழந்தைகள் மேல்நிலைப் பள்ளிக் கல்வியை முடிக்கும் வரை சிறப்பு கவனம் செலுத்தி கண்காணிக்கப்படுகிறார்கள். இச்செயல்பாட்டிற்கென 2021-2022 ஆம் ஆண்டில் ரூ.869.63 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2.4. உள்ளடக்கிய கல்வி

பள்ளிக் கல்வித் துறையில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் குறிப்பாக சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு முழுமையான வளர்ச்சி மற்றும் இருப்பிடத்திற்கு அருகாமையில் பள்ளிச் சூழலை ஏற்படுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. 1,36,570 சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகள் அரசுப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். மருத்துவ முகாம்கள், உதவி உபகரணங்கள், உதவித் தொகை, வீட்டுப் படி, போக்குவரத்து மற்றும் பாதுகாவலர் வசதி போன்றவற்றின் வாயிலாக இவர்கள் பயனடைகின்றனர். சுகாதாரத் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சமூக நலத் துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் போன்ற துறைகளுடன் ஒருங்கிணைந்து தமிழ்நாட்டில் உள்ளடக்கிய கல்வியின் இலக்கினை அடைவதற்கு பின்வரும் குறிக்கோள்கள் வரையறுக்கப்பட்டுள்ளன:

- சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து ஆயத்த பயிற்சிகள் வழங்குதல்
- குழந்தைப் பிறப்பிலிருந்து 18 வயது வரை சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கென நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்குதல்
- ஒற்றைச் சாளர முறையிலான தரவு மேலாண்மையை நிறுவுதல்
- உதவி உபகரணங்கள், துணைக் கருவிகள் வழங்குதல்
- மாற்றுத் திறனாளிகளுக்குத் தடையில்லாப் பள்ளிக் கட்டமைப்புகளை உறுதி செய்தல்
- பொருத்தமான கற்றல்-கற்பித்தல் உபகரணங்கள், வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை வசதிகள் மற்றும் சிகிச்சைகள் வழங்குதல்

2022 ஏப்ரல் 11]

- சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளை பிற குழந்தைகளுடன் ஒருங்கிணைத்து கற்றல் செயல்பாட்டில் ஈடுபடுத்த ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்
- சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு சிறப்பு ஆசிரியர்கள்மூலம் உரிய கவனம் செலுத்துதல்

ஆரம்ப நிலையில் கண்டறிதல், விரைவான சேர்க்கைக்கு உதவி புரியும்" என்கின்ற தெளிவான அணுகுமுறை சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு நிரந்தரமான பயன்பாடுகளை அளிக்கும் என்ற உறுதியான நோக்கத்தை மாநில அரசு வேறெங்குமில்லாத முன் முயற்சியாகவும் முதல் செயல்பாடாகவும் வழங்கியுள்ளது.

இதன் தொடர்ச்சியாக சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளைக் கண்டறிவதற்காக நடத்தப்பட்ட முகாமில் கலந்துகொண்ட 3 இலட்சம் மாணவர்களில் 1.5 இலட்சம் மாணவர்கள் சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளாக கண்டறியப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து மேற்கண்ட குழந்தைகளின் பெற்றோர்களுக்கு போதிய விழிப்புணர்வு வழங்கப்பட்டது. மாநில அளவில் மேற்கண்ட பெற்றோர்களுக்கு குழந்தைகளின் வளர்ச்சி நிலையில் எட்டப்படும் படிநிலைகள் மற்றும் வேறுபாடு சார்ந்து போதிய விளக்கங்கள் வழங்கப்பட்டன. மாநிலத்தின் முதல் முயற்சியாக 5,300 பெற்றோர்களும் 2,200 சிறப்பு ஆசிரியர்களும் விழிப்புணர்வு வழங்குவதற்காக உயர் தொழில்நுட்ப ஆய்வகத்திற்கு அழைக்கப்பட்டனர்.

மாற்றுத் திறன் மாணவர்களினுடைய கற்றல் முன்னேற்றம் மற்றும் அவர்களுக்குத் தேவையான அரசினுடைய உதவி மற்றும் திட்டங்களைத் தெரிந்துகொள்வதற்காக கைப்பேசி செயலி உருவாக்கப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக 2,401 சிறப்பு ஆசிரியர்கள், சிகிச்சை அளிப்போர் மற்றும் தலைமை ஆசிரியர்களுக்கு இச்செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

IALEP (Individualised Academic Therapeutic Learning Enhancement Programme) என்னும் தனிப்பட்ட மாணவனுக்கான கற்றல் மற்றும் சிகிச்சை முன்னேற்ற திட்டம் வாயிலாக வீட்டு வழிக் கல்வி பயிலும் 7,786 மாற்றுத்திறன் மாணவர்களுக்காக

[2022 ஏப்ரல் 11

ஒருவருக்கு ரூ.10 ஆயிரம் வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, வீட்டுச் சூழலுக்கேற்ற தேவையான மாற்றம், இயன்முறை மருத்துவ சிகிச்சை, ஆலோசகர் உள்ளிட்ட வசதிகளை ஏற்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் தேவையான கருவிகள் மற்றும் கற்றல் கற்பித்தல் உபகரணங்களும் வழங்கப்படும்.

பள்ளிக் கல்வித் துறையில் மாவட்ட அளவில் உள்ள அனைத்து அலுவலர்கள் மற்றும் சிறப்பு பயிற்றுநர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோர்களுக்கு கற்றல் குறைபாடு (SLD), ஆட்டிசம், கட்டாயக்கல்வி உரிமைச் சட்டம் (RTE), மாற்றுத் திறனாளிகள் உரிமைச் சட்டம் (RPWD) மற்றும் குறைதீர் கற்றல் சார்ந்து பயிற்சி வழங்கப்பட்டது. மாநிலத்தில் முதன்முறையாக அரசு பள்ளிகளில் பணியாற்றும் சிறப்புப் பயிற்றுநர்களுக்கு இந்திய சைகை மொழிச் சங்கம் வாயிலாக சான்றிதழுடன் கூடிய சைகை மொழி பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

உள்ளடக்கிய கல்வியின்கீழ் உதவி உபகரணங்கள் உட்பட அனைத்துச் செயல்பாடுகளையும் மேற்கொள்ள 2021-2022 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.9,312.13 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு மாற்றுத் திறன் மாணவர்களுக்காகச் செலவிடப்பட்டுள்ளது.

2.5 தரமான கல்வி

தமிழ்நாடு அரசு அனைத்து நிலைகளிலும் அனைவருக்கும் கல்வி என்ற நிலையினை அடைந்துள்ளது. அண்மையில் ஒன்றிய அரசால் வெளியிடப்பட்டுள்ள பள்ளிக் கல்வி தரக் குறியீட்டு அறிக்கையில் தமிழ்நாடு 2-வது இடத்தைப் பெற்றுள்ளது. பள்ளி வசதி ஏற்படுத்துதல், சமத்துவம், உட்கட்டமைப்பு, நிருவாகம் ஆகிய இனங்களில் தமிழ்நாடு சிறப்பாக செயல்பட்டு நாட்டிலேயே சிறந்த மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது. எனினும், கற்றல் அடைவுகளில் இந்தியாவின் 37 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 23-வது இடத்தையே பெற்றுள்ளது. பள்ளிக் கல்வியின் தரத்தை குறிப்பாக தொடக்கக் கல்வியின் தரத்தை உடனடியாக மேம்படுத்துவதன் அவசியத்தை இந்நிலை உணர்த்துகிறது. தரமான தொடக்க மற்றும் இடைநிலைக் கல்வியே ஆக்கப்பூர்வமான கற்றல் அடைவுகளை உருவாக்கும் நிலைத்த மேம்பாட்டு இலக்கை அடைவதற்கு இது இன்றியமையாத தேவையாகிறது.

2022 ஏப்ரல் 11]

2.5.1 இல்லம் தேடிக் கல்வித் திட்டம்

பெருந்தொற்றுக் காலத்திற்குப் பின் கற்றல் இழப்பை ஈடுசெய்வதற்காகக் கொண்டுவரப்பட்ட ஒரு சிறப்புத் திட்டம் இல்லம் தேடிக் கல்வி ஆகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அக்டோபர் 2021 இல் இத்திட்டம் தொடங்கப்பட்டது. 1 முதல் 8 வகுப்புகள் வரை பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கற்றல் இடைவெளி, கற்றல் இழப்புகளை ஈடுசெய்வது மற்றும் இடைநின்ற மாணவர்களை மீண்டும் பள்ளிகளில் சேர்ப்பது என்ற உயரிய நோக்கங்களுடன் 1.81 இலட்சம் தன்னார்வலர்களால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தை சீரிய முறையில் வழிநடத்துவதற்காக மாநிலம், மாவட்டம் மற்றும் பள்ளி ஆகிய மூன்று அடுக்கு நிலைகளில் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அனைத்து மாணவர்களுக்கும் இத்திட்டம் சென்றடைவதை உறுதி செய்யும் பொருட்டு, தன்னார்வலர்கள் தாமே முன் வந்து இதற்கு ஆதரவு அளிக்குமாறு அரசால் அழைப்பு விடுக்கப்பட்டது. இணையவழியில் 6.72 இலட்சம் தன்னார்வலர்கள் இந்நாள் வரையில் கல்வி கற்பிக்க பதிவு செய்துள்ளனர். இத்திட்டம் முதற்கட்டமாக நவம்பர் 26, 2021 அன்று 12 மாவட்டங்களில் தொடங்கப்பட்டது. அம்மாவட்டங்களில் கிடைக்கப்பெற்ற நல்ல வரவேற்பின் அடிப்படையில் மீதமுள்ள 26 மாவட்டங்களிலும் ஜனவரி 1, 2022 முதல் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் தினமும் 1½ மணிநேரம் மாலை 5.00 மணி முதல் 6.30 மணி வரை மாணவர்களுக்கு கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இல்லம் தேடிக் கல்வி மையங்களில் மாணவர்கள் மகிழ்வுடன் வந்து கற்றலின் இனிமையை உணர்கிறார்கள். அரசால் அளிக்கப்பட்ட மாபெரும் விழிப்புணர்வால் பெண்கள் முதல்முறையாக தங்கள் குடியிருப்பு பகுதியிலுள்ள மாணவர்களுக்கு கல்வியில் உதவுவதற்கு முன்வந்துள்ளார்கள். தன்னார்வலர்களுக்கு அவர்களின் சமூகக் கடமை, சமூகப் பங்களிப்பு மற்றும் மாணவர்களைக் கையாளும் திறன் போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இல்லம் தேடிக் கல்வி மையங்கள் தன்னார்வலர்களுக்கு தோழமையுடன் சமூகக் கடமையாற்றும் வாய்ப்பு அளிக்கக் கூடிய இடமாகத் திகழ்கின்றன.

[2022 ஏப்ரல் 11

இத்திட்டத்தின் சிறப்பு அம்சம் இல்லம் தேடிக் கல்வி மையங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கற்றல் அணுகுமுறையே ஆகும். இங்கு சூழல்சார்ந்த மற்றும் குழந்தைகள் எளிமையாகப் பங்கேற்கும் வகையில் அடிப்படை எண்ணறிவிற்கும் எழுத்தறிவிற்கும் முக்கியத்துவம் தரப்படுகிறது. செயல்வழிக் கற்றல் முறை பின்பற்றப்படுகிறது. உதாரணமாக பாடல்கள், நடனம், பொம்மலாட்டம், கதை சொல்லுதல் போன்றவைமூலம் கற்பிக்கப்படுகிறது. இதற்கான பாடப்பொருள், மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்மூலம் வல்லுநர்களால் உருவாக்கப்படுகிறது. ஒவ்வொரு தன்னார்வலருக்கும் எளிதாகக் கற்பிப்பதற்கு ஏதுவாக பயிற்சி கையேடு, கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. தன்னார்வலர்கள், மாணவர்களின் கற்றல் நிலைகளைத் தெரிந்துகொள்வதற்காக 'கைப்பேசி செயலி'மூலம் மதிப்பீடு மேற்கொள்ளும் வசதி உருவாக்கப்பட்டுள்ளது.

தன்னார்வலர்கள், 1 முதல் 5 ஆம் வகுப்பு மற்றும் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை என இரு பிரிவுகளாக மாணவர்களுக்கு கடந்த நான்கு மாதங்களாகக் கற்பிப்பதில் ஏற்பட்டுள்ள அனுபவத்தின் அடிப்படையில், அவர்கள் தாங்களாகவே புதுமையாக கற்பித்தல் கற்றல் பொருள்களை உருவாக்கியுள்ளார்கள். இவை மாணவர்களின் கற்றல் வேகம் மற்றும் சூழலுக்குப் பொருத்தமானதாகவும், அவர்கள் ஆழமான கற்றலில் ஈடுபடவும் உதவுகின்றன. தன்னார்வலர்கள், மாணவர்களின் கற்றலில் துணை நிற்பதுடன், மாணவர்கள் சுயமாக இயங்குவதற்கும், அவர்கள் அனுபவங்கள் மூலமாக கருத்துகள், நிகழ்வுகள், சூழ்நிலைகளைப் புரிந்துகொள்வதற்கும் ஊக்குவிக்கின்றார்கள்.

தன்னார்வலர்களுடன் 'டெலிகிராம் செயலி'மூலம் வாராந்திர உரையாடல், தனித்திறன் கொண்டாட்டம், மாதந்தோறும் புத்தாக்கப் பயிற்சி, TLM கண்காட்சிகள், தன்னார்வலர்கள் சந்திப்பு போன்ற பல்வேறு செயல் கூறுகள் இத்திட்டத்திற்கு மேலும் வலுவூட்டுகிறது. தினமும் 30 இலட்சம் மாணவர்கள் இல்லம் தேடிக் கல்வி மையங்களுக்கு வருகை புரிகிறார்கள். சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பு, தன்னார்வலர்கள் மாணவர்களுடன் வைத்திருக்கும் நல்லுறவு, திறந்த மனதுடன் அவர்களை மையங்களுக்கு வரவேற்பது முதலியன மாணவர்கள் இல்லம் தேடிக் கல்வி மையங்களில் கற்றுக்கொள்வதற்கு அடிப்படையாக அமைகிறது.

2022 ஏப்ரல் 11]

இத்திட்டம் பெற்றோர்கள், சமூக உறுப்பினர்கள் மற்றும் ஆசிரியர்களை உள்ளடக்கிய பள்ளி மேலாண்மைக் குழுக்களுடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது. இக்குழுவினர் தன்னார்வலர்களுக்கு நல்ல ஒத்துழைப்பு அளிக்கிறார்கள். மாணவர்களிடம் கல்வி மற்றும் முழுமையான வளர்ச்சியை அடையச் செய்வதே பொதுவான குறிக்கோளாகும். பெருந்தொற்று காலத்தில் இல்லம் தேடிக் கல்வித் திட்டம், மாணவர்களிடையே மேம்படுத்தப்பட்ட அர்த்தமுள்ள கற்றலை உருவாக்கியதோடு பெண்கள் தங்கள் நேரத்தைப் பயனுள்ள வகையில் பங்களிக்கவும் வழிவகை செய்துள்ளது. மேலும் இத்திட்டம் பள்ளி மேலாண்மைக் குழுக்கள் கல்வியின் தர முன்னேற்றதிற்கு அனைவருடன் இணைந்து பங்காற்றவும் வழிவகையினை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. 2021-2022 ஆம் ஆண்டில் இல்லம் தேடிக் கல்வித் திட்டத்திற்காக ரூ.97 கோடி செலவிடப்பட்டுள்ளது.

2.5.2. எண்ணும் எழுத்தும் இயக்கம்

எதிர்வரும் 2025 ஆம் ஆண்டிற்குள் 1 முதல் 3 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்துக் குழந்தைகளும் வாசித்தல், எழுதுதல் மற்றும் அடிப்படை எண்ணறிவுத் திறன்களைப் பெறுவதை உறுதி செய்வதே இவ்வியக்கத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

ஆசிரியர்களுக்கென தலைமைப் பண்பு பயிற்சி, கையேடு, மாணாக்கரின் நிலைக்கேற்ற கற்றல் உபகரணங்கள் வழங்குதல் இவ்வியக்கத்தின் முதன்மைச் செயல்பாடாகும். ஒவ்வொரு குழந்தையின் அடைவுத் திறனும் தனித்தனியே கண்காணிக்கப்படும். 2021-2022 ஆம் ஆண்டில் எண்ணும் எழுத்தும் இயக்கத்திற்கென ரூ.66.70 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.5.3. கற்றல் மேம்பாட்டுக்கான செயல்பாடுகள்

கற்றல் செயல்பாடுகளில் ஏற்பட்ட இடைவெளியைக் குறைக்க அனைத்து மாணவர்களுக்கும் இணைப்பு கட்டகப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. 1 முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் பயிற்சித் தாள்களுடன்கூடிய பாடவாரியான பயிற்சிப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. பயிற்சித் தாளில் இடம்பெற்றுள்ள விரைவு துலங்கல் குறியீடுகள் (QR Code) வாயிலாக மின்னணு சாதனங்களின் உதவியுடன் கூடுதல் பாடப்பொருள்களைக் காணொலிப் படங்களாகப்

[2022 ஏப்ரல் 11

பார்க்கவும் மதிப்பீட்டு வினாக்களைக் கொண்டு பயிற்சி பெறவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இச்செயல்பாடுகளுக்கென 2021-2022 ஆம் ஆண்டில் ரூ.34.78 கோடி செலவிடப்பட்டுள்ளது.

2.5.4. வினாடி வினா போட்டி

வினாடி வினா போட்டிகள் நடத்துவதன் உயரிய நோக்கம், மாணவர்கள் பாடப் புத்தகங்களைத் தாண்டி தங்களது பொது அறிவை வளர்த்துக் கொள்ளவும், தாங்கள் கற்றதை அன்றாட வாழ்வியல் நிகழ்வுகளோடு தொடர்புபடுத்திக் கொள்ளவும் ஆகும்.

2021-2022 ஆம் கல்வியாண்டில் வினாடி வினா போட்டியானது இணையதள வழியாக (Online) அனைத்து 6,177 அரசு உயர்/மேல்நிலை வகுப்பு மாணவர்களுக்காக நடத்தப்பட்டது. ஒவ்வொரு வகுப்பிலும் சிறந்த 10 மாணவர்கள் மாவட்ட வாரியாக தெரிவு செய்யப்பட்டு அவர்களை ஊக்கப்படுத்தவும், மேலும் கற்றலின்மீது ஆர்வத்தைத் தூண்டும் விதமாகவும் சான்றிதழ் மற்றும் கேடயம் பரிசாக வழங்கப்பட்டுள்ளது. இதற்காக மொத்தம் ரூ.30.885 இலட்சம் நிதி செலவிடப்பட்டுள்ளது. இம்மாணவர்களில் இருந்து ஒவ்வொரு மாவட்டத்திலும் 100 மாணவர்களுக்கு அரசே கட்டணம் செலுத்தி தேசிய திறனறித் தேர்வில் பங்கேற்க ஊக்குவிக்கிறது.

2.5.5. கல்விசார் குறியீடுகள் மற்றும் நிலைத்த மேம்பாட்டு இலக்குகள்

கல்விசார் குறியீடுகள் பள்ளிகள், ஆசிரியர்கள் மற்றும் மாணாக்கர் தொடர்பான குறியீடுகளை ஒப்பிடுவதற்கு உதவும் புள்ளிவிவரங்கள் ஆகும். பொருத்தமான கல்விசார் குறியீடுகளைக் கொண்டு கற்றல் செயல்பாடுகளின் விளைவுகளை மதிப்பிட இயலும். கல்விசார் குறியீடுகள் மற்றும் நிலைத்த மேம்பாட்டு இலக்குகள் பள்ளிக் கல்வியின் நிலையையும் இலக்குகளுக்கு ஏற்ப திட்டங்களில் செய்யப்பட வேண்டிய மாற்றங்களையும் இனங்காண உதவுகிறது. சில கல்விசார் குறியீடுகளின் வரையறைகள் பின்வருமாறு:

2.5.5.1. மொத்த மாணவர் சேர்க்கை விகிதம்

தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலை வகுப்புகளில் வயதுவரம்பு ஏதுமின்றி சேர்க்கப்பட்ட குழந்தைகளின்

2022 ஏப்ரல் 11]

எண்ணிக்கைக்கும் மக்கள் தொகையில் அதே நிலையில் ஒத்த வயதுடைய குழந்தைகளின் எண்ணிக்கைக்கும் உள்ள விகிதம் ஆகும்.

$$\text{மொத்த மாணவர் சேர்க்கை விகிதம்} = \frac{\text{சேர்க்கப்பட்ட குழந்தைகள்}}{\text{மக்கள் தொகையில் ஒத்த வயதுடைய குழந்தைகள்}} \times 100$$

தொடக்க மற்றும் நடுநிலை வகுப்புகளில் மாணவர் சேர்க்கை மாநிலத்தில் முழுமை நிலையை அடைந்துள்ளது. மொத்த மாணவர் சேர்க்கை விகிதம் தொடக்க மற்றும் நடுநிலை வகுப்புகளில் 100-க்கு மேலும் உயர்நிலை வகுப்புகளில் 94.20 ஆகவும், மேல்நிலை வகுப்புகளில் 78.60 ஆகவும் உள்ளது.

2.5.5.2. நிகர மாணவர் சேர்க்கை விகிதம்

6 முதல் 17 வயதுக்குட்பட்ட 1 முதல் 12 ஆம் வகுப்பில் சேர்க்கப்பட்டு பயிலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கும் மக்கள் தொகையில் அதே வயதிற்குட்பட்ட மாணவர்களின் எண்ணிக்கைக்கும் உள்ள விகிதமாகும். தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலையில் நிகர மாணவர் சேர்க்கை விகிதமானது முறையே 99.90, 99.40, 78.40 மற்றும் 65.76 ஆக உள்ளது.

2.5.5.3. தக்கவைத்தல் விகிதம்

தக்கவைத்தல் விகிதம் என்பது தற்போது 5, 8, 10 ஆம் வகுப்பு மாணவர் சேர்க்கை எண்ணிக்கைக்கும் முறையே 4, 7, 9 ஆண்டுகளுக்கு முன்னர் ஒன்றாம் வகுப்பில் மாணவர் சேர்க்கை செய்யப்பட்ட எண்ணிக்கைக்கும் இடையே உள்ள விகிதம் ஆகும். நம் மாநிலத்தில் தக்க வைத்தல் விகிதம் தொடக்க வகுப்புகளில் 99.30 ஆகவும், நடுநிலை வகுப்புகளில் 98.70 ஆகவும், உயர்நிலை வகுப்புகளில் 96.75 ஆகவும் உள்ளது.

2.5.5.4. இடைநிற்றல் விகிதம்

மொத்த மாணவர் சேர்க்கைக்கும் ஒரு குறிப்பிட்ட வகுப்பில் அதே ஆண்டில் கல்வியைத் தொடர இயலாத மாணவர்களுக்கும் இடையே உள்ள விகிதம் ஆகும். இடைநிற்றல் விகிதம் தொடக்க கல்வியில் 0.70 ஆகவும், நடுநிலைக் கல்வியில் 1.30 ஆகவும், இடைநிலை கல்வியில் 3.30 ஆகவும் உள்ளது.

[2022 ஏப்ரல் 11

2.5.5.5. மாணவர் ஆசிரியர் விகிதம்

மாணவர் ஆசிரியர் விகிதம் = பள்ளியில் குறிப்பிட்ட பிரிவில் மொத்த மாணவர் சேர்க்கை / அக்குறிப்பிட்ட பிரிவில் உள்ள மொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கை

புதிய ஆசிரியர்கள் உரிய நேரத்தில் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்படுவதால் நாட்டிலேயே மிகக் குறைந்த மாணவர் ஆசிரியர் விகிதம் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. மாணவர் ஆசிரியர் விகிதம் தொடக்க நிலையில் 19 ஆகவும், நடுநிலையில் 20.90 ஆகவும் உயர்நிலையில் 22 ஆகவும், மேல்நிலையில் 30 ஆகவும் உள்ளது.

2.5.5.6. பாலின சமநிலைக் குறியீடு

பாலின சமநிலைக் குறியீடு என்பது பள்ளிச் சேர்க்கையில் உள்ள மாணவிகள் எண்ணிக்கைக்கும் மாணவர்கள் எண்ணிக்கைக்கும் உள்ள விகிதம் ஆகும்.

பாலின சமநிலைக் குறியீடு = மொத்த மாணவிகளின் சேர்க்கை / மொத்த மாணவர்களின் சேர்க்கை

பாலின சமநிலைக் குறியீடு உயர்நிலையில் 0.95 ஆகவும் மேல்நிலையில் 1.10 ஆகவும் உள்ளது.

2.5.5.7. பாலின சமத்துவக் குறியீடு

பள்ளிச் சேர்க்கையில் பாலின சமத்துவத்தினை அறிய பாலின சமத்துவக் குறியீடு பயன்படுகிறது.

பாலின சமத்துவக் குறியீடு = குறித்த நிலையில் பெண்களின் சேர்க்கை பங்கு / அந்நிலையில் அவ்வயதுடைய பெண்களின் பங்கு

பாலின சமத்துவக் குறியீடு உயர்நிலையில் 1.01 ஆக உள்ளது.

மாணவர் சேர்க்கை விகிதம், இடைநிற்றல் விகிதம், தேசிய அடைவு ஆய்வு (NAS) முடிவுகள், மாணவர்-ஆசிரியர் விகிதம்

2022 ஏப்ரல் 11]

ஆகியவை பள்ளிக் கல்வித் துறையின் நிலைத்த மேம்பாட்டு இலக்கை அடைவதற்கான முக்கியக் காரணிகளாகும்.

2.6. கல்வி இணைச் செயல்பாடுகள்

2.6.1. விளையாட்டு மற்றும் உடல்நலக் கல்வி

பள்ளி மாணவர்களிடையே விளையாட்டு மனப்பான்மையை வளர்ப்பது மாணவர்களின் உடல் மற்றும் மனநலனுக்கு முக்கியமானதாகும். மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் மாணவர்களைப் பங்கு பெறச் செய்ய பயிற்சியும் ஊக்கமும் அளிக்கப்படுகிறது. விளையாட்டுப் போட்டிகளுக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் காரணமாக, ஒவ்வோர் ஆண்டும் சுமார் ரூ.34 கோடி மதிப்பிலான விளையாட்டு உபகரணங்கள் மற்றும் கருவிகள் பெற்று வழங்கப்படுகின்றன. இதன் தொடர்ச்சியாக அரசுப் பள்ளி மாணவர்களின் திறன்களைக் கண்டறியும் பொருட்டு ஒவ்வோர் ஆண்டும் உடல் திறனாய்வுத் தேர்வு நடத்தப்படுகிறது. மேலும் இவ்வாண்டு ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் மகாபலிபுரத்தில் நடைபெற உள்ள சதுரங்க ஒலிம்பியாட் போட்டியினை அரசுப் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் பார்வையிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2.6.2. நாட்டு நலப்பணித் திட்டம்

சுகாதார முகாம்கள், இரத்த தான முகாம்கள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், மரம் நடுதல் போன்ற சமூக சேவைகளில் மாணவர்களை ஈடுபடச் செய்வதன் வாயிலாக ஆளுமைத் திறனை வளர்ப்பதே நாட்டு நலப் பணித் திட்டத்தின் நோக்கமாகும். தமிழ்நாட்டில் உள்ள 1,957 அணிகள் வாயிலாக மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 97,650 மாணவர்கள் நாட்டு நலப் பணித் திட்டத் தன்னார்வலர்களாக செயல்பட்டு வருகின்றனர். நாட்டு நலப் பணித் திட்டத்தின் வழக்கமான செயல்பாடுகளுக்கென ஒவ்வோர் ஆண்டும் ரூ. 2.5 கோடியும் சிறப்பு முகாம்கள், நடத்துவதற்கென ரூ.2 கோடியும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2.6.3. சாரண சாரணியர் இயக்கம்

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சாரண சாரணியர் இயக்கம் சிறப்பாகச்

[2022 ஏப்ரல் 11

செயல்பட்டு வருகிறது. பொது சுகாதாரம், போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல், முதலுதவி, மரம் நடுதல் குறித்த விழிப்புணர்வை அனைவருக்கும் கொண்டு சேர்த்தல் இவ்வியக்கத்தின் முக்கிய செயல்பாடுகளாகும். ஒவ்வோர் ஆண்டும் தமிழ்நாடு பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் தலைமையகத்தைப் பராமரிப்பதற்காகவும் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதற்காகவும் ரூ.8 இலட்சம் அரசால் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்திலிருந்து ரூ.2 கோடி சாரண சாரணியர் இயக்கத்திற்கு வைப்புத் தொகையாக அரசால் வழங்கப்பட்டு, அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு தமிழ்நாடு முழுவதும் உள்ள சாரண சாரணியர் இயக்கத்தின் சொத்துக்களைப் பராமரிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

2.6.4 இளையோர் செஞ்சிலுவைச் சங்கம்

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் இளம் செஞ்சிலுவைச் சங்கம் செயல்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சியர் இளம் செஞ்சிலுவைச் சங்கத்தின் புரவலர் ஆவார். ஆசிரியர்கள் ஆலோசகர்களாகவும் மாணவர்கள் தன்னார்வலர்களாகவும் பயிற்சி பெறுகின்றனர். மாணவர்கள் மனிதாபிமான அடிப்படையில் தொண்டுள்ளத்துடன் செயல்பட இத்திட்டம் உதவுகிறது. இளம் செஞ்சிலுவைச் சங்க தன்னார்வலர்களுக்கு முதலுதவி, பேரிடர் மேலாண்மை, சாலைப் பாதுகாப்பு, தீ தடுப்புப் பயிற்சி மற்றும் பொது நிகழ்ச்சிகளின்போது பொது மக்களுக்கு உதவி செய்தல் குறித்த பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

2.7 பள்ளிகளில் மாணவர் பாதுகாப்பு

மாணவர்களுக்கு பள்ளிகளில் பாதுகாப்பாக கல்வி கற்கும் சூழலை வழங்குவதற்கு பள்ளிக் கல்வித் துறை உரிய நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யவும், துன்புறுத்தல்களில் இருந்து பாதுகாக்கவும் மாணவர்கள் பாதுகாப்பு ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. அனைத்துப் பள்ளிகளிலும் பாதுகாப்புப் பெட்டியும், பாதுகாப்பு விழிப்புணர்வுப் பதாகைகளும் ரூ.82.747 இலட்சம் செலவினத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2022 ஏப்ரல் 11]

மாநிலம் முழுவதும் குறிப்பாக கிராமப்புறப் பகுதியில் இருக்கக் கூடிய மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்குப் பள்ளி மாணவர்களுக்கான கல்வி சார்ந்த தகவல்கள் மற்றும் வழிகாட்டும் செயல்முறைகள் அளிப்பதற்காக 24 மணி நேரமும் செயல்படும் கட்டணமில்லாத் தொலைபேசி உதவி எண் 14417 நடைமுறையில் உள்ளது. இது மாணவர்களுக்கான தொலைபேசி வழி குறைதீர் மையமாக இருக்கிறது. இளம் பருவ மாணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு, மனரீதியான ஆலோசனை அளிப்பதற்காக 1098 தொலைபேசி உதவி எண்ணும் நடைமுறையில் உள்ளது. இதற்கென 2021-2022 ஆம் நிதியாண்டில் ரூ.112 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அனைத்து தரப்பினரிடமும் போக்சோ சட்டம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தவும் பள்ளிகளில் பாதுகாப்பை மேம்படுத்தவும் கையேடு ஒன்று தயாரித்து வழங்கப்படும். பள்ளி அளவில் மேற்கொள்ளப்பட வேண்டிய சுய மதிப்பீட்டுக் கட்டகம் ஒன்றும் உருவாக்கப்படும். மாணவர்கள் தங்கள் புகார் மற்றும் கருத்துகளைத் தெரிவிக்க வசதியாக பள்ளி வளாகத்தில் பாதுகாப்புப் பெட்டிகள் வைக்கப்படும். அனைத்துப் பள்ளிகளிலும் பள்ளிச் சிறார்களைப் பாலியல் வன்முறைகளில் இருந்து தடுக்கும் வாரமாக ஆண்டுதோறும் நவம்பர் 15 முதல் 22 ஆம் நாள் வரை கடைப்பிடிக்கப்படுகிறது.

2.8. உட்கட்டமைப்பு வசதிகள்

கற்றல் கற்பித்தலுக்கு உகந்த சூழலை வழங்குவதற்கும், மாணவர் வருகையை அதிகரிப்பதற்கும் மாணவர்களின் கல்வித்திறனை மேம்படுத்துவதற்கும் பள்ளிகளின் உட்கட்டமைப்பு மேம்பாடு அவசியமாகும். அடுத்த ஐந்து ஆண்டுகளில் அரசுப் பள்ளிகளில் தேவையான உட்கட்டமைப்பு வசதியை ஏற்படுத்த பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.7,000 கோடி ஒதுக்கிட அரசு அறிவித்துள்ளது.

அனைத்து அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உயர்தொழில்நுட்ப கணினி ஆய்வக வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து தொடக்கப் பள்ளிகளில் திறன் வகுப்பறை ஏற்படுத்தப்பட உள்ளது.

2021-2022 ஆம் ஆண்டில், புதிய உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிக் கட்டடங்கள், கூடுதல் வகுப்பறைகள், கணினி அறைகள்,

[2022 ஏப்ரல் 11

நூலகக் கட்டடங்கள், ஆய்வகங்கள், ஆய்வக உபகரணங்கள், கலை மற்றும் கைத்தொழில் அறைகள், கழிப்பறைகள், குடிநீர் வசதி, கைப்பிடியுடன் கூடிய சாய்தளங்கள் என ரூ.59.63 கோடி செலவில் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2.9. கல்வியில் பின்தங்கிய ஒன்றியங்கள்

தமிழகம் முழுவதும் பரவலாகவும், குறிப்பாக வடதமிழகப் பகுதிகளில் அதிகமான எண்ணிக்கையிலும் மொத்தம் 44 ஒன்றியங்கள் கல்வியில் பின்தங்கியவையாகக் கண்டறியப்பட்டுள்ளன. பெண் கல்வி, பொதுத் தேர்வுகளில் தேர்ச்சி விகிதம் போன்ற கல்வி குறியீடுகளில் இந்த ஒன்றியங்கள் பன்னெடுங்காலமாகவே பின்தங்கிய நிலையில் உள்ளன. நிலைத்த மேம்பாட்டு இலக்கை அடையும் முயற்சியாக இந்த ஒன்றியங்களில் அதிகக் கவனத்தைக் கல்வித் துறை முன்னெடுத்துள்ளது.

கல்வியில் பின்தங்கியுள்ள ஒன்றியங்களை மற்ற ஒன்றியங்களுக்கு இணையாக குறிப்பிட்ட காலத்திற்குள் கொண்டு வர ஒருங்கிணைந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வொன்றியங்களுக்கு கடந்த மார்ச் 2022 இல் ரூ.7.47 கோடி செலவில் வாழ்வியல் திறன் கல்வி அளிக்கும் திட்டத்தினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார். இவ்வொன்றியங்களில் அதிக எண்ணிக்கையிலான ஆசிரியர் காலிப் பணியிடங்களும் காணப்பட்டன. இப்பணியிடங்களை ஆசிரியர்கள் தானாக முன்வந்து தேர்வு செய்வதை ஊக்குவிப்பதற்காக ஆசிரியர் இடமாற்றக் கொள்கையில் ஒரு ஊக்குவிப்பு வழிமுறை உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ஒரு ஆசிரியர் 3 ஆண்டுகளுக்கு ஒரு பணியிடத்தினை தேர்வு செய்தால், பின்னர் கலந்துகொள்ளும் இடமாறுதலில் அவ்வாசிரியருக்கு கலந்தாய்வு மூப்பில் முன்னுரிமை பரிசீலிக்கப்படும்.

2.10. மாதிரிப் பள்ளிகள்

கல்வியில் பின்தங்கிய ஒன்றியங்களை முன்னேற்றும் வகையில், கல்வியில் பின்தங்கிய ஒன்றியங்களைப் பெற்றுள்ள 10 மாவட்டங்களில் மாதிரிப் பள்ளிகளை அரசு ஏற்படுத்தியுள்ளது. உண்டு உறைவிடப் பள்ளிகளான மேற்கண்ட மாதிரிப் பள்ளிகள் விருப்பமும், திறமையும் உடைய மாணவர்கள் தேசிய அளவில் புகழ் பெற்ற உயர் கல்வி நிறுவனங்களில் சேர்ந்து படிப்பதற்கு

2022 ஏப்ரல் 11]

துணை புரிகிறது. இம்மாதிரிப் பள்ளிகளில் தரமான கல்வி, பள்ளிக் கல்வித் துறையில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் வெளியிலுள்ள சிறந்த ஆசிரியர்களைக் கொண்டு பாடங்கள் நடத்தப்படுகின்றன. மேலும், இப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குத் தேவையான பயிற்சிகள் தலைசிறந்த கல்வி நிறுவனங்களான இந்திய தொழில்நுட்ப கழகம் (IIT) மற்றும் இந்திய அறிவியல் நிறுவனப் (IISc) பேராசிரியர்களைக் கொண்டு நடத்தப்படுகிறது.

2.11. கல்வி மேலாண்மை தகவல் முறைமை (EMIS)

பள்ளிக் கல்வித் துறையின் மின்னணு முதுகெலும்பாக விளங்கும் கல்வி மேலாண்மை தகவல் முறைமை தமிழ்நாட்டில் உள்ள அரசு, அரசு உதவிபெறும் மற்றும் தனியார் பள்ளிகளைச் சார்ந்த அனைத்து மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பள்ளிகளின் நிகழ் நிலைத் தகவல்கள் அனைத்தும் மேற்கண்ட இணையதளத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது. தரவுகளின் அடிப்படையிலான கொள்கை முடிவுகளை எடுக்க இஃது உதவுகிறது. EMIS புள்ளிவிவரங்கள் மாணவர்களின் தகவல்கள், பணியாளர்கள் மற்றும் பள்ளியின் புள்ளிவிவரங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. மேற்கண்ட தகவல்கள் அனைத்தும் பள்ளித் தலைமை ஆசிரியர்களால் தங்களுக்கென்று வழங்கப்பட்டுள்ள பிரத்யேக உள்நுழைவு வாயிலாக உள்ளீடு செய்யப்படுகிறது.

பள்ளியில் பணியாற்றும் ஒவ்வோர் ஆசிரியருக்கும் மாணவர்களின் வருகைப் பதிவை குறிப்பதற்கும் மற்றும் அவர்களின் வருகைப் பதிவைக் கண்காணிப்பதற்கும் அவ்வாசிரியர்கள் பயிற்சி பெறுவதற்கும் பிரத்யேக உள்நுழைவு வழங்கப்பட்டுள்ளது. ஒன்றியம், கல்வி மாவட்டம், வருவாய் மாவட்டம் மற்றும் மாநில அளவில் உள்ள ஒவ்வொரு நிருவாக அதிகாரிகளுக்கும் தனித்தனி உள்நுழைவு வழங்கப்படுகிறது. இதன் வாயிலாக அவர்கள் முக்கிய உள்ளீடுகள் செய்யவும், தரவுகளைப் பார்க்கவும், கண்காணிப்பு மேற்கொள்ளவும் முடியும். இம்முறையானது, ஆசிரியர்களின் பணிச்சுமையைக் குறைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் வாயிலாக மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணம், அதன் தொடர்புடைய சேர்க்கை பதிவு சரிபார்த்தல் மற்றும் நிதி ஒத்திசைவுப் பணிகள் EMIS தரவுகள்மூலம் சரிபார்க்கப்படுகிறது. 10 மற்றும் 11, 12 ஆம்

[2022 ஏப்ரல் 11

வகுப்புகளுக்கான பொதுத் தேர்வுகளை நடத்த பெயர் பட்டியல் தயாரித்தல் என்பது முக்கிய பங்கு வகிக்கிறது. இது EMIS வாயிலாக இணையவழியில் தயாரிக்கப்படுவதோடு அரசு தேர்வுகள் இயக்குநரகத்தின் தரவுகளுடன் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளதால் நிருவாகப் பணிகளைக் குறைக்க உதவுகிறது.

தேசிய சுகாதார இயக்கம், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை ஆதி திராவிடர் நலத் துறை, சமூக நலம் மற்றும் பழங்குடியினர் நலத் துறை போன்ற பல துறைகளுடன் ஒருங்கிணைந்து பள்ளிக் கல்வித் துறையால் உருவாக்கப்பட்ட வலுவான தரவுகள் மற்றும் மென்பொருளை உறுதிசெய்யும் பணி நடைபெற்று வருகிறது. தற்போதுள்ள செயல்பாடுகளின் திறனை மேம்படுத்துவதற்கும் துறைகளுக்கு இடையேயான தரவுப் பகிர்வுக்கும் அனைத்துத் துறைகளாலும் திறம்பட பயன்படுத்தப்படுகிறது.

உயர்கல்வியில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும் 7.5% இடஒதுக்கீட்டை சரியான வகையில் நடைமுறைப்படுத்திட EMIS இணையதளம் விரைவாகவும், பயனுள்ள வகையிலும் தரவுகளை வழங்கும் விதமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இடைநின்ற மாணவர்களைக் கண்டறிந்து பள்ளியில் சேர்க்கவும் EMIS உதவுகிறது.

பள்ளிக் கல்வித் துறையில் பணியாற்றும் ஆய்வு அலுவலர்கள் வகுப்பறையில் கற்றல் கற்பித்தல் பணிகளை ஆய்வு செய்வதற்காக EMIS தளத்தை அடிப்படையாகக் கொண்டு கைப்பேசி செயலி உருவாக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இச்செயலி வகுப்பறையில் நடைபெறும் கற்றல் கற்பித்தல் பரிமாற்றங்கள் மற்றும் மாணவர்களின் கற்றல் அடைவுகளை அறிந்துகொள்ள கட்டமைக்கப்பட்டுள்ளது. இச்செயலி பள்ளியில் தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆய்வு அலுவலர்களுக்கு தரமான பரிமாற்றம், ஆசிரியர் பயிற்சி மற்றும் தொடர் ஆய்விற்குச் சிறந்த செயலியாகப் பயன்பட துணைபுரியும்.

2.12. பள்ளிகளுக்கான நிதி உதவி

2.12.1. ஒருங்கிணைந்த பள்ளி மானியம்

அனைத்து அரசுப் பள்ளிகளுக்கும் கற்றல் சூழலை மேம்படுத்துவதற்கென ஆண்டுதோறும் ஒருங்கிணைந்த பள்ளி மானியம் வழங்கப்படுகிறது. செயல்படாத உபகரணங்களை

2022 ஏப்ரல் 11]

மாற்றுதல், இணைய வசதி, கற்றல் கற்பித்தல் கருவிகள் வாங்குதல், ஆண்டு பராமரிப்பு, கட்டடங்களில் பழுதுகளைச் சரிபார்த்தல் போன்ற பணிகளுக்கு இம்மானியத்தை பயன்படுத்தலாம். ஒவ்வொரு பள்ளிக்கும் அனுமதிக்கப்பட்ட மானிய விவரம் பின்வருமாறு:

வ.எண்	பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை	பள்ளிக்கான மானியத் தொகை (ரூபாயில்)
1	1 முதல் 15-க்குள்	12,500
2	16 முதல் 100-க்குள்	25,000
3	101 முதல் 250-க்குள்	50,000
4	251 முதல் 1000-க்குள்	75,000
5	1000-க்கு மேல்	1,00,000

2021-2022 ஆம் கல்வியாண்டில் ரூ.116.28 கோடி பள்ளி மானியமாக செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2.12.2. நூலக மானியம்

நூலகங்கள் சமுதாயத்தின் அறிவு மற்றும் கலாச்சாரத்தின் நுழைவாயிலாக விளங்குவதற்கு முக்கியப் பங்கு வகிக்கின்றது. மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க சிறந்த கருவியாக பள்ளி நூலகங்கள் திகழ்கின்றன. மாணவர்கள் தரமான புத்தகங்களைத் தேடி வாசிப்பதன் வாயிலாக வாசகராக, சிந்தனையாளராக, எழுத்தாளராக உருவாகும் வகையில் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். ஆகவே, ஒவ்வொரு பள்ளியிலும் நூலக வசதியை ஏற்படுத்தி ஆண்டுதோறும் பள்ளிகளுக்கு நூலக நிதியை அரசு ஒதுக்கீடு செய்கிறது. சிறந்த நிபுணர் குழுக்கள் அமைக்கப்பட்டு அதன்மூலம் மாணவர்களுக்கு அறிவுசார் மற்றும் பொழுதுபோக்கு புத்தகங்கள் தெரிவு செய்யப்படுகிறது. மாணவப் பருவத்திற்கேற்ற இப்புத்தகங்கள் வாங்குவதற்காக 2021-2022 ஆம் கல்வியாண்டில் ரூ.31.96 கோடி செலவிடப்பட்டுள்ளது. இப்புத்தகங்கள் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் வாங்கப்பட்டு வினியோகம் செய்யப்படுகின்றன. பள்ளியில் ஒவ்வொரு வாரமும் நூலக வாசிப்பிற்கென தனியாக ஒதுக்கப்படும் பாடவேளையின் மூலமாக மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க முடியும். அனைத்து பள்ளி

[2022 ஏப்ரல் 11

நூலகங்களிலும் என்னென்ன புத்தகங்கள் இருக்கின்றன என்பதை அறிந்துகொள்ள EMIS இணையதளம்மூலம் தனித்த செயலி ஒன்று உருவாக்கப்படும்.

2.12.3. பள்ளி மேலாண்மைக் குழு (SMC)

பள்ளி அளவில் நிர்வகிக்கப்படும் முக்கியமான பள்ளி மேலாண்மைக் குழுவில் பெற்றோர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், பள்ளி ஆசிரியர்கள், சுயநிதி குழுவின் உறுப்பினர்கள் மற்றும் கல்வியாளர்கள் அங்கத்தினர்களாக உள்ளனர். பள்ளி அளவில் ஆரம்ப நிலையிலுள்ள இக்குழுவானது பள்ளியின் செயல்திறனை முன்னேற்றுவதில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. இக்குழுவிற்கு புத்துணர்ச்சியூட்டும் வகையில், முழுமையாக அனைத்து பள்ளிகளிலும் மாற்றியமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பள்ளி மேலாண்மை குழுவின் புதிய உறுப்பினர்கள் நியமனம் மற்றும் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுடைய பணிகள் மற்றும் பொறுப்புகள் சார்ந்து இரண்டு கட்டங்களாக மாநில அளவிலான கருத்தாளர்களுக்கு பயிற்சி நடத்தப்பட்டது.

அனைத்து அரசுப் பள்ளிகளிலும் பள்ளி மேலாண்மைக் குழுக்களை (SMC) மறுகட்டமைப்பு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. SMC மறு கட்டமைப்பு, கடமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான பயிற்சி SMC உறுப்பினர்களுக்கும் மாநில கருத்தாளர்களுக்கும் இரண்டு கட்டங்களாக நடத்தப்பட்டுள்ளது. அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட கள அலுவலர்களுக்கு SMC பற்றிய விழிப்புணர்வு பயிற்சி நடத்தப்பட்டுள்ளது.

அனைத்து மாவட்டங்களிலும் ஆசிரியர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட கருத்தாளர்களுக்கு மாநில கருத்தாளர்களைக் கொண்டு 2 நாட்களுக்கு பள்ளி மேலாண்மைக் குழு குறித்த பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் தலைமையாசியர், ஆசிரியர், 2 வார்டு உறுப்பினர்கள், சுய உதவிக் குழு உறுப்பினர் என 5 உறுப்பினர்களுக்கு பள்ளி மேலாண்மைக் குழு சார்ந்த பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

20.3.2022 அன்று பள்ளி மேலாண்மைக் குழு சார்ந்த விழிப்புணர்வுக் கூட்டம் நடைபெற்றது. இப்பயிற்சியில் 23.54 இலட்சம் பெற்றோர்களுக்கு இல்லம் தேடிக் கல்வி தன்னார்வலர்களின்

2022 ஏப்ரல் 11]

உதவியுடனும், கலைக் குழுவின் வாயிலாகவும் சமூகத்திற்கான விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டது. பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு மற்றும் அதன் உறுப்பினர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த அனைத்துப் பள்ளிகளிலும் பெற்றோர்கள் கூட்டம் நடத்தப்பட்டது.

பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு அனைத்து வகையான அரசுப் பள்ளிகளிலும் பலகட்டங்களாக மாநிலம் முழுவதும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தை உருவாக்குவதற்காக ஒரு சிறப்பு கைப்பேசி செயலி தொடங்கப்பட்டு, பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களால் பள்ளி மேம்பாட்டுத் திட்டங்களைத் திட்டமிடல், செயல்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்தல் போன்ற செயல்பாடுகளுக்காக 2021-2022 ஆம் ஆண்டில் ரூ.1,682.59 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2.13. நலத் திட்டங்கள்

அரசுப் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவர்கள் தங்கள் கல்வியை நன்கு தொடரவும், பொருளாதார, சமூகக் காரணங்களால் தடையேதுமின்றி பள்ளிக் கல்வியை நிறைவு செய்வதற்காகவும் அரசு பின்வரும் நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது:

வ. எண்	நலத் திட்டத்தின் பெயர்	2021-2022	
		வகுப்பு	பயனாளிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்)
1.	பாடநூல்கள்	1 - 12	74.97
2.	நோட்டுப்புத்தகம்	1 - 10	62.81
3.	புத்தகப்பை	1 - 12	74.97
4.	காலணிகள், கால் ஏந்திகள் மற்றும் காலுறைகள்	1 - 10	60.21
5.	புவியியல் வரைபடம்	6-10	6.91
6.	கிரையான் மற்றும் வண்ணப் பென்சில்	1 -5	27.03

[2022 ஏப்ரல் 11

வ. எண்	நலத் திட்டத்தின் பெயர்	வகுப்பு	2021-2022 பயனாளிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்)
7.	கணித உபகரணப் பெட்டி	6	6.91
8.	சிறப்பு ஊக்கத் தொகை	10, 11, 12	17.50
9.	மடிக்கணினி	11	5.44
10.	சீருடை	1-8	48.95
11.	மிதிவண்டி	11	6.35
12.	கம்பளிச் சட்டை	1-8	1.15
13.	உறை காலணிகள், மழையாடைகள், காலுறைகள்	1-8	1.15
14.	புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்	1-8	62.33
15.	விபத்து நிவாரண நிதியுதவி	1-12	0.0001
16.	வருவாய் ஈட்டும் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கான நிதி உதவி	1-12	0.015
17.	பேருந்து பயண அட்டை	1-12	23.42

2.14. மின்னணுச் சேவைகள்

பள்ளிக் கல்வித் துறையில் பொதுமக்கள் மற்றும் மாணவர்களுக்கு வழங்கப்படும் சான்றுகளான நன்னடத்தைச் சான்று, ஆளறி சான்று, தமிழ் வழியில் படித்ததற்கான சான்று உள்ளிட்ட அனைத்துச் சான்றுகளும் அவர் தம் இல்லத்திற்கு அருகிலுள்ள அரசு பொது சேவை மையங்களின் வாயிலாக விண்ணப்பித்து கால விரயமின்றிப் பெற்றுக்கொள்ளும் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொருட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட சேவைகளில் சில சேவைகள் அரசு பொது சேவை மையங்களின் வாயிலாகத் தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

2022 ஏப்ரல் 11]

2.15. பணியிடங்களில் பெண்கள் பாதுகாப்புச் சட்டம் – பயிற்சி

பள்ளிக் கல்வித் துறையில் பணிபுரியும் அனைத்துப் பெண் ஊழியர்களுக்கும் பாதுகாப்பான பணிச்சூழலை உறுதிப்படுத்தும் வகையில் ஒவ்வொரு பள்ளியிலும்/அலுவலகத்திலும் பெண்களை தலைமையாகக் கொண்டு (பாலியல் சாராத துன்புறுத்தல்களைப் பற்றிய புகார்களைக் கையாள்வதற்காக) உள்மட்ட குழுவும் (Internal Committee) மாவட்ட அளவிலான குழுவும் (Local Committee) அமைக்கப்பட்டு அவ்விடங்களில் பெண்களுக்கான பாதுகாப்பை உறுதிசெய்யவும் அவ்வப்போது எழும் பிரச்சினைகளை சரியாக கையாண்டு அவற்றிற்கான விசாரணை அறிக்கைகளை 10 நாட்களுக்குள் கொடுக்கவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், விசாகா கமிட்டியின் அறிவுரைகள் மற்றும் இதுதொடர்புடைய இதர சட்டங்களையும் பின்பற்றி முடிவுகள் எட்டப்படும். இதற்கான பயிற்சி பள்ளிக்கல்விசார் அங்கத்தினர் அனைவருக்கும் அளிக்கப்பட்டு வருகிறது.

2.16. மாணவர்களுக்கான சுகாதாரப் பரிசோதனை

தேசிய குழந்தைகள் நல்வாழ்வுத் திட்டம் (RBSK) மூலம் பிறப்பிலிருந்து 18 வயது வரையிலான குழந்தைகளின் பிறப்பின்போது ஏற்பட்ட குறைபாடுகள், பிறப்பிற்குப் பின்னர் கண்டறியப்பட்ட குறைபாடுகள், நோய்கள், முறையான வளர்ச்சியில் ஏற்பட்ட தாமதங்கள், அறுவை சிகிச்சைகளினால் ஏற்பட்ட இடர்பாடுகள் போன்றவற்றை முன்கூட்டியே கண்டறிந்து, தேவையான தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வது அவசியமாகும். இந்தச் சேவைகள் அனைத்தும் பயனாளர்களுக்கும் இலவசமாக வழங்கப்படுவதால், சிகிச்சைக்கான செலவு அக்குடும்பத்தில் முற்றிலும் குறைக்கப்படுகிறது.

முறையான நடைமுறைகளைப் பின்பற்றி அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு இந்த பரிசோதனை முறையானது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பள்ளி அளவில், சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவது தொடர்பான பயிற்சி, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு "தேசிய சுகாதார இயக்கம்" வாயிலாக அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டங்களைப் பள்ளி அளவில் ஒருங்கிணைக்க ஒரு பொறுப்பாசிரியர் நியமிக்கப்படுகிறார்.

[2022 ஏப்ரல் 11

2.17. ஆசிரியர்கள் பொது மாறுதல் கலந்தாய்வு

அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் நலனுக்காக ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வரும் பொது மாறுதலை ஒளிவுமறைவின்றி 2021-2022 ஆம் ஆண்டு முதல் நடத்திட விரிவான பொதுமாறுதல் கலந்தாய்வு கொள்கை வகுக்கப்பட்டு, அரசாணை (நிலை) எண் 176, பள்ளிக் கல்வி [ப.க(1)]த்துறை, நாள்: 17.12.2021—ன்படி ஆணை வெளியிடப்பட்டு, ஆசிரியர்களுக்கான பொது மாறுதல் கலந்தாய்வு வெளிப்படையாக நடத்தப்பட்டுள்ளது. இப்பொது மாறுதல் கலந்தாய்வுக் கொள்கையின் அடிப்படையில் ஜனவரி 2022-லிருந்து மார்ச் 2022 வரை நடைபெற்ற பொது மாறுதல் கலந்தாய்வில் 67,470 ஆசிரியர்கள் விண்ணப்பித்து அவற்றில் 18,713 ஆசிரியர்கள் பணியிட மாறுதல் மற்றும் 3,488 ஆசிரியர்கள் பதவி உயர்வு வாயிலாக புதிய பணியிடங்களை தெரிவு செய்துள்ளனர்.

2.18. வட்டாரக் கல்வி அலுவலர்கள்-நேரடி நியமனம்

பள்ளிகளின் எண்ணிக்கை மற்றும் மாணவர் எண்ணிக்கையின் அடிப்படையில் தமிழகத்தில் உள்ள 413 ஒன்றியங்களில் 836 வட்டாரக் கல்வி அலுவலர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. தற்போதைய நிலவரப்படி பணிபுரியும் 803 வட்டாரக் கல்வி அலுவலர்களை தவிர்த்து காலியாக உள்ள 33 பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

அரசாணை எண் 82, பள்ளிக் கல்வித் துறை, நாள் 20.05.2019ன்படி, மொத்த வட்டாரக் கல்வி அலுவலர் காலிப் பணியிடங்களில் 50% நேரடி நியமனத்தின் வாயிலாக நிரப்பப்பட்டு வருகிறது. ஆசிரியர் தேர்வு வாரியம் வாயிலாக தெரிவு செய்யப்பட்டு 95 வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டு பணியில் சேர்ந்துள்ளனர்.

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கு மூன்று மாத நிருவாகப் பயிற்சி அசிம் பிரேம்ஜி பல்கலைக்கழக ஒருங்கிணைப்புடன் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்டு வருகிறது.

2.19. ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி

கல்விசார் குறியீடுகளையும், கல்வியின் தரத்தையும் உயர்த்த ஒன்றிய அரசால் கொண்டு வரப்பட்ட இத்திட்டம் முன்தொடக்க,

2022 ஏப்ரல் 11]

தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலை எனத் தடைகள் இல்லாமல் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை தொடர்நிலையாக அமைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது அனைவருக்கும் கல்வித் திட்டம், அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம், ஆசிரியர் கல்வி எனும் திட்டங்களின் ஒருங்கிணைந்த திட்டமாகும். இந்திய அரசு மற்றும் தமிழக அரசுகளிடமிருந்து முறையே 60:40 என்ற விகிதத்தில் நிதியை இத்திட்டம் பெறுகிறது.

மேலும், பள்ளி செல்லும் குழந்தைகளின் உள்ளடக்கிய கல்வி மற்றும் சமநிலைக் கல்வியை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பாடப் புத்தகங்களில் உள்ள விரைவு துலங்கல் (QR) குறியீடுகள்மூலம் உள்ளடக்கிய பாடங்கள் மற்றும் மதிப்பீட்டு கேள்விகளை எளிய முறையில் மாணவர்கள் அணுகி புரிதலுடன் கற்பதற்கு ஏதுவான வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்மூலம் ஆசிரியர் பயிற்சிகளை நடத்துவதற்கான நிதி ஆதாரங்களை ஒன்றிய அரசிடமிருந்து பெறுவதில் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி முக்கிய பங்கு வகிக்கிறது. இக்கல்வியாண்டில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின்மூலம் 12 கட்டங்களாக அனைத்துப் பாடங்களுக்குமான தகவல் தொழில்நுட்பம் (ICT) சார்ந்த பயிற்சிகள் அளிக்கப்பட்டன. இப்பயிற்சியில் கல்வி தகவல் மேலாண்மை முறைமை (EMIS) பயன்படுத்துவது மற்றும் தகவல் தொழில்நுட்பத்தின்மூலம் வகுப்பறையில் பாடங்களை சிறப்பான முறையில் நடத்துவது குறித்து ஆசிரியர்களுக்கு சிறந்த உயர் கல்வி நிறுவனங்களின் பேராசிரியர்கள்மூலம் பயிற்சி வழங்கப்பட்டன. இதன்மூலம் உயர்தர கற்றல்-கற்பித்தல் பாடப் பொருள்கள் உருவாக்கப்பட்டு ஆசிரியர்கள், மாணவர்கள் இருவரும் பயன் பெறுகின்றனர்.

2.20. நிதி ஒதுக்கீடு

2022-2023 ஆம் ஆண்டிற்கு தொடக்கக் கல்விக்கென ரூ.18,251.53 கோடியும், உயர்நிலை மற்றும் மேல்நிலை கல்விக்கென ரூ.17,743.53 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2022 ஏப்ரல் 11

3. மெட்ரிகுலேசன் பள்ளிகள்

3.1. முன்னுரை

அரசின் முற்போக்கான வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு பொதுக் கல்வி வாரியப் பாடத் திட்டம் மற்றும் கலைத் திட்டத்தினைப் பின்பற்றி சுயநிதிப் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணாக்கர்களின் தேவைகளை மெட்ரிகுலேசன் பள்ளிகள் பூர்த்தி செய்கின்றன. தற்போது தமிழகத்தில் 4,479 மெட்ரிகுலேசன் பள்ளிகள் சுமார் 31 இலட்சம் மாணாக்கர்களுக்கு கல்வி கற்பித்து வருகின்றன. இவை மாநில அளவில் மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநராலும், வருவாய் மாவட்ட அளவில் முதன்மைக் கல்வி அலுவலர்களாலும் மற்றும் கல்வி மாவட்ட அளவில் மாவட்டக் கல்வி அலுவலர்களாலும் கண்காணிக்கப்படுகின்றன.

3.2. தொலைநோக்கு

மெட்ரிகுலேசன் பள்ளிகளில் நல்ல உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் மற்றும் முழுமையான கல்வித் தகுதியுடைய ஆசிரியர்களைப் பணியமர்த்துதல் ஆகியவற்றின்மூலம் தரமான கல்வி அளிப்பதும், பாதுகாப்பான கற்றல் சூழல் அமைவதும் உறுதி செய்யப்படுகிறது. மேலும், குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 மற்றும் தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011 ஆகியவற்றைச் சிறப்பாகச் செயல்படுத்துவதும், மெட்ரிகுலேசன் பள்ளிகளில் சேர்க்கையினை இணைய வழியில் வெளிப்படைத் தன்மையுடன் முறைப்படுத்துவதும் உறுதி செய்யப்படுகிறது.

3.3. குறிக்கோள்கள்

- பள்ளிகளில் குழந்தைகளின் பாதுகாப்பினை உறுதி செய்தல்.
- தேவையான கட்டமைப்பு வசதியினை அளிப்பதன்மூலம் குழந்தைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சியினை உறுதி செய்தல்.

2022 ஏப்ரல் 11]

- *விதிகளின்படி முழுத் தகுதி பெற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதை உறுதிசெய்தல்.*
- *குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009-ஐ நடைமுறைப்படுத்துவதில் மாநில முகமையாகச் செயல்படுதல்.*
- *விதிகள் மற்றும் வரையறைகளை மீறும் பள்ளிகள் மீது நடவடிக்கை மேற்கொள்ளுதல்.*
- *சட்டங்கள், விதிகள் மற்றும் அரசால் அவ்வப்போது வழங்கப்படும் வழிகாட்டுதல்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்தல்.*

3.4. பங்களிப்பு மற்றும் பொறுப்புகள்

3.4.1. அனுமதி/அங்கீகாரம்

அரசால் வரையறுக்கப்பட்டுள்ள விதிமுறைகளை நிறைவு செய்யும் நிலையில் புதிய மெட்ரிகுலேசன் பள்ளிகள் தொடங்கவும், மெட்ரிகுலேசன் பள்ளிகளை மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தவும் மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.

2021–2022 ஆம் கல்வியாண்டில் 29 புதிய மெட்ரிகுலேசன் பள்ளிகள் தொடங்கவும், ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருக்கும் 39 மெட்ரிகுலேசன் பள்ளிகளை மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தவும் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

3.4.2. தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டத்தினை நடைமுறைப்படுத்துதல்

பள்ளிகளில் கட்டாயமாகத் தமிழைக் கற்க வேண்டும் என்ற நோக்கில் அரசால் தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டம், 2006 சட்டமாக்கப்பட்டது. அதன்படி, 2006-2007 ஆம் கல்வியாண்டில் 1 ஆம் வகுப்பிலும், தொடர்ச்சியான ஆண்டுகளில் அடுத்தடுத்த வகுப்புகளிலும் முதல் மொழியாகத் தமிழ் கற்பது கட்டாயமாக்கப்பட்டது. 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்துத் தனியார் பள்ளி மாணாக்கர்களும் தமிழை முதல் மொழிப்பாடமாகக் கற்கின்றனர்.

[2022 ஏப்ரல் 11

3.4.3. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 நடைமுறைப்படுத்துதல்

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 மற்றும் தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011 எழுத்தளவிலும் கொள்கையளவிலும் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. சட்டப்பிரிவு 12(1)(சி) இன்படி சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளில் நுழைவு நிலை வகுப்பில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினைச் சார்ந்த குழந்தைகளைச் சேர்க்கை செய்வது தொடர்பாகத் தெளிவான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன.

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009-ஐ செயல்படுத்துவதில், மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர் மாநில முதன்மைத் தொடர்பு அலுவலராகவும், மாவட்ட அளவில், முதன்மைக் கல்வி அலுவலர்கள் மாவட்டத் தொடர்பு அலுவலர்களாகவும் உள்ளனர்.

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009, பிரிவு 12(1)(சி)-இன்கீழ் சேர்க்கையில் வெளிப்படைத் தன்மையை உறுதிசெய்ய, சேர்க்கைக்கான விண்ணப்பம் இணைய வழியாகப் பெறப்பட்டு வருகிறது. 2021–2022 ஆம் கல்வியாண்டில் இவ்வகையில் 56,687 குழந்தைகள் சேர்க்கை செய்யப்பட்டுள்ளனர். இதன்கீழ் 2020–2021 ஆம் கல்வியாண்டிற்கான கல்விக் கட்டணத் தொகை ரூ.314.64 கோடி பள்ளிகளுக்கு ஈடுசெய்யப்பட்டுள்ளது.

3.5. காலமுறை அங்கீகாரம் வழங்குதல்

பத்து ஆண்டுகளுக்கும்மேல் அங்கீகாரத்துடன் தரமான கட்டடத்தில் செயல்பட்டு வந்த மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு ஒவ்வொரு மூன்று ஆண்டிற்கும் ஒரு முறை கட்டட உறுதிச் சான்றினை உரிய அலுவலரிடம் பெற்றுச் சமர்ப்பிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் நிரந்தர அங்கீகாரம் வழங்கப்பட்டு வந்தன. அவ்வாறு சான்றிதழ் பெறாத பள்ளிகளுக்கு வழங்கப்பட்ட நிரந்தர அங்கீகாரம் திரும்பப் பெறப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

பள்ளிக் கட்டடங்கள், வகுப்பறைகள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பள்ளி வாகனங்கள் தொடர்பாகப் பல எதிர்பாராத நிகழ்வுகள் கடந்த ஆண்டுகளில் ஏற்பட்டு

2022 ஏப்ரல் 11]

குழந்தைகளின் உயிருக்குச் சேதம் ஏற்பட்டது. இதன் காரணமாகப் பல்வேறு புதிய விதிகளையும், வழிகாட்டு நெறிமுறைகளையும், உத்தரவுகள் மற்றும் சுற்றறிக்கைகளையும் உருவாக்கி குழந்தைகளின் நலனைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்பட்டது. மாணாக்கர் பாதுகாப்பை உறுதி செய்ய பள்ளிகளைத் தொடர்ந்து கண்காணிப்பது அவசியம் என்று உணரப்பட்டதால், தனியார் பள்ளிகளுக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை அல்லது கட்டட உரிமை/உறுதிச் சான்றிதழில் குறிப்பிட்டுள்ள காலம் இதில் எது முந்தையதோ அதுவரை அங்கீகாரம் வழங்கப்படும். இதுவரை நிரந்தர அங்கீகாரம் பெற்றுச் செயல்படும் தனியார் பள்ளிகள் அவ்வாறே தொடரலாம், மேலும், தேவையான சான்றிதழ்களை உரிய அலுவலரிடம் சமர்ப்பிக்கவேண்டும்.

3.6. தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம், 2018

மாநிலப் பள்ளிக் கல்வி பொதுப் பாடச் சட்டம், 2010 சட்டமாக்கப்பட்ட பின்னர் அனைத்துத் தனியார் பள்ளிகளும், மாநிலப் பொதுக் கல்வி வாரியத்தின்கீழ் கொண்டு வரப்பட்டன. இதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம், 2018 சட்டமாக்கப்பட்டது. இதற்கான விதிகளை வகுக்கும் பணி நடைபெற்று வருகிறது.

3.7. தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துதல்) சட்டம், 2009

கல்வி வணிகமயமாவதையும், நன்கொடை வசூலிப்பதையும் தடுக்கும் நோக்கில், தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துதல்) சட்டம், 2009 சட்டமாக்கப்பட்டு அதற்கான விதிகள் வகுக்கப்பட்டன.

தனியார் பள்ளிகளில் வசூலிக்கப்பட வேண்டிய கட்டணத்தினை நிர்ணயம் செய்ய தனியார் பள்ளிகள் கட்டண நிர்ணயக் குழு உருவாக்கப்பட்டது. கொரோனா தீநுண்மி பரவலைக் கருத்தில் கொண்டும், மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையிலும், மாத ஊதியம் பெறுவோர், தொழில் வல்லுநர்கள் மற்றும் தொழிலதிபர்கள் போன்றவர்களிடம் குழுவால் நிர்ணயிக்கப்பட்ட கல்விக் கட்டணத்தில் 85% கட்டணமும், வருமான இழப்பைச் சந்தித்த பெற்றோர்களிடம் 75%

[2022 ஏப்ரல் 11

கட்டணமும் 6 தவணைகளில் வசூல் செய்துகொள்ள தனியார் சுயநிதிப் பள்ளிகளுக்கு ஆணையிடப்பட்டுள்ளது.

3.8. நிதி ஒதுக்கீடு

அரசால் இவ்வியக்ககத்திற்கு 2022–23 ஆம் ஆண்டிற்கு ரூ.353.58 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

4.1. அறிமுகம்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், மாநில அளவில் தரமான பள்ளிக் கல்வியை உறுதிப்படுத்தும் தலைமை நிறுவனமாகத் திகழ்கிறது. இந்நிறுவனம், 1 முதல் 12 வரையிலான வகுப்புகளுக்குத் தேவைகளுக்கு ஏற்ப கலைத் திட்டம், பாடத் திட்டம், பாடநூல்கள், ஆசிரியர் கையேடுகள், மதிப்பீட்டுக்கான செயல்பாட்டுத் தாள்கள் போன்றவற்றை நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள வல்லுநர்களின் பங்களிப்போடு உருவாக்கி வருகிறது. வகுப்பறைக் கற்பித்தல் நெறிமுறைகள் மற்றும் மதிப்பீட்டுச் செயல்பாடுகளில் புதுமைகளை அறிமுகப்படுத்துவதன்மூலம் தரமான கல்வியை உறுதிப்படுத்தவும் எதிர்பார்க்கப்படும் கற்றல் அடைவுகளைப் பெறவும் வழிவகுக்கிறது. மேலும் ஆசிரியர்களுக்கான பணித்திறன் மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்கி வருகிறது. ஆசிரியர்களின் பணித் திறன்களை வளர்ப்பதன் வாயிலாக மனித வளத்தை முதலீடாக்கி நாட்டின் முன்னேற்றத்திற்குப் பங்களிக்க முடியும். மாணவர்கள் பாடக் கருத்துகளைத் திறம்படப் புரிந்துகொள்ளும் வகையில் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைத்துக் கற்பதற்கான வழிமுறைகளை வகுத்து வருகிறது. அதேவேளையில் இன்றைய மாணவர்கள், எத்தகைய சவால்களையும் எதிர்கொள்ளுவதற்கு ஏதுவான பல்திறன்களைப் பெறுவதிலும் கவனம் செலுத்துகிறது. மேலும், ஏராளமான பல்வேறு கல்வி வாய்ப்புகளுள் தமக்கு உரியதை மாணவர்கள் தேர்ந்தெடுக்கும் நோக்கில் உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்கான வழிகாட்டுதல்களை வழங்குகிறது. கல்வியில் ஏற்படும் சிக்கல்களை ஆசிரியர்கள் எதிர் கொள்ள ஏதுவாக ஆய்வுச் செயல்திட்டம் மற்றும் செயல் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள

2022 ஏப்ரல் 11]

ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியப் பயிற்றுநர்களை ஊக்குவிக்கிறது. கற்றல் கற்பித்தல், கலகலப்பானதாகவும் மகிழ்ச்சியானதாகவும் அமையும் வகையில் மின்னியத் தொழில்நுட்பத்தை முழுமையாகப் பயன்படுத்துகிறது.

4.2. தொலைநோக்கு

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமானது மாணவர்கள் புதிய தொழில்நுட்ப உலகினைப் போட்டி மனப்பான்மையுடன் எதிர்கொள்ள உகந்தவர்களாக மாற்றும் வகையில் கற்றல் விளைவுகள், முழுமையான, மகிழ்வுடன் கற்றலுக்கான பல்வகைக் கற்பித்தல் நெறிமுறைகள், மாற்றுவழிக் கற்பித்தல் உத்திகள், மின்னியவழிக் கற்றல் மற்றும் உயர்நிலைச் சிந்தனைத் திறனை ஊக்குவிக்கும் வகையிலான மதிப்பீடு ஆகியவற்றின்படி பள்ளி அமைப்பை உருவாக்குவதைத் தனது இலக்காகக் கொண்டுள்ளது.

4.3. நோக்கங்கள்

- *கலைத் திட்டம், பாடத் திட்டம், பாடநூல்கள், கற்றல் துணைப்பொருள்கள், செய்தி மடல்கள், கற்றல் கருவிகள், பல்லூடக மின்னியப் பொருள்கள் மற்றும் கல்விசார் கட்டகங்களை உருவாக்குதல்.*
- *பணிபுரிந்து வரும் ஆசிரியர்களுக்கும் மாணவ ஆசிரியர்களுக்கும் முறையே பணியிடை மற்றும் பணிமுன் பயிற்சிகளை ஒருங்கிணைத்தல்.*
- *வகுப்பறைச் செயல்பாடுகளில் கற்றல் விளைவுகளை ஒருங்கிணைத்தல்.*
- *பள்ளிக்கல்வி சார்ந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல், உதவுதல், ஊக்குவித்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்.*
- *பேரிடர், இயற்கைச் சீற்றங்கள், பெருந்தொற்றுப் பரவல் ஆகியவற்றின் காரணமாக நடைமுறைப்படுத்தப்படும் ஊரடங்குக் காலச்சூழலில், மாற்றுவழிக் கற்றல் கற்பித்தல் முறைகளைப் பரிந்துரைத்தல்.*
- *கல்வித்தர மேம்பாட்டிற்கான மதிப்பீட்டு அமைப்புகளையும் அணுகுமுறைகளையும் உருவாக்குதல், நடைமுறைப்படுத்துதல்,*

[2022 ஏப்ரல் 11

கண்காணித்தல், நிலைநிறுத்துவதற்கான குறைதீர்த் தொடர் இடைவினைகளை உருவாக்கி அளித்தல்.

4.4. பங்கு மற்றும் பணிகள்

- வகுப்பறையில் ஏற்படும் கற்றல் இடர்பாடுகளை நீக்க அனைத்து கல்வி இயக்ககங்களுக்கும் தேவையான ஊக்கச் செயல்பாடுகளை மேற்கொள்வதற்கான அணுகுமுறைகளை அளித்தல்.
- பள்ளிக்கல்வியில் கொள்கை மாற்றங்களை வெளிக்கொணரத் தேவையான கற்பித்தல் நெறிமுறைகள் மற்றும் மதிப்பீட்டு உத்திகளுக்கான கற்றல் உள்ளீடுகளைப் பரிந்துரைத்தல்.
- உலகளாவிய மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் பின்பற்றப்படும் கல்வித் திட்டங்களில் காணப்படும் தற்போதைய போக்குகளை அடியொட்டிச் சிறப்பான கற்பிப்பு முறைகளை உள்வாங்கி அதனடிப்படையில் கலைத்திட்டம், பாடத் திட்டம் மற்றும் பாடநூல்களை உருவாக்குதல்.
- கற்பித்தல் நெறிமுறைகள் மற்றும் மதிப்பீட்டுத் துறைகளில் சிறந்தவற்றைக் கண்டறிந்து செயல்படுத்துதல்.
- குழந்தைகள் ஆர்வத்துடன் கற்றல் செயல்பாட்டில் ஈடுபடும்வண்ணம் கற்போர் மைய கற்பித்தல் நெறிமுறைகளைச் செயல்படுத்தத் தக்கவாறு ஆசிரியர்களின் பணித்திறன்களைத் தொடர்ந்து மேம்படுத்துதல்.
- மாணவர் மதிப்பீடு மற்றும் ஆசிரியர் பயிற்சிகளுக்குத் தேவையான மின்னிய வளங்களை உயர் தொழில்நுட்ப ஆய்வகங்களின் வழியாக வழங்குதல்.
- ஆசிரியர்களுக்கு மனவெழுச்சி நலம், வாழ்க்கைத் திறன் மற்றும் மின்னியத் தொழில்நுட்பத் திறன் போன்றவற்றை மேம்படுத்துவதற்கான பயிற்சிகளை அளித்தல்.
- கோவிட்-19 பெருந்தொற்று போன்ற சூழ்நிலைகளில் மாற்றுவழிக் கற்பித்தல் மற்றும் மதிப்பீட்டு முறைகளுக்கு மாறுவதற்குப் பள்ளிகளுக்கு உதவுதல்.

2022 ஏப்ரல் 11]

- *மாணவர்களுக்குத் தேவையான உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு வழிகாட்டுதல்களை வழங்கத் தேவையானவாறு ஆசிரியர்களை வளப்படுத்துதல்.*

- *தேசிய அடைவு ஆய்வுகளைப் பகுப்பாய்வு செய்வதன்மூலம் மாணவர்களுக்கு எங்கெங்கு கற்றல் தடைகள் உள்ளன என்பதைக் கண்டறிந்து அத்தகைய இடைவெளிகளை நீக்குவதற்கான குறைதீர் நடவடிக்கைகளை வடிவமைத்தல்.*

4.5. திட்டங்களும் செயல்பாடுகளும்

4.5.1. முதன்மைப்படுத்தப்பட்ட பாடத் திட்டம்

கோவிட்–19, பெருந்தொற்றுக் காரணமாக பள்ளிகள் மூடவேண்டிய சூழலில், ஆசிரியர் மாணவர் நேரடி வகுப்பறைக் கற்றலுக்கு வாய்ப்பில்லாமல் கற்றல் மிகவும் பாதிக்கப்பட்டது. ஓர் ஆண்டில் கற்க வேண்டிய முழுமையான பாடங்களை முடிக்க இயலாத நிலை ஏற்பட்டது. இதனைக் கருத்தில் கொண்டு அனைத்து வகுப்புகளுக்கும் முதன்மைப்படுத்தப்பட்ட பாடத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடங்களின் முக்கியப் பகுதிகளையும் உள்ளடக்கியதாக இப்பாடத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

4.5.2. கற்றல் இடைவெளியை ஈடுசெய்வதற்கான முன்னெடுப்புகள்

4.5.2.1. புத்தாக்கப் பயிற்சிக் கட்டகங்கள்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், பள்ளிகள் மீண்டும் திறந்த பிறகு கற்றல் இடைவெளியைக் குறைக்கும் நோக்கிலும் முந்தைய வகுப்புகளில் விடுபட்ட பாடக் கருத்துகளைப் புரிந்துகொண்டு கற்கும்வகையிலும் 2 முதல் 12 வரையிலான வகுப்புகளுக்குப் புத்தாக்கப் பயிற்சிக் கட்டகங்களை உருவாக்கி வழங்கியுள்ளது. முக்கியமான அடிப்படைக் கருத்துகளை உள்ளடக்கி மேம்படுத்தப்பட்ட செயல்பாடுகள் வழியாகவும், படக் காட்சிகள் வழியாகவும் கட்டகங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இப்புத்தாக்கப் பயிற்சிக் கட்டகங்களை, நடப்பாண்டுக்கான பாடக் கருத்துகளைக் கற்பிப்பதற்கு முன்னதாக 45 நாள்களுக்கு கற்பிக்க ஆசிரியர்கள் ஊக்குவிக்கப்பட்டனர். அனைத்து பள்ளி மாணவர்களிடமும் ஏற்பட்டுள்ள கற்றல் இடைவெளியைக் குறைக்க இப்புத்தாக்கப் பயிற்சிக் கட்டகங்கள் உதவின.

[2022 ஏப்ரல் 11

4.5.2.2. இல்லம் தேடிக் கல்வி

குழந்தைகளின் கற்றல் இடைவெளியைக் களைவதற்காக இல்லம் தேடிக் கல்வி என்னும் முன்னோடித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. "பெருந்தொற்று காரணமாகப் பள்ளிகள் மூடப்பட்டதால் ஏற்பட்ட கற்றல் இழப்பை ஈடுகட்டுவதற்கும் மாணவர்களிடம் ஏற்பட்ட உளவியல் ரீதியான பாதிப்புகளைச் சரி செய்வதற்கும் மாபெரும் கற்றல் மற்றும் படித்தல் இயக்கம் அறிமுகப்படுத்தப்படும்" என மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டப் பேரவையில் அறிவித்தார். இல்லம் தேடிக் கல்வி திட்டத்திற்கான கற்றல் கற்பித்தல் பொருள்களைத் தயாரிக்கும் பணி, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது.

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், செயல்வழிக் கற்றல் மற்றும் பங்கேற்றுக் கற்கும் அடிப்படையில் விளையாட்டுகள், புதிர்கள், பாடல்கள், கதைகள், எளிய அறிவியல் சோதனைகள் மற்றும் கலைகள் வாயிலாக மாணவர்களின் உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொணரும்வகையில் கற்றல் கற்பித்தல் பொருள்களைத் தொடக்க மற்றும் உயர் தொடக்க வகுப்பு நிலை மாணவர்களுக்கென உருவாக்கியுள்ளது. இத்திட்டத்திற்கென நிறுவப்பட்ட மையங்களில் பணியமர்த்தப்பட்ட தன்னார்வலர்கள், கற்றல் கற்பித்தல் பொருள்களைப் பயன்படுத்தி எளிமையான முறையில் வகுப்புகளைக் கையாளுகின்றனர். தன்னார்வலர்களுக்கு என உருவாக்கப்பட்ட கட்டகங்களில் விரைவுத் துலங்கல் குறியீடுகள் இணைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் தன்னார்வலர்கள், செயல்படுத்த வேண்டிய கற்பித்தல் அணுகுமுறைகளைக் கொண்ட மாதிரி வகுப்புகள், காணொலிகளாக இணைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் நோக்கம், பள்ளிகளில் அளிக்கப்படும் பாடக்கருத்துகளை மேலும் வலுப்படுத்துவதே ஆகும்.

4.5.2.3 எண்ணும் எழுத்தும்

பள்ளிகள் மூடப்பட்டிருந்ததால் குழந்தைகளின் கற்றலில் ஏற்பட்டிருந்த இடைவெளியைக் குறைப்பதற்காக, மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் அவர்கள் 2021-2022 ஆம் ஆண்டு சட்டப் பேரவையின் நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டில் உள்ள 8 வயது நிரம்பிய அனைத்து மாணவர்களும் 2025 ஆம் ஆண்டுக்குள் எழுத்தறிவையும் எண்ணறிவையும் பெறுவர் என்ற திட்டத்தினை

2022 ஏப்ரல் 11]

அறிவித்தார். இலக்குடன் கூடிய இம்முதன்மைத் திட்டம், 2022-2023 ஆம் கல்வியாண்டிலிருந்து 1 முதல் 3 வரையிலான வகுப்புகளில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. பல்வேறு கற்றல் நிலைகளில் உள்ள மாணவர்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டத்திற்கான கற்றல் பொருள்கள் உருவாக்கப்பட்டுள்ளன. உருவாக்கப்பட்ட கற்றல் பொருள்களின் பயன்பாட்டினைத் தெரிந்துகொள்ள களப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. களப் பரிசோதனையில் பெறப்பட்ட கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு, கற்றல் கற்பித்தல் வளங்கள் சீரமைக்கப்பட்டுள்ளன. மேலும், ஆசிரியர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் இத்திட்டத்தின் செயல்பாடுகளை ஒவ்வொரு நிலையிலும் கண்காணிப்பதற்கான உத்திகள் வகுக்கப்பட்டு வருகின்றன. மதிப்பீடுகள், புதுமையாகவும் விளையாட்டு முறையிலும் கட்டமைக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் வாயிலாக 15,89,235 குழந்தைகள் பயன்பெறுவர்.

4.5.3. முன்மாதிரியான மின்னியப் பாடப்பொருள்கள் உருவாக்கம்

இன்றைய குழந்தைகள், தொழில்நுட்பத்தில் பற்றுடையவர்கள். மின்னியத் தொழில்நுட்பத்தில் பாடப்பொருளை எளிதில் புரிந்துகொள்கின்றனர். குழந்தைகளின் இந்த ஆற்றலை மேம்படுத்தும்வகையில் மின்னியப் பாடப்பொருள்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இவ்வுருவாக்கம், இரு படிநிலைகளைக் கொண்டது. முதலாவது, தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களைக் கொண்டு பாடப்பொருளைத் தேர்ந்தெடுத்து தொடர்புபடுத்தி அதற்கான கற்பித்தல் நெறிமுறைகளை உள்ளடக்கிய மின்னியப் பாடப்பொருளுக்கான கருத்துருவாக்கம் செய்யப்படும். இரண்டாவதாக, பாடவல்லுநர்களின் துணையோடு தொழில்நுட்பத்தை இணைத்து பாடப்பொருள் மின்னிய வடிவாக்கம் செய்யப்படும். ஏற்கெனவே உருவாக்கப்பட்டுள்ள மின்னிய பாடப்பொருளைவிடச் சிறப்பாக, முன்மாதிரியான மின்னியப் பாடப்பொருள்கள் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

4.5.4. கல்வித் தொலைக்காட்சி

1 முதல் 12 வகுப்பு வரையிலான வகுப்புகளுக்கு அனைத்து நாள்களிலும் எல்லா நேரமும் (24X7) கல்வித் தொலைக்காட்சி மின்னியப் பாடப்பொருளை ஒளிபரப்புகிறது. கோவிட்-19, பெருந்தொற்றினால் பள்ளிகள் தொடர்ந்து மூடப்பட்டிருந்த

[2022 ஏப்ரல் 11

நிலையில் பள்ளிகளின் பணியை 'கல்வித் தொலைக்காட்சி' தனது ஒளிபரப்புமூலம் மேற்கொண்டது. பாடவாரியாக, வகுப்புவாரியாக ஒளிபரப்பப்படும் காணொலிகள், அரசு கேபிள் தொலைக்காட்சி வாயிலாகவும் தனியார் தொலைக்காட்சிச் சேனல்கள் வாயிலாகவும் நேரடி வீட்டு இணைப்புகள் (DTH) வாயிலாகவும் பல்வேறு கேபிள் சேவை இணைப்பாளர்கள் வாயிலாகவும் (MSO) ஒளிபரப்பப்பட்டு வருகின்றன. 1 முதல் 12 வரை வகுப்பு மாணவர்களுள், ஒளிபரப்பைப் பார்க்கத் தவறியவர்கள் பயன்பெறும்வகையில் அடுத்தநாள் முதல் அந்தக் காணொலிகளைப் பார்க்க ஏதுவாக அவை Kalvi TV official youtube Channel-லில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இதுவரை 7,000-க்கும் மேற்பட்ட காணொலிகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இந்த வலையொளித் தளத்திற்கு 4 இலட்சம் சந்தாதாரர்களும் 34 மில்லியன் பார்வையாளர்களும் உள்ளனர். கல்வித் தொலைக்காட்சியின் பாட ஒளிபரப்பு அட்டவணை மற்றும் தேவையான பிற செய்திகள், கல்வித் தொலைக் காட்சியின் அதிகாரப்பூர்வ வலைத்தளத்தில் (https://www.kalvitholaikaatchi.com) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

4.5.5. அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கான தகவல்தொடர்புத் தொழில்நுட்பப் பயிற்சி

தற்போதைய தொழில்நுட்ப உலகில், வகுப்பறைச் செயல்பாடுகளைத் தொழில்நுட்பத்துடன் இணைப்பதால் கற்றல் கற்பித்தல் மேம்படும். தகவல் தொடர்பு தொழில்நுட்பப் பயன்பாடு ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமான தொடர்பை முழுவதுமாக மாற்றியுள்ளது. இத்தகைய தொழில்நுட்பம் இணைந்த கற்றல் முறையை நடைமுறைப்படுத்துவதற்காக, அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு, உயர் தொழில்நுட்ப ஆய்வகங்களின் வழியாக 5 நாள் தகவல் தொடர்புத் தொழில்நுட்பப் பயிற்சி வழங்கப்பட்டு, அவர்களின் பணித் திறன் மேம்படுத்தப்பட்டது. கணினியின் அடிப்படைகள், இணையப் பயன்பாடுகள், உயர் தொழில்நுட்ப ஆய்வகப் பயன்பாடுகள், கல்வியியல் மேலாண்மைச் சேவையின் முக்கியக்கூறுகள் ஆகியன குறித்து ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். நேரலைப் பயிற்சி, செய்து கற்றல், விளக்கக் காணொலிகள், மதிப்பீடுகள், பின்னூட்டங்கள் எனப் பல்வேறு நிலைகளை இப்பயிற்சி உள்ளடக்கியிருந்தது. கற்பித்தலுக்குத் திட்டமிடும் காலத்தைக் குறைத்து ஆசிரியர்களின் வகுப்பறைக் கற்பித்தலுக்கு உதவும்வகையில் இலவச இணையவழி செயலிகள்/

2022 ஏப்ரல் 11]

கருவிகள் குறித்தும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டது. உயர் தொழில்நுட்ப ஆய்வகங்களில் பயன்படுத்தப்படும் பயனர் பெயர்களை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர் மதிப்பீடுகளுக்கான வினாக்களும் வழங்கப்பட்டுள்ளன. இப்பயிற்சியின் வாயிலாகத் தொடக்க நிலை முதல் மேனிலை வரை பணியாற்றும் 1,90,430 ஆசிரியர்கள் பயனடைந்துள்ளனர். இப்பயிற்சியின் பயனாக ஆசிரியர்கள் இணையவழியில் கற்பித்தல் பணியைச் சிறப்பாக மேற்கொள்ளும் திறனைப் பெற்றுத் தேவைக்கேற்பத் தம்மைத் தகவமைத்துக்கொள்கின்றனர். இதன் நன்மைகளைக் கருத்தில் கொண்டு இப்பயிற்சி, புதிதாகப் பணியமர்த்தப்படும் அனைத்து ஆசிரியர்களுக்கும் அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

4.5.6. கற்றல் விளைவுகள் குறித்த பயிற்சி

ஒவ்வொரு வகுப்பிலும் நடத்தப்படும் ஒவ்வொரு பாடத்திற்கும் அளவுகோலாக அமையும் கற்றல் விளைவுகள், குழந்தைகள் தாங்கள் கற்கும் பாடக்கருத்துகளில் தெளிவு பெற்றுள்ளனரா என்பதைக் கண்டறிய உதவும். மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், முதன்மைக் கருத்தாளர்களாக ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்கள், வட்டார வள மைய ஆசிரியப் பயிற்றுநர்கள், சிறந்த ஆசிரியர்கள் ஆகியோருக்கு இணையவழியாக கற்றல் அடைவுகள், வகுப்பறை நடைமுறைகள் மற்றும் செயல்பாடுகள் ஆகியன குறித்து பயிற்சியை வழங்கியது. பயிற்சி பெற்ற முதன்மைக் கருத்தாளர்களால், தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு இரண்டு நாள் கற்றல் விளைவுகள் சார்ந்த பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியின் மூலமாக மாநிலத்தில் உள்ள அனைத்துத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களும் பயனடைந்துள்ளனர்.

4.5.7. கல்வியில் பின்தங்கிய வட்டாரங்களில் படிக்கும் மாணவர்களுக்கான மனநலன் மற்றும் வாழ்க்கைத் திறன் மேம்பாட்டுத் திட்டம்

மாணவர்களின் மனவெழுச்சி நலத்தையும் வாழ்க்கைத் திறன்களையும் மேம்படுத்துவதில் அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. மன அழுத்தம் ஏற்படும் சூழல்களில், மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பதற்றமும் அழுத்தமும்

[2022 ஏப்ரல் 11

ஏற்படுகிறது. மாணவர்களின் மனவெழுச்சி நலத்தையும் வாழ்க்கைத் திறன்களையும் மேம்படுத்துவதற்காகக் கல்வியில் பின்தங்கிய 44 வட்டாரங்களில் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குக் கலை மற்றும் விளையாட்டு அடிப்படையிலான மனவெழுச்சி நலன் மற்றும் வாழ்க்கைத்திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்படும் என்று மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டப் பேரவையில் அறிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து, யுனிசெப் அதனுடைய கல்வி அமைப்புடன் இணைந்து மாணவர் பயிற்சி ஏடு, ஆசிரியர் கையேட்டை உருவாக்கியுள்ளது. மனவெழுச்சி நலன் மற்றும் வாழ்க்கைத் திறன்களை வளர்ப்பதற்கான கலை மற்றும் விளையாட்டு சார்ந்த பல்வேறு செயல்பாடுகள், மாணவர் பயிற்சிக் கையேட்டில் இடம்பெற்றுள்ளன. மாணவர் பயிற்சிக் கையேட்டில் இடம்பெற்றுள்ள கற்றல் செயல்பாடுகளுக்கான கற்பிக்கும் முறைகள் குறித்து ஆசிரியர் கையேட்டில் விளக்கப்பட்டுள்ளன.

இக்கட்டகங்களை உருவாக்கிய பாட வல்லுநர்கள், கல்வியில் பின்தங்கிய வட்டாரங்களில் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பணிபுரியும் 1,200 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்துள்ளனர். பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், தங்கள் பள்ளி மாணவர்களுக்கு இப்பயிற்சியை வழங்கினர். இப்பயிற்சித் திட்டம், ரூபாய் 1 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டது. இதனால் 2,25,000 மாணவர்கள் பயனடைந்து உள்ளனர்.

4.5.8. மாணவர்களுக்கான உயர்கல்வி, வேலைவாய்ப்பு வழிகாட்டி நூலை உருவாக்குதல்

உயர் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு வழிகாட்டுதல் என்பது 11 ஆம் வகுப்புக்கான பாடப் பிரிவுகளை மாணவர்கள் தேர்ந்தெடுப்பதற்கு முன் வழங்க வேண்டிய மிக முக்கிய உள்ளீடுகளுள் ஒன்றாகும். அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் பெரும்பாலான மாணவர்கள், மிகச் சாதாரண சூழலில் இருந்து படிக்க வருகின்றனர். இவர்களுக்கு உயர் கல்வி, வேலைவாய்ப்புகளைத் தெரிவு செய்வதற்கான உரிய வழிகாட்டுதல்கள் கிடைக்காமல் போகலாம்.

இதனால், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், 9 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு

2022 ஏப்ரல் 11]

உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்கான வழிகாட்டுதலை வழங்கும் வகையில் கட்டகங்களைத் தயாரிக்க மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனக் கல்வியாளர்கள், சிறந்த ஆசிரியர்கள் கொண்ட குழுவை அமைத்தது. இக்குழு, நடைமுறையில் உள்ள பல்வேறு பணிவாய்ப்புகள் குறித்து விரிவாக ஆராய்ந்தது. மாணவர்களின் விருப்பம், ஆர்வம், இயல்திறன்கள், வேலைவாய்ப்பு விருப்பங்களை அளவிட்டு அதனடிப்படையில் உயர் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளைத் தேர்ந்தெடுக்கும் வகையில் மாணவர்களுக்கான கையேட்டினை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் தயாரித்துள்ளது.

பன்னிரெண்டாம் வகுப்பு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இது குறித்த பயிற்சிகள் வழங்கப்பட்டு, அவர்களின் மூலமாக அவர்தம் மாணவர்களுக்கு உயர் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு குறித்து ஆற்றுப்படுத்தத் தேவையான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

4.5.9. மதிப்பீட்டுப் புலத்தை ஏற்படுத்துதல்

கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளில் மதிப்பீடும் ஒருங்கிணைந்துள்ளது. மாணவர்களின் கற்றலைச் சோதிக்கும் மதிப்பீடுகளைக் கொண்டு ஆசிரியர்களால் வகுப்பறைச் செயல்பாடுகளை மறுதிட்டமிட முடியும்.

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் மதிப்பீட்டுப்புலத்தில் (Assessment Cell) பள்ளிக் குழந்தைகள் ஒவ்வொருவரின் கற்றல் அடைவும் குறிப்பிட்ட கால இடைவெளியில் (periodic intervals) மதிப்பீடு செய்யப்பட்டு, பகுப்பாய்வு செய்யப்படும். இத்தகவல்கள் யாவும் முறையாகச் சேமிக்கப்பட்டு குறைதீர்க் கற்றலுக்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகப் பள்ளிப் பாடநூல்களில் இடம்பெற்றுள்ள பாடப்பொருள், தலைப்பு, துணைத் தலைப்புகள், கற்றல் விளைவுகளை உள்ளடக்கிய ஒரு வகைதொகைக் கோப்பாக (taxonomy document) உருவாக்கப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் உள்ள ஆசிரியர்களால் 9 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான பாடங்களுக்கு உருவாக்கப்பட்டுள்ள வினாக்களை 32 மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள், சீராய்வு செய்கின்றன. சீராய்வு செய்யப்பட்ட வினாக்கள், உயர் தொழில்நுட்ப

[2022 ஏப்ரல் 11

ஆய்வகங்களுக்கு அனுப்பப்படுகின்றன. அந்த ஆய்வகங்களின் வழியாக மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளில் 9 ஆம் வகுப்பிற்குத் திங்கட்கிழமையிலும், 10 ஆம் வகுப்பிற்குச் செவ்வாய்க்கிழமையிலும், 11 ஆம் வகுப்பிற்குப் புதன் மற்றும் வியாழக்கிழமைகளிலும், 12 ஆம் வகுப்பிற்கு வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளிலும் மதிப்பீடுகள் நடத்தப்படுகின்றன. மதிப்பீட்டு நடவடிக்கைகள் நிறைவடைந்தவுடன், பெறப்பட்ட தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு தகுந்த குறைதீர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

4.5.10. மாநில வள மையத்தை ஏற்படுத்துதல்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், பள்ளிக் கல்வித் துறையில் உள்ள பல்வேறு தரப்பினரின் பணித் திறன்களையும் தொடர்ந்து மேம்படுத்தி வருகிறது. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், வளங்களின் களஞ்சியமாகத் திகழவும் ஆசிரியர்களுக்கான வள மையமாக அமைந்திடவும் பாடவாரியாகச் சிறப்புப் புலங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த வள மையத்தில் மொழிப் பிரிவு, அறிவியல் பிரிவு, கணிதவியல் பிரிவு, சமூக அறிவியல் பிரிவு, ஆராய்ச்சிப் பிரிவு, தகவல் தொடர்புத் தொழில்நுட்பப் பிரிவு ஆகியவை இடம்பெறும். ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையில் காணொலிக் காட்சிகளுடன்கூடிய பாடப் பொருள்கள் இம்மையத்தில் இடம்பெறும். ஆசிரியர்களும் மாணவர்களும் மாநில அளவிலான பயிற்சிகள் நடைபெறும்போதும் மற்றும் ஆண்டு முழுவதும் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் வெளியிடும் அட்டவணைப்படி இவ்வள மையத்திற்கு வருகை தரலாம்.

இம்மாநில வள மையம் மாதிரிகள், செய்து கற்றல், கலந்தாலோசித்துக் கற்றல், விளையாட்டுவழிக் கற்றல், அனுபவக் கற்றல், அசைவூட்டப்படம்வழிக் கற்றல் போன்ற சிறப்புகள் உள்ளடக்கியதாகயிருக்கும். ஒவ்வொரு வள மையத்திற்கும் தேவையான உபகரணங்களை வாங்குவதன்பொருட்டுப் பாட வல்லுநர் குழு, சிறந்த நிறுவனங்கள் சிலவற்றைப் பார்வையிட்டுச் சிறப்புப் புலங்களை மேம்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

2022 ஏப்ரல் 11]

4.5.11 ஆராய்ச்சிச் செயல்பாடுகள்

ஆய்வுச் செயல்திட்டங்கள் மற்றும் செயலாராய்ச்சிகள், பள்ளிக் கல்வியில் உள்ள கற்றல் கற்பித்தல் செயல்முறைகள், மதிப்பீடு, பாடப் புத்தகங்களின் செயல்திறன், கல்வித் தொலைக்காட்சிக் காணொலிகளின் தாக்கம், இணையவழிக் கற்றலின் தாக்கம் போன்றவற்றில் ஏற்பட வாய்ப்புள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முக்கியக் கருவிகளாக விளங்குகின்றன. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், ஆசிரியப் பயிற்றுநர்களையும் பிற ஆசிரியர்களையும் பள்ளி வருகை, வகுப்பறை உற்றுநோக்கல், மாணவர்களின் கல்வித்திறன், பணியிடைப் பயிற்சி போன்றவைக் குறித்த கல்வி ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ள ஊக்குவித்து வருகிறது. இது தவிர, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திலும் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களிலும் உள்ள கல்வியாளர்களால் பண்புசார் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், பள்ளிக் கல்வி தொடர்பான அவ்வப்போதைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான செயல் ஆராய்ச்சிகளையும் அவர்கள் மேற்கொள்கின்றனர்.

மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்களால் 2021-2022 ஆம் ஆண்டில் 369 செயலாராய்ச்சிகளும், 159 ஆய்வுச் செயல்திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாராய்ச்சிகளின் வாயிலாகக் கண்டறியப்பட்ட முடிவுகள் யாவும் கருத்தரங்குகள் வழியாகவும், ஆசிரியர்களுக்கான பணியிடைப் பயிற்சிகள் வழியாகவும் பரவலாக்கப்பட்டுள்ளன.

4.6. நிதி ஒதுக்கீடு

2022-2023 ஆம் ஆண்டிற்கு அரசால் இவ்வியக்ககத்திற்கு ரூ.105.66 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2022 ஏப்ரல் 11

5. அரசுத் தேர்வுகள் இயக்ககம்

5.1. அறிமுகம்

அரசுத் தேர்வுகள் இயக்ககம் 1975 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இவ்வியக்ககம் தொடங்கப்பட்டதில் இருந்து பல்வேறு தேர்வுகளை உயர்ந்த தரத்துடன் நடத்தி வருகிறது. 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கான பொதுத் தேர்வுகளை நடத்துவதுடன், தேசிய திறனாய்வுத் தேர்வு (NTSE), தேசிய வருவாய் வழி மற்றும் தகுதி படிப்புதவித் தொகை தேர்வு (NMMS), தமிழ்நாடு ஊரக மாணவர்கள் திறனாய்வுத் தேர்வு (TRUST) போன்ற உதவித் தொகைத் தேர்வுகளையும் இவ்வியக்ககம் நடத்துகிறது.

5.2. குறிக்கோள்கள்

- அனைத்து வகையான தேர்வுகளையும் முறையாகவும் பாதுகாக்கப்பட்ட சூழலிலும் நடத்துவதற்கு தேர்வுகள் நடத்தும் முறையில் சீர்திருத்தங்கள் மேற்கொள்வது.
- மின்னணுமயமாக்கல்மூலம் மதிப்பீட்டு முறைகளை மேம்படுத்துதல்.
- குறித்த நேரத்தில் தேர்வு முடிவுகளை வெளியிடுதல் மற்றும் தேர்வர்களுக்கான தக்க சான்றிதழ்களை வழங்கிடுதல்.
- எதிர்காலத்தில் உயர்கல்வி பயில்வதற்கான சவால்களை எதிர்கொள்ள உதவும் வகையில், உயர் சிந்தனைத் திறன் கொண்ட வினாத்தாள்கள் அமைத்து மாணவர்களிடையே திறனாய்வு சிந்தனைத் திறனை வளர்ப்பது.

5.3. செயல்பாடுகள்

அரசுத் தேர்வுகள் இயக்ககம் 35 வகையான வெவ்வேறு தேர்வுகளை நடத்துவதற்கான பொறுப்பினை ஏற்றுள்ளது. வினாத்தாள்கள் தயாரிப்பதைத் தவிர, இவ்வியக்ககம் தேர்வுகளை வெளிப்படைத்தன்மையுடன் நடத்தி தேர்வு முடிவுகளை எவ்விதப் புகார்களுக்கும் இடமின்றி வெளியிட்டு உரிய சான்றிதழ்களையும் தேர்வர்களுக்கு வழங்கி வருகின்றது.

5.4. இணையதள சேவைகள்

அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் அதிகாரப்பூர்வ இணையதளமான www.dge.tn.gov.in மூலம் மாணவர்கள்,

2022 ஏப்ரல் 11]

பெற்றோர்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்குத் தேவைப்படும் கீழ்க்குறிப்பிட்டுள்ள விவரங்களை எளிதாகப் பெறுவதற்கான வசதி செய்யப்பட்டுள்ளது:

- தேர்வு அறிவிக்கைகள்
- தேர்வுக்கால அட்டவணைகள்
- விண்ணப்பப் படிவங்கள்
- தேர்வுக் கட்டண விவரங்கள்
- தேர்வர்களுக்கான அறிவுரைகள்
- முந்தைய ஆண்டு தேர்வு வினாத்தாள்கள்
- இரண்டாம்படி மதிப்பெண் சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள்
- சான்றிட்ட மதிப்பெண் நகல் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள்
- புலப்பெயர்ச்சி சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள்
- பள்ளி மாணவர்கள் மற்றும் தனித் தேர்வர்களுக்கான பெயர்ப் பட்டியல் தயாரித்தல்
- தேர்வுக்கூட நுழைவுச் சீட்டு பதிவிறக்கம் செய்தல்
- தேர்வுக் கட்டணத்தை இணையதளம்மூலம் செலுத்துதல்

5.5. பொது மக்கள் நலன்

5.5.1 அரசு இ-சேவை மையங்கள் வழியே விண்ணப்பித்தல்

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் மின்னணு சேவைகள் என்ற தலைப்பின்கீழ் சட்டப் பேரவையில் அறிவித்ததற்கிணங்க இவ்வியக்கத்தின் கீழ்க்காணும் சேவைகள் அரசு இ-சேவை மையங்களின் வாயிலாக விண்ணப்பித்து பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது:

- தமிழ் வழியில் பயின்றமைக்கான சான்று
- இரண்டாம்படி மதிப்பெண் சான்றிதழ்
- சான்றிட்ட மதிப்பெண் நகல்

[2022 ஏப்ரல் 11

- மதிப்பெண் சான்றிதழில் திருத்தம்
- புலப்பெயர்வு சான்றிதழ் (வெளி மாநிலம் அல்லது வெளி நாடுகளில் உயர் கல்வி பயில்வதற்கு)

5.5.2 மின் ஆவணக் காப்பகம்

மின் ஆவணக் காப்பகம் சான்றிதழ்களை மின்னணுச் சான்றிதழ்களாக பதிவிறக்கம் செய்துகொள்ள உதவுகிறது. இடைநிலை மற்றும் மேல்நிலை தேர்வுகளை எழுதிய மாணவர்கள் தங்களது ஆதார் எண்களைக் கொண்டு மின் ஆவணக் காப்பகத்தில் உள்நுழைந்து அவர்களது மின்னணு மதிப்பெண் சான்றிதழ்களை அரசுத் தேர்வுகள் இயக்கக மதிப்பெண் விவர தொகுப்பிலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுவரை 1,06,75,384 தேர்வர்களது மதிப்பெண் விவரங்கள் மின் ஆவணக் காப்பகத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. 1,556 மதிப்பெண் சான்றிதழ்களுக்கு மின்னணு சான்றொப்பம் அளிக்கப்பட்டுள்ளது.

5.6. மாணவர்கள் நலன்

5.6.1. தமிழ்வழியில் பயிலும் மாணவர்களுக்கு தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்தல்

தமிழ்வழியில் பயிலும் பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலைத் தேர்வுகள் எழுதும் பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் பொதுத் தேர்வு எழுதுவதற்கான தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. 2021–22 ஆம் கல்வியாண்டில் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்ட தேர்வர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

வ. எண்	வகுப்பு	தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்ட தேர்வர்கள்
1	இடைநிலை	5,05,248
2	மேல்நிலை முதலாம் ஆண்டு	4,72,617
3	மேல்நிலை இரண்டாம் ஆண்டு	4,34,888

2022 ஏப்ரல் 11]

5.6.2. சிறப்புக் கவனம் தேவைப்படும் தேர்வர்கள் தேர்வு எழுதுவதற்கு வழங்கப்படும் சலுகைகள் (CWSN)

பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலைத் தேர்வுகள் எழுதும் சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு வழங்கப்படும் சலுகைகளாவன:

- *தரைத் தளத்தில் இருக்கை வசதி செய்யப்படுகிறது.*
- *பார்வைத்திறன் குறைபாடுடைய தேர்வர்களுக்கு தனி அறை வசதி செய்யப்படுகிறது.*
- *பார்வைத்திறன் குறைபாடுடைய தேர்வர்களுக்குச் சொல்வதை எழுதுபவர் நியமனம்: சொல்வதை எழுதுபவராக தகுதியான மற்றும் சம்பந்தப்பட்ட பாடத்தில் தகுதி பெற்ற இளங்கலை பட்டதாரி/முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.*
- *நரம்பியல் கோளாறு உடைய தேர்வர்களுக்கு கேள்வித் தாளைப் படித்துக்காட்ட அல்லது சொல்வதை எழுதுபவர் நியமனம் செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.*
- *கூடுதல் ஒரு மணி நேரம் வழங்கப்படுகிறது.*
- *கணிப்பான்களைப் பயன்படுத்துவதற்கான அனுமதி வழங்கப்படுகிறது.*
- *இடைநிலை வகுப்பு பயிலும் மாணாக்கர்கள் செய்முறைத் தேர்வு எழுதுவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.*
- *எதிர்பாராத விபத்துகள்/காயங்கள் ஏற்பட்ட தேர்வர்கள் சொல்வதை எழுதுபவர் நியமனம் மற்றும் கூடுதல் ஒரு மணி நேரம் வழங்கப்படுகிறது.*

5.7. சிறைகளில் தேர்வு மையங்கள்

சிறைவாசிகளும் எதிர்கால வாழ்க்கையில் முன்னேற, அவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பது அவசியமாதலால் ஒவ்வோராண்டும் சிறைகளில் தேர்வு மையம் அமைக்கப்பட்டு தேர்வு நடத்தப்படுகிறது. 2020-2021 ஆம் கல்வியாண்டிற்கான, ஆகஸ்ட்/செப்டம்பர் 2021 தேர்வில் 10 ஆம் வகுப்பிற்கு 203

[2022 ஏப்ரல் 11 சிறைவாசிகளும், 11 ஆம் வகுப்பிற்கு 68 சிறைவாசிகளும் 12 ஆம் வகுப்பிற்கு 68 சிறைவாசிகளும் தேர்வினை எழுதினர்.

5.8. துணைத் தேர்வுகள் நடத்துதல்

ஒவ்வோர் ஆண்டும் பொதுத் தேர்வு முடிவுகள் வெளியிட்டவுடன் அதே கல்வியாண்டில் தேர்வர்கள் தங்கள் உயர் படிப்பைத் தொடர்வதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் துணைத் தேர்வுகள் நடத்தப்படுகின்றன.

5.9. பல்வேறு வகையான தேர்வுகள் நடத்துதல்

5.9.1. எட்டாம் வகுப்புத் தேர்வு (தனித்தேர்வர்கள்)

குறைந்தபட்ச எட்டாம் வகுப்புக் கல்வித் தகுதியினை அளிக்கும் வகையில், நேரடித் தனித்தேர்வர்களுக்கு எட்டாம் வகுப்புத் தேர்வு இவ்வியக்ககத்தால் நடத்தப்படுகிறது. 2021-2022 கல்வியாண்டில் டிசம்பர் 2021 இல் நடத்தப்பட்ட எட்டாம் வகுப்புத் தேர்வில் 4,209 தனித்தேர்வர்கள் தேர்வெழுதியுள்ளனர்.

5.9.2. அரசுத் தொழில்நுட்பத் தேர்வுகள்

வேலைவாய்ப்பிற்கான தொழில்நுட்பக் கல்வித் தகுதியை வழங்குவதற்கு, ஓவியம், தையல், விவசாயம், அச்சுக்கலை, இசை, கைத்தறி மற்றும் நெசவு போன்ற பாடப் பிரிவுகளில் அரசுத் தொழில்நுட்பத் தேர்வுகள் நடத்தப்படுகிறது.

5.9.3. தொடக்கக் கல்விப் பட்டயத் தேர்வு

இவ்வியக்ககத்தால் தொடக்கக் கல்வி பட்டயத் தேர்வு நடத்தப்படுகிறது. 2020-2021 கல்வியாண்டிற்குரிய தேர்வு செப்டம்பர் 2021 இல் நடைபெற்றது. இத்தேர்வினை 9,536 மாணவர்கள் எழுதியுள்ளனர்.

5.9.4. மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (UPSC) மற்றும் மத்திய பணியாளர் தேர்வாணையத்தின் (SSC) தேர்வுகளை நடத்துதல்

ஆண்டுதோறும் மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் மத்திய பணியாளர் தேர்வாணையத்தால் சென்னையில் நடத்தப்படும் தேர்வுகளுக்கு அரசுத் தேர்வுகள் இயக்ககம் ஒருங்கிணைப்பு முகமையாக செயல்பட்டு வருகிறது.

2022 ஏப்ரல் 11]

5.10. உதவித் தொகைக்கான தேர்வுகள்

5.10.1. தமிழ்நாடு ஊரக மாணவர்கள் திறனாய்வுத் தேர்வு (TRUST)

ஊரகப் பகுதிகளில் ஒன்பதாம் வகுப்பு பயிலும் மாணவர்கள், அவர்தம் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.1,00,000/-க்கு மிகாமல் இருக்கும்பட்சத்தில் இத்தேர்வினை எழுத தகுதியுடையோர் ஆவர். ஒவ்வொரு மாவட்டத்திலும் 50 மாணவர்கள் மற்றும் 50 மாணவியர் எழுத்துத் தேர்வில் தெரிவு செய்யப்பட்டு ஆண்டொன்றுக்கு ரூ.1000/- வீதம், தொடர்ந்து நான்கு ஆண்டுகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. 2021-2022 ஆம் கல்வியாண்டில் பிப்ரவரி 2022 இல் நடைபெற்ற தேர்வில் 88,658 மாணவர்கள் தேர்வெழுதியுள்ளனர்.

5.10.2. தேசிய வருவாய் வழி மற்றும் தகுதி படிப்புதவித் தொகை தேர்வு (NMMS)

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 7 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்று 8 ஆம் வகுப்பு பயின்று வரும் மாணவர்களின் பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.1,50,000/-க்கு மிகாமல் இருக்கும்பட்சத்தில் தேசிய வருவாய் வழி மற்றும் தகுதி படிப்புதவித்தொகை தேர்வினை எழுத தகுதியுடையவர் ஆவர். தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு 9 முதல் 12-ஆம் வகுப்பு வரை ஆண்டு தோறும் ரூ.12,000/- (மாதம் ரூ.1000/- வீதம்) உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஒவ்வோராண்டும் இத்திட்டத்தின்கீழ் மாநில அளவில் 6,695 மாணவர்கள் படிப்பு உதவித் தொகை பெறுகின்றனர். 2021-2022 ஆம் ஆண்டில் மார்ச் 2022-ல் நடைபெற்ற (NMMS) தேர்வில் 1,75,727 மாணவர்கள் தேர்வெழுதியுள்ளனர்.

5.10.3. தேசிய திறனாய்வுத் தேர்வு (NTSE)

தேசியக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் ஒருங்கிணைப்பு முகமையாக இவ்வியக்ககம் செயல்பட்டு இத்தேர்வினை நடத்துகிறது. கல்வி ஆண்டில், மத்திய/மாநிலப் பள்ளி குழுமங்களில் 10 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்கள் அனைவரும் இத்தேர்வினை எழுத தகுதி படைத்தவர்கள் ஆவர். இவ்வியக்ககத்தால் நடத்தப்படும் முதல்நிலைத் தேர்வின் முடிவுகள் வெளியிடப்பட்ட பின்னர் இரண்டாம்

[2022 ஏப்ரல் 11 நிலைத் தேர்வினை தேசிய அளவில் NCERT நடத்துகிறது. 2021-2022 ஆம் கல்வியாண்டில் பிப்ரவரி 2022 இல் நடைபெற்ற தேர்வை 2,07,205 மாணவர்கள் எழுதியுள்ளனர் இத்திட்டத்தின்மூலம் ஒவ்வோர் ஆண்டும் அதிகபட்சம் 200 தமிழக மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் வரை மாதம் ரூ.1,250/-, இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டப்படிப்பு படிக்கும் வரை மாதம்தோறும் ரூ.2,000/- உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. ஆராய்ச்சிப் படிப்பு மேற்கொள்ளும் மாணவர்களுக்கு பல்கலைக்கழக மானியக் குழுவினால் நிர்ணயிக்கப்படும் உதவித் தொகை அதிகபட்சமாக நான்கு ஆண்டு காலத்திற்கு வழங்கப்படுகிறது.

5.11. இயக்ககத்தினை கணினிமயமாக்குதல்

மாணவர்களின் பெயர்ப் பட்டியல் தயாரித்தல் முதற்கொண்டு தேர்வு முடிவுகள் வெளியிடுதல் வரையிலான அனைத்து தேர்வுப் பணிகளும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் (TNeGA) உதவியுடன் முழு அளவில் கணினிமயமாக்கப்பட்டுள்ளது.

5.12. அரசுத் தேர்வுகள் சேவை மையங்கள்

தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளி வளாகங்களில் 241 அரசுத் தேர்வுகள் சேவை மையங்கள் செயல்படுகின்றன. இவ்வியக்ககத்தால் நடத்தப்படும் அனைத்து தேர்வுகளுக்கும் தேர்வர்கள் இணைய வழியில் எளிதாக விண்ணப்பிக்க இச்சேவை மையங்களில் வசதி செய்யப்பட்டுள்ளது.

5.13. தேர்வு முடிவுகள் வெளியிடுதல்

தேர்வர்களின் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் பொழுது பதியப்பட்ட கைப்பேசி எண்ணிற்கு தேர்வு முடிவுகள் குறுஞ்செய்தியாக உடனடியாக அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும், தேர்வு முடிவுகளை இணைய வழி வாயிலாக வெளியிடுவதற்கு www.tn.results.nic.in, www.dge1.tn.nic.in, www.dge2.tn.nic.in ஆகிய மூன்று இணையதளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலை (TML) சம்பந்தப்பட்ட பள்ளிகள் இணையதளம் வாயிலாகப் பதிவிறக்கம் செய்துகொள்ள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேல்நிலை பொதுத் தேர்வுக்குரிய விடைத்தாள்களின் நகல்கள் பெறுவதற்கு இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கவும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. தேர்வர்களின் விண்ணப்பத்தின்

2022 ஏப்ரல் 11]

அடிப்படையில் விடைத்தாள்களின் நகல்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது. இதன்மூலம் மாணவர்கள் அவர்களது மதிப்பெண்கள் மறுகூட்டலுக்கோ அல்லது அவர்களது விடைத்தாள்களின் மறு மதிப்பீட்டிற்கோ விண்ணப்பிக்கலாம்.

5.14. சான்றிதழ்கள் வழங்குதல்

5.14.1. தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்/மதிப்பெண் பட்டியல்

தேர்வு முடிவுகள் வெளிவந்த மறு நாள் முதல், இடைநிலைத் தேர்வெழுதிய தேர்வர்கள் அவர்களின் தற்காலிக மதிப்பெண் சான்றிதழையும், மேல்நிலைத் தேர்வெழுதியோர் மதிப்பெண் பட்டியலையும் இணையதளம் (www.dge.tn.nic.in) வாயிலாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

5.14.2. மேல்நிலைத் தேர்வுகளுக்கான பாதுகாப்பு அம்சங்களுடன் கூடிய மதிப்பெண் சான்றிதழ்கள்

மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகளில் முழுமையாக தேர்ச்சி அடைந்தவர்களுக்கு பாதுகாப்பு அம்சங்களுடன்கூடிய மதிப்பெண் சான்றிதழ்கள் தனித்தனியே வழங்கப்படுகிறது. அத்துடன் தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கு மதிப்பெண் பட்டியல் வழங்கப்படுகிறது. இடைநிலை/மேல்நிலை தேர்வுகளை ஒன்றுக்கு மேற்பட்ட முறையில் தேர்வெழுதி தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு ஒருங்கிணைக்கப்பட்ட மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

5.14.3. 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழில் பெற்றோர் பெயர் அச்சிடுதல்

10 ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்களில் தேர்வர்களின் பெயரோடு பெற்றோர் பெயரும், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அச்சிட்டு தேர்வர்களுக்கு வழங்கப்படுகிறது. இதே நடைமுறை மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு தேர்வர்களுக்கும் 2021-2022 ஆம் கல்வியாண்டு முதல் நீட்டிக்கப்பட்டுள்ளது.

5.14.4. மதிப்பெண் சான்றிதழின் சான்றிட்ட மதிப்பெண் நகல் மற்றும் மறுபிரதி மதிப்பெண் சான்றிதழ்

தேர்வர்களின் விண்ணப்பத்தின் பேரில் மதிப்பெண் சான்றிதழின் சான்றிட்ட மதிப்பெண் நகல் மற்றும் மறுபிரதி மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்படுகின்றன. இதற்கான

[2022 ஏப்ரல் 11

விண்ணப்பப் படிவங்கள் இவ்வியக்கக இணையதளத்தில் உள்ளது. 2021-2022 ஆம் ஆண்டு 3,488 சான்றிட்ட மதிப்பெண் நகல்களும் மற்றும் 10,523 இரண்டாம்படி மதிப்பெண் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

5.14.5. புலப்பெயர்ச்சி சான்றிதழ்

10 மற்றும் 12 ஆம் வகுப்பு தேர்வுகளில் தேர்ச்சி பெற்று பிற மாநிலங்களில் மேற்படிப்பைத் தொடர விரும்பும் தேர்வர்களிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்ட 5 தினங்களுக்குள் புலப்பெயர்ச்சி சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. 2021-2022 ஆம் ஆண்டு 7,010 புலப்பெயர்ச்சி சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

5.14.6. மதிப்பெண் சான்றிதழ்களின் உண்மைத்தன்மையினை சரிபார்த்தல்

மதிப்பெண் சான்றிதழ்களின் உண்மைத்தன்மை கோரி உயர் கல்வி நிறுவனங்கள் மற்றும் பணி நியமன அதிகாரிகளிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களின் அடிப்படையில் உண்மைத்தன்மை அறியும் பணி மேற்கொள்ளப்படுகிறது. 2021-2022 ஆம் ஆண்டில் 3,55,046 மதிப்பெண் சான்றிதழ்களுக்கு உண்மைத்தன்மை சரிபார்க்கப்பட்டுள்ளது.

5.15. நிதி ஒதுக்கீடு

2022-2023 ஆம் ஆண்டிற்கு வரவு செலவுத் திட்டத்தில் இவ்வியக்ககத்திற்கு ரூ.128.16 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2022 ஏப்ரல் 11]

6. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி

6.1. முன்னுரை

பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வியானது, முற்றிலும் எழுதப் படிக்கத் தெரியாத வயது வந்தோர் அனைவரும் புதிய வடிவிலான அறிவுசார் கற்றல் அனுபவங்கள் மற்றும் திறன்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில், நன்கு வடிவமைக்கப்பட்ட நிலையான மற்றும் முறையான கற்றல் செயல்பாடுகளைக் கொண்ட திட்டங்களை உள்ளடக்கியதாகும். இக்கல்வியானது, வயது வந்தோர் அனைவரும் தங்களுக்கென தனிப்பட்ட ஓர் அடையாளத்தை உருவாக்கிக்கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளதோடு, அவர்களின் கல்வி மற்றும் வருவாய் ஈட்டும் திறனை மேம்படுத்துவதன்மூலம் சமுதாயத்தில் அவர்களுக்கான இடத்தை தக்கவைத்துக்கொள்ளவும் உதவுகிறது. வயது வந்தோர் கல்வியின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கும் வகையிலும், மாநிலத்தில் எழுத்தறிவின்மையை முற்றிலும் அகற்றிடவும், தமிழ்நாடு அரசு பல்வேறு வயது வந்தோர் கல்வித் திட்டங்களை, 1976 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககத்தின் வாயிலாகத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

6.2. தொலைநோக்கு

மாநிலத்தில் முழு எழுத்தறிவை அடைதல் மற்றும் 15 வயதுக்கு மேற்பட்ட முற்றிலும் எழுத மற்றும் படிக்கத் தெரியாத அனைவரும் தங்கள் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து கற்கும் வாய்ப்பை அவர்களுக்கு உகந்த முறைகளில் வழங்குவதை உறுதிசெய்தல்.

6.3. குறிக்கோள்கள்

- எழுத்தறிவு பெறாத வயது வந்த அனைவருக்கும் அடிப்படைக் கல்வி அளித்தல்
- புதிதாக எழுத்தறிவு பெற்றவர்கள் அடிப்படைக் கல்விக்கு மேல் கற்றலைத் தொடரவும், பள்ளிகளில் அளிக்கப்படும் முறையான கல்விக்கு இணையான கல்வி பெறவும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தல்
- தொழில் சார்ந்த பயிற்சி அளிப்பதன்மூலம் அவர்களின் வருவாய் ஈட்டும் திறனை மேம்படச் செய்தல்

[2022 ஏப்ரல் 11

- புதிதாக எழுத்தறிவு பெற்றோர் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து கல்வி கற்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தருதல்

6.4. வளர்ச்சியில் முன்னுரிமை பெறும் மாவட்டங்களில் சிறப்பு எழுத்தறிவுத் திட்டம்

தமிழகத்தில், வளர்ச்சியில் முன்னுரிமை பெறும் இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் (Aspirational Districts) சிறப்பு எழுத்தறிவுத் திட்டமானது ரூ.6.23 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் இலக்கு 15 வயதுக்கு மேற்பட்ட, 1,68,716 முற்றிலும் எழுத மற்றும் படிக்கத் தெரியாதோர் ஆவர். இவர்களுள், 40,288 பேர், இத்திட்டத்தின் முதற்கட்டத்தில் தங்களின் அடிப்படை எழுத்தறிவைப் பெற்று பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின்கீழ் 77,298 கற்போர் சேர்க்கப்பட்டுள்ளனர். 1,855 வயது வந்தோர் கல்வி மையங்கள் வாயிலாக கற்பித்தல் மற்றும் கற்றல் செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், இத்திட்டம் சார்ந்த மீதமுள்ள கற்போர் அனைவருக்கும் மார்ச் 2023-க்குள் அடிப்படை எழுத்தறிவுக் கல்வி வழங்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ள கற்போரின் விவரங்கள் பின்வருமாறு:

இராமநாதபுரம் மாவட்டம்			விருதுநகர் மாவட்டம்		
ஒன்றியம்	வயது வந்தோர் கல்வி மையங்களின் எண்ணிக்கை	கற்போர் எண்ணிக்கை	ஒன்றியம்	வயது வந்தோர் கல்வி மையங்களின் எண்ணிக்கை	கற்போர் எண்ணிக்கை
இராமநாதபுரம்	56	2836	விருதுநகர்	142	5848
R.S.மங்களம்	57	2306	சாத்தூர்	82	3280
நைனார்கோவில்	42	1897	காரியாப்பட்டி	72	2899
திருவாடணை	93	3707	அருப்புக்கோட்டை	80	3220
மண்டபம்	80	3293	நரிக்குடி	63	2526

2022 ஏப்ரல் 11]

இராமநாதபுரம் மாவட்டம்			விருதுநகர் மாவட்டம்		
ஒன்றியம்	வயது வந்தோர் கல்வி மையங்களின் எண்ணிக்கை	கற்போர் எண்ணிக்கை	ஒன்றியம்	வயது வந்தோர் கல்வி மையங்களின் எண்ணிக்கை	கற்போர் எண்ணிக்கை
திருப்புள்ளாணி	59	2833	திருச்சுழி	70	2760
கடலாடி	129	5136	ஸ்ரீவில்லிபுத்தூர்	75	3035
பரமக்குடி	57	2569	இராஜபாளையம்	116	4640
போகலூர்	30	1212	சிவகாசி	234	9704
கமுதி	67	3190	வேம்பக்கோட்டை	121	4984
முதுகுளத்தூர்	61	2638	வத்திராயிருப்பு	69	2785
மொத்தம்	**731**	**31617**	**மொத்தம்**	**1124**	**45681**

6.5. கற்போம் எழுதுவோம் இயக்கம்

தமிழ்நாட்டில் 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பை அடிப்படையாகக் கொண்டு, ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் 60:40 என்கிற நிதிப் பங்களிப்பின்கீழ், கற்போம் எழுதுவோம் இயக்கம் அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டது. 15 வயதுக்கு மேற்பட்ட, முற்றிலும் எழுத, படிக்கத் தெரியாத 3.10 இலட்சம் பேருக்கு அடிப்படை எழுத்தறிவை வழங்கிடுதலே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ், 3.19 இலட்சம் கற்போர்கள் தங்களின் அடிப்படை எழுத்தறிவுக் கல்வியைப் பெற்று பயனடைந்துள்ளனர்.

தமிழகமானது, கற்போம் எழுதுவோம் இயக்கத்தின் இலக்கை நூறு விழுக்காட்டிற்கும் மேல் எட்டி சாதனை படைத்துள்ளது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூ.7.19 கோடி நிதி தமிழ்நாடு மாநில எழுத்தறிவு முனைப்பு ஆணையத்தால் பயன்படுத்தப்பட்டுள்ளது.

[2022 ஏப்ரல் 11

6.6. மாநில எழுத்தறிவு விருது

சிறந்த கற்போர் எழுத்தறிவு மையங்களுக்கான மாநில எழுத்தறிவு விருதானது, பாராட்டுச் சான்றிதழ், கேடயம் மற்றும் பதக்கங்கள் ஆகியனவற்றை உள்ளடக்கியதாகும். மாநிலத்தில், கற்போம் எழுதுவோம் இயக்கச் செயல்பாடுகளை புதிய அணுகுமுறைகளைக் கையாண்டு சிறப்பாகச் செயல்படுத்தியமைக்காக தெரிவு செய்யப்பட்ட 114 சிறந்த கற்போர் எழுத்தறிவு மையங்களுக்கு இவ்விருது முதன்முறையாக வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

6.7. நிதி ஒதுக்கீடு

தமிழக அரசால், 2022-2023 ஆம் ஆண்டிற்கு வரவு-செலவு திட்டத்தின்கீழ் ரூ.9.67 கோடி நிதி இவ்வியக்ககத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2022 ஏப்ரல் 11]

7. பொது நூலக இயக்ககம்

7.1. முன்னுரை

பொது நூலகங்கள் அறிவுத்திறனை வளர்ப்பதில் அளப்பரிய பங்காற்றி வருகின்றன. பெரும்பான்மை மக்களின் அறிவுசார் தேவைகளைப் பூர்த்திசெய்து, தரம் வாய்ந்த மனித ஆற்றலை வளர்ப்பதில் மிகப் பெரும் பங்கு வகிப்பவை பொது நூலகங்கள் ஆகும். நூலகங்கள் சமூகத்தின் அனைத்து பிரிவினருக்கும் சமமான சேவை வழங்குவதுடன் முக்கியமாக அறிவு மற்றும் கற்றல் மையங்களாகச் செயல்படுகின்றன.

7.2. இலக்கு

சமூகத்தின் அனைத்து பிரிவினருக்கும், வலிமையான தகவல் அடித்தளத்தை உருவாக்கி, அதன்மூலம் பொது மக்களின் சுய, சமூக, பொருளாதார மற்றும் அறிவுசார்ந்து மேம்படுத்துதல்.

7.3. குறிக்கோள்கள்

- சிறந்த நூலகச் சேவையின்மூலம் அனைத்துத் தரப்பினரின் தகவல் தேவையினைப் பூர்த்தி செய்தல்
- பழைய மற்றும் அரிய நூல்களை மின்னுருவாக்கம் செய்து, பாதுகாத்தல்
- 1,000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள கிராமங்களில் நூலக வசதியை ஏற்படுத்துதல்
- பொது நூலகங்களில் சிறந்த உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்
- பொது நூலகங்களில் தரமான நாளிதழ்கள், பருவ இதழ்கள் மற்றும் நூல்களை வழங்குதல்
- நூலகங்களில் நவீன தொழில்நுட்பத்தினைப் புகுத்தி நூலகச் சேவையினை மேம்படுத்துதல்
- நவீன வசதிகளுடன் புதிய நூலகங்களை உருவாக்குதல்

7.4. தமிழ்நாட்டின் பொது நூலகங்கள்

தமிழ்நாடு பொது நூலகச் சட்டம், 1948 இன்படி தமிழ்நாட்டில் பொது நூலகங்கள் தொடங்கப்பட்டன. தமிழ்நாட்டில் தற்போது 4,650 பொது நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

[2022 ஏப்ரல் 11

7.4.1. கன்னிமாரா பொது நூலகம்

தமிழ்நாட்டின் மாநில – மைய நூலகமான கன்னிமாரா பொது நூலகம் 1896 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்தியாவின் நான்கு தேசிய வைப்பு நூலகங்களில் ஒன்றான கன்னிமாரா பொது நூலகம், நூல்கள் மற்றும் செய்தித்தாள்கள் அனுப்புகைச் சட்டம் (பொது நூலகங்கள்) 1954-ன்படி இந்தியாவில் வெளியாகும் அனைத்து நூல்கள், செய்தித்தாள்கள் மற்றும் பருவ இதழ்களின் ஒரு பிரதியை இலவசமாக பெற்று வருகிறது. இந்நூலகத்தில் பல்வேறு பாடங்களை உள்ளடக்கிய 9,19,208 புத்தகங்கள் உள்ளன.

அரியவகை நூல்கள் பிரிவு, பாடநூல் பிரிவு, குறிப்புதவிப் பிரிவு, மொழிப் பிரிவு, பருவ இதழ் பிரிவு, குடிமைப்பணி கல்வி மையம், இந்திய மொழி நூல்கள் பிரிவு மற்றும் குழந்தைகள் பிரிவு எனப் பல்வேறு பிரிவுகள் இந்நூலகத்தில் செயல்பட்டு வருகின்றன. நாட்டுடைமை ஆக்கப்பட்ட நூல்கள் மற்றும் 1950 ஆம் ஆண்டிற்கு முன்னர் வெளியிடப்பட்டுள்ள நூல்கள் பொது மக்களின் பயன்பாட்டிற்காக மின்னுருவாக்கம் செய்து பாதுகாக்கப்பட்டு வருகின்றன. கன்னிமாரா பொது நூலகத்திலுள்ள மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 1,47,446 ஆகும். இந்நூலகத்தைப் பற்றிய அனைத்துத் தகவல்களையும் www.connemarapubliclibrarychennai.com எனும் இணையதளத்தின்மூலம் அறிந்துகொள்ளலாம். கன்னிமாரா பொது நூலகம் 2021-ல் தனது 125 வது ஆண்டினை நிறைவு செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. கன்னிமாரா பொது நூலகத்தின் பழைய நூலகக் கட்டடத்தை புதுப்பித்தல் பணிகள் ரூ.1.50 கோடி செலவிலும், மின் சாதனங்கள் மற்றும் உயர் மின்னழுத்த மின்இணைப்பு சீரமைக்கும் பணிகள் ரூ.3.20 கோடி செலவில் பொதுப் பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

7.4.2. அண்ணா நூற்றாண்டு நூலகம்

தெற்கு ஆசியாவிலேயே இரண்டாவது பெரிய நூலகமான அண்ணா நூற்றாண்டு நூலகம் சென்னை கோட்டூர்புரத்தில் 3.75 இலட்சம் சதுர அடி பரப்பளவில் ரூ.197.43 கோடி செலவில் கட்டப்பட்ட 9 தளங்களுடன் அமைந்துள்ளது. இந்நூலகம் 2010 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் நாள் மேனாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் டாக்டர் மு. கருணாநிதி அவர்களால் பொது மக்கள் பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டது.

2022 ஏப்ரல் 11]

இந்நூலகத்தில் உள்ள பல்வேறு பாடங்களை உள்ளடக்கிய 6,22,913 நூல்கள் அனைத்து பிரிவு வாசகர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது.

இந்நூலகத்தில் சிறப்பாகத் தேர்வு செய்யப்பட்ட பருவ இதழ்கள் பிரிவு, போட்டித் தேர்வு நூல்கள் பிரிவு, குழந்தைகளுக்கான நூல்கள் பிரிவு, தமிழ் மற்றும் மண்டல மொழி நூல்கள் பிரிவு, மின்நூல்கள் பிரிவு மற்றும் அரசினர்கீழ் திசைச் சுவடிகள் நூலகம் ஆகிய பல்வேறு பிரிவுகளும் விழி மாற்றுத்திறனாளர்களுக்கான தனிப்பிரிவு மற்றும் சொந்த நூல்கள் படிக்கும் பிரிவு ஆகியவையும் உள்ளன.

இந்நூலகத்திலுள்ள நூல்களைப் பற்றிய விவரங்களை இணையதளத்தின் வாயிலாக எந்த இடத்திலிருந்தும் எளிமையாகவும் விரைவாகவும் அணுகத்தக்க ஒருங்கிணைந்த நூலக மேலாண்மை அமைப்பு (WEB-OPAC) ஏற்படுத்தப்பட்டுள்ளது. ரேடியோ அலைவரிசை குறியீடு (Radio Frequency Identification–RFID) தொழில்நுட்பத்தின்மூலம் நூல்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நூலகத்திலுள்ள மாநாட்டுக் கூடம், கருத்தரங்குக் கூடம், கலையரங்கம் முதலியவற்றில் அரசால் நிர்ணயிக்கப்பட்ட வாடகை வீதத்தில் அரசு விழாக்கள், கலை மற்றும் பண்பாடு சார்ந்த நிகழ்ச்சிகள், பள்ளி ஆண்டு விழா மற்றும் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா, தேசிய, மாநில அளவிலான தொழில் சார் மாநாடுகள், சிறந்த கல்வியாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் நடத்தும் கருத்தரங்குகள் மற்றும் அரசால் அனுமதிக்கப்படும் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

அண்ணா நூற்றாண்டு நூலகத்தினை புதுப்பொலிவுடன் புனரமைக்கவும் மற்றும் தொழில்நுட்ப வன்பொருட்கள் வாங்கி பொருத்துவதற்கும் ரூ.37.82 கோடி தமிழ்நாடு அரசினால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேலும், மாறிவரும் தொழில்நுட்பங்களுக்கேற்ப, வாசகர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், அனைத்துத் துறைகளிலும் வெளிவந்துள்ள தலைசிறந்த அச்சு நூல்கள், மின் நூல்கள், இணையவழி மின்பருவ இதழ்கள் மற்றும் மின் ஆராய்ச்சி இதழ்கள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்வதற்காக ரூ.6.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2022 ஏப்ரல் 11

7.4.3. சரஸ்வதி மகால் நூலகம் மற்றும் ஆராய்ச்சி மையம்

மகாராஜா சரபோஜியின் சரஸ்வதி மகால் நூலகம் மற்றும் ஆராய்ச்சி மையம் இந்தியாவின் மிகப் பழமையான மற்றும் குறிப்பிடத்தக்க நூலகங்களுள் ஒன்றாகும். இந்நூலகம் தஞ்சாவூரின் நாயக்க மன்னர்களால் 16 ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்டது. இந்நூலகம் கலாச்சார பழம்பொருட்கள், அரிய புத்தகங்கள், ஓவியங்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகளின் ஒப்பிட முடியாத களஞ்சியத்தைக் கொண்டுள்ளது. இந்நூலகம் 1918 ஆம் ஆண்டு முதல் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரின் நிர்வாகத்தின்கீழ் கொண்டு வரப்பட்டது.

இந்நூலகத்தில் தமிழ், சமஸ்கிருதம், மராத்தி மற்றும் ஆங்கில மொழிகளை உள்ளடக்கிய 47,334 கையெழுத்துப் பிரதிகளில் 24,165 ஓலைச் சுவடிகளாகவும், 23,169 காகித கையெழுத்துப் பிரதிகளாகவும் உள்ளன. மேலும் இந்நூலகத்தில் 45,000 புத்தகங்கள் இலக்கியம், கலை மற்றும் கலாச்சாரத்தின் அனைத்து அம்சங்கள் அடங்கிய வரை படங்கள், ஓவியங்கள் இடம்பெற்றுள்ளன. இந்நூலக மேம்பாட்டிற்காகவும் பணியாளர் நலனுக்காகவும் ஒவ்வோர் ஆண்டும் தமிழக அரசால் ரூ.75.00 இலட்சம் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. 2021-2022 ஆம் ஆண்டிற்கு கூடுதலாக ரூ.50.00 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நூலகத்திலுள்ள தொன்மையான, விலைமதிப்பற்ற அரிய பழமையான நூல்கள் மற்றும் ஓலைச்சுவடிகள் சாதாரண மக்கள் முதல் ஆராய்ச்சியாளர் வரை பயன்படுத்தும் வகையில் மின்னுருவாக்கம் செய்யப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன.

7.4.4. மறைமலையடிகள் நூலகம், சென்னை

தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை, மறைமலையடிகளை கௌரவிக்கும் வகையில் 1958 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 24 ஆம் தேதி “மறைமலையடிகள் நூலகம்” நிறுவப்பட்டது. கன்னிமாரா பொது நூலக வளாகத்தின் ஒரு பகுதியில் இந்நூலகம் செயல்பட்டு வருகிறது. சங்க இலக்கியம், திருக்குறள், இலக்கணம், இதழியல், வாழ்க்கை வரலாறு, நாலடியார், திருவாசகம், அகராதிகள் மற்றும் மருத்துவம் தொடர்பான நூல்கள் போன்ற குறிப்பிடத்தக்க பண்டைய இலக்கியத் தொகுப்புகளைக் கொண்டுள்ளது. ஒவ்வோர் ஆண்டும் இந்நூலகத்திற்கு ரூ.1 இலட்சம் அரசு மானியம் வழங்கப்படுகிறது.

2022 ஏப்ரல் 11]

7.4.5. டாக்டர் உ.வே.சா. நூலகம், சென்னை

தலைசிறந்த தமிழறிஞரும், ஆய்வாளரருமான முனைவர் உ.வே.சா அவர்களின் நினைவாக 1943 ஆம் ஆண்டு இந்நூலகம் நிறுவப்பட்டது. இந்நூலகத்தில் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், அகப்பொருள் விளக்கம், அகராதி நிகண்டு, இலக்கிய விளக்கம், நேமிநாதம், சேக்கிழார் புராணம், தொன்னூல், வீரசோழியம், தொல்காப்பியம், பஞ்சகதை, பெரியபுராணம், இலக்கணக்கொத்து என 2,200 ஓலைச்சுவடிகள் மற்றும் தமிழறிஞர்கள் பலர் டாக்டர் உ.வே.சா.அவர்களுக்கு எழுதிய 3,000-க்கும் மேற்பட்ட கடிதங்கள், 1893 முதல் 1939 வரை உ.வே.சா. அவர்கள் எழுதிய நாட்குறிப்புகள் எனப் பல காணக் கிடைக்காத அரிய தமிழ் நூல்கள் புதையலாக போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. 2021-2022 ஆம் நிதியாண்டில் இந்நூலகத்திற்கு ரூ.27.20 இலட்சம் அரசு மானியம் வழங்கப்பட்டுள்ளது.

7.4.6. மாவட்ட மைய நூலகங்கள்

தமிழ்நாடு பொது நூலக விதிகள் 1950 இன்கீழ் மாவட்ட மைய நூலகங்கள் நிறுவப்பட்டன. தமிழக அரசு படிப்படியாக அனைத்து மாவட்ட மைய நூலகங்களையும் டிஜிட்டல் மயமாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. வாசகர்கள் குறிப்பாக பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் பழமையான அரிய நூல்களை அணுக வசதியாக மின்புத்தக மென்பொருள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்நூலகங்களில் பல்வேறு துறைசார்ந்த 70 இலட்சத்திற்கும் மேற்பட்ட நூல்கள் மற்றும் பருவ இதழ்கள், குறிப்புதவி நூல்கள் பிரிவு, போட்டித் தேர்வு பிரிவு, மகளிர் மற்றும் குழந்தைகள் பிரிவு, சொந்த நூல்கள் படிக்கும் பிரிவு, மாற்றுத் திறனாளிகள் பிரிவு மற்றும் இணைய பயன்பாட்டு வசதிகளுடன் நூலகம் செயல்பட்டு வருகின்றன. இவற்றின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 13,09,447 ஆகும். 2021-2022 ஆம் நிதியாண்டில் இந்நூலகங்களால் 6,85,414 வாசகர்கள் பயனடைந்துள்ளனர்.

7.4.7. கிளை நூலகங்கள்

பெருகி வரும் மக்கள் தொகையைக் கருத்தில் கொண்டு 5000 முதல் 50,000 வரை மக்கள் தொகை கொண்ட கிராம மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் நூலகச் சேவைகளை

[2022 ஏப்ரல் 11

விரிவுபடுத்தி வழங்கும் நோக்கில் தொடங்கப்பட்டவையே கிளை நூலகங்களாகும். தற்போது 314 முழுநேர கிளை நூலகங்களை உள்ளடக்கிய 1926 கிளைநூலகங்கள் 5,79,74,340 நூல்கள் மற்றும் 62,76,245 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகின்றன. 2021-2022 ஆம் ஆண்டில் 83,37,779 வாசகர்கள் இந்நூலக வசதிகளைப் பயன்படுத்தி வருகின்றனர். குழந்தைகள், மாணவர்கள், பெண்கள், பணிநாடுவோர் மற்றும் மூத்த குடிமக்கள் பயன்பெறும் வகையில் இந்நூலகங்களில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

7.4.8. ஊர்ப்புற நூலகங்கள்

ஊர்ப்புற நூலகங்கள் 1996 ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டு செயலாற்றி வருகின்றன. புதிய தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கணினி வசதிகளுடன் ஊர்ப்புற நூலகங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளதால் 2021-2022 ஆம் ஆண்டில் 52,51,808 வாசகர்கள், 21,08,979 உறுப்பினர்கள் பயன்பெற்றுள்ளனர். இந்நூலகங்களில் 2,09,82,767 நூல்கள் இடம்பெற்றுள்ளன.

7.4.9. நடமாடும் நூலகங்கள்

மலைப் பகுதிகள் மற்றும் எளிதாகச் செல்ல இயலாத தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் நூலக சேவை வழங்கப்படாத மக்களுக்கு நூலகத் தேவையை நிறைவு செய்யும் வகையில் நூல்கள் மற்றும் பருவ இதழ்களை வாகனங்கள்மூலம் எடுத்துச் செல்லும் நடமாடும் நூலகங்கள் மாநிலத்தின் 14 மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. இவ்வாகனங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட புத்தகங்களின் தொகுப்புகள் மற்றும் குறுந்தகடுகள் வரைபடங்கள் ஆகியவற்றை கிராமப்புற பள்ளி மாணவர்களிடையே நூலக வாசிப்பை மேம்படுத்தும் வகையில் குறிப்பிட்ட கால இடைவெளியில் பள்ளிகளுக்குச் சென்று சேவையாற்றி வருகிறது. இவற்றின்மூலம், 33,466 உறுப்பினர்களும் 13,390 வாசகர்களும் பயனடைந்து உள்ளனர்.

7.4.10. பகுதி நேர நூலகங்கள்

அடித்தட்டு மக்களையும் பொது நூலகச் சேவை சென்றடைய வேண்டும் என்ற உயரிய நோக்கில் உருவாக்கப்பட்டவை பகுதிநேர நூலகங்கள் ஆகும். இப்பகுதி நேர நூலகங்கள் வாயிலாக 3,25,732 உறுப்பினர்களும், 7,50,205 வாசகர்களும் பயனடைந்துள்ளனர்.

2022 ஏப்ரல் 11]

7.5. பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான பணி நியமனம்

பொது நூலக இயக்ககத்தின்கீழ் செயல்படும் மாவட்ட மைய நூலகங்கள் மற்றும் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில், பூவிருந்தவல்லி அரசினர் தொழிற்பயிற்சி மையத்தில் புத்தகம் கட்டும் பயிற்சி முடித்த பார்வை குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு நூல் கட்டுநர் பணியிடத்தில் 17 நபர்களுக்கும், நூல் கட்டும் உதவியாளர் பணியிடத்தில் 14 நபர்களுக்கும் பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இவர்களுக்கான பணி நியமன ஆணைகளை சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினமான டிசம்பர் 3, 2021 அன்று வழங்கினார்.

7.6. நிதி ஆதாரம்

7.6.1. நூலக நிதி

நூலக வரியே பொது நூலகத் துறையின் முக்கிய வருவாய் ஆதாரம் ஆகும். தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் 1948 பிரிவு 12(1) (எ) இன்படி உள்ளாட்சி அமைப்புகள் வசூலிக்கும் சொத்து வரியில் ஒரு ரூபாய்க்கு 10 பைசா வீதம் நூலக வரியாக வசூலிக்கப்படுகிறது. இந்நூலக நிதியிலிருந்து நூலகங்களுக்குத் தேவையான நூல்கள், பருவ இதழ்கள் மற்றும் நாளிதழ்கள் வாங்குதல், கட்டடங்கள் கட்டுதல் மற்றும் பராமரித்தல், பழுதடைந்த நூலகக் கட்டடங்களைப் பழுதுபார்த்தல், நூலகங்களுக்குத் தேவையான எழுதுபொருட்கள், நுகர்பொருட்கள், நூலகப் பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் பிற படிகள் போன்ற செலவினங்கள் அனைத்தும் நேரடியாக மேற்கொள்ளப்படுகின்றன. 2020-2021 ஆம் ஆண்டில் நூலக வரியாக ரூ.71.02 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

7.6.2. பொது நிதி

நிதிநிலையில் நலிவடைந்த நூலக ஆணைக் குழுக்களுக்கு உதவும் வகையில் பொது நிதி உருவாக்கப்பட்டு அதிக வருவாய் உள்ள மாவட்டங்களிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் நூலக வரி வசூலில் 20 சதவீதத்திற்கு மிகாமல் பெறப்படும் பொது நிதியானது வருவாய் குறைவாக நலிவுள்ள நிலையில் உள்ள மாவட்டங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டு, குறிப்பிட்ட இனங்களுக்குச் செலவிடப்படுகிறது.

[2022 ஏப்ரல் 11

7.6.3. இராஜாராம் மோகன்ராய் நூலக அறக்கட்டளை மானியம்

கொல்கத்தாவில் உள்ள இராஜாராம் மோகன்ராய் நூலக அறக்கட்டளை நிறுவனம் நூலகங்களுக்கு இணை மானியம் மற்றும் இணையில்லா மானியம்மூலம் நிதியுதவி வழங்கி வருகிறது. பொது நூலகங்களின் வளர்ச்சிக்காக புதிய நூலகக் கட்டடங்கள் கட்டுதல், நூலகங்களில் குழந்தைகள் பிரிவு உருவாக்குதல், புதிய நூல்கள் வாங்குதல், நூலகர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளித்தல், கருத்தரங்கு நடத்துதல் மற்றும் நூலகத்தின் அடிப்படை வசதியினை மேம்படுத்துதல் ஆகிய பணிகளுக்கு நிதியுதவி வழங்கி ஊக்குவித்து வருகிறது.

7.7. மதுரையில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நூலகம்

முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நூலகத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 11.1.2022 அன்று அடிக்கல் நாட்டினார். கலைஞர் நினைவு நூலகத்திற்குத் தேவையான நூல்கள், மின்நூல்கள் இணையவழி பருவ இதழ்கள் மற்றும் ஆராய்ச்சி நூல்கள் ஆகியவற்றை கொள்முதல் செய்வதற்கு ரூபாய் 10 கோடியும், தொழில்நுட்ப சாதனங்கள் கொள்முதல் செய்வதற்கு ரூபாய் 5 கோடியும் தமிழ்நாடு அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நூலகம், மாணவர்கள், கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், எழுத்தாளர்கள், பல்வேறு போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் இளைஞர்கள், பள்ளிச் சிறார்கள் என சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் அறிவொளி அளிக்கும் கலங்கரை விளக்கமாக அமையவுள்ளது.

7.8. செந்நாப்புலவர் ஆ. கார்மேகனார் பெயரில் புதிய நூலகக் கட்டடம்

செந்நாப்புலவர் ஆ. கார்மேகனார் அறிவு நூல் திரட்டு, கண்ணகி தேவி, காப்பியக் கதைகள், மூவர் உலா ஆராய்ச்சி, தமிழ்மொழியின் மறுமலர்ச்சி, நல்லிசைப் புலவர்கள் போன்ற பல நூல்கள் இயற்றியுள்ளார். தமிழுக்கு அவர் ஆற்றிய இலக்கியச் சேவையினைப் போற்றும் வகையில், இராமநாதபுரம் மாவட்டம், அபிராமத்தில் தற்போது வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வரும் கிளை நூலகத்திற்கு ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நூலகம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2022 ஏப்ரல் 11]

7.9. தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் 1948 மற்றும் பொது நூலக விதிகள் 1950–திருத்தங்கள் மேற்கொள்ள உயர்மட்டக் குழு அமைப்பு

இந்தியாவிலேயே பொது நூலக சேவைகளுக்கென தனியாகச் சட்டம் இயற்றிய முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும். 1948 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் மற்றும் பொது நூலக விதிகள் 1950 ஆகியவற்றை தற்போதுள்ள பணிச்சூழலுக்கு ஏற்பவும், மாநிலத்தில் நூலகங்களின் சேவையை மேம்படுத்தவும் தக்க திருத்தங்கள் மேற்கொள்வது குறித்து பரிசீலிக்க ஏதுவாக, முனைவர் மா. இராஜேந்திரன், முன்னாள் துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் அவர்கள் தலைமையில் உயர்மட்டக் குழுவினை அமைத்து 19.1.2022 அன்று தமிழ்நாடு அரசால் ஆணையிடப்பட்டு தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன.

7.10. பொது நூலகங்களுக்கு புத்தகங்கள் கொள்முதலில் வெளிப்படைத்தன்மை

மாறி வரும் மக்களின் மனநிலை மற்றும் தேவைகளைக் கருத்தில் கொண்டு அவற்றை நிறைவு செய்யும் வகையில் அறிவியல், சமூகம், வரலாறு, இலக்கியம், கலாச்சாரம் மற்றும் அறிவுசார் தேடல்களுக்கு ஏற்ப தேர்வுக் குழுவின்மூலம் பொது நூலகங்களுக்கான நூல்கள் மற்றும் பருவ இதழ்கள் தேர்வு செய்யப்படுகின்றன. ஒவ்வோர் ஆண்டும் வசூலிக்கப்படும் நூலக வரியில் 25 விழுக்காடு நூல்கள் வாங்குவதற்கும், 15 விழுக்காடு பருவ இதழ்கள் வாங்குவதற்கும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மேலும், பொது மக்களுக்குத் தேவையான மிகச் சிறந்த புத்தகங்கள், நாளிதழ்கள், பருவ இதழ்கள் வழங்குவதை உறுதி செய்யும் வகையில், தற்போதுள்ள புத்தகங்களுக்கான கொள்முதல் கொள்கையில் தக்க திருத்தங்கள் மேற்கொண்டு, புத்தகக் கொள்முதலின் ஒவ்வொரு படிநிலையிலும் ஒளிவு மறைவின்றி வெளிப்படைத்தன்மை உறுதி செய்ய குழு அமைக்கப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

7.11. அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் 'பாரதியியல்' பிரிவு

மகாகவி பாரதியாரின் மறைந்த நூற்றாண்டின் நினைவாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் வெளியிட்ட அறிவிப்பின்படி, அன்னாரின் நூல்கள் தொகுக்கப்பட்டு சென்னை அண்ணா

[2022 ஏப்ரல் 11

நூற்றாண்டு நூலகத்தில் 'பாரதியியல்' என்ற தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

7.12. முனைவர் எஸ்.ஆர். அரங்கநாதன் நினைவு நூலகம்

தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் உருவாக முக்கியப் பங்காற்றிய இந்திய நூலகத் தந்தை முனைவர் எஸ்.ஆர். அரங்கநாதன் அவர்களை நினைவூட்டும் வகையில் அவர் பிறந்த மயிலாடுதுறை மாவட்டத்திலுள்ள சீர்காழியில் ரூ.1.32 கோடி மதிப்பீட்டில் மாதிரி நூலகம் அமைக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

7.13. கணினிமயமாக்குதல்

பெருகிவரும் வாசக பொது மக்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு, அவற்றை நிறைவேற்றுவதற்கு முன்னுரிமை அளித்து, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட மைய நூலகங்கள் மற்றும் முழுநேர கிளை நூலகங்கள் இணைய வசதியுடன் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

நூலக மேலாண்மை (KOHA) எனப்படும் கட்டற்ற மென்பொருளை கன்னிமாரா பொது நூலகம், அண்ணா நூற்றாண்டு நூலகம், 32 மாவட்ட மைய நூலகங்கள் மற்றும் 30 முழுநேரக் கிளை நூலகங்கள் பயன்படுத்தி வருகின்றன. இதன்மூலம் நூல் இரவல் வழங்கல் மற்றும் நூலகத் தொழில்நுட்பப் பணிகள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

7.14. கிராமப்புற நூலகங்களில் மின்நூலக சேவை

தமிழ்நாடு அரசு பொது நூலக இயக்ககத்தின்கீழ் 1926 கிளை நூலகங்கள் மற்றும் 1,915 ஊர்ப்புற நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன. சர்வதேச நாளிதழ்கள், பருவ இதழ்கள் கிராமப்புறங்களில் உள்ள வாசகர்களுக்கும் கிடைக்கும்வண்ணம் அனைத்து நூலகங்களிலும் மின்நூலகம் அடுத்த 5 ஆண்டுகளில் ரூ.2.40 கோடியில் ஏற்படுத்தப்படும்.

7.15. குடிமைப்பணி கல்வி மையங்கள்

கன்னிமாரா பொது நூலகம், மாவட்ட மைய நூலகங்கள் மற்றும் மாநிலம் முழுவதும் தாலுகா தலைமையிடங்களில் அமைந்துள்ள 289 நூலகங்களில் உள்ள குடிமைப்பணிப் பயிற்சி மையத்திற்குத்

2022 ஏப்ரல் 11]

தேவையான நூல்கள், நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்கள் வாங்கி வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

7.16. மின்னுருவாக்கம் (Digitization)

பொது நூலக இயக்ககம், நமது கலாச்சாரம், வரலாறு மற்றும் மொழியின் இயற்பியல் வடிவத்தில் கிடைக்கும் பரந்த அளவிலான அறிவை டிஜிட்டல் மயமாக்குதல் மற்றும் பாதுகாப்பதில் முன்முயற்சி எடுத்து வருகிறது. கன்னிமாரா பொது நூலகம், தமிழ்நாடு தொல்லியல் நூலகம், தமிழ்நாடு ஆவண காப்பக நூலகம், பல்கலைக்கழக நூலகங்கள், கல்லூரி நூலகங்கள் மற்றும் தனியார் நூலகங்களில் உள்ள அரிய நூல்களில் 21,043 நூல்கள் (30 இலட்சத்திற்கும் மேற்பட்ட பக்கங்கள்), 1000-த்திற்கும் மேற்பட்ட வரைப்படங்கள் மற்றும் 2.54 இலட்சத்திற்கும் மேற்பட்ட ஓலைச்சுவடி பக்கங்கள் மின்னுருவாக்கம் செய்யப்பட்டுள்ளன. இந்த மின்நூலகத்தினை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் நவம்பர் 23, 2021 அன்று தொடங்கி வைத்தார். https://tamilnadupubliclibraries.org என்ற இணையதளம்மூலம் மக்கள் இலவசமாக பயன்படுத்திக்கொள்ளவும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

7.17. பொது நூலகங்களுக்கான ஒருங்கிணைந்த நூற்பட்டியல் (Union Catalogue)

கன்னிமாரா பொது நூலகம், அண்ணா நூற்றாண்டு நூலகம், 32 மாவட்ட மைய நூலகங்கள் மற்றும் பிற அரசு உதவிபெறும் நூலகங்களிலுள்ள நூல்களின் விவரங்கள் அடங்கிய ஒருங்கிணைந்த நூற்பட்டியல் உருவாக்கும் பணிகள் பொது நூலக இயக்ககத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன்படி அனைத்து நூல்களும் MARC 21 மற்றும் AACR2 போன்ற சர்வதேச தரநிலைகளின் அடிப்படையில் சரி செய்யும் பணி ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம்மூலம் மேற்கொள்ளப்பட்டு, அண்ணா நூற்றாண்டு நூலகத்திலுள்ள கணினி சர்வரில் Koha என்ற கட்டற்ற (Open Source) மென்பொருளில் பதிவேற்றம் செய்யப்பட்டு, ஒரே இணையதளத்தின்மூலம் புத்தகங்களை தேடும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 7 இலட்சம் நூல்களின் விவரங்களுடன் ஒருங்கிணைந்த நூற்பட்டி (Union Catalogue) பொது மக்களுக்கு மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் 28 டிசம்பர் 2021 அன்று வெளியிடப்பட்டது.

[2022 ஏப்ரல் 11

https://tamilnadupubliclibraries.org என்கிற இணைய தளத்தின்மூலம் அனைத்துப் பொது நூலகங்களிலும் உள்ள நூல்களைத் தேடும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

7.18. வேலைவாய்ப்புச் செய்தி கைபேசி செயலி மற்றும் இணையதளம்

போட்டித் தேர்வர்கள் தங்களுக்குத் தேவையான பல்வேறு போட்டித் தேர்வு மற்றும் வேலைவாய்ப்பு பற்றிய தகவல்களை அறிய வெவ்வேறு நாளிதழ்கள், பருவ இதழ்கள் மற்றும் இணைய தளங்களை பார்வையிட வேண்டியுள்ளது. இச்சிரமங்களைக் களைய பொது நூலக இயக்ககம் "உங்கள் நூலகம் உள்ளங்கையில்" என்ற திட்டம் அண்ணா நூற்றாண்டு நூலகம்மூலம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்படி, "TN Employment News" (Mobile App) மற்றும் www.tnemployment.in என்ற இணைய தளம் தொடங்கப்பட்டுள்ளது.

7.19. விழி மாற்றுத்திறனாளர்களுக்கான ஒலி நூல்கள் உருவாக்கம்

கல்வி மற்றும் போட்டித் தேர்வு தொடர்பான அச்சுப்புத்தகங்கள் Accessible Text, Daisy epub3 மற்றும் ஒலி வடிவங்களில் மாற்றப்பட்டு, விழி மாற்றுத்திறனாளர்கள் எளிதில் அணுகும் வகையில் இணையதளத்தின் மூலமாகப் பதிவிறக்கம் செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டு, அனைத்து மாவட்ட மைய நூலகங்களிலுள்ள மாற்றுத்திறனாளிகள் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

7.20. குழந்தை எழுத்தாளர்களுக்கு "கவிமணி விருது"

குழந்தைகளின் எழுத்தார்வத்தை ஊக்குவிக்கும்வண்ணம், 18 வயதிற்குட்பட்ட இளம் எழுத்தாளர்களில், ஆண்டுதோறும் மூன்று சிறந்த எழுத்தாளர்களைத் தேர்வு செய்து ரூ.25,000 ரொக்கம், கேடயம் மற்றும் சான்றிதழுடன் "கவிமணி விருது" வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

7.21. செந்தமிழ்ச் சிற்பிகள் அரங்கம்

தமிழ் மொழிக்கு அளப்பரிய பங்காற்றிய எழுத்தாளர்கள் மற்றும் தமிழறிஞர்களைப் போற்றும் வகையிலும், அத்தகைய அறிஞர் பெருமக்களை இளம் தலைமுறையினர் முன்மாதிரியாகக் கொள்ளும் வகையிலும் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில்

2022 ஏப்ரல் 11]

ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் "செந்தமிழ்ச் சிற்பிகள் அரங்கம்" அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த அரங்கத்தில் உயரிய விருதுகளைப் பெற்ற தமிழ் எழுத்தாளர்கள், தமிழ் மொழி வளர்ச்சிக்கு வித்திட்ட அறிஞர்களின் புகைப்படங்கள், கையெழுத்துப் பிரதிகள் மற்றும் படைப்புகள் காட்சிப்படுத்தப்படும். இளம் தலைமுறையினரின் எழுத்தார்வத்தைத் தூண்டும் வகையில் மேற்கூறிய படைப்பாளிகளின் படைப்புகள் சார்ந்த நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்படும்.

7.22. வாசகர் வட்டம்

நூலக இயக்கம், மக்கள் இயக்கமாக மாற்றமடைய வேண்டும் என்ற நோக்கில் அனைத்துப் பொது நூலகங்களிலும் கல்வியாளர்கள், எழுத்தாளர்கள், நூலக உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் மக்களைக் கொண்ட வாசகர் வட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இவ்வாசகர் வட்டம்மூலம் நூலகங்களின் விரிவான பயன்பாடு உறுதி செய்யப்படுகிறது. புதிய நூல்கள் மற்றும் புதிய எழுத்தாளர்களை அறிமுகப்படுத்துதல், இலக்கியச் சொற்பொழிவுகள், பட்டிமன்றங்கள், புத்தக கண்காட்சி, சொற்பொழிவு, கதை சொல்லுதல், கட்டுரை மற்றும் வினாடி வினா போட்டி உள்பட பல்வேறு நிகழ்ச்சிகள் இவ்வாசகர் வட்டங்களால் நடத்தப்படுகின்றன.

7.23. நன்கொடை

பொது நூலகத் துறை வளர்ச்சியில் நன்கொடையாளர்களின் பங்கேற்பும் அடங்கும். ஒருவர் ரூ. 1,000/-, ரூ.5,000/- மற்றும் ரூ.10,000/- என நூலகங்களுக்கு நன்கொடையாக அளிப்பதன்மூலம் முறையே புரவலர், பெரும் புரவலர் மற்றும் கொடையாளராகிறார்கள். இவ்வாறு பெறப்படும் நன்கொடையானது வங்கியில் நிரந்தர வைப்புக் கணக்கில் ஆண்டுதோறும் செலுத்தப்பட்டு, பெறப்படும் வட்டித்தொகை பொது நூலகங்களின் வளர்ச்சிப் பணிகளுக்காகச் செலவிடப்படுகிறது.

7.24. நூலக நிகழ்ச்சிகள்

இந்திய நூலகவியல் மற்றும் தகவல் அறிவியலின் தந்தை சீ.இரா. அரங்கநாதன் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் ஆண்டுதோறும் ஆகஸ்ட் மாதம் 12 ஆம் நாள் நூலக தினமாகக் கொண்டாடப்படுகிறது. ஒவ்வோராண்டும் மே 22

[2022 ஏப்ரல் 11 ஆம் நாள் நூலக தினமாகக் கொண்டாடப்படுகிறது. நூலகங்கள் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தி, நூலகங்களின் பங்களிப்பைப் பாராட்டும் வகையில் ஆண்டுதோறும் நவம்பர் 14 முதல் 20 வரை தேசிய நூலக வார விழா கொண்டாடப்படுகிறது. மேலும், ஏப்ரல் 23 அன்று உலக புத்தக தினமாக கொண்டாடப்படுகிறது.

7.25. நூலக விருதுகள்

மிகச் சிறந்த செயலாக்கம் கொண்ட நூலகர்களை கௌரவிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் வெள்ளிப் பதக்கத்துடன் ரூ.5,000 ரொக்கப் பரிசைக் கொண்ட முனைவர் எஸ்.ஆர். அரங்கநாதன் விருதும், நூலக மேம்பாட்டு நடவடிக்கைகளைச் சிறப்பாக மேற்கொள்ளும் நூலகங்களுக்கு, சிறந்த நூலக விருதும் வழங்கப்படுவதோடு, நூலக வளர்ச்சிக்குத் துணைபுரியும் வாசக வட்டத் தலைவர்களைப் பாராட்டும் வகையில் ரூ.5,000 மதிப்புள்ள கேடயம் மற்றும் சான்றிதழுடன்கூடிய நூலக ஆர்வலர் விருதும் வழங்கப்படுகிறது.

7.26. நிதி ஒதுக்கீடு

பொது நூலக இயக்ககத்திற்கு 2022-2023 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடாக ரூ.287.27 கோடி அரசு வழங்கியுள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2022 ஏப்ரல் 11]

8. ஆசிரியர் தேர்வு வாரியம்

8.1. அறிமுகம்

ஆசிரியர் தேர்வு வாரியம் 1987 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. அரசுப் பள்ளிகளுக்கான ஆசிரியர்களைத் தெரிவு செய்வது, கல்லூரிக் கல்வி இயக்ககம், தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் மற்றும் சட்டக் கல்வி இயக்ககத்தின்கீழ்வரும் உதவிப் பேராசிரியர் பணியிடங்களைத் தெரிவு செய்வது ஆகிய பணிகளை ஆசிரியர் தேர்வு வாரியம் மேற்கொண்டு வருகிறது. ஆசிரியர் தேர்வு வாரியம் தோற்றுவிக்கப்பட்ட நாள் முதல் இதுவரை 1,64,455 ஆசிரியர்கள் பள்ளி, கல்லூரிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மேலும், தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வினை (TNTET) நடத்தும் முகவாண்மையாகவும் ஆசிரியர் தேர்வு வாரியம் செயல்படுகிறது.

8.2. நோக்கம்

பல்வேறு துறைகளின் தேவைகளுக்கேற்ப தகுதியான ஆசிரியர்களைத் தெரிவு செய்வதே ஆசிரியர் தேர்வு வாரியத்தின் முதன்மையான நோக்கமாகும். ஆசிரியர் தேர்வு வாரியமானது, வெளிப்படைத்தன்மையுடன் தமிழ்நாடு மின் ஆளுமை முகவாண்மையின் (TNeGA) நவீன தொழில்நுட்ப உதவி மற்றும் வழிகாட்டுதலுடன் அனைத்துத் தேர்வுகளையும் நடத்துகிறது.

8.3. தெரிவுமுறையும் நவீனமயமாக்கலும்

எந்தவொரு தெரிவு முறையும் முழு மந்தணத்தன்மைக்கு உறுதி அளிப்பதாக இருத்தல் வேண்டும். எனவே, ஆசிரியர் தேர்வு வாரியம் மிகக் கடுமையான விதிமுறைகளைப் பின்பற்றிவருகிறது. பணித் தெரிவிற்கான வெளிப்படைத்தன்மை மற்றும் துல்லியத்தினை உறுதி செய்யும்பொருட்டு, தெரிவு நடைமுறைகளில் தொழில்நுட்பம் மற்றும் கணினி பயன்பாடுகளை பல்வேறு நிலைகளில் பயன்படுத்துகிறது. ஆசிரியர் தேர்வு வாரிய அலுவலகத்தில் அனைத்துப் பகுதிகளும் CCTV உதவியுடன் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் தேர்வுகள் தொடர்பாக பணிநாடுநர்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்து பதிலளிப்பதற்கு அனைத்து வசதிகளுடன்கூடிய தகவல்

[2022 ஏப்ரல் 11

மையம் செயல்பட்டு வருகிறது. ஆசிரியர் தேர்வு வாரியத்தால் கணினிவழியாக நடத்தப்படும் அனைத்துத் தேர்வுகளும் CCTV மூலம் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. மேலும் மாவட்டங்களில் நடைபெறும் அனைத்துத் தேர்வுகளும் CCTV மூலம் கண்காணிக்கப்படுகின்றன. மாவட்ட அளவில் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் அனைத்துத் தேர்வுகளும் தலைமையிடத்திலிருந்து நேரடியாக காணொலி (Live Stream) மூலம் கண்காணிக்கப்படுகின்றன.

8.4. தெரிவுப் பணியில் வெளிப்படைத்தன்மை

ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் அனைத்துத் தேர்வுகளுக்கும் தேர்வு நடந்து முடிந்த பின்னர்,

- வினாக்களுக்குரிய விடைகள் ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் வெளியிடப்படுகிறது; தேர்வர்களிடமிருந்து விடைகள் சார்ந்து பெறப்படும் அனைத்துக் கோரிக்கைகளும் பரிசீலிக்கப்பட்டு, இணையதளம் வாயிலாக பதிலளிக்கப்படுகிறது.

- அனைத்து தேர்வர்களுக்கும் அவர்கள் அளித்த பதில் (Response sheet) மற்றும் கேள்வியின் (Copies of Questions) நகல் இணையதளம் வாயிலாக பகிரப்படுகிறது.

- அனைத்துத் தெரிவு நடைமுறைகளும் தகவல்களும் ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் வெளியிடப்படுகின்றன. (http://trb.tn.nic.in)

8.5. சாதனைகள்

2021-2022 ஆம் ஆண்டில் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் வட்டாரக் கல்வி அலுவலர் பணியிடத்திற்கு வெளியிடப்பட்ட அறிவிக்கையின்படி, போட்டி எழுத்துத் தேர்வினைத் தொடர்ந்து தெரிவு நடைமுறைகளைப் பின்பற்றி 96 தகுதியான பணிநாடுநர்கள் தெரிவு செய்யப்பட்டு தெரிவர் பட்டியல் சார்ந்த துறைக்கு வழங்கப்பட்டது. மேலும், ஆசிரியர் தேர்வு வாரியம் 60 கணினிப் பயிற்றுநர் நிலை-1 காலிப்பணியிடங்களுக்கு தகுதிவாய்ந்த பணிநாடுநர்களைத் தெரிவு செய்து தெரிவர் பட்டியலை சார்ந்த துறைகளுக்கு வழங்கியுள்ளது.

2022 ஏப்ரல் 11]

அரசுப் பல்தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரையாளர் பணித் தெரிவிற்கான அறிவிக்கை ஆசிரியர் தேர்வு வாரியத்தால் பின்வருமாறு வெளியிடப்பட்டது:

அறிவிக்கை எண் மற்றும் நாள்	நடைமுறையில் உள்ள தெரிவுப்பணி	அறிவிக்கை வெளியிடப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை
எண் 14/2019 நாள் 27.11.2019	அரசு பல்தொழில் நுட்பக் கல்லூரி விரிவுரையாளர்கள்	1,060

8.12.2021 முதல் 12.12.2021 வரை கணினி வழியாக தேர்வு நடைபெற்று முடிந்துள்ளது. தேர்வு முடிவுகள் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்/உடற்கல்வி இயக்குநர் நிலை-1/கணினிப் பயிற்றுநர் நிலை–1 பணித் தெரிவிற்கான அறிவிக்கை ஆசிரியர் தேர்வு வாரியத்தால் பின்வருமாறு வெளியிடப்பட்டது:

அறிவிக்கை எண் மற்றும் நாள்	நடைமுறையில் உள்ள தெரிவுப்பணி	அறிவிக்கை வெளியிடப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை
எண் 01/2021 நாள் 9.9.2021	முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்/ உடற்கல்வி இயக்குநர் நிலை-1 கணினி பயிற்றுநர் நிலை-1	2,207

12.2.2022 முதல் 20.2.2022 வரை கணினி வழியாக முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்/ உடற்கல்வி இயக்குநர் நிலை-1/கணினிப் பயிற்றுநர் நிலை–1 தேர்வு நடைபெற்று முடிந்துள்ளது.

[2022 ஏப்ரல் 11

8.6 வருடாந்திரத் திட்டம் 2022

2022 ஆம் ஆண்டுப் பணித்தெரிவிற்கான உத்தேசக் கால அட்டவணை ஆசிரியர் தேர்வு வாரியத்தால் வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வு (TNTET) நடத்துவதற்கு அறிவிக்கை வெளியிடப்பட்டு அதற்கான தேர்வு விரைவில் நடத்தப்படவுள்ளது.

இதேபோல் இடைநிலை ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், SCERT விரிவுரையாளர்கள், அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி உதவிப் பேராசிரியர்கள் மற்றும் அரசுப் பல்தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரையாளர்கள் ஆகிய நியமனங்களுக்கான தெரிவுப் பணிகள் இவ்வாண்டில் மேற்கொள்ளப்படும்.

8.7 ஆசிரியர் தேர்வு வாரியம்-மறுசீரமைப்பு நடவடிக்கைகள்

ஆசிரியர் தேர்வு வாரியத்தின் பணிகளை விரைவுபடுத்தும் பொருட்டு மறுசீரமைப்பதற்கான வழிவகைகளை சமர்ப்பித்திட அரசால் வல்லுநர் குழு அமைக்கப்பட்டுள்ளது. வல்லுநர் குழுவின் பரிந்துரைகள் இறுதி செய்யப்பட்டு வருகின்றன.

8.8 நிதி ஒதுக்கீடு

2022-2023 ஆம் ஆண்டிற்கு ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு ரூ.4.79 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

2022 ஏப்ரல் 11]

9. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

9.1. முன்னுரை

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் "தமிழ் வெளியீட்டுக் கழகம்" என்னும் பெயரில் பிற மொழிகளில் உள்ள உயர்கல்வி நூல்களைத் தமிழில் மொழிபெயர்ப்பதற்காக 1961 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இக்கழகம் 1970 ஆம் ஆண்டு "தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்" என்றும், பின்பு, பாடநூல்களை அச்சிட்டு விநியோகம் செய்தல் மற்றும் பல்வேறு இலக்கியம், அறிவியல் நூல்களை அச்சிட்டு விற்பனை செய்தல் ஆகிய பணிகளுடன், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கு பல்வேறு கல்வி உபகரணப் பொருட்களை வழங்க வேண்டும் என்ற புதிய நோக்கத்துடன் 2013 ஆம் ஆண்டு "தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்" என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அந்நாளிலிருந்து இக்கழகம் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளி மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்குத் தேவையான இன்றியமையாத பணிகளைச் செய்து வருகிறது.

9.2. நோக்கங்கள்

- தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்மூலம் 1 முதல் 7 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணாக்கர்களுக்கு செறிவூட்டப்பட்ட முப்பருவ பாடநூல்களையும் 8 முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணாக்கர்களுக்கு செறிவூட்டப்பட்ட முழு வருட பாடநூல்களையும் அச்சிடுதல்

- உயர்கல்வி பாடத் திட்டத்தின்கீழ் பொறியியல், மருத்துவம், வேளாண்மை, சூழலியல், சட்டம், கால்நடை அறிவியல், இலக்கியம், சித்த மருத்துவம், மீன்வளம் மற்றும் உடற்கல்வி சார்ந்த உயர்கல்வி நூல்களை ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்து அச்சிட்டு வெளியிடுதல்

- தமிழ் இலக்கியங்களை ஆங்கிலம் மற்றும் பிற தென்னிந்திய மொழிகளில் வெளியிடுதல்

- அரிய மற்றும் பழைய தமிழ் நூல்களை மறுபதிப்பு செய்தல் மற்றும் அந்நூல்களை மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள்,

[2022 ஏப்ரல் 11

நூல்வாசிப்பாளர்கள் ஆகியோர்களுக்கு கிடைத்தலை உறுதி செய்தல்

- அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்குப் புத்தகப் பை, காலேந்திகள், போன்ற பல்வேறு கல்வி உபகரணங்களை கொள்முதல் செய்து வழங்கும் முகமையாக இக்கழகம் செயல்பட்டு வருகிறது

9.3. உள்கட்டமைப்பு

இக்கழகத்தின் தலைமை அலுவலகம் சென்னை டி.பி.ஐ. வளாகத்தில் உள்ள ஈ.வி.கே. சம்பத் மாளிகையில் அமைந்துள்ளது. இக்கழகத்திற்கு மாநிலம் முழுவதும் 22 வட்டார அலுவலகங்கள் அமைந்துள்ளன.

9.4. பாடநூல்கள் அச்சுப் பணி

1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்குமான பாடநூல்கள் நேர்த்தியான 80 GSM தாள் (Elegant printing paper) மற்றும் லேமினேஷன் செய்யப்பட்ட 230 GSM ஆரா ஃபோல்ட் ப்ளு போர்டு கொண்டு (Aura Fold Blue Board) இக்கழகத்தால் அச்சடிக்கப்படுகின்றன. அனைத்து பாடநூல்களும், சம்பந்தப்பட்ட பாடத்தை உள்ளடக்கிய காணொளியையும், வினா வங்கியையும் இணையதளம்மூலம் எளிதாகக் காண்பதற்கு வசதியாக விரைவுத் துலங்கல் குறியீடு (QR Code) என்ற அம்சத்தைக் கொண்டுள்ளன.

2022-2023 இல் அச்சிடப்பட்ட பாடநூல்கள் விவரம் பின்வருமாறு:

பாடநூல்களின் விவரங்கள்	அச்சடிக்கப்பட்ட பாடநூல்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்)	தோராய மதிப்பு (ரூபாய் கோடிகளில்)
அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 12 வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கான பாடநூல்கள்	351.95	206.00

2022 ஏப்ரல் 11]

சுயநிதிப் பள்ளிகளில் 1 முதல் 12 வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கான பாடநூல்கள்	*154.19*	*148.00*
மத்திய இடைநிலைக் கல்வி வாரியப் பள்ளிகளில் 1 முதல் 10 வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கான தமிழ் மொழிப் பாடநூல்கள்	*13.34*	*9.7*

9.5. பாடநூல்கள் விநியோகம்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இலவசப் பாடநூல்கள் வழங்கப்படுகின்றன. தனியார் பள்ளிகளுக்கும், பொதுமக்களுக்கும் விற்பனை பிரதிகள் இணையதள விற்பனைமூலமும் மற்றும் டி.பி.ஐ வளாகம், அண்ணா நூற்றாண்டு நூலகம், அடையாறு கிடங்கிலுள்ள விற்பனை மையங்கள் வாயிலாகவும் வழங்கப்படுகின்றன. வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்களில் நிறுவப்பட்டிருக்கும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் மூலமாகவும் இணையதள விற்பனையானது விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

9.6. பிற நூல்களை அச்சிடுதல்

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட இயக்ககம், பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம், தொல்லியல் துறை, தொழில்நுட்ப கல்வி இயக்ககம், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், பெற்றோர் ஆசிரியர் கழகம், ஆதி திராவிடர் (ம) பழங்குடியினர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை முதலான துறைகளின் தேவையின் பொருட்டு, இக்கழகம் பல்வேறு நூல்களை அச்சிடும் பணியையும் மேற்கொண்டு வருகின்றது. இக்கழகம் 2021-2022 ஆம் ஆண்டில் மேற்காணும் துறைகளுக்காகத் தோராயமாக ரூ.12.12 கோடி மதிப்பிலான 60.17 இலட்சம் நூல்களை அச்சடித்து வழங்கியுள்ளது.

[2022 ஏப்ரல் 11

9.7. அரிய நூல்களை மின்மயமாக்கி மறுபதிப்புச் செய்தல்

இக்கழகம் இதுவரை தமிழ் இணையக் கல்வி கழகம்மூலம் 875 அரிய உயர்கல்வி நூல்களை டிஜிட்டல் மயமாக்கி, 635 அரிய நூல்களை வெளியிட்டுள்ளது. ரூ.14.14 இலட்சம் மதிப்பிலான அரிய புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. மேலும், இந்த அரிய புத்தகங்கள் அண்ணா நூற்றாண்டு நூலகம், கன்னிமாரா நூலகம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், அகில இந்திய குடிமைப் பணி பயிற்சி மையம், அண்ணா மேலாண்மைக் கழகம், அண்ணா பல்கலைக்கழகம், தமிழ் இணையக் கல்வி கழகம், ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் (RMRL) ஆகியவற்றுக்கு மாணவர் நலன் கருதி வழங்கப்பட்டுள்ளன. மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், இப்புத்தகங்கள் 2022 சென்னைப் புத்தகக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டன. மேலும், இப்புத்தகங்கள் அனைத்து மாவட்ட நூலகங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

9.8. புதிய முயற்சிகள்

வ.உ.சி.யின் 150-வது பிறந்தநாளைக் கொண்டாடும் வகையில், வ.உ.சி. எழுதிய நூல்களை தொகுத்து 'வ.உ.சி. பன்னூல் திரட்டு' என்ற தலைப்பில் ஒரு தொகுப்பு நூலும், திருக்குறள் மீதான வ.உ.சி. உரை என்ற நூலும் இக்கழகத்தால் வெளியிடப்பட்டது. இப்புத்தகங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 19.9.2021 அன்று வெளியிடப்பட்டன. இதுபோன்று, பாரதியாரின் நினைவு நூற்றாண்டை முன்னிட்டு, அவரது படைப்புகளின் ஒரு தொகுப்பான 'மனதில் உறுதி வேண்டும்' என்ற நூலை, தகவல் மற்றும் மக்கள் தொடர்புத் துறையுடன் இணைந்து இந்த ஆண்டில் இக்கழகம் வெளியிட உள்ளது. தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் 37 இலட்சம் பள்ளி மாணவர்களுக்கும் ரூ.5 கோடி செலவில் இப்புத்தகங்கள் வழங்கப்படும். "பொருநை நாகரிகம்" என்ற நூலை தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையுடன் இணைந்து இக்கழகம் வெளியிட்டுள்ளது. இந்நூலின் 10,000 பிரதிகள் தமிழிலும், 5,000 பிரதிகள் ஆங்கிலத்திலும் இவ்வாண்டில் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை ஊக்கப்படுத்தவும், பொது அறிவையும் படைப்புத் திறனையும் வளர்த்தெடுக்கவும்

2022 ஏப்ரல் 11]

பொது நூலக இயக்ககத்திற்கு 61 ஆங்கில இதழ்கள் வாங்குவதற்கு ரூ.2,00,35,181/- மற்றும் 68 தமிழ் இதழ்கள் வாங்க ரூ.1,01,82,099/- நிதியாக வழங்கியுள்ளது.

9.9. அறிவியல் மற்றும் இலக்கியப் புத்தகங்களின் தமிழாக்கம்

இக்கழகம் 'திசைதோறும் திராவிடம்', 'முத்தமிழ் அறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம்' என்னும் இரண்டு மொழிபெயர்ப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. திசைதோறும் திராவிடம் திட்டத்தின்கீழ் 20 தமிழ் இலக்கிய நூல்கள் ஆங்கிலம் மற்றும் ஏனைய திராவிட மொழிகளில் தேசிய மற்றும் சர்வதேச வெளியீட்டாளர்களுடன் இணைந்து மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ், கீழ்க்காணும் ஆறு புத்தகங்கள் 45 ஆவது சென்னைப் புத்தகக் கண்காட்சியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டன.

- *ஆர். பார்த்தசாரதி மொழிபெயர்த்த 'சிலப்பதிகாரம்' (பெங்குயின் ரேண்டம் ஹவுஸ்)*
- *ஹெப்ஷிபா ஜேசுதாசன் எழுதிய 'புத்தம் வீடு' (ரூபா பப்ளிகேஷன்ஸ்)*
- *தோப்பில் முகமது மீரான் அவர்கள் எழுதிய 'மீரான் கதைகள்'(ரத்னா சாகர் பிரைவேட் லிமிடெட்)*
- *உ.வே.சாவின் கட்டுரைகள் (நியோகி பப்ளிஷர்ஸ்)*
- *எஸ். ராமகிருஷ்ணன் எழுதிய 'கதா விலாசம்', (டெய்லர் & பிரான்சிஸ்)*
- *தலித் எழுத்தாளர்கள் எழுதிய இன்டிஃபியன்ஸ்: அவர் ஸ்டோரீஸ்', (விடாஸ்டா பப்ளிஷிங்)*

மேலும், பொன்னியின் செல்வன் (DC புக்ஸ்), திராவிட இயக்கம் (மலையாள மனோரமா) ஆகிய நூல்கள் மலையாளத்தில் மொழியாக்கம் செய்யப்படும். டாக்டர் மு. கருணாநிதி எழுதிய 'திருக்குறள் உரை' (ஐதராபாத் புக் டிரஸ்ட்) மற்றும் சுந்தர ராமசாமி எழுதிய 'ஒரு புளியமரத்தின் கதை' (ஐதராபாத் புக் டிரஸ்ட்) ஆகிய நூல்கள் தெலுங்கில் மொழிபெயர்க்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளன. பேரறிஞர் அண்ணா குறித்து தி இந்து நிறுவனம் தமிழில் வெளியிட்ட 'மாபெரும்

[2022 ஏப்ரல் 11

தமிழ்க் கனவு' என்னும் நூல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு 'A Grand Tamil Dream' என்ற தலைப்பில் அவர்களுடன் இணைந்து கூட்டு வெளியீடாக கொண்டுவரப்படவுள்ளது.

பல்வேறு உயர் கல்வி சார்ந்த நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்கும் நோக்கத்துடன் 'முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம்' என்ற திட்டத்தின்கீழ் 204 தலைப்புகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் 50 தலைப்புகள் ஜூன் 2022 இலும், மேலும் 50 தலைப்புகள் ஜூன் 2023 இலும் புகழ்பெற்ற தேசிய மற்றும் சர்வதேச வெளியீட்டாளர்களுடன் கூட்டு வெளியீடுகளாக வெளியிடப்படும். இந்த திட்டத்தின்கீழ் முதலாக ராபர்ட் கால்டுவெல் ஆங்கிலத்தில் எழுதிய "The Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages" என்ற நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு "திராவிட அல்லது தென்னிந்தியக் குடும்ப மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்ற தலைப்பில் பா.ரா. சுப்பிரமணியன் மொழிபெயர்ப்பில் வெளியிடப்பட்டது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தோடு இணைந்த கூட்டு வெளியீடான இந்த நூலை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 45 ஆவது சென்னைப் புத்தகக் கண்காட்சியில் வெளியிட்டார்.

8,870 உயர் கல்வி நுழைவுத் தேர்வு வினா வங்கி புத்தகங்கள் (இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல்) பியர்சன் இந்தியா பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்துடன் இணைந்து 6 தொகுதிகளாக வெளியிடப்பட்டு, ரூ.2,15,18,200/- மதிப்பில் அரசின் பயிற்சி மையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 10 மாவட்டங்களில் உள்ள மாதிரிப் பள்ளிகளுக்கு இப்புத்தகங்களின் 2,000 படிகள் முதற்கட்டமாக வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

9.10. இளந்தளிர் இலக்கியத் திட்டம்

குழந்தைகளுக்கான மிகச் சிறந்த புத்தகங்கள் கிடைப்பதற்காக இக்கழகம் இளந்தளிர் இலக்கியத் திட்டத்தினை செயற்படுத்தி வருகின்றது. 22 நூல் ஆசிரியர்களிடமிருந்து, 104 கதைகள் பெறப்பட்டு மதிப்பாய்வில் உள்ளன. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் 2022-2023 ஆம் ஆண்டு முதல் அவை படிப்படியாக வெளியிடப்படும்.

2022 ஏப்ரல் 11]

9.11. கொள்முதல் பணிகள்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் மற்றும் அவர்களுடைய செயல்திறனை ஊக்குவிப்பதற்கும் சுமார் ரூ.260.02 கோடி மதிப்பில் பதினொரு கல்வி உபகரணப் பொருட்களை இந்தக் கழகம் கொள்முதல் செய்து 2022-2023 ஆம் ஆண்டில் வழங்க உள்ளது.

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், தமிழ்நாடு அரசு ஏற்படுத்தியுள்ள நோக்கங்களுக்கு ஏற்ப, பள்ளி மாணவர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் கல்விப் பணிகளை வழங்கி வருகின்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2022 ஏப்ரல் 11

10. நிதி ஒதுக்கீடு

மானியக் கோரிக்கை எண் 43, பள்ளிக் கல்வி என்ற தலைப்பில் 2022-2023 ஆம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.36,895,89 கோடியாகும்.

2022-23 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு

(ரூபாய் இலட்சத்தில்)

கணக்குத் தலைப்பு			மாநில செலவினங்கள்	மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள்	மொத்தம்
வருவாய் பகுதி					
2051	அரசுப் பணியாளர் தேர்வாணையம்		478.83	-	478.83
2059	பொதுப் பணிகள்		15100.00	-	15100.00
2202	பொதுக் கல்வி				
	1	தொடக்கக் கல்வி	1614740.56	230808.52	1845549.08
	2	இடைநிலைக் கல்வி	1646446.19	84140.20	1730586.39
	4	வயது வந்தோர் கல்வி	216.91	750.00	966.91
	5	மொழி வளர்ச்சி	1660.70		1660.70
மொத்தம் - பொதுக் கல்வி			3263064.36	315698.72	3578763.08

2022 ஏப்ரல் 11]

2204	விளையாட்டு, இளைஞர் நலப் பணிகள்	*204.17*	*56.01*	*260.18*
2205	கலையும் பண்பாடும்	*20795.07*	-	*20795.07*
2225	ஆதி திராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்டோர் நலன்	*18259.79*	-	*18259.79*
2235	சமூக பாதுகாப்பும் நலனும்	*266.00*	-	*266.00*
2251	தலைமைச் செயலகம் சமூகப் பணிகள்	*1129.84*	-	*1129.84*
நிகர மொத்த வருவாய்ப் பகுதி		**3319298.06**	**315754.73**	**3635052.79**
மூலதன செலவு பகுதி				
4202	மூலதன செலவு	*54135.17*	*361.25*	*54496.42*
கடன் பகுதி				
7610	அரசுப் பணியாளர்களுக்கான கடன்கள்	*40.00*	-	*40.00*
நிகர மொத்தம்		*3373473.23*	*316115.98*	*3689589.21*
மானியக் கோரிக்கை எண் 43 இன் நிகர மொத்தம்				**3689589.21**

ஆற்றல்மிக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலின்படி செயல்படும் இவ்வரசு, தரவுகளின் அடிப்படையில் கற்பித்தல்-கற்றல் பணிகளில் முழுமையான கல்விச் சீர்திருத்தங்களை மேற்கொண்டு உயர்தரக் கல்வியை மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் திறமையான ஆசிரியர் மற்றும் பெற்றோர் உள்ளிட்ட அனைத்து தரப்பினருடனும் இணைந்து வழங்க உறுதி கொண்டுள்ளது.

Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Commissioner of Stationery and Printing, Chennai-600 002.